[illegible]

[illegible]

# கிறிஸ்துவின் வாழ்வு. 2

[illegible]

[illegible]

# கிறிஸ்துவின் வாழ்வு, 2
# டேவிட் ரோப்பர்

## ஒப்பீடு

15. தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார்? ( யோவான் 3:16)
16. கலிலியோவுக்கு வடக்கில் (மத். 4:12-22;மாற். 1:14-20; லூக். 3:19, 20; 4:14, 15; 5:1-11; யோவா. 4:1-54)
17. சீஷத்துவத்திற்கு அழைப்பு (லூக். 5:1 ? 11)
18. அதிகாரம் உள்ளவராய்? (மத். 4:23-25; 8:2-4, 14-17; 9:2-9; மாற். 1:21-45; 2:1-14; லூக். 4:31-44; 5:12-28)
19. அவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு. தேவனை மகிமைப்படுத்தினார்கள்?
20. கூட்டத்தின் புயல் (மத். 10:2-4; 12:1-21, மாற். 2:23-28; 3:1-19; லூக். 6:1-16; யோவா. 5:16-47)
21. தேவனுக்குச் சமமானவர்? (யோவா. 5:16-47)
22. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்? (மத். 5:1-48; 6:1-18; லூக். 6:17-30, 32-36)
23. நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் அதிகம் மதிப்பு மவாய்ந்தவராக இருக்கின்றீர்கள் (மத். 5:13)
24. உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவுவது? (மத். 5;14-16)
25. இரண்டு வழிகள் (மத். 6:19-34; 7:1-29; லூக்.6:31, 37-49)
26. தீர்க்காதிருங்கள்? (மத். 7:1,2)
27. மற்றவர்களுடன் நட்புறவாக இருத்தல் எவ்வாறு (மத். 7:3-12)
28. இயேசு பராமரிக்கின்றாரா? (மத். 8:1, 5-13; 11:12-30; லூக். 7:1-50)
29. அன்பு, கண்ணீர் மற்றும் மன்னித்தல் (லூக். 7:36-50)
30. ஒரு மும்முரமான நாள் (மத்.12:22-50; மாற். 3:20 ? 35; லூக். 8:1-3, 19-21, 11:14-36)
31. நமது இரண்டு குடும்பங்கள் (மத். 12:46-50; மாற். 3:20, 21, 31-35; லூக். 8:19-21)

படிப்பு உதவிகள்
பதிலளிக்கும் படிவம்

# ஒப்பீடு

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக்கா 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியா யிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*
   I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*
   J. *இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).*
   K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).*
   L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).*
   M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*
   N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*
   O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).*
   P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).*
   B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*
   B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப் படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*
   C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*
   D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*
   E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*
   F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*
   A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*
      1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
      2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*
   B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*
   C. *யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.*
      1. *கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).*
      2. *சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).*
      3. *கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).*
   D. *கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).*
   E. *கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).*
   F. *கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).*
   G. *நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).*
   H. *கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).*
   I. *கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*
   J. *கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளி யைக் குணமாக்குதல் - மற்றும் அதன்  விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*
L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*
M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*
A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வு நாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*
B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*
C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு  மனிதரை ஓய்வு நாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*
D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*
E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*
F. *மலைப் பிரசங்கம்.*
1. *அறிமுகக் கூற்றுக்கள் (மத். 5:1, 2; லூக். 6:17-20).*
2. *பாக்கிய வசனங்கள்: மேசியாவின் பிரஜைகளுக்கான வாக்குத்தத்தங்கள் (மத். 5:3-12; லூக். 6:20-26).*
3. *மேசியாவின் பிரஜைகளினுடைய செல்வாக்கு (மற்றும் பொறுப்புகள்) (மத். 5:13-16).*
4. *மேசியாத்துவ பழைய ஏற்பாட்டு போதனைக்கும்  - மற்றும் பழைய ஏற்பாட்டு போதனை பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களுக் குள்ள உறவு (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36).*
5. *மதரீதியான செயல்கள் காட்சிக்காக அல்ல ஆனால் இருதயத்தில் இருந்தே வருவதாயிருக்க வேண்டும் (மத். 6:1-18).*
6. *பரலோக பொக்கிஷங்களின் பாதுகாப் பானது பூமிக்கு உரிய பெருங்கவலை களுடன் நேர்மாறாக ஒப்பிடப்பட்டது (மத். 6:19-34).*
7. *தீர்க்கப்படுதல் பற்றிய போதனை (மத். 7:1-6; லூக். 6:37-42).*
8. *ஜெபத்தைப் பற்றிய போதனை (மத். 7:7-11).*

9. *பொன் விதி (மத். 7:12; லூக். 6:31).*
10. *இரண்டு வழிகள் - மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:13-23; லூக். 6:43-45).*
11. *முடிவுரையும் பயன்பாடும் (கட்டுபவர் கள் இரண்டு பேர்) (மத். 7:24-29; லூக். 6:46-49).*

G. *நூற்றுக்கு அதிபதியொருவரின் வேலையாள் குணமாகுதல் (மத். 8:1, 5-13; லூக். 7:1-10).*

H. *ஒரு விதவையின் மகன் உயிருடன் எழுப்பப்படுதல் (லூக். 7:11-17).*

I. *யோவான் ஸ்நானனுக்குப் பதில் அளித்தல் (மத். 11:2-30; லூக். 7:18-35).*

J. *இயேசுவின் பாதங்கள் அபிஷேகம் செய்யப்படுதல் (லூக். 7:36-50).*

K. *கலிலேயாவில் இரண்டாவது பயணம் (லூக். 8:1-3).*

L. *தேவதூஷணக் குற்றம் சாட்டப் படுதல்கள் (மத். 12:22-37; மாற். 3:20-30; லூக். 11:14-23).*

M. *அடையாளம் தேடுபவர்கள் (மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36).*

N. *இயேசுவின் குடும்பம் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28).*

15

# "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"

## யோவான் 3:16, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

> *"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப் பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு உயர்த்தப்படவேண்டும்."*
>
> *"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்"[1] (யோவா. 3:14-17).*

*இந்த வசனப்பகுதியில், நாம் வேதாகமத்தில் மிகவும் பிரபலமான வேத பாடத்தை - "தங்க" வாக்கியத்தைக் கொண்டுள்ளோம், யோவான் 3:16: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." இந்த வசனமானது குறைந்தபட்சம் பின்வரும் இரண்டு காரணங்களுக்காக வேதாகமத்தின் மாபெரும் வசனங்களில் ஒன்றாக உள்ளது: (1) இது தேவனுடைய திட்டத்தின் முழுமையான விரிவளவைத் தொடுகிறது.[2] பதினாறாம் நூற்றாண்டின் மிகப் புகழ்பெற்ற சீர்திருத்தவாத தலைவரான மார்ட்டின் லூத்தர், இதை "சிற்றளவிலான வேதாகமம்" என்று அழைத்தார். (2) இது மிக உயர்வான வார்த்தைகளினால் நிறைந்துள்ளது: மிக மேன்மையான வார்த்தைகள் மனிதனுக்கு மிகவும் ஆச்சரியமான ஆய்வுக் கருத்துக்களை ஆலோசனையாக அளிக்கின்றன.[3]*

### "தேவன்": மாபெரும் ஜீவி

*உலகம், மனிதன் மற்றும் நன்மையான எல்லா விஷயங்களும் தேவனில் தொடங்குவது போன்றே நம் வேத பாடப்பகுதியும் அவரிலேயே தொடங் குகிறது: "தேவன் ... இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."*

இவ்விடத்தில் மாபெரும் ஜீவி இருக்கின்றார். தேவனைக் காட்டிலும் பெரிதான ஒன்றை நமது சிந்தையானது கற்பனை செய்ய முடியாது. அமெரிக்காவின் குறிப்பிடத்தக்க அரசியல்வாதி ஒருவர், தமது சிந்தையில் உட்புகுந்தவைகளிலேயே தேவனைப் பற்றிய சிந்தைதான் மிகவும் பெரியது என்றும் அவருக்குத் தாம் தனிப்பட்ட வகையில் பொறுப்புள்ளவராக இருக்கின்றார் என்றும் கூறினார்.[4]

தேவனைப் பற்றிப் பேசுகையில் பவுல், "நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே ..." (எபே. 3:20) என்று எழுதினார். உங்கள் கற்பனை தறிகெட்டு ஓடட்டும்; [என்றபோதிலும்] தேவன் செய்ய முடியாத ஒன்று என்று நீங்கள் எதையும் நினைத்துப் பார்க்க[வும்] முடியாது.[5] தேவனைப் பற்றி முற்றிலுமாகப் புரிந்துகொள்வதற்கு, நாம் அவருக்குச் சமமாக இருக்க வேண்டிய அளவுக்கு, அவர் அவ்வளவு பெரியவராக இருக்கின்றார்: [அவரைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால்] நாம் தேவர்களாகவே இருக்க வேண்டும்!

## "தம்முடைய ஒரேபேறான குமாரனை": மாபெரும் ஈவு

தேவன் தாம் கொடுத்த ஈவினால் தமது அன்பின் மாபெரும் தன்மையை காண்பித்தார்: "தேவன் *தம்முடைய ஒரே பேறான குமாரனைக்* கொடுக்குமளவுக்கு உலகத்தில் இவ்வளவாய் அன்புகூர்ந்தார்," இந்த குமாரன் மாபெரும் ஈவாக இருக்கின்றார். பல பரிசுகள் தரப்பட்டுள்ளன. செல்வந்தர்களான மனிதர்கள் தகுந்த காரணங்களுக்காக பெருந்தொகை யான பணத்தை - சில வேளைகளில் நம்புவதற்கரிய பெருந்தொகைகளை - கொடுக்கின்றதாக அறியப்பட்டுள்ளார்கள், ஆனால் எந்த ஒரு ஈவும் இந்த ஈவுடன் ஒப்பிடத்தக்கது அல்ல.

தேவன் என்ன கொடுத்தார் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) அவர் தமது குமாரனைக் கொடுத்தார். அன்பார்ந்த, கீழ்ப்படிதல் உள்ள, கடமை உணர்வுமிகுந்த ஒரு மகனைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட ஒரு மகனைக் கொடுத்தல் என்பது இருதயத்தை எவ்வளவாகக் கிழிப்பதாக இருக்கும்! (2) தேவன் தமது குமாரனைக் கொடுத்தார், அதுவும் தமது "ஒரேபேறான குமாரனைக்"[6] கொடுத்தார். குமாரன் - அவரைப் போன்றும் அவரது சாயலிலும் தமது நெற்றியில் தெய்வீகத்தின் முத்திரையும் கொண்டிருந்த குமாரன்! ஒரே மகனைக் கொடுத்தல் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். (3) தேவன் தமது ஒரே மகனைக் கொடுத்ததுடன், தமது அந்த ஒரே மகனைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். தகுதியில்லாத மக்களுக்காக இயேசு ஒரு பயங்கரமான, வெட்கக்கேடான மரணத்தை அடைவார். தேவன் தமது குமாரனின் கண்ணீர்கள் தமது இருதயத்தைக் கிழித்தாலும் அவரை ஒப்புக்கொடுப்பார்!

இங்கு நாம் முற்றிலும் புரிந்துகொள்ளத் தொடங்க முடியாத அளவுக்கு இந்த ஈவு மிகவும் பெரியதாக உள்ளது. பவுல், "தேவன் அருளிய சொல்லி

*முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி. 9:15) என்று கூறினார்.* [KJV*யில் மற்றும் தமிழில் "சொல்லி முடியாத" என்றே உள்ளது*] *உலகில் சில விஷயங்களைப் பற்றி - உதாரணமாக உலகத்தின் மக்கள் தொகை அல்லது ஒரு நாட்டின் கடன் போன்றவைகளைப் பற்றி - நாம் புரிந்துகொள்ள முடியாது, ஆனால் அவற்றைப் பற்றி நாம் பேசவாவது முடியும், ஆனால் நாம் மிகச் சரியாகப் பேசக் கூட முடியாதபடிக்கு தேவனுடைய ஈவு என்பது முற்றிலும் புரிந்துகொள்ள முடியாததாக உள்ளது. "ஆச்சரியமான அன்பு, தெய்வீகமான அன்பு, என் ஆத்துமாவை, என் வாழ்வை, என் எல்லாவற்றையும் கேட்கிறது!"*[7]

## *"விசுவாசிக்கிறவன்":*
## *மாபெரும் அஸ்திபாரம்*

*இந்த மாபெரும் வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நம் வேத பாடப் பகுதியானது "அவரை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு" என்று கூறுகிறது. விசுவாசம் என்பது மாபெரும் அஸ்திபாரமாக உள்ளது. நாம் கிறிஸ்தவர்கள் ஆவதற்கும் கிறிஸ்தவர்களாகச் செயல்படுவதற்கும் தேவையான எல்லாம் அதின் விசுவாசத்தின் மீதே அமைந்துள்ளது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6).*

*யோவான் 3:16ல் உள்ள "விசுவாசிக்கிறவன்" என்ற வார்த்தையானது வெறுமனே ஒரு மன உச்சரிப்பாக மட்டும் இருப்பதில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.* The Amplified Bible *(1987 பதிப்பு) என்ற வேதாகமத்தில் இவ்வசனம் பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:* "For God so greatly loved and dearly prized the world that He [even] gave up His only-begotten (unique) Son, so that whoever believes in *(trusts in, clings to, relies on)* Him shall not perish ... but have eternal (everlasting) life." *இதனைத் தமிழில் பின்வருமாறு மொழிபெயர்க்கலாம்: "தேவன் தம்முடைய ஒரேபேறான (தனிச்சிறப்பான) குமாரனை விசுவாசிக்கிறவர் (நம்புகிறவர், பிடித்துக் கொள்ளுகிறவர், சார்ந்திருக்கிறவர்) எவரோ அவர் கெட்டுப்போகாமல் நித்திய (என்றென்றைக்கும் உள்ள) வாழ்வைப் பெறும்படிக்கு அவரை[யே] தந்தருளி உலகத்தின்மீது இவ்வளவு பெரிதான அன்புகூர்ந்து அதை இவ்வளவு அன்பாய் மதித்தார்."*

*உண்மையான விசுவாசத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் உள்ளடங்குகிறது (யாக்.2:20ஐக் காணவும்). பவுல், "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" (கலா. 5:6) என்று எழுதினார். ஒருவர், விசுவாசத்தின் அஸ்திபாரத்தில் கட்டியெழுப்பப்பட்டு அன்பினால் தூண்டப்படுகின்றபோது, அவர் பாவங்களை விட்டு*

*மனந்திரும்புவார் (லூக். 13:3), மனிதர்களுக்கு முன்பாகத் தமது விசுவாசத்தை அறிக்கையிடுவார் (மத். 10:32), மற்றும் பாவமன்னிப்பிற் கென்று ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்படுவார் (அப். 2:38).*

## *"அவரில்" [இயேசுவில்]: மாபெரும் ஈர்ப்பு*

*இப்படிப்பட்ட விசுவாசத்தை உண்டாக்குவது எது? நம்மைக் கீழ்ப்படியத் தூண்டுவது எது? "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல்." இயேசு, இரட்சிப்பைச் சாத்தியமானதாக்குகின்றார் அவரே [எல்லாக்] காலங்களிலும் மாபெரும் ஈர்ப்புக்குரியவராக இருக்கின்றார். அவர், "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (யோவா. 12:32) என்று கூறினார். நாம் ஏதோ ஒரு மனிதர்மீதோ, ஏதோ ஒரு உபதேசத்தின்மீதோ, அல்லது ஏதோ ஒரு மத முறைமையின்மீதோ விசுவாசம் கொண்டிருப்பதில்லை. நமது பாவங்களுக்காக மரித்த கிறிஸ்துவின் மீதே நமது விசுவாசம் உள்ளது!*

## *"எவனோ": மாபெரும் வாய்ப்பு*

*தேவனைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் பேசியுள்ள நாம், கடைசியில் இவ்வேதப் பாடப் பகுதியில் நம்மிடத்திற்கு வருகின்றோம்: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." "எவனோ" என்ற வார்த்தையானது உலகத்தில் உள்ள மாபெரும் வாய்ப்பை அறிவிக்கிறது. தேவனுடைய அன்பின் அளிப்புகள் எல்லாருக்குமானதாக உள்ளது (லூக். 2:10; மத். 28:19; அப். 10:34, 35; 17:30; 2 பேது. 3:9). இயேசு தமது சீஷர்களிடத்தில் "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15) என்று கூறினார்.*

*"எவனோ" என்ற வார்த்தையானது தனிநபர்கள் என்ற வகையில் நமக்கு அர்த்தம் நிறைந்ததாக இருக்க வேண்டும். யோவான் 3:16 வாசிக்கப்படும் விதத்தைத் தாம் பாராட்டுவதாக நன்கு அறியப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரசங்கியார் பிலிப்ஸ் புரூக்ஸ் அவர்கள் கூறினார் என்று நான் நம்புகின்றேன்: தேவன், "அமெரிக்கர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு" என்று கூறியிருக்கலாம், ஆனால் லத்தீன் அமெரிக்கர்கள், தென் அமெரிக்கர்கள், வட அமெரிக்கர்கள் இன்னும் மற்ற அமெரிக்கர்கள் உள்ளார்கள். தேவன் "புரூக்ஸ்கள் நித்திய ஜீவனைப் பெறும் படிக்கு" என்று கூறியிருக்கலாம், ஆனால் புரூக்ஸ் என்ற பெயருடைய மக்கள் பலர் இருக்கின்றார்கள். தேவன், "பிலிப்ஸ் புரூக்ஸ் விசுவாசித்தால், அவர் இரட்சிக்கப்படுவார்" என்று கூடக் கூறியிருக்கலாம் - ஆனால், ஒன்றுக்கும் அதிகமான பிலிப்ஸ் புரூக்ஸ் இருக்கக்கூடும்; அப்போதும் கூடச்*

*சந்தேகம் நிலவியிருக்க முடியும். "தேவன் 'எவனோ' என்று கூறியிருப்பதற்காக நான் எவ்வளவோ நன்றி நிறைந்தவனாக இருக்கின்றேன், ஏனெனில் அது எனக்கும் பொருந்துகிறது என்று நான் அறிகின்றேன்!" என்று பிலிப்ஸ் புரூக்ஸ் அவர்கள் கூறினார். நாம் ஒவ்வொருவரும் இந்த வசனத்தை வாசித்து நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று அறிய முடியும்!*

*ஆயினும், "எவனோ" என்ற வார்த்தையானது நம்மீது பொறுப்பை வைக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உலகமானது "மனவிருப்பமுள்ள எவரும்" மற்றும் "விருப்பமற்ற எவரும்" என்ற பிரிவுகளால் ஆகியுள்ளது. இந்த மகிமையுள்ள வாய்ப்பை (வெளி. 22:17) நாம் அனுகூலப்படுத்துவோமா இல்லையா என்பதை நாம் ஒவ்வொருவருமே முடிவுசெய்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த நித்திய அடைவிடத்தைத் தீர்மானிக்கின்றோம்.*

## *"அவன் கெட்டுப்போகாமல்": மாபெரும் துன்பம்*

*நாம் இந்த விசுவாசத்தைக் கொண்டிருந்தால், விளைவு என்னவாக இருக்கும்? "... விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் ..." நமது கீழ்ப்படிதலுள்ள விசுவாசமானது ஒரு மனிதன் வீழ்ச்சியடைய முடியும் என்ற பெருந்துன்பத்தில் விழுந்து விடாமல் நம்மைத் தடைசெய்யும்.*

*இந்த வாழ்வில் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. ஒரு களஞ்சியம் எரிந்துபோய், ஒரு விவசாயினுடைய கருவிகளும் பொருட்களும் யாவும் அழிந்து போகின்றன, அவர் "நான் நாசமானேன்"[8] என்கிறார். வெள்ளத்தில் ஒரு வீடு அதில் இருந்த குடும்பத்தின் பூமிக்குரிய உடைமைகள் யாவற்றுடனும் இழக்கப்படுகிறது, அவர்கள் "நாங்கள் நாசமானோம்" என்று அழுகின்றார்கள். ஒரு பெரிய குடும்பத்தின் கணவரும் தந்தையுமானவர் இறக்கின்றார், அந்தக் குடும்பம் "நாங்கள் நாசமானோம்" என்று உடைந்துபோன இருதயத்துடன் கதறுகிறது. ஒருவர் தமது உடல் நலத்தை இழக்கின்றார், அவரும்கூட "நான் நாசமானேன்" என்று நினைக்கின்றார். நான் சொல்வதைக் கேளுங்கள்: வாழ்வின் துன்பம் எவ்வளவாக இருந்தாலும், ஒரு மனிதர் தம்மை நித்தியத்திற்கு இழந்துபோகாத வரைக்கும் ஒருபோதும் நாசமாவது இல்லை. பின்பு அவர், "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்" (2 தெச. 1:10; மேலும் மத். 25:46; வெளி. 20:10ஐக் காணவும்). "கெட்டுப்போகுதல்" என்ற வார்த்தை அதையே அர்த்தப்படுத்துகிறது!*

## “[ஆனால்]”:
## மாபெரும் வேறுபாடு

இந்த வேத பாடப்பகுதியானது “கெட்டுப்போகாமல்” என்பதோடு முடிந்து விடுவதில்லை என்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இது, “... விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு” என்று தொடருகிறது. [“ஆனால்”] என்ற வார்த்தை உலகத்தில் மாபெரும் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இந்த வேத பாடப்பகுதியில், ஒரு புறத்தில் நாம் “கெட்டுப்போகாமல்” என்ற வார்த்தையையும் மறுபுறத்தில் நாம் “நித்தியஜீவனை” என்ற வார்த்தையையும் கொண்டுள்ளோம். இவ்விரண்டிற்கும் இடையில், வேறுபாட்டை ஏற்படுத்துகிற “ஆனால்” என்ற முரண்பாட்டு இடைச் சொல்லைக் கொண்டுள்ளோம்!

## “நித்திய ஜீவனை அடையும்படிக்கு”:
## மாபெரும் வாக்குத்தத்தம்

இவ்வசனப்பகுதி, “... விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் *நித்திய ஜீவனை அடையும்படிக்கு*” என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒரு மாபெரும் வாக்குத்தத்தம் உள்ளது: இது தேவனுடன் ஒரு நித்தியம்[9] என்பதன் வாக்குத்தத்தமாக உள்ளது, அங்கு “அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமு மில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவை கள் ஒழிந்துபோயின” (வெளி. 21:4). நீங்கள் நம்பிக்கை கொண்டு கீழ்ப்படிந்தால் இதுவே உங்களுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமாக உள்ளது!

## “அவரைத் தந்தருளி”:
## மாபெரும் செயல்பாடு

மாபெரும் ஜீவியமானவர் மாபெரும் தனிப் பண்பை உடையவரா யிருப்பதால் மாபெரும் [மக்கள்] குழுவிற்கு அவர் என்ன செய்தார்? “தேவன் ... அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” மூன்று செயல்பாடுகள் நம்மைத் தெய்வீகத்துடன் நெருக்கமாகக் கொண்டு சேர்க்கின்றன: கொடுத்தல், மன்னித்தல் மற்றும் நன்றி செலுத்துதல் [giving, forgiving and thanksgiving] -ஆங்கில மொழியில் இம்மூன்று வார்த்தை களுக்கும் giving [கொடுத்தல்] என்பதே வேர்/மூல வார்த்தையாக உள்ளது, இது மிகவும் மாபெரும் செயலாக உள்ளது.[10]

## *“இவ்வளவாய் உலகத்தில்”:*
## மாபெரும் குழு

தேவன் இந்த தனிப் பண்பை யாருக்கு நீட்டித்தார்? “தேவன் … அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” உலகம் - இது நமது சிந்தைகள் கற்பனை செய்யக்கூடிய மாபெரும் குழுவாக உள்ளது - வாழ்ந்திருந்த, இப்போது வாழ்கின்ற, இந்த பூமி அழிவதற்கு முன்பு இனி வாழப்போகின்ற யாவரும் சேர்ந்ததே இந்த உலகமாக உள்ளது, இது நமது சிந்தைகள் கற்பனை செய்யக் கூடிய மாபெரும் குழுவாய் இருப்பது மட்டுமின்றி, இது ஒரு தகுதியற்ற குழுவாகவும் இருக்கிறது: இது ஒரு பாவம் நிறைந்த உலகமாக, கீழ்ப்படிதல் இல்லாத உலகமாக, அந்தகாரத்தில் உள்ள ஒரு உலகமாக இருக்கிறது.[11] தேவன் இந்த தேவபக்தியற்ற உலகத்தைக் கீழே கண்ணோக்கி இதை அன்புகூர்ந்தார். தேவன் *நம்மைக்* கீழே கண்ணோக்கி *நம்மீது* அன்புகூர்ந்தார்.

ஆப்பிரிக்காவிலிருந்து வந்த ஊழியர் ஒருவர், சிறுபையன்களின் குழு ஒன்றிற்கு ஒருமுறை உரை நிகழ்த்தினார். அவர், “ஆப்பிரிக்காவில் நாங்கள் பிரசங்கிக்கும் சுவிசேஷம் பற்றி உங்களிடத்தில் கூற நான் விரும்புகின்றேன். இங்கிருப்பவர்களில் நல்ல பையன்கள் எல்லாரும் உங்கள் கைகளை உயர்த்துவீர்களா?” ஒரு கை கூட மேலே எழும்பவில்லை. அவர் புன்முறுவல் செய்துகொண்டே, “அப்படியென்றால், நாங்கள் ஆப்பிரிக்காவுக்குக் கொண்டுள்ள அதே செய்தியையே நான் உங்களுக்கும் கொண்டுள்ளேன்: தேவன் குறும்புக்காரப் பையன்களை அன்புகூருகின்றார்.”

அது சரியானதாக ஒலிக்காதிருக்கலாம், ஆனால் இதுவே சத்தியமாக உள்ளது. “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்” (ரோமர் 5:8).[12]

## *“அன்புகூர்ந்தார்”:*
## மாபெரும் தனிப்பண்பு

மாபெரும் ஜீவியை[தேவனை]ப் பற்றி, “தேவன் … இவ்வளவாய் உலகத்தில் *அன்புகூர்ந்தார்*” என்று கூறப்படுகிறது. அன்பு என்பது உலகத்தில் மாபெரும் தனிப் பண்பாக உள்ளது: “இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது” (1 கொரி. 13:13).[13] நமது வேதப் பாடப் பகுதியானது, தேவன் இந்த மாபெரும் தனிப் பண்பை மாபெரும் அளவில்[14] கொண்டிருந்தார் என்று அறிவிக்கிறது: “தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”

தேவனுடைய அன்பிற்கு அளவுகள் உள்ளன என்று எபேசியர் 3:17-19 அறிவிக்கிறது: “… நீங்கள் … கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள …” தேவனுடைய அன்பின் “நீளம்” என்ன? நமது வேத பாடப்பகுதியானது இவ்வாறு கூறுகிறது: “தேவன் …

*தம்முடைய ஒரேபேறான குமாரனை ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" தேவனுடைய அன்பு எல்லா வழிமுறைகளிலும் கடந்து சென்றது![15]*

## *முடிவுரை*

*இங்கு ஒரே ஒரு வசனத்தில் சுவிசேஷ வரலாற்றின் இருதயம் உள்ளது:*

*"தேவன்" - மாபெரும் ஜீவி.*
*"தம்முடைய ஒரேபேறான குமாரனை" - மாபெரும் ஈவு.*
*"விசுவாசிக்கிறவன்" - மாபெரும் அஸ்திபாரம்.*
*"அவரில்" [இயேசுவில்] - மாபெரும் ஈர்ப்பு.*
*"எவனோ" - மாபெரும் வாய்ப்பு.*
*"அவன் கெட்டுப்போகாமல்" - மாபெரும் துன்பம்.*
*"ஆனால்" - மாபெரும் வேறுபாடு.*
*"நித்தியஜீவனை அடையும்படிக்கு" - மாபெரும் வாக்குத்தத்தம்.*
*"அவரைத் தந்தருளி": மாபெரும் செயல்பாடு.*
*"இவ்வளவாய் உலகத்தில்": மாபெரும் குழு.*
*"அன்புகூர்ந்தார்": மாபெரும் தனிப்பண்பு.*

*நீங்கள் வேதாகமம் முழுவதையும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் இந்த வசனத்தைப் புரிந்துகொள்ளுகின்றீர் களா? நீங்கள் புரிந்துகொண்டால், கர்த்தருடைய அழைப்பிற்கு நீங்கள் பதில்கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த மாபெரும் வசனத்தின் சத்தியங்களினால் தொடப்படாமல் எவரொருவரும் இவற்றைப் புரிந்துகொள்ள முடியாது என்பது நிச்சயம். இன்று நீங்கள் சுவிசேஷத்தின் வல்லமையினால், தேவனுடைய அன்பினால் அசைக்கப் பட்டிருந்தால், அதைக் குறித்து நீங்கள் சிலவற்றைச் செய்யமாட்டீர்களா?*

---

*குறிப்புகள்*

[1]*இயேசுவின் "முதல் வருகையில்" அவர் ஒரு நியாயாதிபதியாக இன்றி, ஒரு இரட்சகராகவே இருந்தார்; ஆனால் அவரது இரண்டாம் வருகையில் அவர் நமது நியாயாதிபதியாக இருப்பார் (அப். 17:31).* [2]*சிலர் உரிமைகோருவது போல், இது தேவனுடைய திட்டம் முழுவதையும் கூறிமுடிப்பதில்லை, ஆனால் இது தெய்வீக திட்டத்தின் அடிப்படைக் கூறுகளைத் "தொட்டு நிற்கிறது."* [3]*யோவான் 3:16க்கான இந்தப் பொதுவான அணுகுமுறை பல வெளியீடுகளில் காணப்பட்டுள்ளது. இது எனது வெளியீடாக உள்ளது. இந்தக் கருத்தைத் தோற்றுவித்தது யார் என்று எனக்குத் தெரியவில்லை.* [4]Daniel Webster, quoted in Frank S. Mead, comp. and ed., *12,000 Religious Quotations* (Grand Rapids, Mich.: Baker Book House, 1989), 189. [5]*தேவன் தமது சித்தத்திற்குச் சீர் பொருந்தியதாக உள்ள எதையும் செய்ய முடியாது என்று நீங்கள் நினைத்துப் பார்க்கவும் முடியாது.* [6]*''ஒரேபேறான'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''தனிச்சிறந்த, ஒரு வகையான" என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.* [7]Isaac Watts, "When I Survey the Won-

drous Cross," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [8]*இந்த வாக்கியமும் இதற்கு அடுத்த வருகிறதும், உடைமைகளை இழந்துபோன அந்த விவசாயி ஆயுள்காப்பீடு செய்திருக்கவில்லை என்று யூகிக்கிறது.* [9]*மாற்கு 10:30; கலாத்தியர் 6:8; 1 தீமோத்தேயு 6:12; தீத்து 1:2 ஆகிய வசனங்களைக் காணவும்.* [10]*அப். 20:28ஐக் காணவும்.*

[11]*உபாகமம் 9:2-4, பாவம் நிறைந்த உலகத்தை விவரிக்கப் பயன்படும் ஒரு வசனப்பகுதியாக உள்ளது.* [12]*தீத்து 2:11; 1 தீமோ. 2:3, 4 ஆகியவற்றையும் காணவும்.* [13]*அன்பைப் பற்றிய கூடுதலான வசனப்பகுதிகளுக்கு, 1 பேதுரு 4:8; எபேசியர் 3:17 ஆகியவற்றைக் காணவும்.* [14]*சிலர் இதைப் பிரசங்கத்தில் ஒரு தனிக்கருத்தாக எடுத்துரைக்கின்றார்கள்.* [15]*தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா. 4:7, 8).*

# *16*

# கலிலேயாவுக்கு வடக்கில்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #5*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

   C. *யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.*

      1. *கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).*
      2. *சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).*
      3. *கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).*

   D. *கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).*

   E. *கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).*

   F. *கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).*

   G. *நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).*

## *அறிமுகம்*

*எருசலேமிலும் யூதேயாவிலும் நடைபெற்ற இயேசுவின் தொடக்க கால ஊழியத்தைப் பற்றி யோவான் பதிவு செய்தார். நாம் படிக்க இருக்கும் இந்தப் பாடத்தில், காட்சி வடக்கில் கலிலேயாவுக்கு மாறுகிறது. ஒப்பீட்டு சுவிசேஷங்கள், சுமார் ஒன்றரை ஆண்டுகள் நடந்த "மாபெரும் கலிலேய ஊழியம்" என்று இதன் மீது கவனம் செலுத்துகின்றன. இந்தப் பாடம், அந்த ஊழியத்தின் அடிப்படையான விஷயங்கள் பற்றிக் குறிப்பாகக் கவனம் செலுத்துவதாக இருக்கும்.*

## *வடக்கில் செல்லுவதற்கான வேளை (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-4)*

*இயேசுவும் அவரது சீஷர்களும் யூதேயாவில் - யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் அதிகமானவர்களுக்குப் போதித்து ஞானஸ்நானம் கொடுத்த வகையில் - வெற்றியை மகிழ்வுடன் அனுபவித்தார்கள் (யோவா. 3:22, 26; 4:1). இந்த வெற்றியின் உச்சத்தில், யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குச்*

செல்லுவதற்கு வேளை நெருங்கியது என்று கிறிஸ்து முடிவு செய்தார். குறிப்பிட்ட இவ்வேளையில் இவ்வாறு செல்லுதலுக்கு இரண்டு காரணிகள் பங்கேற்றன.

இந்த தீர்மானத்திற்கு, மத்தேயுவும் மாற்கும் ஒரு காரணத்தைக் கொடுத்தார்கள். மத்தேயு 4:12, "யோவான் ஏரோதினால்[1] காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்" என்று கூறுகிறது (மாற். 1:14ஐக் காணவும்). காற்பங்கு தேசாதிபதியான ஏரோது, தனது மைத்துனியும் தனது சகோதரன் பிலிப்புவின் மனைவியு மான ஏரோதியாளுடன் வாழ்ந்து கொண்டிருந்தான்.[2] பயம் இல்லாத யோவான் ஸ்நானன் ஏரோதிடம், "நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல" (மத். 14:4) என்று கூறியிருந்தார். இது ஏரோதியாளை மூர்க்கமான கோபம் அடையச் செய்தது, அவள் யோவானைக் கைது செய்யும்படி ஏரோதைக் கட்டாயப்படுத்தினாள் (மாற். 6:17-19). அந்த அரசன் "யோவானை[யும்] காவலில் அடைத்து வைத்தான்" (லூக். 3:20).

யோவான் காவலில் அடைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவுக்கு விலகிச் சென்றார் என்பதை நீங்கள் வாசிக்கின்றபோது, அவர் தம்மையும் அந்தக் காற்பங்கு தேசாதிபதி சிறையில் அடைக்க முடிவு செய்வார் என்பதை அறிந்தவராக ஏரோதிடமிருந்து விலகிச் செல்ல முயற்சி செய்தார் என்பதாக நீங்கள் நினைக்கலாம். உண்மையில் கிறிஸ்து, ஏரோதின் காற்பங்கு தேசத்தின் பகுதிக்குள் கடந்து சென்றுகொண்டிருந்தார் (லூக். 23:6, 7). பின்பு ஏன், யோவானைச் சிறைவைத்த நிகழ்ச்சி இயேசுவைக் கலிலேயாவுக்குச் செல்லும்படி தூண்டியது? சிலர், இயேசு வடக்கில் இருந்த யோவானின் சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர்கள் சிதறிப் போவதிலிருந்து தடுப்பதற்காக அந்தப் பகுதிக்குச்[3] சென்றார் என்று நினைக்கின்றார்கள்.

யூதேயாவை விட்டுச் செல்லுதல் பரிந்துரைக்கத் தக்கது என்று கிறிஸ்து முடிவு செய்தது ஏன் என்பதற்கு யோவான் இன்னொரு காரணத்தைக் கூடுதலாகத் தந்தார்: "யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்ட தாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக் குப் போனார்" (யோவா. 4:1, 2). இயேசு பரிசேயர்களுடன் நேரடியான மோதலை - சற்றுக் காலமாவது - தவிர்க்க விரும்பினார், எனவே அவர்களின் செல்வாக்கு அதிகமாக உள்ள பகுதியில் இருந்து அவர் விலகிச் சென்றார். இயேசுவும் அவரது சீஷர்களும் யூதேயாவில் சுமார் ஒரு ஆண்டைச் செலவிட்ட பின்பு, "யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார்[கள்]" (யோவா. 4:2).[4]

## ஓய்வெடுக்க ஒரு நிறுத்தம்
## (யோவா. 4:4-42)

சமாரியா நாட்டின் வழியாகச் செல்லுதல் என்பதே யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்குச் செல்லுவதற்கு நேரடியான வழியாக இருந்தது,[5]

ஆனால் பெரும்பாலான யூதர்கள், சமாரியர்களின் மீது தாங்கள் கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக, யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு ஒரு சுற்றுவழியை மேற்கொண்டார்கள்: அவர்கள் கிழக்கில் பயணமாகி, யோர்தானைக் கடந்துசென்று, பின்பு கலிலேயாவுக்குக் கடந்து செல்லக் கூடும் வரையிலும் அவர்கள் அந்த நதியின் கிழக்குக் கரையோரமாகவே பயணம் செய்வார்கள். ஆயினும் இயேசு வடக்கு நோக்கி சமாரியாவினூ டாகப் பயணம் செய்தார்.

கிறிஸ்து "சமாரியா நாட்டின் வழியாகப் போக வேண்டியிருந்த படியால்" (யோவா. 4:4) என்று யோவான் எழுதினார். ஒருவேளை அவர் துரிதமாய் போக வேண்டியிருந்ததால் அவ்வாறு செல்ல "வேண்டியிருந் திருக்கலாம்." அவர் நேரடியான வழியில் செல்வதனால் மூன்று நாள் பிரயாண காலத்தைச் சேமிக்க முடிந்தது. ஆயினும் இந்தக் கருத்தை, அவர் சில நாட்கள் சமாரியாவில் தங்கினார் என்ற உண்மை (யோவா. 4:40) ஏற்பில்லாததாக ஆக்குகிறது. அவர் சமாரியர்களுடன் தொடர்பு ஏற்படுத்து வதற்காகவே சமாரியா நாட்டின் வழியே "போக வேண்டியிருந்தது" என்பதே அதிகம் ஏற்புடையதாக உள்ளது. யூதர்கள், இழிவான கலப்பின மக்களாகக் கருதிய ஒரு மக்களினத்தில் இயேசு "அறுப்புக்கு விளைந் திருக்கிற" (யோவா. 4:35) நிலம் ஒன்றைக் கண்டார்.

சமாரியாவின் இருதயம் போன்ற மையப்பகுதியில், ஒரு கிணற்றண்டையில் இயேசு ஒரு பெண்ணைச் சந்தித்தார், இது கிறிஸ்துவின் ஊழியத்தின் பின்னிகழ்வுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க பரிமாற்றமாக இருந்தது.அந்தப் பெண்ணுடன் இயேசுவின் உரையாடலானது, தேவபக்தி யற்றவர்களை விசுவாசத்திற்குள் கொண்டு வருவதற்கு ஒரு முன்னு தாரணமாகப் படிக்கப்பட்டுள்ளது: அவளுடன் அவர் எவ்வாறு தொடர்பு ஏற்படுத்தினார், அவளது ஆர்வத்தை அவர் எவ்வாறு தூண்டினார், அவளை அவர் எவ்வாறு திருத்தினார், அவளை அவர் புதிய சத்தியத்திற்குள் எவ்வாறு வழிநடத்தினார், அவளது பாவத்தை அவர் எவ்வாறு உணர்த்தினார், மற்றும் சிறப்பாக, அவளுடைய இருதயத்தில் விசுவாசத்தை அவர் எவ்வாறு மேம்படுத்தினார்.

இந்த ஒரு தொடர்பின் விளைவாக, கிறிஸ்து அந்த நகரம் முழுவதற்கும் போதிக்கக் கூடிய வாய்ப்பை பெற்றார், "... அவருடைய உபதேசத்தி னிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து ..." என்று வாசிக்கின்றோம் (யோவா. 4:41).

## கலிலேயாவில் ஊழியம் தொடங்குகிறது (மத். 4:13-17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15; யோவா. 4:43-54)

சமாரியர்களுடன் இரண்டு நாட்கள் இருந்த பின்பு (யோவா. 4:43), இயேசுவும் அவரது சீஷர்களும் தங்கள் பயணத்தை மீண்டும் தொடர்ந்து எஸ்தரலோனின் சமவெளியின் ஊடாக வடக்கு நோக்கிப் பயணமானார்

*கள். கடைசியில் அவர்கள் கலிலேயாவின் தெற்கு குன்றுகளை அடைந்தார் கள். இந்த மாகாணத்தில் கிறிஸ்து தமது மாபெரும் ஊழியத்தைச் செய்வார்.*

*அக்காலத்தில், எருசலேமும் யூதேயாவும் யூதத்துவத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருக்கும்போது, கலிலேயாவில் இயேசு தமது முயற்சிகளில் கவனம் செலுத்தியது ஏன்? இவ்விடத்தில் சாத்தியமான மூன்று காரணிகள் உள்ளன: (1) இயேசு கலிலேயாவில் வளர்ந்தவர், எனவே இது அவருக்கு மிகவும் பழக்கப்பட்ட பகுதியாக இருந்தது; (2) கலிலேயா, மக்கள் தொகை அதிகமாயிருந்த பகுதியாக இருந்தது; மற்றும் (3) கலிலேயர்கள் யூதேயாவில் இருந்தவர்களைவிட அதிகமாக வசனத்தை ஏற்றுக்கொள்பவர் களாக இருந்தார்கள், இவர்கள் மதப் பாரம்பரியத்தினால் குறைவாகவே மயக்கப்பட்டிருந்தார்கள். யூதாஸ்காரியோத்தைத் தவிர மற்ற அப்போஸ் தலர்கள் யாவரும் கலிலேயர்களாகவே இருந்தார்கள்.*

**இதயம் குளிரச் செய்த வரவேற்பு**

*யூதேயாவில் இயேசு செய்த ஊழியம் பற்றிய செய்தியானது அவருக்கு முன்பாக[கலிலேயாவுக்கு]ச் சென்றிருந்தது. யோவான் 4:45, "அவர் கலிலேயாவில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப் போயிருந்தார்கள்" என்று கூறுகிறது (யோவா. 2:23ஐக் காணவும்).[6]*

*இயேசு யூதேயாவில் தாம் செய்தது போலவே [கலிலேயாவிலும்] பிரசங்கிக்கத் தொடங்கினார். மாற்கு, "இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: 'காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்'[7] என்றார்" என்று பதிவு செய்திருக்கிறார் (1:14ஆ, 15; மத். 4:17யும் காணவும்). லூக்கா, "அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார்" (4:15)[8] என்று எழுதினார். இது ஒரு மங்களகரமான தொடக்கமாக இருந்தது.*

**அற்புதங்கள்**

*இயேசு யூதேயாவில் செய்திருந்தது போல் இங்கும் அற்புதங்களை நிகழ்த்தத் தொடங்கினார். லூக்கா 4:14, "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்" என்று கூறுகிறது. இது, இயேசு அற்புதங்களைச் செய்வதினால் "ஆவியானவரின் வல்லமையை" பயன்படுத்துவதைக் குறிப்பிடுகிறது. இயேசு திரும்பிய பின்பு முதல் அற்புதம்[9] கானா ஊரில் நடைபெற்றது.*

*இயேசு, "தாம் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்" (யோவா. 4:46). ஒருவேளை அந்த ஊரிலிருந்து வந்திருந்தவரான நாத்தான்வேல் (யோவா. 21:2), தம் வீட்டிற்கு அவரை [இயேசுவை] அழைத்திருக்கலாம். அருகில் இருந்த கப்பர்நகூம்[10] ஊரில் "ராஜாவின் மனுஷரில்"[11] ஒருவருடைய மகன் "மரண அவஸ்தையாய்" இருந்தார் (யோவா. 4:46, 47). இயேசு கானா ஊரில்*

இருந்ததை அறிந்த இவர், தமது மகனைக் குணமாக்கும்படி கேட்டுக் கொள்வதற்காக கானா ஊருக்கு விரைந்தார்.

அந்த அலுவலர், இயேசுவைக் கப்பர்நகூமுக்கு வரும்படி கெஞ்சினார், ஆனால் கிறிஸ்து அவரிடம், "நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக் கிறான்'' என்றார் (யோவா. 4:50).[12] இயேசுவில் விசுவாசம் கொண்ட அம்மனிதர் தம் இல்லம் நோக்கித் திரும்பத் தொடங்கினார். அவர் அங்கு சேர்ந்தபோது, தமது மகன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு கூறிய அதே வேளையில் அம்மகன் வியாதி நீங்கி சுகமானதை அறிந்தார் (யோவா. 4:50-53அ).[13] ஆழ்ந்த மனப்பதிவு பெற்ற அந்த ராஜாவின் மனுஷன், "அவனு ம் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்"[14] (யோவா. 4:53ஆ).

இந்த மற்றும் பிற அற்புதங்கள் பற்றிய செய்தியானது ''சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று" (லூக். 4:14ஆ). இயேசுவின் பெயர் ஒவ்வொரு உதட்டிலும் இருந்தது.

**கப்பர்நகூமுக்கு மாறுதல்**

கப்பர்நகூமைத் தமது இயக்கங்களின் அடிப்படை இடமாக்குதல் என்பதே கலிலேயாவில் இயேசுவின் முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது.[15] இயேசு ''கலிலேயாவுக்குப் போய், நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம் பண்ணினார்'' (மத். 4:12ஆ, 13அ) என்று மத்தேயு எழுதினார்.[16] கப்பர்நகூமில் இயேசுவுக்கு ஒருக்காலும் சொந்தமாக வீடு ஒன்று இருந்ததில்லை (மத். 8:20), ஆனால் அவரது சீஷர்களில் சிலருக்கு அங்கு சொந்தமாக வீடு இருந்தது (மாற். 1:21, 29). இந்த இடத்திலிருந்து, கிறிஸ்து தமது கலிலேய ஊழியம் முழுவதிலும் கப்பர்நகூமில் இருந்து தொலைவில் சென்று விடவில்லை. அவர் அந்த நகரத்தை விட்டுப் பயணமாகிப் பின்பு அங்கு மீண்டும் திரும்பி வருவார். (மாற். 1:21, 29, 38, 39; 2:1ஐ வாசிக்கவும்.)

கப்பர்நகூம் நகரானது "செபுலோன் நப்தலி நாடுகளின் எல்லைகளில்" இருந்தது (மத். 4:13ஆ), இது இஸ்ரவேலர்கள் கானானுக்குள் பிரவேசித்த போது அந்த இரு கோத்திரங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பொதுவான பகுதியாக இருந்தது (யோசு. 19). இயேசுவின் பயணமானது புகழ்பெற்ற மேசியாத்துவத் தீர்க்கதரிசனம் ஒன்றின் நிறைவேற்றமாக இருந்தது என்று மத்தேயு தமது வாசகர்களுக்குத் தகவல் தெரிவித்தார் (மத். 4:14-16; ஏசா. 9:1, 2ஐக் காணவும்[17]).

## உதவி தேவைப்பட்டது!

## (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11)

வடக்கு மாகாணங்களில் ஒரு உத்வேகமான முகாமைத் தொடங்கு வதற்கு ஒவ்வொன்றும் இயேசுவுக்காகத் தக்க இடத்தில் வைக்கப்பட்டி ருந்தது. அவருக்கு இன்னும் ஒரே ஒரு கூறு மட்டும் தேவைப்பட்டது: முழு நேர சீஷர்கள். மத்தேயு 4, மாற்கு 1 மற்றும் லூக்கா 5 ஆகியவை நான்கு மீனவர்களை அழைத்தல் பற்றிக் கூறுகின்றன: பேதுரு, யாக்கோபு,

யோவான் மற்றும் அந்திரேயா. இது பெரும்பாலான அல்லது எல்லா மனிதர்களுக்குமான இரண்டாவது அழைப்பாக இருந்தது, ஏனெனில் அவர்கள் இயேசுவின் யூதேயா ஊழியத்தின்போது அவரது சீஷர்களாக இருந்திருந்தார்கள்.[18]

நமது பாடம் தொடருகையில், சீஷர்களாயிருக்கும்படி இயேசு அழைத்த அழைப்பில் மூன்று படிநிலைகள் இருந்தன என்பதை நாம் கண்டறிவோம். அவரைப் பின்பற்றி அவரிடமிருந்து கற்றுக்கொள்ளுதலுக்கான அழைப்பு என்பது முதலாவது படிநிலையாக இருந்தது. இந்த அழைப்பானது - தங்கள் முந்திய தொழிலுக்குத் திரும்பிச் சென்ற மீனவர்களால் விவரிக்கப்பட்டபடி - குடும்பத்தையும் வேலையையும் விட்டு வருதல் என்பதை உள்ளடக்க வேண்டியிருந்ததில்லை. இயேசு தமது ஊழியத்தின்போது, பகுதி நேர ஊழியர்கள் பலரைக் கொண்டிருந்தார். ஒருமுறை அவர் எழுபது சீஷர்களைப் பிரசங்கிக்க அனுப்பினார் (லூக். 10:1-20).

முழு நேர சீஷத்துவம் என்பது இரண்டாவது படிநிலையாக இருந்தது. இந்த அழைப்புக்குப் பதில் கொடுத்த சீஷர்கள் இயேசுவுடன் பயணித்து அவருடன் வாழ்வார்கள். இந்த சீஷர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு மிகவும் சிறியதாக இருந்தது. நமது தற்போதய வேத பாடப் பகுதிகளில் உள்ள நான்கு மனிதர்களுக்கான அழைப்பானது இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்ததாக உள்ளது.

இயேசு தமது சீஷர்களில் இருந்து பன்னிருவரை அப்போஸ்தலர்களாக இருக்கும்படி தேர்ந்து கொண்டது என்பது மூன்றாவது படிநிலையை அடைவதாயிருக்கும். அந்தத் தனிச்சிறப்பான தருணம் பற்றி நாம் பிற்பாடு படிப்போம். இருப்பினும், இப்போது, இயேசுவின் நிலைத்த துணையாளர்களாக இருக்கும்படி நான்கு மீனவர்கள் அழைக்கப்பட்டதின் மீது கவனம் செலுத்த நாம் விரும்புகின்றோம்.

ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் மூன்றும் இந்த அழைப்பைப் பற்றிக் கூறுகின்றன. அம்மூன்று சுவிசேஷ விவரங்களும் ஒரு ஒப்பீடாக ஒன்றாக வைக்கப்படுவதில் சிரமத்தை செயல்விளக்கப்படுத்துகின்றன. மத்தேயுவும் மாற்குவும் நான்கு மனிதர்கள் அழைக்கப்பட்டதாகக் குறிப்பிட, லூக்கா மூன்று பேர்களை மட்டுமே குறிப்பிடுகின்றார். நீங்கள் மத்தேயு மற்றும் மாற்குவின் சுவிசேஷ விவரங்களை மட்டும் வாசிக்க வேண்டியிருந்தால், அங்கு வேறு எவரும் இருந்தார்களா என்று அறிய மாட்டீர்கள், ஆயினும் இயேசு ஒரு கூட்டத்தாருக்குப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார் என்று பதிவு செய்து, மாபெரும் மீன்பிடிப்பு பற்றிய அற்புதத்தையும் எடுத்துரைத்தார்.

இந்த வேறுபாடுகளின் காரணமாகச் சிலர், மத்தேயு, மாற்கு கூறுவதினின்று மாறுபட்ட ஒரு நிகழ்ச்சியை லூக்கா கூறுவதாக முடிவு செய்துள்ளார்கள். ஆயினும், இது ஒரே நிகழ்ச்சிதான் என்பதைப் பல்வேறு விவரங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. மூன்று விவரங்களுமே பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றன: (1) ஒரே இடம் - கலிலேயாக் கடல்[19] (மத். 4:18; மாற். 1:16; லூக். 5:1); (2) அதே மூன்று மனிதர்கள் - பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் (மத். 4:18, 21; மாற். 1:16, 19; லூக். 5:3, 10[20]); (3) ஒரே

*நடவடிக்கை - வலைகளைச் சுத்தம் செய்தல்/பழுது பார்த்தல் (மத். 4:21; மாற். 1:19; லூக். 5:2); (4) ஒரே அழைப்பு - மனிதர்களைப் பிடிப்பவர்களாக இருப்பது (மத். 4:19; மாற். 1:17; லூக். 5:10) மற்றும் (5) ஒரே பதில்செயல் - பணியை விட்டு அவரைப் பின் செல்லுதல் (மத். 4:20, 22; மாற். 1:18, 20; லூக். 5:11).*

*இவைகள் ஒரே நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றன என்றால், இந்த விவரங்கள் எவ்வாறு ஒப்புரவாக்கப்பட முடியும்? பின்வரும் காட்சியைக் கற்பனை செய்யுங்கள்:[21]*

*இயேசுவும் அவரது சீஷர்களும் கலிலேயாவுக்குத் திரும்பியபோது, சீஷர்களில் நான்குபேர் - பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் அந்திரேயா ஆகியோர் - கலிலேயாக் கடலில் மீன்பிடித்தல் என்ற தங்கள் தொழிலுக்குத் திரும்பினார்கள். ஒரு நாள் காலை வேளையில், அதிகாலையில், இந்த மனிதர்கள் வழக்கமாக மீன் பிடிக்கும் இடத்திற்கு இயேசு சென்றார். பலனற்ற இரவு ஒன்றிற்குப் பின்பு, யாக்கோபுவும் யோவானும் ஏற்கனவே வேலையை விட்டுவிட்டு கடற்கரையில் வலைகளைச் சுத்தம் செய்து பழுது நீக்கிக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களைக் காட்டிலும் விடாப்பிடியாக இருந்த பேதுரு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தார்; கடைசியில் அவரும் கூடத் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. அவரும் அந்திரேயாவும் கரைக்குத் திரும்பினார்கள்.*

*இந்த வேளையில், இயேசு அங்கிருந்தார் என்ற செய்தி பரவிற்று. ஒரு கூட்டம் கூடியது. இயேசு அவர்களுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார். மக்கள் அவரை நெருக்குகையில், அவர் பேதுருவின் படகில் ஏறி, அதை கடலினுள் சற்று தூரம் செலுத்தும்படி கூறினார். பிரசங்க மேடையாக மாற்றப்பட்ட படகிலிருந்து அவர் தமது பிரசங்கத்தை முடித்தார்.*

*இது ஒரு வழக்கத்திற்கு மாறான அற்புதத்தால் தொடரப்பட்டது: மீனவர்களைத் திகைக்கச் செய்யவும் பேதுருவை முழந்தாளிடவும் செய்த குறிப்பிடத்தக்க அளவிலான மீன்பிடிப்பு.[22] இவ்விதமாக இயேசு, தமது அழைப்பிற்குப் பதில்செயல் செய்யும்படி அந்த மீனவர்களின் இருதயங் களை ஆயத்தம் செய்தார். இந்த அழைப்பையும் அவர்களின் பதில்செயலை யும் மத்தேயு பதிவு செய்தார்: " 'என் பின்னே வாருங்கள், உங்களை[23] மனு ஷரைப் பிடிப்பவர்களாக்குவேன்' என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்" (மத். 4:19, 20; மற்றும் 4:21, 22; மாற். 1:17-20 ஆகியவற்றைக் காணவும்). லூக்காவின் சுவிசேஷ விவரம் அடிப்படையில் இதே போன்றுள்ளது, அது பின்வரும் வார்த்தை களில் இயேசுவின் அழைப்பையும் அவர்களின் பதில்செயலையும் மேற்கோள் காண்பிக்கிறது: " '... இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனா யிருப்பாய்' என்றார். அவர்கள் படவுகளை கரையில் கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக். 5:10, 11).*

*இவ்வழிமுறையில் இயேசு, நிரந்தரமான மற்றும் இடையூறற்ற சீஷத்துவத்திற்காக முதல் மனிதர்களை அழைத்தார். இந்த நிகழ்ச்சியானது தொலை தூர விளைவுகளைக் கொண்டிருந்தது. இப்போது இயேசு இரவும் பகலும் துணையாளர்களைப் பெற்றிருப்பது மட்டுமின்றி, இந்த நால்வரும்*

*தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு அப்போஸ்தலர்களில் மூன்றில் ஒரு பங்கினராக இருப்பார்கள், மற்றும் இந்த நால்வரில் மூவர் இயேசுவின் விசேஷித்த "உள்ளான வட்டத்தில்" இருப்பவர்கள் ஆவார்கள் (மாற். 5:37; 9:2; 14:33).*

## *முடிவுரை*

*இயேசுவின் கலிலேய ஊழியத்திற்கு ஒவ்வொன்றும் தயாராக இருந்தது. அடுத்த பாடத்தில் நாம், இயேசு இந்த மாகாணத்தில் தமது பிரசங்கம் மற்றும் குணமாக்கும் பயணத்தை எவ்வாறு தொடங்கினார் என்று காண்போம். உணர்வெழுச்சியூட்டும் நாட்கள் வரவிருந்தன!*

---

*குறிப்புகள்*

*[1]மத்தேயு 14:1-12; மாற்கு 6:14-29 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [2]இப்புத்தகத்தில் ''ஏரோதுகளில் சிலர்'' என்ற அட்டவணையில் காணவும். [3]அயினோன் என்ற இடம் (யோவா. 3:23) யூதேயாவின் வடக்குப் பகுதியில் இருந்தது என்று பலர் நினைக்கின்றார்கள். இது சமாரியாவில் இருந்திருக்கலாம். (''இப்புத்தகத்தில் கூறிமுடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற பட்டியலுடன் இணைந்துள்ள வரைபடத்தில் காணவும்). [4]யோவான் 4:8, இயேசுவின் சீஷர்கள் அவருடன் பயணம் செய்தார்கள் என்று நாம் அறியச் செய்கிறது. [5]"இப்புத்தகத்தில் கூறிமுடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்" என்ற பட்டியலுடன் இணைந்துள்ள வரைபடத்தில் காணவும். [6]யோவான் 4:44ல், யோவான் ஒரு வினோதமான குறிப்பைச் செருகினார். நாம், "ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு தாமே சொல்லியிருந்தார்" என்று வாசிக்கின்றோம். இது, இயேசு ஏன் யூதேயாவை விட்டுச் சென்றார் என்பதற்கான விளக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் - ஆனால் சுவிசேஷ விவரத்தின் மற்ற பகுதிகள் எல்லாவற்றிலும் கலிலேயாவே இயேசுவின் "சொந்த நாடு" என்ற கருத்து முன்னிறுத்தப்பட்டுள்ளது. ஒருவேளை, இது இயேசு கலிலேயாவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வெகுநாள் நீடித்திராது என்பதை சுட்டிக் காண்பித்த முன் சிந்தனை நோக்கமாக இருந்திருக்கலாம். (மத். 13:57; மாற். 6:4; லூக். 4:24 ஆகியவற்றைக் காணவும்.) [7]''மனந்திரும்பி விசுவாசித்தல்'' என்பதற்கான கட்டளை ஓரளவுக்கு வழக்கமற்றதாக உள்ளது. பொதுவாக மக்கள் முதலில் இயேசுவில் விசுவாசம் கொண்டு, அதன் காரணமாகவே தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புகின்றார் கள். ஏற்கனவே தேவன்மீது அடிப்படை விசுவாசம் கொண்டு வேத வசனங்களைப் பற்றிய அறிவு சிலவற்றைக் கொண்டிருந்த யூதர்களுக்கு இயேசு பிரசங்கித்துக் கொண்டிருந்தார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் முதலில், தேவனுடைய பிரமாணத்தைத் தாங்கள் கடைப்பிடிக்கத் தவறியதற்காக மனம் வருந்த வேண்டியது அவசியமாக இருந்தது. பின்பு அவர்கள் மேசியா(கிறிஸ்து)வைப் பற்றிக் கற்றுக்கொண்டு அவரை விசுவாசிக்க வேண்டியிருந்தது. [8]சட்டப்படியாக, ஜெப ஆலயங்களில் ஓய்வுநாட்களில் இருமுறையும், திங்கள்கிழமையன்று ஒருமுறையும், வியாழக்கிழமையன்று ஒருமுறையும், முறையான கூட்டங்கள் நடைபெற்றன. திங்கள்கிழமைகளும் வியாழக்கிழமை களும் பல நகரங்களில் "சந்தை நாட்களாய்"*

*இருந்தன, அந்த நாட்களில் ஏராளமான கூட்டம் கூடும் என்பது உறுதி. மற்ற வேளைகளில் முறைசாராக் கூட்டங்களுக் காகவும் ஜெப ஆலயங்கள் திறக்கப்படக் கூடியவைகளாக இருந்தன. இந்த சூழ்நிலைகள் பிரசங்கிப்பதற்கு மிக உன்னதமான வாய்ப்புக்களை இயேசுவுக்கு அளித்தன. [9]யோவான் 4:54ல் உள்ள "இரண்டாம் அற்புதம்" என்ற சொற்றொடரானது கலிலேயாவில் நடைபெற்ற இரண்டாவது அற்புதத்தைக் குறித்தது என்பது தெளிவு; தண்ணீரைத் திராட்ச ரசமாக்கியது (யோவா. 2:11) முதலாவது அற்புதமாகவும், இது இரண்டாவது அற்புதமாகவும் இருந்தது. யூதேயாவில் இருந்தபோது இயேசு அங்கும் அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார் அவை இவ்விடத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை (யோவா. 2:23; 3:2). [10]கப்பர்நகூம் என்ற ஊரானது வடக்கில், கானாவூரில் இருந்து சுமார் இருபது மைல்கள் கிழக்கில் இருந்தது. (''இப்புத்தகத்தில் கூறிமுடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற பட்டியலுடன் இணைந்துள்ள வரைபடத்தில் காணவும்.)*

*[11]மூலவேதவசனத்தில் ''ராஜாவின் மனுஷன்'' என்றுள்ளது. இம்மனிதர் அநேகமாக, ஏரோது அரசனின் அரண்மனையில் ஒரு அலுவலராக இருந்திருப்பார். [12]அந்த அதிகாரிக்கு இயேசுவின் தொடக்க பதிலானது (யோவா. 4:48) வழக்க மற்றதாக உள்ளது. இது ஒரு தனிப்பட்ட கடிந்துகொள்ளுதலாக இருக்கவில்லை, ஆனால் பொதுவாக மனித குலத்திற்கான ஒரு கட்டளையாக இருந்தது என்பதைக் கவனியுங்கள் ("நீ" என்ற வார்த்தை இவ்விடத்தில் கிரேக்க மொழியில் பன்மை நடையில் உள்ளது). ஒருவேளை இயேசு, கலிலேயர்களையும், அற்புதங்கள் எதுவுமின்றி, "அவரது வார்த்தையினிமித்தம்" (வ. 41) விசுவாசித்த சமாரியர்களை யும் வேறுபடுத்தி ஒப்பிட்டிருக்கலாம். ஒருவேளை இவ்வார்த்தைகள் அம்மனிதரின் விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கம் கொண்டிருந்திருக்கலாம். எவ்வகையிலும், இவ்வார்த்தை இயேசுவை விசுவாசித்த அந்த அதிகாரியைச் சேதமாக்கவில்லை. [13]இது, இயேசு தூரத்திலிருந்து நிகழ்த்தியதாக அறியப்பட்டுள்ள நான்கு அற்புதங்களில் ஒன்றாக உள்ளது. இவற்றில், நூற்றுக்கு அதிபதியின் வேலைக் காரனைக் குணமாக்கியது மத். 8:5-13 மற்றும் லூக். 7:1-10; சிரபோனிக்கே நாட்டு பெண்ணின் மகளைக் குணமாக்கியது மத். 15:22-28 மற்றும் மாற். 7:25-30; மற்றும் பத்து தொழுநோயாளிகளைக் குணமாக்கியது (லூக். 17:11-37) ஆகியவை அடங்கியுள்ளன. [14]இது, ஒரு மனிதர் தமது விசுவாசத்தைத் தம் வீட்டாருடன் பகிர்ந்து கொள்வதற்கான பாராட்டத்தக்க உதாரணமாக உள்ளது. [15]இயேசு இதற்கு முன்பே கப்பர்நகூமுக்கு சென்றிருந்தார் (யோவா. 2:12ஐக் காணவும்). [16]இயேசு ஏன் நாசரேத்தூரில் இருந்து கப்பர்நகூமுக்கு மாறினார் என்பதை விளக்குவதற்கு, பெரும்பாலான ஒப்பீடுகள் லூக்கா 4:16-30ஐ இவ்விடத்தில் செருகுகின்றன. நான் இரண்டு காரணங்களுக்காக இதை இவ்விடத்தில் உள்ளடக்கா மல் இருக்கின்றேன்: (1) இவ்வசனப் பகுதியானது ''கப்பர்நகூமில் செய்யப் பட்டிருந்தது'' என்ன என்பதை(லூக். 4:23)க் குறிப்பிடுகிறது, ஆனால் நமது ஒப்பீட்டின் இந்த இடத்தில், கப்பர்நகூமில் ஒன்றும் செய்யப்பட்டிருந்ததில்லை. (2) புறக்கணிக்கப்படுதலின் மிக அதிகமான இயல்பு கலிலேயாவில் இயேசுவின் ஊழியத்தின் பிற்பகுதியில் இன்னு ம் சிறப்பாக பொருந்துவதாகக் காணப்படுகிறது. ஆயினும் நீங்கள், இவ்விடத்தில் இவ்வரலாற்றை செருக விரும்பலாம். [17]ஒருவேளை உங்களுக்கு நன்கு பழக்கமாகியுள்ள இந்தத் தீர்க்கதரிசனத்தின் வசனங்கள் 6 மற்றும் 7 ஆகியவற்றை வாசிக்கவும். [18]யோவான் 1:40, 41 வசனப்பகுதியானது, அந்திரேயாவையும் பேதுருவையும் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது. முன்பு நாம், பெயர் குறிப்பிடப்படாத சீஷர் யோவானாக இருக்கலாம் என்று குறிப்பிட்டோம் (யோவா. 1:37, 40). மேலும் நாம், இவ்வசனப் பகுதியின் வார்த்தை அமைப்பானது,*

*அந்திரேயா தமது சகோதரரான பேதுருவைக் கண்டது போன்றே, யோவான் தமது சகோதரரான யாக்கோபுவைக் கண்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கலாம் என்றும் கவனித்து இருக்கின்றோம்.* [19]*லூக்கா சுவிசேஷத்தில் "கெனசெரேத் கடல்" என்றுள்ளது (5:1), இது கலிலேயாக் கடலுக்கிருந்த இன்னொரு பெயர் ஆகும். "கலிலேயாக் கடல்" என்ற துணைப் பாடத்தில் காணவும்.* [20]*மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோர் நான்காவது மனிதராக அந்திரேயாவைப் பற்றியும் கூறுகின்றார்கள். லூக்கா அந்திரேயாவைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதில்லை, ஆனால் பேதுருவுடன் ஒருவர் படகில் இருந்ததாக* [*இவர் யாக்கோபுவோ அல்லது யோவானோ அல்ல*] *குறிப்பிடுகின்றார் (லூக். 5:6, 7, 10). அவரது சகோதரரான அந்திரேயா அவருடன் ஒரு மீனவராக வேலை செய்து கொண்டிருந்தார் (மத். 4:18).*

[21]*சுவிசேஷ விவரங்களில் வேறுபாடுகள் இருக்கின்றபோது, அந்த வேறுபாடுகள் ஒப்புரவாக்கப்பட - இது எவ்வாறாகும் என்று நாம் அறியாதிருப்பினும் - முடியும் என்று அறிதலே போதுமானதாக உள்ளது.* [22]*இந்த நிகழ்ச்சிகள் பற்றிய முழுமையான கலந்துரையாடலுக்கு, "சீஷத்துவத் திற்கான அழைப்பு" என்ற அடுத்த பாடத்தில் காணவும்.* [23]*வில் எட் வார்ரென் அவர்கள் தமது விரிவுரைக் குறிப்புகளில், "நான் உங்களை ஆக்குவேன்" என்ற வார்த்தையின் மீது விசேஷித்த வலியுறுத்தத்தை வைத்தார்: "ஒருவர் தாமே கற்றுக்கொண்ட பொறியாளராக இருக்க முடியும்; ஆனால் ஒருவர் தாமே கற்றுக்கொண்ட கிறிஸ்தவராக இருக்க முடியாது"* (Will Ed Warren, Class Syllabus, *The Life of Christ: The Synoptic Gospels,* Harding University, 1991, 16).

17

# சீஷத்துவத்திற்கு அழைப்பு

## லூக்கா 5:1–11, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*"சீஷன்" என்பது, இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு வேதாகமத்தில் மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்களில் ஒன்றாக உள்ளது (மத். 5:1; 8:21, 23; 9:19; அப். 6:1, 2, 7; 9:1). "சீஷன்" என்பது "கற்றுக் கொள்பவர்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையின் மொழி பெயர்ப்பாக உள்ளது.[1] சீஷன் என்றால், ஒரு போதகரைப் பின்பற்றுகின்ற (மத். 16:24), போதகரிடமிருந்து கற்றுக் கொள்ளுகின்ற (மத். 11:29) மற்றும், பின்பு போதகரின் கட்டளைகளைப் பின்பற்றுகின்ற (யோவா. 8:31) ஒருவராயிருந்தார் என்பதே இதன் முழுக் கருத்தமைவாக உள்ளது. போதகர்/சீஷன் ஆகியோருக்கிடையில் ஒரு நெருக்கமான உறவுமுறை நிலவிற்று. ஒரு உண்மையான சீஷன் தனது போதகரைப் போல் ஆனார் (மத். 10:25அ).*

*"சீஷத்துவத்திற்கு அழைப்பு" என்ற இந்தப் பிரசங்கத்திற்கு, லூக்கா 5:1-11 நமது வேத பாடப்பகுதியாக உள்ளது,[2] இது இயேசு பேதுருவையும் அவரது நண்பர்களையும் அழைத்த நிகழ்ச்சி பற்றிக் கூறுகிறது. நமது பாடத்தின்போது, நாம் சீஷத்துவத்திற்குத் தேவையான விஷயங்கள் சிலவற்றைக் கண்டறிவோம்.*

### நீங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் (வ. 1-3)

*நீங்கள் இயேசுவின் சீஷராயிருக்க வேண்டுமென்றால், நீங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் நீங்கள் கர்த்தரால் அறிவுறுத்தப் படுவதற்கு மனவிருப்பமுள்ளவராக இருக்க வேண்டும். சிலர், எல்லாம் அறிந்த எண்ணப்போக்குடையவர்களாக, "எவரொருவரும் எனக்கு ஏதொன்றையும் போதிக்க முடியாது" என்று கூறுகின்றார்கள். நீங்கள் செவிகொடுக்கவும் கற்றுக் கொள்ளவும் தயாராக இல்லாதவரையிலும் நீங்கள் கிறிஸ்துவின் சீஷராயிருக்க முடியாது. இதன் முக்கியத்துவமானது நமது வேதபாடப்பகுதியில் காணப்படும்.*

*இந்த வரலாறு தொடங்குகையில், இயேசு கலிலேயாக் கடலின் அருகில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்.[3] அருகில் சீமோன் பேதுரு தமது மீன்பிடிக்கும் படகுடன் தமது வலைகளைச் சுத்தம் செய்து கொண்டிருந் தார். அவரும் அவரது கூட்டாளிகளும் இரவு முழுவதும் மீன்பிடிக்க முயற்சி செய்திருந்தார்கள், ஆனால் காண்பிப்பதற்கு அவர்களிடம் சோர்வடைந்த*

*உடல்களும் அழுக்கான வலைகளும் மட்டும் இருந்தன. பேதுரு தமது தலையை ஒருபுறமாய்த் தொங்கவிட்டவராக, அவரது விரல்கள் வலையின் முடிச்சிட்ட சதுரங்களில் இருந்த களைகளையும் சேற்றையும் இலாகவமாக நீக்கிக் கொண்டிருக்க, இயேசு கூறுவதைக் கவனித்துக் கொண்டிருந்ததை என்னால் காண முடிகிறது. இது அந்த மீனவர் இயேசுவை எதிர்கொண்ட முதல் நிகழ்ச்சியாக இருக்கவில்லை. அவர் யூதேயாவில் கிறிஸ்துவுடன் பயணம் செய்திருந்தார். ஆயினும், கலிலேயா மாகாணத்திற்குத் திரும்பிய பின்பு, அவர் தமது முந்திய தொழிலுக்குத் திரும்பியிருந்தார்.*

*இயேசு பிரசங்கிக்கையில், கூட்டம் தொடர்ந்து வளர ஆரம்பித்தது. ஆர்வத்துடன் கவனித்தவர்கள் கிறிஸ்துவைச் சுற்றிக் கூட்டமாகக் கூடி, அவரது மிதியடிகளில் தண்ணீர் மோதும் வரையிலும் அவரை கடலின் அருகாக நெருக்கி நெருக்கி பலவந்தமாய்க் கிட்டிச் சேர்ந்தார்கள். அவர் பேதுருவின் படகினுள் ஏறி அமர்ந்து, படகைக் கடலினுள் செலுத்தும்படி அந்த மீனவரைக் கேட்டுக் கொண்டார். அங்கு, பிரசங்க மேடையாக்கப் பட்ட படகின் மேல்தட்டில் அமர்ந்தவாறு இயேசு தமது உரையைத் தொடர்ந்தார்.*

*பேதுரு படகின் நடுவில் அமர்ந்தவாறு, அதை நிலைப்படுத்திக் கொண்டு இருக்கையில் என்ன செய்து இருப்பார் என்று நீங்கள் நினைக்கின் றீர்கள்? அவர் கவனித்துக் கொண்டிருந்தார். எதைக் கவனித்துக் கொண்டிருந்தார்? இயேசு "தேவ வசனத்தைப்" பிரசங்கித்தார் என்று நமது வேதபாடப் பகுதி (லூக். 5:1) கூறுகிறது. நீங்கள் வசனத்தின் மாணவரா யிராமல் கர்த்தருக்குச் சீஷராக இருக்க முடியாது. இயேசு, "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11:29) என்று கூறினார். தங்களைச் சீஷர் என்று உரிமைகோரிக் கொள்ளுகின்ற சிலர், ஆண்டுக்குப் பின் ஆண்டாக வேதாகமத்தை அறியாமல் இருக்கின்றார்கள் - ஆனால் நீங்கள் எழுதப்பட்ட வசனத்தில் காணப்பட்டபடியாக சத்தியத்தின் தீவிரமான மாணவராகாமல் அவரது சீஷராக முடியாது!*

## *நீங்கள் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும் (வ. 3-8)*

*கடைசியில், இயேசு தமது பிரசங்கத்தை முடித்தார். அவர் கூட்டத் தாருக்கு அதை முடித்திருந்தார், ஆனால் பேதுருவுக்கு இன்னும் அவர் பிரசங்கித்து முடிக்காதிருந்தார். பேதுரு சாத்தியமாகுதல் அதிகம் கொண்டிருந்தார், ஆனால் அவர் கற்றுக்கொள்ள வேண்டியதும் அதிகமாக இருந்தது. இது அவருக்கு அடுத்த பாடத்திற்கான வேளையாக இருந்தது. ஒருபோதும் பழமைவாதம் இல்லாத போதகரான இயேசு, எதிர்பாராத ஒன்றைச் செய்தார். அவர் சீமோனிடத்தில், "ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்று கட்டளையிட்டார் (வ. 4).*

*கலிலேயாக் கடலில் இருந்த ஒவ்வொரு நல்ல மீனவரும் அறிந்திருந்ததைப் பேதுருவும் அறிந்திருந்தார். மீன்கள் உணவு உண்ண வரும் இரவு வேளையே மீன்பிடிக்கும் நேரமாயிருந்தது, பகல் காலம் மீன் பிடிக்க ஏற்ற வேளையல்ல. ஆழமற்ற பகுதிதான் மீன்பிடிக்க ஏற்ற இடமே தவிர, ஆழமான பகுதி அதற்கேற்ற இடமல்ல. மற்றும், அங்கு மீன்கள் இருந்த போது அவரது பிரயாசமானது - வெற்றியின்றி பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மணி நேரங்கள் முயற்சி செய்த பின்பு அல்ல, இரவு முழுவதும் விழித்திருந்து சக்தி தீர்ந்த பின்பு அல்ல - வலிந்து பெறப்பட வேண்டியதாயிருந்தது.*

*அனுபவமுள்ள, கடினமாய் வேலை செய்கின்ற, வெற்றி நிறைந்த மீனவர் என்ற வகையில், சீமோனுக்கு, எவ்வாறு மீன்பிடிக்க வேண்டும் என்று ஒரு தச்சர் (மாற். 6:3) கூறுதல் என்பது வெறுப்பின் தொடுதலாக இருந்திருக்க வேண்டும். (ஒருக்காலும் பிரசங்கித்திராதவர்கள் என்னிடத்தில் அது எவ்வாறு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறும்போது நான் வெறுப்புணர்வை அடைந்துள்ளேன் என்று இவ்விடத்தில் அறிக்கை இடுகின்றேன்.) பேதுருவின் பதில் இதைச் சுட்டிக் காண்பித்திருக்கலாம்: "ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்பட வில்லை ..." (வ. 5அ).*

*ஆயினும் அதைத் தொடர்ந்து வந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்: "ஆகிலும் ... ." "... ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்" (வ. 5ஆ). KJVயில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளை நான் விரும்புகின்றேன்: "இருந்தாலும்." வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நாங்கள் இரவு முழுவதும் முயற்சி செய்தும் வெற்றி கிடைக்க வில்லை ... இருந்தாலும் ... நான் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும் என்று நீர் கூறினால், நான் அதைச் செய்வேன். அது பத்தாண்டுகளுக்கும் மேலாக மீன் பிடித்தலில் நான் கற்றுக்கொண்ட எல்லாவற்றிற்கும் எதிரானதாக இருக்கலாம், ஆனால் நான் செய்யும்படி நீர் கூறும் செயலை நான் செய்வேன்."*

*பேதுரு இவ்விதமான எண்ணப்போக்கை எவ்வாறு கொண்டிருக்க முடிந்தது? இதற்கான பதில், அவர் இயேசுவை விளித்த/அழைத்த பட்டப்பெயரில் காணப்படுகிறது: "ஐயரே"/"எஜமானரே." மூல வசனத்தில், இது "எஜமானர்" அல்லது "கர்த்தர்" என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இல்லை.[4] இது லூக்காவினால் மட்டும் பயன்படுத்தப்பட்ட விசேஷித்த வார்த்தையாக உள்ளது, இது இயேசுவுக்கு மட்டுமே பயன் படுத்தப்பட்ட ஒரு பட்டபெயராக உள்ளது (லூக். 8:24, 45; 9:33, 49, 17:13). இது "நிற்குதல்" என்பதற்குரிய வார்த்தையுடன் "மேலாக" என்பதற்குரிய வார்த்தையை இணைத்த ஒரு கிரேக்கக் கூட்டு வார்த்தையாக உள்ளது. இது "மேலாக நிற்கின்ற ஒருவர்" - இன்னொருவர் மீது முழுமையான அதிகாரம் கொண்டுள்ள ஒருவர் - என்பதைக் குறிக்கிறது. பேதுரு இயேசுவின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டாரா இல்லையா என்பது முக்கியமானதாக இருக்கவில்லை. இயேசு ஒரு எஜமானராக இருந்தார், பேதுரு அவருக்கு அடிமையாக இருந்தார்; அவர் கீழ்ப்படியத் தயாரானார்.*

நாம் இயேசுவின் சீஷராயிருந்தால், நாம் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்: அவர் நமது எஜமானராக இருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எஜமானருக்கு அறிவுறுத்துவதில்லை; அவரே நமக்கு அறிவுறுத்துகின்றார். நாம் எவற்றைச் செய்வோம் எவற்றைச் செய்ய மாட்டோம் என்று நாம் அவருக்குக் கூறுவதில்லை; நாம் எவற்றைச் செய்ய வேண்டும் என்று அவரே நமக்குக் கூறுகின்றார். "எஜமானர்" என்பது பலம் வாய்ந்த வார்த்தையாக உள்ளது. எஜமானர் ஆலோசனைகள் தருவதில்லை; எஜமானர் அறிவுரை தருவதில்லை; எஜமானர் கட்டளைகள் தருகின்றார் - இவைகள் கேள்வியெதுவுமின்றி கீழ்ப்படியப்பட வேண்டிய கட்டளையாக உள்ளன.

ஒருவேளை பேதுரு படகை ஆழமான தண்ணீருக்குள் கொண்டு சென்ற வேளையில் தம்மை மதியீனராக உணர்ந்திருக்கலாம். அவர் தமது வலைகளை வீசுகையில் சற்றே சங்கடம் அடைந்திருக்கலாம். கரையிலிருந்த பிற மீனவர்கள் சிரிப்பதை அவர் காதுகளில் கேட்டிருக்கலாம்.[5] இருந்தாலும், எஜமானர் கூறியதை அவர் செய்தார்.

இந்தக் கீழ்ப்படிதலுக்குக் கர்த்தர் எவ்வாறு வெகுமதி அளித்தார்? வெகு சீக்கிரத்திலேயே பேதுரு [வலையின்] கயிறுகளில் ஒரு இழுவையை உணர்ந்தார். அவரும் அவரது உதவியாளர்களும் மீன்களால் நிறைந்திருந்த வலைகளை இழுக்கத் தொடங்கினார்கள். மீன்கள் வலைகளுக்குள் குவிந்தன, அவற்றின் வால்கள் தண்ணீரை அடித்துக் கொண்டிருந்தன. அந்த மனிதர்கள் வலைகளைப் படகினுள் இழுத்துப் போட கடுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கையில், பின்னப்பட்டிருந்த வலைகள் கிழிந்து போகத் தொடங்கின. அவர்கள், வந்து உதவும்படி கரையிலிருந்த தங்கள் கூட்டாளிகளை நோக்கி பெரும் பீதியுடன் சைகை காண்பித்தார்கள்.

யாக்கோபுவும் யோவானும் தங்கள் மீன்பிடிப் படகுகளுடன் வந்து சேர்ந்தார்கள். விரைவிலேயே இரு படகுகளும் "தொப்" என்று விழுந்து நழுவிச் செல்லும் மீன்களால் நிறைந்தது - இரு படகுகளும் மூழ்கிவிடும் என்ற அபாயத்திலிருக்கும் அளவுக்கு மீன்கள் நிறைந்தன.[6] இவைகள் நமக்குப் பரிச்சயமான பத்து முதல் பதினைந்து அடிகள் வரையிலான பயணப்படகுகள் அல்ல. இவைகள் கலிலேயாக் கடலில் பயன்படுத்தப் பட்ட இருபது முதல் முப்பது அடிகள் வரையிலான தொழில் முறை மீன்பிடிப் படகுகளாயிருந்தன. பயிற்சி பெற்ற மீனவர்கள், ஒருக்காலும் இப்படிப்பட்ட மீன்பாட்டைக் கண்டிருந்ததில்லை!

பேதுருவுக்கும் பிற மீனவர்களுக்கும் இது என்ன ஒரு வெளிப்பாடாக இருந்திருக்க வேண்டும்! மீன்பிடித்தல் என்பது பேசப்படும் தலைப்பாக இருக்கும்போது கூட, நமது கர்த்தர் தாம் என்ன பேசுகின்றோம் என்பதை அறிகின்றார்!

பெரும்பாலான வேளைகளில், கர்த்தருடைய கட்டளைகள் நமக்குக் கருத்தறிவை ஏற்படுத்துகின்றன, ஆனால் விஷயம் எப்போதுமே இவ்வாறு இருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.[7] "இது எனக்கு அறிவுப்பூர்வமானதாக உள்ளதா?" என்பது கேள்வியாக இருப்பதில்லை. "இது நான் செய்யும்படிக்குக் கிறிஸ்து என்னிடத்தில் கேட்டுக்கொண்டதாக

*உள்ளதா?" என்பதே கேள்வியாக உள்ளது. அப்படியென்றால், நாம் பேதுருவைப் போல் பதில் அளிப்போமாக: "நீர் கூறுகின்றபடி நான் செய்வேன்." நாம் கீழ்ப்படிந்தால், முடிவில் கர்த்தருடைய வழி சரியானதாக உள்ளது என்பதை நாம் காண்போம்!*

*நீங்கள் இயேசுவின் சீஷராயிருந்தால், அவர் ஒவ்வொன்றிற்கும் எஜமானராக இருக்கின்றார் என்பதில் நீங்கள் இணக்கம் கொண்டு - அந்த விசுவாசத்தின்பேரில் நீங்கள் செயல்பட வேண்டும்.*

## நீங்கள் சிலவற்றை ஒப்புக்கொள்ள வேண்டும் (வ. 8-10அ)

*இயேசு மனதில் பதியும் சில அற்புதங்கள் செய்திருந்ததைப் பேதுரு கண்டிருந்தார். அவர் தண்ணீரைத் திராட்சரசமாக்கியதைப் பேதுரு கண்டிருந்தார் (யோவா. 2:1-11). இயேசு ராஜாவின் மனிதர் ஒருவரின் மகனைக் குணமாக்கியதைப் பேதுரு கண்டிருந்தார் (யோவா. 4:46-54). கிறிஸ்து மற்ற பல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தபோது அதைக் காண பேதுரு அங்கிருந்தார் (யோவா. 2:23; 3:2 ஆகிய வசனங் களைக் காணவும்), ஆனால் இந்த அற்புதம் பேதுருவைப் பாதித்தது போல் வேறு எந்த அற்புதமும் அவரைப் பாதித்திருந்ததில்லை. இது சீமோனின் தொழிலை உள்ளடக்கியிருந்தது; இது அவர் வாழ்ந்த வழிமுறையை நோக்கியதாக இருந்தது. இது இயேசுவே எல்லாவற்றிற்கும் கர்த்தராக இருக்கின்றார் என்று அவர் [பேதுரு] காண்பதற்குக் காரணமாயிற்று.*

*பேதுரு இயேசுவை ஒரு புதிய வெளிச்சத்தில் காண்கையில், அவர் தம்மையும் ஒரு புதிய வெளிச்சத்தில் கண்டார். அவர் திடீரென்று தமது குறைபாடுகளினால் மூழ்கடிக்கப்பட்டார். "அவர் இயேசுவின் பாதத்தில் விழுந்து" - துடித்துக் கொண்டிருக்கும் மீன் குவியலின்மீது விழுந்து- "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போக வேண்டும்" என்று கூறினார் (வ. 8). அவர் தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் திடீரென்று எதிர்கொள்ளுகின்ற மக்கள் எப்பொழுதும் பதில்செயல் செய்வது போன்றே பதில்செயல் செய்தார் (ஆதி. 18:27; யோபு. 42:4; ஏசா. 6:5).*

*நீங்கள் இயேசுவின் சீஷராயிருந்தால், நீங்கள் இரு சத்தியங்களை ஒப்புக்கொள்ள வேண்டும்: முதலாவது, அவர் எல்லாமுமாக இருக்கின்றார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். பேதுரு தமது பாவம் நிறைந்த தன்மையை அறிக்கையிட்டபோது, இயேசுவை எவ்வாறு விளித்தார்/ அழைத்தார் என்று கண்ணோக்குங்கள்: அவர் இயேசுவை "ஆண்டவரே" என்று அழைத்தார். நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும்" என்று பவுல் கூறினார் (ரோமர் 10:9). இரண்டாவது, அவர் எல்லாமுமாக இருக்கின்றார் என்று நீங்கள் அறிக்கையிடுகையில், நீங்கள் ஒன்றுமில்லை என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகின்றீர்கள். அவர் உங்களுக்குத் தேவை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.*

"தன்னையே நிரம்பப் பெற்றுள்ள" ஒரு மனிதர்,[8] கர்த்தருக்கு இடம் ஒன்றையும் கொண்டிருப்பது இல்லை. "ஆண்டவரே, நான் எவ்வளவு நல்லவன் என்று பாரும்! நான் எவ்வளவு விவேகியாக இருக்கின்றேன் என்று பாரும்! நான் எவ்வளவு திறமைசாலியாக, எவ்வளவு வெற்றிகரமானவனாக இருக்கிறேன் என்று பாரும்! நான் எவ்வளவு சாதிக்க முடியும் என்பதை நீர் பாராட்டுவீர் என்று நான் நம்புகின்றேன்!'' என்று கூறுகின்றவர்களை இயேசு பயன்படுத்த இயலாது. கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து, தங்கள் பலவீனங்களையும் அவர்மீது தாங்கள் சார்ந்திருத்தலையும் ஒப்புக் கொள்ளுகின்றவர்களையே அவரால் பயன்படுத்த முடியும். இன்னொருவரின் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டுமென்றால், நீங்கள், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக். 18:13) என்று கூறத் தயாராக இருக்க வேண்டும்.

## நீங்கள் சிலவற்றை மாற்ற வேண்டும் (வ. 10ஆ)

பேதுரு தம்மையும் இயேசுவையும் பிரித்த கணவாயைக் கண்டபோது, ''நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்'' என்று கூறினார் (வ. 8). அதிர்ஷ்டவசமாக, அவரது வேண்டுகோளுக்கு இயேசு இணங்கவில்லை. மாறாக, இயேசு ஒரு விசேஷித்த அறைகூவலினால் பேதுருவை நெருங்கக் கொண்டு வந்தார். ''அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: 'பயப் படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்' என்றார்'" (வ. 10ஆ). "பிடிக்கிறவன்" என்பது நிகழ்கால வினைச் சொல்லாக உள்ளது, இது தொடர்ந்து செய்யப்படும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. இது ஒருமுறை சாதிக்கும் சாதனையல்ல, ஆனால் இது வாழ்நாள் முழுவதற்குமான தொழிலாக உள்ளது. மற்றும், ''பிடிக்கிறவன்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "உயிருடன் பிடித்தல்" என்ற நேரடியான அர்த்தத்தைக் கொண்டுள்ளது.[9] அவர்கள் மனிதர்களை இயேசுவினிடத்திற்கு, "உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற"வரிடத்திற்குக் கொண்டு வருவார்கள் (யோவா. 6:33). இந்த அழைப்பை மத்தேயு பின்வருமாறு பதிவு செய்தார்: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" (4:19; மாற். 1:17ஐக் காணவும்).

பேதுருவுக்கான அறைகூவலானது அவரது வாழ்வின்மீது மீண்டும் கவனம் செலுத்துவதாக இருந்தது. அவர் மீனுக்காக மீன் பிடித்தல் மீது கவனம் குவித்திருந்தார்; இப்பொழுது அவரது வாழ்வானது மனிதர்களைப் பிடிப்பதில் மையம் கொண்டதாயிருக்கும்.

ராஜ்யத்தின் விதையை (வேத வசனம்; லூக். 8:11) விதைப்பதற்கென்று இயேசு விவசாயிகளை அழைக்கின்றார்.[10] "விலையுயர்ந்த முத்தைப்" பற்றி (மத். 13:46; சுவிசேஷம்) மனிதர்களுக்குக் கூறுவதற்காக இயேசு வர்த்தகர்களை அழைக்கின்றார். இயேசு தமது வீட்டைக் (சபை; மத். 16:18; 1 தீமோ. 3:15 ஆகியவற்றைக் காணவும்) கட்டியெழுப்புவதற்காகத் தச்சர்களை அழைக்கின்றார். ஆத்துமாக்களைக் குணப்படுத்துவதற்காக

மாபெரும் மருத்துவருடன் (யோவா. 12:40) ஊழியம் செய்வதற்காக மருத்துவர்களை அழைக்கின்றார். வாழ்வில் உங்கள் தொழில் அல்லது ஆர்வம் எதுவாயிருந்தாலும், நீங்கள் இயேசுவின் சீஷராயிருக்க வேண்டுமென்றால், உங்கள் வாழ்வு பற்றி மீண்டும் கவனம் செலுத்துதல் இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்வின் மையத்தை மாற்றும்போது, வலியுறுத்தங்கள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றிலும் மாற்றங்கள் இருக்கும்.

என் நண்பராகிய ஒருவர், ஃப்ளாயிட் ஸ்க்யூபெர்ட் அவர்கள், பள்ளிகளுக்குப் பொருட்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தார். அவரது எழுது மேசையின்மீது, அவர் பின்வரும் எழுத்துப் பலகையொன்றைக் கொண்டிருந்தார்: "தேவனுக்கு ஊழியம் செய்தல் என்பதே என் வர்த்தகமாக உள்ளது. நான் எனது பற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்துவதற்காகப் பென்சீல்கள் விற்கின்றேன்."

## நீங்கள் சிலவற்றை விட்டுக் கொடுக்க வேண்டும் (வ. 11)

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, பேதுரு இதற்கு முன்பு இயேசுவுடன் பயணம் செய்திருந்தார். அவரது நண்பர்களும் அவ்வாறே செய்திருந்தார்கள். இப்போது இயேசு அவர்களை சீஷத்துவத்தின் ஒரு புதிய மட்டத்திற்கு அழைத்துக் கொண்டிருந்தார்: இது, அவரை முழுநேரமும் பின்பற்றுதல் என்பதாக இருந்தது.[11] அவர்கள் இதைச் செய்வதற்கு, தங்கள் படகுகளையும், வலைகளையும், மீன்களையும் விட்டுவிட வேண்டியதாக இருந்தது. அவர்கள் தங்களுக்கு மிகவும் முக்கியமானவைகளாக இருந்தவைகளை விட்டுவிட வேண்டியதாக இருந்தது. அவர்கள் நிலையான ஒரு வருமானத்தையும் நிதிநிலை ரீதியாகப் பாதுகாப்பையும் கைவிட வேண்டியிருந்தது.

ஒவ்வொரு குறிப்பின்படியாகவும், அந்த மனிதர்கள் மதிப்பிற்குரிய விகிதாச்சாரங்களைக் கொண்ட மீன்பிடித்து விற்கும் வர்த்தகத்தைக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டாளிகள் ஒன்றுக்கு மேற்பட்ட படகுகளைக் கொண்டிருந்தார்கள் என்று நாம் ஏற்கனவே கண்டோம். யாக்கோபுவும் யோவானும், கூலி வேலைக்காரர்களை அமர்த்திக் கொண்டிருந்தார்கள் (மாற். 1:20). யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாய், பிற்பாடு இயேசுவையும் அவரது சீஷர்களையும் பொருளாதார ரீதியாக ஆதரித்த பெண்களில் ஒருவராக இருந்தார் (மத். 27:55, 56; லூக். 8:3). யோவான் பிரதான ஆசாரியரால் அறியப்பட்டிருந்தார் (யோவா. 18:15); அவரும் அவரது குடும்பத்தாரும் அநேகமாக அந்த மார்க்க அதிகாரிகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். இப்போது, மிக உயர்வான ஆதாயம் தரக்கூடிய அந்த வர்த்தகத்தைப் பின்விட்டுச் செல்ல வேண்டியதாக இருந்தது.

இது அதிகமானவற்றைக் கேட்பதாக இருந்தது - ஆனால் அந்த மனிதர்கள் இது அதிகமானவற்றைக் கேட்கவில்லையென்று நினைத்தார்கள் என்பது தெளிவு. வசனம் 11ல் நாம், "அவர்கள் படவுகளைக் கரையில்

*கொண்டு போய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்" என்று வாசிக்கின்றோம். பேதுருவும் அவரது சகோதரரான அந்திரேயாவும் "உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" என்றும் (1:18) யாக்கோபுவும் யோவானும் "தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்'' (வ. 20) என்றும் மாற்கு நமக்குக் கூறுகின்றார்.*

*சிலர், "ஆனால் கர்த்தர் அதனை ஒவ்வொரு சீஷரிடத்திலும் கேட்ப தில்லை என்பது நிச்சயம்" என்று மறுப்பதை நான் கேட்டிருக்கின்றேன். லூக்கா 14ல் இயேசு தம்மைப் பின்பற்ற இருந்தவர்களின் குழு ஒன்றை நோக்கி, "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (வ. 33) என்று கூறினார். பிரசங்கியார்களின் பயிற்சிப் பள்ளிகள் பலவற்றில் பணியாற்றியுள்ள நான், பல மனிதர்கள் இலாபகரமான வியாபாரங்கள் மற்றும் உயர்ந்த ஊதியம் அளிக்கின்ற வேலைகள் ஆகியவற்றை விட்டு விட்டதையும் - தேவனுடைய வசனத்தைப் போதிப்பதும் பிரசங்கிப்பதும் எப்படி என்று கற்றுக்கொள்வதற்காகத் தாங்கள் கொண்டிருந்த எல்லாவற்றையும் விற்றுவிட்டதையும் அறிந்துள்ளேன்.*

*மறுப்பாளர்கள், "ஆனால் முழு நேரப் பிரசங்கியார்களாக இருக்கத் திட்டமிடாதவர்கள் பற்றிய விஷயம் என்ன?" என்றும் கேட்கின்றார்கள். அப்போதும் நீங்கள் "சிலவற்றை விட்டுவிட" மனவிருப்பமாக இருக்க வேண்டும்: உங்களுக்கும் கர்த்தருக்கும் முழு இருதயத்தோடும் ஊழியம் செய்வதற்கும் இடையில் உள்ள எதையும் நீங்கள் விட்டுவிடுவது அவசியமாக உள்ளது.[12] மத்தேயு 16:24ல் இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்று வலியுறுத்தினார்.*

*என்ன நேர்ந்தாலும் உங்களைப் பராமரிப்பதற்கு கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்க நீங்கள் மனவிருப்பமாக இருக்க வேண்டும். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் கலிலேயாக் கடலில் இருந்து விலகி, இயேசுவைப் பின்பற்றிச் செல்லுகையில், அவர்கள் தங்களுக்கு அவர் மீன்பிடிப்பு ஒன்றை அளித்தது போன்றே தங்களின் தேவைகளையும் கவனிப்பார் என்று நம்பிக்கை வைத்தார்கள். சில வேளைகளில் நாம் கர்த்தரில் நம்பிக்கை வைக்க வேண்டிய விதத்தில் வைப்பதில்லை. மனிதர்கள், "நான் கிறிஸ்தவனாகும் முன்பு வியாபாரம் செய்தது போல் [இப்போதும் வியாபாரம்] செய்வதை விட்டுவிட்டால், நான் பிழைப்பதற்கு வழியேதும் இராது! என் குடும்பம் பட்டினி கிடக்கும்" என்று கூறுகின்றதை நான் அறிகின்றேன். நாம் இயேசுவையும் அவரது மார்க்கத்தையும் முதலிடத்தில் வைத்தால், நமக்கு வாழ்வின் தேவைகள் யாவும் கிடைக்கும் என்று அவர் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார் (மத். 6:33). பவுல், ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்கு*

*வார்" என்று எழுதினார் (பிலி. 4:19).*[13]

*ஒருமுறை பேதுரு இயேசுவிடம், "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே" என்று சொல்லத் தொடங்கினார் (மாற். 10:28). பின்பு இயேசு அவருக்குப் பின்வரும் உறுதிப்பாட்டைக் கொடுத்தார்:*

> *என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களை யாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங் களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகின்றேன் (வ. 29, 30).*

*கிறிஸ்துவின் சீஷராயிருப்பதற்காக நீங்கள் எதை விட்டுக் கொடுத்தாலும், நீங்கள் ஒருக்காலும் கர்த்தருக்கு அதிகமானவற்றைக் கொடுத்து விட முடியாது.*

## *நீங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டும் (வ. 11)*

*இயேசுவின் சீஷராயிருப்பதற்கு கடைசியான ஒரு தேவை பற்றி நாம் குறிப்பிடுதல் அவசியமாக உள்ளது. இந்தத் தெளிவான தேவையானது "சீஷர்" என்ற வார்த்தையில் மறைமுகமாய் உணர்த்தப்பட்டு இருக்கிறது, இதை நாம் ஏற்கனவே வேத பாடப் பகுதியில் கண்டுள்ளோம் - ஆனால் இது குறிப்பிடப்பட வேண்டும்: நீங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டும். குறிப்பாக, நீங்கள் அவரைப் பின்பற்ற வேண்டும். பேதுருவும் மற்றவர்களும் "எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்" (வ. 11) என்று நமது வேத பாடப் பகுதி கூறுகிறது. மத்தேயுவும், மாற்குவும், அந்த நான்கு மனிதர்களும் தங்கள் படகுகளையும் வலைகளையும் விட்டு "அவருக்குப் பின்சென்றார்கள்" என்பதை வலியுறுத்தினார்கள் (மத். 4:20, 22; மாற். 1:18, 20) இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் ... தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (மத். 16:24).*

*இயேசுவைப் பின்பற்றுதல் என்பது பேதுருவுக்கும் அவருடன் இருந்த மற்ற மூவருக்கும் சுலபமானதாக இருக்கவில்லை. அந்த சீஷர்கள், வலுக்குன்றுதல், விரோதம், மற்றும் கடைசியில் இயேசுவைப் பின்பற்றிய தற்காக மரணம் ஆகியவற்றை அனுபவித்தார்கள். ஆகிலும், அவர்கள் ஒரு உறுதிப்பாட்டை மேற்கொண்டார்கள். அவர்கள் கிறிஸ்து விரும்பிய இடங்களுக்கெல்லாம் அவரைப் பின்பற்றிச் சென்றார்கள்.*[14]

*உங்களில் சிலர் இன்னும் இயேசுவின் சீஷர்களாகாது இருக்கலாம். நீங்கள் இயேசுவை உங்களுக்காக மரித்தவர், உங்கள் பாவங்களில் இருந்து உங்களை இரட்சிக்க வல்லவர் என்ற வகையில் விசுவாசித்தல் அவசியமாக*

*உள்ளது. (நானல்ல ஆனால்) கிறிஸ்து, "... நானே அவர் [மேசியா] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (யோவா. 8:24). இரட்சிக்கப்படுவதற்கு, விசுவாசித்து ஞானஸ் நானம் (தண்ணீரில் முழுக்காட்டப்படுதல்) பெற வேண்டும் என்பது (என்னு டையதல்ல ஆனால்) எஜமானருடைய கட்டளையாக உள்ளது (மாற். 16:16; மத். 28:18ஐக் காணவும்). நீங்கள் கிறிஸ்தவரான உடன், பின்பு நீங்கள் உங்கள் வாழ்வு முழுவதிலும் அவரைப் பின்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது. அவர், "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" (1 பேது. 2:21). இது எப்பொழுதுமே சுலபமாயிராது (அப். 14:22), ஆனால் இது அவரது சீஷராயிருப்பதற்கு "குறைந்தபட்ச தேவையாக" உள்ளது!*

## *முடிவுரை*

*சீஷத்துவத்திற்கான பல தகுதிகளை நாம் கண்டோம்.*

*நாம் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்: நாம் வசனத்தின் மாணவர்களாக இருக்க வேண்டும்.*

*நாம் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்: இயேசுவே நமது வாழ்வின் எஜமானராக இருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.*

*நாம் சிலவற்றை ஒப்புக்கொள்ள வேண்டும்: நமது சொந்த போதுமற்ற தன்மைகளையும் கிறிஸ்துவை நாம் சார்ந்திருக்க வேண்டியதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.*

*நாம் சிலவற்றை மாற்ற வேண்டும்: நாம் நமது வாழ்வின் கவனம் செலுத்துதலை மாற்ற வேண்டும். நாம் ஆண்டவரை மகிமைப்படுத்து வதற்காகவும் மற்றவர்களை ஆண்டவருக்குள் கொண்டு வருவதற்காகவும் வாழ வேண்டும்.*

*நாம் சிலவற்றை விட்டுக் கொடுக்க வேண்டும்: நம்மை முழு இருதயத் துடன் ஊழியம் செய்ய விடாத எந்த ஒரு விஷயத்தையும் விட்டுவிட நாம் மனவிருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும், மற்றும் ஆண்டவரை நம்பியிருக்கத் தயாராக இருக்க வேண்டும்.*

*நாம் சிலவற்றைச் செய்ய வேண்டும்: நாம் எங்கெல்லாம் செல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகின்றாரோ, அங்கெல்லாம் அவரைப் பின்பற்றத் தயாராக இருக்க வேண்டும்.*

*சீஷராவதற்குத் தேவையானவற்றை நீங்கள் கொண்டிருக்கின்றீர் களா?*[1]

---

குறிப்புகள்

[1]*கிரேக்க வார்த்தையானது, "கற்றுக்கொள்ளுதல்" என்பதற்கான ஒரு வார்த்தை வடிவத்துடன் மீனவி என்ற முடிவுப்பகுதி கொண்டுள்ளது. இது, [கற்றுக்கொள்ளும்]*

"ஒருவர்" என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. [2]நீங்கள் விரும்பினால், "சீஷராயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று கற்றுக் கொள்வதற்கு நாம் பல்வேறு வேத வசனப் பகுதிகளைக் காண முடியும்'' என்று கூறலாம். முந்திய பாராவில் பட்டியலிடப்பட்ட வேத வசனங்கள் சிலவற்றை - மற்றும் அத்துடன், யோவான் 13:35, யோவான் 15:8 போன்ற வேத வசனப்பகுதிகளை - நீங்கள் வாசிக்கலாம் அல்லது மேற்கோள் காண்பிக்கலாம். பின்பு நீங்கள், "ஆயினும் நமது பாடத்திற்காக நாம் லூக்கா 5:1-11ன் மீது கவனம் செலுத்துவோம்" என்று கூடுதலாகக் கூறலாம். [3]லூக்கா சுவிசேஷத்தில் "கெனசெரேத் கடல்'' என்றுள்ளது, இது கலிலேயாக் கடலுக்கிருந்த இன்னொரு பெயர் ஆகும். "கலிலேயாக் கடல்" என்ற துணைப் பாடத்தில் காணவும். [4]அந்த வார்த்தையானது இயேசுவை அழைப்பதற்கு வசனம் 8ல் பயன் படுத்தப்படுகிறது. [5]கடலில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் மீன் பிடித்தார்கள். [6]படகுகள் "அமிழத்தக்கதாக" என்று வசனம் 7, கூறுகிறது, ஆனால் அவைகள் உண்மையில் அமிழவில்லை என்பது உறுதி. ஒருவேளை, மீனவர்கள் பாரத்தை மறுபகிர்வு செய்யவோ அல்லது வேறு ஏதாவது ஏற்பாடுகள் செய்யவோ வேண்டியிருந்திருக்கும். [7]கருத்தறிவு எதையும் ஏற்படுத்தியிருந்திராத தெய்வீகக் கட்டளைகளுக்கான சில உதாரணங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்: உதாரணமாக, எரிகோவின் மதில்களைச் சுற்றி அணிவகுத்து நடத்தல் அல்லது யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்குதல். சிலருக்கு, முழுக்காட்டுதல் என்ற வகையில் ஞானஸ்நானம் அல்லது கர்த்தருடைய பந்தியில் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் பங்குபெறுதல் என்பவை தர்க்கப் பொருத்தமற்றவைகளாகக் காணப்படுகின்றன. [8]''தன்னையே நிரம்பப் பெற்றுள்ளவர்'' என்பது, "மேட்டிமையினால் நிறைந்தவர்" என்று அர்த்தப்படுகிற ஒரு சொற்றொடராக உள்ளது. இது சுயவிளக்கம் கொண்டதாயிருக்கையில், நீங்கள் வாழ்கின்ற பகுதியில் இதே போன்று பயன்படுத்தப்படும் சொற்றொடர் ஒன்றை நீங்கள் விரும்பினால் பயன்படுத்தலாம். [9]எனது இருமொழி வேதாகமப் பிரதியில் கிரேக்க மொழியின் பின்வரும் நேரடியான மொழிபெயர்ப்பு உள்ளது: "நீ உயிருள்ள மனிதர்களைப் பிடிப்பாய்.'' [10]உலகில் நான் வாழ்கின்ற பகுதியில் உள்ள பொதுவான பல தொழில்களை நான் பட்டியலிட்டுள்ளேன். உலகில் நீங்கள் வாழும் பகுதியில் உள்ள தொழில்களுக் கேற்ப இதைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.

[11]சீஷத்துவத்தின் மூன்று படிநிலைகள் பற்றிய கலந்துரையாடலை, "கலிலேயா வுக்கு வடக்கில்" என்ற முந்திய பாடத்தில் காணவும். [12]நீங்கள் மத்தேயு 18:8, 9ன் பலமான போதனையை இவ்விடத்தில் இடைச் செருக விரும்பலாம் (மத். 5:29, 30ஐயும் காணவும்). இந்த வசனப்பகுதியானது சுய-சேதாரத்தைப் போதிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகக் காரணமான எதையும் ''வெட்டி விடுதல்'' (விட்டு விடுதல்) என்பதின் அவசியம் பற்றிய கொள்கையைப் போதிக்கிறது. [13]நான் இந்த வரிகளை எழுதுகையிலும் கூட, பிற நாடுகளில் உள்ள சில கிறிஸ்தவர்களைப் போல் நான் ஒருக்காலும் சோதிக்கப்பட்டதில்லை என்பதை அறிந்திருக்கின்றேன். அவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கு உண்மையிலேயே தங்களுக்கு விலையேறப் பெற்றவைகளாய் இருந்த ஒவ்வொன்றையும் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்துள்ளது. அவர்கள் இயேசுவின் சீஷராயிருப்பதற்காக ஏழ்மை மற்றும் அல்லது பட்டினியின் விளிம்பில் வாழ்கின்றார்கள். எனது இருதயம் இவற்றைக் குறித்துக் கலங்குகிறது, நான் ''எஞ்சியுள்ள எங்களுக்கு நல்ல உதாரணத்தை அமைத்துள்ளதற்காகத் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்" என்று மட்டுமே கூறமுடியும். [14]அப்போஸ்தலர்களின் பலவீனங்கள் மற்றும் இயேசுவைப் பின்பற்றுவதில் உள்ளடங்கியிருந்த யாவற்றையும் குறித்த அவர்களின் புரிந்துகொள்ளுதலில் அவர்கள் வளர

வேண்டியிருந்தது பற்றி நான் அறிந்துள்ளேன். ஆயினும், இந்த வாக்கியத்தில் எடுத்துரைக்கப்பட்டதே முடிவு விளைவாயிருந்தது. [15]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்கள் தங்களைச் சீஷர்களாகத் தகுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான எல்லாவற்றையும் செய்யும்படி உற்சாகமூட்டுங்கள். கடைசி பிரதான கருத்தில் உள்ள நிறைவுப் பாராவை விரிவாக்குங்கள்.

## 18

# “அதிகாரம் உள்ளவராய்”

## படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #6

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

H. *கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).*

I. *கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*

J. *கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளி யைக் குணமாக்குதல் - மற்றும் அதன் விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*

L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*

M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

### அறிமுகம்

இந்தப் பாடமானது இயேசுவின் முதல் கலிலேயப் பயணத்தையும், அத்துடன் அந்தப் பயணத்திற்கு முன்னும் பின்னும் கப்பர்நகூமில் நடந்த சில நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கிறது. இந்தப் பாடத்தில் உள்ள நிகழ்ச்சிகள், “மாபெரும் கலிலேய ஊழியத்தில்,” “மாபெரும்” என்ற வார்த்தையை இட உதவுகின்றன.

“அதிகாரம்” என்பது நமது வேத பாட வசனங்களில் திறவுகோலாக உள்ளது. இயேசு கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில் பேசியபோது, “அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், *அதிகாரமுடையவராய்* அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்” (மாற். 1:22). அங்கிருந்தவர்களை இயேசு தமது போதனையினால் மட்டுமின்றி, தமது செயல்களினாலும் திகைக்கச் செய்தார். அவர் ஒரு அசுத்த ஆவியைத் துரத்தியபோது, “எல்லாரும் ஆச்சரியப்பட்டு: ‘இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமை

யோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே' என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்'' (லூக். 4:36).

அதிகாரத்துவம் பற்றிய குறிப்பிடத்தக்க இந்தச் செயல்விளக்கங்கள், இயேசுவை யூத மார்க்கத்தலைவர்களுடன் ஒரு மோதலைச் சந்திக்க வைத்தன. இந்தப் பாடத்தில நாம், கிறிஸ்து தம்மை விமர்சித்தவர்களுடன் முகம்முகமாக எதிர்த்து நின்றதைக் காண்கின்றோம். ஒரு திமிர்வாதக் காரரைக் குணமாக்க ஆயத்தமாகுகையில், "பூமியில் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு [தம்மைப் பற்றியே இவ்வாறு கூறிக் கொண்டார்] அதிகாரம் (authority)[1] உண்டு" (மத். 9:6) என்ற துணிச்சலான உரிமை கோருதலை ஏற்படுத்தினார். அந்தத் திமிர்வாதக்காரர் நடந்தபோது, மக்கள் கூட்டமானது, "ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (மத். 9:8).

## "அதிகாரம் உள்ளவராய்" கப்பர்நகூமில் (மத். 8:14-17; மாற். 1:21-34; லூக். 4:31-41)

### அதிகாரத்துடன் போதித்தல் (மாற். 1:21, 22; லூக். 4:31, 32)

இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தைத் தொடங்கிய வேளையில், அங்கு ஏறக்குறைய ஒவ்வொரு சிறு நகரத்திலும் அமையப் பெற்றிருந்த ஜெப ஆலயங்களில் ஆயத்தமாயிருந்த மக்கள் கூட்டத்தை அவர் கண்டார் (லூக். 4:15ஐக் காணவும்). ஜெப ஆலயங்களில் வேத வசனங்கள் வாசிக்கப் பட்ட பின்பு, ஆராதனைக்குப் பொறுப்பாளர்[2] அங்கிருந்த எவரையாவது (தகுதியுள்ளவரென்று வரையறுக்கப்பட்ட எவரையாவது), வாசிக்கப்பட்ட வசனப்பகுதிக்கு விளக்கவுரை கொடுக்கும்படி அழைக்கக்கூடும்.

இயேசு நான்கு மீனவர்களை அழைத்த பின்பு வந்த [முதல்] ஓய்வு நாளன்று, அவரும் அவரோடு சீஷர்களும் கப்பர்நகூமில்[3] இருந்த ஜெப ஆலயத்தில் ஆராதனையில் கலந்துகொள்ளச் சென்றார்கள். கிறிஸ்து ஏற்புடைய வேளையில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார். அவரது உரையைக் கேட்டவர்கள், "அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்" (மாற். 1:22; லூக். 4:32யும் காணவும்). வேதபாரகர்கள் தங்கள் சுய அதிகாரத்தில் பேசவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் [தாங்கள் உரைக்கும்] பாடக்கருத்தைப் பேசியிருந்தவரின் முடிவற்ற அதிகாரங்களை மேற்கோள் காண்பித்தார்கள். The Living Bible என்ற வேதாகமப் பொழிப்புரையானது, "சபையார் திகைப்படைந்தார்கள் ... ஏனென்றால் அவர் அதிகாரத்துவமுடையவராகப் போதித்தார், மற்றும் அவர் - அங்கிருந்தவர்கள் வழக்கமாகக் கேட்டுப் பழக்கப்பட்டது போலின்றி - தமது கருத்துக்களை நிரூபிப்பதற்குப் பிறருடைய கூற்றுக்களை மேற்கோள் காண்பிக்கவில்லை.'[4]

***அதிகாரத்துடன் புத்திகூறுதல் (மாற். 1:23-28; லூக். 4:33-37)***

*ஜெப ஆலய ஆராதனைகள் ஒரு அடிப்படையான நல்லொழுக்கத்தின் பண்புகொண்டிருந்தன, ஆனால் இயேசு பேசுகையில், அந்த அமைதியானது ஒரு கூக்குரலினால் கலைக்கப்பட்டது:*

> *அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன்: "ஐயோ! நசரேயனாகிய[5] இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்"[6] என்று சத்தமிட்டான் (மாற். 1:23, 24).*

*அந்த "அசுத்த ஆவி"* ("unclean spirit") *ஒரு* (demon) *பிசாசாக இருந்தது என்று லூக்கா நமக்குக் கூறுகின்றார் (4:33, 35).* "Demon" *என்பது daimonion*[7] *என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. அசுத்த ஆவிகள், இயற்கைக்கு மேலான தீய ஜீவிகளாக உள்ளன - இவைகள் சாத்தானின் கீழ் செயல்படுபவைகளாக,*[8] *அவனது சித்தத்தை நிறைவேற்றத் தங்களை ஒப்புக்கொடுத்தவைகளாக உள்ளன. புதிய ஏற்பாட்டின் காலத்தில், அசுத்த ஆவிகள், தனிநபர்களை அவர்களின் மனவிருப்பத்திற்கு எதிராகப் பிடித்துக் கொண்டிருக்க முடிந்தது. உடல்ரீதியான சுகவீனம், மூடநம்பிக்கையுள்ள மக்களால் அசுத்த ஆவி பிடித்திருந்ததாக நினைக்கப்பட்டதென்று கூறி விடுதலையியல் கல்வியாளர்கள், கிறிஸ்துவின் நாட்களில் அசுத்த ஆவிபிடித்தல் இருந்தது என்பதை மறுக்கின்றார்கள். ஆயினும், மருத்து வரான லூக்கா அவர்கள், உடல்ரீதியான சுகவீனம் கொண்டிருந்தவர்களுக் கும் "அசுத்த ஆவியினால் துன்புற்றவர்கள்" அல்லது பிசாசு பிடித்திருந்த வர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினார்.*[9] *அசுத்த ஆவி பிடித்தலின் கோட்பாடு, இயேசுவுக்கு அவரது அதிகாரத்தைச் செயல் விளக்கப்படுத்தவும் தமது பரிவிரக்கத்தைக் காண்பிக்கவும் கூடுதலான வாய்ப்பைக் கொடுத்தது. மாற்கு 1 மற்றும் லூக்கா 4 ஆகிய அதிகாரங்கள், இயேசு அசுத்த ஆவியைத் துரத்தியது பற்றி பதிவு செய்யப்பட்ட முதல் விவரங்களைத் தருகின்றன.*

*கிறிஸ்துவை பிசாசு இடைமறித்தபோது, அவர் அந்த அசுத்த ஆவியைக் கடிந்துகொண்டார். அந்த பிசாசு கோபம் கொண்டு, தான் பிடித்திருந்த நபரைத் தரையில் தள்ளிற்று, அவரது உடலை வலிப்புகளால் திருகிற்று, மற்றும் அந்த நபரைக் கூக்குரலிடச் செய்தது. ஆயினும் கடைசியாக அந்த ஆவியானது "அவனுக்கு ஒரு சேதமுஞ்செய்யாமல், அவனை விட்டுப் போய்விட்டது" (லூக். 4:35).* The Living Bible *என்ற வேதாகமத்தின் பொழிப்புரையில் "அவனை மேலும் துன்புறுத்தாமல்" என்றுள்ளது.*

*அங்கிருந்தவர்கள் திகைப்படைந்தார்கள், மற்றும் "அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று" (மாற். 1:28).*[10]

***அதிகாரத்துடன் குணமாக்குதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41)***

*ஜெப ஆலய ஆராதனைக்குப் பின்பு, இயேசுவும் அவரது நான்கு சீஷர்*

*களும் பேதுரு மற்றும் அந்திரேயா ஆகியோரின் வீட்டிற்குச் சென்றார்கள் (மாற். 1:29).[11] அங்கு பேதுருவின் மாமி[12] கடுமையான காய்ச்சலினால் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்ததை அவர்கள் கண்டார்கள். இயேசு அந்தப் பெண்மணியைக் கைப்பிடித்து, மேலே தூக்கிவிட்டார். "உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்" (லூக். 4:39).* The Living Bible *என்ற வேதாகமத்தின் பொழிப்புரையானது, "அவள் எழுந்து அவர்களுக்கு உணவைத் தயாரித்தாள்" என்று கூறுகிறது!*

*இந்த வேளையில், ஜெப ஆலயத்தில் நடந்தது பற்றி வார்த்தை பரவி யிருந்தது. இவ்விதமாக சூரியன் மறைந்த பின்பு,[13] "ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களை சொஸ்தமாக்கினார்" (லூக். 4:40). அசுத்த ஆவிகளையும் இயேசு துரத்தினார். "பிசாசுகளும்: 'நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்று சத்தமிட்டு அநேகரை விட்டுப் புறப்பட்டது; அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்" (லூக். 4:41; மேலும் 4:34; மாற். 1:24 ஆகிய வசனங்களைக் காணவும்).*

*கிறிஸ்து யார் என்பதைப் பிசாசுகள் எப்படியோ அறிந்திருந்தன (யாக். 2:19ஐக் காணவும்). ஜெப ஆலயத்தில் பிசாசு இயேசுவை "தேவனுடைய பரிசுத்தர்" என்று குறிப்பிட்டிருந்தது. இந்த பிசாசுகள் அவரை "தேவனுடைய குமாரன்" என்று அழைத்தன. குளிருக்கு அணியும் ஆடை ஒன்றில் நான் சமீபத்தில் பின்வரும் வார்த்தைகளைக் கண்டேன்: "பிசாசுகள் ஐந்திற்கு ஐந்து[ம்] பின்வருவதை ஒப்புக்கொள்ளுகின்றன: இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார்!" பிசாசுகள் இயேசுவின் தெய்வீகத்தை ஒப்புக்கொள்ளுகையில், பல மனிதர்கள் அவ்வாறு செய்ய மறுத்தல் என்பது கவலைக்குரியதாக உள்ளது.*

*இயேசு, தாம் யார் என்பதைக் கூறுவதற்கு அந்த அசுத்த ஆவிகளை அனுமதிக்காதிருந்தது ஏன்? இதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம்,[14] ஆனால் ஒருவேளை, அவர் தாம் எந்த வழியிலும் பிசாசுகளுடன் உடன்பாடு கொண்டிருந்ததாகத் தோன்றுவதை விரும்பவில்லை என்பது வலிவார்ந்த காரணமாக இருந்திருக்கலாம். கடைசியில், அவர் பெயல்செபூலின்[15] அதாவது பிசாசின் வல்லமையைக் கொண்டே பிசாசுகளைத் துரத்தியதாகக் குற்றம் சாட்டப்படுவார் (மத். 12:24).*

## *"அதிகாரம் உள்ளவராய்" கலிலேயாவில் (மத். 4:23-25; 8:2-4; மாற். 1:35-45; லூக். 4:42-44; 5:12-16)*

***அதிகாரமும் கண்ணோக்கும்***

*அடுத்த நாளில் அதிகாலையில், இயேசு ஜெபிப்பதற்காக கப்பர் நகூமுக்கு வெளியே தனிமையான ஒரு இடத்திற்குச் சென்றார் (மாற். 1:35).*

அவர் தெய்வீகத்துவம் வாய்ந்தவராக இருந்தாலும், அவர் தம் தந்தையுடன் தனித்திருப்பது அவசியமாயிருந்தது. உங்களுக்கும் எனக்கும்கூட இதே விஷயம் அவசியமானதாக உள்ளது.

அவரது சீஷர்கள் அவரைத் தேடிச் சென்று, "உம்மை எல்லாரும் தேடுகின்றார்கள்" (மாற். 1:37) என்று கூறினார்கள். கப்பர்நகூமில் இயேசு இவ்வளவு வெற்றிகொண்டதைப் பற்றி அவர்கள் உணர்வெழுச்சி அடைந்திருந்தார்கள் - ஆனால் இயேசுவின் கண்ணோக்கானது ஒரு நகரத்தை விட பெரியதாக இருந்தது. அவர் கலிலேயாவில் இருந்த ஒவ்வொரு ஊரிலும் பிரசங்கிப்பதற்கான தமது திட்டத்தை வரையறுத்தார் (மாற். 1:38). இந்த வேளையில், கப்பர்நகூமில் இருந்த ஒரு கும்பல் அவரைக் கண்டது. அவர்கள் அவரை [அங்கேயே] தங்கும்படி கேட்டுக் கொண்டார்கள், ஆனால் அவர் தீர்மானத்தை மேற்கொண்டிருந்தார் (லூக். 4:42, 43). அவரும் அவரது சீஷர்களும் கலிலேயாவில் தங்கள் முதல் பயணத்தில் புறப்பட்டுச் சென்றார்கள்.

கலிலேயா மாகாணம் அதன் நீளம் மற்றும் அகலம் ஆகியவற்றில் சுமார் அறுபத்து மூன்று மைல்களுக்கு முப்பத்து மூன்று மைல்கள் இருந்தது. இதில் பல நூறு ஊர்கள் இருந்தன. அந்தப் பயணத்திற்குப் பல மாதங்கள் ஆகியிருக்கும். இந்தப் பயணத்தின் வெற்றி பற்றி மத்தேயுவின் சுருக்கமான அறிக்கை கீழே தரப்படுகிறது:

> பின்பு, இயேசு கலிலேயா[16] எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.
>
> அவருடைய கீர்த்தி சீரியா[17] எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந் திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும்[18] சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின் சென்றார்கள் (மத். 4:23-25).

**அதிகாரத்துவமும் பரிவிரக்கமும்**

அந்தப் பிரசங்கப் பயணத்தில் நடைபெற்ற ஒரு அற்புதம் விவரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது: தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்கியது. பழங்காலத்தில் தொழுநோய் என்பது மிகவும் பயங்கரத்திற்குரிய நோயாக இராவிட்டாலும் பயங்கரத்திற்குரிய நோய்களில் ஒன்றாகவே கருதப் பட்டது. இந்தச் சொற்றொடரானது இன்றைய நாட்களில் நாம் தொழுநோய் என்று அழைக்கும் நோயுடன் கூடுதலாக, தோல் மற்றும் நரம்புகளைப் பாதிக்கும் பல்வகைப்பட்ட வியாதிகளையும் குறித்தது.[19] அந்த நோய் தொற்றக்கூடியதாகவும் பொதுவாகக் குணப்படுத்த முடியாதது என்று கருதப்பட்டதாகவும் இருந்தது.[20] தொழுநோயாளிகள் தங்களைத்

*தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மக்களின் எஞ்சிய கூட்டத்தவருடன் தொடர்பைத் தவிர்க்க வேண்டும் என்றும் விதிக்கப் பட்டிருந்தது (லேவி. 13:45, 46).*

*இயேசு பயணம் செய்கையில், அவரிடத்தில் ஒரு தொழுநோயாளி வந்தார். அந்த மனிதர் "குஷ்டரோகம் நிறைந்த"[21]வராக இருந்ததாக லூக்கா கவனித்தார் (லூக். 5:12). அவர் [தொழுநோயாளி] அந்த நோயின் தீவிரமான தாக்குதலின் கீழ் இருந்தார்: அவரது தோல் ஏற்கனவே கீழே விழுந்துவிடும் நிலையில் இருந்தது; அவர் தமது உடலின் நுனிப்பாகங்கள் சிலவற்றை - விரல்கள், கால்விரல்கள், அவரது மூக்கின் நுனிப்பகுதி, அவரது காதுகளின் மேல்பகுதி ஆகியவற்றை - இழந்து இருக்கலாம். அந்தத் தொழுநோயாளி கிறிஸ்துவுக்கு முன்பாக மண்டியிட்டு, அவரிடத்தில் "உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்று கெஞ்சத் தொடங்கினார் (மாற். 1:40). "இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: 'எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு' என்றார். இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்" (வ. 41, 42).*

*இயேசு "நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவ"ராகப் பிறந்தார் (கலா. 4:5) என்று நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்; அவர் மோசேயின் பிரமாணத்தைக் கடைப்பிடித்து, அதையே செய்யும்படி மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார். குணமான தொழுநோயாளிகள் சடங்காச்சாரமான சுத்திகரித்தல்களுக்காகவும் ஆசாரியர்கள் அவர்களைப் பரிசோதிப்பதற்காக வும் எருசலேமில் இருந்த தேவாலயத்திற்குப் பயணிக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கேட்டுக் கொண்டது (லேவி. 14:2-32). இவ்விதமாக இயேசு அந்த மனிதரிடத்தில், "ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டிருக்கிறவை களை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து" என்று கட்டளையிட்டார் (மாற். 1:44ஆ).*

*கிறிஸ்து, " 'நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு' என்றும் உறுதியாகக் கட்டளையிட்டார்" (வ. 43, 44ஆ). ஆகிலும், உணர்வெழுச்சியடைந்த அம்மனிதர் "புறப்பட்டுப்போய், இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்" (வ. 45அ).*

*நான் இளைஞனாக இருந்தபோது, [இந்த நிகழ்வில்] இயேசு எதிர்ப்புற மனோதத்துவத்தைப் பயன்படுத்தினார் என்று நினைத்தேன். நான், "எவ்வளவு புத்திசாலித்தனம்! இயேசு அந்த மனிதரிடத்தில் அதை யாருக்கும் கூறவேண்டாம் என்று கட்டளையிட்டார், அது அம்மனிதர் இன்னும் அதிகமானவர்களிடம் கூறும்படி விரும்பச் செய்தது!" இப்படிப்பட்ட விஷயமானது இயேசுவின் இயல்புக்கு முரண்பாடானது என்பதை நான் இப்போது புரிந்துகொள்ளுகின்றேன்; அவர் மக்களைத் தம் நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சாயமாட்டார். கிறிஸ்து அந்தக் கட்டளையை அம்மனிதருக்குக் கொடுத்த விஷயத்தில் மிகவும் தீவிரமாக இருந்தார் என்றும் நான் புரிந்துகொண்டுள்ளேன். அவர் கலிலேயாவின் பிற நகரங்களிலும் ஊர்களிலும் பிரசங்கிப்பது அவசியம் என்று தம் சீஷர்*

*களிடத்தில் கூறியிருந்தார் (மாற். 1:38; லூக். 4:43) - ஆனால், குணமாக்கப் பட்ட தொழுநோயாளியின் விளம்பரத்தினால், "இயேசு வெளியரங்க மாய்ப் பட்டணத்தில் பிரவேசிக்கக்கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்" (மாற். 1:45ஆ).*

*அவர் சென்ற இடங்களில் எல்லாம், மக்கள் அவரைத் தேடினார்கள் மற்றும், "எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்" (வ. 45இ). முதல் பயணமானது தகுதியற்ற வெற்றியாய் இருந்தது.*

## *"அதிகாரம் உள்ளவராய்" மீண்டும் கப்பர்நகூமில் (மத். 9:2-9; மாற். 2:1-14; லூக். 5:17-28)*

***பாவத்தை மன்னிப்பதற்கான அதிகாரம்***

*இந்தப் பயணத்தின் முடிவில் இயேசு கப்பர்நகூமுக்கு - அநேகமாகப் பேதுருவின் வீட்டிற்கு - களைப்பு நீங்கிப் புத்துணர்வு பெறுவதற்காக வந்தார். ஆயினும் அவர் அதிகமாக ஓய்வெடுக்கவில்லை, ஏனெனில் அவர் அந்த ஊருக்குத் திரும்பி வந்திருந்தது பற்றிய செய்தியானது விரைவில் பரவிற்று. அவர் தங்கியிருந்த வீட்டில் விரைவிலேயே மக்கள் கூட்டம் நிறையத் தொடங்கிற்று.*

*அங்கு இருந்தவர்களுடன் பரிசேயர்களும் வேதபாரகர்களும் இருந்தார்கள் (மத். 9:3; மாற். 2:6; லூக். 5:17, 21). இந்த மனிதர்கள் நியாயப் பிரமாணத்திற்குக் காவலர்கள் என்று தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டவர்களாகவும் பாரம்பரியங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருந்தார்கள்.*

*இவர்களில் சிலர் எருசலேம் போன்ற தொலைவில் இருந்த இடங்களில் இருந்தும்கூட வந்திருந்தார்கள் (லூக். 5:17). யோவான் ஸ்நானனின் பிரபலத் தன்மை வளர்ந்தபோது ஆசாரியர்களும் லேவியர்களும் அவரிடத்தில் கேள்வி கேட்பதற்காக எருசலேமிலிருந்து [யோவான் இருக்குமிடத்திற்கு] வந்திருந்தார்கள் (யோவா. 1:19). இப்போது வேதபாரகர்களும் பரிசேயர் களும் இயேசுவைப் பரிசோதிப்பதற்காக வந்திருந்தார்கள்.*

*இயேசு பிரசங்கித்துக் கொண்டிருந்த வேளையில், நான்கு மனிதர்கள் அந்த வீட்டின் கூரையைப் பிரித்து, திமிர்வாதம் கொண்டிருந்த ஒரு நண்பரை அவ்வழியே இறக்கிவிட்டார்கள். இயேசு அந்த மனிதர்மீது பரிவு கொண்டவராக, "மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன" (மாற். 2:5) என்று கூறினார்.*

*கிறிஸ்துவின் விமர்சகர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். அவர்கள், "இவன் இப்படித் தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்?" (வ. 7) என்று சிந்தித்தார்கள். "தேவதூஷணம்" என்ற வார்த்தை "எதிராகப் பேசுதல்" என்று அர்த்தப் படுகிறது. இது அவதூறு பேசுதலைப் பற்றிக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. (இதே கிரேக்க வார்த்தை தீத்து 3:2 மற்றும் 2 பேது.*

*2:2 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.) தேவனுடைய இயல்பு அல்லது பண்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் எந்த ஒரு மொழிநடையையும் குறிப்பதற்கு இந்த வார்த்தையை யூதர்கள் பயன்படுத்தினார்கள். வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் ஆகியோரின் தர்க்கம் பின்வருமாறு சென்றது:*

1. *தேவன் ஒருவர் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும்.*
2. *இந்த மனிதன் தேவனல்ல.*
3. *ஆகையால் இவர் தேவதூஷணக் குற்றமுடையவராக இருக்கின்றார்.*

*அவர்களின் தர்க்கத்தைப் பொறுத்தமட்டில் எந்தத் தவறும் இருக்கவில்லை; [ஆனால்] அவர்களின் இரண்டாவது கருத்து சரியற்றதாயிருந்தது என்பதே இங்கு பிரச்சனையாக உள்ளது.*

> *அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: "நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று' சொல்வதோ, 'எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று' சொல்லுவதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்" என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: "நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (வ. 8-11).*

*இதை எளிமையாக எடுத்துரைப்பதென்றால், இயேசு தாம் பாவங்கள் மீது[ம்] அதிகாரம் கொண்டிருந்தார் என்பதை நிரூபிப்பதற்காக, நோயின் மீது தமது அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.*

*அந்தத் திமிர்வாதக்காரனை எழுந்திருக்கும்படி இயேசு கூறியபோது, "உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: 'நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை' என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (வ. 12).*

*எருசலேமிலிருந்து வந்த பார்வையாளர்களின் தர்க்கமானது பின்வருமாறு சென்றிருக்க வேண்டும்:*

1. *தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்க முடியும்.*
2. *இந்த மனிதர் பாவங்களை மன்னிக்க முடிகிறது.*
3. *ஆகையால் இவர் தேவனாக இருக்கின்றார்!*

*துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் தப்பெண்ணம், பொறாமை, மற்றும் இயேசுவின் உரிமைகோருதல்களை கவனிக்கக் கூடாத அளவுக்கு சுய ஆர்வம் ஆகியவற்றினால் மிகவும் நிறைந்திருந்தார்கள்.*

இதுவே இயேசு தாம் சிலுவையில் அறையப்படும் வரையிலும் எதிர்கொள்ள வேண்டியதாயிருந்த பகைமை உணர்வின் தொடக்கமாக இருந்தது. விரைவிலேயே அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் ஒற்றர்கள் பின்தொடர்ந்து, அவரை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய சரியற்ற தன்மைகள் சிலவற்றைக் கண்டறிய முயற்சி செய்வார்கள்.

**மனிதர்களிடத்தில் அறைகூவல் விடுவதற்கான அதிகாரம்**

இயேசு தமது விமர்சகர்கள் மகிழ்ச்சியற்றுப் போகும்படிக்குப் பல செயல்களைச் செய்திருந்தார்: அவர் சுத்தமற்ற ஒரு தொழுநோயாளியைத் தொட்டிருந்தார். அவர் தம்மால் பாவங்களை மன்னிக்க முடியும் என்று சுட்டிக்காண்பித்திருந்தார். நமது பாடத்திலுள்ள இன்னும் ஒரு நிழ்ச்சி யானது அவர்களின் கோபத்தைக் கிளறி விட்டது: அவர், ஆயக்காரர் ஒருவரைத் தமது சீஷர்களில் ஒருவராயிருக்கும்படி அழைத்தார்.

கப்பர்நகூமின் வெளிக்காட்சியமைவில் கிறிஸ்துவுக்கு மிகவும் பிரியமாயிருந்தது கடற்கரையாகும். அங்கு அவர் மீண்டும் சென்றபோது, மக்கள் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது, அவர்களுக்கு அவர் போதித்தார் (மாற். 2:13).

அருகாமையில் ஆயக்காரர் ஒருவரின் வரிவசூல் செய்யும் அலுவலகம் ஒன்று இருந்தது.[22] அந்த அலுவலகமானது பொருட்கள் மீதான வரிகளை வசூலிப்பதற்காகக் கடலின் அருகில் இருந்திருக்கலாம், மக்கள் கடலினூடே படகுகளில் சென்றார்கள் அல்லது அது கப்பர்நகூமுக்குள் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு வரிவசூலிப்பதற்காகச் சாலையின் அருகாமையில் இருந்திருக்கலாம்.[23] மத்தேயு என்பது அந்த ஆயக்காரரின் பெயராகும் (மத். 9:9). அவர் அல்பேயு என்பவரின் மகனாவார் மற்றும் அவர் லேவி என்றும் அறியப்பட்டார் (மாற். 2:14).

ஆயக்காரர்கள் யூதர்களால் பொதுவாக வெறுக்கப்பட்டார்கள். ரோமர்களுடன் ஒத்துழைக்கும் சக யூதர் ஒருவர் காட்டிக் கொடுப்பவ ரென்று கருதப்பட்டார். இராபர்ட் எல். தாமஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> மத்தேயு போன்ற ஆயக்காரர்கள் ... வர்த்தகர்களின் போக்குவரத்தில் இருக்கும் பொருட்களின் விலையை மதிப்பிட்டு அவற்றின் மீதான வரியை ரோம அரசிற்காக வசூலித்தார்கள் ... தெளிவற்ற வரிவிகிதங் கள் ஆயக்காரர்கள் தங்கள் சொந்த இலாபத்தை அதிகரிக்குமளவுக்கு அதிகமான வரியை விதிக்க அனுமதித்தன. மத்தேயு தமது தொழிலிருந்த பெரும்பான்மையான நேர்மையற்ற மற்றவர்கள் போலச் செயல்பட்டாரா இல்லையா என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவர் சகயூதர்களால் விலக்கி வைக்கப்பட்டு அதன் மூலம் புறக்கணிக்கப்பட ஏதுவான ஒரு வகுப்பாராக இருந்தார்.[24]

இயேசு அநேகமாக கலிலேயாக் கடலுக்குச் செல்லும் போதும் மற்றும் அங்கிருந்து திரும்பி வரும் வழியிலும் மத்தேயுவின் [வரிவசூலிக்கும்] அலுவலகத்தைக் கடந்து சென்றிருப்பார். அந்த ஆயக்காரர் தமது

அலுவலகத்தில் அமர்ந்திருக்கையில் கிறிஸ்து போதித்ததைக் கேட்கப் பல வாய்ப்புக்களைப் பெற்றிருப்பார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.[25] ஆயினும் இந்த நாள் மிகவும் மாறுபட்டதாக இருந்தது, ஏனெனில் இயேசு அங்கு நின்று அவரிடத்தில், "எனக்குப் பின்சென்று வா!" (மாற். 2:14) என்று கூறினார். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்கு விடுவிக்கப்பட்ட அழைப்பைப் போல் இதுவும் முழு நேர சீஷத்துவத்திற்கான அழைப்பாகவே இருந்தது. அந்த மீனவர்களைப் போலவே மத்தேயுவும் "எல்லாவற்றையும் விட்டு, எழுந்து அவருக்குப் பின்சென்றார்" (லூக். 5:28).[26]

## முடிவுரை

மாபெரும் கலிலேய ஊழியமானது சூடுபிடிக்க ஆரம்பித்தது. நமது அடுத்த பாடத்தில் நாம் இந்த ஊழியத்தைப் பற்றிய படிப்பைத் தொடருவோம். நாம், இயேசுவுக்கும் மார்க்கத் தலைவர்களுக்கும் இடையில் விவாதம் வலுப்பெற்று, கடைசியில் கிறிஸ்துவின் மரணத்தை விளைவிக்கும் வெறுப்புணர்வு கட்டியெழுப்பப்படுவதைக் காண்போம்.

இந்தப் பாடம் இயேசுவின் அதிகாரத்தை வலியுறுத்தியுள்ளது. அதிகாரம் பற்றிய கேள்வியானது, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை யூத அதிகாரிகளுடன் அவரது மோதலில் ஒரு பிரதானமான விஷயமாக இருந்தது. அவர் முதன்முறை காசுக்காரர் களை தேவாலயத்தில் இருந்து துரத்திவிட்டபோது அவர் ''இந்தச் செயல்களைச் செய்வதற்கான அதிகாரம்" (யோவா. 2:18) பற்றி அவர்கள் அவரிடத்தில் கேள்வி எழுப்பினார்கள். இந்த பூமியில் அவரது வாழ்வின் கடைசி வாரத்தின்போது, அவர்கள் ''நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? அதை எங்களுக்குச் சொல்லும்" (லூக். 20:2) என்று அறைகூவல் விடுத்தனர்.

அதிகாரம் பற்றிய கேள்வியானது அவருக்கு உங்கள் பதில்செயலிலும் மையமானதாக உள்ளது. அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு அவர், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18) என்று கூறினார். உங்கள் வாழ்வின் மீது அவருக்குள்ள அதிகாரத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளுகின்றீர் களா? அவருடைய அதிகாரத்திற்குப் பணிதல் என்பதில் உதடுகளினால் ஆராதித்தல் என்பதை விட அதிகமானவை உள்ளடங்கியிருக்கின்றன; இது அவருக்கு முழுமையாகக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகிறது. இயேசு, ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21) என்று கூறினார். நீங்கள் அவரது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாயிருக்கின்றீர்களா - அதுவும் இன்றே?[27]

*குறிப்புகள்*

[1]KJV*யில்* “power” *என்றுள்ளது, ஆனால்* KJV*யில் மாற்கு 1:22, 27ல்* “authority” *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை இதே வார்த்தையாக உள்ளது.* [2]*ஜெப ஆலயத்திற்குப் பொறுப்பாளராக இருக்கும் மனிதர் ‘‘அதிகாரி’’ என்று அழைக்கப்பட்டார் (மாற். 5:36, 38; லூக். 8:41; 13:14)* KJV *வேதாகமம்* “ruler of the synagogue” *என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது.* [3]*முதல் நூற்றாண்டில் இருந்த ஒரு ஜெப ஆலயத்தின் அஸ்திபாரத்தினுடைய சிதிலங்களை இன்றைக்கும் கப்பர்நகூமில் காண முடியும்.* [4]*நமது பாடம் தொடருகையில், இயேசு, “..... என்று கூறப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் ... [ஆனால்] நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ...” (மத். 5:27, 28) என்று அறிவிப்பதை நாம் கேட்போம்.* [5]“Of Nazareth” *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது மூல வசனப் பிரதியில்,* “Nazarene” *என்றே உள்ளது.* [6]*‘‘பரிசுத்தர்’’ என்பது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் பட்டப் பெயர்களில் ஒன்றாக இருந்தது (சங். 16:10; அப். 2:27).* [7]*Daimonion என்பதன் பன்மை வடிவத்தை* KJV *வேதாகமம்* "devils" *என்று மொழிபெயர்க்கிறது, ஒரே ஒரு பிசாசான (diabolos என்ற) சாத்தான் மட்டுமே இருப்பதால் இது குழப்பமூட்டுவதாக உள்ளது.* [8]*மத்தேயு 12:22-29ல் சாத்தான் “அசுத்த ஆவிகளின் தலைவன்” என்று குறிப்பிடப்படுகிறான்.* [9]*இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் நாம் இந்த வித்தியாசத்தைக் காண்போம். சுவிசேஷ விவரங்களின் மற்ற எழுத்தாளர்கள் இதே வித்தியாசத்தை ஏற்படுத்தி யுள்ளார்கள்.* J. W. *மெக்கார்வி அவர்கள், “பிசாசு பிடித்தல் என்பதை வன்முறை யெதுவும் செய்யாத வியாதி என்று கருதுதல், பிசாசைத் துரத்தும் நிகழ்ச்சி ஒவ்வொன்றின் கண்ணோக்கிலும் காணும்போது சாத்தியம் அற்றதாகவே உள்ளது” என்று எழுதினார்* (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 167). [10]*உள்ளூர் மத அதிகாரிகள் இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியதை விமர்சிக்க வில்லை என்பதைக் கவனியுங்கள். இந்த விமர்சனம் எருசலேமில் இருந்து வரும் பிரதிநிதிகளிடத்தில் இருந்து தோன்றும்.*

[11]*மத்தேயுவும் லூக்காவும், இதை சீமோன் பேதுருவின் வீடு என்று மட்டும் குறிப்பிடுகின்றார்கள் (மத். 8:14; லூக். 4:38 ஆகியவற்றைக் காணவும்). இதற்கு முன்பு பெத்சாயிதா ஊரானது “அந்திரேயா மற்றும் பேதுரு ஆகியோரின் ஊர்” என்று அழைக்கப்பட்டிருந்ததைக் கவனியுங்கள் (யோவா. 1:44). ஒன்று அவர்கள் கப்பர்நகூமுக்கு [தங்கியிருக்கும்படி] வந்திருக்க வேண்டும் அல்லது பெத்சாயிதா என்ற இடமானது கப்பர்நகூமின் புறநகர்ப் பகுதி என்று நினைக்கப்படுவதற்குப் போதுமான அளவு அண்மையில் இருந்திருக்க வேண்டும்.* [12]*பேதுருவை “முதல் போப்” என்று குறிப்பிடுகிற மனித உபதேசத்திற்கு நேர்மாறான வகையில் அவர் அநேக ஆண்டுகளுக்கு முன் திருமணம் முடித்தவராகவே இருந்தார் (1 கொரி. 9:5).* [13]*ஓய்வுநாளானது சூரியன் மறைவின்போது முடிவடைந்ததாலும், ஓய்வு நாளன்று ஒரு சுமை சுமத்தல் தடை செய்யப்பட்டு இருந்ததை மீற விரும்பாத தாலும், மக்கள் சூரியன் மறையும் வரையிலும் காத்து இருந்திருக்கலாம் (எரே. 17:22ஐக் காணவும்).* [14]*எடுத்துக்காட்டாகப் பின்வரும் காரணங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) அவர் கிறிஸ்து என்று அறிவித்தல் அந்த வேளையில் மிகவும் விரைவானதாக இருந்தது மற்றும், (2) அவர் யார் என்பதற்கு பொல்லாங்கின் சக்திகள் பிரதான சாட்சியாக இருத்தல் என்பது மிகவும் ஏற்பில்லாததாக இருந்தது.* [15]*இந்தப் பெயரானது “பெயல்செபூப்” என்பது உட்படப் பிற வழிமுறைகளிலும் உச்சரிக்கப்பட்டுள்ளது.* [16]*லூக்கா 4:44ல், “அந்தப்படியே கலிலேயா நாட்டிலுள்ள ஜெப ஆலயங்களில் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தார்” என்று கூறப்படுகிறது. இந்த வசனத்தில், “யூதேயா” என்பது யூதேயா மாகாணத்தையல்ல ஆனால் பலஸ்தீன நாடு முழுவதை*

*யும் குறிப்பிட்டது என்பது திட்டவட்டமானதாக உள்ளது. எனது வேதாகமத்தின் பக்கக் குறிப்பொன்று, "யூதேயா" என்பது "(கலிலேயர்கள் உட்பட) யூதர்களின் நாடு என்பதாகும் என்று விளக்குகிறது; சில கையெழுத்துப் பிரதிகளில் கலிலேயா என்றுள்ளது என்பதாக விளக்கப்படுத்துகிறது." [17]சீரியா நாடு கலிலேயாவுக்கு வடக்கில் இருந்தது. ("இந்தப் புத்தகத்தில் கூறி முடிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்" என்ற துணைப்பாடக் குறிப்பில் உள்ள வரைபடத்தில் காணவும்.) பயணிகள் கலிலேயாவில் இருந்து சீரியாவுக்குச் செய்தியை எடுத்துச் சென்றார்கள் என்பது தெளிவு. [18]மத்தேயு, "வியாதிகள்" மற்றும் "அசுத்த ஆவி பிடித்தல்" ஆகியவற்றிற்கிடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதைக் கவனியுங்கள். [19]சில அறிகுறிகள், இன்றைய நாட்களில் தொழுநோய் என்று பொதுவாக அழைக்கப்படுவதின் அறிகுறிகளுடன் பொருந்தி வருவதில்லை* ("Hansen's disease"). *(வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் வீடுகளுக்குக் கூடத் "தொழுநோய்" ஏற்படக் கூடியதாயிருந்தது; லேவியராகமம் 14:34, 35 வசனங்களைக் காணவும்). வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் தொழுநோய் என்று அழைக்கப்பட்ட இரு முக்கியமான வியாதிகள் பற்றி கலந்துரையாடல் ஒன்று* McGarvey and Pendleton *எழுதிய புத்தகத்தில் பக்கங்கள் 176-78ல் உள்ளது. [20]தொழுநோயாளிகளின் சுத்திகரிப்புக்கு சட்டங்கள் இருந்தன என்ற உண்மையானது, "தொழுநோயின்" எல்லா வகைகளும் குணமாக்க முடியாதவை களாக இருந்ததில்லை என்று கருத்துத் தெரிவிக்கிறது - ஆனால் பொதுவாகப் பேசுகையில், தொழுநோயானது குணப்படுத்த முடியாதது என்ற கருதப்பட்டது என்று நாம் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.*

*[21]கிரேக்க வசனத்தில் "தொழுநோயால் நிறைந்து" என்றுள்ளது (*KJV *மற்றும் தமிழில் காணவும்). [22]மூலமொழியில் இந்தச் சொற்றொடரானது "வரிவசூலிக்கும் மனிதர்" என்று அர்த்தப்படுகிறது.* NASB *வேதாகமம்* "tax collector" *என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது.* KJV*யில்* "publican" *என்றுள்ளது, இது* "pub" *(அதாவது மதுபானங்கள் விற்குமிடம்) ஒன்றை நடத்தும் மனிதரைக் குறிக்க* "publican" *என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் சில நாடுகளில் குழப்பமூட்டுவதாக இருக்கக்கூடும். [23]கப்பர்நகூம் என்ற ஊரானது பலஸ்தீனத்தைக் கடந்து சென்ற முக்கியமான கிழக்கு-மேற்கு நெடுஞ்சாலையிலிருந்து தூரத்தில் இல்லை என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டோம். [24]*Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* (Chicago: Moody Press, 1978), 55. *[25]இயேசுவுக்கும் மத்தேயுவுக்கும் இடையில் உள்ள உறவுமுறை பற்றிய பின்னணி விவரம் நமக்குத் தரப்படவில்லை, ஆனால் முழு நேரச் சீஷத்துவத்திற்கான உறுதிப்பாடு என்பது அறிவிக்கப்பட்ட முடிவாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். [26]மத்தேயுவின் முடிவு அவருக்கு ஒரு விலைமதிப்புள்ளதான, சிலவற்றை விட்டுவிட வேண்டியதாக இருந்தது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தங்கள் வலைகளை விட்டுவிட்டு வந்த மீனவர்கள் மீண்டும் மீன் பிடிக்கத் திரும்ப முடிந்தது (யோவா. 21:3ஐக் காணவும்); ஆனால் மத்தேயு தமது ரோம "வேலைக்கமர்த்து பவர்களை" விட்டுப் பின்திரும்பிய பின்பு, அவர் வரிவசூலிப்பவர் என்ற தமது பணிக்கு மீண்டும் திரும்ப முடியாதிருந்தது. பல இசைவுகள் மத்தேயுவின் அழைப்பைத் தொடர்ந்து அவர் வைத்த விருந்தைப் பற்றிய தகவல்களை வைக்கின்றன (மத். 9:10-13; மாற். 2:15-17; லூக். 5:29-32), மற்றும் அது இங்கு நன்கு பொருந்துகிறது. படிப்பின் இந்த இடத்தில் நீங்கள் அதை உள்ளடக்க விரும்பலாம். [27]இது ஒரு பிரசங்கமாக இல்லாத போதிலும், இதனை நீங்கள் விலகிப் போயுள்ள பாவிகளுக்கும் (ஒருக்காலும் கிறிஸ்துவுக்குள் இராதவர்கள்), அவிசுவாசி களான கிறிஸ்தவர்களுக்கும் இரட்சிப்பின் நிபந்தனைகளை இந்தப் பாடத்தில் உள்ளடக்க விரும்பலாம், இப்புத்தகத்தில் உள்ள*

*“தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” என்ற பிரசங்கமும் “சீஷத்துவத்திற்கான அழைப்பு” என்ற பிரசங்கமும், கிறிஸ்தவராவது எப்படி என்பதை வலியுறுத்துகின்றன. அவிசுவாசியான கிறிஸ்தவர் எப்படி மீளக்கட்டப்பட முடியும் என்பதற்கான வசனப்பகுதிகளில் அப். 8:22ம் யாக். 5:16ம் உள்ளடங்கியிருக்கின்றன.*

*19*

# "அவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள்"

## இயேசுவின் குணமாக்கும் ஊழியம், ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*இந்த வாரத்திற்கான நமது வேத வாசிப்புப் பகுதியானது, இயேசு குணமாக்கியதென்பது அவரது ஊழியத்தில் முக்கியமானதொரு பகுதியாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது.[1] எடுத்துக்காட்டாக, கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தில், இயேசு ஒரு மனிதனுக்குள் இருந்த அசுத்த ஆவியைத் துரத்தி விட்டிருந்தார் (மாற். 1:21-28; லூக். 4:31-37). இதன் விளைவாக, மக்கள் "எல்லாரும் ஆச்சரியப்பட்டு ... அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று" (மாற். 1:27, 28).*

*இயேசுவும் அவரது சீஷர்களும் ஜெப ஆலயத்தில் இருந்து பேதுரு மற்றும் அந்திரேயா ஆகியோரின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு இயேசு, பேதுருவின் மாமியைக் குணமாக்கினார். அன்று மாலை வேளையில், "பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்" (மத். 8:16; வ. 14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*

*அடுத்த நாள் காலையில், இயேசு அந்த மாகாணம் முழுவதிலும் ஒரு பிரசங்கப் பயணத்தைத் தொடங்கினார் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

> *பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார் ... கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள் (மத். 4:23, 25).*

*அந்தப் பிரசங்கப் பயணத்தில் செய்யப்பட்ட ஒரு அற்புதம் விவரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது: தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்குதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16). குணமான அந்தத் தொழு நோயாளியிடம் இயேசு, ஒருவருக்கும் அதைச் சொல்ல வேண்டாம் என்று கூறினார், ஆனால் அந்த மனிதர் எல்லாருக்கும் அதைச் சொன்னார். இயேசு, "வெளியரங்கமாய்ப் பட்டணத்திலே பிரவேசிக்கக்கூடாமல் போகுமள வுக்கு எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்" (மாற். 1:45).*

*இயேசு கப்பர்நகூமுக்குத் திரும்பி வந்தார் - அநேகமாக அவர் சற்று ஓய்வெடுக்கவே இங்கு வந்திருப்பார் - ஆனால் அவர் தங்கியிருந்த வீட்டில் எல்லாரும் ஒன்றுகூடியிருந்ததால் அவரால் ஓய்வு எடுக்க இயலவில்லை. அதுவே இயேசு கூரையிலிருந்து இறக்கப்பட்ட மனிதரைக் குணமாக்கியதற் கான காட்சி அமைவாக இருந்தது (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26). அந்த மனிதரிடத்தில் இயேசு, "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ, என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மாற். 2:11). மாற்குவின் சுவிசேஷ விவரப்படி, "உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: 'நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை' என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார் கள்" (வ. 12).* KJV*யில் "எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத் தினார்கள்" என்று மட்டும் உள்ளது. அந்த வசனத்தில் இருந்தே நமது இந்தப் பாடத்திற்கான தலைப்பு எடுக்கப்பட்டுள்ளது.*

*நமது வாசிப்பைத் தொடருகையில், இயேசுவின் அற்புத குணமாக்கு தல் உட்பட அவரது அற்புதங்களைப் பற்றிச் சுவிசேஷ விவரங்களில் நாம் தொடர்ந்து வாசிப்போம். அவரது அற்புதங்களைப் பற்றி - சிறப்பாக அவர் வியாதியாஸ்தர்களைக் குணமாக்கியது பற்றிப் பேசச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுதல் என்பது தகுதியானதாக இருக்கலாம்.*

## *இயேசுவின் அற்புதங்களின் அறிவுக்கு ஏற்புடைய தன்மை*

*இயேசு உண்மையிலேயே அற்புதங்கள் செய்தார் என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். அவைகள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டபடியாகவே நடைபெற்றன.*

*வேதாகமத்தையும் இயேசுவின் தெய்வீகத்துவத்தையும் நம்ப விரும்பாதவர்கள் வேதாகமத்தின் அற்புதங்கள் பற்றி கேலி செய்கின்றார் கள். "யோனாவை ஒரு திமிங்கிலம் விழுங்கிற்று என்று நீங்கள் உண்மை யாகவே நம்புகின்றீர்களா?" என்று அவர்கள் கேட்கிறார்கள். "இயேசு ஐந்து அப்பங்கள் மற்றும் இரண்டு மீன்கள் ஆகியற்றைக் கொண்டு உண்மையா கவே ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார் என்று நீங்கள் உண்மையாகவே நம்புகின்றீர்களா?'' கிறிஸ்தவர்கள் என்று தங்களை உரிமைகோரிக்*

கொள்ளுகின்ற சிலர் - பகுத்தறிவு சார்ந்த சில விளக்கங்களைக் காண்பதில் - அற்புதங்களைப் புறம்பே தள்ளி விடும் வகையில் விளக்கம் தருகின்றார்கள்: "ஓ! அவர்கள் மிகவும் அறியாமையுள்ள மக்களாக, நாம் இப்போது கொண்டுள்ள அறிவு சற்றும் இல்லாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் அற்புதங்களாகவே இராத நிகழ்ச்சிகளை அற்புதங்கள் என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள்."

மீண்டும் நான், இயேசுவின் அற்புதங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டபடியாகவே நடைபெற்றன என்று உறுதிப்படுத்த விரும்புகின்றேன். இந்தக்கூற்று உண்மையானது என்று நம்புவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கு நான் குறிப்பிட அனுமதியுங்கள்.

இது உண்மையென்று நான் நம்புகின்றேன், ஏனெனில், நான் தேவன் மீது விசுவாசம் கொண்டுள்ளேன். ஒருவர் தேவன்மீது விசுவாசம் கொண்டிருந்தால், அவர் "தேவனாலே எல்லாம் கூடும்" (மாற். 10:27) என்பதையும் விசுவாசிக்க வேண்டும்.

இது உண்மையென்று நான் நம்புகின்றேன். ஏனெனில், நான் வேதாகமத்தின்மீது விசுவாசம் கொண்டுள்ளேன். வேதாகமம் தேவனால் ஏவப்பட்டது என்று நம்புவதற்கு நாம் நல்ல காரணங்களைக் கொண்டுள் ளோம் (2 தீமோ. 3:16). இது ஆண்டுகளினூடே தன்னை நம்பத் தகுந்த புத்தகமாக, நமது வாழ்வுக்கு நாம் இதன்மீது நம்பிக்கைக் கொள்ளத்தக்க புத்தகமாகத் தன்னையே காண்பித்துள்ளது. தேவனால் ஏவப்பட்ட இந்த வேதாகமமானது இயேசுவின் அற்புதங்களைப் பற்றி நமக்குக் கூறுகிறது.

எனது அடுத்த காரணமானது இப்போது குறிப்பிடப்பட்ட காரணத் திற்கு மிகவும் நெருங்கிய உறவு உடையதாக உள்ளது: இது உண்மையென்று நான் நம்புகிறேன், ஏனெனில் இயேசுவின் அற்புதங்கள் நம்பக்கூடிய சாட்சிகளினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகள் [அற்புதங்கள்] பதிவு செய்யப்பட்ட வழிமுறையும் மற்றும் அவைகள் பதிவு செய்யப்பட்ட காலமும், அவைகள் உண்மையில் நடந்தவை என்ன என்பதை அறியாத மனிதர்களால் அல்ல - மற்றும் உறுதியாகவே, வஞ்சக நோக்கம் கொண்ட மனிதர்களால் அல்ல ஆனால் - பகுத்தறிவுள்ள மனிதர்களாலேயே பதிவு செய்யப்பட்டன என்ற உண்மையைச் சுட்டிக்காண்பிக்கிறது.

இது உண்மையென்று நான் நம்புகிறேன், ஏனெனில் அற்புதங்கள், இயேசு யார் என்ற கருத்துடன் - அல்லது, நீங்கள் விரும்பினால், அவர் தாம் யாராக இருக்கின்றார் என்று உரிமைகோரினார் என்பவைகளுடன் - சீர்பொருந்தியவைகளாக உள்ளன. இயேசு தேவனுடைய குமாரனாக, மேசியாவாக, உலகத்திற்கு ஒளியாக, ஜீவ அப்பமாக, பாவத்தை மன்னிக்கக் கூடியவராக இருப்பதாக உரிமைகோரினார். அவைகள் மட்டுமீறிய உரிமைகோருதல்களாக இருந்தன! இது போன்ற உரிமைகோருதல்களை ஏற்படுத்துகின்ற ஒருவர், அந்த உரிமைகோருதல்களின் உண்மையைச் செயல்விளக்கப்படுத்த வேண்டும் அல்லது அவர் ஒரு பொய்யர் என்று காணப்படுவார். இயேசு ஒரு பொய்யராக, பித்தம் கொண்டவராக இருக்க வேண்டும் அல்லது அவர் கர்த்தராக இருக்க வேண்டும் என்று யாரோ

ஒருவர் கூறினார். அவைகள் மட்டுமே சாத்தியக் கூறுகளாக உள்ளன. ஒருவர் இயேசுவை ஒரு பொய்யர் என்றோ அல்லது பித்தம் கொண்டவர் என்றோ அழைக்க விரும்பாவிட்டால், பின்பு அவர் இயேசுவை கர்த்தர் என்று ஒப்புக்கொள்ள வேண்டும் - மற்றும் அற்புதங்களைச் செய்வதற்கான அவரது வல்லமையானது அந்தத் தகுதி நிலைக்குச் சீர்பொருந்தியதாக இருக்கும்.

இது உண்மையென்று நான் நம்புகிறேன், ஏனெனில் இயேசுவின் அற்புதங்கள் தவிர்த்து, அவரையும் அவரது செல்வாக்கையும் விளக்கப் படுத்தும் வழி எதுவும் இல்லை. நான் ACU[2]வில் மாணவனாக இருந்தபோது, சில இறையியல் அறிஞர்கள், ''வரலாற்றுப்பூர்வமான இயேசுவை ஆராய்தல்'' என்று தாங்கள் அழைத்த பாடம் ஒன்றை நடத்தினார்கள். அவர்கள் அற்புதங்களில் நம்பிக்கை வைக்கவில்லை. ''அற்புதங்கள்'' என்பவை மூடநம்பிக்கையான மதியீனங்களாயிருந்தன - தங்கள் சிந்தைகளில் - எனவே, அவர்கள் இந்த உலகத்தில் நடந்திருந்த "உண்மையான இயேசுவை" கண்டறிவதற்காக இயேசுவின் வரலாற்றிலிருந்து அவருடைய அற்புதங்களின் கூறுகளை எடுத்துவிட முயற்சி செய்தார்கள். அவர்கள், உலகத்தின் மறைவான மூலை ஒன்றில் வாழ்ந்த, அறியப்படாத, கல்வியறிவற்ற, ஒரு ஒழுக்கத் தத்துவ ஞானியாக அவரைக் கண்டு கொண்டார்கள். அந்த "இயேசுவால்" வரலாற்று ஓட்டத்தை மாற்ற முடிந்தது என்றால், அது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள எந்த அற்புதத்தையும் விட மிகப் பெரிய அற்புதமாக இருக்கும் என்று யாரோ ஒருவர் கூறினார்! என் ஆசிரியர்களில் ஒருவரான J. D. தாமஸ் அவர்கள், இந்தக் கல்வியாளர்கள் செய்த முயற்சிகளை, ஒரு வெங்காயத்தை உரித்து அதன் மையப்பகுதியைக் காண முயற்சித்தலுடன் ஒப்பிட்டார். நீங்கள் வெங்காயத்தை உரித்துக்கொண்டே சென்றால், அதில் ஒன்றும் மீதியாயிராது. இயேசுவின் அற்புதங்கள் இன்றி நீங்கள் அவரையும் அவரது செல்வாக்கையும் விளக்கப்படுத்த முடியாது.

சுவிசேஷ விவரங்களில் பதிவு செய்யப்பட்டபடியாகவே இயேசுவின் அற்புதங்கள் உண்மையிலேயே நடைபெற்றன என்று நான் நம்புகின்றேன். ஏனெனில் இயேசு அற்புதங்களைச் செய்தார் என்பதை அவரது விரோதிகளாலும் கூட மறுக்க முடியவில்லை. இந்த வாரத்திற்கான வாசிப்பில், இயேசு திமிர்வாதக்காரரைக் குணமாக்கியபோது, அவரது விமர்சகர்கள் அங்கிருந்தார்கள். இயேசு அவர்களுக்கு ஒரு அறைகூவல் விடுத்தார்: '''பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்று நீங்கள் அறிய வேண்டும்' என்று சொல்லி, திமிர்வாதக் காரனை நோக்கி: 'நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன்' என்றார்" (மாற். 2:10, 11). அவரது விமர்சகர்கள், அந்த மனிதன் எழுந்து நடந்து சென்றதை மறுக்க முடியாதிருந்தது!

நாம் யோவான் 9ம் அதிகாரத்திற்கு வரும்போது, பிறவியிலேயே பார்வையற்று இருந்த ஒரு மனிதன் குணமாக்கப்பட்டது பற்றி நாம் வாசிப்போம். அவரது விரோதிகள் அதைப் பற்றி வருத்தம் அடைந்து,

இயேசுவை அவகீர்த்திக்குள்ளாக்க முயற்சி செய்தார்கள், ஆனால் அவர்கள் ஒரு விஷயத்தைச் செய்யாமல் [செய்ய முடியாமல்] இருந்தார்கள்: ஒரு அற்புதம் நடந்தது என்பதை அவர்கள் மறுக்கவில்லை (வ. 16).

யோவான் 11ல் லாசருவை உயிர்ப்பித்தல் பற்றி நாம் வாசிப்போம். இயேசுவின் விரோதிகள், "நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே" (வ. 47) என்று கூறியதைக் கவனியுங்கள்.

பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு தமது சக யூதர்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தபோது அவர், "நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறினார் (அப். 2:22). அங்கு எவரொருவரும், "இல்லை, அவர் அவ்வாறு செய்த தில்லை!" என்று கூறி அவரை [பேதுருவை] நிறுத்தவில்லை.

வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் மட்டும் மக்கள், இயேசு அற்புதங்கள் செய்தார் என்பதை மறுக்க முடியாதிருந்தது என்பது உண்மையாக இருந்ததில்லை. கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில், கிறிஸ்தவத்தை அழிக்க முயற்சி செய்யும் வகையில் புத்தகங் களை எழுதும் மனிதர்கள் எழும்பினார்கள். அவர்களில், செல்ஸஸ், ஹிரோகிளெஸ் மற்றும் விசுவாச விலக்கம் பெற்ற ஜூலியன் ஆகியோர் இருந்தார்கள். இயேசு அற்புதங்களைச் செய்திருந்தார் என்பதை இந்த மனிதர்கள் எந்த வித விதிவிலக்குமின்றி மறுக்காதிருந்த ஒரு செயலாக இருந்தது.

மற்றும், இன்றைய நாளில் நாமும் கூட இயேசுவின் அற்புதங்களைப் புறம்பே வைத்து விளக்க முடியாது என்பதால் அவைகள் அதிகாரத்துவம் வாய்ந்தவைகளாக இருந்தன என்பதை நான் விசுவாசிக்கின்றேன். அவ்வப்போது சிலர், "உண்மைதான், அவர்கள் இயேசு அற்புதங்களைச் செய்தார் என்று நினைத்தார்கள், ஆனால் மந்திரவாதி சீமோன் போன்ற பிற மனிதர்களும் தாங்கள் அற்புதங்களை நிகழ்த்துவதாக உரிமைகோரி னார்கள், இவர்கள் அற்புதம் செய்பவர்கள் என்று மக்களும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இயேசு மக்களை ஏமாற்ற மட்டுமே செய்தார்" என்று கூறினார்கள். பின்வரும் உண்மைகள் இல்லாவிட்டால் இந்த விவாதமானது சற்று கனமுடையதாகவே இருந்திருக்கும்: மக்களை மதியீனர்களாக்கி, கும்பலின் மனோதத்துவத்தைப் பயன்படுத்த அறிந்து, மக்களை வஞ்சித்துக் கொண்டிருந்தவர்கள், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அற்புதங்களி னால் இணங்க வைக்கப்பட்டார்கள். அப். 8ல் மந்திரவாதி சீமோனின் வரலாற்றை ஆய்வு செய்து பாருங்கள். மேலும் யூதாஸைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். இயேசு செய்த எல்லாவற்றையும் குறித்த ஒரு உள்ளான அறிவை யூதாஸ் பெற்றிருந்தார். இயேசு கூட்டத்தாரை ஏமாற்றித் திரிந்தார் என்றால், அதை யூதாஸ் நிச்சயமாக அறிந்திருப்பார். இருப்பினும் யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் தீர்மானித்தபோது, அவரால் இயேசுவின் விரோதிகளிடத்தில் அவரைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய வேறு எதையும் கூற முடியாது இருந்தது. இயேசுவை அவர்கள் கைது செய்வதற்கு

எங்கு அவரைக் காணலாம் என்பதை மட்டுமே அவரால் அவர்களிடம் கூற முடிந்தது.

சிலர், “நல்லது, இந்த விவரங்கள் யாவும் நம்பத்தகுந்தவைகளாய் இருந்தபோதும், இவைகள் உண்மையிலேயே நடந்திருந்தாலும் என்ன நடந்தது என்பதை, இவற்றை எழுதியவர்கள் புரிந்துகொண்டிருந்தது இல்லை. அவர்கள் உணர்விழுவிசையால் ஏற்படும் நோய் பற்றி அறிந்திருக்க வில்லை. இன்றைய நாட்களில் நாம், மக்களின் உடல்ரீதியான பிரச்சனை களில் 80 சதவிகிதம் மனதின் பிரச்சனை சிலவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது என்று அறிகின்றோம். இயேசு அவ்வாறுதான் குணமாக்க முடிந்தது” என்று மறுத்துள்ளார்கள்.

பல சுகவீனங்கள் மனதுடன் தொடர்புடையவை என்பதை நான் ஒருக்காலும் மறுக்க மாட்டேன், ஆனால் இது இயேசுவின் அற்புதங்களில் ஒன்றை விளக்கப்படுத்த முடியாது: இது இவ்வாரத்திற்கான வாசிப்பில் உள்ள தொழுநோயாளியைக் குணமாக்கியதை விளக்கப்படுத்த முடியாது. இது சுருங்கிய கை, கால்களை மீளவும் பழைய நிலைக்குக் கொண்டு வந்த செயலை விளக்கப்படுத்த முடியாது. இது பிறவியிலிருந்தே பார்வையற்று இருந்த ஒரு மனிதரைக் குணமாக்கியதை விளக்கப்படுத்த முடியாது. அந்த மனிதர் பார்வையுள்ளவராய்ப் பிறந்து, பின்பு உணர்விழு விசையினால் பார்வையிழந்தவராகவில்லை. அவர் பார்வையற்றவராகவே பிறந்தார். லாசரு இறந்து மூன்று நாட்கள் ஆன பின்பு அவரது உடல் ஏற்கனவே அழுகிக் கொண்டிருந்த நிலையில் அவரை இயேசு உயிர்ப்பித்தது பற்றிய விஷயம் என்ன? (யோவா. 11). லாசரு தாம் இறந்துபோய் மூன்று நாட்கள் ஆகியிருந்தது என்று நினைத்துக் கொண்டு இருந்தாரா?

இயேசுவின் பல அற்புதங்கள் வெளிப்படையாகச் செய்யப்பட்டன. அவைகள் அவிசுவாசிகளுக்கு முன்பாகச் செய்யப்பட்டன. அவைகள் நீண்ட கால கட்டத்தில் செய்யப்பட்டன மற்றும் வல்லமையின் செயல் பாட்டில் மாபெரும் பல்வகைத்தன்மை கொண்டிருந்தன: இயற்கையின் மீது வல்லமை, வியாதியின்மீது வல்லமை, அசுத்த ஆவிகளின் மீது வல்லமை, இயற்கைக்கு மேலான அறிவின் உள்ளடக்கம் பற்றிய வல்லமை, படைத்தல் உள்ளடங்கிய வல்லமை, மற்றும் மரணத்தின்மீது வல்லமை. இவைகளை யெல்லாம் விளக்குவதற்கு வழி எதுவும் இல்லை.

இயேசு உண்மையிலேயே பின்வருபவற்றைச் செய்தார் ...

... கப்பர்நகூம் ஜெப ஆலயத்தில் திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்கினார்!

... பேதுருவின் மாமியைக் குணமாக்கினார்!

... கப்பர்நகூமிலும் கலிலேயாவிலும் தம்மிடத்திற்கு வந்த யாவரையும் குணமாக்கினார்!

... தொழுநோயினால் நிறைந்திருந்த ஒரு மனிதரைக் குணமாக்கினார்!

... கப்பர்நகூமில் கூரையின் வழியே இறக்கி விடப்பட்ட ஒரு மனிதரைக் குணமாக்கினார்!

# இயேசுவின் அற்புதங்களின் உண்மை நிலை

*நமது பாடத்தின் எஞ்சிய பகுதியில், நாம் இயேசுவின் அற்புதங்களை - குறிப்பாக அவரது குணமாக்குதல்களை - நெருக்கமாகக் காண்போம். நாம் இதுபோன்ற அற்புதங்களை நமது வாசிப்பில் மீண்டும் மீண்டும் எதிர்கொள்ளுவோம்.*

***அன்று இயேசுவின் அற்புதங்கள்***

*இன்றைய நாட்களில் நாம் ''அற்புதம்'' என்ற வார்த்தையைத் தளர்வாகப் பயன்படுத்துகின்றோம்: நாம், "பிறப்பின் அற்புதம்" பற்றிப் பேசுகின்றோம். நாம், "எனது தேர்வில் நான் வெற்றி பெற்றால் அது ஒரு அற்புதமாகவே இருக்கும்" என்றோ அல்லது, "இந்த ஆண்டு முழுவதும் எனக்குக் குடல்புண் நோய் வராதிருந்தால், அது ஒரு அற்புதமாகவே இருக்கும்" என்றோ கூறுகின்றோம். ஆயினும் வேதாகம ரீதியில், "அற்புதம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்ட வகையில் ஒரு விசேஷித்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது அன்றாடம் நடந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்ததில்லை. இது இயற்கை விதி அல்லது மனித முயற்சி ஆகியவற்றால் விளைந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்ததில்லை. இது இயற்கைக்கு மேலானதாக இருந்தது, ஏனென்றால் அந்தக் கணத்தில், இயற்கையின் விதிகள் சற்றே ஒதுக்கி வைக்கப்பட்டு, இயற்கைக்கு மேலானவைகள் ஆதிக்கம் செலுத்தின - ஆனால் இது அதற்கும் மேலானதாக இருந்தது. இது இயற்கைக்கு மேலானதாக இயல்பான உலகில் கிரியை செய்து, எல்லாரும் ஒரு அற்புதம் நடைபெற்றது என்று கண்டு ஒப்புக் கொள்ளக் கூடிய வகையில் நடைபெற்றது.*

*நாம் இப்போது என்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை விளக்கப்படுத்துவதற்காக, இந்த வாரத்தின் பாடத்திலுள்ள குணமாக் குதலை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். இந்த உதாரணங்களில், இயேசுவின் குணமாக்குதல் பற்றி அநேக உண்மைகளை நாம் காண முடியும்.*

*முதலாவதாக, இயேசு தம்முடைய அற்புதங்களில் வரைப்படுத்தப்பட வில்லை என்பதை கவனியுங்கள். அவர் பரிசுத்த ஆவியை "அளவில்லாமல்" அல்லது வரையறையில்லாமல் பெற்றிருந்தார் (யோவா. 3:34).*

*அவர் மற்றவர்களின் விசுவாசத்தினால் மட்டுப்படுத்தப்படவில்லை. சிலவேளைகளில் தொழுநோயாளியின் விஷயத்தில் நடந்தது போல (மத். 8:2), குணமாக்கப்பட்ட மனிதர் விசுவாசம் கொண்டிருந்தார். ஆயினும் சிலவேளைகளில், குணமாக்கப்பட்ட மனிதர் விசுவாசம் கொண்டிருந்தார் என்பதற்கான குறிப்பெதுவும் காணப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, கூரையின் வழியாக இறக்கி விடப்பட்ட மனிதரைக் குணமாக்கிய நிகழ்ச்சியில், வியாதிப்பட்டிருந்த மனிதரின் விசுவாசத்தையல்ல ஆனால் அவரது நான்கு நண்பர்களின் விசுவாசத்தையே இயேசு கண்டார் (மத். 9:2; மாற். 2:5). இயேசு மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்திருந்தவர்கள்,*

அற்புதங்கள் செய்வதில் அவருக்கிருந்த வல்லமையின்மீது விசுவாசம் எதையும் செயல்விளக்கப்படுத்தவில்லை.

இயேசு தாம் குணமாக்க முடிந்த உடல்ரீதியான பிரச்சனைகளின் வகைகளினால் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர் "ஜனங்களுக்கு உண்டா யிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கி னார்" (மத். 4:23).இந்த வார வாசிப்பில், அவர் "ஜுரம்" போன்ற எளிய விஷயங்களைக் குணமாக்கினார், மற்றும் அவர் "தொழுநோயால் நிறைந் திருந்த" (லூக். 5:12) ஒரு மனிதரையும் குணமாக்கினார். அவர் குணமாக்கு வதற்கு மக்களைப் பொறுக்கியெடுத்துத் தேர்ந்துகொள்ளவில்லை. ஒருவர் குணமாக்குவதற்கு உண்மையாகவே வல்லமை கொண்டிருக்கும்போது, அவர் யாரைக் குணமாக்க முடியும், யாரைக் குணமாக்க முடியாது என்பது பற்றி வரையறைகள் எதுவும் இருப்பதில்லை.

அது போலவே, இயேசு குணமாக்க அவசியமான மக்களின் எண்ணிக்கையினாலும் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர் எல்லாரையும் குணமாக்க முடிந்தது. அவர் தோல்விகள் எதையும் அனுபவித்தது இல்லை.

> அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று; அப்பொழுது பலவித வியாதிகளையும், ... அடைந்திருந்த சகல பிணியாளிகளையும் ... அவரிடம் கொண்டு வந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார் (மத். 4:24).
>
> பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார் (மத். 8:16).
>
> ... ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களை சொஸ்தமாக்கினார் (லூக். 4:40).

இரண்டாவது, இயேசுவின் குணமாக்குதல்கள் குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டிருந்தன:

(1) குணமாக்குதல் என்பது உடனடியானதாக இருந்தது. மக்கள் படிப்படியாக நலமடைந்து கொண்டிருக்கவில்லை. தொழுநோயாளியைப் பொறுத்தமட்டில் நாம், "உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்த மானான்" (மத். 8:3; மாற். 1:42; லூக். 5:13 ஆகிய வசனங்களையும் காண வும்). திமிர்வாத நோய் கொண்டிருந்தவரைப் பொறுத்தமட்டில், மாற்கு 2:12 "உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான் ...." என்று கூறுகிறது (லூக். 5:25ஐக் காணவும்).[3]

(2) குணமாக்குதல் முழுமையானதாக இருந்தது. மக்கள் ஒரு பகுதியாக மட்டும் குணமாக்கப்பட்டதில்லை. இது நாம் இவ்வாரத்தில் வாசித்த விவரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது: ஜெப ஆலயத்தில் இருந்த மனிதனில் இருந்த அசுத்த ஆவியை இயேசு துரத்திய பின்பு, அவன் முற்றிலும் நலமானவனாக இருந்தான். பேதுருவின் மாமியை இயேசு குணமாக்கிய

*பின்பு, அவள் முற்றிலும் நலமடைந்தாள்; அவள் உடனடியாகத் தனது வழக்கமான செயல்களைச் செய்யத் திரும்பினாள். தொழுநோயாளி வெறுமனே "சுகமடைதலை" மட்டும் பெறவில்லை; மாறாக, அவர் சுத்த மாக்கப்பட்டார். திமிர்வாதம் கொண்டிருந்த மனிதர் தமது படுக்கையை எடுத்துக்கொண்டு கதவின் வழியாக நடந்தார். நமது பாடம் தொடருகை யில், நாம் இன்னும் பல நிகழ்ச்சிகளைக் காண்போம்: பார்வையற்றவர்கள் பார்வை பெற்றார்கள், சூம்பின உறுப்புக்கள் பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டன, மற்றும் மக்கள் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார்கள்.*

*(3) குணமாக்குதல் நம்பக்கூடியதாக இருந்தது. இயேசுவின் அற்புதங்கள் நடைபெற்றன என்பதை ஒருவரும் மறுக்க முடியாதபடிக்கு அவைகள் அவ்விதமான இயல்பு கொண்டிருந்தன என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். சிலர், இயேசு பெயல்செபூலின் வல்லமை யினாலேயே தமது அற்புதங்களைச் செய்தார் என்று கூறி, இயேசுவை அவகீர்த்தியடையச் செய்ய முயற்சி செய்தார்கள்; ஆனால் அவர்களும் கூட, அற்புதங்கள் நடைபெற்றன என்பதை மறுக்க முடியாதிருந்தது. இதன் விளைவாக, கும்பல் வளரத் தொடங்கிற்று, இயேசுவின் பிரபலத்தன்மை வளர்ந்தது: "அவருடைய கீர்த்தி … எங்கும் பிரசித்தமாயிற்று … கலிலேயாவிலும், தெக்கப்போலியிலும், எருசலேமிலும், யூதேயாவிலும், யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின் சென்றார்கள்" (மத். 4:24, 25). ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவி கொண்டிருந்தவரை இயேசு குணமாக்கிய பின்பு நடைபெற்றவற்றை நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:*

> *எல்லாரும் ஆச்சரியப்பட்டு: "இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். அது முதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று (மாற். 1:27, 28).*

*அவர் தொழுநோயாளியைக் குணமாக்கி பின்பு, "அவருடைய கீர்த்தி அதிகமாய்ப் பரம்பிற்று, திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும் அவராலே தங்கள் பிணிகள் நீங்கி சவுக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள்" (லூக். 5:15). கூரையின் வழியாக இறக்கி விடப்பட்ட மனிதரைக் குணமாக்கியதென்பது ஒருவேளை இவ்வார வாசிப்பில் மிகச் சிறந்த உதாரணமாக இருக்கலாம். அந்த வேளையில் ஒரு அற்புதம் நடைபெற்றது என்பதை இயேசுவின் விரோதிகளாலும் மறுக்க முடியாதிருந்தது.*

*இயேசுவின் குணமாக்குதல்கள் பற்றிய பிற அம்சங்கள் குறிப்பிடப்பட முடியும், ஆனால் நான் இன்னும் ஒன்றை மட்டும் வலியுறுத்த அனுமதி யுங்கள்: மூன்றாவது, இயேசுவின் நோக்கமானது அடிப்படையில் ஆவிக்குரியதாக இருந்தது. துன்பத்திலிருந்து விடுதலை என்பது மட்டுமின்றி, ஆத்துமாக்களை இரட்சித்தல் என்பது அவரது நோக்கமாக இருந்தது. நீங்கள்*

*இந்த வாரத்தில் வாசித்தபோது, லூக்கா 4:43ஐக் கவனித்தீர்களா? அவ்வசனமாது, "அவரோ, அவர்களை நோக்கி: 'நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்க வேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன்' என்றார்." அவர் தாம் குணமாக்குவதற்காக அனுப்பப் பட்டதாகக் கூறவில்லை, மாறாக, மக்கள் இரட்சிக்கப்படும்படி அவர்களுக்குப் பிரசங்கிப்பதற்காக அனுப்பப்பட்டதாகவே அவர் கூறினார் (லூக். 19:10ஐக் காணவும்).*

*இது, இயேசு மனித துன்புறுதல்களைக் கண்டு இருதயம் அசைக்கப் படாதிருந்தார் என்று அர்த்தப்படுவதில்லை. அவர் தொழுநோயாளியைக் கண்டபோது, "மனதுருகினார்" (மாற். 1:41). குணமாக்குதலோ அல்லது பிற அற்புதங்களைச் செய்தலோ இயேசுவின் முதல் முன்னுரிமையாக இருந்த தில்லை என்றே இது அர்த்தப்படுகிறது. அவர் மனிதர்களின் உடல்களின் மீதல்ல, ஆனால் அவர்களின் ஆத்துமாக்கள் மீதே மிகவும் அக்கறையுடைய வராக இருந்தார். கூரையின் வழியாக ஒரு மனிதர் இறக்கி விடப்பட்ட போது, அவரது பாவங்களை மன்னித்தல் என்பதே இயேசு செய்த முதல் செயலாக இருந்தது (மாற். 2:5).*

***இன்று அற்புதங்கள் என்று அழைக்கப்படுபவைகள்***

*கலந்துரையாடலின் இந்தப் பகுதியைச் சில நேர்மாறுகளைக் கொண்டு வராமல் என்னால் விட்டுவிட முடியாது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் கொண்டிருந்த அதே வல்லமையை இன்று தாங்கள் கொண்டுள்ளதாகச் சில மனிதர்கள் உரிமைகோருகிறார்கள் என்பது, இயேசுவின் அற்புதங்களை மக்கள் நம்பாமற்போவதற்கான காரணங்களில் ஒன்றாக உள்ளது. [இயேசுவுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் இருந்த வல்லமை தங்களுக்கு இருப்பதாக உரிமைகோருகின்ற] இந்த வஞ்சகர்கள் செய்கின்றவற்றைத் தேவ நம்பிக்கையற்றவர்கள் பரிசோதனை செய்கின்றபோது - மற்றும் இது அற்புதம் அல்ல என்று அவர்கள் தீர்மானிக்கின்றபோது - இயேசுவும் அப்போஸ்தலர்களும் அற்புதங்கள் செய்திருக்க முடியாது என்றே அவர்கள் முடிவு செய்கின்றார்கள். ஆயினும், இயேசுவின் அற்புதங்களுக்கும் இன்று அற்புதங்கள் என்று அழைக்கப்படுபவைகளுக்கும் உள்ள வேறுபாடுகளை நாம் கவனிப்போம்.*

*நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி, இயேசு தமது அற்புதங்களில் - பிறரின் விசுவாசம், உடல்ரீதியான பிரச்சனையின் வகை, அற்புதங்களின் எண்ணிக்கை ஆகியவற்றினால் - மட்டுப்படுத்தப்படாது இருந்தார். இதற்கு நேர்மாறாக, இன்றைய நாட்களில் மனிதர்கள் சிலரைக் குணமாக்க முடியாமல் போகும்போது, அவர்கள் பெரும்பாலும், ''அவருக்குப் போதுமான விசுவாசம் இல்லை'' என்று கூறுகின்றார்கள். உண்மையில் அவர்கள், ''நாங்கள் மற்றவர்களின் விசுவாசத்தினால் மட்டுப்படுத்தப் பட்டுள்ளோம்'' என்றே கூறுகின்றார்கள்! மற்றும் இயேசு, எந்த வியாதி யையும் மற்றும் எல்லா வியாதிகளையும் குணமாக்க முடிந்திருக்கையில், இன்றைய நாட்களில் குணமாக்குகிறவர்கள் என்று தங்களை உரிமை கோருபவர்கள் குணமாக்க முயற்சி செய்யாத வியாதிகள் உள்ளன. அவர்கள்*

‘‘குணமாக்கும் ஊழியத்தை’’ நடத்தும் எந்த வேளையிலும் மக்கள் குணமாக்கப்படாதவர்களாகவே அந்த ஊழியத்திலிருந்து தங்கள் வீடுகளுக்குச் செல்கின்றார்கள்.

இயேசுவின் அற்புதங்களினுடைய மூன்று பண்புகள் பற்றி நாம் விசேஷமாக நெரெதிராக ஒப்பிட்டு காண்போம்: இயேசுவின் அற்புதங்கள் முதலாவது, உடனடியானவைகளாக, இரண்டாவது முழுமையானவை களாக இருந்தன. குணமாக்குபவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளு பவர்கள், “குணமாக்கப்பட்டவர்” நலமாக உள்ளார் மற்றும் தொடர்ந்து அவர் நலமடைவார் என்று வலியுறுத்துகின்றார்கள். நீங்கள் ஒரு “குணமாக்கும் ஊழியக் கூட்டத்தில்” கலந்து கொண்டால், நீங்கள் சூம்பின உடலுறுப்புக்கள் நிரப்பப்படுவதைக் காணமாட்டீர்கள்; நீங்கள் மரித்தோர் எழுப்பப்படுவதைக் காணமாட்டீர்கள். மூன்றாவது பண்பானது, இயேசு செய்த அதே அற்புதங்களை இன்று தாங்களும் செய்வதாக உரிமை கோருபவர்களைப் பேரழிவுக்கு உட்படுத்துவதாக உள்ளது. இயேசுவின் அற்புதங்கள் நம்பக்கூடியவைகளாக இருந்தன: இயேசுவின் அற்புதங்கள் அவரது விரோதிகளை நம்ப வைத்தன; அவைகள் தேவநம்பிக்கை அற்றவர்களை நம்பி இணங்க வைத்தன; அற்புதம் நடந்திருந்தது என்பதை எவரொருவராலும் மறுக்க முடியாதிருந்தது. நான் ஒரு ‘‘குணமாக்கும் ஊழியக் கூட்டத்தில்” இருந்துள்ளேன், மற்றும் இவை பற்றி அதிகமான வற்றை நான் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கண்டுள்ளேன், ஆனால் நான் இன்னும் ஒரு அற்புதத்தைக் கண்டதில்லை. இன்றைய நாட்களில் அற்புதங் கள் நடக்கின்றன என்பதை மறுத்தல் என்பது அவ்வளவு கடினமானதாக இருப்பதில்லை.

கடைசியாக, வலியுறுத்தத்தில் உள்ள நேர்மாறு ஒன்றுள்ளது: இயேசுவின் வலியுறுத்தமானது ஒருக்காலும் உடல்ரீதியான, துன்புறுபவரை விடுவித்தல் என்பதில் இருந்தது இல்லை. மாறாக, அவர் ஆவிக்குரிய மனிதன் மீதே வலியுறுத்தம் செலுத்தினார். நான் பார்த்திருக்கின்ற “குணமாக்கும் ஊழியக் கூட்டங்களில்” உடல்ரீதியான சுகவீனங்களின்மீது வலியுறுத்தமும் உணர்வெழுச்சியும் மையப்படுத்தப்பட்டு இருந்ததை நான் கண்டிருக் கின்றேன்.

இன்றைய நாட்களில் உள்ள போலி அற்புதங்கள், இயேசு அற்புதங் களைச் செய்தார் என்று மக்களை நம்பச் செய்வதற்குத் தடைகளாக இருப்பவற்றின் மத்தியில் உள்ளன என்பதை நான் மீண்டும் கூறுகின்றேன். இப்படிப்பட்டவற்றைச் செய்து குற்றமுள்ளவர்கள் இவை குறித்து ஒரு நாளில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

## இயேசுவின் அற்புதங்களின் விளைவு

நமது கடைசி ஆழ்ந்த சிந்தனையானது நாம் முன்பு கலந்துரையாடிய ஒரு சத்தியத்தின்மீது கட்டி எழும்பியுள்ளது. இயேசுவின் எந்த அற்புதமும் - அது குணமாக்குதலோ, புயலைஅமர்த்துதலோ அல்லது மரித்தோரை உயிர்ப்பித்தலோ எதுவாக இருப்பினும் - இதனைப் பற்றியதாகவே

*இருப்பதால் நான் இந்தச் சிந்தனையுடன் இப்பிரசங்கத்தை முடிக்க விரும்புகின்றேன்: இயேசுவின் அற்புதங்கள் அவர் தேவனுடைய குமாரனாக நமது இரட்சகராக இருப்பதை நிரூபித்தன.*

*இயேசுவின் அற்புதங்கள் அவற்றைக் கண்டவர்கள்மீது ஒரு வல்லமை மிகுந்த செயல்விளைவைக் கொண்டிருந்தன. இது கூரையின் வழியாக இறக்கி விடப்பட்ட மனிதரின் விஷயத்தில் விவரிக்கப்படக் கூடும். இது பற்றிய மூன்று விவரங்களையும் நீங்கள் ஒன்றுகூட்டிக் காணும்போது, இந்த அற்புதம் அங்கு இருந்தவர்களின் மனங்களை எவ்வளவாக ஈர்த்தது என்பதை நீங்கள் காண முடியும்:*

- *அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (மாற். 2:12).*
- *அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (லூக். 5:26).*
- *அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள் (மத். 9:8).*
- *அவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (மத். 9:8, மாற். 2:12; லூக். 5:25, 26).*

*இயேசு தாம் உண்மையில் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்று மக்களை நம்பச் செய்தலே தமது அற்புதங்களின் அடிப்படை நோக்கமாயிருந்தது என்று வலியுறுத்தினார். எடுத்துக்காட்டாக, அவர் பாவத்தை மன்னிப்பதற்கு (இது தேவன் மட்டுமே செய்யக் கூடியதாகும்) அதிகாரம் கொண்டுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கு, அவர் கூரையின் வழியாக இறக்கிவிடப்பட்ட திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்கினார் (மத். 9:4-6). நமது பாடம் தொடருகையில், அந்த சத்தியமானது மீண்டும் மீண்டும் விவரிக்கப்படும். யோவான் ஸ்நானன், இயேசு மேசியாவா அல்லவா என்று ஆச்சரியப்பட்டபோது, இயேசு “ஆம்” என்று கூறுவதற்குப் பதிலாக, பல மக்களைக் குணமாக்கினார். பின்பு அவர், “நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்” என்று கூறினார் (லூக். 7:20-23ஐக் காணவும்).*

*இந்த உண்மையை யோவான் விசேஷமாக வலியுறுத்தினார். யோவான் 2:11ல் இயேசுவின் முதல் அற்புதமானது அவரது சீஷர்கள் அவர்மீது கொண்டிருந்த விசுவாசத்தைப் பெலப்படுத்தியது. யோவான் 5:36ல் கிறிஸ்து, “... நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது” என்று கூறினார். இயேசு தமது சீஷர்களிடத்தில், “என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்” என்று அறைகூவல் விடுத்தார் (யோவா. 14:11). நீங்கள், “நான் இயேசுவின் அற்புதங்களைக் காண வேண்டும் என்று விரும்பு கின்றேன். அப்போது நான் நம்புவேன்” என்று கூறலாம். யோவான் அதையும் கூடக் கூறி முடித்தார்:*

> *இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்*

*படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவா. 20:30, 31).*

*கிறிஸ்துவின் அற்புதங்கள் மீண்டும் செய்யப்பட வேண்டிய அவசிய மில்லை. அவற்றை உற்றுக் கவனித்தவர்களின் நிச்சயமான சாட்சியை நாம் கொண்டுள்ளோம். அவர்களின் சாட்சியத்தை நாம் நம்பாவிட்டால், நாம் அந்த அற்புதங்களை நமது சொந்தக் கண்களினால் பார்த்தாலும் நம்ப மாட்டோம் (லூக். 16:31ஐக் காணவும்).*

## முடிவுரை

*இயேசுவின் அற்புதங்கள் சில முக்கியமான பாடங்களை நமக்குப் போதிக்கின்றன. எடுத்துக்காட்டாக, அவைகள் இயேசு மற்றவர்களின் பிரச்சனைகள் பற்றி அக்கறையாக இருந்தார் என்பதைச் செயல்விளக்கப் படுத்துகின்றன. நாம் எவ்வகையான பிரச்சனைகளைக் கொண்டிருப் பினும் இயேசு இன்னமும் மனதுருக்கம் உள்ளவராகவே இருக்கின்றார். மிக முக்கியமாக, இந்த அற்புதங்கள் இயேசு உண்மையில் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதைப் போதிக்கின்றன. ஆகையால் நாம் நமது பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட முடியும் - மற்றும் ஒரு நாளிலே நாம் நித்தியம் முழுவதும் அவருடன் இருக்கும்படி செல்லப் போகின்றோம்!*

*நீங்கள் இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று விசுவாசிக்கின்றீர்களா? அவர் உங்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா (1 கொரி. 15:3)? இந்த விசுவாசமானது உங்கள் இருதயத்தில் மனந்திரும்புதலை உண்டாக்கியுள்ளதா (அப். 17:30)? நீங்கள் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானத்தில் இயேசுவை தரித்துக் கொள்ள மனவிருப்பமாய் இருக்கின்றீர்களா (ரோமர் 10:9, 10; கலா. 3:26, 27)? நீங்கள் உண்மையில் இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தால், உங்கள் விசுவாசத்தை - இன்றே - செயல்விளக்கப் படுத்துங்கள்.*

---

குறிப்புகள்

[1]*பின்தொடரும் ஆய்வானது மத்தேயுவை அழைத்தல் தவிர இந்த வாரத்திற்கான வேத வாசிப்பு யாவற்றையும் உள்ளடக்குகிறது.* [2]Abilene Christian University (then Abilene Christian College) in Abilene, Texas. [3]*குணமாக்குதலின் உடனடித்தன்மையானது நாம் வாசித்துள்ள மற்ற விஷயங்களிலும் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது.*

*20*

# கூட்டத்தின் புயல்[1]

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #7*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*[2]
   A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வு நாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*
   B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*
   C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு மனிதரை ஓய்வு நாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*
   D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*
   E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*

### அறிமுகம்

*இயேசு தமது மாபெரும் கலிலேய ஊழியத்தைத் தொடர்ந்தபோது, அவரது பிரபலத்தன்மை அதிகரித்தது. அவரது பிரசங்கித்தலைக் கேட்கவும் குணமாக்குதலை நாடவும் கூட்டங்கள் அவரிடத்தில் வந்தன. இந்தப் பாடத்தில் எடுத்துரைத்து முடிக்கப்படும் காலத்தின்போது, அவர் தமது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து, நினைவுகூரத்தக்க தமது மலைப்பிரசங்கத்திற்கான காட்சி அமைப்பை அமைத்திருந்தார் - இதைப் பற்றி நாம் அடுத்த வரும் இரு பாடங்களில் படிக்கவிருக்கின்றோம்.*

*இந்த வேளையில் யூதத்தலைவர்களின் அதிகரித்து வந்த வெறுப்புணர்வு என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இயேசு சென்ற இடங்களுக்கெல்லாம் ஒற்றர்கள் அவரைப் பின்தொடர்ந்து, அவர்மீது குற்றம் சாட்டுவதற்கு அடிப்படைகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள் (மாற். 3:2; மத். 12:10). கிறிஸ்து தமது விரோதிகளின் வலைகளிலிருந்து தப்பியபோது, அது அவர்களை மூர்க்கமான கோபத்தினால் நிரப்பிற்று (லூக். 6:11). மத்தேயு, "... பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்" என்று எழுதினார் (மத். 12:14; மாற். 3:6ஐக் காணவும்). யோவான், "யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி" "அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகை*

தேடினார்கள்” என்று பதிவு செய்தார் (யோவா. 5:16, 18).

யூத அதிகாரிகளின் பகுத்தறிவற்ற வெறுப்புணர்வைப் பதிவு செய்வது அவசியம் என்று சுவிசேஷ விவரங்களின் எழுத்தாளர்கள் நினைத்தது ஏன்? ஒருவேளை, அவர்கள் இயேசு சிலுவையில் அறையப்படுதலில் யூத அதிகாரிகளின் பங்கைத் தெளிவாக்க விரும்பியிருக்கலாம். புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ரோமச் சிலுவையில் மரித்தல் என்பதை விட மிகவும் அதிகமான அவகீர்த்தியுள்ள விஷயம் வேறு எதுவும் இருந்ததில்லை (எபி. 6:6; 12:2ஐக் காணவும்). தேவநம்பிக்கையற்றவர்கள் (ஒரு ஏளனச் சிரிப்புடன்), “நீங்கள் கூறுவதுபோல் இயேசு பூரணத்துவம் வாய்ந்த ஒரு நபராக இருந்திருந்தால், அவர் ஏன் ஆக்கினைக்குட்பட்ட ஒரு குற்றவாளியாக மரித்தார்?” என்று கேட்கின்றதை நான் கற்பனை செய்ய முடிகிறது. அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க நமக்கு உதவுவது போன்ற வசனப்பகுதிகளை நாம் இப்பாடத்தில் படிப்போம்.

நாம் முதலில் முரண்பாட்டில் மூன்று உதாரணங்களைக் கவனிப்போம். பின்பு நாம், எதிர்ப்பின் செயல்விளைவுகளை - ஓரளவுக்கு - எதிர்த்து நிற்க இயேசு என்ன செய்தார் என்பதைக் காண்போம்.

## வார்த்தைகளினால் வெறுப்பிற்குப் பதில் அளித்தல்

இந்தப் பாடத்தில் உள்ள பகைமை உணர்வானது ஓய்வுநாள் பிரமாணத்தைச் சுற்றி அமைந்துள்ளது. சுவிசேஷ விவரங்கள், ஓய்வுநாள் பற்றிய ஆறு கருத்து வேறுபாடுகள் பற்றிக் கூறுகிறது. அவற்றில் மூன்றைப் பற்றி இந்த எடுத்துரைப்பில் நாம் படிப்போம்.

“ஓய்வுநாள்” என்ற வார்த்தை அடிப்படையில் “இளைப்பாறுதல்” என்று அர்த்தப்படுத்துகிறது. தேவன் இந்த உலகத்தைப் படைத்தபோது, அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி. 2:1-3). பிற்பாடு, ஏழாம் நாள் ஓய்வானது (Sabbath) ஓய்வுநாள் என்று அழைக்கப்பட்டது, இது பத்துக் கட்டளைகளின் ஒரு பகுதியாகக் கொடுக்கப்பட்டது (யாத். 20:8-11). Sabbath என்பது இளைப்பாறுதலின் நாளாக இருந்தது, இது தேவனைப் பற்றிச் சிந்தித்து, களிகூரும் நாளாக இருந்தது. ஓய்வுநாள் ஆசரிக்கப்படுதலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தேவன் அதை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனையை நியமித்தார் (எண். 15:32-36; நெகே. 13:15-22; எரே. 17:19-27 ஆகிய வசனங்களைக் காணவும்).

தேவனுடைய பிரமாணங்கள் போதிய அளவுக்கு கண்டிப்பானவைகளாக இருந்தன, ஆனால் அதை அத்துடன் விட்டுவிட மனிதர்கள் விரும்பவில்லை. H. I. ஹெஸ்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இந்த நாளின் ஆசரிப்பு என்பது மிகவும் சிக்கலும் சுமையும் நிறைந்த வேலையாக வளர்க்கப்பட்டது. மோசேயின் கட்டுப்பாடுகள் நூற்றுக்கணக்கானவைகள் ஆகும் வரையிலும் அவை விரிவாக்கப் பட்டுப் பெருக்கப்பட்டன. இந்த ஒழுங்கு முறைமைகளின் பல

*கூறுகள் மதியீனமானவைகளாக இருந்தன. எடுத்துக்காட்டாக, ஓய்வுநாளன்று பொய்ப் பற்களை அணிதல் என்பது ஒரு சுமையைச் சுமத்தல் என்று கருதப்பட்டது, இதுபோலவே நரைமுடி ஒன்றைப் பிடுங்குதல், அல்லது கோதுமைக் கதிரை கொய்தல் அல்லது அகரவரிசையில் இரு எழுத்துக்களை ஒன்றாக எழுதுதல் கூட வேலையாகக் கருதப்பட்டது.[3] பெருக்கப்பட்ட இந்த ஒழுங்கு முறைகள் ஓய்வுநாள் ஆசரிப்பை ... நடைமுறைக்குச் சாத்திய மற்றதாக்கியிருந்தன ... இந்த முழு அமைவு முறையும் ஓய்வுநாளின் ஆவிக்குரிய தன்மையை அழித்திருந்தன.[4]*

*வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "அவர்கள் - மனிதனுக்குத் தேவனின் கொடையான - ஓய்வுநாள் பிரமாணத்தை எடுத்து அதை ஒழுங்கு முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் சிறைச்சாலையாக மாற்றியிருந்தார்கள்" என்று எழுதியுள்ளார்.[5]*

*யூதர்கள் இயேசுவை அகப்படுத்த முயற்சி செய்கையில், ஓய்வுநாள் பற்றிய அவர்களின் தெளிவற்ற மற்றும் சிக்கலான விதிகள் "சட்ட அமலாக்கத்தில் அவர்களுக்கு மிகவும் பிரியமான துணுக்காயிற்று."[6] (நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்கும்) எவரொருவரும் ஓய்வுநாள் பிரமாணங்களைப் பூரணமாகக் கடைப்பிடிக்க முடியாதாகையால், ஒரு மீறுதலில் இயேசுவைப் பிடித்தலில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது என்று அவர்கள் நினைத்தார்கள் - மற்றும் அவ்விதமான மீறுதலானது மரண தண்டனைக்குரியதாக இருந்தன (எண். 15:32-36ஐக் காணவும்)![7]*

### *ஓய்வுநாளன்று ஊனமுற்ற மனிதர் ஒருவரைக் குணமாக்குதல் (யோவா. 5:1-47)*

*நமது முந்திய பாடத்தை நாம் முடிக்கையில், இயேசு தமது மாபெரும் கலிலேய ஊழியத்தில் மும்முரமாயிருந்தார். இந்தப் பாடம் தொடங்குகை யில், இயேசு மதரீதியான ஒரு பண்டிகையில் கலந்து கொள்வதற்காக எருசலேம் செல்ல ஒரு இடைவேளையை எடுத்துக்கொண்டிருந்தார் (யோவா. 5:1). மோசேயின் பிரமாணமானது, ஒவ்வொரு யூத ஆணும் ஆண்டிற்கு மூன்று முறைகள் பிரதானமான பண்டிகைகளுக்கு - பஸ்கா, பெந்தெகொஸ்தே மற்றும் கூடாரப் பண்டிகை ஆகியவற்றிற்கு[8] - எருசலேம் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டது, இயேசு எப்போதுமே நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தவராயிருந்தார் (மத். 5:17). இது எந்தப் பண்டிகை என்று நமக்கு உறுதியாகத் தெரியவில்லை, ஆனால் இது பஸ்காவாயிருக்கலாம் என்று கருத்துக் கொள்வதற்கு ஒரு நல்ல காரணம் ஏற்படுத்தப்பட முடியும்.[9] நமது படிப்பின் நோக்கத்திற்காக இதைப் பஸ்கா என்றே நாம் கருதுவோம்.*

*இதற்கு முந்திய பஸ்காவின்போது, இயேசு தேவாலயத்திலிருந்து மதரீதியான வர்த்தகர்களைத் துரத்தி விட்டிருந்ததன் மூலம் யூதமத அதிகாரிகளைக் கோபமூட்டியிருந்தார். இந்தப் பஸ்காவின் போது, அவர் பெதஸ்தா என்ற குளத்தினருகில் ஒரு மனிதரைக் குணமாக்கியதன் மூலம் அவர்களைக் கோபமூட்டினார். இந்த அற்புதத்தைப் பின்வரும் வார்த்தை*

களில் யோவான் பதிவு செய்தார்: "இயேசு அவனை நோக்கி: 'எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோனான்" (யோவா. 5:8, 9அ). இத்துடன் யோவான் பின்வரும் தனிச்சிறப்பான கூற்றைக் கூடுதலாகப் பதிவு செய்தார்: "அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது" (வ. 9ஆ). ரபீத்துவப் பாரம்பரியத்தின்படியாக, ஓய்வுநாளான்று, ஒரு மனிதனை அவனது படுக்கையின்மீது வைத்துத் தூக்கிச் செல்லுதல் சட்டத்திற்கு உட்பட்டதாக இருந்தது (அவர்களின் தர்க்கத்தில் அந்தப் படுக்கை என்பது "சார்புள்ளதாக" இருந்தது), ஆனால் ஒரு படுக்கையை மட்டும் தூக்கிச் செல்லுதல் என்பது சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தது.

முதலில் யூதமதத்தலைவர்கள், படுக்கையைத் தனது கைகளில் தூக்கிச் சென்ற மனிதனைத் தீவிரமாக தாக்கினார்கள்; ஆனால் அவனைப் படுக்கையைத் தூக்கிக்கொண்டு நடக்கச் சொன்னவர் இயேசு என்று அவர்கள் கண்டறிந்தபோது, அவர்களின் தாக்குதல் அவர்மீது திரும்பிற்று. அவர்களின் தாக்குதலானது, விரிவாய்ப் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசுவின் முதல் வெளியரங்கமான பிரசங்கத்தைத் தூண்டியது, இது இயேசு தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கு வற்புறுத்திய நீண்ட உரைகள் பலவற்றில்[10] முதலாவதாக இருந்தது.

தேவன் ஓய்வுநாளன்று "கிரியை" செய்ய இயலுமென்றால், தாமும் அதைச் செய்ய முடியும் என்பதே, இந்த வேளையில் இயேசுவின் முதல் தற்காப்பு வாதமாக இருந்தது (வ. 17).[11] அவர் தாமும் தமது தந்தையும் கூட்டாளிகளாக இருக்கும் செயல்களுக்கான உதாரணங்களைக் கொடுத்தார் (வ. 19-30). இயேசு தம்மைத் தேவனுடன் வரிசைப்படுத்தியது யூதர்களை மூர்க்கம் அடையச் செய்தது: அவர் "தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார்" (வ. 18)! பின்பு கிறிஸ்து தாம் உரிமைகோரினபடியே இருப்பதை நிரூபிப்பதற்குச் சாட்சியங்களின் வரிசைத் தொடர் ஒன்றை ஏற்படுத்தினார்: யோவான் ஸ்நானன், தாம் செய்த அற்புதங்கள், வேதவசனங்கள், மற்றும் விசேஷமாகத் தேவன் தாமே (வ. 31-47). இந்த வேளையில் இயேசுவின் வார்த்தைகள் அவரது விரோதிகளுக்கு "பரிசுத்த எழுத்தில் ஆழ்ந்தறிவும் அறிவுறுத்துதலும் உள்ளவைகளாயிருந்தன" என்று பர்ட்டன் காஃப்மென் என்பவர் கூறினார்.[12]

இந்த எதிர்ப்புக்குப் பின்பு, வெகுவிரைவிலேயே இயேசு எருசலேமை விட்டுச் சென்றார் என்பது உறுதி. குறைந்தபட்சம், எருசலேமுக்கு இந்தப் பயணம் பற்றி வேறெதுவும் பதிவு செய்யப்படவில்லை.

### ஓய்வுநாளன்று கதிர்கொய்தல் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5)

கிறிஸ்து கலிலேயாவுக்குத் திரும்பிய பின்பு,[13] ஒரு ஓய்வுநாளின் போது அவரும் அவரது சீஷர்களும் தானிய வயலின் ஊடே நடந்து கொண்டிருந்தார்கள், "அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து,[14] தின்னத் தொடங்கினார்கள்" (மத். 12:1). லூக்கா, அந்த சீஷர்கள் "கதிர்களைக் கொய்து கைகளினால் நிமிட்டித் தின்றார்கள்" என்றும்

*கூடுதலாகக் கூறினார் (லூக். 6:1). கதிர்களில் இருந்த தானியங்களில், அவை தின்னப்படுவதற்கு முன் நீக்கப்பட வேண்டிய மேல் உமி மூடியிருந்தது. இயேசுவின் பின்பற்றாளர்கள் அந்தக் கதிர்களில் உள்ள தானியங்களின் உமியை நீக்குவதற்காக அவற்றைத் தங்கள் கைகளில் வைத்துக் கசக்கினார்கள். பின்பு அவர்கள் அந்த உமிகளை ஊதிவிட்டு தானியங்களைத் தங்கள் வாய்களில் இட்டுக்கொள்ள முடியும்.*

*அவர்கள் தானியக் கதிர்களைக் கொய்து, கசக்கி, ஊதி, மற்றும் தானியங்களை மென்றுகொண்டு இருக்கையில், பரிசேயர்களின் குழுவொன்று திடீரென்று தோன்றி, அவர்கள் ஓய்வுநாளை மீறுவதாகக் குற்றம்சாட்டத் தொடங்கினார்கள்.[15] (இந்தக் காட்சி, நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் கொண்டுள்ளது: பகட்டான பரிசேயர்கள் தங்களின் ஆடம்பரமான உடைகளுடன் தானிய வயலுக்குள் புகுந்து, தங்களை ஒளித்துக் கொண்டு, தங்களின் அன்பார்ந்த பாரம்பரியங்களைச் சற்றே மீறியதற்காக இயேசுவின்மீது தாவக் காத்திருந்ததைக் கற்பனை செய்து பாருங்கள்!)*

*அவர்கள் இன்னொரு மனிதரின் தானியங்களைக் களவு செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்படவில்லை. நியாயப்பிரமாணம், பயணிகள் தானியங்களைக் கொய்து உண்பதை அனுமதித்திருந்தது (உபா. 23:25). உழைப்பைப் பற்றிய ஓய்வுநாளின் பிரமாணம் மீறப்பட்டது என்பதே குற்றச்சாட்டாக இருந்தது. பரிசேயரைப் பொறுத்தமட்டில், தானியங்களின் ஒரு சில கதிர்களைக் கொய்தது என்பது அறுவடை செய்தலுக்குச் சமமானதாகவும், கைகளில் கசக்கியது என்பது தானியக்கதிர்களை கதிரடித்ததற்குச் சமமானதாகவும், உமிகளை ஊதியது என்பது தூற்றுவதற்குச் சமமானதாகவும், தானியங்களை உண்ணுதல் என்பது மாவரைத்தலுக்குச் சமமானதாகவும் இருந்தது. (இது அநேகமாக, சீஷர்கள் ஓய்வுநாளில் தடைசெய்யப்பட்டிருந்த செயலான "உணவைச் சமைத்தல்" என்பதையும் செய்தார்கள் என்ற விஷயத்தையும் கூட்டியிருக்கும்.)*

*இந்த வேளையில் இயேசுவின் தற்காப்பானது எருசலேமில் முன் வைக்கப்பட்டதிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. முடிவில், அவர்கள் "குற்றமில்லாதவர்களைக்" (மத். 12:7) குற்றப்படுத்தியதாக அவர் கூறினார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர்கள் "குற்றமற்றவர்களாய்" இருந்ததாக இயேசு வாதாடினார். இதை அவர் ஐந்து அடிப்படைகளில் செய்தார்:*

*(1) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் தாவீது தமது பசியை ஆற்றுவதற்கு ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பரிசுத்த அப்பங்களை உண்டபோது அவர் குற்றவாளியென்று தீர்க்கப்படவில்லை (மத். 12:3, 4; லூக். 6:3, 4; மேலும் 1 சாமு. 21:6; லேவி 24:5-9ஐக் காணவும்).[16]*

*(2) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் ஆசாரியர்கள், ஓய்வுநாளன்று வேலை செய்தபோது அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படாதிருந்தார்கள் (மத். 12:5; மேலும் எண். 28:9, 18, 19ஐக் காணவும்). ஓய்வுநாள் என்பது ஆசாரியர்களுக்கு வாரத்தில் மிகவும் வேலை மும்முரமாய் இருந்த நாளாய் இருந்தது.*

*(3) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் ஓய்வுநாள் என்பது ஒரு சுமையாக இருப்பதையல்ல ஆனால் ஒரு ஆசீர்வாதமாக இருப்பதையே நோக்கங் கொண்டிருந்தது: "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது" (மாற். 2:27). ஓய்வுநாளன்று உயிர்பிழைப்பதற்கான சிறு வேலையைச் சீஷர்களுக்கு மறுத்தல் என்பது அவர்கள் மீது நியாயமற்ற சுமையை வைப்பதாயிருந்தது.*

*(4) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் (பசி உட்பட) துன்பத்தை நீக்குதல் என்பது சடங்குகளை (விசேஷமாக மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சடங்குகளை) நிறைவேற்றுதலைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இயேசு தம்மீது குற்றம் சாட்டியவர்களுக்கு ஓசியா 6:6ன் போதனையை நினைவூட்டினார்: "பலியை அல்ல இரக்கத்தையே[17] விரும்புகிறேன்" (மத். 12:7).*

*(5) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் மேசியாவை மனிதரின் பாரம் பரியங்களுக்கு உட்படுத்தக் கூடாதிருந்தது. இயேசு பரிசேயர்களை முகம் வெளிரச் செய்யும் இரண்டு கூற்றுக்களை ஏற்படுத்தினார்: "தேவாலயத்தி லும்[18] பெரியவர்[19] இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 12:6); "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" (மத். 12:8; மாற். 2:28; லூக். 6:5ஐக் காணவும்). இயேசு தம்மையே குறிப்பிட்டார் என்பது தெளிவு. அவர்களல்ல, அவரே ஓய்வுநாள் பற்றிப் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களின் கட்டமைப்பிற்குள் எதைச் செய்ய முடியும் அல்லது எதைச் செய்ய முடியாது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் உடையவராயிருந்தார்.*

*பரிசேயர்கள் கோபத்தினால் பட்சிக்கப்பட்டவர்களாகத் தங்களுக்குள் முறுமுறுத்துக் கொண்டே அங்கிருந்து புறம்பே சென்றிருக்க வேண்டும்.*

### ***சூம்பின கையுடையவனை ஓய்வுநாளில் குணமாக்குதல் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11)***

*இதற்குச் சற்றுப் பின்பு,[20] "வேறொரு ஓய்வுநாளிலே," இயேசு ஒரு ஜெப ஆலயத்திற்குச் சென்றார், அங்கு அவர் போதிக்க அனுமதிக்கப்பட்டார் (லூக். 6:6). மத்தேயு சுவிசேஷ விவரத்தின்படி, "அவர் அவ்விடம் விட்டுப் போய் அவர்களுடைய ஜெப ஆலயத்திலே பிரவேசித்தார்" (மத். 12:9), இது அவரைத் தானிய வயலில் குற்றம் சுமத்த விரும்பிய பரிசேயர்களைக் குறித்தது.*

*அங்கிருந்த கூட்டத்தில், "... சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான்" (மத். 12:10). (இவர் ஒருவேளை கிறிஸ்துவை அகப்படுத்துவதற்காக அவரது விரோதிகளால் இங்கு கொண்டு வரப்பட்டிருந்தாரோ?) பரிசேயர்கள் சற்று நேரம், "அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்து"[21] காத்திருந்தார்கள் (மாற். 3:2). கடைசியில், அவர்களால் இனியும் காத்திருக்க முடியாமற் போயிற்று, அவர்கள் "ஓய்வு நாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா?" என்று அவரது பிரசங்கத்தை இடைமறித்து வெடித்தார்கள் (மத். 12:10).*

இயேசு பயமடையவில்லை. அவர் சூம்பின கையையுடைய மனிதனை நோக்கி, "எழுந்து நடுவே நில்!" என்று கூறினார் (மாற். 3:3). கூட்டத்திற்கு முன்பாக அம்மனிதன் நிற்க, இயேசு தம்மைக் கேள்வி கேட்டவர்களை நோக்கி, "ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ,[22] அழிப்பதோ, எது நியாயம்?" என்று கேட்டார் (லூக். 6:9). அவர் எல்லாரும் எடுத்துரைக்கக் கூடிய ஒரு எளிய விவரிப்பைப் பயன்படுத்தினார்:

> உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிட மாட்டானோ?[23] ஆட்டைப் பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மை செய்வது நியாயந்தான் என்று சொன்னார் (மத். 12:11, 12).

இயேசு தமது விரோதிகளின் பரிவிரக்கக் குறைவினால் மனமுடைந்த வராகி (மாற். 3:5), அந்த மனிதனிடத்தில், "உன் கையை நீட்டு!" (மத். 12:13அ) என்றார். "அவன் நீட்டினான்; அது மறுகையைப்போல் சொஸ்த மாயிற்று" (வ. 13ஆ). இது எல்லாரும் காணக்கூடிய அற்புதமாய் இருந்தது.

அவரது விரோதிகள் (மீண்டும்) வாயடைக்கப்பட்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள், "வெளியேபோய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்" (மத். 12:14). மாற்குவின் சுவிசேஷ விவரமானது ஏறக்குறைய நம்ப இயலாத பின்வரும் விவரத்தைக் கூடுதலாகக் கூறுகிறது: "உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய் அவரைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடேகூட ஆலோசனைபண்ணினார்கள்" (மாற். 3:6). பரிசேயர் ஏரோதியர்களை இழிவாகக் கருதினார்கள், ஆனால் கிறிஸ்துவை வாயடைப்பதற்கு அவர்களின் அரசியல்ரீதியான செல்வாக்கு அவசியம் என்று பரிசேயர்கள் நம்பினார்கள் என்பது தெளிவு. அவர்கள் ஏரோதியர்களை வெறுத்தார்கள், ஆனால் அவர்கள் இயேசுவை இன்னும் அதிகமாக வெறுத்தார்கள்.

ஓய்வுநாள் விவாதம் பற்றிய இந்தப்பகுதியை விட்டுச் செல்லுவதற்கு முன்பு, இயேசு ஓய்வுநாள் பற்றிய தேவனுடைய பிரமாணங்களை ஒருக்காலும் மீறியதில்லை என்றும் அவ்வாறு செய்யும்படி எவரொருவரை யும் ஊக்கப்படுத்தியது இல்லை என்பதையும் நான் வலியுறுத்த அனு மதியுங்கள். ஆயினும் அவ்வப்போது அவர், ஆண்டுகளினூடே வேகமாய்ப் பெருகிய மனிதப் பாரம்பரியங்களை மீறினார் - இது அவரது விரோதி களைக் கோபப்படுத்திற்று. நமது வாசிப்பில் நாம் இயேசுவின் வெளியரங் கமான ஊழியத்தின் பாதி வழியைக் கூட இன்னும் அடையவில்லை, ஆயினும் ஏற்கனவே அவரது விரோதிகள் அவரையும் அவரது செல்வாக்கை யும் அழிப்பதற்கு இரவும் பகலும் வேலை செய்தார்கள்! J. W. மெக்கார்வி அவர்கள், "இந்த இடத்திலிருந்து இயேசுவின் வாழ்வுக்கு எதிரான இரத்தச் சிகப்பான சூழ்ச்சியானது சுவிசேஷம் முழுவதிலும் ஓடுகிறது" என்று எழுதினார்.[24]

# *வெறுப்புணர்வுக்குச் செயல்களினால் பதில் அளித்தல்*

*ஒய்வுநாள் பற்றிய மூன்று எதிர்ப்புகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் இயேசு தனிச்சிறப்பான இரண்டு அடிவைப்புக்களை மேற்கொண்டார்.*

### *தமது விரோதிகளிடமிருந்து பிரிதல்*
### *(மத். 12:13-21; மாற். 3:7-12)*

*முதலாவது, மேலும் மோதலைத் தவிர்ப்பதற்காக கிறிஸ்து தமது விரோதிகளிடமிருந்து தம்மைப் பிரித்துக் கொண்டார். மத்தேயுவின் சுவிசேஷ விவரமானது, பரிசேயர், "வெளியே போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்" என்று பதிவு செய்த பின்பு (மத். 12:14), அது "இயேசு அதை அறிந்து, அவ்விடம் விட்டு விலகிப்போனார்" என்று கூறுகிறது (மத். 12:15அ). இது இறுக்கத் தைக் கலைக்கும் முயற்சியில் கிறிஸ்துவின் முதல் விலகிச் செல்லுதலாக இருந்தது. இது போன்று இன்னும் மற்ற விலகிச் செல்லுதல்களும் வரும்.*

*"இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம்விட்டு, கடலோரத் துக்குப் போனார்" (மாற். 3:7). அங்கும் மக்கள் அவரைக் கண்டறிந்தார்கள், "கலிலேயாவிலும், யூதேயாவிலும், எருசலேமிலும், இதுமேயாவிலும்,[25] யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள். அல்லாமலும் தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளிலு மிருந்து திரளான ஜனங்கள் ... அவரிடத்தில் வந்தார்கள் ..."[26] (மாற். 3:8). இயேசு மக்களுக்குப் போதித்து,[27] அவர்களின் நோயாளிகளைக் குணமாக்கி, அசுத்த ஆவிகளைத் துரத்தினார்; ஆனால் தாம் செய்திருந்ததை எவருக்கும் கூற வேண்டாம் என்று ஒவ்வொருவரையும் அவர் வற்புறுத்தினார் (மத். 12:15, 16; மாற். 3:11, 12ஐக் காணவும்). கூடுதலான விளம்பரம் என்பது அவரை வெறுப்பவர்களை இன்னும் உக்கிரமடையச் செய்யும்.*

*நடந்த ஒவ்வொன்றும் ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தது என்று மத்தேயு வலியுறுத்தினார் (மத். 12:17-21; ஏசா. 42:1-4ஐக் காணவும்): நகரத்திலிருந்து இயேசு விலகிச் சென்றதும் அமைதி காக்கும்படி அறிவுறுத்தியதும், "வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவு மாட்டார், அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை" என்ற வார்த்தைகளை நிறைவேற்றிற்று (மத். 12:19). நோயாளிகளையும் உருக்குலைந்தவர்களையும் அவர் குணமாக்கியது, "நெரிந்த நாணல்" போல் இருப்பவர்கள் மீதும் மங்கியெரிகிற திரியைப் போல் இருப்பவர்கள் மீதும் அவரது அக்கறையைக் காண்பித்தது (வ. 20). பலஸ்தீனத்தின் வெளிப்புறத் தில் (இதுமேயா, தீரு மற்றும் சீதோன் ஆகிய இடங்களில்) இருந்து மக்கள் வந்தார்கள் என்பது புறஜாதியாருக்கு இயேசுவின் ஊழியத்தினுடைய தனிச்சிறப்பை வலியுறுத்திற்று (மத். 12:18, 21).*

*இயேசு தொடர்ந்து போதித்தும் குணமாக்கியும் வந்தார். ஆனால் யூதத்துவத் தலைவர்களிடத்தில் உடனடியான எதிர்ச் செயலைத் தவிர்ப்பதற்காக அவர் தமது வழியிலிருந்து விலகியும் சென்றார்.*

**அவரது பின்பற்றாளர்களில் இருந்து தேர்வு செய்தல்**
**(மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16)**

இயேசு தாம் இவ்வுலகத்தை விட்டுச் சென்ற பின்பு தமது ஊழியத்தைச் செய்வதற்காகப் பன்னிரு மனிதர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், வளர்ந்து கொண்டிருந்த வெறுப்புணர்வுக்கு மேலும் பதில் அளித்தார்.[28] அவரது நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன என்பது தெளிவு, மற்றும் அவரது மரணத்திற்கு முன்பே, விசேஷித்த மனிதர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாயிருந்தது. "அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்" (மாற். 3:14) என்று இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதின் நோக்கத்தை மாற்கு விளக்கப்படுத்தினார். இவர்கள் அவருடன் பயணம் செய்து, அவரது போதனை மற்றும் உதாரணம் ஆகியவற்றில் இருந்து கற்றுக் கொள்வார்கள். அவர்கள் அனுபவத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கு அவர் விசேஷித்த ஊழியத்தினிமித்தமாகவும் அவர்களை அனுப்புவார். இவ்விதமாக அவர்கள் போதிக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்படுவார்கள். இந்த வேளையிலிருந்து, கிறிஸ்துவின் முயற்சியில் பெரும்பான்மையான பகுதி, அப்போஸ்தலர்களைத் தயார் செய்தலுக்குத் திருப்பப்பட்டது.

பன்னிருவரைத் தேர்ந்துகொள்ளுதல் தேவனுடைய ஆலோசனையின்றி செய்யப்படவில்லை. இயேசு தமது முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு முன்பு, அவர் "ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்[29]மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்" (லூக். 6:12). ஜெபம் என்பது எல்லா முடிவுகளுக்கும் முன்னதாக இருக்க வேண்டும்.

இயேசு தம்மைச் சுற்றிலும் முழு நேர சீஷர்கள் பலரைக் கொண்டிருந்தார்.[30] இரவு ஜெபத்திற்குப் பின்பு, அவர்களை அவர் கூடி வரச் செய்து, "அவர்களில் பன்னிரெண்டு பேரைத் தெரிந்துகொண்டு" (லூக். 6:13அ), தெரிந்துகொள்ளப்பட்ட அவர்களை அவர் "அப்போஸ்தலர்கள்" என்று அழைத்தார் (வ. 13ஆ; மத். 10:2ஐக் காணவும்). "அப்போஸ்தலர்" என்ற வார்த்தையானது "அனுப்பப்பட்டவர்" என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தையை ஒரு விசேஷித்த ஊழியத்தினிமித்தம் அனுப்பப்பட்ட எவரொருவரையும் குறிப்பதற்குப் பொதுவான வழிமுறையில் பயன்படுத்தப்பட முடிந்தது,[31] ஆனால் இது இயேசுவாலேயே கட்டளையிடப்பட்ட பன்னிருவரைப் பொறுத்தமட்டில் கூடுதல் முக்கியத்துவம் கொண்டுள்ளது.

பன்னிருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற உண்மையானது அநேகமாகத் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கலாம்: "பன்னிரெண்டு" என்ற எண்ணிக்கையானது யூதர்களுக்கு விசேஷித்த அர்த்தம் உடையதாக இருந்தது; எபிரெயச் சிந்தனையில் இது மதரீதியான முழுமைத் தன்மையைக் கருத்தாகத் தெரிவித்தது. பன்னிரெண்டு கோத்திரப் பிதாக்களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களும் இருந்தன; இப்போது இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார்.[32]

மாற்குவின் அப்போஸ்தலர்களின் பட்டியல் இவ்விதமாக உள்ளது:

*... சீமோன், இவனுக்குப் பேதுரு என்கிற பெயரிட்டார். செபதேயு வின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் "இடிமுழக்க மக்களென்று"[33]அர்த்தங் கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார். அந்திரேயா, பிலிப்பு, பற்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்து[34] என்பவர்களே (மாற். 3:16-19).[35]*

*லூக்காவின் பட்டியல் இதோ:*

*அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனான யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே (லூக். 6:14-16).*

*பிந்திய ஒருவேளை வரையிலும் (இயேசு பன்னிருவரையும் ஒரு பயிற்சி ஊழியத்திற்கு அனுப்பிய வரையிலும்) மத்தேயு தமது பட்டியலைத் தரவில்லை. ஆயினும், அந்தப் பட்டியலானது ஒப்பீட்டு நோக்கத்திற்காக உள்ளடக்கப்பட வேண்டும்:*

*அந்தப் பன்னிரெண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே (மத். 10:2-4).*

*நான்காவதும் கடைசியானதுமான ஒரு பட்டியல் அப். 1ல், யூதாஸிற்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் காணப் படுகிறது: "... பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் ..." (அப். 1:13).*

*இந்த நான்கு பட்டியல்களையும் ஒப்பிட்டுக் காண்பதில் மதிப்பு உள்ளது. ("வேத வசனங்களில் பட்டியலிடப்பட்டுள்ள அப்போஸ்தலர்கள்" என்ற அட்டவணையில் காணவும்). எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பட்டியலிலும் பேதுருவின் பெயர் முதலில் இருப்பதைக் கவனியுங்கள். இது, பேதுரு "முதல் போப்" என்று நிரூபிப்பதில்லை, ஆனால் அவரது எழுச்சித் திறனும் கணிசமான திறமையும் அவரை அப்போஸ்தலர்களின் மத்தியில் ஒரு இயல்பான நடத்துனராக ஏற்படுத்தியிருந்தன. முதல் மூன்று பட்டியல்களிலும் யூதாஸின் பெயர் கடைசியில் வருவதை நாம் காண்கின்*

றோம். புகழற்ற அவர் தம் செயலானது அவரை அந்த இழிவான இடத்திற் குத் தகுதிப்படுத்திற்று.

மற்ற விவரங்களும் சுட்டிக் காண்பிக்கப்பட முடியும். எடுத்துக் காட்டாக, உடன்பிறந்த சகோதரர்களின் தொகுதிகள் பல இருந்தன (மற்றும் ததேயு "யாக்கோபின் மகனான யூதா" என்றும் அறியப்பட்டார்). ஒவ்வொரு பட்டியலுமே நான்கு பேர் கொண்ட மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படக் கூடும் என்பதும் - ஒவ்வொரு பட்டியலின் இந்த ஒவ்வொரு குழுவிலும் ஒரே தனிநபரே முதலில் குறிப்பிடப்படுகிறார் என்பதும் - மிகவும் தனிச்சிறப்பான கருத்தாக உள்ளது: முதல் குழுவில் பேதுரு முன்னிலை வகிக்கிறார், இரண்டாவது குழுவில் பிலிப்பு முன்னிலை வகிக்கிறார், மூன்றாவது குழுவில் அல்பேயுவின் மகனான யாக்கோபு முன்னிலை வகிக்கிறார். ஒவ்வொரு குழுவினுள்ளாகவும் பெயர்களின் வரிசை அமைவுகளில் கணிசமான அளவுக்கு மாறுபாடு இருப்பதால், இந்த மூன்று பெயர்களும் ஒரே சீராக வைக்கப்பட்டிருத்தல் என்பது வேண்டு மென்றே செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது. பேதுரு, பிலிப்பு, அல்பேயுவின் குமாரனான யாக்கோபு ஆகியோர் பயிற்சி ஊழியம் மற்றும் பிற விசேஷித்த திட்டங்கள் ஆகியவற்றிற்கு "குழுத் தலைவர்களாக" இருந்திருக்கலாம்.

இந்தப் பட்டியல்களை மீண்டும் கண்ணோக்குங்கள். முந்திய பாடங்களில் நாம் இவர்களில் பல மனிதர்களைச் சந்தித்து இருக்கின்றோம்: பேதுரு மற்றும் அந்திரேயா (யோவா. 1:40, 41; மத். 4:18), யாக்கோபு மற்றும் யோவான் (மத். 4:21[36]), பிலிப்பு மற்றும் ஒருவேளை பற்தொலொமேயு[37] (யோவா. 1:43, 45) மற்றும் மத்தேயு (மத். 9:9). மற்றவர்களைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் சிறிதளவே கூறப்பட்டுள்ளது, ஆனால் இவர்களைப் பற்றி மூன்று திறவுகோல் விவரங்களை நாம் அறிகின்றோம். முதலாவது, இவர்கள் எல்லாருமே, பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் மற்றும் மத்தேயு ஆகியோர் அழைக்கப்பட்டது போன்றே அழைக்கப்பட்டிருந் தார்கள். இரண்டாவது, பேதுரு மற்றும் பிறரைப் போலவே இவர்கள் எல்லாரும் ஆவிக்குரிய வகையில் தங்களுடைய முந்திய சாதனைகளினி மித்தமாகத் தேர்ந்து கொள்ளப்படவில்லை, ஆனால் தங்களின் சாத்தியக் கூறான நிலையினிமித்தமாகவே தேர்ந்து கொள்ளப்பட்டார்கள். (இயேசு அவர்களின் பலவீனங்கள் மற்றும் தவறுகள் ஆகியவற்றைக் கண்ணோக்கா மல், அவர்கள் எதிர்காலத்தில் எவ்வாறாக முடியும் என்பதையே கண்ணோக் கினார். இதே பிரகாரமாகவே தேவன் நம்மையும் கண்ணோக்குகின்றார், தேவனுக்கு நன்றி!) மூன்றாவது, அவர்கள் எல்லாரும் போதிக்கவும் அசுத்த ஆவிகளைத் துரத்தவும் இயேசுவால் வல்லமை அளிக்கப்படுவார்கள் (மத். 10:1ஐக் காணவும்). இந்த விவரங்கள் ஒவ்வொன்றிற்கும், "யூதாஸ் காரியோத்து உட்பட" என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ள என்னை அனுமதியுங்கள்.

## *முடிவுரை*

*பன்னிருவரைத் தேர்ந்துகொண்ட செயலானது மலைப்பிரசங்கத்திற்கு ஒரு தூண்டுதல் வகையை அளித்தது - இதைப் பற்றி நாம் அடுத்த இரண்டு பாடங்களில் படிப்போம். ஆயினும் நாம் இந்தப் பாடத்தை முடிப்பதற்கு முன்பு, கடைசியாகச் சில உற்றுநோக்கல்களை ஏற்படுத்துவோம்.*

*இயேசுவும்கூட விமர்சிக்கப்பட்டார் - ஆனால் இது அவரது ஊழியத்தில் அவரைச் சேதப்படுத்தவில்லை. அவர் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான யாவற்றையும் தொடர்ந்து செய்தார்.*

*நீங்கள் சரியானவற்றைச் செய்தால், நீங்களும்கூட விமர்சிக்கப் படுவீர்கள் (இதைப்பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் [மத். 5:11] காண்போம்). விமர்சனங்கள் வரும்போது, நீங்கள் தேவனுடைய சித்தத்தின் மத்தியில் உறுதியாக இருப்பதை ஆய்வு செய்து நிச்சயப்படுத்திக் கொள்ளுங் கள் (1 பேது. 4:14-16ஐக் காணவும்). நீங்கள் அவ்வாறிருந்தால், நீங்கள் [ஊழியத்தை விட்டு] வெளியேறிவிடும் அளவுக்கு விமர்சனம் உங்களை ஊக்கமிழக்கச் செய்வதற்கு அனுமதித்து விடாதீர்கள். மாறாக, விசுவாசத்து டன் நிலைத்திருக்க தேவையான யாவற்றையும் செய்யுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]*நீங்கள் இந்தப் பாடத்திற்கு முகவுரையாக ஒரு இயற்கையான புயல் உருவாகுதலின் வார்த்தைச் சித்தரிப்பைப் பயன்படுத்த விரும்பலாம்.* [2]*இந்த இடத்திலிருந்து, மாபெரும் கலிலேய ஊழியத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் வரிசை முறைமை பற்றி பல்வேறு ஒப்பீடுகளில் பலபல வேறுபாடுகள் உள்ளன. நான் அவ்வப்போது பிற சாத்தியக்கூறுகளைக் குறிப்பிட்டாலும் சாத்தியமான எல்லா வேறுபாடுகளையும் பட்டியலிடுவதற்கு நான் முயற்சி செய்வதில்லை. நிகழ்ச்சிகளின் மிகச் சரியான வரிசை முறைமை மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை; அவ்வாறிருந்ததென்றால், பரிசுத்த ஆவியானவர் வரிசை முறைமையில் மிகவும் தெளிவாக இருந்திருப்பார்.* [3]*பொருத்தமற்ற பிற விவரங்களுடன் பின்வருபவைகளும் இருந்தன: ஆணியடிக்கப்பட்ட செருப்பு ஒன்றை ஓய்வுநாளில் அணிந்து செல்லக் கூடாது, ஏனெனில் அது ஒரு சுமையாகக் கருதப்பட்டது; ஒரு மனிதர் ஒரு முழுரொட்டியைத் தூக்கிச் செல்லலாம், ஆனால் இரு மனிதர்கள் சேர்ந்து அதே ரொட்டியைத் தூக்கிச் செல்லக்கூடாது.* [4]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 142. [5]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 305. [6]Adam Fahling, *The Life of Christ* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1936), 195. [7]*பரிசேயர் கடினமான முயற்சி செய்த போதிலும், அவர்கள் இயேசுவின்மீது ஓய்வுநாளை மீறிய குற்றம் சாட்டப் போதுமான ஆதாரத்தை ஒருபோதும் கண்டறிய முடியாதிருந்தது. அவரது பூமிக்குரிய ஊழியத்தின் முடிவில், அவர் மீதான விசாரணைகள் பலவற்றில் ஓய்வுநாளை மீறிய குற்றச்சாட்டு ஒருபோதும் கொண்டு வரப்படவில்லை.* [8]*''யூதர்களின் பண்டிகைகள்'' என்ற அட்டவணையை "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும்.* [9]*பல்வேறு சாத்தியக்கூறுகளின் கலந்துரையாடல் ஒன்று* A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the*

*Life of Christ* (New York: Harper & Row, 1950), 267-70 *என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.* [10]*இப்படிப்பட்ட ஆறு உரைகள் யோவான் சுவிசேஷத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் ஒன்றைத் தவிர மற்ற எல்லாத் தற்காப்பு வாதங்களும் எருசலேமில் நடைபெற்றன.*

[11]*இயேசுவின் தற்காப்பு வாதம் பற்றிய விவரமான ஆய்வை "தேவனுக்குச் சமமானவர்" என்ற பிரசங்கத்தில் காணவும்.* [12]James Burton Coffman, *Commentary on John* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1974), 158. [13]*பின்வரும் காரண வரிசைகளினால் நாம் இயேசு கலிலேயாவுக்குத் திரும்பிச் சென்றார் என்று யூகித்து உணருகின்றோம்: அடுத்த வரலாறு ஒரு ஜெப ஆலயத்தில் நடைபெறுகிறது. மத்தேயு சுவிசேஷத்தின்படி, இது தானிய வயலில் இயேசுவுக்கு அறைகூவல் விடுத்திருந்த பரிசேயர்கள் வந்திருந்த ஜெப ஆலயமாக இருந்தது (மத். 12:2, 9). மாற்கு சுவிசேஷத்தின்படி, இந்த ஜெப ஆலயமானது உறுதியாகவே கடலுக்கு (அதாவது கலிலேயாக் கடலுக்கு) நெருங்கியிருந்தது (மாற். 3:5-7).* [14]*இந்த நிகழ்ச்சியானது பஸ்கா முடிந்தவுடன் நடைபெற்றிருந்தால், அந்தத் தானியம் அநேகமாக பார்லி என்பதாகவே இருந்திருக்கும்.* [15]*லூக்கா சுவிசேஷத்தின்படி, பரிசேயர்கள் சீஷர்களை எதிர்த்து நின்றார்கள். மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷத்தின்படி பரிசேயர்கள் இயேசுவுக்கு அறைகூவல் விடுத்தார்கள். அவர்கள் அநேகமாக இவ்விரண்டையும் செய்திருப்பார்கள்.* [16]*இந்த உதாரணங்களில் எதுவும், நாம் தேவனுடைய பிரமாணத்தை தண்டனையில் இருந்து விதிவிலக்குடன் மீறமுடியும் என்பதற்கான நிரூபணமாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. யூதத் தலைவர்கள் தாவீதைக் கண்டனம் பண்ணவில்லை என்றால், அவர்கள் ஏன் தம்மையும் தமது சீஷர்களையும் கண்டனம் பண்ணினார்கள் என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது.* [17]NASB*யில் ஓசியா 6:6ல் பரிவிரக்கம் என்பதற்குப் பதிலாக "பற்றுறுதி" என்றுள்ளது, ஆனால்* KJV*யில் "இரக்கம்" என்றுள்ளது.* [18]*இது யூதர்களுக்கு வரம்புமீறிய கூற்றாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் அவர்களைப் பொறுத்தமட்டில், தேவன் ஒருவர் மட்டுமே தாம் வாசம் பண்ணிய தேவாலயத்தை விடப் பெரியவராக இருந்தார்!* [19]"Something" *என்பது கிரேக்க மொழிப் பிரதியின் சரியான மொழிபெயர்ப்பாக உள்ளது, ஆனால்* KJV *மொழிபெயர்ப்பு இந்தக் கூற்றில் மறைவாக உணர்த்தப் படுகிற வலிவான கருத்தைத் தெரிவிக்கிறது: "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்த இடத்தில் தேவாலயத்தைக் காட்டிலும் பெரியவர் ஒருவர் இருக்கின்றார்."* [20]*இது மத்தேயு சுவிசேஷ விவரத்தில் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது (மத். 12:9).*

[21]*அவர்கள் யூதச் சங்கம் ஒன்றின் முன்பாக அவரைக் குற்றம் சாட்ட விரும்பினார்கள், அது அவர்மீது மரணதண்டனை விதிக்க ஏதுவாயிருக்கும்.* [22]*அவர்களின் சொந்த முறைமைகள் ஏழாம் நாளில் மருத்துவர்களும் மற்றவர்களும் பிறரின் உயிரைக் காக்க அனுமதித்தது.* (Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah,* New Updated Version [Peabody, Mass.: Hendrickson Publishers, 1993], 515). [23]*இன்னொரு சந்தர்ப்பத்தில் இயேசு இதே விவரிப்பைப் பயன்படுத்தினார், அதில் விலங்கை மட்டும் மாடாக மாற்றினார் (லூக். 14:5). சிலர் "குழியில் விழுந்த மாடு" என்ற ஒப்புவமையை சபை கூடிவருதலை விட்டுவிடுவதற்கு அல்லது தேவனுடைய கட்டளைகளைத் தொடர்ந்து புறக்கணிப்பதற்குச் சாக்குப்போக்காகப் பயன்படுத்தினார்கள். பழம்பெரும் பிரசங்கியார் ஒருவர் ஒரு மனிதரிடத்தில், "உங்கள் மாடு தொடர்ந்து குழியில் விழுந்து கொண்டிருந்தது என்றால், ஒன்று நீங்கள் அந்த மாட்டை விற்று விட வேண்டும் அல்லது அந்தக் குழியை* [*மண்போட்டு*] *நிரப்பிவிட வேண்டும்!" என்று கூறினார்.* [24]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard

Publishing Co., 1914), 198. [25]"இதுமேயா" என்பது "ஏதோமியர்களின் நாடு" என்பதைக் குறிக்கிறது ("இதுமேயா" என்பது "ஏதோம்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது). மகா ஏரோது ஒரு இதுமேயனாக/ஏதோமியனாக இருந்தான். [26]இந்தப் பல்வேறு இடங்களின் அமைவை இந்தப் புத்தகத்தில் "கூறிமுடிக்கப் பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற குறிப்பில் உள்ள வரைபடத்தில் காணவும். [27]மீண்டும் ஒருமுறை மக்கள் கூட்டம் இயேசுவை நெருங்கிற்று, மற்றும் முன்பு ஒருமுறை செய்ததுபோல், அவர் பிரசங்க மேடையாகப் பயன்படுத்த வேண்டு மென்றால் அதற்குத் தயாராக ஒரு படகு அங்கு இருந்தது. இந்த வேளையில் அந்தப் படகு பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பதற்கு நாம் குறிப்பு எதையும் காண்பதில்லை. [28]இது சீஷத்துவத்தின் மூன்றாவது படிநிலையாக இருந்தது - இது ஒரு சிலரைத் தேர்ந்தெடுப்பதற்கான விசேஷித்த படிநிலையாகும். [29]இது எந்த மலை என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. லூக்கா 6ல் உள்ள பிரசங்கம் மத்தேயு 5-7ல் உள்ள அதே மலைப்பிரசங்கமாக இருந்தது என்றால், இது அநேகமாக மலைப்பிரசங்கம் செய்யப்பட்ட அதே மலையாகவே இருக்கும் (மத். 5:1; லூக். 6:12, 17). கப்பர்நகூமுக்கு அருகில் ஒரு மலை உள்ளது, அது இப்போது பாக்கியங்களின் மலை என்று அழைக்கப்படுகிறது, அங்குதான் இவை நடை பெற்றிருக்கலாம். ஹாட்டின் ஹார்ன்ஸ் என்று அறியப்படுகிற மலையானது இன்னொரு சாத்தியக் கூறாக உள்ளது. [30]இது சீஷத்துவத்திற்கான இயேசுவின் அழைப்பில் இரண்டாம் படிநிலையாக இருந்தது.

[31]இயேசுவே ஒரு அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டார், ஏனெனில் அவர் தேவனால் அனுப்பப்பட்டவராய் இருந்தார் (எபி. 3:1). "அப்போஸ்தலர்" என்ற சொற்றொடரின் பொதுவான கருத்தமைவிலான பயன்பாட்டின் பிற உதாரணங் களுக்கு அப். 14:14; ரோமர் 16:7; 2 கொரி. 8:23; பிலி. 2:25 ஆகியவற்றைக் காணவும். (இந்தக் கிரேக்க வார்த்தை சில இடங்களில் ''செய்தியாளர்''/''தூதர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). [32]பன்னிரு கோத்திரங்கள் மற்றும் பன்னிரு அப்போஸ்தலர்களுக்கிடையில் மறைமுகமாய் உணர்த்தப்படும் தொடர்பை மத்தேயு 19:28 மற்றும் லூக்கா 22:30 ஆகிய வசனங்களைக் காணவும். [33]இந்தப் புனைப் பெயரின் பயன்பாடானது அநேகமாக நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் கொண்டிருக்கும். அவர்களின் புயல்போன்ற நிலைப்பாட்டினி மித்தம் இயேசு இவ்வாறு அவர்களை அழைத்திருப்பார் (லூக். 9:51-56; மாற். 9:38 ஆகியவற்றைக் காணவும்). இயேசுவின் செல்வாக்கின் மூலமாக இந்த நிலைப் பாடானது சேணமிடப்பட்டு மாற்றப்பட்டது. [34]''ஸ்கோரியோத்'' என்பது அநேகமாக "கீரியோத்திலிருந்து" என்ற அர்த்தப் படுகிறது, இது யூதாஸ் அந்த நகரில் இருந்து வந்ததைக் குறித்தது. (யோசு. 15:25ஐ வாசிக்கவும்.) கீரியோத் யூதேயாவில் இருந்தது. யூதாஸைத் தவிர எல்லா அப்போஸ்தலர்களும் கலிலேயாவில் இருந்து வந்தவர்கள் என்பது தெளிவு. [35]இந்த மனிதர்களில் சிலருக்கு மற்ற பெயர்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, தோமா "திதிமு" ("இரட்டையர்") என்றும் அழைக்கப்பட்டார் (யோவா. 11:16). நமது பாடத்தில் நாம் இவர்களை அடையும்போது இவர்களைக் கண்ணோக்குவோம். [36]யாக்கோபுடன் அநேகமாக யோவான் இயேசுவின் முதல் சீஷர்களில் இருந்திருக்கலாம். [37]பற்தொலொமேயு என்பது யோவான் 1:45-51ல் குறிப்பிடப்பட்ட நாத்தான்வேலின் இன்னொரு பெயர் என்று பலர் நினைக்கின்றார்கள்.

# *21*

# "தேவனுக்குச் சமமானவர்"

## யோவான் 5:16-47,

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*இயேசு தமது தொடக்க காலக் கலிலேய ஊழியத்தில் எருசலேமுக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டு இருந்தார். அங்கிருக்கையில் அவர் பெதஸ்தா குளத்தினருகில் ஒரு மனிதரைக் குணமாக்கினார் (யோவா. 5:2, 5, 8, 9அ). இந்த நிகழ்ச்சியைக் கூறியதில் யோவான் பின்வரும் செறிவுமிக்க விளக்கவுரையைக் கூட்டினார்: "அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது" (வ. 9ஆ).[1]*

### *தாக்குவதற்கான குற்றச்சாட்டுகள் (வ. 16-18)*

*குணமாக்குதலின் விளைவானது யூத அதிகாரிகளுடன் முகமுகமாக எதிர்த்து நிற்குதலை விளைவித்தது. இயேசு ஓய்வுநாளை மீறியதாக மார்க்கத் தலைவர்கள் குற்றம் சாட்டினார்கள்.[2]*

*"என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன்" என்பதே நமது கர்த்தரின் பதிலாக இருந்தது (வ. 17). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "தேவன் ஓய்வுநாளில் ஓய்ந்திருந் தார் என்பது உண்மையாகவே உள்ளது,[3] ஆனால் இது தேவன் நன்மை செய்வதை நிறுத்திவிட்டார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. ஓய்வு நாளில்கூட அவர் உலகத்தைப் பரமாரிக்கின்றார்.[4] ஓய்வுநாளில்கூட அவர் சூரிய வெளிச்சத்தையும் மழையையும் அனுப்புகின்றார்"[5] என்று அவர் கூறினார். தேவன் ஏழாம் நாளில்கூட மக்களுக்கு உதவுகின்றார் என்பதால், அந்த நாளில் மக்களுக்கு உதவுதல் என்பது அவரை(அதாவது இயேசுவை)ப் பொறுத்தமட்டில் சரியானதாகவே இருந்தது என்பது இயேசுவின் வாதமாயிருந்தது.*

*கிறிஸ்துவின் வார்த்தைகள் யூதத்துவத் தலைவர்களை மூர்க்கமடையச் செய்தன, ஏனெனில் அவரது வாதத்தில் அவர்கள் மறைமுகக் கருத்துக் களைக் கண்டார்கள். முதலிடத்தில், அவர் "என் பிதா" என்று கூறினார். மனிதர்கள் சாதாரணமாக "எங்கள் பிதா" (மத். 6:9; ரோமர் 1:7; 1 கொரி. 1:3) என்று கூறினார்கள், ஆனால் இயேசு, "என் பிதா" என்று கூறினார் (மத். 7:21; 10:32; 11:27) - இது ஒரு விசேஷித்த உறவை மறைமுகமாக உணர்த் திற்று. இரண்டாவது இடத்தில், இயேசு தேவனையும் தம்மையும் ஒரே விதமான செயல்பாட்டில் ஈடுபட்டிருந்ததாகச் சித்தரித்தார்: "என் பிதா ...*

கிரியை செய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன்.'' இதன் விளைவாக, "... தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்" (வ. 17, 18).

விடுதலை இறையியல் அறிஞர்கள் சுவிசேஷ விவரங்களை வாசிக்க முடிந்து[ம்], இயேசு ஒருக்காலும் தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொள்ளவில்லை, ஒருக்காலும் தாம் தெய்வீகமானவர் என்று உரிமை கோரியதில்லை என்று கூறுவதைக் கேட்டு நான் திகைப்படைகின்றேன். கிறிஸ்துவின் நாட்களில் இருந்த மார்க்கத் தலைவர்கள் அவரது வார்த்தைகளின் தனிச்சிறப்பைப் புரிந்துகொள்ளுவதில் எவ்வித சிரமமும் அடையவில்லை.

இயேசு தம்மை "தேவனுக்குச் சமமானவர்'' என்று மறைமுகமாய் உணர்த்துவதை அர்த்தப்படுத்தவில்லை என்றால், அவருக்கு, "ஓ, இல்லை, நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டீர்கள்! நான் அதை கூறவில்லை" என்று கூறுவது சுலபமாக இருந்திருக்கும். அவர்களின் குற்றச்சாட்டை அவர் மறுக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் குற்றச்சாட்டை, தமது பிதாவுடன் தமக்குள்ள உறவுபற்றி நிபுணத்துவம் நிறைந்த உரையொன்றைக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தினார். இது யோவான் புத்தகத்தில் உள்ள மாபெரும் பிரசங்கங்களில் ஒன்றாக உள்ளது. அதனை வசனத்திற்கு பின் வசனமாக விளக்கியுரைக்க இங்கு இடம் நம்மை அனுமதிக்காது, ஆனால் நாம் அதன் திறவுகோல் சிந்தனைகளை முக்கியப்படுத்தி எடுத்துரைப்போம்.

## நம்புதற்கு அரிய உரிமைகோருதல்கள்<br>(வ. 19-30)

### இயேசுவின் விவாதப்படிநிலை

இயேசுவும் அவரது பிதாவும் தாங்கள் செய்தவற்றில் ஒருமித்து இருந்தார்கள் என்பதே அவரது விவாதத்தின் அடிப்படைப் படிநிலையாக இருந்தது. "தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார்" என்ற சொற்றொடர், கிறிஸ்து தம்மைத் தேவனுக்குப் போட்டியாளர் என்று நினைத்தார் என்பதாக அர்த்தப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும், ஆனால் விஷயம் அதுவல்ல என்று அவர் வலியுறுத்தினார். அவர், ''குமாரன் ... ஒன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்'' (வ. 19) என்று வலியுறுத்தினார். மீண்டும் அவர், ''நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை" என்றும் கூறினார் (வ. 30).

### உதாரணங்கள்

இயேசு, தாமும் பிதாவும் எவ்வாறு ஒன்றித்திருக்கின்றனர் என்பதற்குப் பல உதாரணங்களைக் கொடுத்தார். வசனம் 21 முதல் 30 வரைக்கும், மூன்று ஆய்வுக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் தோன்றி ஒன்றின் மீதொன்று

*கவிந்துள்ளன: ஜீவனைக் கொடுத்தல், மரித்தோரை உயிர்ப்பித்தல், மற்றும் மனிதகுலத்தை நியாயந்தீர்த்தல். ஜீவனைக் கொடுத்தல், மரித்தோரை உயிர்ப்பித்தல் மற்றும் நியாயத்தீர்ப்பை உரைத்தல் ஆகியவை தேவனுடைய (மற்றும் அவருக்கு மட்டுமே உரிய) தனிச்சிறப்புரிமைகள் என்று யூதர்கள் நினைத்தார்கள்[6] - ஆனால் கிறிஸ்து தாமும் தேவனும் இந்த மூன்று பணிகளிலும் உடன் பணியாளர்களாய் இருந்ததாகத் தைரியமாய் உரிமை கோரினார்.*

*(1) ஜீவனைக் கொடுப்பதில் ஒன்றித்திருத்தல். இயேசு முதலில் ஜீவனைக் கொடுத்தல் பற்றிப் பேசினார்: "பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்" (வ. 21). உரையாடலின் இந்த இடத்தில், வார்த்தைகள் அநேகமாக இயேசு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுத்தல் பற்றிக் குறிப்பிட்டிருக்க வேண்டும். மேலும் இயேசு, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு[7] நித்தியஜீவன் உண்டு,[8] அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல்,[9] மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூறினார் (வ. 24).*

*(2) மரித்தோரை உயிர்ப்பித்தலில் ஒன்றித்திருத்தல். வசனம் 21ன் உரிமைகோருதல் சரீரப்பிரகாரமான ஜீவனைக் கொடுத்தலையும் உள்ளடக்கியிருக்க முடியும். இயேசு, யூதர்கள் "ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும்" தாம் நிகழ்த்தப் போவதாக முன்னுரைத்தார் (வ. 20). இது அநேகமாக, கிறிஸ்துவின் சொந்த ஊழியத்தின்போது மரித்தோரை உயிர்ப்பித்தல் பற்றிய ஒரு குறிப்பாக இருக்கலாம்[10] - விசேஷமாக இது லாசருவை உயிர்ப்பித்தலைக் குறித்திருக்கலாம், அது எருசலேமில் அப்படிப்பட்ட கலவரத்திற்குக் காரணமாகும் (யோவா. 11:1-48; 12:1, 9-11).*

*ஆயினும், இயேசுவின் வல்லமை அவர் இந்த பூமியில் தங்கியிருந்த வேளையில் ஒரு சில மக்களை மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தலுக்கு அப்பாலும் சென்றது. காலத்தின் முடிவை முன்னதாக நோக்கிய அவர் பின்வருமாறு அறிவித்தார்:*

> *... ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும் [அதாவது, மனுஷகுமாரனுடைய சத்தம்; வ. 27], அப்பொழுது, நன்மை செய்தவர்கள்[11] ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (வ. 28, 29).*

*இது இரண்டாம் வருகையின்போது மனிதகுலம் முழுவதும் பெறவிருக்கிற பொதுவான உயிர்த்தெழுதலுக்கான தெளிவான மற்றும் சுருக்கமான கூற்றாக உள்ளது.*

*(3) நியாயத்தீர்ப்பில் ஒன்றித்திருத்தல். வசனங்கள் 28ம் 29ம் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து நியாயத்தீர்ப்பின் நாள் வரும் என்று*

மறைமுகமாக உணர்த்துகின்றன. இந்தப் பணியிலும் கூட, இயேசு தமது பிதாவுடன் ஒன்றித்திருப்பார். அவர், “பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்”[12] என்று கூறினார் (வ. 22). தேவன், “அவர் [இயேசு] மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத் திருக்கிறார்” என்று அவர் வலியுறுத்தினார் (வ. 27). மீண்டும் அவர், “... நான் நியாயந்தீர்க்கிறேன் ... என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது” (வ. 30) என்று உரிமைகோரினார்.

இயேசுவும் அவரது பிதாவும் ஜீவனைக் கொடுப்பதிலும், மரித்தோரை உயிர்ப்பித்தலிலும், நியாயத்தீர்ப்பிலும் ஒன்றித்திருப்பதால், அவரது உரையைக் கவனித்தவர்களின் பதில் என்னவாக இருந்திருக்க வேண்டும்? “பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்” என்று இயேசு கூறினார், கூடுதலாக, “குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனா யிருக்கிறான்” என்றும் கூறினார் (வ. 23).

இயேசு என்ன ஒரு வரம்புமீறிய உரிமைகோருதல்களை ஏற்படுத் தினார்! அவர், தாம் கூறியது உண்மை என்பதற்கு ஆதாரத்தை அளிக்க வேண்டும் அல்லது தமது கூற்றுக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுவார்.[13]

## குற்றமில்லாத சான்றுகள்
## (வ. 31-47)

இயேசு, தாமும் தமது உரிமைகோருதல்களும் விசாரணையில் இருந்ததை உணர்ந்து அறிந்தார். அவர் தமக்காகச் சாட்சியளிக்க சாட்சியங் களின்[14] வளர்நிலையொன்றை அழைத்தார்.

சாட்சியங்கள் பற்றிய அவரது அறிமுகக்கூற்று விநோதமானதாக ஒலித்தது: “என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது” (வ. 31). “மட்டும்” என்ற வார்த்தை மொழிபெயர்ப்பாளர் களால் கூட்டப்பட்டுள்ளது. கிறிஸ்து உண்மையில் [தமிழில் உள்ளதுபோல்] “என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது” என்றே கூறினார். இயேசு தம்மைக் குறித்துச் “சாட்சியிட்டார்” அல்லது “சாட்சி கொடுத்தார்” (வ. 19-30). வசனம் 31, அதன் சந்தர்ப்பப் பொருளை விட்டு எடுக்கப்படும்போது, இயேசு தாம் உண்மையைக் கூறியிருக்க வில்லை என்று ஒலிக்கக் கூடும்.

யோவான் 5ஆம் அதிகாரத்திலுள்ள இயேசுவின் தற்காப்பு வாதமானது அதிகாரம் 8ல் அவரது தற்காப்பு வாதத்துடன் ஒப்பிடப்பட வேண்டும். அந்த சந்தர்ப்பத்தில், பரிசேயர்கள் கிறிஸ்துவிடம், “உன்னைக் குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல” என்று கூறினார்கள் (யோவா. 8:13). அதற்கு இயேசு, “என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது” என்று பதில்

அளித்தார் (வ. 14). பின்பு அவர், "இரண்டு பேருடைய சாட்சி உண்மை யென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன், என்னை அனுப் பின பிதாவும் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார்'' என்றும் கூடுதலாகக் கூறினார் (வ. 17, 18).

இவ்விரு கூற்றுக்களையும் ஒப்பிடுதலானது, யோவான் 5ல் இயேசு ஒரு பொய்யுரைத்ததாக அறிக்கை இடவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. மாறாக அவர், மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, ஒரு நபரின் சாட்சியம் போதுமானதல்ல என்று ஒப்புக்கொண்டார். இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் சாட்சியம் தேவைப்பட்டது (எண். 35:30; உபா. 17:6; 19:15; மத். 18:16ஐக் காணவும்). இதனால் தான் வசனம் 31ல் NASB மொழிபெயர்ப்பாளர்கள் "மட்டும்" என்ற வார்த்தையைச் சேர்த்தார்கள்: கிறிஸ்து மட்டுமே தம்மைப் பற்றி சாட்சியம் கொடுத்திருப்பாரேயானால், இது ஒரு யூதத்துவ நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிராது.

ஆகையால் இயேசு அதிகாரம் 8ல் குறிப்பிடப்பட்ட அதே சாட்சியை, இரண்டாவது சாட்சியாகக் கூட்டினார்: அவரது பிதா. கிறிஸ்து, "என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்னைக் குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன்" என்று கூறினார் (யோவா. 5:32). இது சந்தர்ப்பப் பொருளில் தேவனைக் குறிக்கிறது.[15] இயேசு, "என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார்" என்று வலியுறுத்தினார் (வ. 37). பல சாட்சிகள் ஏற்படுத்தப்படும், ஆனால் ஒவ்வொருவரின் சாட்சியும் உண்மையில் தேவன் என்ற பூரணத்துவமான ஒரே சாட்சியிடமிருந்து வந்ததாகவே இருந்தது. இந்த யூதர்கள் ஒருக்காலும், தேவனைக் கண்டதோ அல்லது அவரது சத்தத்தைக் கேட்டதோ இல்லை (வ. 37ஆ), ஆனால் அவர் தமது முகவர்களின் மூலமாக அவர்களிடத்தில் (யூதர்களிடத்தில்) தெளிவாகப் பேசியுள்ளார்.

**யோவானின் சாட்சியம்**

இயேசுவின் உரிமைகோருதல்களின் பல்வகைத் தன்மையானது மனித சாட்சியின்மீது அமைந்திருக்கவில்லை (வ. 34அ, 36அ), ஆனால் அழைக்கப் பட்ட முதலாவது சாட்சி ஒரு மனிதராகவே இருந்தார்: யோவான் ஸ்நானன். யோவான் தேவனுடைய விசேஷித்த செய்தியாளராக இருந்தபடியால் அவர் அழைக்கப்பட்டார் (மல். 3:1; லூக். 7:27) மற்றும் மேசியாவைப் பற்றிய அவரது சாட்சியானது ஒருக்காலும் மறுத்துரைக்கப் படவில்லை.

கிறிஸ்து, "நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தான்" என்று கூறினார் (யோவா. 5:33). இந்தக் குறிப்பானது, யோவானிடம் கேள்விகேட்க எருசலேமிலிருந்து ஒரு தூதுவர் குழுவை அனுப்பிய வேளையாக உள்ளது (யோவா. 1:19-28). யோவான் அவர்களிடத்தில், "... நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்;

*அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல" என்று கூறியிருந்தார் (யோவா. 1:26, 27). அடுத்த நாளில், யோவான் இயேசுவைச் சுட்டிக் காண்பித்திருந்து[16] "... இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!"; "அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்'' என்று கூறினார் (வ. 29, 34).*

*யோவான் தம் வாழ்வில் பின்வரும் ஒரே நோக்கம் கொண்டிருந்தார்: மக்களை இயேசுவிடம் திருப்புதல். "க்ரன்வால்டஸ் என்பவரின் 'யோவான் ஸ்நானன்' என்ற சித்திரமானது ஐரோப்பாவின் மாபெரும் சித்திரங்களில் ஒன்றாக உள்ளது ... இந்தப் படத்தில் யோவான் தமது ஆள்காட்டி விரலை இயேசுவை நோக்கிச் சுட்டிக் காண்பித்து கவனத்தைத் திருப்புவது என்பதுதான் கவனத்தைக் கவருகிற அம்சமாக உள்ளது ... ."[17]*

*கிறிஸ்து யோவானின் சாட்சியைக் குறித்து, "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்;[18] நீங்களும் சில காலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்" என்று கூறினார் (யோவா. 5:35). இந்த வாக்கியத்தில் ''சிலகாலம்'' என்பது திறவுகோல் சொற்றொடராக உள்ளது. R. C. ஃபோஸ்டர் அவர்கள், "யோவானின் வெளிச்சத்தில் அவர்கள் சில காலம் - அந்த வெளிச்சம் அவர்களின் பாவங்களின் பக்கமாய்த் திரும்புவதற்கு முன்பு வரையிலும் - களிகூர்ந்திருந்தார்கள்!" என்று எழுதினார்.[19] அதன் பின்பு அவர்கள் அவரிடத்தில் ஏதொன்றும் அதிகமாய்ச் செய்ய விரும்பி யிருந்ததில்லை.*

*அவர்கள் யோவானின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்கள் இயேசுவையும் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். பின்பு அவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் (வ. 34ஆ).*

***அற்புதங்களின் சாட்சி***

*அடுத்தபடியாகக் கிறிஸ்து தமது அற்புதங்களின் சாட்சி பற்றிப் பேசினார்: "யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு, அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது" (வ. 36). "கிரியைகள்" என்ற வார்த்தை இயேசுவின் வாழ்வு முழுவதையும் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தப்பட முடியும்; நிச்சயமாகவே, அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற உண்மையை அவர் செய்த எல்லாச் செயல்களும் சாட்சியிட்டன என்பது உறுதி. ஆயினும் கிறிஸ்து, தேவனுடைய வல்லமையினால் தாம் செய்த அற்புதங்களைச் சிந்தையில் கொண்டிருந்தார்.[20]*

*இயேசு இதற்கு முன்பு எருசலேம் வந்திருந்தபோது பல அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார் (யோவா. 2:23). அந்த அற்புத செயல்களைப் பற்றி நிக்கொதேமு, "... நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந் திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" என்று*

கூறியிருந்தார் (யோவா. 3:2). இயேசு எருசலேமுக்கு வந்திருந்த இந்தப் பயணத்திலும், குறைந்தபட்சம் ஒரு அற்புதத்தைச் செய்திருந்தார். அவர் இந்த வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தபோது அவரருகில், [பெதஸ்தா] குளத்தின் அண்டையில் குணமாக்கப்பட்டிருந்த மனிதன் நின்றுகொண்டு இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

இயேசு அற்புதங்களைச் செய்தார் என்பதை அவரது விமர்சகர்கள் மறுக்க முடியாதிருந்தது,[21] ஆனால் அவர்கள் இன்னமும் அவரை மேசியா என்று ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.

**வேத வாக்கியங்களின் சாட்சி**

இயேசுவானவர் சாட்சியங்களாக தேவனிடமிருந்து வந்த ஒரு தூதுவனையும் மற்றும் தேவனிடமிருந்து வந்த அடையாளங்களையும் அழைத்திருந்தார். இப்போது அவர் தேவனுடைய வசனத்தின் சாட்சியத்தை அழைத்தார்: “வேதவாக்கியங்களை ஆராய்ந்து[22] பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே” (வ. 39). பழைய ஏற்பாட்டில் பல நூற்றுக்கணக்கான வசனங்கள் கிறிஸ்துவை முன்நோக்கி சுட்டிக்காட்டின (சங். 2; 22; ஏசா. 53) பிற்பாடு இயேசு, “மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம்” (லூக். 24:44) என்று உரைத்தார்.

யூதத்துவத் தலைவர்கள் தங்கள் சுயமான வழிமுறைகளில் வேத வாக்கியங்களுக்கு ஒப்புக்கொடுத்து இருந்தார்கள். ரபீத்துவ எழுத்துக்கள், “நியாயப்பிரமாணத்தின் வசனங்களில் தனக்கென்று [அறிவை] ஆதாயப் படுத்தியுள்ள எவனும் இனி வரும் உலகில் தனக்கென்று ஜீவனை ஆதாயப் படுத்தியவனாக இருக்கின்றான்” என்று கூறின.[23] இந்தக் காரணத்தினாலேயே அவர்கள் வேதவாக்கியங்களை அருவியாகப் பொழிந்தார்கள். அவர்கள் வார்த்தைகளை எண்ணினார்கள், எழுத்துக்களை எண்ணினார்கள்; அவர்கள் ஒவ்வொரு “சிறு எழுத்தையும்” ஒவ்வொரு “எழுத்தின் உறுப்பையும்”[24] (மத். 5:18) தங்களின் இறையியல் நுண்ணோக்கியின் கீழ் இட்டார்கள். அப்படியிருந்தும் அவர்கள் “மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டு வருதல்” என்ற வேதவாக்கியங்கள் வடிவமைக்கப்பட்ட நோக்கத்தைத் தவற விட்டார்கள் (கலா. 3:24).

அவர்கள் ஒரு வழிகாட்டும் பலகை சுட்டிக்காட்டும் அடைவிடத்திற்குச் செல்வதற்குப் பதிலாக அந்தப் பலகையைக் கவனமாகப் பரிசோதித்து - அதை அளந்து, அதைப் பற்றிய வரைபடங்களை வரைந்து வரைந்து, அதைப் பற்றிய விவரிப்புகளை எழுதி - இருந்த மனிதர்களைப்போல் இருந்தார்கள். வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், யூதர்கள் “தேவனுடைய வசனத்தை அறியத் தேடினார்கள், ஆனால் அவர்கள் அந்த வசனத்தின் தேவனை அறியாதிருந்தார்கள்!”[25] என்று எழுதினார். அவர்கள் வசனத்தை தங்கள் இருதயங்களில் அல்ல ஆனால் தங்கள் தலைகளிலேயே கொண்டிருந்தார்கள் என்பதை இயேசு உய்த்துணர்ந்தார். அவர்களிடம் அவர், “அவருடைய வசனம்

உங்களில் தரித்திருக்கிறதுமில்லை” என்று கூறினார் (வ. 38).

மோசேயின் எழுத்துக்களைக் குறிப்பிட்ட இயேசு, தம்மைப் பற்றி வேத வாக்கியங்கள் சாட்சியளித்தன என்ற உண்மையைப் பற்றி மனதைத் தாக்கும் கூற்று ஒன்றை ஏற்படுத்தினார்:

> பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ் சாட்டுவான். நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள், அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை[26] நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா. 5:45-47).

“சந்ததி” [அல்லது] “வித்து” வரும் என்று மோசே எழுதியிருந்தார் (ஆதி. 3:15; 22:18; கலா. 3:16ஐக் காணவும்). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இவர் யூதாவின் சந்ததியில் தோன்றுவார் என்று அவர் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (ஆதி. 49:10). அவர் தம்மைப் போல் எழும்பவிருந்த ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி பேசியிருந்தார் (உபா. 18:15-18). அவரது எழுத்துக்கள் யாவும் மேசியாவை முன்னெதிர் நோக்குதல் பற்றிய மாதிரிகள் மற்றும் அதற்கு ஒப்பனையானவைகளினால் மிகைநிறைவை அடைந்திருந்தன.[27] ஆகையால், மோசே இயேசுவுக்குச் சாட்சியாக இருந்தார் என்று மட்டும் இயேசு கூறாமல், தம்மை[இயேசுவை]ப் புறக்கணிப்பவர்களுக்கு எதிர்ச் சாட்சியாக இருப்பார் என்றும் கூறினார். அவர், “மோசேயே உங்கள்மேல் குற்றஞ் சாட்டுவான்” என்று கூறினார் (யோவா. 5:45ஆ).

யூதத்துவத் தலைவர்கள், திரளான இந்தச் சாட்சிகளைக் கொண்டிருந்த போதிலும் இயேசுவை ஏன் புறக்கணித்தார்கள்? மனவிருப்பம் மற்றும் இருதயம் என்பதே பிரச்சனையாக இருந்தது என்று இயேசு கூறினார். “மனுஷருள்ளத்திலிருப்பதை ... அறிந்திருந்த” (யோவா. 2:25) ஒருவர் [இயேசு] பின்வரும் குற்றச் சாட்டைக் கொடுத்தார்: “... என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை ... உங்களில் தேவ அன்பு இல்லை” (5:40-42).

அவர்கள் “தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல்” (வ. 44) மனிதர்களிடமிருந்து வருகிற மகிமையைத் தேடினார்கள் என்பது ஒரு பிரச்சனையாக இருந்தது. [யூதத்துவத்] தலைவர்களிடம் இயேசு (உண்மையில்), மேசியா என்று தன்னை உரிமைகோரிக் கொண்டு வருகிற ஒருவர் பரலோகச் சான்றுகளில் குறைவுபட்டிருந்தால், அவர்களை அவர் மயக்கியிருக்கும் வரைக்குமே அவர்கள் அவரை ஏற்றுக் கொள்வார்கள் மற்றும் பின்பு அவர்கள் தங்கள் கால அட்டவணையை மாற்றிக் கொள்வார்கள் என்று கூறினார் (வ. 43ஆ). இதற்கு நேர்மாறாக யூதர்கள், பரலோக அங்கீகாரத்துடன் வந்த இயேசுவை ஏற்றுக் கொள்வதைப் புறக்கணித்திருந்தார்கள் (வ. 43அ) ஏனென்றால் அவர்கள் தாங்கள் பெறத்தகுதியானதென்று நினைத்திருந்த மகிமையை அவர்களுக்குத் தருவதற்கு அவர் மறுத்தார்.[28]

எருசலேமில் இருந்த மதஅதிகாரிகள் உண்மையற்றவைகளை, பொருட்படுத்தப்படாதவைகளை அதிகமாய் அறிந்திருந்தார்கள்,

சத்தியத்திற்கோ அவர்கள் காது கேளாதவர்களாகவும் பார்வையில்லாதவர்களாகவும் இருந்தார்கள் என்பதே அவர்களின் நிலை பற்றி நாம் சுருக்கமாகக் கூறி முடிகிற கருத்தாகும்[29] (மத். 13:15ஐக் காணவும்).

வசனத்தை ஊக்கமாய்ப் படித்தும்கூட, சத்தியத்தின் இரட்சிக்கும் [வல்லமை பற்றிய] அறிவை ஒருக்காலும் பெற்றுக்கொள்ளாது, வசனத்தின் மாணவராய் இருப்பது சாத்தியமே என்பதை உணர்ந்தறிதல் என்பது தெளிவானதாக உள்ளது அல்லவா? வேத வாக்கியங்களை நாம் எப்போதுமே, சரியான எண்ணப்போக்குடன் ("சத்தியத்தின் மேல் அன்பு"; 2 தெச. 2:10) மற்றும் சரியான நோக்கத்துடன் ("கர்த்தரை அறிதல்"; எபி. 8:11) அனுகுவதற்குத் தேவன் உதவுவாராக.

## முடிவுரை[30]

இயேசு ஓய்வுநாளை மீறினார் என்று அவர்மீது யூதத்துவத் தலைவர்கள் குற்றஞ்சாட்டியபோது, அவர் பயமடைந்தவராவார் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கலாம், ஆனால் அவர் பயம் அடையவில்லை. அதற்குப் பதிலாக, அவர்களின் அறைகூவலை அவர் சந்தித்து மிகவும் மாற்றத்திற்குரிய உரிமைகோருதல்களை ஏற்படுத்தினார். அவரது வாதங்களை யூதர்கள் மறுக்க முடியாததால், அவர்கள் அவரைத் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் - ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய மனவிருப்பமற்று இருந்தார்கள் என்பது கவலைக்குரியதாயிருந்தது.

நம்மைப் பற்றிய விஷயம் என்ன? யோவான் 5ம் அதிகாரம் முதல் நூற்றாண்டு யூதர்களின் இருதயக் கடினத்தை வெளிப்படுத்துவதற்காக மட்டும் எழுதப்படவில்லை, மாறாக இது இருபத்தியோராம் நூற்றாண்டில் உள்ள நமது இருதயங்களை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதப்பட்டுள்ளது.[31] இயேசுவின் வரம்புமீறிய உரிமைகோருதல்கள் எவரொருவரையும் நடுநிலையில் நிலைத்திருக்க அனுமதிப்பதில்லை. இந்த உரிமைகோருதல்கள் பற்றி, C. S. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> தேவனாயிராத எந்த ஒரு பேச்சாளரின் வாயிலிருந்தும் இந்த வார்த்தைகள் வருமென்றால், அது வரலாற்றில் எந்த ஒரு பாத்திரத்தினாலும் எடுத்துரைக்கப்பட்ட மதியீனமாகவும் ஈடற்ற வஞ்சகமாகவும் என்னால் கருதப்படக் கூடியதை மறைமுகமாக எடுத்துரைக்கும்.
>
> … நீங்கள் உங்கள் தேர்ந்துகொள்ளுதலை மேற்கொள்ள வேண்டும். இந்த மனிதர் ஒன்று தேவனுடைய குமாரனாக இருந்திருக்க மற்றும் இருக்க வேண்டும் அல்லது இவர் ஒரு பைத்தியம் பிடித்த மனிதராக அல்லது அதைக்காட்டிலும் மோசமானவராக இருக்க வேண்டும். இவரை நீங்கள் ஒரு மதியீனர் என்று கூறி அடைத்து விடக்கூடும், அவர்மேல் துப்பக்கூடும் அல்லது பிசாசாக எண்ணி அவரைக் கொல்லக் கூடும். அல்லது நீங்கள் இவரது பாதங்களில் விழுந்து இவரை ஆண்டவரும் தேவனும் என்று அழைக்க முடியும்.[32]

*யோவான் 5ல் இயேசு விசாரணையில் இருந்தார் - மற்றும் அவர் இன்னும் மனிதகுலத்தின் இருதயங்களில் விசாரணையில் இருக்கின்றார். இன்றைய நாளில் நீங்கள் நடுவராக இருக்கின்றீர்கள். உங்கள் தீர்ப்பு என்ன? இயேசு உண்மையைப் பேசினாரா? உண்மையிலேயே அவர் தாம் உரிமைகோரிய பிரகாரமாகவே இருக்கின்றாரா? உங்கள் பதில் "ஆம்" என்று இருக்குமென்றால், இந்த முடிவானது உங்கள் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள மாற்றம் என்ன? இந்தப் பாடத்தை இயன்ற அளவு நடைமுறைக்குரியதாக ஆக்குவதற்கு, இது உங்கள் வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் யாவை என்று கேளுங்கள். இயன்ற வரையிலும் திட்டவட்டமானவரா யிருங்கள். இயேசுவின் மாற்றம் சார்ந்த உரிமைகோருதல்கள் மாற்றம் சார்ந்த உறுதிப்பாட்டிற்கு அழைக்கின்றன.*[33]

---

*குறிப்புகள்*

*[1]குணமாக்குதலின் வரலாற்றை விரிவாக்க நீங்கள் விரும்பலாம் - மற்றும் அநேகமாக ஓய்வுநாள் பற்றியும் மனிதர்களின் பாரம்பரியங்கள் பற்றியும் விவரங்களைக் கூட அநேகமாக நீங்கள் விரும்பலாம். [2]இந்தக் குற்றச்சாட்டு யோவான் 5:16, 18ல் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. [3]ஆதியாகமம் 2:2ஐ வாசிக்கவும். [4]எபிரெயர் 1:3ஐ வாசிக்கவும், இது தேவத்துவத்தின் அங்கமாகக் குமாரன் இந்த அண்டத்தைத் தாங்குகிறார் என்று உரைக்கிறது. [5]மத்தேயு 5:45ஐ வாசிக்கவும். [6]ஆதியாகமம் 18:25; உபாகமம் 32:39 ஆகிய வசனங்களை வாசிக்கவும். [7]இவ்வசனமானது சில வேளைகளில், ஆவிக்குரிய வாழ்வில் அவசியமான எல்லாவற்றிற்கும் "விசுவாசம் மட்டுமே" போதுமானது என்று சரியற்ற வகையில் போதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. "விசுவாசித்தல்" என்று இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கருத்தானது கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தைக் கொண்டிருத்தல் என்ற முற்றுணர்வுக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் ''நம்பி, கீழ்ப்படிய வேண்டும்'' (மத். 7:21; மாற். 16:16). [8]இவ்வசனமானது சிலவேளைகளில், ஒருமுறை ஆவிக்குரிய வாழ்வை பெற்றுக்கொண்ட (இரட்சிக்கப்பட்ட) ஒருவர் [ஒருபொழுதும்] இழந்துபோகப்பட முடியாது என்று சரியற்ற வகையில் போதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. சிலர், "அவ்வாறு இல்லையென்றால், அது நித்திய ஜீவனாயிராது" என்று கூறுகின்றார்கள். ஆயினும், தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் அவிசுவாசத்தின் மூலமாக நித்திய ஜீவனைத் தேவன் அவருக்கு விலக்கி வைக்கும்படி விழுந்துபோகக்கூடும் என்று வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது (1 கொரி. 10:12; யாக். 5:19, 20; 2 பேது 2:20-22). நான் ஒரு காலத்தில், வாழ்நாள் முழுவதும் உத்தரவாதத்துடன் கூடிய மையூற்றி எழுதும் பேனா ஒன்றைக் கொண்டிருந்தேன், ஆனால் அதை நான் தொலைத்து விட்டேன். அந்தப் பேனா வாழ்நாள் முழுவதற்குமான உத்தரவாதம் கொண்டிருந்தது என்ற உண்மையானது, நான் அதை என் வாழ்நாள் முழுவதும் கொண்டிருப்பேன் என்று உறுதியளிக்கவில்லை. [9]இவ்வசனமானது சிலவேளைகளில், கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய நியாயா சனத்திற்கு முன்பாக நிற்க மாட்டார்கள் என்று சரியற்ற வகையில் போதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் பவுல், நாம் நல்லவர்களாய் இருந்தாலும் தீயவர்களாய் இருந்தாலும் (ரோமர் 2:5-8; 14:10; 2 கொரி. 5:10), ''நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" என்று கூறினார் (ரோமர் 14:10). [10]ஏவுதல்*

*பெற்ற பதிவேடுகளின்படி, இந்த இடம் வரையிலும் இயேசு மரித்தோரில் இருந்து யாரையும் உயிர்ப்பித்து இருந்ததில்லை.*

[11]*நற்கிரியைகளைச் செய்தல் மற்றும் துர்க்கிரியைகளைச் செய்தல் பற்றிய கூற்றானது, நாம் செய்கின்ற செயல்களினால் நமது இரட்சிப்பை ஈட்டுகின்றோம் அல்லது அதற்குத் தகுதியாகின்றோம் என்று நிரூபிப்பதில்லை. ஆயினும், தேவன் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசத்திற்குப் பலன் அளிக்கின்றார் என்பது நிரூபணமாக உள்ளது (எபி. 5:8, 9; யாக். 2:14-26 ஆகிய வசனங்களைக் காணவும்).* [12]*தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார், ஆனால் அவர் தமது குமாரன் ''மூலமாக'' நியாயந்தீர்ப்பார் (அப். 17:31; ரோமர் 2:16).* [13]*உலகில் நான் வாழும் பகுதியில், "அவர் கொடுக்கவேண்டும் [ஆதாரம் கொடுத்தல்] அல்லது வாயை அடைக்க வேண்டும் [உரிமைகோருதலை ஏற்படுத்துதலை நிறுத்துதல்]" என்று நாங்கள் கூறுவதுண்டு.* [14]*"சாட்சி" என்பது யோவான் சுவிசேஷத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. "சாட்சி" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (marturia) என்பது அதன் பல்வேறு வடிவங்களில், இந்த(சுவிசேஷ)ப் புத்தகத்தில் ஏறக்குறைய ஐம்பது முறைகள் உள்ளது.* NASB*யின் பழைய பதிப்புகள் ''சாட்சி'' என்ற வார்த்தையைத் தரவழைத்தன, அதே வேளையில், மொழிபெயர்ப்பாளர்கள் இந்தப் பதிப்புக்களைப் புதுப்பித்தபோது,* "testify" *மற்றும்* "testimony" *என்ற வார்த்தைகளைக் கொண்டு நவீனமாக்கினார்கள்.* [15]*யோவான் 5:32, 33ஐ சாதாரணமாக வாசித்தலானது, வசனம் 32ன் சாட்சி யென்பவர் யோவான் ஸ்நானன் என்ற மனப்பதிவை விட்டுச் செல்லும் (வ. 33), ஆனால் இயேசு, தாம் குறிப்பிட்டது "மனிதரிடமிருந்து வந்தது அல்ல" (வ. 34) என்று முன்னதாகவே கூறச் சென்றார் மற்றும் அது "யோவானின் சாட்சியை விடப்பெரிய தாயிருந்தது" என்றும் அவர் கூறினார் (வ. 36). வசனம் 32ல் [ஆங்கில மொழியில்]* "He" *என்பதில் உள்ள* "H" *என்பது பெரிய எழுத்தில் உள்ளதைக் கவனியுங்கள், [வாக்கியத்தின் இடையில் இவ்வாறு பெரிய எழுத்தைப் பயன்படுத்துதல் என்பது தேவனைக் குறிப்பதாகும்] இது இவ்விடத்தில் தேவன் குறிப்பிடப்படுகின்றார் என்று* NASB *மொழிபெயர்ப்பாளர்கள் ஒப்புக்கொள்ளுதலாக உள்ளது.* [16]*"இதோ" என்ற வார்த்தையில் சுட்டிக் காண்பிக்கும் செயல் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது.* [17]Bruce Milne, *The Message of John* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 98. [18]*இவ்வேளையில், யோவான் ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டு விட்டதால், இயேசு இறந்த கால வினைச் சொல்லைப் பயன்படுத்தினார் (மத். 4:12).* [19]R. C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 451. [20]*"கிரியைகள்" என்பது இயேசு தமது அற்புதங்களைக் குறிப்பதற்கு யோவான் சுவிசேஷத்தில் பயன்படுத்திய பொதுவான ஒரு சொற்றொடராகும் (7:3; 10:25, 32, 37, 38; 14:10, 11; 15:24 ஆகிய வசனங்களைக் காணவும்).*

[21]*அவர்கள் பிற்பாடு, இயேசு பிசாசின் வல்லமையினால் அற்புதங்களை நிகழ்த்தினார் என்று குற்றம் சாட்டினார்கள் (மத். 12:24), ஆனால் அவர் அற்புதங் களைச் செய்திருந்ததை அவர்கள் மறுக்கவில்லை. "அவர்கள் எல்லாரும் ஆச்சரியப் பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்'' என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும்.* [22]*கிரேக்க மொழியில், இந்த வாக்கியத்தின் முதல் வினைச் சொல்லானது ("ஆராய்ந்து")* NASB*யில் உள்ளபடி ஒரு சுட்டுவினை(ஒரு உண்மை)யாகவோ அல்லது* KJV*யில் உள்ளபடி ஒரு ஆணைவினை(கட்டளை)யாகவோ இருக்கலாம். அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கையில், அவற்றில் அவர்கள் அவரைக் காணத்தவறி விட்டபடியால் சந்தர்ப்பப் பொருளில் இவ்விடத்தில் சுட்டுவினை என்பது நன்கு பயன்படுத்துவதாகக் காணப்படுகிறது.* [23]Aboth 2:8; quoted in Frank Pack, *The Gospel*

*According to John,* Part 1 (Austin, Tex.: Sweet Publishing Co., 1975), 95. [24]*மத்தேயு 5:18ல் "சிற்றெழுத்து" மற்றும் "எழுத்தின் உறுப்பு" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் எபிரெய மொழியில் சிறு எழுத்துக் களையும் மிகச் சிறிய அடையாளங்களையும் குறிக்கிறது. இவ்விதமாக* NASB*யில்* "smallest letter" *மற்றும்* "stroke" *என்றுள்ளது.* [25]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 308. [26]*சில "கல்வியாளர்கள்," மோசே பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங் களை எழுதினார் என்பதை மறுக்கின்றார்கள், ஆனால் அவர் அவற்றை எழுதினார் என்று இயேசு கூறினார்.* [27]*எடுத்துக்காட்டாக, நியாயப்பிரமாணத்தின் பலியானது சிலுவையில் பூரணப்பட்ட ஒரு பலியை முன்எதிர் நோக்கியிருந்தது (எபி. 10:4, 12).* [28]*அவர்கள் இயேசுவைப் புறக்கணித்தமைக்கு இதுவே காரணம் என்று அவர் மறைமுகமாய் உணர்த்தினார்.* [29]This comment was adapted from an anonymous source quoted in R.C. Foster, *Studies in the Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1971), 454. [30]*விருப்பம் இருந்தால், இது ஒரு நான்காவது பிரதானக் கருத்தாக ஏற்படுத்தப் படலாம், இது "தப்பிக்க இயலாத முடிவுகள்" என்பதாக ஒருவர் இயேசுவின் உரிமைகோருதலை ஏற்றுக்கொள்வார் என்றால், அவருக்கு முழுமையான ஒப்புக்கொடுத்தலின் அவசியம் உட்பட சில "தப்பிக்க இயலாத முடிவுகள்" உள்ளன என்பதைக் குறிப்பிடுகிறது.*

[31]*யோவான் சுவிசேஷமானது விசுவாசத்தை உண்டாக்குவதற்காக எழுதப் பட்டது (யோவா. 20:30, 31). அவ்வாறு செய்வதில், அது விசுவாசிக்க மனவிருப்ப முள்ளவர்களை அடையாளம் காண்கிறது, மற்றும் விசுவாசிக்க மனவிருப்பம் இல்லாதவர்களை வெளிப்படுத்துகிறது.* [32]C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1952), 55-56. [33]*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, மக்கள் கிறிஸ்தவர் களாகும்படியோ அல்லது கிறிஸ்துவுக்கான அவர்களின் உறுதிப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்ளும்படியோ அவர்களை ஊக்கப்படுத்த நீங்கள் விரும்பலாம். கிறிஸ்தவராவது எப்படி என்று கூறும் வசனங்களில் மாற்கு 16:15, 16 மற்றும் அப். 2:38 ஆகியவை அடங்குகின்றன.*

## 22

# "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"

## (மலைப் பிரசங்கம், 1)

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #8*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
   F. *மலைப் பிரசங்கம்.*
      1. *அறிமுகக் கூற்றுக்கள் (மத். 5:1, 2; லூக். 6:17-20).*
      2. *பாக்கிய வசனங்கள்: மேசியாவின் பிரஜைகளுக்கான வாக்குத்தத்தங்கள் (மத். 5:3-12; லூக். 6:20-26).*
      3. *மேசியாவின் பிரஜைகளினுடைய செல்வாக்கு (மற்றும் பொறுப்புகள்) (மத். 5:13-16).*
      4. *மேசியாத்துவ பழைய ஏற்பாட்டு போதனைக்கும் - மற்றும் பழைய ஏற்பாட்டு போதனை பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களுக் குள்ள உறவு (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36).*
      5. *மதரீதியான செயல்கள் காட்சிக்காக அல்ல ஆனால் இருதயத்தில் இருந்தே வருவதாயிருக்க வேண்டும் (மத். 6:1-18).*

### அறிமுகம்

*நமது முந்திய பாடம் முடிவடைகையில், இயேசு தமது மரணத்திற்குப் பின்பு தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்காக மனிதர்களைத் தேர்ந்தெடுத்திருந்தார். மேசியாத்துவ இராஜ்யத்தில் குடிமக்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன என்பது பற்றி விசாலமான உரையொன்றை கொடுத்தல் என்பதே அவர்களைத் தயாரிப்பதில் அவரது முதல் நிலைச் செயல்பாடாக இருந்தது. இதனை நாம் "மலைப் பிரசங்கம்" என்று அறிகின்றோம்.*

*நிபுணத்துவம் வாய்ந்த இந்த எடுத்துரைப்பைக் கேட்கும் சிலாக்கியத் தைப் பலர் பெற்றிருந்தார்கள் (மத். 5:1; 7:28; லூக். 6:17; 7:1), ஆனால் இது இயேசுவின் சீஷர்களை நோக்கி விசேஷமாய்த் திருப்பப்பட்டதாக இருந்தது (மத். 5:1, 2; லூக். 6:20). இதனை நாம், புதிதாக நியமிக்கப்*

*பட்டிருந்த அப்போஸ்தலர்களைப் பணிக்குப் பழக்குவிக்கும் பயிற்சி என்று நினைக்கலாம்.*

*இந்த உரையானது இராஜ்யத்தின் குடிமக்களாவதற்கு அவசியமான எண்ணப்போக்கைத் தொடுகிறது (மத். 5:3-6; 6:33; 7:21, 24-27 ஆகியவற்றைக் காணவும்). இருப்பினும் இது அடிப்படையில், ஏற்கனவே இயேசுவின் பின்பற்றாளராக இருப்பவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கையாளுகிறது.*

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் படிக்கின்றபோது, இயேசு யூதத்துவ யுகத்தின் கீழ், யூதமக்கள் கூட்டத்திற்கு இதை உரைத்தார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இவ்விதமாக அவர் யூத உயர்நீதிமன்றத்தை (சனதெரீன் சங்கத்தை) (மத். 5:22), பலிபீடத்தில் பலிகளை (மத். 5:23), மற்றும் "தேவனுடைய நகரம்" என்ற வகையில் எருசலேமை குறிப்பிட்டார் (மத். 5:35). ஆயினும் இந்த வசனங்கள் இயேசுவின் புதிய ஏற்பாட்டின் பாகம் என்ற வகையில் பாதுகாக்கப்பட்டுள்ளன; எனவே நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதில், நாம் கிறிஸ்தவக் கருத்துக்களுக்குத் துறைச் சொற்களைத் தழுவ வேண்டியது அவசியமாக உள்ளது. (எடுத்துக்காட்டாக, "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து" [5:23] என்பது, "நீங்கள் தேவனை ஆராதிக்க வந்து" என்ற அதே கருத்தை ஆலோசனையாகத் தெரிவிக்கிறது.)*

*மத்தேயு 5-7 அதிகாரங்கள், இந்தப் பிரசங்கத்தைப் பற்றி நன்கு அறியப்பட்ட பதிப்பாக உள்ளது, ஆனால் லூக்கா 6:20-49ல் ஒரு சுருக்கப் பதிப்பு காணப்படுகிறது. இவ்விரு விவரங்களிலும் வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, மத்தேயு சுவிசேஷத்தில் இதற்கு 107 வசனங்கள் இருக்க, லூக்கா சுவிசேஷத்தில் 30 வசனங்களே உள்ளன, மற்றும் வார்த்தையமைப்பு இங்கும் அங்கும் மாறுபட்டதாக உள்ளது. இந்தக் குறிப்பான வேறுபாடுகள் என்னைக் கவலைப்படுத்துவதில்லை. ஒரே பாடத்திற்கு, மத்தேயு ஒரு நீண்ட பதிப்பையும், லூக்கா ஒரு குறுகிய பதிப்பையும் கொடுப்பவர் களாகக் காணப்படுகின்றார்கள்.[1] - மற்றும் சுயாதீனமான சாட்சிகளிடத்தில் சற்றே மாறுபட்ட வார்த்தையமைப்பு என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகவே உள்ளது.[2] (மத்தேயுவும், லூக்காவும் இயேசு பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் தராமல் அவர் பேசியதன் தொகுப்புரை ஒன்றையே தருவதாகப் பலர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.[3])*

*மத்தேயு சுவிசேஷத்தின்படி, இயேசு போதிப்பதற்கு முன்பு, அவர் "மலையின்மீது ஏறினார்" மற்றும் "உட்கார்ந்தார்" (மத். 5:1). இதற்கு நேர் மாறாக, இயேசுவின் போதனைக்கு முன்பு "அவர் சமனான ஒரு இடத்திலே நின்றார்" (லூக். 6:17) என்று லூக்கா எழுதினார். ஆயினும் இவ்விரு விவரங்களையும் ஒப்புரவாக்குதல் என்பது சாத்தியமற்றதாக இருப்ப தில்லை. முதலில் இயேசு மலையடிவாரத்தில் ஒரு சமனான இடத்தில் நிற்கையில் திரளான மக்களைக் குணமாக்கியிருக்கக்கூடும் (லூக். 6:12, 17-19), பின்பு அவர் மலைப்பகுதியில் சற்றுத்தூரம் தனித்துப் போய், தமது சீஷர்களுக்குப் போதிக்க அமர்ந்திருக்கக் கூடும் - அப்போது திரளான மக்கள் அவரது போதனையைக் கேட்கக்கூடிய தொலைவில் இருந்திருக்கலாம்.*

*(தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளரான) ஜெரோம் அவர்களின் கூற்றின்படி, இவரது நாட்களில் இந்தப் பிரசங்கம் ஹாட்டின் ஹார்ன்ஸ்[4] என்று அழைக்கப்படும் மலையின்மீது பிரசங்கிக்கப்பட்டதாக பொதுவாக நினைக்கப்பட்டது, இதில் ஒரு மக்கள் கூட்டம் கூடிவருவதற்கான சமனான தரையொன்று இருந்தது.*

*மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் இந்தப் பிரசங்கங்கள் ஒரே வழிமுறையில் தொடங்கி (மத். 5:3-12; லூக். 6:20-23), ஒரே வழிமுறையில் முடிந்து (மத். 7:24-27; லூக். 6:47-49), இடையில்[5] ஒரே விதமான பொதுவான ஒழுங்கமைவைப் பின்பற்றுதலானது இவ்விரண்டும் ஒரே பிரசங்கம்தான் என்று நம்பும்படி என்னை வழிநடத்துகிறது. இவைகள் ஒரே பிரசங்கமா அல்லவா என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை. இவைகள் இரண்டுமே ஒரே பிரசங்கமாயிராதிருந்தால், ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில்,[6] ஒரே விதமான அடிப்படை மக்கள் கூட்டத்திற்கு[7] பிரசங்கிக்கப்பட்ட ஒரே வகைப் பிரசங்கங்களாக உள்ளன. இந்தக் காரணத்தினால், இவைகள் ஒன்றாகப் படிக்கப்பட முடியும் - மற்றும் இதைத் தான் நாம் செய்யவிருக்கின்றோம்.[8] மத்தேயுவின் விவரமானது நன்கு அறியப்பட்டதாக, அதிகம் விசாலமானதாக இருப்பதால், அவரது பதிப்பை நாம் அடிப்படை ஆதார மூலமாகவும் லூக்காவின் விவரத்தை ஒரு துணை ஆதாரமூலமாகவும் பயன்படுத்துவோம்.*

*இந்தப் பிரசங்கத்தில் உள்ள மாபெரும் சத்தியங்கள் எல்லாவற்றையும் விளக்கியுரைப்பதோ அல்லது ஒவ்வொரு புதிரான கூற்றையும் விளக்கப் படுத்துவதோ நம்மால் முடியாது. ஆயினும் இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் நாம் ஒப்புயர்வற்ற இந்த எடுத்துரைப்பின் முற்றான வடிவமைப்பைக் காண்பிக்க முயற்சி செய்வோம்.*

## *"... நீங்கள் பாக்கியவான்கள்"*
## *(மத். 5:3-12; லூக். 6:20-26)*

*இந்தப் பிரசங்கமானது ஒவ்வொன்றும் "பாக்கியவான்கள்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளதான கூற்றுக்களின் வரிசையொன்றுடன் தொடங்குகிறது. இவைகள் "பாக்கிய வசனங்கள்" என்று அழைக்கப் படுகின்றன. இந்தச் சுட்டுப் பெயரானது, இந்த வாக்கியங்கள் ஒவ்வொன்றின் முதல் வார்த்தையும் "பாக்கியவான்கள்" அல்லது "மகிழ்ச்சி யானவர்கள்" என்பதற்கான லத்தீன் வார்த்தையான beati, என்பதைக் கொண்டு தொடங்குகின்ற வேதாகமத்தின் லத்தீன் மொழிப் பதிப்பில் இருந்து வருகிறது.*

*மலைப்பிரசங்கத்தை வாசிக்கின்ற எவரொருவருக்கும், இயேசுவைப் பின்பற்றுதல் என்பது சுலபமானதாயிருப்பதில்லை என்பது தெளிவாகிறது (மத். 5:10-12). ஆகையால் கிறிஸ்து ஊக்கமூட்டும் வார்த்தைகளுடன் தொடங்கி, மக்கள் தமது வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி செயல் படுகையில் எவ்வாறு ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதைக் தனித்தனியே குறிப்பிட்டார் (7:24, 25ஐக் காணவும்). விசுவாசமுள்ள சீஷர்கள் இந்த ஆசீர்*

*வாதங்களை இவ்வாழ்வில் ஓரளவுக்கு மகிழ்வுடன் அனுபவிக்கின்றார்கள், ஆனால் இதன் முழுமையான உணர்ந்தறிதல் என்பது இனிவரும் வாழ்வில் இருக்கும். லூக்காவின் விவரமானது இயேசுவுக்குக் கீழ்ப்படிய மனவிருப்பம் இல்லாதவர்கள் மீது விழும் சாபங்களையும் உள்ளடக்குகிறது (லூக். 6:24-26[9]).*

## *"நீங்கள் ... இருக்கிறீர்கள்" (மத். 5:13-16)*

*இயேசுவைப் பின்பற்றுதல் என்பது பின்பற்றாளர்களுக்கு ஆசீர்வாதங் களைக் கொண்டுவரும் என்று பாக்கிய வசனங்கள் நிலைநாட்டின. அடுத்து, இயேசு தமது சித்தத்தைச் செய்தல் என்பது பிறரை ஆசீர்வதிப்பதாக உள்ளது என்று - அவர் தம் சீஷர்கள் "பூமிக்கு உப்பாகவும்" "உலகத்திற்கு வெளிச்சமாகவும்" இருப்பதாகக் கூறியபோது - அறிவித்தார். வல்லமை மற்றும் செல்வாக்கின் முக்கியத்துவம் பற்றி வேதாகமத்தின் பல வசனப் பகுதிகள் போதிக்கின்றன (உதாரணமாக, நீதி. 27:17; ஓசியா 4:9; 1 கொரி. 5:6; 15:33; பிலி. 2:15; 1 பேது. 2:12), ஆனால் மத்தேயு 5:13-16ஐக் காட்டிலும் அதிகமாக அறைகூவல் விடுவதும் சிந்தனையைத் தூண்டுவதுமான வசனப்பகுதி வேறு எதுவும் இல்லை.[10]*

## *"... என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36)*

*மத்தேயு 5:17-48 வசனங்கள் மலைப் பிரசங்கத்திலுள்ள நீண்ட வசனப்பகுதியாக உள்ளது, இது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு நேர்மாறானதாக உள்ள, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களை எடுத்துரைத்து - இயேசுவின் போதனையுடன் தொடர்புபடுத்திக் காண்பிக்கிறது. கிறிஸ்துவின் சீஷர்கள், நியாயப்பிரமாணத்துடன் அவருக்குள்ள தொடர்புபற்றியும், நியாயப்பிரமாணத்துடன் மக்கள் கூட்டி யிருந்த பாரம்பரியங்களின் பெருக்கத்தைப் பற்றிய அவரது எண்ணப் போக்கைப் பற்றியும் தெளிவாகப் புரிந்துகொண்டிருத்தல் என்பது இன்றியமையாததாக இருந்தது.*

*அறிமுகக்கூற்று தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இயேசு பின்வருமாறு தொடங்கினார்:*

> *நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 5:17, 18).*

*இயேசு நியாயப்பிரமாணத்தை "அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிற*

*தற்கே" வந்தார் என்ற உண்மையானது, சிலரை நாம் இன்றைய நாட்களிலும் பழைய ஏற்பாட்டின் கீழ் இருக்கின்றோம் என்று நம்புவதற்கு வழிநடத்தியுள்ளது. கிறிஸ்துவின் வார்த்தைகள் பற்றிய இந்த விளக்கமானது அவரை, ஏவுதல் பெற்ற அவரது அப்போஸ்தலர்களின் தெளிவான/எளிய போதனைக்கு நேர்மாறானவராக்கும். இயேசு, "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத் தாரையும் [யூதரையும் புறஜாதியாரையும்] தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி" (எபே. 2:15) என்று பவுல் எழுதினார். மேலும் அந்த அப்போஸ்தலர், நியாயப்பிரமாணத் தின் "ஆணைகள்" பற்றி, இயேசு அந்தக் கட்டளைகளின் அமைப்பை எடுத்து "சிலுவையிலே ஆணியடித்து" விட்டார் என்றும் கூறினார் (கொலோ. 2:14, 16).*

*மத்தேயு 5:17, 18ல் கிறிஸ்துவின் வார்த்தைகள், பழைய ஏற்பாடானது தேவனுக்கும் யூதர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த ஒரு ஒப்பந்தமாக, உடன்படிக்கையாக இருந்தது என்று ஆழ்ந்து சிந்திக்கும் வகையில் புரிந்துகொள்ளப்பட முடியும் (உபா. 4:13; 5:2, 3ஐக் காணவும்).[11] பழைய ஏற்பாட்டை தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம் என்ற வகையில் நினைக்கவும். இயேசு அந்த ஒப்பந்தத்தை "அழித்துப்போடுவதற்கு" (ஒரு பக்கமாய்த் தூக்கி வீசுவதற்கு அல்லது அதை அழிப்பதற்கு) அல்ல, ஆனால் அதை "நிறைவேற்றுவதற்கே" வந்தார். இதை அவர் தமது வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் செய்தார். வில் எட் வார்ரென் அவர்கள், "அவர் அதன் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார், அவர் நியாயப்பிரமாணத்தின் நியமனங்களைக் கடைப் பிடித்தார், மற்றும் நியாயப்பிரமாணத்தின் நோக்கங்களை நிறைவேற்றி னார் (கலா. 3:19; 5:14)" என்று எழுதினார்.[12]*

*ஒரு நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கை/ஒப்பந்தம் என்பது இனியும் கட்டுப்படுத்துகிற உடன்படிக்கையாக/ஒப்பந்தமாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு இடத்தை வாங்குவதற்கென்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுகையில் நடப்பது என்ன என்று ஆழ்ந்து சிந்தியுங்கள். நீங்கள் அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் யாவற்றையும் (எல்லாத் தொகையையும் செலுத்துதல் உட்பட) நிறைவேற்றிய பின்பு, அது ஒரு* <u>நிறைவேற்றப்பட்ட</u> *ஒப்பந்தமாகி விடுகிறது; இனியும் அது உங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. அதுபோலவே, இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியபோது, அது இனியும் தேவனுடைய மக்களைக் கட்டுப்படுத் தாதவாறு நீக்கிப் போடப்பட்டது (கலா. 3:16, 19, 24, 25ஐக் காணவும்).*

*இருப்பினும், இயேசு மலையின்மீது பிரசங்கித்த வேளையில், நியாயப்பிரமாணமானது இன்னமும் அமலில் இருந்தது. விஷயம் இதுவாக இருக்கும் வரையிலும், அதன் வேண்டுகோள்களை மதிக்கும்படி இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்தார் (மத். 5:19, 20). இயேசு மறுப்பு தெரிவித்தது நியாயப்பிரமாணத்திற்கல்ல ஆனால் நியாயப்பிரமாணத்தை யூதர்கள் தவறாக விளக்கப்படுத்தியதற்கே.*

*தொடர்ந்து வந்த வசனங்களில் இயேசு கட்டளைகளைக் கடைப்பிடிப்*

*பதற்கு அவசியமாயிருந்த இருதயம் போன்ற மையப்பகுதியான எண்ணப் போக்குகளுக்கான நியாயப்பிரமாணத்தின் பல்வேறு கட்டளைகளை விரிவாக்கினார். அவர் வேதபாரகர் மற்றும் பரிசேயர்களால் மக்களுக்குப் போதிக்கப்பட்டு இருந்த வழிமுறைகளுக்கும் தமது வழிமுறைகளுக்கும் இருந்த வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பேசினார்.*

***கொலை - மற்றும் கோபம் (மத். 5:21-26)***

*பத்துக் கட்டளைகளில் ஆறாவது கட்டளையானது, "கொலை செய்யா திருப்பாயாக" என்று கூறியது (யாத். 20:13; உபா. 5:17). இந்த அடிப்படை நிபந்தனையானது புதிய ஏற்பாட்டில் நியமிக்கப்பட்டு இருந்தது (ரோமர் 13:9), ஆனால் இயேசு கொலைக்கான நோக்கத்திற்கும், கொலைக்கு வழிநடத்துகிற சூழ்நிலைக்கும் எதிரான ஒரு எச்சரிக்கையை உள்ளடக்கும் படி தொடக்கக் கட்டளையை விரிவாக்கினார் (மத். 5:22). அவர்களின் மாறுபாடுகளைக் குறித்து - உடனடியாக - செயல்படுவதற்கு பலத்த கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்த எல்லாருக்கும் வேண்டுகோள் விடுத்தார் (வ. 23-26).*

***விபசாரம் - மற்றும் இச்சை (மத். 5:27-30)***

Decalogue[13]*(பத்து கட்டளையி)ன் ஏழாவது கட்டளையானது, "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்று அறிவித்தது (யாத். 20:14; உபா. 5:18). இந்த ஆணையும் இயேசுவின் புதிய ஏற்பாட்டில் ஒரு பகுதியாக உள்ளது (ரோமர் 13:9), ஆனால் மீண்டும் கிறிஸ்து, இதை உண்டாக்குகின்ற விஷயத்தை உள்ளடக்குவதற்காக இக்கட்டளையை விரிவாக்கினார்: இந்த விஷயத்தில் இது இச்சை என்பதாக உள்ளது (மத். 5:28). அவர் தமது பின்பற்றாளர்களிடத்தில், அவர்களின் வாழ்வில் தடைசெய்யப்பட்ட விருப்பம் எதையும் ஊக்கப்படுத்துகின்ற எதையும் "கிழித்துப் போடும்படி" கூறினார் (வ. 29, 30).*[14]

***விவாக ரத்து - மற்றும் காரணம் (மத். 5:31, 32)***

*விவாக ரத்து என்ற பாடக் கருத்தின் தொடர்பாக இயேசு விபசாரத் தைப் பற்றி அதிகம் கூறவேண்டியிருந்தது.*[15] *அவர், "தள்ளுதற்சீட்டை" கொடுத்து விடுதல் பற்றிய கட்டளையான உபாகமம் 24:1-4ல் இருந்து மேற்கோள் காண்பித்தார் - இந்தக் கட்டளை புதிய ஏற்பாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. வேதபாரகர்கள் சிலர், "எக்காரணத்திற்காக வும்" (மத். 19:3) விவாக ரத்துச் செய்வதை நியாயப்படுத்துவதற்காக உபாகமம் 24:1-4ஐ விளக்கப்படுத்தினார்கள், ஆனால் விவாக ரத்துச் செய்வதற்கு திருமணத் துணைவர்களில் ஒருவருடைய பாலியல் ரீதியான உண்மையற்ற தன்மை*[16] *மட்டுமே வேத வசனரீதியான காரணமாக உள்ளது என்று இயேசு கூறினார் (வ. 32).*[17]

***ஆணையிடுதல் - மற்றும் நேர்மைத்தன்மை (மத். 5:33-37)***

*பரிசுத்தமான ஆணையிடுதல் என்பது அடுத்த எதிர் ஒப்பீடாக*

*இருந்தது. வசனம் 33ல் இயேசுவின் மேற்கோளானது, லேவியராகமம்19:12; எண்ணாகமம் 30:2; மற்றும் உபாகமம் 23:21, 23 போன்ற வேதவசனப் பகுதிகளை யூதத்துவப் போதகர்கள் எவ்வாறு தொகுத்துரைத்தார்கள் என்பது பற்றியதாக உள்ளது. யூதர்கள் சில ஆணைகளை அனுமதித்தும், சில ஆணைகளைத் தடை செய்தும் இருந்தார்கள், ஆனால் இயேசு "பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்" என்று மட்டும் எளிமையாக கூறினார் (மத். 5:34; யாக். 5:12ஐக் காணவும்).[18] கிறிஸ்துவின் சீஷர்கள் உண்மையைக் கூறுவதில் சீராயிருக்க வேண்டும், அவர்கள் தங்கள் வார்த்தைகளைப் பிறர் நம்ப வேண்டும் என்பதற்காக ஆணையிடுதலை அண்டுதல் என்பது அனாவசியமானதாக உள்ளது.*

***பழிக்குப்பழி - மற்றும் எதிர்த்து நிற்காமை***
***(மத். 5:38-42; லூக். 6:29, 30, 34)***

*இதுவரையிலும் இயேசு கூறியவைகள், அவர் உரையைக் கேட்டவர் களைத் தாங்கள் அவர் கூறுவதைச் சரியாகத்தான் கேட்கின்றோமா என்று வியப்படையச் செய்திருக்க வேண்டும். அப்படியானால், அவரது கடைசி இரண்டு எதிர் ஒப்பீடுகள் அவர்களை முற்றிலும் திகைப்படையச் செய்திருக்கும்.*

*அடுத்த எதிர் ஒப்பீடானது, யாத்திராகமம் 21:24; லேவியராகமம் 24:20 மற்றும் உபாகமம் 19:21 ஆகியவற்றில் காணப்படுகிற "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்" என்ற கொள்கையைப் பற்றிச் செயல்பட வேண்டியதா யிருந்தது (மத். 5:38). பழைய ஏற்பாட்டின் இந்த அறிவுறுத்துதல் அலுவலக ரீதியான நியாயத்தீர்ப்புகளுக்குப் பொறுப்பானவர்களை நோக்கி அடிப் படையில் திருப்பப்பட்டிருந்தது; அளிக்கப்பட்ட தண்டனையை ஒரு வரை யறைக்குள் வைப்பது என்பது ஒரு நோக்கமாயிருந்தது. துரதிர்ஷ்டவசமாக, யூதர்கள் தங்கள் தனிப்பட்ட பழிதீர்த்துக் கொள்ளுதல்களை நியாயப் படுத்திக் கொள்வதற்கு இந்தப் போதனையை ஏற்புடையதாக்கி யிருந்தார்கள்.[19]*

*இயேசு, பழிக்குப் பழி மற்றும் தனிப்பட்ட வஞ்சம் தீர்த்தல் ஆகிய வற்றிற்கு எதிராகப் போதித்தார். அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அவர்கள் பிறருடன் உடன்படுவதற்கு "இரண்டாவது மைல் தூரமும் செல்லும்படி"யும் (மத். 5:41ஐக் காணவும்), அவசியப்பட்டால் தவறாக நடத்தப்படுவதைச் சகித்துக் கொள்ளும்படியும் கட்டளையிட்டார் (மத். 5:39-42;[20] 1 கொரி. 6:7ஐக் காணவும்).*

***விரோதிகள் - மற்றும் அன்பு (மத். 5:43-48;***
***லூக். 6:27, 28, 33, 34, 36)***

*அடுத்து, இயேசு விரோதிகளை நடத்துதல் பற்றிப் பேசினார். இந்த எதிர் ஒப்பீட்டிற்கும் இதற்கு முந்திய எதிர் ஒப்பீட்டிற்கும் இடையில் ஒரு நெருக்கமான உறவு உள்ளது.[21]*

*நியாயப்பிரமாணமானது, "உனக்கடுத்தவனை சிநேகிப்பாயாக" என்று கட்டளையிட்டது (லேவி. 19:18). இது, ஒருவன் தன் "அயலானை"*

*நேசிக்கும் வரையிலும் அவன் தன் விரோதியை வெறுத்தல் சரியானதே என்று அர்த்தப்படுத்துவதாக யூதத்துவப் போதகர்கள் விளக்கப்படுத்தி யிருந்தார்கள் (மத். 5:43) - இது பழைய ஏற்பாட்டில் காணப்பட்டிராத ஒரு ஆணையாகும்.*[22]

*ஒருவன் தன் அயலானை நேசிக்கும் கொள்கையை இயேசு இருதயப் பூர்வமாக அங்கீகரித்து, இதைத் தமது புதிய ஏற்பாட்டின் அங்கமாக்கினார் (மத். 22:39; ரோமர் 13:8-10; கலா. 5:14; யாக். 2:8). ஆயினும், அவர் விரோதி களை வெறுத்தல் என்ற கொள்கையில் உத்வேகமாகக் கருத்து மாறுபட்டார். அவர் தமது சீஷர்களுக்கு, அவர்கள் தங்கள் விரோதிகளின் மீது அன்புகூர்ந்து அவர்களுக்காக ஜெபிக்கும்படியும், தேவனைப் போன்றே எல்லா மக்களின் தேவைகள் குறித்தும் அக்கறை கொள்ளும்படியும் போதித்தார் (மத். 5:44-48).*[23]

## *"ஆனால் நீங்கள் ... ம் பொழுது"*
## *(மத். 6:1-18)*

*முந்திய பிரிவில் இயேசு தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், அவர்களின் நீதியானது "வேதபாரகர்கள் பரிசேயர்களின் நீதியை" விட அதிகமாயிருக்கும்படி அனுமதிக்க வேண்டும் என்று புத்திகூறினார் (மத். 5:20). வேதபாரகர் பரிசேயர் ஆகியோருடைய இரக்கத்தின் செயல்கள், தேவனிடமிருந்து புகழ்ச்சியைப் பெறுவதற்குப் பதிலாக மனிதர்களிட மிருந்து புகழ்ச்சியைப் பெற வேண்டும் என்பதற்காகவே செய்யப்பட்டன என்பது அவர்களின் குறைபாடாக இருந்தது. இவ்விதமாக இயேசு, தேவனுக்குக் கீழ்ப்படிதலில் தக்க நோக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்: "மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தை[நீதியை*[24]*]ச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை" (6:1). பின்பு இயேசு தாம் அர்த்தப்படுத்திய கருத்திற்கு மூன்று விவரிப்புகளைக் கொடுத்தார்.*

### *தர்மம் கொடுத்தல் (வ. 2-4)*

*முதலில் இயேசு, தர்மம் கொடுத்தல் பற்றிய யூதத்துவ நடைமுறையைப் பற்றிப் பேசினார். "தர்மம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அடிப்படையில் "இரக்கத்தின் செயல்" என்று அர்த்தப் படுகிறது.* "Alms" *என்ற ஆங்கில வார்த்தையும், "தர்மம்" என்ற தமிழ் வார்த்தையும் ஏழைக்குத் தரப்படுகிற தர்மத்தைக் குறிப்பிடுகிறது. ஏழைக்குக் கொடுத்தல் என்பது ஒரு பரிசுத்த கடமை என்று பழைய ஏற்பாடு போதித்தது (உபா. 15:11), ஆனால் சில யூதர்கள் தங்கள் கொடுத்தலை விளம்பரப்படுத்தினார்கள் (மத். 6:2). இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் அமைதியாகப் பகிர்ந்து அளிக்க வேண்டும், தாங்கள் கொடுத்தல் பற்றி [பிறரின்] கவனத்தை ஈர்க்கக் கூடாது என்று வலியுறுத்தினார் (வ. 3, 4).*

*சிலர், "வலது கை" மற்றும் "இடது கை" (வ. 3) அத்துடன் "அந்தரங்கம்"*

*(வ. 4) என்பவை பற்றிய இயேசுவின் போதனை, கிறிஸ்தவர்கள் தாங்கள் எவ்வளவு கொடுக்கின்றார்கள் என்பதை ஒருவரும் அறியாதிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும்படி அர்த்தப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளுகின்றார்கள். இவ்வசனப்பகுதியை இவ்விதமாகக் கண்ணோக்குதலானது, இயேசுவின் முந்திய போதனையான மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, "... உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" (5:16ஐக் காணவும்) என்ற போதனைக்கு எதிராயிருப்பதாகக் காணப்படும்.[25] மெக்கார்வி அவர்கள், "இந்தக் கட்டளை விளம்பரத்தைத் தடை செய்வதில்லை ஆனால் விளம்பரத்தை விரும்பும் ஆவியைத்தான் தடை செய்கிறது" என்று எழுதியது சரியே என்று நான் நம்புகின்றேன்.[26]*

***ஜெபித்தல் (வ. 7-15)***

*இயேசுவின் இரண்டாவது விவரிப்பு ஜெபத்தைப் பற்றியதாக இருந்தது. அவர், மாயக்காரர்கள் தங்கள் ஜெபங்களை வெளியரங்கமாகக் காட்சிப்படுத்துவதைக் கண்டனம் செய்து, தமது சீஷர்கள் உள்ளரங்கமாக, தனிப்பட்ட வகையில் ஜெபங்களை ஏறெடுக்கும் நடைமுறையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார் (6:5, 6).*

*இயேசு ஜெபத்தைப் பற்றிய பாடக்கருத்தை எடுத்துரைத்தபோது, மற்ற சில உற்றுநோக்குதல்களையும் கூட்டினார்: அவர் "வீண்வார்த்தைகளை அலப்புதல்" (வ. 7) என்ற நடைமுறையைக் கண்டனம் செய்தார், மற்றும் அவர் தமது உரையைக் கேட்டவர்களுடன் ஒரு மாதிரி ஜெபத்தைப் பகிர்ந்துகொண்டார் (வ. 9:13).[27] மாதிரி ஜெபத்தில் மன்னித்தல் பற்றிய ஒரு வரியும் உள்ளடங்கியிருந்தது, இது பிறரை மன்னித்தலின் அவசியம் பற்றி சிந்தனையைத் தூண்டும் வார்த்தைகளைப் பேசுவதற்குக் கிறிஸ்துவைத் தூண்டியது (வ. 14, 15).*

***உபவாசித்தல் (வ. 16-18)***

*மூன்றாவது விவரிப்பு உபவாசித்தலைப் பற்றியதாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் உபவாசித்தல் பற்றி குறிப்பிட்ட கட்டளை எதுவும் இருந்ததில்லை, ஆனால் யூதர்களின் பிரமாணத்தில் பாவநிவாரண நாளில் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களைத் "தாழ்மைப்படுத்த" வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது (லேவி. 16:29, 31), மற்றும் இதைச் செய்வதற்கு உபவாசித்தல் என்பது ஒரு வழிமுறையாக இருந்தது (சங். 35:13). பிந்திய ஒருவேளையில், நாடளாவிய அழிவுகளை நினைவுகூருவதற்கு உபவாசித்தல்கள் நிலைநாட்டப்பட்டன (சக. 8:19). இயேசுவின் காலத்தின்போது, பரிசேயர்கள் வாரம் இருமுறை உபவாசித்தார்கள் (லூக். 18:12). அந்த நாட்களில், அவர்கள் தங்களையே "உபத்திரவப்படுத்திக் கொள்வதை" ஒவ்வொருவரும் அறியச் செய்வதை அவர்கள் நிச்சயப்படுத்திக் கொண்டார்கள். இயேசு தமது உரையை கேட்டவர்களிடத்தில், "நீங்கள் உபவாசித்தால் மற்றும் உபவாசிக்கும்போது அதை உங்களுக்குள் காத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார் (வ. 16-18).*

## முடிவுரை

*மலைப்பிரசங்கமானது இன்றைய நாட்களில் இன்னமும் ஒரு அறைகூவலாகவே உள்ளது, ஆனால் நம்மில், இதன் போதனைகளுக்குப் பழக்கமுள்ளவர்கள், முதன் முதலில் இவ்வார்த்தைகளைக் கேட்டவர்கள் மீது இவைகள் ஏற்படுத்தியிருக்கக் கூடிய செயல்வலிவை முழுவதுமாகப் புரிந்துகொள்ள இயலாது. சொற்றொடரின் எந்த விளக்கத்தின்படியாகவும் மலைப்பிரசங்கமானது புரட்சிகரமானதாகவே இருந்தது. இது முழுவதும் இல்லையென்றாலும், இதன் பெரும்பான்மையான பகுதியானது, எல்லாமுமாக இல்லாவிட்டாலும், இயேசுவின் உரையைக் கேட்டவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கேட்டிருந்த எல்லாவற்றுடனும் நேர்மாறாகச் சென்றது. இயேசுவின் போதனையானது இன்னமும் இவ்வுலகத்தால் பிரியமாகப் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு நேர்மாறான தாகவே செல்லுகிறது.*

*நாம் நமது அடுத்த பாடத்தில், இந்தப் பிரசங்கம் பற்றிய நமது சுருக்கமான ஆய்வை முடிப்போம் - ஆனால் இதன் சத்தியங்களை உங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு அது வரையிலும் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். இந்த போதனைகள் அந்தக் காலத்தில் இயேசுவின் சீஷர்களாக இருந்தவர்களை நோக்கி (மத். 5:1, 2) - அத்துடன் அங்கிருந்த திரளான கூட்டத்தாரை (மத். 7:28) நோக்கி - விசேஷமாய்த் திருப்பப்பட்டன, ஆனால் இவைகள் நம் ஒவ்வொருவருக்காகவும் பாதுகாத்து வைக்கப்பட்டு இருக்கின்றன. கிறிஸ்து, "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" என்று கூறினார் (மத். 7:24). நமது படிப்பின் மூலம், நீங்கள் அவருடைய வசனங்களைக் "கேட்டுக் கொண்டு" இருக்கின்றீர்கள். அவற்றின் மீது நீங்கள் செயல்படத் தொடங்கி விட்டீர்களா?*

---

*குறிப்புகள்*

*[1]பிரசங்கத்தின் இந்தப் பகுதியை ஒவ்வொரு எழுத்தாளரும் ஏவுதல் பெற்ற தமது நோக்கங்களுக்குத் தக்க வகையில் முன்வைத்தார்கள். மத்தேயுவின் பிரசங்க விவரத்தில் காணப்படுபவைகளில் ஆறு வசனங்கள் மாத்திரம் லூக்கா சுவிசேஷத்தில் ஏதாவது ஒரு இடத்தில் காணப்படுகின்றன. [2]பெரும்பான்மை யான பிரசங்கியார்கள், ஒரு பிரசங்கத்தின்போது ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காக, சற்றே மாறுபட்ட வார்த்தைகளில் சிந்தனைகளைத் திரும்பக்கூறும் பழக்கத்தைக் கொண்டுள்ளார்கள். மத்தேயுவும் லூக்காவும் மாறுபடுகின்ற வேளைகளில், ஒருவேளையில் இயேசு அக்கருத்தைக் கூறியதை மத்தேயு அறிவித்து (அதே பிரசங்கத்தின்) இன்னொரு வேளையில் இயேசு அதே கருத்தைக் கூறியதை லூக்கா அறிவித்து இருக்கலாம். [3]ஏற்கனவே, எடுத்துரைக்கப்பட்டபடி, லூக்கா சுவிசேஷத்தில் காணப்படாத சில வசனங்கள் மத்தேயு சுவிசேஷத்தில் உள்ளன. மத்தேயு சுவிசேஷத்தில் காணப் படாத ஏழு வசனங்கள் லூக்கா சுவிசேஷத்தில்*

*உள்ளன என்பதும் சுட்டிக் காண்பிக்கப்பட வேண்டும். [4]"கலிலேயாக் கடல்" என்ற துணைப் பாடத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும். [5]இந்த மற்றும் அடுத்த பாடத்தின் தொடக்கத்தில் உள்ள படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் எண் 8,9ல் உள்ள வரைக்குறிப்புகளைக் காணவும். [6]மலைப் பிரசங்கத்திற்குச் சற்றுப் பின்பு, இரு சுவிசேஷ விவரங்களிலும், இயேசு கப்பர்நகூம் ஊரில் இருந்த ஒரு நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்கினார் (மத். 8:5-13; லூக். 7:1-10). [7]மத்தேயு 5:1; 8:1, 5 ஆகியவற்றை லூக்கா 6:17, 20; 7:1 ஆகியவற்றுடன் ஒப்பிடவும். [8]உங்கள் தனிப்பட்ட படிப்பில், நீங்கள் இந்தப் பிரசங்கத்தின் இரு பதிப்புகளை யும் கவனத்துடன் ஒப்பிட்டுக் காண விரும்பலாம்: இவை எவ்வாறு ஒருமித்துள்ளன? இவை எவ்வாறு மாறுபடுகின்றன? விசேஷமாக லூக்கா சுவிசேஷத்தில் அடங்கி யிருந்து மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படாத ஒரு சில நிகழ்ச்சிகளைக் கவனிக்கவும். [9]மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் உள்ள பாக்கியங்கள் பற்றிய விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், "ஏழை" மற்றும் "ஐசுவரியவான்" என்பதற்கான லூக்காவின் குறிப்புகள் நிதிநிலை சார்ந்தவற்றைக் குறிப்பிடாமல், ஆவிக்குரிய நிலையைச் சுட்டிக்காட்டுவதாயிருப்பதைக் கவனிக்கலாம். [10]மத்தேயு 5:13-16ஐப் பற்றிய ஒரு விவரமான படிப்பிற்கு, அடுத்து வரும் "நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்" மற்றும் "உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது" என்ற பிரசங்கங்களைக் காணவும்.*

*[11]உடன்படிக்கைகள் பற்றிய அதிகமான கருத்துக்களுக்கு இன்றைக்கான சத்தியத்தின் வெளியீடான "இரட்சிப்பைப் புரிந்துகொள்வது எப்படி?" என்ற புத்தகத்தில் பக்கம் 14 முதல் 26 வரையுள்ள "அதிகாரமுடைமை" என்ற பாடத்தில் காணவும்.* [12]Will Ed Warren, Class Syllabus, *The Life of Christ: The Synoptic Gospels*, Harding University, 1991, 26. [13]"Decalogue" *என்பது பின்வரும், இரு கிரேக்க வார்த்தைகளிலிருந்து வருகிறது:* deka *("பத்து") மற்றும்* logos *("வார்த்தை"). இவ்விதமாக இது, "பத்து வார்த்தைகள்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் இது பத்துக் கட்டளைகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. [14]இயேசு மத்தேயு 5:29, 30ல் உடல் உறுப்புக்களைச் சிதைப்பதை ஊக்கப்படுத்த வில்லை; அப்படிப்பட்ட செயல், உடலானது தேவனுடைய ஆலயமாக உள்ளது என்ற வேதாகமத்தின் போதனையை (1 கொரி. 6:19; 3:16, 17) மீறுவதாக இருக்கும். உடலின் உறுப்புக்களை வெட்டியெடுத்தல் என்பது இருதயத்தின் நிலைமையை மாற்றாது (மத். 15:19). இயேசு தமது கருத்தை நிலைநாட்டுவதற்காக மிகை ஒப்புமையை(மிகையான கூற்றை)ப் பயன்படுத்தினார். [15]மத்தேயு 5:31, 32 வசனங்கள் முந்திய மூன்று வசனங்களுடன் உள்ளடக்கப்பட முடியும் (மற்றும் அநேகமாக அவ்வாறே செய்யப்பட வேண்டும்). வசனம் 32ல் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றுள்ளதால், நான் இந்த வசனங்களைத் தனியாக பட்டியலிட்டுள்ளேன்.* [16]NASB*யில்* "unchastity" *என்றுள்ளது, ஆனால் கிரேக்க மொழி வசனத்தில் "வேசித்தனம்" என்பதற்கான வார்த்தையே உள்ளது (*KJV*யில் காணவும்). [17]இந்தப் பாடக் கருத்து மத்தேயு 19:3-9ல் விரிவாக்கப்பட்டுள்ளது, இது பின்வரும் புத்தகம் ஒன்றில் கூறிமுடிக்கப்படும். [18]இது குடியுரிமை சார்ந்த ஆணையிடுதல்களைத் தடுப்பதில்லை. சனதெரீன் சங்கத்தாரால் விசாரிக்கப்பட்டபோது, இயேசு ஒரு ஆணையிடுதலின் கீழ்தான் பதில் அளித்தார் (மத். 26:63, 64). [19]துரதிர்ஷ்டவசமாக, சில தனிநபர்கள் இன்னமும் இன்றைய நாட்களில் தனிப்பட்ட வஞ்சம் தீர்த்துக் கொள்ளுதலை நியாயப்படுத்துவதற்குப் பழைய ஏற்பாட்டின் இந்தப் போதனையைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றார்கள். [20]வசனங்கள் 39முதல் 42வரை உள்ளவை மலைப் பிரசங்கத்தின் மிகமுக்கிய மான அறைகூவல்களாக உள்ளன. இயேசு தமது உயிர் மீதான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது இதில்*

*உள்ளடங்கியிருக்கிற கொள்கைக்கான மிகச் சிறந்த விவரிப்பாகும். சில தகுதிகள் தேவைப்படுவதும் உண்மையே: தீமையை முற்றிலுமாக எதிர்த்து நிற்காதிருத்தல் என்பது தவறு செய்வதை ஊக்கப்படுத்து வதாகிவிடும். ஆயினும், இவ்வசனப்பகுதியை இதன் போதனையினுடைய மாற்றம் சார்ந்த இயல்பைத் தகுதிப்படுத்தாதவாறு இருக்கக் கவனமாயிருங்கள்.*

[21]*லூக்கா சுவிசேஷ விவரமானது இரு பகுதிகளை ஒன்றாகக் கலக்கிறது (லூக். 6:27-30, 32-36).* [22]*பழைய ஏற்பாடானது இஸ்ரவேலர்களின் விரோதிகள் தேவனுடைய மக்களை நடத்திய விதத்திற்காக அவர்களைத் தண்டிக்கும்படிக் கட்டளையிட்டது (எடுத்துக்காட்டாக, உபா. 23:3-6ஐக் காணவும்), ஆனால் அது யூதர்கள் தங்கள் விரோதிகளை வெறுக்க வேண்டும் என்று போதிக்கவில்லை. அவர்கள் மக்களை அல்ல, ஆனால் "தீமையை வெறுக்க வேண்டியவர்களாய்" இருந்தார்கள் (சங். 97:10; நீதி. 8:13).* [23]*தேவன் "பூரண சற்குணராயிருக்கிறது" போல நாமும் "பூரண சற்குணராய் இருக்க வேண்டும்" என்ற அறைகூவலானது (மத். 5:48) பலரைக் கவலைப்பட வைத்துள்ளது, ஏனெனில் நம்மில் எவரும் பாவமற்று இருத்தல் என்ற கருத்துணர்வில் பூரணராயிருக்க இயலாது (ரோமர் 3:23). லூக்கா சுவிசேஷ விவரம், தேவன் "இரக்கம் உள்ளவராய்" இருப்பது போல் நாமும் "இரக்கமுள்ளவர்களாய்" இருக்க வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறது (லூக். 6:36). இரக்கத்தின் விஷயத்தில் நாம் தேவனைப் போல் "பூரணப்பட்டவர்களாய்" இருக்க வேண்டும் - அதில் நாம் நீதியுள்ளவர்கள் மற்றும் அநீதியுள்ளவர்கள் ஆகிய இரு சாரார் மீதும் இரக்கம் காண்பிக்கின்றோம் - என்பதே இங்கு போதனையாக உள்ளது (மத். 5:45).* [24]KJV*யில் மத்தேயு 6:1ல்* "do ... alms" *என்றுள்ளது, ஆனால் மிகச் சிறப்பான கையெழுத்துப் பிரதிகளில்* "do ... righteousness" *என்றுள்ளது. வசனம் 1, பொதுவான புத்தமதியை முன்வைக்கிறது; பின்பு தொடர்ந்து வரும் வசனங்கள் அந்தப் புத்திமதியை விவரிக்கின்றன.* [25]*காணப்படுகிறவைகளைச் செய்வதற்கும் (மத். 5:16) காணப்பட வேண்டும் என்பதற்காகச் செய்வதற்கும் (6:2, 5, 16ஐக் காணவும்) வேறுபாடு உள்ளது.* [26]J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 251. [27]*இந்த ஜெபம் பொதுவாக "கர்த்தருடைய ஜெபம்" என்று அழைக்கப்படுகிறது, ஆயினும் நாம் அறிந்தவரையிலும் இயேசு இந்த ஜெபத்தை உண்மையில் ஒருபோதும் ஜெபித்ததில்லை. இந்த ஜெபத்தை "மாதிரி ஜெபம்" என்று கூறுவது இன்னும் சிறப்பான சொற்றொடராக இருக்கும். இது "சீஷர்களின் ஜெபம்" என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இந்த ஜெபத்தின் அதிகமான பகுதிகள் இன்னொரு சந்தர்ப்பத்தில் திருப்பி உரைக்கப்பட்டன (லூக். 11:2-4). இவ்விரு சந்தர்ப்பங்களிலும் இது பொதுவான ஆராதனைகளில், அறிவாற்றல் இன்றி வெறுமனே திருப்பித் திருப்பிக் கூறப்படும் ஜெபம் என்பதாக இயேசுவால் தரப்படவில்லை. இந்த ஜெபத்தை மனனமாக கூறிக்கொண்டிருத்தல் என்பது "வீண் வார்த்தைகளை அலப்புதல்" பற்றிய இயேசுவின் போதனையை (மத். 6:7) மீறுவதாகிவிடக்கூடும். இந்த ஜெபமானது எந்த ஒரு அமைவிலாவது இன்றைய நாட்களில் பயன் படுத்தப்பட வேண்டும் என்றால், இதில் உள்ள ஒரு சொற்றொடர் மாற்றப்பட வேண்டியதாக உள்ளது. நாம் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (வ. 10) என்று ஜெபிக்க முடியாது, ஏனெனில் ராஜ்யம்/சபை என்பது ஏற்கனவே வந்துள்ளது. (மாற். 9:1 மற்றும் அப். 1:8 ஆகிய வசனங்களில் இயேசுவின் வாக்குத்தத்தத்தையும் அப். 2:1-4ல் அதன் நிறைவேற்றத்தையும் கவனிக்கவும்.) இந்த ஜெபத்தைப் பற்றிய ஒரு விவரமான படிப்பிற்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 7" என்ற புத்தகத்தில் "மாதிரி ஜெபம்" என்ற பாடத்தில் காணவும்.*

*23*

# நீங்கள் நினைப்பதை விட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்

## மத்தேயு 5:13, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*உப்பையும் வெளிச்சத்தையும் பிரதிநிதிப்படுத்துவதற்காக உங்கள் முன்பாக கொஞ்சம் உப்பையும், ஒரு மெழுகுவர்த்தியையும் வைப்பதாகக் கற்பனை செய்து பார்க்கின்றேன். உப்பும் வெளிச்சமும் இந்தப் பூமியில் உள்ள மிகவும் பொதுவான சாதாரணமான பொருட்களில் இரண்டாக உள்ளன. உலகின் எந்தப் பகுதிக்கு நீங்கள் சென்றாலும், நீங்கள் உப்பையும் வெளிச்சத்தையும் காண்பீர்கள்.*

*இவைகள் இயேசுவின் நாட்களிலும் சாதாரணமான பொருட்களாகவே இருந்தன. இயேசு, ஒரு சிறுபையனாக இருந்தபோது ஒவ்வொரு நாளும் தமது தாயார் உணவில் உப்பிடுவதையும், ஒவ்வொரு இரவும் அவர் தமது சிறு விளக்குகளை எரிய விடுவதையும் பார்த்திருப்பார். ஆயினும் அவைகள் எவ்வளவு சாதாரணமானவைகளாய் இருந்த நிலையிலும் இயேசு கிறிஸ்தவர்களுக்கு அவர்களுக்கான மாபெரும் பாராட்டுரைகளில் ஒன்றைக் கொடுப்பதற்கு - மற்றும் அவர்களுக்கு மாபெரும் அறைகூவல்களில் ஒன்றை முன்வைப்பதற்கு - உப்பையும் வெளிச்சத்தையும் பயன்படுத்தினார்:*

> *நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.*
>
> *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்*

*திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5:13-16).*

இந்த வசனங்கள் மலைப் பிரசங்கத்தின் இரண்டாவது பிரதான பிரிவாக உள்ளன. அப்பொழுதுதான் கிறிஸ்து தமது சீஷராயிருப்பதற்கான பண்புகளின் வகையை வரைக்குறிப்பிடும் பாக்கிய வசனங்களைக் கொடுத்திருந்தார். அடுத்து, அவர் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"; "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று கூறுகையில், அந்தப் பண்பின் *செயல் விளைவைப்பற்றி* எடுத்துரைத்தார். இது ஒருவேளை, கிறிஸ்தவரின் செல்வாக்கின் வல்லமையைப் பற்றி வேதாகமத்தில் காணப்படுகிற மாபெரும் வசனப் பகுதியாக இருக்கலாம்.

நான் சிலவேளைகளில் இந்தப் பாடத்தை, ''உங்களை நீங்கள் குறைவான விலைக்கு விற்று விடாதீர்கள்" என்று தலைப்பிட்டு அழைப் பதுண்டு.[1] நீங்கள் உங்களைப் பற்றி முக்கியமற்றவராக நினைக்கலாம், ஆனால் நான் உங்களுக்குச் சிலவற்றைச் சொல்ல என்னை அனுமதியுங்கள்: உப்பும் வெளிச்சமும் மாபெரும் முக்கியத்துவம் உடையவைகளாக இருந்தன மற்றும் இருக்கின்றன. இயல்பான உடல் செயல்படுவதற்கு உப்பு தேவைப்படுகிறது,[2] மற்றும் இயல்பான வாழ்வானது வெளிச்சமின்றி இருக்க முடியாது. சூரியன் திடீரென்று ஒழிந்துபோய்விடும் என்றால், ஒரு சில மணிநேரங்களில் நமது [பூமியென்ற] கோளானது பனிக்கட்டியினால் மூடப்பட்டுவிடும். நீங்கள் கிறிஸ்தவர் என்ற வகையில் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கின்றீர்கள் என்று இயேசு கூறியபோது, நீங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் - மற்றும் அவரது நோக்கமானது நீங்கள் இல்லாமல் நிறைவேற்றப்பட முடியாது - என்று கூறினார்.

நீங்கள் உட்பட ஒவ்வொரு நபரும் செல்வாக்கு உடையவர்களாய் இருக்கின்றோம். மிகச் சிறிய முடிகூட ஒரு நிழலை வீசுகிறதுபோல, மிகச் சிறிய கூழாங்கல் கூட தண்ணீரில் வட்டலைகளுக்குக் காரணமாயிருப்ப தைப் போல, நீங்கள் செல்வாக்கு உடையவர்களாய் இருக்கின்றீர்கள் - மற்றும் அந்த செல்வாக்கானது இயேசுவுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.

நீங்கள் ஆண்டவருக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைக் காண்பதற்கு இப்போது நாம் நமது வேத பாடப் பகுதிக்குச் செல்வோம். இந்தப் பிரசங்கத்தில், நாம் பூமிக்கு உப்பாக இருத்தல் பற்றிக் கலந்துரை யாடுவோம். அடுத்த பிரசங்கத்தில், நாம் உலகத்திற்கு வெளிச்சமாக இருத்தல் பற்றிப் பேசுவோம்.[3]

## ஒரு பாராட்டு

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு கூறியபோது, அவரது வார்த்தைகள் முதலாவதாக ஒரு பாராட்டாக இருந்தன. இதில்தான் நாம் ''அவர் பூமிக்கு உப்பைப் போன்றவர்'' என்ற சொல்வழக்கைப் பெறுகின்றோம்.[4]

*இயேசு இந்தப் புகழுரையை யூதத்துவ மார்க்கத் தலைவர்களை நோக்கியோ அல்லது ரோம அவையினரை நோக்கியோ அல்லது அத்தேனே நகரத்துத் தத்துவ அறிஞர்களை நோக்கியோ கூறவில்லை, ஆனால் அவர் தமது உரையைக் கேட்டுக்கொண்டிருந்த பின்வரும் மக்களைப் பார்த்துக் கூறினார்: விவசாயிகள், மீனவர்கள், வர்த்தகர்கள், மற்றும் அவர்களின் மனைவியர்கள், பிள்ளைகள். இந்த உலகத்தாரால் "சாதாரண மக்கள்" என்று அழைக்கப்பட்டவர்களை அவர் புகழ்ந்தார்.*

*"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்ற கூற்றானது, பூமியைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது, மற்றும் இது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் களைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது. இவ்வார்த்தைகளின் முக்கியத்து வத்தை மதிப்பதற்கு, நாம் வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் உப்பின் செயலை/பணிப்பாங்கைக் குறித்துப் புரிந்துகொள்ள வேண்டும்.*

### *உப்பு மதிப்புமிக்கதாக இருந்தது*

*இயேசுவின் நாட்களில் உப்பானது மதிப்புள்ளதாகக் கருதப்பட்டது. இது [பண] பரிமாற்றத்தின் ஊடகமாகவோ அல்லது ஊதியங்களை கொடுப்பதற்கோ பயன்படுத்தப்பட்டது. இதுவே, "அவர் தமது உப்பிற்குத் தகுதியானவர்" என்ற சொல்வழக்கின் ஆதாரமூலமாக உள்ளது.*[5]

*இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் - மற்றும் உப்பு மதிப்பைக் கொண்டுள்ளது. இது பூமியைப்பற்றி என்ன கூறுகிறது? இது இந்த பூமி உண்மையான மதிப்பு எதையும் கொண்டிருப்ப தில்லை என்று கூறுகிறது. இது கிறிஸ்தவர்களைப் பற்றி என்ன கூறுகிறது? இது கிறிஸ்தவர்கள் மதிப்பை/தகுதியைக் கொண்டுள்ளார்கள் என்று கூறுகிறது - மற்றும் இந்த உலகத்தின் ஒரே முக்கியத்துவமானது கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதாலேயே வருகிறது.*

*நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், நீங்கள் தேவனுடைய கண்களில் மதிப்புள்ளவராக இருக்கின்றீர்கள். உங்களை நீங்களே குறைந்த விலைக்கு விற்றுப் போடாதீர்கள்.*

### *உப்பு ருசியைக் கொடுத்தது*

*இன்றைய நாட்களில் போலவே அன்றைய நாட்களிலும், உணவிற்கு ருசியைக் கூட்டுதல் என்பது உப்பின் பயன்பாடுகளில் ஒன்றாயிருந்தது. யோபு, "ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ? முட்டையின் வெள்ளைக்கருவில் சுவை உண்டோ?" என்று கேட்டார் (யோபு 6:6). பின்பு அந்த முற்பிதா, உப்பில்லாத உணவை "அரோசிகமான போஜனம்" என்று அறிவித்தார் (வ. 7).*[6]

*பின்வரும் கதையானது, உப்பின் மாபெரும் மதிப்பிற்கான விவரிப்பாக உள்ளது:*

> *ஒரு அரசர் தமது மூன்று மகள்களிடத்திலும், தம்மை அவர்கள் எவ்வளவாக அன்புகூருகின்றார்கள் என்று கேட்டார். அவர்களில்*

*இருவர், தாங்கள் அவரை இந்த உலகத்தில் உள்ள எல்லா பொன் வெள்ளி ஆகியவற்றைவிட அதிகமாய் நேசிப்பதாகப் பதில் அளித்தார்கள். எல்லாருக்கும் இளைய மகள், தான் அவரை உப்பைக் காட்டிலும் அதிகமாய் நேசிப்பதாகக் கூறினாள். உப்பானது நாவிற்கு மிகவும் இனிமையானதாக இல்லை என்பதால், அரசர் அந்தப் பதிலில் திருப்தியடையவில்லை. ஆனால் அந்த விமர்சனத்தை மறைவாய் இருந்து கேட்டுக் கொண்டிருந்த சமையல்காரர், அடுத்த நாள் காலை உணவு எதிலும் உப்பிடாமல் இருந்தார், அந்த உணவு அரசரால் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடாதபடிக்கு சுவையற்றதாகிப் போயிற்று. பின்புதான் அவர் தமது ன்இளையதி மகளின் குறிப்புகளில் இருந்த வலிவைக் கண்டார். அவள், அவரின்றி எதுவும் நன்றாயிருக்காது என்ற வகையில் அவர்மீது அன்புகூர்ந்திருந்தாள்.[7]*

*"உப்பில்லாத" உணவை மட்டுமே உண்டு வாழவேண்டிய நிலையில் உள்ளவர்கள், உப்பைச் சேர்க்காமல் உணவின் ருசியை மேம்படுத்துவது எப்படி என்று போராடிக் கொண்டுள்ளார்கள். உப்பானது உதவிக்குப் பதிலீடாகச் செயல்படுகிறது, ஆனால் "கொஞ்சம் உப்புப் போடுதல்" என்பதைக் காட்டிலும் செயல்வலிவானது வேறு எதுவும் இல்லை.*

*"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" - மற்றும் உப்பு ருசியைக் கூட்டுகிறது. இது பூமியைப் பற்றி என்ன கூறுகிறது? இது, இந்த பூமியானது சுவையற்றதாக உள்ளது என்று கூறுகிறது, நீண்ட கால ஒட்டத்தில், உலகில் உள்ள ஒவ்வொன்றும் சுவையற்றதாகிவிடுதலே நடக்கிறது.[8] இது கிறிஸ்த வராகிய உங்களைப் பற்றி என்ன கூறுகிறது? இது, நீங்கள் வாழ்வுக்குப் பெருமகிழ்வைத் தருவதாகக் கூறுகிறது. உங்களை நீங்களே குறைந்த விலைக்கு விற்றுவிடாதீர்கள்.*

### *உப்பு பல்வகைப் பயன்பாடுகளைக் கொண்டிருந்தது*

*உப்பின் மதிப்பைப் பற்றி இன்னும் அதிகமாய்க் கூறமுடியும். எடுத்துக் காட்டாக, உப்பானது தாகத்தை ஏற்படுத்த முடியும். நீங்கள் அநேகமாக, "குதிரையை நீங்கள் தண்ணீருக்கருகில் நடத்திச் செல்ல முடியும், ஆனால் குதிரையை நீங்கள் தண்ணீர் குடிக்க வைக்க முடியாது" என்ற சொல் வழக்கைக் கேள்விப்பட்டிருக்கலாம்.[9] அந்தக் கூற்றுக்கு ஒரு பிற்சேர்க்கை அவசியமாக உள்ளது: "... ஆனால் குதிரைக்கு நீங்கள் உப்பை ஊட்ட முடியும்." நான் சிறு பையனாக இருந்தபோது, விலங்குகளைச் சந்தைகளில் காட்சிக்கு வைக்கும் வேளையில் அவ்வப்போது இதை நான் செய்திருக்கின் றேன். எனது காட்சி விலங்குகளில் ஒன்று மெலிந்துபோய்க் காணப்பட்ட தென்றால், அதற்குப் போடும் உணவில் நான் சிறிதளவு உப்பைப் போடுவேன். இது அந்த விலங்கை அதிகமாகத் தண்ணீர் குடிக்கச்செய்து உப்ப வைத்து விடும். இது நமக்கு நடைமுறைப்படக் கூடும்: கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் நடத்தும் வாழ்க்கையினால் [பிறருடைய இருதயங் களில்] ஜீவதண்ணீருக்கான தாகத்தை ஏற்படுத்த முடியும் (யோவா. 4:10-15).*

*மேலும் இயேசுவின் நாட்களில் உப்பானது சிலவேளைகளில் தூய்மையின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. மற்றும், இது*

*யூதர்களின் பலிகளில் சேர்க்கப்பட்டது (லேவி. 2:13). இவை யாவும் கிறிஸ்தவர்களின் மதிப்பைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது.*

***உப்பு ஒரு பதனப் பொருளாக இருந்தது***

*பதனப் பொருள் என்ற வகையிலான உப்பின் பயன்பாடானது, வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், உப்பின் மிக முக்கிய மான பயன்பாடாகவும், அதற்கு அதன் மாபெரும் மதிப்பைக் கொடுத்த தாகவும் இருந்திருக்கலாம். அந்த நாட்களில், நீங்கள் ஒரு நகரத்திற்குச் சென்று இறைச்சியைக் குளிர்ச்சியாகவும் புதியதாகவும் காத்துக் கொள்ளக் கூடிய ஒரு குளிர்பதனப் பெட்டியையோ அல்லது ஒரு உறைநிலைப் பெட்டியையோ வாங்க முடியாது. புதிய இறைச்சியானது விரைவிலேயே கெட்டுப் போகக்கூடியதாக இருந்தது; அதுவே இறைச்சியின் இயல்பாக இருக்கிறது.[10]*

*நான் வளர்ந்துகொண்டிருந்த வேளையில், என் குடும்பத்தார் நான் இன்றும் நினைவுகூர்ந்துள்ள ஒரு விடுமுறைப் பயணத்தை மேற் கொண்டார்கள். (நாங்கள் உறவினர்களின் வீடுகளுக்கு அவ்வப்போது செல்லுவதுண்டு, ஆனால் அதை நான் விடுமுறைப் பயணமாகக் கருதுவதில்லை.) இந்தப் பயணத்திற்கு நாங்கள் காரில் ஏறி கிழக்குமுகமாய்ச் சென்றோம், கிழக்கு ஓக்லஹாமா மற்றும் அர்க்கன்சாஸின் பகுதிகள் ஆகியவற்றில் பயணம் செய்தோம். நாங்கள் சென்றிருந்தபோது, எரிவாயுக் கம்பெனிக்காரர்கள் எரிவாயுக் குழாய்களில் பழுது நீக்கும் பணிக்காக அக்குழாய் இணைப்புக்களை எரிவாயு வராதபடி அடைத்து வைத்திருந் தார்கள் - எங்களிடத்தில் எரிவாயுவைக் கொண்டு வேலை செய்யும் ஒரு குளிர்சாதனப் பெட்டி இருந்தது. நாங்கள் வீடு திரும்பியபோது, எங்கள் குளிர்பதனப் பெட்டியில் இருந்த அத்தனை உணவு வகைகளும் கெட்டுப் போயிருந்தது. எனது தாயார், அந்தக் குளிர்பதனப் பெட்டியில் இருந்து துர்நாற்றத்தைப் போக்குவதற்குத் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார். அது தனது கதவுகள் திறந்திருக்க, எங்கள் வீட்டின் புழக்கடை யில்/பின்பகுதியில் பல வாரங்களாகக் கிடந்தது, அதன் துர்நாற்றம் போகவேண்டும் என்பதற்காக என் தாயார் காத்திருந்தார். [அதற்குப்பின்பு] நாங்கள் அந்தக் குளிர்பதனப் பெட்டியை வைத்திருந்த நாட்களில் எல்லாம், அது ஒரு தனிப்பட்ட வகையான, காரமான நெடியைக் கொண்டிருந்தது.*

*எனது நண்பர்களில் ஒருவர் கேரி என்ற பெயருடைய இளைய மகனைக் கொண்டிருந்தார். ஒருமுறை அவன் வீட்டில் தனியாக இருந்த போது, அவன் டூனா (மீன்) சான்ட்விட்ச் என்ற உணவு வகையைத் தயாரிக்க முடிவு செய்தான். அவன் அதற்காக டூனா மீன் அடங்கிய டாப்பாவைத் திறந்தபோது, அது தரையில் விழுந்தது, டூனாவும் எண்ணெயும் தரையில் விரித்திருந்த கம்பளம் முழுவதிலும் சிந்தியது. கேரி, தான் செய்திருந்ததைப் பெற்றோர்கள் அறிவதை விரும்பவில்லை, எனவே அவன் வெற்றிடத்தி னால் சுத்தம் செய்யும் கருவியை அதன் உறையில் இருந்து எடுத்து, அதைக் கொண்டு டூனாவை உறிஞ்சிச் சுத்தம் செய்தான். பின்பு அந்தக் கருவியை அதன் உறையில் இட்டு வைத்து விட்டான். நாட்கள் சென்றபோது, ஒரு*

விளங்காத, குமட்டத்தக்க நாற்றம் வீடெங்கும் நிரம்பிற்று - கடைசியில் அது எங்கிருந்து வந்ததென்று கண்டுபிடிக்கப்பட்ட வரையிலும் அது வீடெங்கும் துர்நாற்றமாய்ப் பரவிற்று.

இறைச்சியானது விரைவில் கெட்டுப்போகிறது என்று கூறும்போது, நான் எதை அர்த்தப்படுத்துகின்றேன் என்பதை நீங்கள் அறிகின்றீர்கள். இறைச்சியானது விசேஷித்த தயாரிப்பில்லையேல் புதியதாய் நிலைத்திருப்ப தில்லை [கெட்டுப்போகிறது].

வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் மக்கள் இறைச்சியைப் பதனப்படுத்துவதற்கு என்ன செய்தார்கள்? அதில் அவர்கள் உப்பை வைத்துத் தேய்த்தார்கள். மீனவர்கள் தங்கள் மீன்களை உப்புடன் சேர்த்துச் சிப்பமாகக் கட்டுவார்கள். இது மக்கள் உப்பின் சுவையைப் பெரிதும் விரும்பினார்கள் என்பதால் அல்ல; மாறாக, இறைச்சியானது கெடாதிருக்க வேண்டுமென்றால் அதில் அவர்கள் உப்பிட வேண்டி யிருந்தது.[11] உங்களில் சிலர் நீங்களாகவே ஆடுகளை வெட்டி, கெட்டு வீணாவதைத் தவிர்ப்பதற்காக, எஞ்சியுள்ள இறைச்சியைப் பதனப் படுத்தி யிருப்பீர்கள், மாட்டிறைச்சியை உப்பைக் கொண்டு பதனமிட்டு அல்லது பன்றியிறைச்சியை உப்பிட்டு[12] பதனப்படுத்தியிருப்பீர்கள்.

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" - மற்றும் உப்பானது பதனப் படுத்துகிறது. இது பூமியைப் பற்றிக் கூறுவதென்ன? இது, இந்த பூமியானது சீர்கெட்டுப் போவதாக, நாற்றம் வீசிக் கொண்டிருப்பதாக மற்றும் அழுகிக் கொண்டிருப்பதாகக் கூறுகிறது. இது உலகத்தைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலுக்கு அடிப்படையாக உள்ளது. இது எவ்வளவு கவர்ச்சி கரமானதாகத் தோன்றினாலும், உண்மையில் இது நமது கண்களுக்கு முன்பாகவே, சீர்கெட்டு சிதிலமாகிக் கொண்டுள்ளது. இந்த உலகமானது அழகிய முகத்தை முகத்திரையை அணிந்துள்ளது; ஆனால் இதை நீங்கள் நெருங்கி உற்றுநோக்கினால், இது அத்தனையும் வண்ணக்குழம்பாகவும், முகப் பூச்சுத் தூளாகவுமே உள்ளது. கண்ணைப் பறிக்கும் வண்ணங்களின் கீழாக மங்கிய, சுருக்கம் விழுந்த உண்மைத் தன்மை உள்ளது.

இந்த சத்தியமானது வேதாகம போதனையில் மட்டான அறிவு உடைய எவரொருவருக்கும் கூட ஏற்கனவே தெளிவானதாக/உறுதியானதாக உள்ளது. புள்ளியியல் விவரங்கள் அவசியமற்றவைகளாக இருக்கின்றன.[13] நீங்கள் இந்த உலகத்தின் ஒழுக்கத் தராதரங்கள் சரிந்து செல்லுவதை, நேர்மை மற்றும் நாணயம் ஆகியவற்றில் குறைபாட்டை, ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வம் குறைவுபட்டிருப்பதைக் கண்ணோக்க இயலும். மேல்பரப்பிற்குக் கீழாகக் காண்பவர்களை ஈர்க்கக்கூடிய எதுவும் இந்த உலகத்தில் இருப்பதில்லை.

இற்கு நேர்மாறாக, வேதாகமம் கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறுவ தென்ன? இது, கிறிஸ்தவர்கள் பூமியைப் பதனப்படுத்தும் வல்லமையாக இருக்கின்றார்கள் என்று கூறுகிறது.

எனது வாழ்வுக் காலத்தில், பல்வேறு காரணிகள் இந்த பூமியின் நம்பிக்கையாகவும் இரட்சிப்பாகவும் உயர்த்தப்பட்டுள்ளதைக் கண்டிருக் கின்றேன்: அறிவியல், கல்வி, மனோதத்துவம், மனோதத்துவ சிகிச்சை,

தொழில்நுட்பம், வாழ்வதற்கு மிகச் சிறந்த சூழ்நிலைகள், சட்டமியற்றுதல், சமூக சீர்திருத்தம் மற்றும் இராணுவ பலம் போன்றவை இவ்வாறு உயர்த்தப் பட்டுள்ளன. மனிதகுலமானது, இந்தத் துறைகள் யாவற்றிலும் முன்னேற்றத் தைக் கண்டுள்ளது - சிலவற்றில் தனிச் சிறப்பான முன்னேற்றத்தை கண்டுள்ளது - இருப்பினும் இந்த உலகமானது மிகவும் மோசமாகிக் கொண்டு இருப்பதாகவே காணப்படுகிறது. உண்மையான கிறிஸ்தவர்களே உலகத்தின் ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார்கள் என்று இயேசு கூறினார்.

ஒரு சிறிய அளவு உப்பானது பெரிய அளவிலான இறைச்சியைப் பதனப்படுத்த முடிவதுபோல், ஒப்புக்கொடுத்தல் உள்ள ஒரு சில கிறிஸ்தவர்கள் சமுதாயத்தைப் பதனப்படுத்த முடியும். ஆபிரகாம் மற்றும் சோதோம் கொமோரா நகரங்களின் அழிவு பற்றிய வரலாற்றை நீங்கள் நினைத்துப் பார்க்கின்றீர்களா (ஆதி. 18)? பத்து - ஒரு சிலராகிய பத்து - பேர் மாத்திரம் நீதிமான்களாக இருந்திருந்தால் அவர்கள் அந்த நகரங்களை அழிவிலிருந்து காத்திருக்கலாம் (வ. 32). பின்வரும் காட்சியைக் கற்பனை செய்யுங்கள்: ஒரு நபர், சோதோம் கொமோராவின் வர்த்தக நிறுவன அலுவலகத்திற்குச் சென்று,[14] “நீங்கள் சாதித்துள்ள பெரும்பான்மையான வைகள் மனதைக் கவரக் கூடியவையாக உள்ளன ஆனால் இந்த மாபெரும் நகரங்கள் இனியும் ஒரு நாளைக் காண வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், மலையில் வாழும் ஆபிரகாம் போன்ற பத்து நபர்களை நகரத்தினுள் கொண்டுவந்து சேர்ப்பது நல்லது” என்று கூறுகின்றீர்கள். அவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்திருப்பார்கள்? அவர்களின் எண்ணப் போக்கு எப்படியிருப்பினும், ஆபிரகாமைப் போன்ற பத்து மனிதர்கள் அந்த நகரங்களை அழிவிலிருந்து காத்திருப்பார்கள்.

நாம் ஒரு நேர்மறை முன்னெதிர்நோக்குவதற்காகச் சற்று தாமதிப் போம். (நாம் நமது அடுத்த பாடத்தில் பேசவிருக்கிற) வெளிச்சம் என்பது தான் செய்வதைக் கொண்டு செல்வாக்குச் செலுத்துகிறதாக இருக்கையில், உப்பானது தான் என்னவாக இருக்கிறதோ அதைக் கொண்டு செல்வாக்குச் செலுத்துகிறதாக இருக்கிறது. நீங்கள் அநேகமாக, நான் விவரித்துள்ள பதனப்படுத்தும் தன்மையை ஒரு சிறிய அளவில் கண்டிருக்கலாம். நீங்கள் தேவனுக்கு உண்மையான பிள்ளையாக இருக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம் (நீங்கள் அவ்வாறாக இருக்கின்றீர்கள் என்று நான் எதிர் பார்ப்புடன் நம்புகின்றேன்). நீங்கள் கிறிஸ்தவத்தை ஆர்ப்பாட்டப் படுத்துவதில்லை, ஆனால் நீங்கள் யார் என்றும் நீங்கள் எதற்கு நிலை நிற்கின்றீர்கள் என்றும் மக்கள் அறிகின்றார்கள். நீங்கள் ஒரு அறைக்குள் நடந்து செல்லுகையில், அதற்குள் பேசப்படும் பேச்சுக்களும் நகைச்சுவை களும் நிறுத்தப்படும் என்பது சாதாரணமாக நடைபெறுகிறது. மக்கள் பின்வருமாறு கூறி உங்களைச் சங்கடப்படுத்தலாம்: “நாம் அந்தக் கதையைக் கூற இயலாது. இப்போது இங்கிருப்பவரின் பெயர் என்ன? [அவர் இங்கிருப்பதால் நாம் அந்தக் கதையை கூற முடியாது]!” நீங்கள் இருக்கிறீர்கள் என்பது - நீங்கள் இருக்கின்றீர்கள் என்ற உண்மை மாத்திரமே - ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. உப்பு தான் என்னவாக உள்ளதோ, அதன் மூலம் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ளுகிறது.

இந்த உலகத்தாரால் ‘‘சாதாரண’’ மக்கள் என்று கருதப்படுபவர் களிடத்தில் இயேசு இதைக் கூறினார் என்பதை நான் மீண்டும் உங்களுக்கு வலியுறுத்த அனுமதியுங்கள். மூலமொழிப் பிரதியில், ‘‘நீங்கள்’’ என்ற வார்த்தை வலியுறுத்தப்பட்டுள்ளது;[15] இயேசு, “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக் கிறீர்கள்’’ என்று கூறினார். அவரது கூற்றானது, உள்ளடக்குவதாகவும், வெளிவைப்பதாகவும் உள்ளது: இது அவரது பின்பற்றாளர்கள் யாவரையும் உள்ளடக்குகிறது மற்றும் அவரது பின்பற்றாளர்கள் தவிர மற்ற யாவரையும் வெளிவைக்கிறது. இதை இயேசு, தமது நாட்களில் இருந்த மத, நிதிநிறுவன, சமூக அல்லது அரசியல் தலைவர்களிடத்தில் கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக அவரைப் பின்பற்ற விரும்பிய ‘‘சாதாரணமான’’ பூமியின் உப்பாயிருக்கும் மனிதர்களிடம் கூறினார் என்பதை நினைவில் வைக்கவும்.

உங்களை நீங்களே குறைந்த விலைக்கு விற்றுப் போடாதீர்கள். நீங்கள் கிறிஸ்தவராயிருந்தால், நீங்கள் விசேஷித்தவராக - மிகவும் விசேஷித்தவராக - இருக்கின்றீர்கள்!

## ஒரு அறைகூவல்

இயேசு, “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” என்று கூறியபோது, இது ஒரு பாராட்டாக இருந்தது மட்டுமின்றி, ஒரு அறைகூவலாகவும் இருந்தது. உப்புக்குத் *தனிச் சிறந்த ஒரு குணம்* இருப்பதால், அது மதிப்புள்ள தாகவும், பதனப்பொருளாயிருக்கும் பண்புள்ளதாகவும் உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கும் கூட ஒரு தனிச்சிறந்த குணம் தேவைப்படுகிறது. நாம் இந்த உலகத்தில் இருந்து *மாறுபட்டவர்களாய்* இருக்க வேண்டும் என்று கூறுதலானது இந்த குணத்தை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாக உள்ளது.

> நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).
>
> ... உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிற வன் தேவனு க்குப் பகைஞனாகிறான் (யாக். 4:4).
>
> உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1 யோவா. 2:15).

உப்பானது இறைச்சியின் அதே பொருட்களால் ஆனதாக இருந்தால், அது இறைச்சியைப் பதனப்படுத்த இயலாது. நாம் உலகத்தாரைப் போன்றவர்களாயிருந்தால், நம்மிடத்தில் பதனப்படுத்தும் குணம் எதுவும் இராது. இது நாம் விநோதமானவர்களாக[16] இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துவது இல்லை, ஆனால் நாம் தனிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது.

மக்கள் நம்மைக் கண்ணோக்கிப் பார்த்து - நாம் செய்கின்றவைகள்,

*நாம் பேசும் வழிமுறை, நாம் கலந்துரையாடும் தலைப்புக்கள், நாம் உடை அணியும் விதம், நமது சிரமங்களை நாம் சந்திக்கும் வழிமுறை ஆகியவற்றை வைத்து - நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோம் என்று கூறமுடியுமா? கிறிஸ்தவராயிருத்தல் என்பது, நாம் நமது குடும்பங்களை எவ்வாறு நடத்து கின்றோம், நாம் கடைக்காரர்களிடத்தில் எவ்வாறு பேசுகின்றோம், நாம் நமது விளையாட்டுக்களை எவ்வாறு விளையாடுகின்றோம் என்பவற்றில் செயல்விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.*

*இயேசு, "நீங்கள் சபைக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள். பெரும்பாலான சபையின் செயல் பாடுகள் சபை கூடிவரும் கட்டிடங்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன என்பதை கருத்துக் கணிப்புகள் சுட்டிக் காண்பிக்கின்றன. நாம் மற்ற மக்கள் இருக்கும் இடத்தில் "உப்பாக" இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது: கடைவீதிகளில், பள்ளிக்கூட அறையில், அலுவலகத்தில். இயேசு பாவிகளுக் குச் சிநேகிதராக இருந்தார் (மத். 11:19). Out of the Salt Shaker & into the World[17] என்று அழைக்கப்படும் புத்தகமானது, கிறிஸ்தவர்கள் மற்றவர்கள் மீது நேர்மறையான செல்வாக்கைக் கொண்டிருக்கக்கூடிய சமுதாயத்தில் கலந்து பழக வேண்டும் என்று வற்புறுத்துகிறது.*

*நீங்கள் எங்கு சென்றாலும், நீங்கள் எங்கு இருந்தாலும், நீங்கள் தேவனு டைய பதனப்படுத்தும் வல்லமையாக இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டு இருக்கின்றீர்கள். நீங்கள் வீடுகளைச் சந்திக்கலாம், பல இடங்களுக்குச் செல்லலாம், தேவனுடைய பிள்ளை என்ற வகையில் தனிச்சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தலாம். அதுவே உங்களுக்கான தேவனுடைய விசேஷித்த இடமாக, செல்வாக்கிற்கான உங்களின் விசேஷித்த இடமாக உள்ளது. "பூமிக்கு உப்பாக" இருத்தல் என்பதன் அறைகூவலை ஒருக்காலும் மறந்து விடாதீர்கள்.*

*வசனம் 13ன் கடைசிப் பகுதியில், இயேசு இந்த அறைகூவலின் தீவிரத் தன்மையை வலியுறுத்தினார்: "... உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது." KJVயானது உப்பு அதன் "சாரத்தை" இழந்து போகுதல் பற்றிப் பேசுகிறது. NIVயானது, "உப்பானது தனது உப்புத் தன்மையை இழந்துபோனால், அது மீண்டும் எப்படி உப்பாக்கப்பட முடியும்?" என்று கூறுகிறது.*

*நாம் சுத்தமான வெள்ளையான உப்பை, பைகளில் வாங்குவதால், நம்மில் பெரும்பாலானவர்கள், உப்பு எப்படி தனது சுவையையும் உப்புத் தன்மையையும் இழந்துபோக முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுவதில் சிரமம் அடைகின்றோம். உப்பு எப்போதுமே உப்புச்சுவையுள்ளதாகவே இருக்கப்போகிறது. உப்பின் ஒரே ஒரு துளிமாத்திரம் விடப்பட்டிருப் பினும், அது உப்புச்சுவையுள்ளதாகவே இருக்கும். ஆயினும் வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் இருந்த உப்பானது, கடல்நீரை ஆவியாக்குவதின் விளைவாக ஏற்பட்டதாயிருந்தது. அந்த உப்பில் இயற்கையாகவே அசுத்தங் கள் கலந்திருந்தன. உப்பானது தரையிலிருந்து சுரண்டி எடுக்கப்படும்போது,*

மணல் அல்லது அழுக்கு என்பவை அந்த உப்புடன் கலந்திருந்தன. இதன் மூலம் விளைந்த உப்பு அதன் கூற்றுப் பொருளை வெளிப்படுத்தும்படி செயல்பாடு மேற்கொள்ளப்பட்டால், அதில் உள்ள சோடியம் குளோரைடு[18] என்ற பகுதிப் பொருளானது அதிகமாகக் கசியக்கூடும். எஞ்சியுள்ளது பூமியைச் சுத்தமாக்கப் போதுமான உப்பாக இருக்கும், ஆனால் அது மதிப்புள்ளதாக இராது. இந்த "உப்பு" தனது தனிச்சிறப்பான குணத்தை இழந்ததாக இருக்கிறது.

பலஸ்தீன நாட்டில் நல்ல நிலம் என்பது ஒரு ஊக்கமளிக்கும் வெகுமதி போன்று இருந்தது. அவர்கள் கிடைத்திருந்த ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பயிர்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தினார்கள். வயல்நிலங்களில் குறுக்கே கடந்து செல்வதற்குக் குறுகிய பாதைகள் விவசாயிகளினால் பயன்படுத்தப்பட்டிருந்தன. மக்கள் "உப்புத்தன்மையை இழந்துபோயிருந்த உப்பை" வயலில் கொட்டத் துணியாது இருந்தார்கள், ஏனென்றால், அது மண்ணின் வளத்தை அழித்துவிடக்கூடும். (நான் அந்தப் பாடத்தை, வீட்டில் செய்த ஐஸ்கிரீமைக் குளிர்விப்பதற்கு, உப்புப் பனிக்கட்டியையும் தண்ணீரையும் பயன்படுத்திய பின்பு அவற்றைப் புல்வெளியில் கொட்டிய போது கடினமான வழிமுறையில் கற்றுக்கொண்டேன்.) அதற்குப் பதிலாக, அவர்கள் அந்த உப்புக்குவியலை பாதைகளில் கொட்டுவதுண்டு, அங்கு அது எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தாது. அங்கு அது "மனிதர்களால் கால்களின் கீழ் மிதிக்கப்படும்."

இந்த விவரிப்பானது, ''பூமிக்கு உப்பு'' என்ற வகையில் தமது சாத்தியக்கூற்றை உணர்ந்தறிய முயற்சி செய்யாத கிறிஸ்தவரைப் பற்றிய இயேசுவின் கவலைக்குரிய விளக்கமாக உள்ளது. அப்படிப்பட்ட நபர் "உதவாக்கரையாக" இருக்கின்றார் என்பதே அவரது உறுதியான முடிவாக உள்ளது.

## முடிவுரை

உப்பும் வெளிச்சமும்: இந்த சாதாரணப் பொருட்கள் மதிப்புமிக்க பாடங்களைப் போதிப்பதற்கு இயேசுவால் பயன்படுத்தப்பட்டன. நாம் "வெளிச்சமாக" இருத்தல் பற்றி அடுத்த பிரசங்கத்தில் படிப்போம்; இந்தக் கணத்தில், நாம் யாவரும் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகளால் மனங்கவரப்பட்டிருப்போம் என்று நம்புகின்றேன். இயேசு அந்த வார்த்தைகளைப் பேசியபோது, நமக்கு மாபெரும் பாராட்டு ஒன்றை அளித்தார். நாம் கர்த்தருக்கு விசேஷித்தவர்களாய் இருக்கின்றோம்; நமக்கு மதிப்பு இருக்கிறது. நாம் ஒருக்காலும் நம்மை குறைந்த விலைக்கு விற்றுவிடாதிருப்போமாக.

அவர் நமக்கு ஒரு மாபெரும் அறைகூவலையும் கொடுத்தார். ஒரு மனிதனை "உதவாக்கரை" என்று கூறுவதைக்காட்டிலும் அம்மனிதருக்கு மாபெரும் அவமானம் வேறெதுவும் இருக்க முடியாது. நான் ஆவிக்குரிய வகையில் "உதவாக்கரையாக" இருக்க விரும்புவதில்லை, நீங்கள் அவ்வாறு இருக்க விரும்புகின்றீர்களா? நாம் ஒரு தனிச்சிறந்த வாழ்வை வாழ,

*உலகிலிருந்து மாறுபட்டவர்களாயிருக்கத் தீர்மானிப்போம். நாம் யாவரும் "பூமிக்கு உப்பாயிருக்க" தேவன் தாமே நமக்கு உதவுவாராக!*[19]

---

*குறிப்புகள்*

[1]*"குறைவான விலைக்கு விற்றுவிடுதல்" என்பது சில பொருட்களை அவற்றின் பெருமதிப்புக்கும் குறைவான (வழக்கமாக மிகக்குறைவான) விலைக்கு விற்பதைப் பற்றிக் கூறுகிறது. ஒரு நபர் "தம்மைக் குறைவான விலைக்கு" விற்றுப் போடும்போது, அவர் தமது உண்மையான மதிப்பை உணரத் தவறுகின்றார். ஒரு கிறிஸ்தவர், "தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" (ரோமர் 12:3) இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதே வேளையில், அவர் தாம் தகுதி யற்றவர் என்று முடிவு செய்துவிடக் கூடாது. நமது மதிப்பானது நமது சொந்தத் தகுதியிலிருந்து பெறப்படுவதாக இல்லாமல், தேவன் நம்மீது வைத்துள்ள மதிப்பிலிருந்து பெறப்படுவதாக உள்ளது. "குறைவான விலைக்கு விற்று விடுதல்" என்ற சொல்விளக்கமானது நீங்கள் வாழ்கின்ற பகுதியில் அறியப்படாததாக இருந்தால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானதாக உள்ள இதற்குச் சமமான அர்த்தம் கொண்டுள்ள சொல்விளக்கத்தை நீங்கள் பயன்படுத்தலாம். [2]இரத்த ஓட்டம் என்பது அடிப்படையில் ஒரு உப்புத் திரவமாக உள்ளது. அமெரிக்காவில், மருத்துவக் காரணங்களுக்காகச் சில நோயாளிகள் உப்புக் கலந்த உணவை உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்படுகின்றார்கள். ஆயினும், "உப்பில்லாத" உணவு என்று அழைக்கப்படுபவற்றில் கூட சற்றே உப்பு சேர்க்கப் படுவதுண்டு. [3]விதிப்படியாக, இந்தப் பாடத்தொடரில் நான் ஒவ்வொரு பாடத்திற்கும் தொடர்புடைய ஒரு பிரசங்கத்தைக் கொண்டிருக்கின்றேன், ஆனால் சிலவேளை களில் நான் இரு பிரசங்கங்களையும் கொண்டுள்ளேன். இவற்றில் ஒன்றை ஞாயிற்றுக்கிழமை காலை வேளையிலும் இன்னொன்றை ஞாயிற்றுக்கிழமை மாலையிலோ அல்லது சபைகூடிவரும் பிற வேளைகளிலோ பிரசங்கிக்கலாம். [4]இந்தப் பாராட்டுச் சொல்விளக்கமானது சுயவிளக்கம் உடையதாகும். நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் இந்தச் சொல்விளக்கத்தைப் பயன்படுத்துவது இல்லை யென்றால், நீங்கள் "உலகின் சில பகுதிகளில், அவர் பூமிக்கு உப்பாக இருக்கின்றார் என்று கூறுவது ஒரு நபருக்கு நீங்கள் தரக்கூடிய மாபெரும் பாராட்டாக உள்ளது" என்று விளக்கம் தரலாம். [5]நீங்கள் வாழும் பகுதியில் இந்தச் சொல்விளக்கம் பயன்படுத்தப் படுவதில்லை யென்றால், "அவர் பூமிக்கு உப்பாக இருக்கின்றார்" என்ற சொல்விளக்கத்தைப் போன்றே இதையும் பயன்படுத்துங்கள் (முந்திய குறிப்பைக் காணவும்). [6]யோபு, தமது "நண்பர்களின் ஆறுதலானது" உப்பற்ற உணவுபோல் இருந்த தாகக் கூறினார். கொலோசெயர் 4:6, உப்பு ருசியைக் கூட்டுவது பற்றி எடுத்துரைக்கும் இன்னொரு வேத வசனப் பகுதியாக உள்ளது, அது நமது பேச்சானது "உப்பினால் சாரமேறினது" போல் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. நாம் நமது பேச்சை ருசியுள்ளதாக்க முயற்சி செய்ய வேண்டும்.* [7]A. C. Dixon, quoted in Leslie G. Thomas, *The Sermon on the Mount: A Series of Studies in the Moral and Religious Teaching of Jesus* (Nashville: Gospel Advocate Co., 1958), 22. [8]"Flat" *என்றால் "ருசியற்றது" என்று அர்த்தம் புரிந்துகொள்ளக்கூடிய பகுதியில் நீங்கள் வாழ்ந்தால்,* "ends up flat" *என்று நீங்கள் கூறலாம். [9]இந்தச் சொல்விளக்கம், "ஒருவர் செய்யவிரும்பாத விஷயத்தைச் செய்யும்படி அவரை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது" என்று அர்த்தப்படுகிறது. [10]அழுகிய இறைச்சி பற்றிய சுய அனுபவம் ஒன்று உங்களுக்கிருந்தால், அந்தக் கதையை உங்கள்*

*உரையைக் கேட்பவர்களுடன் நீங்கள் பகிந்து கொள்ளலாம்.*

*[11]உலர்த்துதல் என்பது இறைச்சியைப் பக்குவப்படுத்தும் இன்னொரு முறையாக உள்ளது. உலர்ந்த இறைச்சியானது இறைச்சியற்ற உணவை விட மேம்பட்டதாகும். [12]அமெரிக்காவின் சில பகுதிகளில், சில இடங்களில் இது இன்னமும் ஒரு பொதுவான நடைமுறையாக உள்ளது. [13]இருந்தபோதிலும் உலகில் நீங்கள் வாழும் பகுதியைப் பற்றிய புள்ளி விவரங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்: உங்களைச் சுற்றியுள்ள உலகத்தில் தேவபக்தியின்மை வளர்ந்துவருதல் பற்றிய விவரங்களைக் காண்பிக்கும் புள்ளி விவரம். [14]அமெரிக்காவில் பெரும்பாலான நகரங்களில் வர்த்தக நிறுவன அமைப்பு உள்ளது, இது அந்தப் பகுதியில் உள்ள வியாபாரிகள் மற்றும் செல்வாக்குள்ள மனிதர்களைக் கொண்டதாக உள்ளது. இது ஒரு ஆளும் அமைப்பாக இருப்பதில்லை என்றாலும், இது அந்தப் பகுதியின் வளர்ச்சி மற்றும் வளத்தை மேம்படுத்த அதிகம் பணிசெய்கிறது. [15]கிரேக்க வினைச் சொற்கள் யாவற்றிலும் உள்ளது போன்றே, மத்தேயு 5:13ல் உள்ள "இருக்கிறீர்கள்" என்ற வினைச் சொல்லானது புரிந்துகொள்ளக் கூடிய எழுவாயைக் கொண்டுள்ளது (இவ்விஷயத்தில், "நீங்கள்"). வாக்கியத்தின் தொடக்கத்தில், "நீங்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் கூடுதலானது அவ்வார்த்தையின் மீது முக்கியத்துவத்தை வைப்பதன் செயல்விளைவைக் கொண்டுள்ளது. [16]விருப்பமிருந்தால் நீங்கள், உங்கள் சமுதாயத்தில் உள்ள சில பிரிவினரின் வினோதமான நடக்கை மற்றும்/அல்லது உடையணியும் பழக்கம் ஆகியவற்றின் உதாரணங்களைப் பயன்படுத்தலாம். நான் ஒருமுறை இந்தப் பாடத்தைப் பிரசங் கித்தபோது, மக்கள் பச்சை நிறமான கூர்முடிகளை அணியும் பழக்கம் இருந்தது என்பது அப்போதைய உண்மையாக இருந்தது; எனது உரையைக் கேட்டவர்களில் பலர் இவ்வகைப்பட்ட மக்களைத் தொலைக்காட்சியில் பார்த்து இருந்தார்கள். நான், "இது, நாம் பச்சை நிறமான கூர்முடிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை; இது நாம் தனிச்சிறந்தவர்களாய் இருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுத்துகிறது." [17]*Rebecca Manley Pippert, *Out of the Salt Shaker & into the World* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1979). *[18]சோடியம் குளோரைடு என்பது சாதாரண உப்புக்கான அறிவியல் பெயராகும். [19]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களை, சரியான வகையிலான செல்வாக்குக் கொண்டிருக்க அவசியமானவை எவையென்றாலும் அவற்றைச் செய்யும்படி ஊக்கப்படுத்த நீங்கள் விரும்பலாம். சிலர் விசுவாசித்தல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக கிறிஸ்தவர்களாவது அவசியமாக இருக்கலாம் (மாற். 16:16). உண்மையற்ற கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலமாக மீண்டும் கட்டியெழுப்பப்படுதல் அவசியமாயிருக்கிறது (அப். 8:22; யாக். 5:16).*

## 24

# "உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது"

## மத்தேயு 5:14-16, ஒரு ஆழ்ந்தக் கண்ணோட்டம்

*"நீங்கள் நினைப்பதை விட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்" என்ற பிரசங்கத்தில், நாம் மலைப் பிரசங்கத்தின் இரண்டாம் பாகத்தின் மீதான நமது படிப்பைத் தொடங் கினோம்: மத்தேயு 5:13-16. நாம், "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகளில் உள்ளடங்கி இருப்பது என்ன என்பது பற்றிப் பேசினோம். இந்தப் பிரசங்கத்தில், நாம் வசனங்கள் 14 முதல் 16வரை உள்ள பகுதியைப் பற்றிக் கலந்துரையாடுவோம்:*

> *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக்[1] கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.*

### ஒரு பாராட்டு

*"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்." நீங்கள் இந்தக் கூற்றைத் தீவிரமாக ஆழ்ந்து சிந்தித்தால், இது உங்கள் சிந்தையைத் தள்ளாடச் செய்யும். நாம் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் தேவனின் திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் பங்கேற்பதுடன், நாம் தேவன் மற்றும் இயேசு ஆகியோரின் பண்புகளிலும் ஓரளவுக்குப் பங்கடைகின்றோம் என்று இவ்வார்த்தைகள் நமக்குக் கூறுகின்றன. யோவான், "தேவன் ஒளியாயிருக் கிறார்" என்று கூறினார் (1 யோவா. 1:5). இயேசு, "நான் உலகத்திற்கு ஒளியா யிருக்கிறேன்" என்று கூறினார் (யோவா. 8:12). இந்த வசனங்களின் மூலமாக, இயேசு தமது பின்பற்றாளர்களை சுட்டிக் காண்பித்து அவர்களி டத்தில், "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்" என்று கூறுகின்றார்.[2] இது உங்களைத் தேவனுடைய பிள்ளையென்ற வகையில் தலைநிமிர்ந்து*

*உயர்ந்திருக்கச் செய்யாவிட்டால், வேறு எதுவும் அதைச் செய்யாது.*

*"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்ற சொல்விளக்கத்தின் மூலம் இயேசு எதை அர்த்தப்படுத்தினார்? உப்பு மற்றும் வெளிச்சம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு எதிர்மறை ஒப்பீட்டைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த நாட்களில் உப்பின் அடிப்படை நோக்கமானது பெரும்பாலும் எதிர்மறையானதாகவே இருந்தது: சிதைவைத் தடுத்தல். வெளிச்சத்தின் அடிப்படை நோக்கமானது நேர்மறையானதாக உள்ளது: இருளை விரட்டுதல்.*

*இயேசுவின் உருவகம் நமக்கு மீண்டும் உலகத்தைப் பற்றியும் கிறிஸ்தவர்களைப் பற்றியும் சில விஷயங்களைக் கூறுகிறது. இவ்வுலகம் இருளில் உள்ளது என்று இது நமக்குக் கூறுகிறது. உலகத்தில் உள்ளவர்கள் இதை ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை. சிலவேளைகளில் மக்கள் வேதாகமத்தைப் புறக்கணிக்கின்றபோது, "நாம் ஒளியூட்டப்பட்ட ஒரு யுகத்தில் வாழ்கின்றோம்" என்று கூறுகின்றார்கள். நீங்கள் ஒருவேளை, "புதிய ஆதாரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது" என்ற சொல்விளக்கத்தைக் கேட்டிருக்கலாம். ஆயினும் இவ்வுலகமானது பாவத்தின் இருளினால் போர்த்தப்பட்டுள்ளது என்பதே உண்மையாக உள்ளது. தேவனுடைய பரிசுத்த வசனத்தினால் ஒளியூட்டப் பெறாத ஒவ்வொரு புத்திகூர்மையும் இருளாக்கப்பட்ட புத்திகூர்மையாகவே உள்ளது.*

*உலகம் உண்மையில் இருளையே விரும்பித் தேர்ந்து கொள்கிறது. ஒளியானது "இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியரங்கமாக்குகிறது" (1 கொரி. 4:5). இயேசுவின் நாட்களில் வாழ்ந்திருந்த மக்கள், தங்கள் "கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகின்றார்கள்" என்று இயேசு கூறினார் (யோவா. 3:19). ஒருமுறை என் மனைவியும் நானும் வாடகைக் குடியிருப்பு ஒன்றைச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தோம். ஒருமுறை, அதில் இருந்த குடும்பத்தார் வீட்டைக் காலி செய்துவிட்டுச் சென்ற பின்பு அடுத்த நாளில், வீட்டைப் பார்வையிடுவதற்காக நாங்கள் சென்றோம். அவர்கள் அவ்வீட்டைப் பரிதாபமான நிலையில் விட்டுச் சென்றிருந்தார்கள், அதில் குப்பை நிரம்பியிருந்தது. நாங்கள் மின்விளக்கை எரியச் செய்தபோது, ஆயிரக்கணக்கான கரப்பாண்பூச்சிகள் எல்லாத் திசைகளிலும் வேகவேகமாக ஓடி ஒளிந்தன! கரப்பாண்பூச்சிகள் வெளிச்சத்தை விரும்புவதில்லை - மற்றும் பாவம் நிறைந்த உலகமும் வெளிச்சத்தை விரும்புவதில்லை. இருந்தபோதிலும், இவ்வுலகத்திற்கு வெளிச்சமே மிகவும் துல்லியமாகத் தேவைப்படுகிறது.*

*நமது வேதப் பாடப் பகுதியானது, இவ்வுலகம் இருளில் உள்ளதென்று அறிவிப்பது மட்டுமின்றி, கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கின்றார்கள் என்றும் கூறுகிறது. கிறிஸ்தவர்கள் ஒளியைக் கொண்டுள்ளவர்களாய் இருக்கின்றார்கள். நீங்கள் இயேசுவையும் வேதாகமத்தையும் அறிந்திருந்தால், நீங்கள் திருமணம், பெற்றோர்த்துவம், பிரச்சனைகளைக் கையாளுதல் எப்படி, மற்றும் வாழ்க்கை என்பது என்ன என்பவற்றைப் பற்றி, கல்வியில் முனைவர் பட்டம் பெற்ற எவரொரு*

*வரையும் விட அதிகமாய் அறிகின்றீர்கள்.*[3]

*நாம் இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில், நமது வெளிச்சத்தை ஒளிரச் செய்ய வேண்டும். நாம் சரியான வாழ்க்கை வாழ்தல் மூலம் அதை ஒளிரச் செய்கின்றோம். நாம் தேவனுடைய வசனத்தைப் போதிப்பதன் மூலம் அதை ஒளிரச் செய்கின்றோம்.*[4]

*நான் இவ்வுலகத்தில் ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய ரீதியான இருளை விரும்புவதில்லை. இருள் என்னை உற்சாகம் இழக்கச் செய்கிறது என்பதை நான் அறிக்கை செய்ய வேண்டும். சிலவேளைகளில் நான் விட்டுக் கொடுத்து விடலாமா என்று உணருமளவுக்கு இருளானது மிகவும் திண்மையாக/கனமாக வளருகிறது. அப்படிப்பட்ட வேளைகளில், இருள் இல்லையென்றால் வெளிச்சத்திற்கு வேலை இல்லை என்று நான் எனக்கே நினைவூட்டிக் கொள்வது உண்டு. இருளை விரட்டுதலே வெளிச்சத்தின் நோக்கமாக உள்ளது. அதற்காகத்தான் தேவன் இவ்விடத்தில் இவ்வேளை யில் என்னை வைத்து இருக்கின்றார்!*[5]

*பிலிப்பியர் 2:14-16 ஒரு இன்றியமையாத வசனப்பகுதியாக உள்ளது. பவுல் தமது வாசகர்களிடத்தில், "... உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளு மாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப் பில்லாமலும் செய்யுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார்.*

*இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்: இருள் எவ்வளவுக்குக் கருமை யாக உள்ளதோ அவ்வளவுக்கு ஒளியானது பிரகாசமாகத் தோன்றுகிறது. எனது படுக்கையறையில் உள்ள மின்பொருள் ஒன்றில் ஒரு சிறு பச்சை நிற விளக்கு எந்நேரமும் எரிந்துகொண்டிருக்கும். அதன் வெளிச்சம் பகல் பொழுதுகளில் கண்ணால் காணக்கூட முடியாததாக இருக்கும். ஆயினும் இரவு வேளைகளில், எனது கண்கள் இருளுக்கு பழகியபின்பு, அந்த மென்மையான பச்சை நிற ஒளியில் என்னால் எனது அறையில் உள்ள எல்லாப் பொருட்களையும் காணமுடியும். எல்லாம் இருளாயிருக்கும் போது, மிகச் சிறிய வெளிச்சமும் கூட மதிப்பு உடையதாக உள்ளது.*[6]

*நமக்குள்ளாக ஒளியூட்டும் வல்லமையொன்று இருக்கிற காரணத் தினால் நாம் "வெளிச்சமாக" இருப்பது இல்லை என்பதை நான் இவ்விடத் தில் வலியுறுத்தியாக வேண்டும். இதற்கு மாறாக, வெளிச்சத்தின் ஆதாரமூல மான தேவனுடனும் இயேசுவுடனும் நமக்குள்ள தொடர்பின் காரணமாக நாம் "வெளிச்சமாய்" இருக்கின்றோம். கிறிஸ்தவர்களை, சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கிற சந்திரனுடன் ஒப்பிடலாம். நாம் வெளியில் உள்ள மின்சார சக்தியின் வல்லமையுடன் இணைக்கப்பட்டு அதன் மூலம் எரிகிற மின்விளக்குக்கும் ஒப்பிடப்பட முடியும். இருந்தபோதிலும், "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகளினால் இயேசு நம்மைக் கனப்படுத்தினார்.*

## ஒரு அறைகூவல்

*கிறிஸ்துவின் வார்த்தைகள் வெறும் பாராட்டாக மட்டும் இருப்ப தில்லை, ஆனால் அவைகள் ஒரு அறைகூவலாகவும் உள்ளன. நாம் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க/ஒளிரச் செய்ய வேண்டும்.*

*இயேசு, ''மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது" என்று கூறினார் (வ. 14ஆ). அந்த நாட்களில், நகரங்கள் குறைந்த பட்சம் இரண்டு காரணங்களுக்காக குன்றுகள் அல்லது மலைகள்மீது கட்டப்பட்டன. முதலாவது ஒரு நடைமுறைக்கு உகந்த காரணமாக இருந்தது: இது மதிப்புமிக்க விவசாய நிலத்தை வீணடிக்காது. இரண்டாவது ஒரு பாதுகாப்புக்கு உகந்த காரணமாக இருந்தது: குன்று ஒன்றின் உச்சியில் இருந்து, அங்கு குடியிருப்பவர்கள் தங்கள் விரோதிகள் கீழே நெருங்கு வதைக் காண முடியும்.[7] பயணம் செய்கின்ற ஒருவர், தாம் ஒரு நகருக்கு வந்து சேர்வதை எப்போதுமே கூற முடியும்: அது அங்கு ஒரு குன்றின்மீது அமைந்திருந்தது. மனிதர்கள் தங்கள் நகரங்களைக்கூட மறைக்காதிருந்தது போன்றே, நாம் நமது வெளிச்சத்தை(செல்வாக்கை)யும் மறைக்கக் கூடாது என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது. அந்த நடைமுறைப் பயன்பாடு பின்தொடர்ந்த வார்த்தைகளில் தெளிவாக உள்ளது.*

*இயேசு, "விளக்கைக் கொளுத்தி அதை ஒரு கூடையின் கீழ் வைக்கா மல்'' என்று கூறினார் (வ. 15அ).* KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில் "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் ..." என்று உள்ளது. நாங்கள் பயன்படுத்திய மரக்கால் கூடைகள் மிகவும் துளையுடையவை களாய் இருந்த காரணத்தினால், இது நான் சிறுபிள்ளையாக இருந்தபோது என்னை மிகவும் குழப்பம் அடையச் செய்தது. அந்தக் கூடைகள் ஒன்றின் கீழ் நான் ஒரு விளக்கை/மெழுகுவர்த்தியை கொளுத்தி வைத்தால், அந்தக் கூடையின் இண்டு இடுக்குகள் வழியாக வெளிச்சம் வெளியே பாய்ந்து வரும். 1995ல் வெளியான* NASB *வேதாகமத்தில், இது* "a peck-measure" *("அளக்கும் உழக்குப்படி") என்றுள்ளது. இது ஏறக்குறைய ஒரு மரக்கால்[8] தானியம் கொள்ளக்கூடிய ஒரு பெரிய மண்பாத்திரமாக இருந்தது. அப்படிப்பட்ட திடமான கொள்கலன்கள் ஒன்றின் கீழ் விளக்கை வைத்தால் அது அவ்விளக்கின் வெளிச்சத்தை மறைத்து விடும்.[9]*

*நமது விளக்கை மரக்காலின் கீழ் வைத்தல் என்பதன் விவரிப்பானது, ''நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்'' என்ற பிரசங்கத்தில் உப்பு தனது உப்புத்தன்மையை இழந்து போகுதல் என்ற அதே அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. உப்புத் தன்மை இல்லாத ''உப்பு'' மதிப்பு எதையும் கொண்டிருப்பது இல்லை; அதுபோன்றே மறைவாக உள்ள வெளிச்சமும் மதிப்பு எதையும் கொண்டிருப்பது இல்லை. உப்புக்குவியல் ஒன்று தனது உப்புத்தன்மையை இழந்துபோகும் சாத்தியக்கூறு இருப்பதைப்போலவே, ஒரு வெளிச்சமானது இருளை விரட்டும் தனது தன்மையை இழந்துபோகும் சாத்தியக்கூறு உள்ளது. அது எவ்வாறு நடக்க முடியும்? வெளிச்சமானது மறைவாயிருக்க முடியும். இயேசுவைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்களில் பலர், தங்கள் வெளிச்சத்தைத் துரதிர்ஷ்டவசமாக அறியாமை என்ற "மரக்காலின்"*

கீழாகவோ அல்லது உலக எண்ணம் என்ற "மரக்காலின்" கீழாகவோ அல்லது அரைமனதாயிருத்தல் என்ற "மரக்காலின்" கீழாகவோ மறைத்திருக்கின்றார்கள்.[10] இதில் கடைசி வகையினரைப் பற்றி, "இருமனமுள்ள தன்மையை (வீண் சிந்தனைகளை) நான் வெறுக்கின்றேன்" என்று தேவன் கூறினார் (சங். 119:113அ) - அதாவது, பிரிவினை உடைய பற்றுறுதி கொண்ட தன்மையைத் தேவன் வெறுக்கின்றார். மொஃப்பாட் என்பவர் இவ்வசனத்தை, "இரு மனதுள்ள மனிதர்களை நான் வெறுக்கின்றேன்'' என்று மொழி பெயர்த்தார்.

இயேசுவின் நாட்களில், மக்கள் விளக்குகளைக் கொளுத்தி மரக்கால்களின் கீழ் வைக்கவில்லை; மாறாக, அவர்கள் விளக்குகளை விளக்குத் தண்டுகளின் மேல் வைத்தார்கள் (வ. 15ஆ). இந்த விளக்கு தண்டுகள் சுவர்களில் உயரத்தில் இருந்தன. சிலவேளைகளில், சுவரில் உள்ள ஒரு மாடம் விளக்குத் தண்டாக இருந்தது; பெரும்பாலும் இது மரம் அல்லது உலோகத்தினால் ஆன ஒரு சிறிய அலமாரியாக இருந்தது. இப்படிப்பட்ட விளக்குத் தண்டின்மீது வைக்கப்பட்ட விளக்கானது ''வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம்" கொடுக்க முடிந்தது (வ. 15இ). அதுபோலவே, "உங்கள் வெளிச்சம் மனிதர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்று இயேசு கூறினார் (வ. 16ஆ).

அதை நாம் எவ்வாறு செய்கின்றோம்? இயேசு, "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்று கூறினார் (வ. 16). நாம் - வாழ வேண்டியபடி வாழ்ந்து பிறருக்கு உதவுதல் என்ற - ''நற்செயல்களை'' செய்யும்போது நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்க அனுமதிக்கின்றோம்.[11]

மலைப் பிரசங்கத்தை நன்கு அறிந்தவர்களிடத்தில் இருந்து நான் ஒரு மறுப்பை முன்னெதிர்நோக்குகின்றேன்: அடுத்த அத்தியாயத்தில் இயேசு, "மனிதர்கள் காணும்படியாக" ஜெபித்தல் மற்றும் உபவாசித்தல் ஆகிய வற்றிற்கு எதிராக எச்சரிக்கை செய்தார் (மத். 6:5; 6:16ஐக் காணவும்). காணும்படியாகச் செய்வதற்கும் காண்கின்றவற்றைச் செய்வதற்கும் உள்ள வேறுபாடு என்ன? "எண்ணப்போக்கும் நோக்கமும்" என்பது இதற்குப் பதிலாக உள்ளது. மனிதர்கள் கண்டு நம்மைப் புகழ வேண்டும் என்பதற்காக நற்செயல்களைச் செய்வதற்கும், நமது நற்செயல்களைக் கண்டு அவர்கள் தேவனை மகிமைப்படுத்தும்படியாக அவற்றைச் செய்வதற்கும் இடையில் மிகவும் வேறுபாடு உள்ளது.

ஏதேனும் நன்மை செய்வதே நமது வெளிச்சம் என்றால், மனிதர்கள் அதைக் காணவேண்டும். கடைசியில் இரகசியமான சீஷத்துவம் என்பது போன்ற விஷயம் எதுவும் இருப்பதில்லை என்று யாரோ ஒருவர் கூறினார்: இரகசியம் என்பது சீஷத்துவத்தை அழித்துவிடும் அல்லது சீஷத்துவம் என்பது இரகசியத்தை அழித்துவிடும்.

நாம் ஏன் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க/ஒளிரச் செய்ய வேண்டும்? நாம் நமது சுய செல்வாக்கை வளர்த்துக் கொள்ளுவதை நாடுவதில்லை; மாறாக, நாம் தேவனை மகிமைப்படுத்துவதை நாடவேண்டும். வெளிச்சம்

*என்பது தன்னை நோக்கிக் கவனத்தைத் திருப்புதல் என்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை, ஆனால் அது பாய்கின்ற அல்லது ஒளிவீசுகின்ற வற்றை ஒளியூட்டுதல் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. தேவபக்தியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நடத்துதல் என்பதில் நாம் நம்மீது பிறர் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக (இயேசு கூறியபடி) "பரலோகத்திலிருக்கிற* [நமது] *பிதாவை மகிமைப்படுத்துதல்" என்பதே நமது நோக்கமாக உள்ளது (வ. 16இ).*

## *முடிவுரை*

*உப்பும் வெளிச்சமும் முக்கியமானவைகளாக உள்ளன. நமக்குப் பல பொருட்கள் தேவை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம், ஆனால் மிகச் சில விஷயங்களே நமக்கு இன்றியமையாதவைகளாக உள்ளன. அந்த இன்றியமையாதவைகளில் உப்பும் வெளிச்சமும் உள்ளன; இவைகளின்றி இருக்க நாம் விரும்ப மாட்டோம். இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றும் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர் கள்" என்றும் கூறினார். அந்த வாக்கியங்களில் பொதிந்துள்ள பாராட்டை நாம் மதிப்போம் என்று நான் நம்புகின்றேன். இவ்வார்த்தைகளில் மறைந்துள்ள அறைகூவலை நாம் சந்திக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.*

*சபையானது எவ்வாறு அறியப்படுகிறது? நீங்கள் ஊழியம் செய்து ஆராதிக்கின்ற சபையை மக்கள் குறிப்பிடும்போது, அவர்கள் என்ன கூறுகின்றார்கள்? அது சிலவற்றிற்காக (அதாவது "உப்பு" என்பதற்காக) நிலைநிற்கிறது என்பதையும், அது கர்த்தருக்காகச் சிலவற்றை (அதாவது "வெளிச்சமாய்" இருத்தல் என்பதை) செய்கிறது என்பதையும் அவர்களின் வார்த்தைகள் சுட்டிக்காண்பிக்கிறதா? உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் உங்கள் சமுதாயத்தில் எவ்வாறு அறியப்பட்டு இருக்கின்றீர்கள்? நீங்கள் உப்பாக இருக்கின்றீர்களா? நீங்கள் வெளிச்சமாக இருக்கின்றீர்களா?*

*நாம் நம்மைச் சுற்றியுள்ள பாவம் நிறைந்த உலகத்தைப் பற்றி அடிக்கடி கதறுகின்றோம். நாம், "இது இவ்வாறு மோசமாகிக் கொண்டிருப்பது ஏன்? ஏன்?" என்று கேட்கின்றோம். ஒருவேளை நாம், "உப்பும் வெளிச்சமும் எங்கே? எங்கே?" என்று கேட்க வேண்டும் நாம் ஒவ்வொவரும் "பூமிக்கு உப்பாகவும்" "உலகத்துக்கு வெளிச்சமாகவும்" இருப்பதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக.*[12]

---

*குறிப்புகள்*

[1]KJV*யில் "மெழுகுவர்த்தி"* (candle) *என்றும் "மெழுகுவர்த்தித் தாங்கி"* (candle-stick) *என்றும் உள்ளது, ஆனால் ன்வேதாகமம் எழுதப்பட்டுதி சில காலத்திற்குப் பின்பு வரையிலும் மெழுகுவர்த்திகள் கண்டுபிடிக்கப்படவில்லை. மூல வசனத்தில் "விளக்கு" என்றுள்ளது ன்தமிழ் வேதாகமத்திலும் இவ்வாறே உள்ளதுதி.* [2]*மூல வசனம் "நீங்கள்" என்ற வார்த்தையை வலியுறுத்துகிறது. கிறிஸ்தவராகுதல் என்பது*

*இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருதல் போன்றது என்ற பல வேதவசனப்பகுதிகள் போதிக்கின்றன (யோவா. 8:12; அப். 26:18; எபே. 5:8; பிலி. 2:14-16; 1 பேது. 2:9 ஆகிய வசனங்களைக் காணவும்). [3]இந்தக் கூற்றானது கல்வியைச் சிறுமைப்படுத்தும் நோக்கம் கொண்டிருப்ப தில்லை. ஒவ்வொரு நபரும் தம்மால் முடிந்த அளவுக்கு அதிகம் கல்வியைப் பெற வேண்டும் என்பதில் நான் நோக்கம் கொண்டுள்ளேன். இந்தக்கூற்று, உலகக் கல்வியை விட வேதாகமக் கல்வியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வலியுறுத்துதலையே நோக்கமாகக் கொண்டுள்ளது. [4]உங்கள் உரையைக் கேட்பவர்களின் சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு பிரசங்கத்தின் இந்த பகுதியை நீங்கள் விரிவாக்க விரும்பலாம். உங்கள் சமுதாயத்தில் "அவர்களின் வெளிச்சம் பிரகாசிப்பதற்கான" திட்டவட்ட மான வழிமுறைகளை நீங்கள் இவ்விடத்தில் பட்டியலிடுங்கள். [5]தேவனுடைய வெளிச்சம் இருளை விரட்டும் பரலோகத்தில் இருப்பதை நான் முன் கண்ணோக்கியிருக்கின்றேன் (வெளி. 21:25; 22:5). அதே வேளையில், நான் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்ற இருளான இவ்வுலகில் இருக்கின்றேன். [6]சிறிய வெளிச்சமும் கூட இருளில் எவ்வாறு ஒளிர முடியும் என்பதற்கு உங்கள் சொந்த விவரிப்பைப் பயன்படுத்துங்கள். நான் ஒவ்வொருவரும் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றியோ அல்லது ஒரு சிறிய பளிச்சிடும் விளக்கை ஏற்றியோ பெரிய கூடங்களில் இருந்துள்ளேன். இதன் விளைவு விசேஷமானதாக இருக்கிறது. [7]''மலை மீது அமைக்கப்பட்ட'' நகரங்கள் பொதுவாகத் தற்காப்புக்குச் சுலபமானவைகளாக இருந்தன. [8]ஒரு மரக்கால் என்பது எட்டு குவார்ட்ஸ்கள் (ஒரு புஷ்ஷல் என்பதில் நான்கில் ஒரு பங்கு) அல்லது 8.81 லிட்டர்கள் [அல்லது தமிழ் நாட்டில் வழங்குகின்றபடியாக, 6 படிகள்] கொண்டதாகும். [9]ஒரு கோப்பை அல்லது கூடையின் கீழ் ஒரு விளக்கை வைத்தல் என்பது, விளக்கு எரியத் தேவையான உயிர்க் காற்று (ஆக்ஸிஜன்) தீர்ந்து விடும்போது அந்த விளக்கை அணையச் செய்து விடும் - ஆனால் விளக்கை மறைத்தல் என்பதே இயேசுவின் அடிப்படை வலியுறுத்தமாக இருந்தது. [10]"மரக்கால்கள்" பற்றிய இந்தப் பட்டியல் விரிவாக்கப்பட முடியும். நீங்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஏற்றாற் போன்று இந்தப் பட்டியலைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.*

*[11]இதுவும் உங்கள் உரையைக் கேட்பவர்கள் வாழ்கின்ற பகுதிக்குத் தக்கவாறு "அவர்களின் வெளிச்சம் பிரகாசிக்கும்படியான" திட்டவட்டமான வழிமுறைகளை உள்ளடக்கும்படி விரிவாக்கப்பட வேண்டும். [12]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்டவர்கள் சரியான வகையிலான செல்வாக்கு உடையவர்களாக இருப்பதற்குச் செய்ய வேண்டியவை பற்றி அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு நீங்கள் விரும்புவீர் கள். சிலர் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் (மாற். 16:16) கிறிஸ்தவராக வேண்டியது அவசியமாக இருக்கும். உண்மையற்றுப் போன கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலம் மீளக்கட்டி எழுப்பப்பட வேண்டியிருக்கும் (அப். 8:22; யாக். 5:16).*

## 25

# இரண்டு வழிகள்

## [மலைப் பிரசங்கம், 2]

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #9*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
  F. *மலைப் பிரசங்கம் (தொடர்ச்சி).*
    6. *பரலோக பொக்கிஷங்களின் பாதுகாப் பானது பூமிக்கு உரிய பெருங்கவலை களுடன் நேர்மாறாக ஒப்பிடப்பட்டது (மத். 6:19-34).*
    7. *தீர்க்கப்படுதல் பற்றிய போதனை (மத். 7:1-6; லூக். 6:37-42).*
    8. *ஜெபத்தைப் பற்றிய போதனை (மத். 7:7-11).*
    9. *பொன் விதி (மத். 7:12; லூக். 6:31).*
    10. *இரண்டு வழிகள் - மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:13-23; லூக். 6:43-45).*
    11. *முடிவுரையும் பயன்பாடும் (கட்டுபவர் கள் இரண்டு பேர்) (மத். 7:24-29; லூக். 6:46-49).*

## அறிமுகம்

*ஜான் ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *மலைப் பிரசங்கம் என்பது குறைவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது என்று விவாதிக்கப்பட்டாலும், நிச்சயமாகவே மிகவும் குறைவாகக் கீழ்ப்படியப்படுவதாக இருந்தாலும், அது அநேகமாக இயேசுவின் போதனையிலேயே நன்கு அறியப்பட்ட பாகமாக உள்ளது. இது உரைக்கப்பட்டவற்றிலேயே ஒரு கொள்கை யறிக்கை என்பதற்கு மிகவும் நெருங்கியதாக உள்ளது, ஏனெனில் இது அவரது பின்பற்றாளர்கள் எவ்வாறு இருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதற்கான அவரது சொந்த விவரிப்பாக உள்ளது.[1]*

E. *ஸ்டேன்லி ஜோன்ஸ் அவர்கள், “வாழ்வதற்கான ஒரே நடைமுறை வழி என்ற வகையில் மலைப் பிரசங்கத்தை மறு ஆய்வு செய்தல் என்பதே நவீன காலக் கிறிஸ்தவத்தின் மாபெரும் தேவையாக உள்ளது” என்று கூறினார்.[2] ஹார்வி ஸ்காட் அவர்கள் மத்தேயு 5-7ஐ “கிறிஸ்தவத்தின் சட்ட அமைப்பு முறை” என்று அழைத்தார்.[3]*

மலைப் பிரசங்கத்தைப் பற்றி நாம் ஒரு நூறு புத்தகங்களை எழுதினாலும், அதன் போதனைகளை நாம் முற்றிலுமாகக் கூறி விட முடியாது. இந்தப் பாடத்தொடரில் இதன் பொருளடக்கங்களைச் சுருக்கமாகக் காணுதல் என்பதே நாம் செய்யக் கூடியதாக உள்ளது. "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ற பாடமானது மலைப் பிரசங்கத்தின் முதல் பாதியை ஆய்வு செய்தது; இந்தப் பாடமானது அதன் மறுபாதியை மறுகண்ணோட்டமிடும்.

மலைப் பிரசங்கமானது நேர்மாறுகளை ஏராளமாகக் கொண்டுள்ளது. முதல் பாதியானது யூதர்கள் போதித்திருந்தவற்றையும் இயேசு போதித்தவற்றையும் நேரெதிராக ஒப்பிட்டது. இரண்டாவது பாதியானது ஒரு மனிதர் செல்லுவதற்குத் தேர்ந்தெடுக்கக் கூடிய இரண்டு வழிகளை நேரெதிராக ஒப்பிடுதலின் பண்பைக் கொண்டுள்ளது. கிறிஸ்து நமது உரையைக் கேட் டவர்களிடத்தில், "இடுக்கமான[4] வாசல் வழியாக உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று வேண்டுகோள் விடுத்தார் (மத். 7:13, 14). மத்தேயு 6:19-7:27 வரையுள்ள வசனப்பகுதி நாம் பயணம் செய்யக் கூடிய இரண்டு வழிகள் பற்றிய உதாரணங்களினால் நிறைந்துள்ளது. இந்த வேதபாடப் பகுதியானது நாம் ஏற்படுத்த வேண்டிய தேர்ந்துகொள்ளுதல்களுடன் நம்மை எதிர்கொள்ளுகிறது: ஜீவனுக்கு ... அல்லது அழிவுக்கு நடத்துகிற தேர்ந்துகொள்ளுதல்கள்.

## பூமி அல்லது பரலோகம்
## (மத். 6:19-24)

இந்தப் பாடத்தின் முதல் பகுதியானது, இப்போது குறிப்பிட்ட பல நேர்மாறுகளை அடக்கியுள்ளது. மத்தேயு 6:19-21ல், பூமியில் செல்வங்களைச் சேர்த்து வைப்பதற்கும், பரலோகத்தில் செல்வங்களைச் சேர்த்து வைப்பதற்கும் இடையில் உள்ள நேர்மாறு ஒன்றுள்ளது. வசனம் 22 மற்றும் 23ல், நாம் வெளிச்சத்தினால் நிறைந்திருத்தலுக்கும் இருளினால் நிறைந்திருத்தலுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் காண்கின்றோம். வசனம் 24, சாத்தியமான இரண்டு எஜமானர்களைப் பற்றிக் கூறுகிறது: தேவன் மற்றும் உலக செல்வங்கள். இந்த மூன்று நேர்மாறுகளும் ஒரே ஒரு ஆய்வுப் பொருளைப் பற்றியே எடுத்துரைக்கின்றன: நமது பிரியங்கள் பூமியை நோக்கியவைகளாக உள்ளனவா? அல்லது அவைகள் பரலோகத்தை மையங் கொண்டுள்ளனவா?

### பொக்கிஷங்கள் (வ. 19-21)[5]

இயேசு தமது சீஷர்களிடத்தில், பூமியில் செல்வங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், ஆனால் அதற்கு மாறாக, அவற்றைப் பரலோகத்தில் சேர்த்து வையுங்கள் என்று அறைகூவல் விடுத்தார்.[6] அவர் பூமிக்குரிய

*செல்வங்கள் விரைவில் மறையக்கூடியவை[7] - பரலோக பொக்கிஷங்கள் மட்டுமே என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று வலியுறுத்தினார் (வ. 19, 20).*

*கிறிஸ்து எதிர்காலத்திற்கென்று நியாயமான அளிப்புகளை சட்ட விரோதமாக்கவில்லை, ஆனால் அவர் செல்வங்களைக் குவித்து வைத்தல் என்பது தனக்குள்ளாக ஒரு முடிவாக இருத்தலைக் கண்டனம் செய்தார். ஒரு நபரின் முன்னுரிமைகளே அவரது அடிப்படையான அக்கறையாக இருந்தது: "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (வ. 21). உங்கள் இருதயம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் பொக்கிஷங்கள் இருக்கும் என்பதும் உண்மையாக உள்ளது.*

***கண்கள் (வ. 22, 23)[8]***

*இயேசு சரியான முன்னுரிமைகளின் முக்கியத்துவத்தை, அந்த நாட்களில் இருந்த மனிதர்கள் நன்கு அறிந்திருந்த ஒரு ஒப்புமையைப் பயன்படுத்தி விவரித்தார்: ஒருவரின் இருதயத்தின் நிலைப்பாட்டைக் கண்களின் பயன்பாட்டைக் கொண்டு முன்னிறுத்துதல். பழைய ஏற்பாட்டு, "கருணைக் கண்ணன் [நேர்ப்பொருளில், "நல்ல கண்களை உடையவன்"[9]] ஆசீர்வதிக்கப்படுவான்" (நீதி. 22:9அ) என்றும், "வன்கண்ணன் செல்வனாகிற தற்குப் பதறுகிறான்" என்றும் போதித்தது (நீதி. 28:22அ).[10] உடலுக்கு கண் எப்படியோ அப்படியே ஆத்துமாவுக்கு இருதயமும் உள்ளது.[11] நாம் இதே விதமான பேச்சின் உருவகத்தை இன்றைய நாட்களில் பயன்படுத்துவ தில்லை, ஆனால் நாம் வாழ்வை "கண்ணோக்கும்" வழிமுறைக்கு இதைப் போன்றதொன்றைப் பயன்படுத்துகின்றோம்.*

*கிறிஸ்துவின் விவரிப்பு எளிமையானதாக உள்ளது: ஒரு மனிதனின் உடல்சார்ந்த கண்கள் நல்லவைகளாயிருந்தது என்றால், அவர் "வெளிச்சத் தினால் நிரம்பியுள்ளார்"; ஆனால் அவர் பார்வையற்றவராக இருந்தால், அவர் "இருளினால் நிரம்பியுள்ளார்." அதுபோலவே, ஒரு மனிதனின் இருதயம் நல்லதாக இருந்தால் (சந்தர்ப்பப் பொருளில், பரலோகத்தின்மீது மையங் கொண்டிருந்தால்), அவர் ஆவிக்குரிய வெளிச்சத்தினால் நிரம்பி யுள்ளார்; ஆனால் அவரது இருதயம் பொல்லாங்கானதாக இருந்தால் (அதாவது, இந்த உலகத்தின்மீது மையங் கொண்டிருந்தால்), அவர் ஆவிக்குரிய இருளினால் நிரம்பியுள்ளார்.*

***எஜமானர்கள் (வ. 24)[12]***

*நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வில் எது முக்கியமானது என்பதை முடிவு செய்ய வேண்டும்: நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய முடியும் அல்லது நாம் இந்த உலகத்திற்கு அடிமையாக முடியும் - ஆனால் நாம் இவ்விரண்டையும் செய்ய இயலாது. நாம் தேவனுக்கும் செல்வங்களுக்கும் இடையில் ஒரு தெரிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். KJVயில் பயன்படுத்தப்பட்டுள்ள "mammon" என்ற வார்த்தையானது உலக செல்வங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு பொதுவான கல்தேய வார்த்தையாக இருந்தது.[13]*

# கவலை அல்லது விசுவாசம்
# (மத். 6:25-34)

அடுத்த பகுதியானது இந்தப் பிரசகம் மிகவும் நடைமுறைக்கு உரிய (மற்றும் உலகளாவிய வகையில் மிகவும் அவசியமான) ஒன்றாக உள்ளது. இது கவலைப்படுதல் என்ற பாவத்தைப் பற்றியதாக உள்ளது. நீங்கள் எப்போதாவது கவலைப்பட்டிருந்தால், உங்கள் தலையை அசையுங்கள். உங்கள் தலை அசையாது இருந்தது என்றால் நான் மிகவும் வியப்படைவேன். கவலைப்படுதல் என்பது எனது சொந்த பாவங்களின் பட்டியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

மத்தேயு 6:25-34 வசனப்பகுதியானது இதற்கு முந்திய வசனங்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது: நமது பிரியங்கள் இந்த பூமியை மையங்கொண்டதாயிருந்தால், நாம் கவலைப்படுவோம். அவைகள் பரலோகத்தின்மீது கவனம் குவிக்கப்பட்டிருந்தால், கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஜான் ஃப்ராங்க்ளின் கார்ட்டர் அவர்கள் இவ்வசனப் பகுதியைத் தொகுத்துரைப்பதில் பின்வருமாறு கூறினார். கவலையென்பது ...

1. தேவையற்றது, ஏனென்றால் ... தேவன் பறவைகளுக்கு உணவையும் மலர்களையும் உடையையும் தருகின்றபடியால், அவர் தமது ஊழியக்காரர்களின் தேவைகளை நிச்சயமாகவே தருவார் (வ. 26, 28-30).
2. கிடைக்காததாக உள்ளது, ஏனெனில் ஒருவர் கவலைப் படுகிறதினால் தமது சரீர வளர்த்தியில் கூடுதலை ஏற்படுத்துவதில்லை. இது வேறு எந்தப் பயன் நிறைந்த பலன்களையும் உண்டாக்குவது இல்லை (வ. 27).
3. தகுதியற்றதாக ஏற்புடையதல்லாததாக உள்ளது, ஏனெனில் கிறிஸ்தவருக்கு, வாழ்வானது உணவை விட அதிக அர்த்தம் உள்ளதாக வும், உடலானது உடையை விட அதிக அர்த்தம் உள்ளதாகவும் இருக்க வேண்டும். மேலும், இவ்விஷயங்களைப் பற்றிக் கவலைப் படுவதினால் ஒரு கிறிஸ்தவர் தம்மை ... தேவபக்தியற்ற புறதெய்வ வணக்கக்காரர்களுடன் வகைப்படுத்திக் கொள்கின்றார் (வ. 25, 32).[14]

இயேசு, கவலையைப் பற்றிய பண்பை விவரித்தலில் அதை வெற்றி கொள்வதற்கான இரகசியம் குறிப்பாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது: “அற்ப விசுவாசிகளே!'' (வ. 30ஆ). கவலையை வெற்றிகொள்ளுவதற்கான திறவுகோலாக உள்ளது விசுவாசம். நமது தேவைகளை அறிகின்ற (வ. 32), மற்றும் நாம் ‘‘முதலாவது அவருடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும்”[15] தேடினால் வாழ்வின் தேவைகளை நமக்குத் தருகின்ற (வ. 33) தேவன் மீதான விசுவாசம். தேவன் தேவனாக இருப்பதால், அவர் அறிகின் றார்; அவர் நமது பிதாவாக இருப்பதால், அவர் பராமரிக்கின்றார்.[16]

இயேசு எதிர்காலம் பற்றிய அக்கறைக்கு எதிராகப் போதிக்கவில்லை, ஆனால் சட்டப்பூர்வமான அக்கறைக்கும் நமது சக்தியைக் குறைத்து

*எதிர்கால அறைகூவல்களைச் சந்திப்பதில் நம்மை வலிமைகுன்றியவர் களாக்குகின்ற சிந்தையற்ற சிடுசிடுப்புக்கும் இடையில் வேறுபாடு உள்ளது. எதிர்காலத்திற்குத் திட்டமிடுதல் என்பதற்கு இயேசு எதிரானவராயிருக்க வில்லை,[17] உக்கிராணத்துவத்தின்[18] கொள்கையானது நம்மை நாளைய தினத்திற்காக நம்மால் முடிந்த வரையிலும் சிறப்பாகத் தயாரித்துக் கொள்ளும்படி ஊக்குவிக்கிறது. இருப்பினும், நாம் அதை செய்து முடித்தவுடன், விஷயங்களைத் தேவனுடைய கரங்களில் ஒப்புவித்துவிட வேண்டும் - அவற்றைப் பற்றிக் கவலைப்படக் கூடாது.*

## *நியாயந்தீர்த்தல் அல்லது பகுத்தறிதல் (மத். 7:1-6; லூக். 6:37-42)*

*இயேசு, உலகப் பொருட்களின்மீது ஒரு சீஷரின் எண்ணப்போக்கில் இருந்து அந்த சீஷரின் பிறருடனான எண்ணப்போக்கிற்குத் திரும்பினார். மத்தேயு 7:1-5 வசனப்பகுதியானது, நியாயந்தீர்க்கும் ஆவியை கொண்டிருத் தலைக் கண்டனம் செய்கிறது.[19] இந்த வசனப்பகுதியானது எந்த விதமான நியாயத்தீர்ப்பையும் தடை செய்கிறது என்று சிலர் நினைக்கின்றார்கள், ஆனால் இயேசு தாமே, "தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" என்றும் கூறினார் (யோவா. 7:24). நியாயத்தீர்ப்புகளை ஏற்படுத்துவதன் அவசியமானது நமது வேத பாடப்பகுதிகள் ஒன்றில் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது: மத்தேயு 7:6 வசனமானது, "பரிசுத்த மானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்" அல்லது "உங்கள் முத்துக் களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்" என்று கூறுகிறது, இது நாம் யாருக்குப் போதிக்கின்றோமோ, அவர்களைப் பற்றிய நல்ல முடிவை/ நியாயத்தீர்ப்பைப் பயன்படுத்துதல் என்பதை உள்ளடக்கியிருக்கிறது. மத்தேயு 7ன் 1 முதல் 6வரை உள்ள வசனங்கள் முழுமையாக எடுத்துக் கொள்ளப்படும்போது, இயேசு எல்லா நியாயத்தீர்ப்புகளையும் தடை செய்யவில்லை, ஆனால் அதற்கு மாறாக, கடுமையான, இரக்கமற்ற, பரிவற்ற ஆவியையே கடிந்துரைத்தார் என்பது உறுதியாகிறது.*

*இந்தப் பிரசங்கம் பற்றிய லூக்காவின் விவரத்தில் இயேசு, பார்வை யற்றவர்களுக்கு வழிகாட்டும் பார்வையற்ற தலைவர்கள் - மற்றும் அவர்களின் சீஷர்கள் - பற்றிய ஒரு விமர்சனத்தைக் கூடுதலாகக் கூறினார் (லூக். 6:39).[20] பிற்பாடு இயேசு, பரிசேயர்களை "குருடருக்கு வழிகாட்டுகிற குருடர்" என்று குறிப்பிட்டார் (மத். 15:12, 14). கிறிஸ்து, பரிசேயர்களையும், பிறரிடத்தில் பரிசேயத்துவ ஆவியுடன் உள்ள எவரொவரையும் கடிந்துகொண்டார்.*

## *குழப்பம் அல்லது ஜெபம் (மத். 7:7-11)*

*இயேசு இந்தப் பிரசங்கத்தை (கீழ்ப்படிதலுக்கான அறிவுறுத்தலுடன்) முடிப்பதற்கு முன்பு, அவர் தமது உரையைக் கேட்பவர்களுக்கு முன், தாம்*

*வைத்திருந்த அறைகூவலைச் சந்திப்பதற்கு அவர்களை வல்லமையுள்ளவர்கள் ஆக்கும்படிக்கு இரண்டு பொதுவான பிரிவுகளை உள்ளடக்கினார். இவ்வசனப் பகுதிகளில் உள்ள நேர்மாறுகள் எடுத்துரைக்கப்படவில்லை, ஆனால் அவை மறைமுகமாய் உணர்த்தப்படுகின்றன. இவற்றில் முதலாவது (மத். 7:7-11), இடைவிடாத ஜெபத்தின் வல்லமை என்பதாக உள்ளது. இது கவலையைப் பற்றி கூறிய பகுதியின் பின்தொடர்ச்சி என்று நினைக்கப்பட முடியும்: சீஷர்கள் நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை என்றால், அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் ஜெபிக்க வேண்டும். வசனம் 7முதல் 11வரை உள்ள பகுதியானது மனித உறவுமுறைகள் பற்றிய இரு வசனப்பகுதிகளுக்கிடையில் வருகிறது (7:1-6 மற்றும் 7:12). இவ்விதமாக, இவ்வசனப் பகுதியானது, நாம் மக்களுடன் ஒப்புரவாக இருப்பதற்கு ஜெபம் இன்றியமையாததாக உள்ளது என்று நம்மை அறியச் செய்கிறது.[21] இவ்வசனத்தின் வலிவை(மற்றும் மறைமுகமாய் உணர்த்தப்படும் நேர்மறை)த் தொகுப்புரைப்பதற்கு நான் இப்பகுதியின் தலைப்பில் "குழப்பம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளேன்: எதிர்காலம் அல்லது உறவுமுறைகள் அல்லது ஆவிக்குரிய வேறு எந்த அறைகூவல்கள் ஆகியவற்றைப் பற்றிக் குழப்பம் அடைவதற்குப் பதிலாக, நம்பிக்கைக் கொண்டு ஜெபியுங்கள்.*

*வசனங்கள் 6 மற்றும் 7 ஆகியவற்றில் "கேளுங்கள்," "தேடுங்கள்," மற்றும் "தட்டுங்கள்" என்பவைகளே திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன. இவ்வார்த்தைகளின் வரிசைத் தொடரானது, நமது ஜெபங்களில் ஒரு வளர்நிலை வலிவை கருத்தாகத் தெரிவிக்கின்றன. மேலும் மூலவசனமானது நிகழ் கால வினைச் சொல்லைப் பயன்படுத்துகிறது, இது தொடர்நிலையை மறைமுகமாக உணர்த்துகிறது: தொடர்ந்து கேட்டல்; தொடர்ந்து தேடுதல்; தொடர்ந்து தட்டுதல். ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை இயேசு வலியுறுத்தினார்.[22]*

*நாம் ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டியது ஏன்? ஏனென்றால் நாம் நம்மீது அன்புகூர்ந்து நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கும் ஒரு தேவனைக் கொண்டுள்ளோம்.[23] கிறிஸ்து இதனை, பூமிக்குரிய தந்தையர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையானவற்றை அளிப்பதன் விவரிப்புடன் வலியுறுத்தினார் (வ. 9, 10). அது போலவே, நமது பரலோக தந்தையும் நமக்குத் தேவையானவற்றை அளிப்பார் (வ. 11).[24]*

*ஆங்கிலத்தில் இந்த வார்த்தைகள்* "ask," "seek," *மற்றும்* "knock" *என்றுள்ளன, இவ்வார்த்தைகளின் முதல் எழுத்துக்களை ஒன்றுகூட்டும் போது,* "ask" *என்ற வார்த்தையே வருகிறது என்பது ஆர்வத்திற்கு உரிய ஒரு தற்செயல் நிகழ்வாக உள்ளது. யாக்கோபு, ''நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே உங்களுக்குச் சித்திக்கிறதில்லை'' என்று கூறினார் (யாக். 4:2). வாழ்வானது எவ்விதமான அறைகூவலைக் கொண்டு வந்தாலும், "... யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிற ... தேவனிடத்தில்" கேட்கும்படி இயேசு நம்மிடம் கூறுகின்றார் (யாக். 1:5).*

## *நாம் அல்லது பிறர்*
## *(மத். 7:12; லூக். 6:31)*

*அடுத்த பகுதியானது ஒரே ஒரு வசனமாக உள்ளது. இந்தச் சிந்தனை யானது பிரசங்கத்தின் அடுத்த பாகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க முடியும் என்றாலும், இதைத் தனியாகப் பட்டியலிடுதல் என்பது போதிய அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இவ்வசனம், பொன்விதி என்று பொதுவாக அழைக்கப்படுகிற கொள்கையைத் தெளிவாக விளக்குகிறது: "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத். 7:12அ).[25]*

*முன்பே குறிப்பிட்டபடி, இங்குள்ள நேர்மாறானது எடுத்துரைக்கப் படுவதற்கு மாறாக மறைமுகமாக உணர்த்தப்படுகிறது - ஆனால் இது சுலபமாகப் புரிந்துணரப்படுவதாக உள்ளது. பிறருடன் பழகும் விதத்தில், நாம் பெரும்பாலும் நமக்கு விருப்பமானவை என்ன என்பது பற்றியே அக்கறை உடையவர்களாக இருக்கின்றோம்: "நமது உறவுமுறையில் எனக்கு இது அல்லது அது தேவை" என்று நாம் கூறுகிறோம். பொன்விதியானது நம்மை சுயநலத்திலிருந்து சுயத்தை மறக்கும் நிலைக்குக் கொண்டு செல்லுகிறது. இது, மற்ற நபர்களுக்கு எது தேவைப்படலாம் என்பதில் அக்கறை கொள்ளும்படி நம்மிடத்தில் அறைகூவல் விடுக்கிறது. இவை யாவும் "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர் களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக். 6:31) என்ற கர்த்தருடைய வார்த்தைகளில் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ளது.*

*"இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்" என்று இயேசு கூறினார் (மத். 7:12ஆ). நீங்கள் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங் களையும் ஒரு குழல் மாத்திரை அளவுக்குச் சுருக்க முடியும் என்றால்,[26] பின்வருவதுதான் உங்களிடத்தில் விடப்பட்டிருக்கும்: "மனிதர் உங்களை எப்படி நடத்த வேண்டுமென்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அதே வழிமுறையில் நீங்கள் அவர்களை நடத்துங்கள்."*

## *அழிவு அல்லது ஜீவன்*
## *(மத். 7:13, 14)*

*இயேசு தமது பிரசங்கத்தை மத்தேயு 7:13ல் உள்ள வார்த்தைகளுடன் முடித்து வைத்தார். இந்தப் பிரசங்கத்தின் முடிவு வசனங்களில் கள்ள போதகர்களுக்கு எதிரான ஒரு எச்சரிக்கை அடங்கி இருக்கிறது (மத். 7:15-20), ஆனால் அடிப்படையில் இவைகள், கிறிஸ்து போதித்திருந்த கொள்கைகளின்படி வாழ்ந்த, அவர் தம் சீஷர்கள்மீது அக்கறை கொண்ட வைகளாக உள்ளன. இயேசு தமது பிரசங்கமானது அலங்கரிக்கப்பட்ட உலோகத் தகட்டில் பொறித்து வைக்கப்பட வேண்டும் என்று நோக்கம் கொண்டிருந்ததில்லை. மாறாக, அவர் தமது பின்பற்றாளர்களின் வாழ்வி லிருந்து கதிர்வீச வேண்டும் என்று விரும்பினார்.*

*வசனங்கள் 13 மற்றும் 14 ஆகியவற்றின் நேர்மாறு தெளிவாக உள்ளது.*

*நாம் செல்வதற்கு இரண்டு வழிகள் - மற்றும் இரண்டே இரண்டு வழிகள் மட்டுமே - உள்ளன: இடுக்கமான வழியானது ஜீவனுக்கு இட்டுச் செல்லு கிறது மற்றும் விசாலமான வழியானது கேட்டிற்கு இட்டுச் செல்லுகிறது.*[27] *இடுக்கமான வழி என்பது கடினமான வழியாக உள்ளது, ஒரு "சிலர்" மாத்திரமே அதில் பயணம் செல்லத் தேவையான தியாகங்களைச் செய்வதற்கு மனவிருப்பமாய் இருக்கின்றார்கள். விசாலமான வழி என்பது சுலபமான வழியாக உள்ளது, இது "பலரால்" தேர்ந்துகொள்ளப்படுகின்ற புகழ்மிகுந்த வழியாக உள்ளது. (பெரும்பாலானவர்கள் மகிழ்வற்ற இந்த சத்தியத்தை எதிர்கொள்ள விரும்புவதில்லை, ஆனால் இயேசுவின் வார்த்தைகள் எதையாவது அர்த்தப்படுத்தும் என்றால், அவை இரட்சிக்கப் படுபவர்களைக் காட்டிலும் அதிகமானவர்கள் இழந்து போகப்படுவார்கள் என்றே போதிக்கின்றன.)*

*நாம் இடுக்கமான வழியினுள் எவ்வாறு செல்ல முடியும்? பின் தொடரும் வசனங்களில் இந்தக் கேள்விக்கு இயேசு பதில் அளித்தார்: அவர் நமக்குக் கூறுபவற்றிற்குக் கீழ்ப்படிவதினால் (மத். 7:21-27). இதே போன்று, நாம் இடுக்கமான வழியில் எவ்வாறு* நிலைத்து நிற்கமுடியும்? *இடுக்கமான வழியில் இருப்பவர்கள் அதை விட்டு நீங்குவது சாத்தியமற்றது என்று புதிய ஏற்பாடு போதிப்பதில்லை (1 கொரி. 10:12; யாக். 5:19, 20 ஆகியவற்றை வாசிக்கவும்). இடுக்கமான வழியில் பயணிப்பவர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அதன் கட்டுப்பாடுகளினால் களைத்துப் போய், அதைவிட்டு விசாலமான, சுலபமான வழிக்குச் சென்றுள்ளார்கள் என்பது கவலைக்குரிய விஷயமாக உள்ளது. இடுக்கமான வழியில் நாம் எவ்வாறு நிலைத்திருக்க முடியும்? கிறிஸ்துவின் கட்டளைகளுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிவதினால். (மத். 7:24-27ஐ மறுகண்ணோட்டமிடவும்.)*

*நாம் எந்தப் பாதையில் பயணம் செய்கின்றோம் என்பது என்ன மாறுதலை ஏற்படுத்துகிறது? ஒன்று ஜீவனுக்கு - தேவனுடன் நித்தியத்திற் கும் வாழ்வதற்கு - வழிநடத்துகிறது (ரோமர் 2:7). இன்னொன்று கேட்டிற்கு - நித்திய அழிவிற்கு, கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து விலகியிருத்தலுக்கு - வழிநடத்துகிறது (2 தெச. 1:9). எளிய சொற்றொடர்களில் கூறுவ தென்றால், ஒன்று பரலோகத்திற்கான உயர்வான சாலையாக இருக்கையில், இன்னொன்று நரகத்திற்கு வழிநடத்தும் கீழான சாலையாக உள்ளது.*

## *நல்ல கனி அல்லது கெட்ட கனி (மத். 7:15-20; லூக். 6:43-45)*

*நாம் பயணம் செல்லும் சாலை என்பது உலகஅளவிலான*[28] *வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இல்லை, நான் அதைச் சற்றே மாற்றிக் கூற அனுமதியுங்கள்: நாம் பயணம் செல்லும் சாலை என்பது* நித்திய *அளவிலான வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. மனிதர்கள் அதைப் புரிந்து கொள்ளுவதைப் பிசாசானவன் விரும்புவதில்லை. மக்கள் எந்தப் பாதையில் பயணம் செய்கின்றார்கள் (அதாவது, அவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்) என்பது எவ்வித வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை என்று, அல்லது*

*விசாலமான வழியே உண்மையில் இடுக்கமான வழி என்று அவர்கள் நினைக்கும்படியாகவே சாத்தான் அவர்களை வழிநடத்துகின்றான். இதை நிறைவேற்றுவதற்கு அவன் கள்ளப் போதகர்களைப் பயன்படுத்துகின்றான். மலைப் பிரசங்கத்தின் அடுத்த பகுதியானது கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கையாக உள்ளது.*

*தீர்க்கதரிசி என்பவர் தேவனுக்காகப் பேசுபவராக இருந்தார்; கள்ளத் தீர்க்கதரிசி என்பவர் தாம் தேவனுக்காகப் பேசுவதாக உரிமைகோரினார், ஆனால் அவர் அப்படிப் பேசியதில்லை. இயேசு உண்மையில், இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகளை "ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள்" என்று அழைத்தார் (மத். 7:15ஐக் காணவும்). அவர்கள் தங்கள் உண்மையான தோற்றத்தின்படி காணப்படாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் தேவபக்தியற்ற தவறின்மீது ஒரு மெல்லிய படலமாகச் சத்தியத்தைப் பரப்பிக் கொண்டு, தங்கள் துன்மார்க்கங்களை, நற்செயல்கள் என்ற மேலாடையினால் மூடியிருந்தார்கள் (மத். 7:22, 23ஐக் காணவும்).*

*கிறிஸ்து தம் உரையைக் கேட்டவர்களை விசேஷமாக, வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் போதனைகளைக் குறித்து எச்சரித்திருக்கலாம், ஆனால் சபையின் தொடக்கம் முதல் இன்று வரையில், அதைக் கள்ளப் போதகர்கள் கொள்ளை நோய்போல் தொல்லைப் படுத்தியிருக்கின்றார்கள் (மத். 24:11, 24; அப். 20:29, 30; 2 பேது. 2:1). நாம் கள்ளத் தீர்க்கதரிசிகளை அடையாளம் காண வேண்டும் என்பது கட்டளையாக உள்ளது. இதை நாம் எவ்வாறு செய்ய முடியும்? நாம் அவர்களின் "கனிகளினால்" அவர்களை அறிய முடியும்: அவர்களின் வாழ்வு என்ற கனியினாலும் மற்றும் அவர்களின் போதனை என்ற கனியினாலும் (மத். 7:16-20; ரோமர் 16:17ஐக் காணவும்). அவர்களின் வாழ்வு மற்றும் அவர்களின் போதனை ஆகிய இரண்டும் தேவனுடைய வசனத்துடன் ஒப்பிட்டுக் காணப்பட வேண்டியது அவசியமாக உள்ளது (1 யோவா. 4:1; அப். 17:11).*

*லூக்கா சுவிசேஷ விவரமானது, ஒரு மனிதன் போதிக்கின்ற விஷய மானது அவனது இருதயத்தைப் பற்றிய சில விஷயங்களை வெளிப் படுத்துகிறது என்பதைக் கூடுதலாகக் கூறுகிறது: "இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" (லூக். 6:45).[29] இயேசுவின் புத்திமதியானது அவர், "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (மத். 7:15அ) என்ற வார்த்தைகளை முதலில் பேசியபோது போன்றே இன்றைக்கும் காலத்திற்கு ஏற்றதாகவே உள்ளது.*

## கூறுதல் அல்லது செய்தல்
## *(மத். 7:21-23)*

*எல்லாக் கள்ளத் தீர்க்கதரிசிகளும், தாங்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளா யிருப்பதை அறிகின்றார்களா? விசாலமான வழியில் செல்லுகின்ற ஒவ்வொருவரும் தாம் கேட்டுக்கும் வழிநடத்தும் சாலையில் இருப்பதை அறிகின்றாரா? இல்லை என்பது தெளிவு. மத்தேயு 7:21-23ல் இயேசுவின் வார்த்தைகள், சுயவஞ்சனை என்பது சாத்தியமே என்பதைக் கருத்தாகத்*

*தெரிவிக்கிறது:*

> *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி "கர்த்தாவே! கர்த்தாவே!" என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" என்பார்கள். அப்பொழுது, நான் "ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.*

*நான் இந்த வார்த்தைகளை வாசிக்கும் ஒவ்வொரு முறையும், நான் கவலையினால் நிரப்பப்படுகின்றேன்.*

*"அந்நாளிலே" என்பது நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிக்கிறது (அப். 17:31). இந்த விவரிப்பில், நியாயத்தீர்ப்பின் நாளில் மறுப்பாளர்கள் தாங்கள் செய்திருப்பதாக உரிமைகோரும் ஒவ்வொன்றையும் உண்மையிலேயே செய்தவர்களாய் இருப்பார்களா? அவர்களின் உரிமைகோருதலை இயேசு மறுக்கவில்லை, ஆனால் அவர்கள் நற்செயல்களைச் செய்திருந்தாலும், அவர்கள் அக்கிரமச் செய்கைக்காரர்களாகவும் இருந்தார்கள், ஏனெனில் அவர்கள் பிரமாணத்திற்குப் புறம்பானதை நடைமுறைப்படுத்தினார்கள் என்று இயேசு குற்றம் சாட்டினார். அவர்களின் செம்மையான செய்கைகள் என்பவை சார்புநிலையில் முக்கியத்துவம் அற்றவைகளாக உள்ளன. "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை" என்பவை வசனம் 23ன் மிகமுக்கியமான (மற்றும் மிகவும் கவலைக்குரிய) வார்த்தைகளாக உள்ளன.*

*வேதாகமத்தில், "அறிதல்" என்பது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுமுறை உட்பட, (1 கொரி. 1:21; கலா. 4:9; பிலி. 3:10) "ஒரு நெருங்கிய உறவுமுறையைக் கொண்டிருத்தல்"[30] என்று அர்த்தமாகக் கூடும். பவுல், "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" என்று எழுதினார் (2 தீமோ. 2:19). இயேசு, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை" என்று கூறியபோது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஒருக்காலும் அவருடன் இரட்சிக்கப்பட்ட உறவுமுறையைக் கொண்டிருந்ததில்லை என்று உறுதிப்படுத்தினார். அவர்கள் அவரையும் அவரது போதனையையும் பின்பற்றியிருந்ததில்லை, ஆனால் எஜமானரும் ஆண்டவரும் என்ற வகையில் அவருக்குத் தங்கள் வாழ்வை ஒப்புவிக்க மறுத்திருந்தார்கள். அவர்கள் என்ன நற்செயல்களைச் செய்திருப்பினும், அவைகள் "கிறிஸ்துவுக்குள்" செய்யப்பட்டிருந்ததில்லை (2 கொரி. 5:17; எபே. 2:13; 3:21; ரோமர் 16:3, 9), ஆனால் அதற்கு மாறாக, கிறிஸ்துவுக்குப் புறம்பே செய்யப்பட்டிருந்தன.[31]*

*இயேசு நம்மை "அறிகின்றார்" என்பதை நாம் எவ்வாறு நிச்சயமாக அறிய முடியும்? அவருக்கு உதடுகளினால் மட்டும் சொன்னால் போதுமானதாக உள்ளதா? "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூறுவது மட்டும் போதுமானதாக உள்ளதா? இல்லை, நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்ய*

*வேண்டும் என்று கிறிஸ்து கூறினார். பூரணமான கீழ்ப்படிதல் தேவைப் படுகிறதா? இல்லை, ஏனெனில் அப்படிப்பட்டது சாத்தியமற்றதாக உள்ளது (ரோமர் 3:23).[32] இருப்பினும், இயேசு நம்மை அறிகின்றார் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்பினால், கிறிஸ்தவராவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவர் நமக்குக் கூறுகின்றாரோ, அதை நாம் செய்வோம் (ரோமர் 6:3-7, 11, 17, 18, 23; கலா. 3:26, 27), மற்றும் பின்பு நாம் நம்மால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாக அவருக்குக் கீழ்ப்படிவோம். இதை, மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்: "... நமது மாம்சத்தின் பலவீனங்கள் மத்தியில், அத்துடன் இணைந்துள்ள நமது அன்றாட பாவத்திற்கான மன்னிப்பின் நிபந்தனைகளின் உடன்பாட்டுடன், நம்மால் முடிந்த அளவுக்குக் கீழ்ப்படிதல் என்பது தேவனுடைய ஆதரவை நமக்குக் கிடைக்கச் செய்துள்ளது."[33]*

## கேட்குதல் அல்லது செய்தல் (மத். 7:24-27; லூக். 6:46-49)

*மலைப்பிரசங்கத்தின் கடைசி வார்த்தைகள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலின் அவசியத்தை வலியுறுத்தியதை நாம் கண்டிருக்கின்றோம். இயேசு இப்பொழுது நன்கு பழக்கமாகியுள்ள வீடுகட்டுபவர்கள் இருவரைக் கொண்ட விவரிப்புடன் இதை முடித்தார்: தன் வீட்டைக் கற்பாறையின் மேல் கட்டிய புத்தியுள்ள மனிதன் மற்றும் மணலின்மீது வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனிதன். இயேசு முதலில் கூறிய விஷயமானது அவரது வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செயல்படும் தனிநபருக்கு ஒப்பிடப்படுகையில், அவர் இரண்டாவதாகக் கூறிய விஷயமானது கேட்டும் ஒன்றும் செய்யாத தனிநபருக்கு ஒப்பிடப்படக் கூடும்.*

*லூக்காவின் சுவிசேஷ விவரமானது, முதலாவது மனிதன் "ஆழமாய்த் தோண்டி,[34] கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு" (லூக். 6:48) இருக்கையில், இரண்டாவது மனிதன் "அஸ்திபாரமில்லாமல் மண்ணின் மேல் வீடு கட்டினான்" (லூக். 6:49) என்று கூறுவதன் மூலம் இந்த விவரிப்பை விரிவாக்குகிறது. கிறிஸ்து ஒரு தச்சர் என்ற வகையில் (மாற். 6:3ஐக் காணவும்), திடமான அஸ்திபாரம் இடுதலின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டிருந்தார், ஆனால் கட்டுமானப் பணியில் சிறிதே அனுபவத்துடனோ அல்லது அனுபவமே இல்லாமலோ இருப்பவர்கள் கூட, ஒரு வீட்டிற்கு அஸ்திபாரம் தேவை என்பதை மதித்து உணர முடியும். ஒவ்வொரு வாழ்வுக்கும் ஒரு அஸ்திபாரம் தேவைப்படுகிறது.*

*பூமிக்குரிய கருத்து என்ற புதை மணலின் மீது பலருடைய வாழ்வுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பது நமது காலத்தின் துன்பங்களில் ஒன்றாக உள்ளது. நமது வாழ்வுக்கு இயேசு மற்றும் அவரது வசனங்கள் என்ற உறுதியான அஸ்திபாரம் தேவைப்படுகிறது (1 கொரி. 3:11; எபே. 2:20 ஆகியவற்றைக் காணவும்). நாம் கிறிஸ்துவின் சித்தத்தைச் செய்தால் (மற்றும் அதைச் செய்தால் மட்டுமே) நிலைப்புத்தன்மையைக் கொண்டிருக்க முடியும்.*

*செய்தல் எதிர். செய்யாதிருத்தல் என்பதே இவ்வசனப் பகுதியில் உள்ள நேர்மாறாக இருக்கிறது. உலகம் முழுவதிலும் உள்ள சிறுபிள்ளைகள் கற்பாறையின்மீது வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனிதன் மற்றும் மணல் மீது வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனிதன் ஆகியோரைப் பற்றிப் பாடுகின்றார்கள். நான் இப்படிப்பட்ட ஒரு பாடலை வழிநடத்தியபோது, இப்பாடலின் அடிப்படையாக அமைந்துள்ள வசனப்பகுதி வலியுறுத்தப் படுவதை உறுதிப்படுத்துவதற்காக, பாடலின் கடைசி அடியில் உள்ள வார்த்தைகளைச் சற்றே மாற்றினேன்:*

> *எனவே கர்த்தரின் வசனத்தின்மீது உங்கள் வாழ்வைக் கட்டி*
> *எழுப்புங்கள்;*[35]
> *கர்த்தரின் வசனத்தின்மீது உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புங்கள்;*
> *கர்த்தரின் வசனத்தின்மீது உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புங்கள்;*
> *ஆசீர்வாதங்கள் மேலிருந்து வரும்.*
>
> *அவர் சித்தத்தைச் செய்கையில் ஆசீர்வாதங்கள் மேலிருந்து வரும்;*
> *அவர் சித்தத்தைச் செய்கையில் ஆசீர்வாதங்கள் மேலிருந்து வரும்;*
> *அவர் சித்தத்தைச் செய்கையில் ஆசீர்வாதங்கள் மேலிருந்து வரும்;*
> *எனவே கர்த்தரின் வசனத்தின்மீது உங்கள் வாழ்வைக் கட்டி*
> *எழுப்புங்கள்.*

*லூக்கா சுவிசேஷ விவரத்தில் உள்ள இயேசுவின் வார்த்தைகள் சீஷர்களாக இருக்கப் போகிறவர்களுக்கு இன்னமும் அறைகூவல் விடுக்கின்றன: "என்னை 'ஆண்டவரே! ஆண்டவரே!' என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" (லூக். 6:46).*

## *முடிவுரை*
## *(மத். 7:28, 29)*

*"இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுடையவராக அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள்" (மத். 7:28, 29). ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும்கூட, மலைப் பிரசங்கமானது இன்னமும் திகைப்புக்குரியதாகவே உள்ளது. அதை வாசியுங்கள்; அதைப் படியுங்கள்; ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அதை நடைமுறைப் படுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்.*

*கிறிஸ்துவின் பிரசங்கம், நாம் பயணம் செய்யக் கூடிய இரண்டு வழிகளைப் பற்றிக் கூறியது (மத். 7:13, 14) என்று சுட்டிக் காண்பித்து நான் இந்தப் பாடத்தைத் துவக்கினேன். உலகமானது தனிநபர்களுக்கு இடையில் பல வித்தியாசங்களை ஏற்படுத்துகிறது: செல்வந்தர் மற்றும் ஏழை, அழகானவர் மற்றும் எளிமையானவர், திறமையுள்ளவர் மற்றும் திறமை*

*யற்றவர், வெற்றி பெற்றவர் மற்றும் தோல்வியடைந்தவர்.* [*ஆனால்*] *கடைசியில் பின்வரும் ஒரே ஒரு வித்தியாசம்தான் பொருட்படுத்தப்படும்: நாம் நித்திய ஜீவனுக்குள் வழிநடத்தும் இடுக்கமான வழியில் இருக்கின் றோமா அல்லது நித்திய அழிவுக்கு வழிநடத்தும் விசாலமான வழியில் இருக்கின்றோமா (மத். 25:46; யோவா. 3:16; ரோமர் 2:7, 8; 6:23). "நான் எந்த வழியில் பயணம் செய்கின்றேன்?" என்ற கேள்வியை நம் ஒவ்வொரு வருக்கும் இன்றியமையாத கேள்வியாக உள்ளது. "நீங்கள் எந்த வழியில் பயணம் செய்கின்றீர்கள்?" நான் மீண்டும் கூறுகின்றேன்: வசனமானது, நாம் ஏற்படுத்த வேண்டிய தெரிவுகளுடன், ஜீவனுக்கு அல்லது கேட்டுக்கு வழிநடத்தும் தெரிவுகளுடன் நம்மை எதிர்கொள்ளுகிறது. சரியான தெரிவு களை மேற்கொள்வதற்குத் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் உதவுவாராக.*

---

*குறிப்புகள்*

[1]John R.W. Stott, *The Message of the Sermon on the Mount* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 15. [2]E. Stanley Jones, *The Christ of the Mount* (Nashville: Abingdon Press, 1931), 14. [3]Harvey Scott, *The Sermon on the Mount* (Texarkanna, Tex.: The Christian Helper, 1947), 3. [4]KJV*யில் மத்தேயு 7:13, 14ல்* "strait" *என்ற வார்த்தை இருமுறை உள்ளது.* "Strait" *என்பது "குறுகிய" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இதைக் கேட்கையில் பலர்,* "straight" *(இருமுனைகளுக்கிடையில் உள்ள மிகக் குறைந்த தூரம்) என்பதை நினைக்கின்றார்கள்.* [5]*லூக்கா 12:33, 34ஐக் காணவும்.* [6]*பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் பற்றிய ஒரு உதாரணத்திற்கு 1 தீமோத்தேயு 6:18, 19ஐக் காணவும்.* [7]*நாம் அறிந்துள்ளபடி, அந்த நாட்களில் வங்கிகள் இருந்ததில்லை, எனவே மக்கள் தங்கள் பொக்கிஷங்களைத் தங்களுடைய வீடுகளில் மறைத்து வைத்தார்கள் அல்லது அவற்றை நிலத்தில் புதைத்து வைத்தார்கள் - அங்கு அவை இயற்கையினால் அழிவடையக்கூடும் (யாக். 5:2, 3அ) அல்லது கள்வர்களால் களவு செய்யப்படக் கூடும்.* [8]*லூக்கா 11:34-36ஐக் காணவும்.* [9]*இந்தத் தகவலானது எனது* NASB *வேதாகமத்தின் பக்கக் குறிப்பில் தரப்பட்டுள்ளது.* KJV*யில்* "a bountiful eye" *என்றுள்ளது.* [10]*கண்ணானது இருதயத்தின் நிலைப்பாட்டிற்கு நிற்குதலுக்கான மற்ற உதாரணங்களுக்கு, உபா. 15:9; 28:56; நீதி. 23:6; மத். 20:15 ஆகிய வசனங்களைக் காணவும். (ஆங்கில வேதாகமத்தில் இவ்வசனங்கள் ஒவ்வொன்றிலும் ''கண்'' என்ற வார்த்தை எப்போதும் இல்லாதிருப்பினும் மூலவசனத்தில் ''கண்'' என்பது இந்த வசனங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளது. தமிழ் வேதாகமத்தில் இவ்வசனங்கள் ஒவ்வொன்றிலும் "கண்" என்ற வார்த்தை உள்ளது).*

[11]Adapted from J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 256. [12]*லூக்கா 16:13ஐக் காணவும்.* [13]*பாவத்திற்கு அல்லது தேவனுக்கு ஊழியக்காரராக இருத்தல் பற்றிய பொதுவான போதனைக்கு ரோமர் 6:16-18ஐக் காணவும்.* [14]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 110. [15]*"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுதல்" என்பது தேவனுடைய அரசுரிமையை ஒப்புக்கொண்டு, அவரது ராஜரீகக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியப் பிரயாசப்படுதல் என்பதாக உள்ளது. இயேசு "ராஜ்யம்" மற்றும் "சபை" என்ற சொற்றொடர்களை மத்தேயு 16:18, 19ல் ஒன்றுக்கு*

மாற்றாக இன்னொன்றைப் பயன்படுத்தியதால், நமது சொந்த வேலைகளுக்கும் மேலாக கர்த்தருடைய சபையின் மீது ஆர்வம் காண்பித்தல் என்ற நடைமுறைப் பயன்பாட்டையும் நாம் இவ்விடத்தில் ஏற்படுத்த முடியும். [16]Adapted from McGarvey and Pendleton, 259. [17]இந்த வார்த்தைகளைப் பேசும்போதே கூட இயேசு எதிர்காலத்திற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்: அவர், தாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் காலத்திற்காகத் தமது அப்போஸ்தலர்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். பழைய ஏற்பாட்டில் எறும்பானது, எதிர்காலத்திற்குத் தயாராகுதலுக்கான அங்கீகரிக்கப்பட்ட உதாரணமாக முன்வைக்கப்பட்டது (நீதி. 30:25). (கொஞ்சம் சிந்தனை அல்லது சிந்தனையின்மை என்பவற்றிற்கு எதிராக) முன்னேற்பாடாகச் சிந்தித்தல் பற்றிய மற்ற வசனப்பகுதிகளுக்கு, நீதி. 21:5; 25:8 மற்றும் 2 கொரி. 8:20, 21 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [18]நமது உடைமைகள், நமது காலம் உட்பட தேவன் நமது கரங்களில் ஒப்படைத்துள்ள ஒவ்வொன்றிற்கும் நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கின்றோம். நாம் நமது உக்கிராணத்துவத்திற்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (1 கொரி. 4:2ஐக் காணவும்). [19]மத்தேயு 7:1-6ஐப் பற்றிய ஒரு விரிவான கலந்துரையாடலுக்கு இப்புத்தகத்தில் உள்ள ‘‘தீர்ப்பிடாதிருங்கள்’’ மற்றும் ‘‘மற்றவர்களுடன் நட்புறவாயிருத்தல் எவ்வாறு’’ என்ற பாடங்களில் காணவும். [20]லூக்கா 6:39 வசனமானது, இயேசு “பின்னும் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்” என்று கூறுகிறது. நமது படிப்பில் இவ்விடத்தில்தான் “உவமை” என்ற வார்த்தை முதன்முதலாகப் பயன்படுத்தப்படுகிறது.

[21]7:7-11க்கும் இதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனப்பகுதிகளுக்கும் உள்ள உறவுமுறை பற்றிய அதிகமான கருத்துக்களுக்கு இப்புத்தகத்தில் அடுத்து வரும் இரண்டு பிரசங்கங்களைக் காணவும். [22]லூக்கா 18:1ஐக் காணவும். [23]யாக்கோபு 5:16ஆ-18ஐக் காணவும். [24]பூமியில் உள்ள நமது தந்தையர்கள் நம்மை நடத்துவது போலவே பரலோகத்தில் இருக்கிற நமது தந்தையும் நம்மை நடத்துதல் பற்றி வேத வசனங்களில் மற்ற ஒப்பீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (எடுத்துக்காட்டாக, எபி. 12:4-13ஐக் காணவும்.) ஆயினும் நாம், நமது பரலோக தந்தை எல்லா அம்சங்களிலும் நமது பூமிக்குரிய தந்தையைப் போலவே இருக்கின்றார் என்று முடிவு செய்து விடக்கூடாது. பூமிக்குரிய ஒவ்வொரு தந்தையும் தமது பிள்ளைகளை நடத்தும் விதத்தில் [ஏதேனும்] தவறு செய்துவிடுகின்றார், ஆனால் தேவன் [இவ்வாறு] தவறு செய்வதில்லை. தேவன் எவரொருவரையும் நரகத்திற்கு அனுப்ப மாட்டார், ஏனெனில் பூமிக்குரிய தந்தையர்களில் எவரும் அவ்விதமான செயலைத் தமது பிள்ளைகளுக்குச் செய்ய மாட்டார் என்று போதிப்பதற்குச் சிலர் மத். 7:7-11 வசனங்களைப் பயன்படுத்த முயற்சி செய்துள்ளார்கள். இவ்வசனப் பகுதிக்கு இந்த முறையில் விளக்கம் அளித்தல் என்பது நியாயத்தீர்ப்பு பற்றிய (மத். 25:31-46 போன்ற) எளிய வேத வசனப் பகுதிகளுக்கு நேர்மாறானதாக உள்ளது. [25]பொன்விதி பற்றிய விரிவான ஒரு கலந்துரையாடலுக்கு ‘‘மற்றவர்களுடன் நட்புறவாயிருத்தல் எவ்வாறு” என்ற பாடத்தில் காணவும். [26]குறிப்பாக இது, பிற மக்களுடன் நட்புறவாயிருத்தல் எவ்வாறு என்பது பற்றிய நியாயப்பிரமாண மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனைக்குரியதாக உள்ளது. [27]லூக்கா 13:23, 24ஐக் காணவும். [28]“... உலக அளவிலான” என்பது பேச்சுவழக்கில் ஒரு பொதுவான உருவகமாக உள்ளது. இது ஏராளமான அளவைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இந்தப் பேச்சுருவகமானது நீண்ட நாட்களாக இருந்து வருகிறது (யாக். 3:6ஐக் காணவும்). [29]லூக்கா 6:45 வசனமானது நமது பேச்சைப் பற்றிய ஒரு பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்க முடியும்: நாம் கூறுகின்ற விஷயங்கள் நமது இருதயங்களை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் சந்தர்ப்பப்பொருளில்,

இவ்வார்த்தைகள் தேவனுக்காகப் பேசுகின்றோம் என்று உரிமைகோரிக் கொள்பவர்களுக்கு விசேஷமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. நான் இவ்விடத்தில் ஒரு முன்னெச்சரிக்கைக் கூற்றைக் கூடுதலாகக் குறிப்பிட வேண்டும்: லூக்கா 6:45 வசனத்திற்கு, மத்தேயு 7:1ல் தீர்ப்பிடுதலுக்கு எதிரான இயேசுவின் போதனைக்கு முரண்படும் வகையில் விளக்கம் தராதீர்கள். பிறருடனான உங்கள் பேச்சில் உங்களால் இயன்ற அளவுக்குச் சிறந்த முறையில் கட்டமைப்பை ஏற்படுத்துங்கள். [30]இது திருமண உறவுமுறைகளையும் உள்ளடக்குகிறது. ஆதாம் தன் மனைவியை "அறிந்தான்" என்று வேதாகமம் கூறுகிறது (ஆதி. 4:1). NASBயில், "[மனைவி]யுடன் உறவுகொண்டான்" என்றுள்ளது. எனது வேதாமத்தில் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: "[நேர்ப்பொருளில்], *அறிந்தான்*." இந்த நயம்பட உரைத்தலானது வேதாகமம் முழுவதிலும், புதிய ஏற்பாட்டிலும் கூடப் பயன்படுத்தப்படுகிறது (மத். 1:25; லூக். 1:34 ஆகிய வசனங்களைக் காணவும்).

[31]விருப்பப்பட்டால் நீங்கள், முயற்சியானது எங்கே மேற்கொள்ளப்படுகிறது என்பதன் முக்கியத்துவத்திற்கான விவரிப்புகளைத் தர முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு பந்தயத்தில் கலந்துகொள்ளாத மனிதன், பந்தயச் சாலையில் உள்ளவர்களைவிட வேகமாக[க்கூட] ஓடலாம், ஆனால் அவனுக்கு வெற்றி கிரீடம் அணிவிக்கப் படாது (2 தீமோ. 2:5; 1 கொரி. 9:24 ஆகிய வசனங்களைக் காணவும்). உங்கள் மாணவர்களுக்குப் புரியக்கூடிய விவரிப்புகளைப் பயன்படுத்தவும். [32]தேவனுடைய கிருபைக்காக அவருக்கு நன்றி (ரோமர் 6:23)! [33]McGarvey and Pendleton, 268. [34]மேலோட்டமான எண்ணம் கொண்டவர்கள் ஒருக்காலும் அறிய இயலாத ஆழம் ஒன்று கிறிஸ்தவத்திற்கு உண்டு. [35]நான் எனது கை அசைவுகளையும் சற்றே மாற்றினேன்: நான் "கர்த்தருடைய வசனம்" என்று கூறும்போது எனது கைகளை ஒரு திறந்த புத்தகம் போல் வைத்துக் கொண்டேன், மற்றும் "அவர் சித்தத்தைச் செய்கையில்" என்று கூறும்போது ஒரு கையினால் மேல் நோக்கிச் சுட்டிக் காண்பித்தேன்.

# 26

# "தீர்க்காதிருங்கள்"

## மத்தேயு 7:1-12, வசனம் 1, 2ன் மீது ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மக்களுடன் நட்புறவாயிருத்தல் என்பது, கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதில் உள்ள அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது. இதை இயேசு புரிந்துகொண்டிருந்தார், எனவே அவர் மலைப் பிரசங்கத்தில் உறவு முறைகள் பற்றி அதிகமாகக் கூறினார். மற்றவர்களிடம் இரக்கம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் (5:7) சமாதானம் செய்கின்றவர்களாக இருக்க வேண்டும் என்றும் (5:9) அவர் கூறினார். கேட்பவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நல்ல செல்வாக்குடையவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார் (5:13-16). சகோதரனுடன் கோபம் கொள்ளாமல், ஒப்புரவாக வேண்டும் என்று அவர் கூறினார் (5:21-26). நம்மைப் புண்படுத்த முயற்சி செய்கின்றவர்களிடத்தில் (அதாவது, நமது விரோதிகளிடத்தில்) நாம் எவ்வாறு உறவுகொண்டிருக்க வேண்டும் என்றும்கூட கிறிஸ்து கூறினார் (5:38-48). இப்பொழுது நாம், இந்தத் தலைப்பின் மீதான இயேசுவின் போதனையில் ஒரு முழு பகுதிக்கு வருகின்றோம்: மத்தேயு 7:1-12. இந்தப் பன்னிரெண்டு வசனங்களும் நாம் மற்றவர்களுடன் எவ்வாறு ஒத்துப் போவது என்பதைப் பற்றி அதிகம் கூறுகின்றன.*

*மலைப்பிரசங்கமானது நமது வாழ்வின்மீது ஒளிர்ந்து நமது பலவீனங்களை வெளிப்படுத்துகிற வட்டவிளக்குப் போன்றுள்ளது. இந்த மற்றும் இதற்கு அடுத்த பிரசங்கங்களில் நான் உங்கள் மீது தேவனுடைய வசனம் என்ற தேடுவிளக்கை ஒளிரச் செய்கையில், நீங்கள் மன ஆறுதலற்ற/சங்கடமான வேளைகள் சிலவற்றைக் கொண்டிருக்கலாம். நான் இந்த எடுத்துரைப்புக்களுக்காக, மணிக்கணக்கில் வேத வசனங்களுடன் போராடி, மாறுபட்ட மொழிபெயர்ப்புகளில் உள்ள வசனப் பகுதிகளை வாசித்து மறுபடியும் வாசித்து உழைத்திருக்கின்றேன் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். நான் முந்நூறு பக்கங்களுக்கும் அதிகமான விளக்கவுரைகளை வாசித்து, குறித்துவைத்து, மறுகண்ணோட்டம் இட்டுள்ளேன். அந்த நேரம் முழுவதிலும், ஒளிக்கதிரானது என்மீது ஒளிர்ந்து, எனது குறைபாடுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. நான் மோசமான எண்ணப்போக்குகளுடன் போராடியுள்ளேன், அவற்றின்மீது இவ்வசனப் பகுதி கவனம் குவித்துள்ளது. நீங்கள் சங்கடமான ஒரு சில நிமிடங்களை அனுபவிக்கலாம், ஆனால் நான் நமது வேதபாடப் பகுதியில் இருந்து பல மணி நேரங்கள் வலிவார்ந்த கூர்ந்தாய்வுகளைக் கொண்டிருந்தேன் என்பதை நிச்சயப்*

படுத்திக் கொள்ளுங்கள்.

வசனங்கள் 1முதல் 12வரையுள்ள பகுதியை, நாம் விவரமாகப் படிக்கத் தொடங்கும் முன்பு, மற்றவர்களுடன் பழகுதல் பற்றிய எனது பிரசங்கங் களில், இந்த முழுவசனப் பகுதியையும் நான் உள்ளடக்கியது ஏன் என்பதை, ஒருவேளை உங்களுக்குக் கூற வேண்டியதாக உள்ளது. வசனங்கள் 1முதல் 6வரையுள்ள வசனங்கள் தீர்ப்பிடுதல் பற்றியும் பரிசுத்தமானதை நாய்களுக் குக் கொடுக்க வேண்டாம் என்பது பற்றியும் பேசுகையில், அவைகள் உறவுமுறைகள் பற்றி எடுத்துரைக்கின்றன என்பது ஏறக்குறைய தெளிவாக உள்ளது. அடுத்ததாக, 7முதல் 11வரையுள்ள வசனங்களில், ஜெபத்தைப் பற்றியும் அதன் பலனைப் பற்றியும் போதித்தார். வசனம் 12, "ஆதலால் … ." என்று கூறி, அதன் பின்பு, நாம் பிறருடன் இணக்கமாக வாழ்வது எவ்வாறு என்பதற்கான நிறைவான அறிவுறுத்துதலாக, பொன்விதி என்பதைத் தராமல் இருந்தால், அவர் [இயேசு] உறவுமுறைகள் பற்றிய பாடக்கருத்தை விட்டு அகன்றிருந்தார் என்றே நாம் நினைத்திருப்போம். "ஆதலால்" என்ற வார்த்தையானது, இயேசு தமது பாடக்கருத்தை கூறிமுடித்தார் - தொகுத் துரைத்தார் - அதை முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இவ்விதமாக, ஏதோ ஒரு வழியில், 7முதல் 11வரையுள்ள வசனங்கள் ஒரு முழு ஆய்வுக்கருத்தை எடுத்துரைக்கின்றன. இந்தக் காரணத்திற்காகவே நாம், மக்களுடன் நன்கு பழகுதல் என்பது பற்றிய நமது தலைப்பிற்கு 1முதல் 12வரையான வசனங்களை உள்ளடக்குவோம்.

நான் நமது வேதபாடப் பகுதியில் இருந்து ஆறு சத்தியங்களைக் கொண்டு வருவேன்: மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு அத்தியா வசியமான ஆறு விஷயங்கள். நான் இவற்றில் முதலாவது அத்தியா வசியமான விஷயத்தை மட்டும் - மற்றும் இரண்டு வசனங்களை மட்டும் - இந்தப் பிரசங்கத்தில் கூறிமுடிப்பேன்.[1] முதல் இரண்டு வசனங்கள் தீர்ப்பிடுதல் பற்றியவைகளாக இருப்பதால், நான் இந்த எடுத்துரைப்பை, "தீர்க்காதிருங்கள்"[2] என்று அழைக்கின்றேன். தொடர்ந்து வரும் அடுத்த பிரசங்கத்தில் நான், எஞ்சியுள்ள ஐந்து சத்தியங்களையும் கலந்துரை யாடுவேன்.

**மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு**
**அத்தியாவசியமான விஷயம் #1:**

## நாம் தீர்ப்பிடுபவர்களாய் இருப்பதை நிறுத்த வேண்டும் (வ. 1, 2)

## இயேசு என்ன கட்டளையிட்டார் (வ. 1அ)

நாம் மற்றவர்களுடன் நட்புறவாயிருக்க வேண்டும் என்றால், முதலாவதாக நாம் தீர்ப்பிடுபவர்களாய் இருப்பதை நிறுத்த வேண்டும் என்று இயேசு கூறினார். இவ்வசனப் பகுதி, "தீர்க்காதிருங்கள்" என்று

தொடங்குகிறது (வ. 1ஆ). மூலமொழி வசனத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள வாக்கிய வடிவமானது, அவரது உரையைக் கேட்டவர்கள் தீர்ப்பிடுபவர்களாயிருப்பதை நிறுத்த வேண்டியது அவசியம் என்று சுட்டிக்காண்பிக்கிறது. வில்லியம்ஸ்ஸின் மொழிபெயர்ப்பில், "பிறரை விமர்சிப்பதை நிறுத்துங்கள்" என்றுள்ளது.[3]

முதல் சிந்தனையில், இது உறவுமுறைபற்றித் தொடங்கி, அழகான பொன்விதியுடன் முடிகிற ஒரு [போதனைப்] பகுதியைத் தொடங்குவதற்கு எதிர்மறையான வழிமுறையாகக் காணப்படுகிறது. பல காரணங்களுக்காக இயேசு இது போன்று தொடங்கியிருக்கலாம்.

**உலகளாவிய ஒரு தேவையைச் சந்தித்தல்**

தீர்ப்பிடுதல் பற்றிய இந்த எச்சரிக்கை கிறிஸ்துவின் உரையைக் கேட்டவர்கள் யாவருக்கும் அவசியமாயிருந்த காரணத்தால் - இந்தப் புத்திமதி நமக்கு அவசியமாயிருப்பதால் - கிறிஸ்து இவ்வாறு கூறுதலைக் கொண்டு தொடங்கியிருக்கலாம். நம்மில் ஒவ்வொருவரும், மத்தேயு 7:1ல் இயேசுவின் கட்டளையை மீறாமல், அநேகமாக எந்த ஒரு இருபத்து நான்கு மணிநேரத்தையும் கடந்து செல்வதில்லை. இந்த ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படியத் தவறுதல் என்பதைக் காட்டிலும் அதிக வேகமாக வேறு எதுவும் ஒரு உறவை அழிப்பதில்லை.

**ஒரு மோசமான செல்வாக்கை ஈடுசெய்தல்**

வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஒருக்காலும் இயேசுவின் சிந்தையை விட்டுத் தூரத்தில் இருந்தது இல்லை என்பது, நியாயந்தீர்த்தல் பற்றிய பாடக்கருத்துடன் இயேசு தொடங்கியதற்கு இன்னொரு சாத்தியக்கூறாக இருக்கலாம். அவர்மீது குற்றம் சாட்டச் சிலவற்றைக் கண்டறியும் படிக்கு(லூக். 6:1-7)அவர்கள் ஏற்கனவே அவர் செல்லும் இடங்களுக் கெல்லாம் அவரைப் பின்பற்றி வந்தார்கள். அவரது விரோதிகள் (இதில் பரிசேயர்களும் உள்ளடங்கினார்கள்) அவரைக் கொல்வதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்கள் (யோவா. 5:18).

இவ்விதமாக, மலைப் பிரசங்கத்தில், இயேசு அவர்களைக் குறித்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பல குறிப்புரைகளை ஏற்படுத்தினார். மத்தேயு 5:20ல் அவர், "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் ..." என்று கூறினார். அத்தியாயம் 5ன் பிற்பகுதியில், கிறிஸ்து தமது போதனையை நியாயப்பிரமாணம் பற்றிய பாரம்பரியங்களுடன் வித்தியாசப்படுத்தினார்; இந்தப் பாரம்பரியங்கள் பரிசேயர்களால் முழுநிறைவாக்கப்பட்டன. அத்தியாயம் 6ன் முதல் பகுதியில் இயேசு, தர்மம் கொடுக்கும்போது தாரை ஊதுவிக்கச் செய்யும், தெருமுனைகளில் நின்றுகொண்டு நீண்ட ஜெபங்களை மீண்டும்மீண்டும் கூறும், உபவாசிக்கும்போது மனிதர்கள் கவனிப்பதை விரும்பும் மாய்மாலக் காரர்களைப் பற்றிப் பேசினார். அவரது விவரிப்புகளில் பரிசேயர்களை ஒவ்வொருவரும் அடையாளம் கண்டு புரிந்திருப்பார்கள்.[4]

*வேதபாரகர்களும் பரிசேயர்களும், இயேசு கடிந்துகொண்டிருந்த தீர்ப்பிடுதலைச் செய்து குற்றப்பட்டிருந்தார்கள். அவர்கள் சமுதாயத்தின் பெரும்பிரிவினரைக் கண்டனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்: ஆயக்காரர் கள் (லூக். 18:9-14). சமாரியர்கள் மற்றும் புறஜாதிகள். மேலும் அவர்கள் தங்களை, மற்ற எல்லாரைக் காட்டிலும் மேன்மையானவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மற்றவர்களைக் கீழ்மையாகப் பார்த்து அவர்கள்மீது சிறிதளவே பரிவிரக்கம் கொண்டிருந்தார்கள். நாம் மற்றவர்களுடன் நட்புறவாக இருக்க வேண்டுமென்றால், நமது நீதியானது வேதபாரகர்கள், பரிசேயர்கள் ஆகியோரின் நீதியைவிட அதிகமாக இருக்க வேண்டும்.*

***எதிர்மறையான அம்சத்தை எடுத்துப்போடுதல்***

*உறவுமுறையில் உள்ள நேர்மறையான அம்சத்தை எடுத்தரைப்பதற்கு முன்னர் அதில் உள்ள எதிர்மறையான அம்சத்தை எடுத்துப் போடுவதற்காக வும் இயேசு இவ்விதமாகத் தொடங்கியிருக்கலாம். நாம் மலர்ச் செடிகளை நடுவதற்கு முன்பாக, சிலவேளைகளில் களைச் செடிகளைப் பிடுங்கி எறிய வேண்டி இருக்கிறது.*

*எந்தக் காரணத்திற்காக இருந்தாலும், கிறிஸ்து தொடங்கிய இடம் இதுவாகவே இருந்தது: "நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்."*

## *இயேசு எதனை அர்த்தப்படுத்தவில்லை (வ. 1ஆ)*

*உலக சிந்தையுள்ளவர்கள் மற்றும் வேதாகம ரீதியான கல்வி யறிவில்லாதவர்கள், ஒரு சில வேத வசனப் பகுதிகளை அறிகின்றார்கள், அவற்றில் இதுவும் ஒன்றாக உள்ளது.[5] விசேஷமாக, இவர்கள் பின்வரும்* KJV *[நம்நாட்டில்] தமிழ் சொற்றொடருக்கு நன்கு பழக்கப்பட்டுள்ளார்கள்: "நீங்கள் ... தீர்க்கப்படாதபடிக்கு ... தீர்க்காதிருங்கள்."*

*எனது சொந்த அனுபவத்தில், நான் மிகவும் அடிக்கடி, குற்றம் உணர்த்தப்பட்டவர்களின் உதடுகளிலிருந்தோ அல்லது அவர்களைக் குறித்துப் பரிவிரக்கம் கொள்பவர்களின் வாயிலிருந்தோ பின்வரும் வார்த்தைகளைக் கேட்டுள்ளேன்: "நீங்கள் ... தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்." இந்தத் தனிநபர்கள், இவ்வார்த்தைகள், நாம் ஒருபோதும், மற்றவர்களைத் தவறானவர்கள் என்றோ அல்லது மனந்திரும்பி தமது வழியை மாற்றிக் கொள்ளாத பாவிக்குத் தீவிரமான விளைவுகள் காத்திருக்கின்றன என்றோ கூறக்கூடாது என்று அர்த்தப்படுத்துவதாக விளக்கம் அளிப்பார்கள்.[6] இயேசு இதைப் போதிக்கவா விரும்பினார்?*

*மத்தேயு 7:1ல் "தீர்க்கப்படுதல்" என்ற வார்த்தை எதனை அர்த்தப் படுத்துகிறது என்று குறிப்பிடுவதற்கு முன்பு, இது எதனை அர்த்தப் படுத்துவதில்லை என்பதை நான் முதலில் வலியுறுத்த அனுமதியுங்கள்.*

***சமூக தீர்ப்புக்கு எதிராக அல்ல***

*வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லையாதலால், இயேசு வின் வார்த்தைகள், நாம் சமூக தீர்ப்புக்கு (அதாவது, நாட்டின் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு) எதிராகச் செல்ல வேண்டும் என்று அர்த்தப்படுத்துவ தில்லை. தேவன் நியாயத்தீர்ப்பு அளிக்க சமூக அரசுக்கு உரிமை அளித்துள் ளார் (1 பேது. 2:13, 14; தீத்து 3:1; ரோமர் 13:1 ஆகிய வசனங்களைக் காணவும்).*

***சபை ஒழுங்கு நடவடிக்கையை நீக்கிப் போடுவதற்கு அல்ல***

*சிலர், "இவ்வசனப்பகுதியானது சமூக தீர்ப்புகளைப் பற்றி அக்கறை கொள்ளுவதில்லை. இது, ஒரு சபையை அல்லது அதன் மூப்பர்களை அதன் உறுப்பினர் யாருக்காவது, அவர்கள் தவறானவர்களா யிருக்கின்றார்கள் மற்றும் அவர்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பிடுவதைக் கண்டனம் பண்ணுகிறது'' என்று பதில் அளிப்பார்கள். சபையில் இல்லாதவர்கள் மட்டுமின்றி சபை உறுப்பினர்கள் சிலரும்கூட இவ்வாறு உணருகின்றார்கள். குறிப்பிட்ட ஒரு சபையின் மூப்பர்களில் ஒருவர் என்னிடத்தில், "நான் மூப்பராக இருக்கின்ற சபையில் நாங்கள் ஒருக் காலும் எவரொருவரிடத்திலிருந்தும் எங்கள் ஐக்கியத்தை நீக்கியதில்லை. ஏனெனில் இயேசு, 'நீங்கள் ... தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்' என்று கூறியுள்ளாரே'' என்று கூறினார்.*

*வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். ஆகையால், மத்தேயு 7:1 வசனமானது, நாம் ஒருக்காலும் சபை ஒழுங்கு நடவடிக்கையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று போதிப்பதில்லை. "தீர்க்காதிருங்கள்" என்று கூறிய இயேசு, சபை ஒழுங்கு நடவடிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் நமக்குப் போதித்துள்ளார் (மத். 18:15-17). அவர் அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத் திற்குள்ளும் வழிநடத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பிய போது (யோவா. 16:13), அவர் பவுலையும் மற்றவர்களையும் சபை ஒழுங்கு நடவடிக்கைக்கு அவசியமான வல்லமையுள்ள வசனப்பகுதிகளை வெளிப் படுத்தும்படி ஏவுதல் செய்தார் (1 கொரி. 5:5, 9; 2 தெச. 3:6, 14, 15; தீத்து 3:9-11).*

***தனிப்பட்ட தீர்ப்பிடுதலைக் கண்டனம் பண்ண அல்ல***

*இன்னொருவர், ''ஒருவேளை இவ்வசனப் பகுதி சபை ஒழுங்கு நடவடிக்கையைப் பற்றிப் பேசாதிருக்கலாம், ஆனால் இது குறைந்தபட்சம், கிறிஸ்தவர்களாயுள்ள தனிநபர்கள் என்ற வகையில் நாம், இன்னொருவர் ஒழுக்கரீதியாக அல்லது உபதேச ரீதியாகத் தவறானவராயிருக்கின்றார் என்று கூறும் உரிமையை ஒருக்காலும் பெற்றிருப்பதில்லை என்று போதிக்கிறது" என்று பதில் அளிக்கலாம்.*

*வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்பதை நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த வேண்டும். இது உண்மையாய் இருக்கும் பட்சத்தில், மத்தேயு 7:1 வசனமானது, நாம் மற்ற மக்களைப் பற்றி*

*ஒருக்காலும் தீர்ப்பிடக்கூடாது என்று போதிப்பதில்லை. அடுத்துவரும் பிரசங்கத்தில் நாம், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள் ... ." என்று கூறுகிற வசனம் 6ஐப் படிப்போம்: "நாய்கள்" யார் என்றும் மற்றும் "பன்றிகள்" யார் என்பதையும் பற்றி தீர்ப்பிடாமல் நாம் அந்தக் கட்டளைக் குக் கீழ்ப்படிய முடியாது. நீங்கள் படிப்பதற்காக கொடுக்கப்பட்ட வைகளை நிறைவு செய்திருந்தால், மத்தேயு 7:15-20 வசனப்பகுதியானது கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை செய்வதையும் கள்ளத் தீர்க்கதரிசிகளை நாம் அவர்களது உழைப்பின் "கனி"யைக் கொண்டே அறிய முடியும் என்று கூறுவதையும் நீங்கள் அறிவீர்கள் (வ. 16அ). பிரசங்கியார்கள் சில வேளைகளில், "நாம் நியாயதிபதிகள் அல்ல; நாம் கனிகளை ஆய்வுசெய்பவர்கள்" என்று கூறுகின்றார்கள். இங்கு இடம் இருந்திருந்தால், நாம் பிறரைக் குறித்துத் தொடர்ந்து தீர்ப்பிட வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கும் வசனப்பகுதிகள் பிறவற்றைக் கண்ணோக்க முடியும் (ரோமர் 16:17; கலா. 1:8, 9; பிலி. 3:2; 1 யோவா. 4:1).*

## *இயேசு எதனை அர்த்தப்படுத்தினார் (வ. 1ஆ)*

*நமது வேத பாடப் பகுதியில் "தீர்க்குதல்" என்ற வார்த்தை எதனை அர்த்தப்படுத்துவதில்லை என்று வலியுறுத்தியுள்ள நிலையில், நாம் "இது எதனை அர்த்தப்படுத்துகிறது?" என்ற கேள்விக்கு இன்னும் பதில் கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம்.*

*"தீர்க்குதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான krino என்ற வார்த்தையில் இருந்துதான் நாம்* "criticize" *("விமர்சித்தல்") என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். "விமர்சித்தல்" என்ற வார்த்தையைப் பற்றி நாம் பொதுவாக எதிர்மறையாகவே - பிறரிடம் உள்ள தவறுகளைச் சுட்டிக்காண்பிப்பதாகவே - நினைக்கின்றோம், ஆனால் "விமர்சித்தல்" என்பது "மதிப்பீடுசெய்தல்" என்று மட்டுமே அர்த்தப் படுகிறது. அந்த மதிப்பீடு செய்தல் என்பது எதிர்மறையாகவோ அல்லது நேர்மறையாகவோ இருக்க முடியும்; அது மோசமானதாகவோ அல்லது நல்லதாகவோ இருக்க முடியும்; இது அழிக்கக் கூடியதாகவோ அல்லது கட்டியெழுப்பக் கூடியதாகவோ இருக்க முடியும். இயேசுதாமே, தம் உரையைக் கேட்ட ஒரு குழுவினரிடத்தில், "... நீதியின்படி தீர்ப்பு செய்யுங் கள்" என்று கூறினார் (யோவா. 7:24). எனவே, மத்தேயு 7:1 வசனமானது, பிறரைக்குறித்து தீர்ப்புகள் செய்யக் கூடாது என்பதற்கான உலகளாவிய ஆணையாக இருப்பதில்லை. விமர்சிக்கும் துறை/பண்பு என்பது விலங்கு களில் இருந்து நம்மை வித்தியாசப்படுத்துவதற்காகத் தேவன் நமக்குள் வைத்துள்ள பல பண்புகளில் ஒன்றாக உள்ளது:[7] நாம் ஆதாரங்களை எடை போட்டுப் பார்க்கக் கூடியவர்களாக இருக்கின்றோம்; நாம் மதிப்பீடு செய்யக் கூடியவர்களாக இருக்கின்றோம்; நாம் தீர்ப்புகளை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றோம்.*

இருந்தபோதிலும், நாம் தவிர்க்க வேண்டிய ஒரு குறிப்பிட்ட வகையான தீர்ப்பிடுதல் உள்ளது என்று இயேசுவின் வார்த்தைகள் போதிக்கின்றன. பாடக்கருத்தை நான் முழுமையும் எடுத்துரைக்க இயலாது, ஆனால் இயேசு கண்டனம் செய்கின்ற தீர்ப்பிடுதலின் பல அம்சங்களைப் பற்றிய கருத்தைத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். (இங்குதான், நமது இருதயங்களையும் வாழ்வையும் வெளிப்படுத்தும் என்று முன்பு குறிப்பிட்ட சங்கடப்படுத்தும் வட்டவிளக்கு உள்ளது.)

**ஒருதலைப்பட்சமான தீர்ப்பு**

நமது பின்னணிகள், தப்பெண்ணங்கள், மற்றும் முன்விருப்பத் தேர்வுகள் ஆகியவற்றை நமது தீர்ப்பிடுதலுக்கு வண்ணம் கொடுக்க அனுமதித்தல் என்பது ஒரு பொதுவான குறைபாடாக உள்ளது. இதைத் தவிர்த்தல் என்பது கடினமானதாக உள்ளது. பழங்காலக் கிரேக்கர்கள் சிலவேளைகளில் முக்கியமான விசாரணைகளை, உண்மைகளினால் மட்டும் ஊசலாட்டப்படும்படிக்கு இருளில் நடத்துவதும் வழக்கம் என்று எனக்குக் கூறப்பட்டுள்ளது. "தாழ்ந்த சுயமதிப்பு" கொண்டிருத்தல் என்பது பலர் தீர்ப்பிடுபவர்களாயிருப்பதற்கான ஒரு காரணமாக உள்ளது என்று சமூகவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.[8] ஒருவர் தாழ்வான சுயமதிப்புடையவராய் இருக்கும்போது, அவர் தம்மை உயர்த்திக் கொள்ள முடியும் அல்லது பிறரைத் தாழ்த்தக்கூடும் - மற்றும், பிறரைக் கீழே இழுத்து விடுதலை சுலபமானதாகப் பலர் காண்கின்றார்கள்.

**தகவலற்ற தீர்ப்பு**

நாம் அடிக்கடி, உண்மைகள் எல்லாவற்றையும் கொண்டிராது அல்லது சூழ்நிலைகள் எல்லாவற்றையும் அறியாது தீர்ப்பிடுகின்றோம். (நம்மில் சிலர், சூழ்நிலையின் அரைடஜன் செங்கற்கள் கொண்டு குற்றம் சாட்டு தலின் முழு வீட்டைக் கட்டியெழுப்புகின்றோம்.) உண்மையில் நடந்தது என்ன என்பது பற்றிய முழுத் தகவல்களையும் நாம் பெறாதிருக்கலாம். குற்றம் சாட்டப்பட்டவரின் பின்னணி அல்லது நோக்கம் பற்றி நாம் புரிந்துகொள்ளாதிருக்கலாம். இது அவரது வாழ்வில் விதியா அல்லது விதிவிலக்கா என்று நாம் அறியாதிருக்கலாம். இயேசு, "..... நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" என்று மக்கள் கூட்டத்தாரிடம் கூறியபோது, முதலில் அவர், "தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல்" என்று கூறினார் (யோவா. 7:24அ).

**சாத்தியமற்ற தீர்ப்பு**

யாரேனும் ஒருவரைத் தீர்ப்பிடும்போது, நாம் அவரது நோக்கத்தைக் குறித்துத் தீர்ப்பிடுவதற்கு மிகவும் அடிக்கடி முயற்சி செய்கின்றோம். நாம் "மனுஷருள்ளத்திலிருப்பதை" (யோவா. 2:25) அறிகிற இயேசுவாக இராதபடியால், இன்னொருவரின் நோக்கத்தைப் பற்றி நாம் நிச்சயமாய் அறிவதற்கான வழி எதுவும் இல்லை. "அவர் இதை அல்லது அதைச் செய்தார்" என்று மட்டுமே நாம் கூறமுடியும், ஆனால் நாம், "அவர் இதை அல்லது அதை செய்தார், ஏனென்றால் ...." என்று உறுதியுடன் கூற

முடியாது. பவுல், "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்?" என்று கேட்டார் (1 கொரி. 2:11அ). இருந்தபோதிலும், பின்வருவன போன்ற வார்த்தைள் கேட்கப்படுகின்றன: "அவள் தன்னை மிகவும் புத்திசாலி என்று நினைக்கின்றாள்!"; "அவர் தாம் ஏதோ மிகவும் முக்கியமானவர் என்று நினைக்கின்றார்!"[9] மற்றவர்களின் நோக்கங்கள் பற்றி நாம் எவ்வளவு அடிக்கடி தீர்ப்பிடுகின்றோம்!

**பரிவிரக்கமற்ற தீர்ப்பு**

சாத்தியமான வகையில் மிகச் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்து வதற்குப் பதிலாக மக்கள் மிகவும் மோசமான கட்டமைவை ஏற்படுத்து வதையும் இயேசு கண்டனம் செய்தார். மோஃபாட் அவர்களின் மொழி பெயர்ப்பு வேதாகமத்தில், 1 கொரிந்தியர் 13:7ஆ வசனம், அன்பு "எப்போதுமே சிறந்தவற்றை விசுவாசிக்க வாஞ்சையாய் இருக்கும்" என்று கூறுகிறது.[10]

ஒரு நபர் செய்வதைக் கொண்டு அவரைப் பற்றி நாம் அறிய முடியும் என்பது உண்மைதான், ஆனால் அவரது செயல்கள் பெரும்பாலும், குறைந்தது மாறுபட்ட இரண்டு விளக்கங்களுக்குக் கீழ்ப்பட்டதாக உள்ளது: ஒன்று நல்லது, ஒன்று மோசமானது. விஷயம் அதுவாக இருக்கும்போது, அந்த நபர் செய்துள்ளது பற்றிய எந்த விளக்கத்தை நாம் பொதுவாகப் பயன்படுத்துகின்றோம்?

**கடுமையான தீர்ப்பு**

தீர்ப்பிடுதல் பற்றி, மேலே குறிப்பிடப்பட்ட எதிர்மறையான அணுகு முறைகளின் விளைவாக, நாம் நமது தீர்ப்புகளை இரக்கத்தினாலும் அன்பினாலும் உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்போது, சில வேளைகளில் நமது தீர்ப்புகளில் கடுமையாக, கசப்பாக, மற்றும் மாய்மாலமாக இருக்கின்றோம். பேதுரு "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று கூறினார் (1 பேது. 4:8).[11]

பிறருடன் நட்புறவாயிருத்தல் என்பது பெரும்பாலும் ஆவிக்குரிய விஷயமாக உள்ளது. ஒரு புறத்தில் மிகச் சிறந்தவற்றை நம்புகின்ற மற்றும் தூக்கிவிடவும் உதவி செய்யவும் முயற்சிக்கின்ற அன்புமிக்க, பரிவிரக்கம் கொண்ட ஆவி உள்ளது. இன்னொரு புறத்தில், யாரேனும் ஒருவர் "தம்செய்கைக்குத் தக்கபலனை அடைகின்றார்" என்பதைக் காண்பதில் களிகூருகின்ற, கடுமையான, பரிவிரக்கமற்ற, தீர்ப்பிடுகின்ற ஆவி உள்ளது.

## இயேசு எதனை வாக்குத்தத்தம் செய்தார் (வ. 1அ, 2)

இவை யாவற்றையும் சிந்தையில் கொண்டு, நமது வேத பாடப் பகுதியின் எஞ்சியவற்றைப் பற்றி நாம் கலந்துரையாடுவோம்: வசனம் 1ன் தொடக்கம் அத்துடன் வசனம் 2.

***இரக்கத்தின் அவசியம்***

*"தீர்க்காதிருங்கள்" (வ. 1ஆ) என்ற கூறுவதற்கு முன்பு இயேசு, "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு" என்று கூறினார் (வ. 1அ). பின்பு அவர் இந்தச் சிந்தனையை வசனம் 2ல் விரிவாக்கம் செய்தார்: "ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர் கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." அந்தக் கொள்கை இன்றைய நாட்களின் இந்த உலகத் திற்கும் கூட ஓரளவுக்கு உண்மையானதாகவே உள்ளது. வாழ்வு ஒரு கண்ணாடி போன்றதாக உள்ளது; நாம் பிறரை நடத்துகின்ற விதத்தின்படி யாகவே நாம் பொதுவாக நடத்தப்படுகின்றோம். இது லூக்கா சுவிசேஷ விவரத்தில் மலைப்பிரசங்கத்தின் இந்தப் பகுதியினுடைய வலியுறுத்தமாக இருக்கலாம்:*

> *மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர் கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாக்கும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர் கள்; விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்[12] (லூக். 6:37, 38).*

*லூக்கா 6:37ஆ-வில், ஜீவனுள்ள வேதாகமத்தின் பொழிப்புரையானது, "பிறரைச் சுலபமாக நடத்துங்கள்; அப்பொழுது அவர்களும் அதையே உங்களுக்குச் செய்வார்கள்" என்றுள்ளது.*

*ஆயினும் சந்தர்ப்பப் பொருளில், இயேசு தேவனுடைய நியாயத் தீர்ப்பையே விசேஷமாகக் குறிப்பிட்டார். விரைவிலேயோ அல்லது தாமத மாகவோ, நாம் விதைத்ததையே அறுப்போம் என்பது இந்த அண்டத்தின் பின்னல் வேலைப்பாட்டில் இழையப்பட்டுள்ள கொள்கையாக உள்ளது (கலா. 6:7). ஆமான், மொர்தெகாய்க்காகத் தயார் செய்வித்திருந்த தூக்கு மரத்தில் தூக்கிப்போடப்பட்டான் (எஸ்தர் 7). "படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்" என்று பிரசங்கி 10:8அ எடுத்துரைக்கிறது. மத்தேயு 7:1, 2 வசனப் பகுதியானது தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்புக்கு விசேஷமாகப் பொருந்துகிறது (7:21-27ஐக் காணவும்). ஒரு நாளிலே நாம் ஒவ்வொருவரும், "தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்பு விப்பான்" (ரோமர் 14:12). முடிவில் இதுவே பொருட்படுகின்ற நியாயத் தீர்ப்பாக இருக்கிறது.*

*நீங்கள் பிறரை தீர்ப்பிட்டபடியே தீர்ப்பிடப்படுவதற்கும், பிறருக்கு நீங்கள் அளந்த அளவையின்படியே அளக்கப்படுவதற்கும், பெரிய வெள்ளை அரியணையின் (வெளி. 20:11) முன்பு இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் இந்த வகையில் நியாயந்தீர்க்கப்பட்டால்,*

*நீங்கள் வலது புறம் செல்வீர்களா அல்லது இடது புறம் செல்வீர்களா (மத். 25:31-33)? யாக்கோபு நிருபத்திலிருந்து வருகிற பின்வரும் மெய்சிலிர்க்கச் செய்யும் வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "ஏனென்றால், இரக்கஞ் செய்யாதவனுக்கு, இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்" (2:13அ).*

***பொதுவான கருத்தறிவின் அவசியம்***

*ஒருவேளை நான், மத்தேயு 7:1-12ல் காணப்படுகிற புத்திமதியைக் குறித்து, பொதுவான கருத்தறிவு பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவதற்காகச் சற்று நிதானிக்க வேண்டியிருக்கும். நாம் தீர்ப்பிடுகின்றவர்களாய் இருக்கின்றோமா இல்லையா என்பது மட்டுமே தெய்வீக நியாயத்தீர்ப்பின் ஒரே காரணியாக இருக்கும் என்று வசனங்கள் 1 மற்றும் 2ல் இயேசு கூறவில்லை. ஒவ்வொருவரும் எப்படி வாழ்ந்தாலும் அவர் சரியானவராகவே இருக்கின்றார் என்று நாம் நினைத்தால், தேவனும் நாம் ஆவிக்குரிய வகையில் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாக இருக்கின்றோம் என்றே கூறுவார் என்பதாக அவர் [இயேசு] போதிக்கவில்லை. நாம் மலைப் பிரசங்கத்தை மட்டுமே கொண்டிருப்பினும் கூட, 7:1, 2க்கான இப்படிப்பட்ட விளக்கம் உண்மையற்றது என்பதை உணர்ந்தறிவோம்: பிரசங்கத்தின் முடிவில் இயேசு, தமது கூற்றுக்களைக் கேட்டு (அவற்றில் எதையும் புறக்கணித்து விடாமல்) அவற்றின்படி செய்கின்றவர் தமது வீட்டைக் கற்பாறையின்மீது கட்டிய புத்தியுள்ள மனிதனைப் போல் இருக்கின்றார் என்று கூறினார் (7:24, 25).*

***தாழ்மையின் அவசியம்***

*அத்தியாயம் 7ன் முதல் இரண்டு வசனங்களில், நாம் - நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பிறருக்கு உதவவும் - தொடர்ந்து தீர்ப்பிடுதல்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருந்தாலும், நாம் தேவனல்ல என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார். இதே சத்தியத்தைப் பவுலும் வலியுறுத்தினார்:*

> *மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே உத்திரவாதி ... (ரோமர் 14:4).*
>
> *... நான் உங்களாலேயாவது ... தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை ... என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும் (1 கொரி. 4:3-5).*

*ஜான் ஸ்டாட் அவர்கள், ''நாம் (நம்மை விலங்குகளில் இருந்து வித்தியாசப்படுத்த உதவுகிற நமது விமர்சிக்கும் வல்லமையை விட்டுவிடுவ*

*தினால்) மனிதர்களாய் இருப்பதை விட்டொழித்து விடும்படி நமக்குக் கூறுவதில்லை, ஆனால் (நம்மையே நியாயாதிபதிகளாக அமைத்துக் கொள்வதினால்) தேவனாக இருக்கும்படியான மடத்துணிச்சலான பேராவலைத் துறந்துவிடும்படியாகவே கூறுகின்றார்" என்று சொன்னார்.[13]*

*நாம் தேவனாக இராதபடியினால், நமது தீர்ப்புகள் இயல்பாகவே தவறானவைகளாக இருக்கும். பிறருடனான நமது உறவுகளில், நாமும் அவர்களும் கடைசியில் தேவனுக்கு முன்பாக நிற்போம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும் - மற்றும் தேவனே கடைசியான தீர்ப்புகளை ஏற்படுத்துவார். ஆகையால், நாம் பிறருடனான நமது பழக்கங்களில் இரக்கமும், அன்பும், பொறுமையும் உள்ளவர்களாக இருப்போமாக!*

## முடிவுரை

*நாம் மக்களுடன் நட்புறவாயிருக்க வேண்டுமானால் நாம் தீர்ப்பிடுபவர்களாக இருப்பதை நிறுத்த வேண்டும் என்று மத்தேயு 7:1-12ல் நாம் கற்றுக்கொள்வதை இயேசு முதலில் அனுமதிப்பார். நமது அடுத்த பிரசங்கத்தில், நாம் நமது வேத பாடப்பகுதியில் இருந்து கூடுதலாக ஐந்து கருத்துக்களைத் தரவழைப்போம். நாம் மற்றவர்களுடன் நட்புறவாயிருக்க வேண்டுமென்றால் ...*

- *முதலில் நாம் நமது சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் (வ. 3-5).*
- *நாம் பிறருக்கு தாழ்மையுடனும் கருத்துணர்வுடனும் உதவிசெய்ய வேண்டும் (வ. 5ஆ).*
- *நாம் மாறுபாடுகள் சிரமங்கள் ஆகியவற்றைக் குறித்து எவ்வாறு செயல்படவேண்டும் என்று கற்றுக்கொள்ள வேண்டும் (வ. 6).*
- *நாம் தேவனைச் சார்ந்திருக்க தீர்மானம் செய்ய வேண்டும் (வ. 7-11).*
- *நாம் பொன்விதியின்படி வாழ வேண்டும் (வ. 12).*

*இந்த வேளையில் நாம் கர்த்தரின் அழைப்பை அளிக்க விரும்புகின்றோம். விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கே இரட்சிப்பு உரியது என்று இயேசு கூறினார் (மாற். 16:16). மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்கள் ஜீவகிரீடத்தைப் பெறுவார்கள் என்று அவர் கூறினார் (வெளி. 2:10). பாவம் செய்கிற கிறிஸ்தவர்கள் மன்னிக்கப்படுவதற்கு, மனந்திரும்பி ஜெபிக்க வேண்டும் என்று அவர், ஏவப்பட்ட தமது அப்போஸ்தலர்களின் மூலமாகக் கூறினார் (அப். 8:22). இவைகள் டேவிட் ரோப்பரின் "தீர்ப்புகள்" அல்ல; இது தேவனுடைய வசனத்தின் தெளிவான போதனையாக உள்ளது. இந்த சத்தியங்களை நீங்கள் ஏற்றுக்கொள்வது - அல்லது புறக்கணிப்பது - என்பது நீங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுவீர்கள் என்பதின்மீது செயல்விளைவை ஏற்படுத்தும் (மத். 7:21-27). நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வேண்டுமென்றால் அல்லது உண்மையான கிறிஸ்தவராக மீளக்கட்டி எழுப்பப்பட வேண்டுமென்றால் அதை தயவுசெய்து இப்போதே செய்யுங்கள்.[14]*

# குறிப்புகள்

வேதாகம வகுப்பில் படித்த பின்பு, ஞாயிறு காலை ஆராதனையிலும், ஞாயிறு மாலை ஆராதனையிலும் இந்த பிரசங்கத்தை நான் பிரசங்கித்தேன். தீர்ப்பிடுதல் பற்றிய இந்தப் பிரசங்கமானது தனித்து நிலைநிற்க முடியும். இந்த மற்றும் இதற்கடுத்த பிரசங்கத்தின் கருத்துக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு எடுத்துரைப்பாக அளிக்கப்படவும் முடியும்.

---

*குறிப்புகள்*

[1]*இந்த மற்றும் இதற்கடுத்த பிரசங்கங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்டவைகளாகும். இப்போதுபோல் நான் எனது ஆதாரமூலங்களை அப்போது கவனமாகப் பதிவு செய்ததில்லை. யாருக்கு உரிய மதிப்பளிக்க வேண்டுமோ அதை அளிப்பதற்கு நான் முயற்சி செய்துள்ளேன். அவ்வாறு செய்யத் தவறிய எந்த ஒரு சந்தர்ப்பத்திற்காகவும் நான் மன்னிப்பை வேண்டுகின்றேன்.* [2]*இவ்வார்த்தை அமைப்பு* KJV*யில் இருந்து பெறப்பட்டுள்ளது. இந்தச் சொல்வழக்கு - இந்தப் பிரசங்கத்தின்போது நாம் காணப் போகின்றபடி - அதிகமான மக்களுக்குப் பழக்கப்பட்டுள்ளதால் இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [3]Charles B. Williams, *The New Testament: A Translation in the Language of the People* (Chicago: Moody Press, 1949), 23. [4]*மலைப் பிரசங்கம் பற்றிய லூக்கா சுவிசேஷத்தின் விவரம், பார்வையற்ற வர்களுக்கு வழிகாட்டிய பார்வையற்றவர்களான போதகர்களைப் பற்றிய ஒரு குறிப்பைக் கொண்டுள்ளது (லூக். 6:39, 40), இது வேதபாரகர் மற்றும் பரிசேயர் களுக்கான ஒரு தெளிவான குறிப்பாக உள்ளது (மத். 15:12-14ஐக் காணவும்).* [5]*இது அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் உண்மையாக உள்ளது. தேவைப் பட்டால், நீங்கள் வாழும் பகுதிக்குப் பொருத்தமான வகையில் இதை மறு பொழிப்புரை செய்து கொள்ளுங்கள்.* [6]*யாராவது ஒருவர் தவறானவராயிருக்கிறார் என்று கூறும் தனிநபர் தவறான வராயிருக்கிறார் என்பது சுயகண்டனம் என்பதாக உள்ளது. இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.* [7]*நாம் ஒவ்வொருவரும் தேவசாயலில் உருவாக்கப்பட்டு, அழிவில்லாத ஒரு ஆத்துமாவைக் கொண்டுள்ளோம் என்பது விலங்குகளில் இருந்து மனித குலத்தை வித்தியாசப்படுத்துகின்ற மிக முக்கியமான பண்பாக உள்ளது.* [8]*இந்த எண்ணப்போக்கானது சில வேளைகளில் ''தாழ்வு மனப்பான்மை'' என்று அழைக்கப்படுகிறது.* [9]*உங்கள் உரையைக் கேட்பவர்கள் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய தீர்ப்பிடுதலுக்கான சொல்விளக்கங்கள் மற்றும் விவரிப்புகள் சிலவற்றை மேற்கோள் காண்பியுங்கள்.* [10]James Moffatt, *The Bible: A New Translation* (New York: Harper & Brothers, 1954), 217.

[11]*7:3-5ஐக் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ள இந்த ஐந்து கருத்துக்களுடன் கூடுதலாக இன்னொரு கருத்தும் அடுத்த பிரசங்கத்தில் தரப்படும். அதை நீங்கள் இந்தப் பிரசங்கத்தில் செயல்படுத்தத் தேர்ந்துகொள்ளலாம்.* [12]*லூக்கா 6:38 வசனம், கொடுத்தலின் மூலம் பெற்றுக்கொள்கிற ஆசீர்வாதங் களின் வசனமாக உள்ளது. கொடுத்தல் பற்றிய பொதுவான நடைமுறையை இதில் ஏற்படுத்த முடியும். ஆனால் இதன் சந்தர்ப்பப் பொருளில், இது இரக்கத்தை "கொடுப்பவர்கள்" இரக்கத்தைப் "பெறுவார்கள்" என்றே விசேஷமாகக் குறிப்பிடுகிறது.* [13]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 177. [14]*இந்தப் பிரசங்கத்தின் முடிவில் நீங்கள் அழைப்பை முன்வைக்கையில், தீர்ப்பிடும் ஆவியைக் கொண்டிருத்தலினால் குற்றம் உணர்த்தப்பட்டு யாரேனும் எழுந்து நின்றால் நீங்கள் அவருக்காக ஜெபத்தை ஏறெடுக்க விரும்பலாம்.*

## 27

# மற்றவர்களுடன் நட்புறவாக இருத்தல் எவ்வாறு

## மத்தேயு 7:1-12, வசனம் 3-12ன் மீது ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*நமது முந்திய பிரசங்கத்தில், (பிற கொள்கைகளின் மத்தியில்) பிறருடன் நட்புறவாக இருத்தல் எவ்வாறு என்று போதிக்கிற மத்தேயு 7:1-12 வசனப்பகுதியைப் பற்றிய ஒரு படிப்பைத் தொடங்கினோம். உறவு முறைமைகள் பற்றி ஆறு ஆலோசனைகளை - பிறருடன் நட்புறவாக இருப்பதற்கு அத்தியாவசியமான ஆறு விஷயங்களை - நமது வேத பாடப் பகுதியிலிருந்து எடுத்துரைப்பதாக நான் வாக்களித்திருந்தேன். முதலாவது, ஆலோசனைக் கருத்து வசனம் 1 மற்றும் 2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது: "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." இவ்வசனங்களில் இருந்து நாம் பிறருடன் நட்புறவாக இருப்பதற்கு அத்தியாவசியமான விஷயங்களில் முதலாவது விஷயத்தைத் தரவழைத்தோம்: "நாம் தீர்ப்பிடுகிறவர்களாய் இருப்பதை நிறுத்த வேண்டும்." அந்தக் கொள்கையைப் பொறுத்தமட்டில் இயேசு, குறைந்தபட்சம் ஐந்து பொதுவான நடைமுறைகளைக் கண்டனம் செய்தார் என்று நான் முன்மொழிந்தேன்:*

- *நமது பின்னணிகள், தப்பெண்ணங்கள் மற்றும் முன்விருப்பத் தேர்வுகள் ஆகியவற்றை நமது தீர்ப்பிடுதலுக்கு வண்ணம் கொடுக்க அனுமதித்தல்.*
- *எல்லா உண்மைகளையும் கொண்டிராமலேயே அல்லது எல்லா சூழ்நிலைகளையும் அறிந்திராமலேயே அவசரமான தீர்ப்புகளை ஏற்படுத்துதல்.*
- *இன்னொருவரின் நோக்கங்கள் பற்றி தீர்ப்புகள் ஏற்படுத்த முயற்சி செய்தல்.*
- *மக்கள் என்ன செய்கின்றார்கள் என்பது பற்றி மிகச் சிறந்த வகையில் சிந்திப்பதற்கு மாறாக சாத்தியமான அளவுக்கு மிக மோசமான கட்டமைப்பை இடுதல்.*

- *நமது தீர்ப்புகளில் - இரக்கம் மற்றும் அன்பு ஆகிவற்றால் அவற்றை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக - கடுமையான, கசப்பான மற்றும் மாய்மாலமாக இருத்தல்.*

*இவைகள் உலகளாவிய தவறுகளாக உள்ளன. இவை ஒவ்வொன்றையும் செய்து குற்ற உணர்வுடன் உள்ள யாரேனும் ஒருவரை நீங்கள் அநேகமாக அறிந்திருக்கலாம், நீங்கள் அவ்வாறு அறியவில்லையா?*

*அந்தக் கேள்வியைக் கேட்டதற்கு நான் மன்னிப்பு வேண்ட அனுமதியுங்கள். அது ஒரு சூழ்ச்சியான கேள்வியாக இருந்தது. யாரேனும் ஒருவர் உங்கள் சிந்தையில் தோன்றினால், நீங்கள் அந்தத் தனிநபரை நியாயத் தீர்த்திருப்பீர்கள். மிகக் குறைந்தபட்சமாக, நான் உங்களை மத்தேயு 7:1, 2ஐ உங்கள்மீதே நடைமுறைப்படுத்திக் கொள்ளவைப்பதற்கு மாறாக, வேறொருவர் மீது நடைமுறைப் படுத்தவைத்து அதனால் உங்களைக் குற்ற உணர்வடையச் செய்திருக்கலாம். இதை நான், பிறருடன் நட்புறவாக இருப்பதின் இரண்டாம் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்காக வேண்டுமென்றே செய்தேன்.*

***மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு அத்தியாவசியமான விஷயம் #2:***

## *முதலில் நாம் நமது சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் (வ. 3-5).*

*மாற்றத்திற்கான அவசியம் வருகிறபோது, நாம் எவ்வித மாற்றமும் இன்றி, நம்மையே உற்றுநோக்குவதற்குப் பதிலாகப் பிறரை உற்று நோக்குவதை விரும்பித் தேர்ந்துகொள்ளுகின்றோம். இதை இயேசு புரிந்து கொண்டிருந்தார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை[1] உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப்[2] பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: "நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும்" என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய் (வ. 3-5).*

*இவ்வசனப்பகுதியானது நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் கொண்டுள்ளது. இயேசு நகைச்சுவை துணுக்கைக் கூறவில்லை, ஆனால் அவர் நகைச்சுவையைப் பயன்படுத்தினார்.[3] ஒரு மனிதர் தம் கண்ணில் ஒரு பெரிய மரக்கட்டை துருத்திக் கொண்டிருக்கையில், அவர் இன்னொரு மனிதரின் கண்ணில் உள்ள துரும்பைக் காண்பதற்குத் தக்க நிலையில் தம்மை வைக்கச் சிரமப்படுகின்றதைக் கற்பனை செய்துபாருங்கள். அந்தப்*

*பெரிய மரக்கட்டையானது முதலில் இந்தப் பக்கமும் பின்பு அந்தப் பக்கமுமாக ஊசலாடுவதை, அருகாமையில் இருப்பவர்கள் அந்தக்கட்டை தங்கள் தலையில் இடித்து விடாதபடிக்குப் பின்னோக்கித் திரும்ப வேண்டியதை உங்களால் காணமுடிகிறதா?*[4] *நாம் யாருக்குத் தீர்ப்பிடப் போகின்றோமோ அவர்களை விட அதிக மோசமான நிலையில் நாம் இருந்துகொண்டு, அவர்களுக்கு நியாயாதிபதியாக இருக்க முயற்சி செய்தல் என்பது ஏளனத்திற்குரியதாக உள்ளது என்று நாம் புரிந்தகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார்.*[5]

*வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் மாய்மாலம் பற்றிக் கிறிஸ்து நினைத்திருக்கலாம், ஆனால் இவ்வசனப்பகுதியின் சத்தியங்கள் நம்மையும் கூட குற்றம் உணர்த்துகின்றன. நமது சொந்தத் தவறுகளைக் கண்டுகொள்ளாமல் இருந்துகொண்டு, பிறரது தவறுகளைக் காண்பது என்பது எவ்வளவு சுலபமானதாக உள்ளது! பத்சேபாளுடன் விபசாரம் செய்துவிட்டு பின்பு அவளது கணவரைக் கொலை செய்வித்த தாவீது ராஜாவின் வரலாற்றை நீங்கள் நினைத்துப் பார்க்கின்றீர்களா (2 சாமு. 11)? தாவீதிடம் வந்த நாத்தான், ஏழை மனிதன் ஒருவனின் ஆட்டுக்குட்டியைக் கொன்ற செல்வந்தனின் கதையைக் கூறினார். தாவீது, அந்தக் குற்றவாளியை*[6] *"தூக்கிலிட" தயாரானார், ஆனால் நாத்தான், "நீயே அந்த மனுஷன்!" என்று கூறினார் (2 சாமு. 12:1-7). பின்பு, தாவீது தூக்கிற்குப் பதிலாக ஒரு ஜெபக்கூட்டத்திற்குத் தயாரானார் (2 சாமு. 12:13; சங். 51:32).*

*பிறருடன் நட்புறவாக இருப்பதற்கு, ஏற்படுத்த அவசியமாக உள்ள மாற்றங்களை முதலில் நாம் ஏற்படுத்தியிருக்கின்றோமா என்று நம்மையே சோதித்தறிய வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார்.*

*வசனம் 3ன் முதற்பாகம், கிறிஸ்துவால் கண்டனம் பண்ணப்படுகிற தீர்ப்பிடும் நடைமுறைகளின் பட்டியலில் இன்னொரு உட்பொருளை தற்செயலாகக் கூட்டுகிறது. "பார்க்கிறது"*[7] *என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தை "கூர்ந்தாய்தல், நெருங்கிப் பரிசோதித்தல்"*[8] *என்று அர்த்தப்படுகிறது. துரும்பு என்பது காண்பதற்கு மிகவும் சுலபமான தாக இருப்பதில்லை. யாரேனும் ஒருவர் உங்களிடம், "என் கண்ணில் ஒரு துரும்பு உள்ளது" ["கண்ணில் தூசி விழுந்து விட்டது"] என்று கூறும்போது, வெளிச்சம் மிகச் சரியாகவும் நீங்கள் மிகமிக நெருங்கியும் இருந்தாலன்றி, நீங்கள் அநேகமாக, அதை[துரும்பை]க் காண இயலாது. மோசமான தீர்ப்பிடுதலின் பழக்கத்துடன், பின்வரும் மிகவும் தொலைவிலுள்ள மேலோங்கும் கருத்தையும் நாம் கூட்டிக் கொள்ள முடியும்:*

- *மக்களிடத்தில் மிகச்சிறந்தவற்றைக் கண்ணோக்குவதற்குப் பதிலாக மிக மோசமானவற்றைக் கண்ணோக்குதல்; விமர்சிப்பதற்கு ஏதேனு ம் தவறைக் கண்டறியும் முயற்சியில் ஒவ்வொரு வார்த்தை யையும் ஒவ்வொரு செயல்பாட்டையும் வேதனை தரும் வகையில் கூர்ந்தாய்வு செய்தல்.*

*அதுவே வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை நடத்திய மிகத் துல்லிய மான வழிமுறையாக இருந்தது.*

*‘‘துரும்பு’’ மற்றும் ‘‘உத்திரம்’’ ஆகிய இரண்டும் ஒரே பகுதிப் பொருளைக் கொண்டிருப்பதால், இவற்றைக் கொண்ட உருவகத்தைக் கிறிஸ்து பயன்படுத்தினார் என்று பல விளக்கவுரையாளர்களும் சில மொழிபெயர்ப்பாளர்களும் நினைக்கின்றார்கள். ஒன்று மிகவும் சிறியதாக உள்ளது, இன்னொன்று மிகவும் பெரியதாக உள்ளது, ஆனால் இவை யிரண்டுமே மரத்தினால் ஆனதாக இருக்கலாம். NIV வேதாகமத்தில், “மரத்தூள் துரும்பு” மற்றும் “[மரப்]பலகை” ஆகிய வார்த்தைகள் உள்ளன.*

*துரும்பும் உத்திரமும் ஒரே வகையான பொருளினால் ஆகியிருப்பதன் சாத்தியக்கூறானது, ஆர்வமுள்ள சில சிந்தனைகளைத் தூண்டுகிறது. நமது சொந்த வாழ்வில் நாம் கொண்டுள்ள தவறுகள் பிறரின் வாழ்வில் இருப்பது பற்றி நாம் மிகவும் கூருணர்வுள்ளவர்களாய் இருத்தல் என்பது மனித இயல்பாக உள்ளது [“பாம்பின் கால் பாம்பறியும்” என்பது இதுதானோ?] இதனை மனோதத்துவ நிபுணர்கள், “முன்துருத்தல்” என்று அழைக்கின்றார் கள்: நமது சொந்த வாழ்வில் காண்பவற்றை [நமது குறைபாடுகளைப்] பிறருடைய வாழ்வில் முன்துருத்துதல். (அதாவது, எல்லாரும் நம்மைப் போலவே இருக்கின்றார்கள் என்று நாம் யூகிக்கத் தலைப்படுகின்றோம்.) மேலும், நமது பாவங்களைப்போன்ற அதே பாவங்களை, மற்றவர் களுடைய வாழ்க்கையில் நாம் காணும்போது, நமது பாவங்கள் அவ்வளவு மோசமானவைகளாக நமக்குத் தெரிவதில்லை என்பது உண்மையா யிருக்கிறது. இதை பெர்ட்ராண்டு ரஸ்ஸல் என்பவர், நாம் சூழ்நிலைகளைக் கண்ணோக்கும் வழிமுறையைக் கொண்டு, பின்வருமாறு விவரித்தார்: “நான் உறுதியாக இருக்கின்றேன்; நீங்கள் பிடிவாதமிக்கவராக இருக்கின் றீர்கள்; அவன் பன்றித் தலைவனாக இருக்கின்றான், நான் மீண்டும் ஆழ்ந்து சிந்தித்துள்ளேன்; நீங்கள் உங்கள் மனதை மாற்றிக் கொண்டீர்கள்; அவர் தம் வார்த்தைகளை விட்டுப் பின்வாங்கிவிட்டார்.’’ இதற்கான வேதாகம ரீதியான உதாரணம் ஒன்று உங்களுக்கு வேண்டுமென்று விரும்பினால், யூதா மற்றும் அவரது மருமகளான தாமார் ஆகியோரின் வரலாற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். தாமார் “வேசித்தனம் பண்ணினாள்” என்றும் அவள் “கர்ப்பமாக’’ இருந்தாள் என்றும் யூதாவுக்குக் கூறப்பட்டபோது, அவர் அவளைக் கொல்வதற்குத் தயாரானார் (ஆதி. 38:24); ஆனால் அந்தக் குழந்தைக்கு யூதாவே தந்தை என்று தாமார் நிரூபித்தபோது, மரண தண்டனைக்கான பேச்சானது துரிதமாகக் கைவிடப்பட்டது (ஆதி. 38:25, 26).*

*மரத்தினால் ஆன இரண்டு பொருட்களுடனான ஒரு விவரித்தலை இயேசு வேண்டுமென்றே பயன்படுத்தியிருப்பாரென்றால், பின்பு நாம் பெரிய அளவிலான பாவத்துடன் இருக்கும் ஒரு மனிதர், அதே பாவத்தைத் துரும்பு அளவுக்குக் கொண்டுள்ள ஒரு மனிதருக்கு மேலாகச் செயல்படும் நகைப்பிற்கு இடமான சூழ்நிலையைக் கொண்டிருக்கின்றோம். இவ்வகை யான சீரற்ற தன்மையைப் பற்றிப் பவுல் ரோமர் 2:1-3ல் எழுதினார்:*

> *ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி. போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிற படியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே*

உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவை களைச் செய்கிறவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத் தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்டவை களைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவை களையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?

இவ்வழி முறையில் செயல்பட்டவர்களின் பண்பைப் பற்றி இயேசு கூறியது என்ன? இயேசு வார்த்தைகள் எதையும் சிதைக்கவில்லை; மத்தேயு 7:5ன் முதல் பகுதியில் அவர், "மாயக்காரனே!" என்று கூறினார். மாயமான குணத்துடன் இருத்தல் என்பது நம்மை மாயக்காரர்களாக்குகிறது. நாம் தொடர்ந்து மற்றவர்களை விமர்சித்துக் கொண்டிருந்தால், நமது பதிவேடு தெளிவானதாக உள்ளது, நமது வாழ்வு சரியானதாக உள்ளது என்று நாம் மறைமுகமாக உணர்த்துகின்றோம் - இல்லையென்றால் நாம் தீர்ப்பிடு வதற்குத் தகுதியற்றவர்களாய் இருப்போம். இதே வேளையில், நமது கண்ணிமைகளிலிருந்து வெளிப்புறமாக இந்த நீண்ட தொலைபேசிக் கம்பங்கள்[9] நீட்டிக் கொண்டிருப்பதை நாம் பெற்றுள்ளோம்.

தீர்ப்பிடுதலை, நம்மில் இருந்து நாம் தொடங்க வேண்டும் என்று, நாம் மீண்டும் கூறுகின்றோம். இயேசு, "முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு" என்று கூறினார். மற்றவர்களின் பாவத்தை அறிக்கை யிடுதல் என்பது சுலபமானதாக உள்ளது; நமது சொந்தப் பாவங்களை அறிக்கையிடுதல் என்பது கடினமானதாக உள்ளது. சுயபரிசோதனை என்பது பல்வேறு சந்தர்ப்பப் பொருட்களில் உள்ளது என்று பவுல் குறிப்பிட்டார்: "நீங்கள் ... உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்" (2 கொரி. 13:5); "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து ..."; "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரி. 11:28, 31). ரோமர் 14:13 விசேஷமாக நடைமுறைக்குரியதாக உள்ளது. பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பானது இந்த வசனத்தை, "ஆகையால் நாம் ஒருவர் மற்றவர் மீது விமர்சனக் கண்களைத் திருப்புவதை நிறுத்துவோமாக. நாம் விமர்சிக்கின்றவர்களாயிருக்க வேண்டும் என்றால், நாம் நமது சொந்த நடக்கை பற்றி விமர்சிப்பவர்களாய் இருந்து, சகோதரர் ஒருவர் தடுமாற அல்லது விழுந்துபோக ஏதுவான ஏதொன்றையும் செய்யாதிருப்போமாக" என்று தரவழைக்கின்றார்.[10]

நீக்கப்பட வேண்டிய உத்திரம்/பாவம் எது? எந்தப் பாவமும் நீக்கப்பட வேண்டும் - ஆனால் இந்த சந்தர்ப்பப் பொருளில், நாம் தீர்ப்பிடுகின்றவர் களாயிருத்தல் என்ற பாவத்தைப் பற்றி விசேஷமாகப் பேசுகின்றோம்.

சுயபரிசோதனையின் விஷயத்திலும்கூட, சில பொதுக்கருத்துணர்வு ஒழுங்குமுறையில் உள்ளது. நாம் சுய தோல்விகள் மற்றும் குறைபாடு களுடன் கூடிய மரணத்திற்கு ஏதுவாக ஆட்டிப் படைக்கும் ஆசைகளைப் பற்றிப் பேசவில்லை, இவற்றைச் சிலர் "முழுமையான பிரேதப் பரிசோதனை" என்று அழைத்துள்ளார்கள். இருந்தபோதிலும், நாம் பிறருடன் நட்புறவாக இருக்க வேண்டுமென்றால், நமது சொந்த வாழ்வில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பதே நமது முதல்

*அக்கறையாக இருக்க வேண்டும். நாம் நம்மில் இருந்து தொடங்கினால், பிறரைக் குறித்துத் தீர்ப்பிடுவதில் நாம் குறைந்த அளவு தயாரானவர்களாக இருப்போம்.*

*இப்பொழுது நாம் வசனம் 3முதல் 5வரையுள்ள பகுதியை விட்டுச் செல்ல முடியும், ஏனெனில் நாம் அந்த வசனங்களின் அடிப்படையான வலியுறுத்துதல்களைக் கூறி முடித்துள்ளோம் - ஆனால் அந்தப் பகுதியின் முடிவில், நான் வலியுறுத்த விரும்புகின்ற அழகுநிறைந்த சத்தியம் ஒன்றுள்ளது.*

***மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு அத்தியாவசியமான விஷயம் # 3:***

## நாம் பிறருக்குத் தாழ்மையுடனும் கருத்துணர்வுடனும் உதவிசெய்ய வேண்டும் *(வ. 5ஆ).*

*நாம் யாரேனும் ஒருவரை உண்மையிலேயே நேசித்து, அவரது வாழ்வில் பாவத்தைக் கண்டால், நாம் அந்தப் பாவத்தை நீக்குவதற்கு அவருக்கு உதவ முயற்சி செய்வோம்.[11] இது வசனம் 5ன் கடைசிப் பாகத்தில் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது: ஒவ்வொருவரும் தமது சொந்தக் கண்ணில் உள்ள உத்திரத்தை எடுத்துப்போட வேண்டும் என்று இயேசு கட்டளையிட்ட பின்பு, "உன் சகோதரன் கண்ணில் உள்ள துரும்பை எடுத்துப்போட வகைபார்" என்று அவர் கூறினார். நமது சொந்தப் பாவங்களைக் குறித்து நாம் செயல்படுவதே நமது முதல் முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார், ஆனால் நமது வாழ்வு ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதும், ஒரு சகோதரருக்கு அவரது பாவங்களை நீக்குவதில் உதவி செய்வதை அவர் [இயேசு] ஊக்கம் குறையச் செய்யவில்லை.[12]*

*ஒரு சகோதரரின் இருதயத்தில் இருந்தும் வாழ்வில் இருந்தும் பாவத்தை நீக்கிப் போட உதவி செய்தல் பற்றிப் பல வேத வசனப்பகுதிகள் போதிக்கின்றன:*

> *சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப் பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள், நீயும் சோதிக்கப்படாத படிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலா. 6:1, 2).*
>
> *சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை*

*மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன் (யாக். 5:19, 20).*

*மத்தேயு 7:3-5ல் கண்ணில் உள்ள துரும்பைப் பற்றிய இயேசுவின் விவரிப்பு உதவிக்கான தேவையை முக்கியத்துவப்படுத்துகிறது: கண் என்பது கூருணர்வுள்ளதாகும். கண்ணில் விழும் ஒரு சிறு துரும்பும் கூட சிரிப்புக் கேதுவான விஷயம் அல்ல. உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அநேகமாக அவர்களில் ஒருவர் "என் கண்ணில் ஏதோ விழுந்து விட்டது!" என்று பெருந்துக்கத்துடன் அழுதிருப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.*

*இந்த விவரிப்பானது உதவி செய்கின்ற ஒருவரால் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமான அணுகுமுறையையும் சுட்டிக்காண்பிக்கிறது. எனது கண்ணில் ஏதேனும் விழுந்துவிட்டது என்றால், அதை வெளியேற்ற நீங்கள் மனப்பூர்வமாக முன்வருகின்றீர்கள், நீங்கள் மிகவும் கவனமாகவும் பரிவிரக்கத்துடனும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.[13] பிறருடன் செயல்படுவதில் நாம் அந்த அளவுக்குக் கூருணர்வுடன் இருக்க வேண்டும். பவுல், "சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்" என்று கூறினார் (கலா. 6:1).*

*பரிசுத்த தேவனுடைய பிரசன்னத்துக்கு முன்பாக நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம், அவர் முன்பு நாம் நியாயத்தீர்ப்புக்காக ஒரு நாளில் நின்றாக வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய வகையில் உதவி தேவைப்படுகிறது, எனவே நாம் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யக் கடவோம் - ஆனால் அவ்வாறு செய்யும்போது, நாம் அந்த உதவியை கவனத்துடனும் இரக்கத்துடனும் செய்யக்கடவோம்.*

***மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு அத்தியாவசியமான விஷயம் #4:***

## *நாம் மாறுபாடுகள் மற்றும் சிரமங்கள் ஆகியவற்றைக் குறித்து எவ்வாறு செயல்பட வேண்டும் என்று கற்றுக்கொள்ள வேண்டும் (வ. 6).*

*"நாய்கள்" மற்றும் "பன்றிகள்" மீதான வசனத்திற்கு நாம் வந்துள்ளோம் (வ. 6). இங்கு ஒரு புதிர் உள்ளது: இந்த வசனமானது இயேசு கூறியிருந்த ஆவிக்கு எதிரானதாகக் காணப்படுகிறது. நாம் எங்கும் சுற்றித் திரிந்து மற்றவர்களை "நாய்கள்" என்றும் "பன்றிகள்" என்றும் அழைத்துக் கொண்டு இருக்க வேண்டுமா? கிறிஸ்து இந்த வாக்கியத்தை ஒரு சமான நிலைக்காகவே உரைத்தார் என்று நான் நினைக்கின்றேன். நாம் மாய்மாலக்காரர்களாக, தவறைக் கண்டுபிடிப்பவர்களாக, "மருக்களின் ஆய்வாளர்களாக" சுயநியமனம் செய்து கொண்டவர்களாக இருக்கக்*

கூடாது, ஆனால் நாம் எளிதில் ஏமாறக் கூடியவர்களாகவும் இருக்கக் கூடாது. தேவன் நமக்குப் பகுத்துணரும் அறிவைக் கொடுத்துள்ளார், மற்றும் அதை நாம் மக்களுடன் பழகும் விதத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கின்றார். நாம் தடித்ததோலுடையவர்களாக, குற்றம் காண்கின்றவர்களாக இருக்கக் கூடாது, ஆனால் நாம் கவனமற்ற வர்களாகவும் எளிதில் எதையும் நம்புகின்றவர்களாகவும் இருந்து விடவும் கூடாது.

இயேசு நமக்கு வசனங்கள் 1 முதல் 5 வரை மட்டும் கொடுத்திருந்தால், அவர் நம்மை எளிதில் ஊறுபடக்கூடிய வகையில், தவறான தீர்ப்பை ஏற்படுத்தினால் அது நமது தலைமீது வந்துவிடும் என்பதினால் எந்த ஒரு தீர்ப்பையும் ஏற்படுத்தப் பயம்கொண்டவர்களாக விட்டுவிடும். ஆயினும், வசனம் 6ல், பிறரைக் குறித்து நாம் ஏற்படுத்தியாக வேண்டிய சில நியாயத் தீர்ப்புகள் உள்ளன என்று அவர் சுட்டிக்காண்பித்தார். அவர் இந்த உண்மையை, நாய்கள் மற்றும் பன்றிகள் என்ற குறிப்புரையுடன் விவரித் தார்: "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக் களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்."

கிறிஸ்துவின் [இந்த] வார்த்தைகளினுடைய அர்த்தத்தை நாம் கலந்துரையாடுவதற்கு முன்பு, நாய்கள் மற்றும் பன்றிகளின் இயல்பை விசேக்ஷமாக அந்த நாட்களில் அவைகளின் இயல்பை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. இவையிரண்டுமே மோசேயின் பிரமாணத் தின்கீழ் சடங்கு ரீதியாக அசுத்தமான விலங்குகளாக இருந்தன.[14] நாய்களைப் பற்றி நீங்கள் நினைக்கும்போது, பகட்டான வளர்ப்புப் பிராணிகளாகச் சிலரால் உரிமை கொள்ளப்பட்டுள்ள நாய்களைப் பற்றி நீங்கள் நினைக்காதீர்கள், ஆனால் அதற்கு மாறாக ஒழுக்கக் கேடான வகையில், காட்டுத்தனமாக, அசுத்தமான தெருவில் ஓடுகின்ற நாய்க் கூட்டங்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். "நாய்" என்ற சொற்பத மானது வேதாகமத்தில் சில வேளைகளில், பாவம் நிறைந்தவராயிருக்கும் நபர்களுக்கு ஒப்புவமையாகப் பயன்படுத்தப்படுகிறது (மத். 15:26; பிலி. 3:2; வெளி. 22:15). பன்றி என்பது யூதர்களின் மனதில் அசுத்தத்தின் சுருக்கமான நினைவாக இருந்தது. விஷயம் இதுவாக இருக்கையில், எல்லாமும் இல்லை யென்றாலும் பலஸ்தீனத்தின் பெரும்பாலான பன்றிகள் காட்டுத்தனமாக ஓடுபவைகளாக இருந்திருக்கும்.

அந்தப் பிந்திய உண்மையானது விளக்கவுரையாளர்கள் பலரால் தவறவிடப்படுகிறது. அவர்கள் வசனம் 6ல் போராடுகையில், "திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்" என்பது பன்றிகளுக்குப் பதிலாக நாய்களைப் பற்றிப் பேசுவதாயிருக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். இவ்விதமாக அவர்கள் இந்த விலங்குகளைப் பற்றிய தங்களின் அறியாமை யைக் காண்பிக்கின்றார்கள். அவர்கள், தாய்ப் பன்றியொன்று தனது குட்டி களிடத்தில் நீங்கள் மிகவும் நெருங்கியுள்ளதாக நினைத்து உங்கள் கால்களைப் பீறிப்போடவரும் நிலையில் ஒருக்காலும் இருந்திருக்க மாட்டார்கள். அவர்கள், அடிக்கு அடி உயிரினங்களிலேயே மிகவும்

அபாயமானவைகளாக உள்ள காட்டுப் பன்றிகளின் கொடூரத்தன்மையைக் குறித்து அறியாதவர்களாய் இருப்பார்கள்.[15]

நாய்கள் மற்றும் பன்றிகள் ஆகியவற்றின் நிலைப்பாட்டை மனதில் நிறுத்தியவர்களாய், மீண்டும் வசனம் 6ஐக் கண்ணோக்குங்கள். இயேசு மீண்டும் ஒருமுறை அந்த கேடுபாடான காட்சிகளை முன் வைத்தார். அவர் முதலில் ''பரிசுத்தமானவைகளை நாய்களுக்கு'' கொடுத்தல் பற்றிப் பேசினார். சொறிநாய் ஒன்றுக்கு பரிசுத்தமானதை அல்லது தேவனுக் குரியதை மதிக்கக்கூடிய வழிவகை எதுவும் இருப்பதில்லை. இவ்வசன மானது ஆசாரியர் ஒருவர் பலிபீடத்திலிருந்து இறைச்சியை எடுத்து நாய்களின் கூட்டம் ஒன்றுக்கு வீசியெறிகின்றார் என்று நினைக்கவும் முடியாத சூழ்நிலையைக் குறிக்கிறது என்று சிலர் சிந்திக்கின்றார்கள். இது ஒருபோதும், ஒருபோதும், ஒருபோதும் செய்யப்பட்டிராது. பலி மிருகத்தின் உடலில் எஞ்சியுள்ள பாகம் எதுவும் எரிக்கப்பட்டுவிடும் (லேவி. 6:24-30; 7:17).

பின்பு இயேசு, "பன்றிகள் முன்பு முத்துக்களைப் போடுதல்" பற்றிய குறிப்பை உரைத்தார். பரிசுத்தமானவற்றை நாய்கள் மதிக்க முடியாது என்பதைப் போன்றே, பன்றிகள் ஒருக்காலும் முத்துக்களை மதிப்பதில்லை. முத்துக்கள் உணவு அல்ல என்று அவைகள் கண்டறிந்த (ஒருவேளை அவைகள் அந்த விலையுயர்ந்த கற்களை உண்ணும் முயற்சியில் தங்கள் பற்களை உடைத்துக் கொண்ட) உடனே, அவைகள் "திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போட" சாயவும் கூடும். நீண்ட நாட்களுக்கு முன் நான் சூரியன் உதிக்கும் முன்பே எழுந்து பன்றிகளுக்குத் தீனி போட்ட நிகழ்ச்சியை நோக்கி என் மனம் பின் செல்லுகிறது. பழைய உலோக வாளியொன்றில் பன்றிகளுக்கான உணவை நான் கலக்கும் ஒலியை அவைகள் கேட்ட உடனே, அவைகள் வன்முறையாய்ச் செயல்படத் தொடங்கிவிடும். நான் அவற்றின் அடைப்பிடத்தை நெருங்குகையில், அவைகள் கத்திக்கொண்டு ஒன்றின் மீதொன்றாக ஏறத்தொடங்கி விடும். அவைகளின் உணவுத் தொட்டியில் உணவை இடுவது எனக்குப் பெரும்பாடாகி விடும், அதில் உணவுத் தொட்டியில் எவ்வித மாறுபாடு மின்றி குறைந்தது மூன்று அல்லது நான்கு பன்றிகள் விழுந்து கிடப்பதாக இருக்கும். அரைத்த தானியம் மற்றும் பால் ஆகியவற்றின் கலவைக்குப் பதிலாக நான் அந்த உணவுத் தொட்டியில் முத்துக்களைப் போட்டால், விஷயம் என்னவென்று பன்றிகள் கண்டுகொண்ட உடனே, நான் வேலியானது பலமாய் நிலைக்க வேண்டும் என்பதற்காக ஜெபிக்க வேண்டியிருக்கும் என்பதை நான் உங்களுக்கு நிச்சயமாய்க் கூறமுடியும்!

நாம் இப்போது, ''இயேசு குறிப்பிட்ட அந்த 'நாய்கள்' மற்றும் 'பன்றிகள்' என்பது யார்?" என்று கேட்க வேண்டும். அந்தக் கேள்வியானது முதலில் ''பரிசுத்தமானது என்பது என்ன மற்றும் 'முத்துக்கள்' என்பது என்ன?" என்று கேட்பதின் மூலம் மிகச் சிறந்த வகையில் பதில் அளிக்கப் படுகிறது. இயேசு, ராஜ்யத்தை (சபையை) "விலையுயர்ந்த ஒரு முத்து" என்று குறிப்பிட்டார் (மத். 13:45, 46). ராஜ்யத்தைப் பற்றிய செய்தியானது, நற்செய்தி (சுவிசேஷம்) என்று அழைக்கப்படுகிறது (மத். 4:23; 9:35; 24:14).

*தேவனுடைய வார்த்தை பரிசுத்தமானதாக உள்ளது (ரோமர் 1:2; 2 பேது. 2:21), மற்றும் இந்தப் பரிசுத்தமான செய்தியானது ஒரு "பொக்கிஷம்" என்று உரைக்கப்படுகிறது (2 கொரி. 4:7).*

*இவை யாவும் உண்மையாயிருக்கையில், ஆவிக்குரியவற்றை மதிப்பதில் குறைவுபடுகின்ற தனிநபர்களுக்கு வசனத்தைக் கொடுத்தலுக்கு எதிராக இயேசு எச்சரித்தார் என்று பெரும்பாலான விளக்க உரையாளர்கள் நம்புகின்றார்கள்: இவர்கள் தீத்து 1:15ல் "அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ... அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்" என்று உரைக்கப்படுகிற வகையிலான மக்களாக, சத்தியத்தைத் தொடர்ந்து புறக்கணிப்பவர்களாக இருக்கின்றார்கள். இயேசு தமது வசனத்தை ஏற்க மறுத்த வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் தமது சிந்தையில் கொண்டிருந்திருக்க வேண்டும்.*

*வசனம் 6க்கான இந்த விளக்கவுரையைச் சில விளக்கவுரையாளர்கள் விதிவிலக்காக எடுத்துக் கொள்ளுகின்றார்கள், ஆனால் இது இவ்வசனத்திற்கான மிகவும் எளிய விளக்கமாக உள்ளது மற்றும் இது வேத வசனங்களின் பிற வசனப்பகுதிகளுக்கு உடன்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன். "எல்லைக்குட்பட்ட கட்டளையை" இயேசு கொடுத்ததில், தமது சீஷர்கள் புறக்கணிக்கப்படும்போது, அவர்கள் தங்கள் மிதியடிகளின் தூசியை உதறிவிட்டு[16] [வேறிடத்திற்கு] சென்றுவிட வேண்டும் என்று அவர்களுக்குக் கூறினார் (மத். 10:13, 14).[17] பவுலின் செய்தி யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், அவர் புறஜாதியார்களிடத்திற்குத் திரும்பினார் (அப். 13:44-51; 18:5, 6; 19:9; 28:17-28).*

*இது ஏற்படுத்தக் கடினமான ஒரு தீர்ப்பாக உள்ளது. யாரேனும் ஒருவர் "நாய்" அல்லது "பன்றி"யாக உள்ளார் என்று நாம் முன்னதாகவே முடிவு செய்யும் உரிமை கொண்டிருப்பதில்லை. அன்பானது எப்போதுமே மிகச் சிறந்தவற்றை நம்புகிறது, சுவிசேஷத்தை ஒவ்வொருவரும் கேட்பதற்கு நாம் வாய்ப்புத் தர வேண்டும் (மத். 28:18-20; மாற். 16:15, 16). இதற்கு மறுபுறத்தில் நாம், யாரேனும் ஒருவருக்குத் தொடர்ந்து போதிக்க முயன்று, நிலையாக புறக்கணிக்கப்பட்டால், ஏதேனும் ஒரு வேளையில், பகுத்துணரும் அறிவு (மற்றும் நமது காலத்திற்கு[18] நாம் நல்ல உக்கிராணக்காரர்களாய் இருக்க வேண்டும் என்ற கொள்கை) நம்மிடத்தில், "உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடுவதை நிறுத்தி விட்டு போதிப்பதற்கு வேறு யாரையாவது கண்டறியுங்கள்" என்று கூறும்.[19]*

*7:1-12ல் இயேசுவின் விவரிப்பானது, நாம் பல்வேறு வகையான மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும், அப்படிப்பட்ட வகையினர் ஒவ்வொருவரையும் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. கண்களில் துரும்புகள் கொண்ட, புண்படு[த்து]ம் மக்கள் இருக்கின்றார்கள், இவர்கள் நமது அன்பும் கவனமும் தேவைப்படுகிற தனிநபர்களாக இருக்கின்றார்கள். நாம் ஒருபோதும் உதவி செய்ய முடிந்திராத பன்றிகளும் நாய்களும் கூட இருக்கின்றார்கள். அவர்களை நெருங்குவதற்கான நமது ஒவ்வொரு முயற்சியையும் அவர்கள் எதிர்த்து நிற்பார்கள். நம்மை எப்படித் துண்டு*

*துண்டாகப் பீறிப்போடுவது என்பது மட்டுமே அவர்களுடைய ஒரே ஆர்வமாக இருக்கும். இப்படிப்பட்ட தனிநபர்களைத் தனியே விட்டு விடுதல் என்பதுதான் நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயலாகும்.*

*இயேசுவின் பாதத்தைத் தனது கண்ணீரால் கழுவிய பெண்ணின் மீதும் (லூக். 7:36-50) விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணின் மீதும் (யோவா. 8:2-11) அவர் காண்பித்த மென்மைத் தன்மையைச் சிந்தித்துப் பாருங்கள். இதை மத்தேயு 23ல் உள்ள, வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் மீதான அவரது கடுஞ்சொல்லால் ஆன பழித்துரையுடன் நேரதிராக ஒப்பிட்டுப் பாருங்கள். மீண்டும் மீண்டும் அவர், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ" என்று கூறினார் (வ. 13-15, 23, 25, 27, 29).*

*நாய்களை அல்லது பன்றிகளைத் துப்பாக்கியால் சுட்டுவிடும்படி இயேசு கூறவில்லை. அவைகளை விட்டுவிடுங்கள் என்று மட்டுமே அவர் கூறினார்: அவைகளிடத்தில் பரிசுத்தமானவற்றைப் போட வேண்டாம்; அவைகளுக்கு முத்துக்களைக் கொடுக்க வேண்டாம். பவுலின் புத்திமதி யானது இவ்விடத்தில் ஏற்புடையதாக உள்ளது: ''கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்'' (ரோமர் 12:18).*

### *மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு அத்தியாவசியமான விஷயம் #5:*

## *நாம் தேவனைச் சார்ந்திருக்கத் தீர்மானம் செய்ய வேண்டும் (வ. 7-11).*

*இது நம்மை வசனங்கள் 7 முதல் 11 வரையுள்ள, ஜெபத்தின் வல்லமை யின் மீதான மாபெரும் வசனப்பகுதிக்குக் கொண்டு வருகிறது. இந்தப் பிரசங்கத்தில் நான் இவ்வசனங்களை விரிவாய் எடுத்துரைக்கப் போவதில்லை. மாறாக, இவ்வசனப் பகுதியானது நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் "மற்றவர்களுடன் நட்புறவாக இருத்தல் எவ்வாறு" என்ற பாடக் கருத்தின் சந்தர்ப்பப் பொருளுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பது என்பதே என் நோக்கமாக உள்ளது.*

*நாம் தீர்க்கின்றவர்களாய் இருக்கக் கூடாது, நாம் இரக்கம் நிறைந்தவர்களாக, தயவுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நமது வேத பாடப் பகுதியில் இருந்து நாம் கற்றுக்கொண்டோம். அதே வேளையில், நாம் எளிதில் ஏமாறக் கூடியவர்களாக இருந்து விடக்கூடாது என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது; நாம் நமது கால்களில் இருந்து தூசியை எப்போது உதறிவிட வேண்டும் என்பதை அறிதல் அவசியமானதாக உள்ளது. இந்த தீர்ப்புகளை ஏற்படுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளது. நாம் மென்மையாக இருக்க வேண்டிய வேளையில் வன்மையாய் இருப்பதில் இருந்தோ, அல்லது வன்மையாக இருக்க வேண்டிய வேளையில் மென்மை*

*யாய் இருப்பதில் இருந்தோ நாம் விலகியிருக்க முடிவது எவ்வாறு? வசனங்கள் 7முதல் 11வரையுள்ள பகுதியானது பதில் தருகிறது. நாம் தேவனைச் சார்ந்து இருக்க வேண்டும்:*

> *கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா, தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?*

*இவைகள் எவ்வளவு மாபெரும் வசனங்களாக உள்ளன! தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார்! அன்பார்ந்த ஒரு தந்தை தமது பிள்ளைகளின் தேவைகள் மற்றும் வேண்டுகோள்கள் ஆகியவற்றிற்குப் பதில் அளிப்பது போன்றே, தேவன் நமக்குப் பதில் அளிக்கின்றார்.*

*இவ்வசனப் பகுதியானது நமது பாடக் கருத்துடன் பல வழிகளில் உறவுபட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தேவன் நமக்கு இரக்கத்தைக் காண்பிக்கின்றார், இது நாம் பிறரிடம் இரக்கம் காண்பிக்க வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. விசேஷமாக இது, நாம் தேவனிடத்தில் நமது தேவைகளை எடுத்துச் செல்ல முடியும் என்று வலியுறுத்துகிறது - இந்த விஷயத்தில், பிறரை நடத்துதல் எவ்வாறு என்று அறிதல் அவசியமாக உள்ளது. இது தொடர்பாக, செய்தியானது யாக்கோபு 1:5அ பகுதியில் உள்ள செய்தியைப் போன்றதாகவே உள்ளது: "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் … தேவனிடத்தில் கேட்கக்கடவன்."*

*தேவன் "தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பார்!" என்று வசனம் 11 கூறுகிறது. யாரேனும் ஒருவர், "ஒரு பெரிய வீடு … அல்லது இன்னும் சிறந்த வாகனம் … அல்லது இன்னும் சிறந்த ஊதியம் தரும் வேலை என்பது நல்லதாயிருக்கும்" என்று கூறலாம் - ஆனால் எது உண்மையாகவே "நல்லதாக" உள்ளது? ஆவிக்குரிய ஈவுகள் மிகச் சிறந்தவைகள் அல்லவா? இவைகளுக்குள் பகுத்தறியும் ஆவி ஒன்று இருக்கும்: இது எல்லா வகையான மக்களுடனும் எவ்வாறு நடந்துகொள்ளுவது என்று அறிந்துகொள்ளும் திறமையாக உள்ளது. நீங்கள் உண்மையாகவே மக்களுடன் நட்புறவாயிருக்க விரும்பினால், உறவுமுறைகள் உங்களுக்கு முக்கியமானவைகளாக இருந்தால், நீங்கள் அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிடுவீர்கள்.*

*மற்றவர்களுடன் நட்புறவாயிருப்பதற்கு அத்தியாவசியமான விஷயம் #6:*

## *நாம் பொன்விதியின்படி வாழ வேண்டும் (வ. 12).*

*கடைசியாக நாம் வசனம் 12க்கு வருகின்றோம். இவ்வசனமானது மலைப் பிரசங்கத்தின் உயர்வான இடம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இது நிச்சயமாகவே, பிறருடன் நட்புறவாயிருப்பது எவ்வாறு என்ற கலந்துரையாடலை உச்சகட்டத்திற்குக் கொண்டு வருகிறது. இவ்வசனமானது, "ஆதலால் ... ." என்று தொடங்குகிறது. ஒரு கருத்தறிவில் இது, மனித உறவுகள் - அது சகோதரனுடனோ அல்லது விரோதியுடனோ, நண்பருடனோ அல்லது பகைவருடனோ யாருடனாக இருப்பினும் அவ்வுறவுகள் பற்றி மலைப் பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ள யாவற்றையும் தொகுத்துரைக்கிறது. குறிப்பாக இது, பிறருடன் நட்புறவாக இருத்தல் பற்றி நாம் 7:1-11ல் கற்றுள்ள எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகிறது: "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.'' நாம் சாதாரணமாக இப்படிக் கூறுவோம்: "அவர்கள் உங்களுக்கு என்ன செய்ய விரும்புகிறீர்களோ, அதை நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்.'' இது அநேகமாக, இயேசுவின் கூற்றுக்களிலேயே உலகம் முழுவதும் அறிந்த ஒன்றாக இருக்கலாம். இந்த வார்த்தைகளை ஏறக்குறைய ஒவ்வொருவரும்[20] பாராட்டுகின்றார்கள்; இந்த ஆணையின்படி வாழாதவர்களும்கூட இந்தக் கொள்கையைப் பாராட்டுகின்றார்கள்.*

*வசனம் 12ல் உள்ள கொள்கையை, இயேசுவுக்கு முன்னதாக பலர் எதிர்மறையாக சொல்லாக்கப்படுத்தி இருக்கின்றார்கள்: "பிறர் உங்களுக்கு என்ன செய்வதை நீங்கள் விரும்பவில்லையோ, அதை நீங்களும் பிறருக்குச் செய்யாதீர்கள்." இவற்றைச் சொல்விளக்கப்படுத்தியவர்களில், சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில், ஹில்லல் (யூதமதத்தில் முக்கியமான போதகர்), கன்ப்யூஸியஸ் மற்றும் புத்தர் ஆகியோர் இருந்தார்கள். ஆயினும் இதை இயேசுவே முதன்முறையாக, நேர்மறையாக சொல்லாக்கப்படுத்தி இருந்தார்: "... நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."*

*எதிர்மறையான மற்றும் நேர்மறையான அணுகுமுறைகளுக்கிடையில் ஒரு உலகளாவிலான வித்தியாசம் உள்ளது - இது, ''இல்லை'' என்ற வார்த்தையை வெறுமனே உட்படுத்துதல் அல்லது நீக்குதல் என்பதற்கும் அதிகமானதாக உள்ளது. எதிர்மறைக் கூற்றானது சுயபாதுகாப்பு பற்றிய விஷயமாக இருக்கையில், நேர்மறைக் கூற்றானது சுயத்தை மறந்திருத்தல் பற்றிய விஷயமாக உள்ளது. ஏதொன்றையும் செய்யாமலேயே எதிர்மறைக் கூற்றை நிறைவேற்றுதல் என்பது சாத்தியமானதாக உள்ளது,[21] அதே வேளையில் நேர்மறைக் கூற்றானது நன்மை செய்வதால் மட்டும் நிறை*

*வேற்றப்படக் கூடியதாக உள்ளது. எதிர்மறை தத்துவத்தை அணைத்துக் கொள்வதற்கு, ஒருவர் தேவபக்தியுள்ளவராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஏனெனில் அது வாழ்வைக் கண்ணோக்குகின்ற இயல்பான வழியாக உள்ளது - ஆனால் இரண்டாவது கூற்றான நேர்மறைக் கூற்றானது சுத்தமான தேவபக்தியின் அடிப்படையில் அமைந்து உள்ளது (வ. 12ஆ). பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பில் இது, "இதுவே உண்மையான எல்லா தேவபக்தியின் சாராம்சமாக உள்ளது" என்றுள்ளது.[22]*

*இந்த வசனமானது இக்கலந்துரையாடலின் முடிவுப் பகுதியில் வருகிறது, ஏனென்றால் இவ்வசனம் இதற்கு முந்தி கூறப்பட்டுள்ள எல்லா வற்றையும் தொகுப்புரைப்பதாக உள்ளது, ஆனாலும் இது உறவுமுறைகளில் எழுகிற மற்ற ஆயிரத்தியோரு [ஏராளமான] சூழ்நிலைகளையும் நிறைவு செய்யும் கொள்கையொன்றைத் தெளிவாக விளக்குவதன் காரணத்திற் காகவும் இவ்விடத்தில் உள்ளது. உறவுமுறையில் சாத்தியப்படுகிற ஒவ்வொரு பிரச்சனையைப் பற்றியும் கையாளக்கூடிய புத்தகம் ஒன்றை நீங்கள் வைத்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தத் தொகுதியானது எவ்வளவு பெரியதாக இருக்கும் என்பதை நீங்கள் காட்சிப் படுத்திப்பார்க்க முயற்சி செய்யுங்கள். பின்பு நீங்கள் யாரேனும் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருப்பதாகவும் அப்போது ஒரு இடர்ப்பாடு எழுவதாக வும் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் அந்த இடர்ப்பாட்டைக் கையாளுவது எப்படி என்று கண்டறிவதற்காக, அந்தப் புத்தகத்தினூடே பெரும்வெறியுடன் பக்கங்களைப் புரட்டுகின்றீர்கள். ஒரு மணி அல்லது அதற்கு மேற்பட்ட நேரத்திற்குப் பின்பு, உங்களுக்குத் தேவையான பதிலை நீங்கள் கண்டறிகின்றீர்கள் - ஆனால் [உங்களுடன் உரையாடிக் கொண்டிருந்த] அந்த நபர் சென்றுவிட்டார். அப்படிப்பட்ட பெரிய புத்தகத்தொகுதியை உங்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, இயேசு உண்மையில் பின்வருமாறு கூறினார்: "எந்த ஒரு இடர்ப்பாட்டையும் கையாளுவதற்கான வழி இதோ: 'சூழ்நிலையானது திருப்பப்பட்டதாக/ எதிரானதாக/தலைகீழானதாக இருந்தால் எப்படியாகியிருக்கும்? நான் எவ்விதமாய் நடத்தப்பட வேண்டும் என்று நான் விரும்பியிருப்பேன்?' என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். பின்பு பிறநபரையும் அதே போன்று நடத்துங்கள்."*

*இது எவ்வளவு சுலபமானதாக உள்ளது, ஆயினும் எவ்வளவு ஆழ்ந்தறிவு உடையதாக உள்ளது! உயிர் வாழ்கின்ற யாவரும் இந்த அடிப்படையில் நடந்துகொண்டால் உலகம் எப்படியிருக்கும் என்று உங்களால் சித்தரித்துக் காண முடிகிறதா? ஒவ்வொரு வர்த்தகமும் இவ்வாறு நடத்தப்பட்டால் எப்படி இருக்கும்? ஒவ்வொரு பணியாளரும் தாம் எவ்வாறு நடத்தப்பட விரும்புகின்றாரோ அவ்வாறே பிறரையும் நடத்தினால் எப்படி இருக்கும்? ஒவ்வொரு நிறுவனமும் இந்தக் கொள்கையை மதித்து நடந்தால் எப்படி இருக்கும்? ஒவ்வொரு இல்லத்திலும், ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு சபையிலும் உள்ள மக்கள் தாங்கள் நடத்தப்படும் படி விரும்புகின்ற வகையிலேயே மற்றவர்களை எப்போதும் நடத்தினால் எப்படி இருக்கும்?*

*நாம் பகுத்தறிவுணர்வைப் பயன்படுத்த வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்ப்பதை கடைசி முறையாகக் கூறுவதற்கு சற்றே நான் தாமதிக்க அனுமதியுங்கள். மத்தேயு 7:12 வசனமானது, நாம் நம்மை மற்றவர்களின் இடத்தில் வைத்துப் பார்க்கும்போது, மோசமானதை விரும்பாமல் இருக்கப் போதிய அளவு நல்லவர்களாக இருப்போம் என்றும், மதியீனமானவற்றை விரும்பாமல் இருப்பதற்குப் போதிய அளவு ஞானமுள்ளவர்களாக இருப்போம் என்றும் யூகிக்கிறது.*[23] *அவ்வாறு இல்லையென்றால், குடிகாரர் ஒருவர், "மக்கள் எனக்கு மதுபானம் கொடுக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன், எனவே பிறர் எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் விரும்புகின்றேனோ, அதையே நானும் பிறருக்குச் செய்வேன் - ஒவ்வொருவருக்கும் மதுபானப்* ["Booze"[24]] *புட்டியைக்கொடுப்பேன்" என்று தர்க்கம் செய்யலாமே. தனிப்பட்ட விவரிப்பு ஒன்றைப் பயன் படுத்துவதென்றால், "நான் ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த பொரியலை*[25] *உண்ண விரும்புகின்றேன், எனவே அடுத்தமுறை நான் சமையல் செய்ய வேண்டிய வேளையில் நான் ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த பொரியலைச் சமைத்து என் மனைவிக்குக் கொடுப்பேன்" என்று தர்க்கம் செய்யலாமே - ஆனால் என் மனைவிக்கு ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த பொரியலை உண்பது வெறுப்பாக உள்ளது என்ற உண்மை நிலவியபோது, நான் இவ்வாறு செய்ய விரும்புகின்றேன்.*

*பொன்விதியானது எதைப் பற்றிப் பேசுகிறது என்பதை நம்மில் பெரும்பான்மையானோர் புரிந்துகொண்டுள்ளோம் என்று நான் நினைக்கின்றேன். இந்த வசனமானது எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடிய பொதுவான சத்தியங்களைக் குறிப்பிடுகிறது. நாம் யாவரும் மென்மைத்தன்மையுடனும், பரிவிரக்கத்துடனும் நடத்தப்பட விரும்புகின் றோம், எனவே நாம் பிறரையும் இதை வழிமுறையில் நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது. நாம் மதிக்கப்பட விரும்புகின்றோம், எனவே நாம் பிறர்மீது கொண்டுள்ள மதிப்பை வெளிப்படுத்த வேண்டும். நாம் மிகச் சிறந்தவர்கள் என்று பிறர் நம்ப வேண்டும் நாம் செய்கின்றவற்றைப் பற்றி மிகச் சிறந்த வகையில் கட்டமைத்துப் பேச வேண்டும் என்று விரும்புகின் றோம், எனவே நாமும் அதையே அவர்களுக்குச் செய்ய வேண்டும். நீங்கள் இந்தப் பட்டியலை விரிவாக்க முடியும்: பிறர் நம்மைப் புரிந்துகொள்ள வேண்டும், நமது மதியீனத்திற்குள் இருக்கும் தவறுகளை இரக்கத்தினால் மூடி, நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம் - எனவே பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோமோ, அதையே நாமும் பிறருக்குச் செய்வோம்.*

*ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் இதே வழிமுறையில் நடத்து கின்ற உலகத்தில் நாம் வாழ்ந்தால் அது அற்புதமாயிருக்காதா? நாம் ஒவ்வொருவரையும் அவ்விதமாகவே நடத்தினால் அது அற்புதமானதாக இருக்காதா?*

# முடிவுரை

காந்தி[26] [இந்தியாவின் தேசபிதா என்று அழைக்கப்படுபவர்] ஆரம்பத்தில் கிறிஸ்தவத்தினால் அதிலும் விசேஷமாக, பொன்விதி உட்பட, மலைப் பிரசங்கத்தின் மாபெரும் போதனைகளினால் மனம் ஈர்க்கப் பட்டார் என்று நான் கேள்விப்பட்டுள்ளேன். அவர் ஏன் கிறிஸ்தவராக வில்லை என்று அவரிடத்தில் கேட்கப்பட்டபோது, அந்தக் கொள்கைகளின் படி வாழ்கின்ற எந்தக் கிறிஸ்தவரையும் தான் கண்டதில்லை என்று அவர் கவலையுடன் பதில் அளித்தாராம். நாம் கற்றுக்கொண்டுள்ள கொள்கை களின்படி நான் வாழ்கின்றேனா? நீங்கள் வாழ்கின்றீர்களா?

மத்தேயு 7:1-12 பின்வரும் நன்கு பழக்கப்பட்ட வார்த்தைகளினால் பின்தொடரப்படுகிறது:

> இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர் கள் சிலர் (வ. 13, 14).

இந்த வாசலானது கீழே குறிப்பிட்டவர்களை மட்டுமே உட்பிரவேசிக்க அனுமதிக்கும் என்று கருத்துத் தெரிவிப்பதில் நான் மிகுந்த தைரியமுள்ளவனாக இருப்பேனா ... .

- தீர்ப்பிடாதவர்களாய் இருப்பவர்கள்?
- தங்கள் சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்துவதை முதல் அக்கறையாகக் கொண்டவர்கள்?
- பிறருக்குத் தாழ்மையுடனும் கருத்துணர்வுடனும் உதவி செய்கின்றவர்கள்?
- மாறுபாடுகள் மற்றும் சிரமங்கள் ஆகியவற்றைப் பற்றிச் செயல்படக் கற்றுக்கொண்டவர்கள்?
- தேவனைச் சார்ந்திருக்கத் தீர்மானித்தவர்கள்?
- பொன்விதியின்படி வாழ்கின்றவர்கள்?

ஆம், மத்தேயு 7:13, 14 வசனங்கள் மனித உறவுமுறைகளுக்கும் மேலாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று நான் அறிகின்றேன், ஆனால் இவ்வசனப்பகுதியானது இதை உள்ளடக்குகிறது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். பிற மக்களுடன் நட்புறவாயிருத்தல் எவ்வாறு என்பதைக் கற்றுக் கொள்ளுதல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது!

கடந்த காலத்தில் நீங்கள் பிறரை நடத்தவேண்டிய முறைப்படி நடத்தத் தவறியிருக்கின்றீர்களா? நான் அவ்வாறு இருந்துள்ளேன். நாம் மனந்திரும்பி, எதிர்காலத்தில் மேன்மையாயிருக்கத் தீர்மானம் செய்தால், தேவன் தமது கிருபைத்தன்மையின் மூலமாக நமது முந்திய அந்தக் குறைபாடுகளை மன்னிப்பார் என்பது அற்புதமானதாக உள்ளது அல்லவா?[27] நமது சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்து

*தல் குறித்து நாம் முதலில் அக்கறையாக இருக்க வேண்டும் என்பதே இந்தப் பிரசங்கத்தில் ஏற்படுத்தப்பட்ட முதல் கருத்தாக உள்ளது. இது சுயபரி சோதனைக்கான நேரமாக உள்ளது. உங்கள் வாழ்வானது முக்கியமான மாற்றங்களுக்காகக் கதறிக் கொண்டிருந்தால், நாங்கள் உங்களுக்கு உதவ முடியும், தயவுசெய்து நாங்கள் அதை அறியச் செய்யுங்கள்.*[28]

---

*குறிப்புகள்*

*[1]இது வீட்டைத் தாங்கி நிற்கும் மரப்பாளமாகவோ அல்லது கூரையைத் தாங்கி நிற்கும் உத்திரக் கட்டையாகவோ இருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள். எவ்வகையிலும் இது மிகப் பெரிய மரத்துண்டாகவே இருந்தது. [2]*KJV*யில், "மிகச் சிறிய ஒரு துணுக்கு" என்பதற்கான பழைய ஆங்கில வார்த்தையான* "mote" *என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. [3]இன்னுமொரு உதாரணத்திற்கு, மத்தேயு 23:24ஐக் காணவும். [4]நீங்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஏற்புடையதாக இருந்தது என்றால் நீங்கள்,* "*இது* Laurel & Hardy, Abbott & Costello *அல்லது* The Three Stooges *என்ற திரைப்படத்தில் வரும் காட்சிபோன்றுள்ளது!" என்று கூறலாம். [5]உத்திரத்தைக் கண்ணில் கொண்டுள்ள மனிதன், துரும்பைக் கண்ணில் கொண்டுள்ள மனிதனுக்கு உதவியளித்தல் என்பது, நான்* [*டேவிட் ரோப்பர்*] *வேறு யாருக்கேனும் முடியை நீளமாக வளரச் செய்ய உதவுவது போன்றதாக உள்ளது (லேவி. 13:41).* [*ஏனெனில் என் தலையில் மிகக் குறைந்த அளவுக்கே தலைமுடி உள்ளது*]. *[6]அதாவது, அவர் அவனைக் கொல்வதற்குத் தயாராக இருந்தார். [7]*KJV*யில்* "beholdest" *என்றுள்ளது. [8]மத்தேயு 7:3ல் உள்ள blepo என்ற கிரேக்க வார்த்தையானது "பார்த்தல்" என்பதற்கு வழக்கமான வார்த்தையை விட "மாபெரும் தெளிவைச் சுட்டிக் காண்பிக்கிறது" மற்றும் இது, "ஒரு அதிகமான விருப்பார்ந்த நோக்கத்தையும், உண்மையான ஆழ்ந்த சிந்தனையையும்" வெளிப்படுத்துகிறது* (W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III with James A. Swanson [Minneapolis: Bethany House Publishers, 1984], 106). *[9]தொலைபேசி கம்பம் என்பது எனது உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான "பாளம்" அல்லது "உத்திரம்" என்பதாக உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான சொற்றொடரைப் பயன்படுத்தவும். [10]*J. B. Phillips, *The New Testament in Modern English* (New York: Macmillan Co., 1958), 344.

*[11]இது அன்பைப் பற்றிய மிகச் சிறந்த விளக்கங்கள் ஒன்றில் மறைவாக உணர்த்தப்பட்டுள்ளது: "அன்பானது அன்புகூரப்பட்டவர்களுக்கு மிகச் சிறந்த வற்றையே நாடுகிறது." உண்மையான அன்பு என்பது அன்புகூரப்பட்டவரின் வாழ்வில் பாவத்தை, அவரது ஆத்துமாவைப் பேரழிவுக்கு உள்ளாக்கும் பாவத்தை கண்டும் காணாமல் இருந்து விட முடியாது. மத்தேயு 18:15ஐயும் காணவும். [12]மத்தேயு 5:23, 24ஐக் கொண்டு ஒரு இணைகருத்து எடுக்கப்பட முடியும், அவ்வசனப்பகுதியில் இயேசு, "... முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்று கூறினார். காணிக்கை அளிப்பதை ஊக்கம் குன்றச்செய்தல் என்பது இயேசுவின் நோக்கமாக இருந்ததில்லை; மாறாக, காணிக்கை செலுத்துவதற்கு முன்னதாக அவசியமாகச் செய்யப்பட வேண்டியது என்ன என்பதை அவர் வலியுறுத்தினார். [13]உங்கள் கண்ணில் விழுந்த தூசியொன்றை எடுக்க உதவும்படி நீங்கள் யாராவது ஒருவரிடம் கேட்டு, அவர் இறைச்சி வெட்டும் கத்தியுடன் உங்களிடத் திற்கு வந்தால் உங்கள் பதில்செயல் என்னவாக இருக்கும்?*

*[14]விசேஷமாக, பன்றி "அசுத்தமானது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது (லேவி. 11:7); நாயானது விரிகுளம்புகள் உடையதாகவோ அல்லது இரையை அசை போடுவதாகவோ இராதபடியால் அது "அசுத்தமானது" என்னப்பட்டது (வ. 3, 4). [15]உலகில் நான் வாழும் பகுதியில், பல ஆண்டுகளுக்கு முன்பிருந்த புகழ்பெற்ற* "razorback" [*கத்தி முதுகு கொண்ட பிராணிகள்*] *என்பவற்றைப் பற்றி நாங்கள் பேச முடியும். வேறு எங்காவது, பிரசங்கியார்கள் காட்டுப் பன்றியை, தந்தங்கள் கொண்ட ஆப்பிரிக்கக் காட்டுப் பன்றியை அல்லது பன்றி போன்ற விலங்கைக் குறிப்பிடலாம். [16]இது, "உன்னிடத்தில் இனி நான் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று சுட்டிக் காண்பிப்பதற்கான அடையாளத்துவ வழிமுறையாக உள்ளது. [17]இயேசு தாமே தமது முத்துக்களைப் பன்றிகளுக்கு முன்பாகப் போடுவதி லிருந்து விலகியிருந்தார்: ஒரு சந்தர்ப்பத்தில் அவர் பரிசேயர்களுக்குப் பதில் அளிக்காதிருந்தார் (மத். 15:2, 3; 21:23-27). அவர் ஏரோதுவிடம் பேசாதிருந்தார் (லூக். 23:9). [18]எபேசியர் 5:16. [19]நான் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, பின்வரும் சொந்த விவரிப்பைப் பயன்படுத்தினேன்: "நாங்கள் ஜப்பானுக்குச் சென்றபோது, அங்கு ஆங்கில மொழியைப் புரிந்துகொள்ள இயலாதவர்களுடன் பேச முயற்சிப்பதற்கு நான் அதிகமான நேரத்தைச் செலவிடவில்லை. யாரேனும் ஒருவர், நான் கூறுவது என்ன என்பதைப் பற்றிய கருத்துக்கொண்டு இருக்கவில்லை என்று நான் கண்டறிந்த உடனே, நான் அடுத்த நபரிடத்தில் சென்று விடுவேன்." பகிர்ந்துகொள்வதற்கு நீங்களும் இதேபோன்ற அனுபவங்களைப் பெற்றிருக்கலாம். [20]இதை ஒரு சிலர் மதிப்பதில்லை; பிறருடைய உணர்வுகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் என்பது பலவீனத்தின் அறிகுறி என்று அவர்கள் கருதுகின்றார்கள்.*

*[21]எதிர்மறைச் சொல்விளக்கத்தின் அடிப்படையில், மத்தேயு 25ல் கண்டனம் பண்ணப்பட்ட "வெள்ளாடுகள்"* [*போன்றவர்கள்*] *இரட்சிக்கப்பட்டிருக்க முடியும். அவைகள்/அவர்கள் பொல்லாங்கான செயல்களைச் செய்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஆனால் அவைகள்/அவர்கள் நன்மை செய்வதைப் புறக்கணித் திருந்தனர் (வ. 31, 32, 41, 42ஐக் காணவும்).* [22]Phillips, 14. [23]Adapted from J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 265. [24]"Booze" *என்பது மதுபான வகைகளைக் குறிப்பிடும் கொச்சை மொழியாகும். [25](கன்றுக்குட்டி அல்லது பன்றியின்) ஈரலை வெங்காயத்துடன் சேர்த்துச் சமைத்தல் என்பது அமெரிக்காவில் ஒரு சாதாரணமான உணவு வகையாக உள்ளது. வாடையடிக்கின்ற இந்த உணவுக் கலவையானது சிலரால் வெறுத்து ஒதுக்கப் பட்டும், சிலரால் மகிழ்வுடன் அனுபவிக்கப்பட்டும் உள்ளது. [26]மகாத்மா காந்தி (1869-1948) என்பவர் இந்திய தேசீய இயக்கத்தை வழிநடத்தியவராவார். இவர் இருபதாம் நூற்றாண்டின் செல்வாக்கு மிகுந்த தலைவர்களில் ஒருவராக இருந்தார். [27]எதிர்காலத்தில் மேன்மையானவைகளைச் செய்வதற்கான தீர்மானம், உண்மையான மனந்திரும்புதலின் ஒரு அங்கமாக உள்ளது. [28]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, விலகிப் போயுள்ள பாவிகளுக்கு - ஒருக்காலும் கிறிஸ்துவிடம் வந்திராதவர்களுக்கு - இரட்சிக்கப் படுவது எப்படி என்றும் (யோவா. 3:16; மாற். 16:16), தவறு செய்துள்ள கிறிஸ்தவர் களுக்கு மீளக்கட்டியெழுப்பப்படுவது எப்படி என்றும் (அப். 8:22; யாக். 5:16) கூறுவதற்கு நீங்கள் விரும்பலாம். ஆவிக்குரிய நிலையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களைக் காட்டிலும் வேறு எந்த மாற்றமும் அவ்வளவு அதிக அத்தியாவசிய மாகத் தேவைப்படுவதில்லை.*

*28*

# இயேசு பராமரிக்கின்றாரா?

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #10*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*
   G. *நூற்றுக்கு அதிபதியொருவரின் வேலையாள் குணமாகுதல் (மத். 8:1, 5-13; லூக். 7:1-10).*
   H. *ஒரு விதவையின் மகன் உயிருடன் எழுப்பப்படுதல் (லூக். 7:11-17).*
   I. *யோவான் ஸ்நானனுக்குப் பதில் அளித்தல் (மத். 11:2-30; லூக். 7:18-35).*
   J. *இயேசுவின் பாதங்கள் அபிஷேகம் செய்யப்படுதல் (லூக். 7:36-50).*

### அறிமுகம்

*மலைப் பிரசங்கத்திற்குப் பின்பு, "அவர் மலையிலிருந்து இறங்கின போது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்" (மத். 8:1). அந்தக் காலவேளையிலிருந்து, கிறிஸ்து தாம் பயணம் சென்ற இடங்களில் எல்லாம் கூட்டத்தாரால் சூழப்பட்டிருப்பார் (லூக். 7:9, 11ஐக் காணவும்).[1] ஆயினும், இயேசு தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களை மக்கள் கூட்டம் என்ற வகையில் மட்டும் கண்ணோக்காதிருந்தார். அவர்களை அவர் தேவைகளுடைய தனிநபர்களாகக் கண்ணோக்கினார். லூக்கா 7:13ல் காணப்படுகிற ஒரு சொற்றொடரானது கிறிஸ்துவின் எண்ணப்போக்கை விளக்கப்படுத்துகிறது: "கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி ... ."*

*இந்தப் பாடத்தில் நாம் மாபெரும் கலிலேய ஊழியத்தைப் பற்றிய நமது படிப்பைத் தொடருகின்றோம். நான் இந்தப் பாடத்தை, "இயேசு பராமரிக்கின்றாரா?" என்று அழைக்கின்றேன்.[2] நமது வேதபாடப் பகுதியில், இயேசு தம்மைச் சுற்றி இருந்தவர்களுக்காகக் கொண்டிருந்த அக்கறை மற்றும் பரிவிரக்கம் ஆகியவற்றின் நான்கு விரிவான உதாரணங்கள் அடங்கியுள்ளன. இந்த நான்குமே, லூக்காவின் சுவிசேஷப் புத்தகத்தில் உள்ளன, எனவே நான் லூக்கா சுவிசேஷத்தையே இந்தப் பாடத்திற்கான அடிப்படை ஆதாரமூலமாகப் பயன்படுத்துகின்றேன். இவற்றில் இரு நிகழ்ச்சிகள் மத்தேயு சுவிசேஷத்திலும் உள்ளன, அதை நான் ஒரு துணை ஆதாரமூலமாகப் பயன்படுத்துகின்றேன்.*

# நமது இல்லங்களை வியாதி தாக்குகிறபோது இயேசு பராமரிக்கின்றார் (மத். 8:5-13; லூக். 7:1-10)

*இயேசு மலையின்மீது தமது உரையை முடித்தபின்பு, கப்பர்நகூமுக்குத் திரும்பினார் (லூக். 7:1). அவர் அங்கிருந்தபோது, ஒரு நூற்றுக்கு அதிபதி, தமது வேலைக்காரரில் ஒருவரைக் குணமாக்கும்படி இறைஞ்சுவதற்காக யூதர் ஒருவரைச் செய்தியாளராக அனுப்பினார் (லூக். 7:2-5).[3] ஒருவேளை அந்த நூற்றுக்கு அதிபதி, தமது சகமனிதர் ஒருவரின் மகனை இதற்கு முன்பாக இயேசு குணமாக்கியது பற்றி (யோவா. 4:46-54) கேள்விப்பட்டு இருக்கலாம்.[4]*

*நூற்றுக்கு அதிபதி என்பவர் (அவரது பதவிப் பெயர் சுட்டிக் காண்பிப்பது போன்றே) நூறு படைவீரர்களுக்கு மேலானவராக இருந்த ரோம அலுவலர் ஆவார். குறிப்பிட்ட இந்த நூற்றுக்கு அதிபதி, யூத சமுதாயத்தினருடன் நல்லுறவு கொண்டிருந்தார். இவர் அவர்களின் ஜெப ஆலயம் ஒன்றைக் கட்டுவதற்கு நிதியுதவி அளித்திருந்தார்.[5] இவர் "தேவனுக்குப் பயந்தவராக," யெகோவாவின் மீது விசுவாசம் உள்ளவராக இருந்திருக்கலாம், ஆனால் இவர் யூதமார்க்கத்தமைந்தவராகவில்லை (அப். 13:16ஐக் காணவும்).[6] இப்பொழுது இவர் தமது அடிமைகளில் ஒருவர்மீது அக்கறை கொண்டார்.*

*அந்த வேலைக்காரன் அந்த அலுவலரின் வீட்டில் "திமிர்வாதமாய்க் கிடந்து" கொடிய வேதனைப்பட்டதாகவும் மற்றும் "மரண அவஸ்தையாய்" இருந்ததாகவும் நமக்குக் கூறப்படுகிறது (மத். 8:6; லூக். 7:2). லூக்கா சுவிசேஷ விவரம், அவன் நூற்றுக்கு அதிபதியின் பிரியமான வேலைக் காரனாக இருந்ததாகப் பதிவு செய்கிறது (7:2).* KJV*யில்* "was dear unto him" *("இவருக்கு அன்பார்ந்தவனாயிருந்தான்") என்றுள்ளது. உங்களுக்கு மிகவும் "பிரியமானவர்" என்று நீங்கள் எண்ணுகின்ற ஒரு நண்பர், ஒரு உறவினர் அல்லது உங்கள் சொந்த வீட்டில் உள்ள யாரேனும் ஒருவர் வியாதிப் பட்டிருந்ததை நீங்கள் எப்போதாவது கொண்டிருக்கின்றீர்களா? அப்படி யானால் நீங்கள் இந்த நூற்றுக்கு அதிபதியின் அக்கறையைப் பற்றி புரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட வேளைகளில் நாம், "இயேசு பராமரிக்கின்றாரா?" என்று நாம் வியப்படையலாம். அவர் அதைச் செய்கின்றார் என்பதை இந்தப் பாடம் நமக்கு நினைவூட்டுகிறது.*

*இயேசு இந்தப் போர்வீரரின் வீட்டை நோக்கிப் பயணப்படத் தொடங்கியதன் மூலம் பதில்செயல் செய்தார், ஆனால் இம்மனிதர் தமது வீட்டில் கிறிஸ்து பிரவேசிப்பதற்குத் தாம் தகுதியுடையவர் அல்ல என்று வார்த்தை அனுப்பினார். இவர் இயேசுவின் ஆவிக்குரிய அதிகாரமுறை மையை ஒப்புக்கொண்டார் (லூக். 7:6-8). "இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: 'இஸ்ரவேலருக் குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் ...' என்றார்" (மத். 8:10).[7] "அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்" (மத். 8:13ஆ).*

*இயேசு இன்னமும் நம்மைப் போல் ஒரு மனிதராக இந்தப் பூமியில்*

*நடந்து கொண்டிருப்பதில்லை, மற்றும் அற்புதங்கள் நிகழ்த்துவதற்கான அவரது காலம் கடந்துள்ளது; ஆனால் நமது இல்லங்களை வியாதி தாக்குகிற போது இயேசு இன்னமும் பராமரிக்கின்றார். அவர் ஒவ்வொரு நாளும் நமக்குத் தேவையான பலத்தைக் கொடுப்பார் (எபி. 13:5ஆ, 6).*

*சுமைகள் அழுத்தும்போது, கவலைகள் துன்புறுத்தும்போது,*
*பாதை களைப்பாக, நீண்டதாக ஆகும்போது,*
*என் இருதய வேதனையில், ஆழமான மகிழ்ச்சிக்கும் பாடலுக்கும்*
*இயேசு என்னைப் பராமரிக்கின்றாரா?*

*ஓ ஆமாம், அவர் பராமரிக்கின்றார்;*
*அவர் பராமரிப்பதை நான் அறிகின்றேன்,*
*எனது ஆழ்ந்த கவலையினால் அவர் இருதயம் தொடப்படுகிறது;*
*நாட்கள் களைப்பாயிருக்கையில், நீண்ட இரவுகள் கவலைக் குரியதாகுகையில்,*
*என் இரட்சகர் பராமரிக்கின்றார் என்பதை நான் அறிகின்றேன்.*[8]

## *மரணம் நமது இருதயங்களை உடைக்கிறபோது இயேசு பராமரிக்கின்றார் (லூக். 7:11-17)*

*"அதன்பின் விரைவிலேயே*[9] *கிறிஸ்து நாயீன் என்னும் ஊருக்குப் போனார்" (லூக். 7:11), இது கப்பர்நகூமிற்குத் தெற்கே - தென்மேற்கில் சுமார் இருபது மைல்கள் தொலைவில் இருந்தது.*[10] *இயேசுவும் அவரது சீஷர்களும், எப்போதுமே அவரைச் சுற்றியிருக்கும் கூட்டமும் "ஊரின் வாசலுக்குச் சமீபித்து வந்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான், அவளோ விதவையாயிருந்தாள்" (வ. 12).*

*அந்த நாட்களில் விதவையாயிருப்பவள் கைவிடப்பட்டவளாகக் கருதப்பட்டாள். இந்தப் பெண்ணின் கணவர் இறந்தபோது, இவள் சார்ந்திருப்பதற்கு ஒரு மகனையாவது கொண்டிருந்தாள். பின்பு இரண்டாவது துயரம் வந்து மோதிற்று: இவளது ஒரே மகன் இறந்துபோனான். இவள் எதிர்காலத்தைக் குறைந்த அளவு நம்பிக்கையுடன் மட்டுமே நோக்கினாள். அந்தப் பெண் எவ்வாறு உணர்ந்திருப்பாள் என்பதை உங்களில் சிலர் புரிந்துகொள்ளுவீர்கள். உங்களுக்கு வாழ்வைவிட நெருக்கமாக இருந்த ஒருவரைக் கொண்டிருந்து இருப்பீர்கள் - ஆனால் அந்த நபர் இறந்து போயிருப்பார். உங்கள் இருதயம் கிழிக்கப்பட்டதுபோல் நீங்கள் உணர்ந்து இருப்பீர்கள்.*

*நமது இருதயங்களை மரணம் உடைக்கிறபோது இயேசு பராமரிக்கின்றாரா? நாயீன் நகரத்து விதவையைக் கர்த்தர் கண்டபோது, "அவள்மேல் மனதுருகினார்" என்று வசனம் 13 கூறுகிறது. துயரம் நமது கண்களில் கண்ணீரை நிறைக்கும்போது அவர் நம்மீதும் மனதுருகுகின்றார் (யாக். 5:11ஆ).*

*கிறிஸ்து அந்தப் பெண்ணை அழாதிருக்கும்படி கூறினார் (வ. 13ஆ). பின்பு அவர் திறந்திருந்த பாடையை* (coffin)[11] *தொட்டு [இறந்து கிடந்த] மகனிடம் பேசினார்: "வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகி றேன்!" (வ. 14). "மரித்தவன் [தனது உடல் குணமாக்கப்பட்டதைக் காண்பிக் கும் விதமாக] எழுந்து உட்கார்ந்து, [தனது சிந்தையும் மீளக்கட்டி எழுப்பப் பட்டதைச் செயல்விளக்கப்படுத்தும்படி] பேசத் தொடங்கினான்" (15அ).*

*இது இயேசுவின் ஊழியத்தின்போது, நடைபெற்றதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள, மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தல்களில் முதலாவது ஆகும்,*[12] *ஆனால் இது நோயாளிகளைக் குணமாக்குதல் என்று அவர் செய்து கொண்டிருந்தவற்றின் ஒரு விரிவாக்கமாக மட்டுமே இருந்தது. அற்புதங் களின் இரு வகைகளுமே இயல்பான உடலைப் பேரழிவுக்கு உட்படுத்திய அழிவுச் சக்திகளைத் திருப்பிவிட்டன. உடலைக் குணப்படுத்த முடியும் என்று உரிமைகோருகின்ற எவரொருவரும் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்க வல்லவராகவும் இருக்க வேண்டும்.*[13]

*அந்த இளைஞன் எழுந்து உட்கார்ந்தபோது, அங்கிருந்த யாவரும் பயமடைந்து, " 'மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றி யிருக்கிறார்!' என்றும், 'தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார்!' என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (வ. 16).*

*இந்த வரலாற்றில் எனக்கு மிகவும் பிரியமான பகுதி வசனம் 15ல் உள்ளது: "[இயேசு] அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்." அந்த இளைஞனின் கையை அவனது தாயின் கைகளில் ஒப்புவிக்கையில் இயேசுவின் முகத்தில் இருந்த மென்மைத் தன்மையை உங்களால் சித்தரிக்க முடிகிறதா? என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்த அந்தத் தாயின் முகத்தில் வழிந்தோடிய கண்ணீரை உங்களால் காண முடிகிறதா?*

*நாம் அற்புதங்களின் காலத்தில் இனியும் வாழ்வதில்லை. ஆயினும் இது, மரணக் கண்ணீர் நம்மைப் பிரிக்கும்போது இயேசு நம்மைக் குறித்துக் கவலைப் படுவதில்லை/நம்மைப் பராமரிப்பதில்லை என்று அர்த்தப்படுவது கிடையாது. அவர் நமக்கு [நெருக்கப்படும்] நாளுக்கான பலத்தைக் கொடுக்கின்றார் (எரே. 16:19அ) - மற்றும் அவர் மரித்தோரை உயிர்ப்பித்து, நாம் அன்புகூர்ந்தவர்களுடன் நாம் மீண்டும் இணைக்கப்பட்டிருக்கும் நாளுக்காகக் கண்ணோக்கியுள்ளோம் (1 தெச. 4:13-18).*

*பூமியில் எனக்குப் பிரியமானவர்களுக்கு நான் "பிரியாவிடை" கூறும்போது,*
*இயேசு என்னைப் பராமரிக்கின்றாரா?*
*எனது கவலைமிக்க இருதயம் ஏறக்குறைய உடைகிறதுபோல் ஆகுகையில்*
*அது அவரை நாடுகிறதா? அவர் என்னைக் காண்கின்றாரா?*

*ஓ ஆமாம், அவர் பராமரிக்கின்றார்;*
*அவர் பராமரிப்பதை நான் அறிகின்றேன்,*
*எனது ஆழ்ந்த கவலையினால் அவர் இருதயம் தொடப்படுகிறது;*

*நாட்கள் களைப்பாயிருக்கையில், நீண்ட இரவுகள் கவலைக்குரிய தாகுகையில்,*
*என் இரட்சகர் பராமரிக்கின்றார் என்பதை நான் அறிகின்றேன்.*

# நமது சிந்தைகளை சந்தேகம் துன்புறத்தும்போது இயேசு பராமரிக்கின்றார் *(மத். 11:2-30; லூக். 7:18-35)*

*இயேசு மரித்தோரிலிருந்து அம்மனிதனை உயிர்ப்பித்த செய்தியானது நாடு முழுவதிலும், யூதேயாவின் தெற்கு மாவட்டங்களிலும் கூடப் பரவிற்று (லூக். 7:17[14]), அங்குதான் யோவான் [ஸ்நானன்] ஏரோதினால் சிறை வைக்கப்பட்டிருந்தார். யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, யோவான் ஸ்நானன், சவக்கடலின் கிழக்குக் கரையிலிருந்த பெரேயாவில் மக்கேருஸ் என்ற இடத்தில் ஏரோதுவின் அரண்மனையில் சிறை வைக்கப் பட்டிருந்தார்.[15]*

*யோவானின் சீஷர்கள் அவரிடத்தில், கிறிஸ்துவின் செயல்பாடுகளைப் பற்றி அறிக்கை செய்தபோது அவர்களில் இருவரை அவர், "எதிர்பார்க்கப் படுகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று கேட்கும்படி கர்த்தரிடத்தில்[16] அனுப்பி வைத்தார் (லூக். 7:19ஆ). "எதிர்பார்க்கப்படுகிறவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "வருகிறவர்" என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது (தமிழ் வேதாகமத்தில் இவ்வாறே உள்ளது). யோவான், "எனக்குப் பின்வருகிறவர்" என்று இதற்குமுன்பு கூறியபோது இதே வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத். 3:11).*

*இயேசு (வரவிருந்தவரான) மேசியா என்பதை அறிவிக்க யோவான் தயங்கியிருந்தது இல்லை (யோவா. 1:29-36; 3:23-30), எனவே சில விளக்க வுரையாளர்கள், [யோவான்] ஸ்நானன் கணப்பொழுது வீழ்ச்சியடைந்தார் என்பதை ஒத்துக் கொள்வதற்கு மனவிருப்பம் இல்லாதிருக்கின்றார்கள். ஆயினும் வேதாகமம், தனது கதாநாயகர்களை முழுமையற்ற தன்மையி லிருந்து விடுதலையானவர்களாகக் குறிப்பிடுவதில்லை. நாம் நமது வேதப் பாடப் பகுதியை அதன் மிகவும் இயல்பான கருத்தறிவின்படி எடுத்துக் கொண்டால், கருப்புக் குகையின் கீழே, இருட்டான ஒரு சிறையறையில், யோவான் தமது விசுவாசத்துடன் போராடிக் கொண்டிருந்தார் என்று காண முடியும்.*

*இது எவ்வாறு நடைபெற்றிருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்வதில் எனக்குப் பிரச்சனை எதுவுமில்லை. முதலாவது, வனாந்திரத் தின் இந்த உத்வேகமுள்ள மனிதர் செயலற்றுக் கிடக்கும்படி வலிந்து [சிறையில்] தள்ளப்பட்டிருந்தார். இவர் பல மாதங்களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இது இவரது சிந்தையை இரையாகக் கொண்டிருக்கும். சிதைக்கக் கூடிய சிந்தனைகளை [எண்ணக்] கரையிலேயே நிறுத்தி வைத்தல் என்பது மிகவும் கடினமானதாக, மிகவும் கடினமானதாக ஆகியிருந்திருக்கும்.*

*மற்றும், யோவான் எதிர்பார்த்திருந்த பணித்திட்டங்களை இயேசு அநேகமாக நிறைவேற்றி இருக்கவில்லை. [யோவான்] ஸ்நானன், மேசியாவை ஒரு வெட்டும் கோடாரியாக, தூற்றுக்களத்தை முற்றிலும் சுத்தம் செய்கின்றவராகச் சித்தரித்திருந்தார் (மத். 3:10, 12).[17] ராஜ்யத்தைப் பற்றி (அப்போஸ்தலர்கள் உட்பட; அப். 1:6) மற்ற ஒவ்வொரு யூதரும் கொண்டிருந்த அதே உலகப்பிரகாரமான கருத்தை யோவானும் கொண்டிருந்து இருக்கலாம். ரோமாபுரியைத் தோற்கடித்து, தேவபக்தியற்ற யூதத்துவத் தலைவர்களை எருசலேம் நகரை விட்டுத் துரத்தி விடுவதற்காக, கர்த்தர் ஒரு படையை எழுப்புவார் என்று அவர் [யோவான் ஸ்நானன்] எதிர்பார்த்து இருந்திருக்கலாம்.[18] இவர், கிறிஸ்து தம்மை விடுதலை செய்வார் மற்றும் ஏரோதுவைத் தண்டிப்பதற்காக வருவார் என்றும் கூட எதிர்பார்த்து இருந்திருக்கலாம். [ஆனால் இவற்றிற்குப்] பதிலாக இயேசு நாடெங்கும் "சும்மா" சுற்றித் திரிந்து கொண்டு, மக்களுக்குப் போதித்து மற்றும் அவர்களில் நோயாளிகளாய் இருந்தவர்களைக் குணப்படுத்திக் கொண்டு இருந்தார்.*

*ஏரோதுவையும் ஏரோதியாளையும் அறிந்திருந்த யோவான் ஸ்நானன், அநேகமாக தமது மரணம் எப்போது வேண்டுமானாலும் நேரிடலாம் என்று எதிர்பார்த்திருக்கலாம். எனவே, மறு உறுதிப்பாட்டை அவர் விரும்பியதில் வியப்பெதுவும் இருப்பதில்லை: "தேவனால் எனக்கு தரப்பட்ட ஊழியத்தை நான் நிறைவேற்றினேனா? அல்லது எனது உழைப்புகள் யாவும் வீணாயிற்றா?" இவ்விதமாக இவர் தமது சீஷர்களை கிறிஸ்துவினிடத்தில், ''வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்ற கேள்வியுடன் அனுப்பி வைத்தார் (லூக். 7:19).*

*நம்மில் பெரும்பான்மையானோர், ஒருவேளை அல்லது இன்னொரு வேளையில் நமது விசுவாசம் பற்றிய கேள்விகளைக் கொண்டு இருந்துள் ளோம். சிலர் சந்தேகத்தின் இருளான உபத்திரவத்தில் துன்புற்றுள்ளார்கள். தேவன்மீது நாம் கதவைச் சார்த்திப் போடாத வரைக்கும் அவர் நம்மீது கதவைச் சார்த்திப் போடுவதில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.[19] வசனத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கான நேர்மையான இருதயத்தை நாம் கொண்டிருக்கும் வரையிலும், கர்த்தர் நம்மிடத்தில் பிள்ளைகளிடம் நாம் காண்பிப்பது போன்றே பொறுமையுடன் இருக்கின்றார் (லூக். 8:15; 1 பேது. 2:2; 1 தீமோ. 1:16). நமது சிந்தைகளை சந்தேகம் கொடுமைப் படுத்தும்போது, இயேசு [நம்மைப்] பராமரிக்கின்றார்.*

*இயேசு மும்முரமாக மக்களை குணமாக்கிக் கொண்டிருந்த வேளை யொன்றில் அவரை யோவானின் சீஷர்கள் காண வந்தார்கள். அவர் அந்தக் கேள்வியைக் கேட்டபோது, அந்த மனிதர்கள் தங்கள் போதகரிடத்தில் சென்று, "இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பது உமக்கு வெட்கக்கேடு!" என்று கூறும்படி கட்டளையிடவில்லை. மாறாக, அவர்களிடத்தில் அவர், "நீங்கள் போய் கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார் கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்*

படுகிறது" என்று கூறினார் (7:22). இந்தப் பதிலானது ஏசாயா 35:5 மற்றும் ஏசாயா 61:1ல் உள்ள மேசியாவைப் பற்றிய மேற்கோள்களை மறைமுகமாய் உணர்த்திற்று. மனிதர்கள் மேசியா செய்வார் என்று காட்சிகொண்டிருந்த செயல்திட்டங்களை இயேசு நிறைவேற்றியிரா விட்டாலும், அவர் தேவனுடைய பணித்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார் என்பதை [யோவான்] ஸ்நானனுக்கு உறுதிப்படுத்த இயேசு விரும்பினார்.

அத்துடன் இயேசு, "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்" என்றும் கூடக் கூறினார் (லூக். 7:23).[20] இயேசுவின் உரிமைகோருதல்களை மற்றவர்கள் குற்றப்படுத்தி இருந்தார்கள் (மத். 13:57), ஆனால் அவர்களுடன் யோவான் இருப்பதை கிறிஸ்து விரும்பவில்லை. இது யோவான் ஸ்நானன் தமது "விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும்படி" ஊக்கப்படுத்த அவர் [இயேசுவின்] வழிமுறையாயிருந்தது. பொழிப்புரையொன்றில் இது, "என்னில் தனது விசுவாசத்தை இழந்துபோகாதவர் பாக்கியவான்" என்றுள்ளது.[21]

யோவானின் கேள்வியானது இயேசுவை இரண்டு உரைகளை நிகழ்த்தும்படி தூண்டிற்று. இவற்றில் முதலாவது யோவானைப் பற்றிய ஐயத்தை நீக்குவதாக இருந்தது (லூக். 7:24-30). J. W. மெக்கார்வீ அவர்கள் பின்வரும் ஊக்கமூட்டும் சிந்தனையை எழுதினார்: "ஒரு செயல் ஒரு பண்பை ஏற்படுத்துவது இல்லை, ஒரு சந்தேகம் அதை ஏற்படுத்தாது/ அழித்து விடுவதுமில்லை."[22]

யோவான், மல்கியா தீர்க்கதரிசனத்தில் விவரிக்கப்பட்ட செய்தியாளராக (லூக். 7:27; மல். 3:1; மத். 11:10; மாற். 1:2ஐக் காணவும்) - "வரப்போகிற எலியா"வாக (மத். 11:14; மல். 4:5) இருந்தார் என்று கிறிஸ்து வலியுறுத்தினார். அவர், "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை" என்று கூறினார் (லூக். 7:28அ). என்ன ஒரு பாராட்டுரை!

பின்பு இயேசு பின்வரும் திகைப்பூட்டுகின்ற வார்த்தைகளைக் கூட்டினார்: "ஆகிலும், தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" (லூக். 7:28ஆ). சற்று முன் இயேசு யோவானைப் பற்றிக் கூறியதற்குப் பின்பு, யோவான் ஸ்நானன் ராஜ்யத்தில் இல்லாதிருத்தல் மட்டுமே இக்கூற்று உண்மையாக இருப்பதற்கான ஒரே ஒரு வழிமுறையாக உள்ளது. " 'மாபெரும் எடையில் மிகக் குறைந்த பகுதியானது, குறைந்த பகுதியின் மாபெரும் எடையை விடப் பெரியதாக உள்ளது' என்பதாக ஒரு பழமையான மரபுக்கூற்று உள்ளது, இது சிறிய வைரக் கல்லானது மாபெரும் பாறையை விட அதிகம் விலைமதிப்புள்ளதாக இருக்கிறது என்பதற்குக் கூறப்படுவதாகும்."[23] யோவான் ராஜ்யத்திற்கு/ சபைக்கு வழியை ஆயத்தப்படுத்தினார், ஆனால் நீங்களும் நானும் இதன் வலிவார்ந்த அங்கமாக இருக்கக் கூடிய மிக மேன்மையான சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம்!

மக்கள், யோவானைப் பற்றிய கிறிஸ்துவின் பாராட்டுரையை மகிழ்வுடன் அனுபவித்தார்கள், ஏனென்றால் அவர்கள் யோவானால் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள் (லூக். 7:29). இது இயேசுவுக்கு, யூதத்தலைவர்கள்

*யோவான் ஸ்நானனுக்குப் பதில்செயல் செய்யாமல் இருந்ததை நினைவூட்டிற்று: "பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ் நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனை யைத் தள்ளிவிட்டார்கள்" (லூக். 7:30).*

*இது இயேசுவின் இரண்டாவது உரையைத் தூண்டிற்று - அவரைத் திகைக்கச் செய்து கவலைப்படுத்திய அவிசுவாசமாக இருந்தது. அவர், பரிசேயர்களை, திருப்தியடைவதற்கு முரட்டுத்தனமாக மறுக்கும் பிள்ளைகள் போன்ற அவர்களின் செயலுக்காகக் கண்டித்தார்: அவர்கள் யோவானை அவரது துறவுத் தன்மைக்காக விமர்சித்திருந்தார்கள், இப்போதோ அவர்கள் இயேசுவை அவரது சமூகத்தில் கலந்து பழகும் தன்மைக்காகக் கண்டனம் செய்தார்கள் (லூக். 7:31-34). அவர் தமது அற்புதங்களை மகிழ்வுடன் அனுபவித்திருந்த நகரங்களை,[24] தம்மை இன்னும் வெறுத்து ஒதுக்கிய குடிகள் இருந்த நகரங்களைக் கடிந்து கொண்டார் (மத். 11:20-24).*

*கிறிஸ்துவின் பாரப்பட்ட இருதயமானது தமது பிதாவிடம் திரும்பிற்று. அவருடைய உதடுகளில் இருந்து ஒரு ஜெபம் வெளிவந்தது, அதில் "இவைகளை ஞானிகளுக்கும் [தம்மை தாமே ஞானிகளென்று கருதுகின்ற பரிசேயர் போன்ற மனிதருக்கு (யோவா. 9:40)] ... . மறைத்து, பாலகருக்கு [தங்கள் தேவையை ஒப்புக்கொள்ளக் கூடிய அளவுக்குத் தாழ்மை உள்ளவர்களுக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் (மத். 5:3; 18:3)]" (மத்தேயு 11:25). பின்பு இயேசு கூட்டத்தை நோக்கித் திரும்பி, மாபெரும் அழைப்பு என்று அடிக்கடி அழைக்கப்படுகிற அழைப்பை விடுத்தார்:*

> *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை[25] உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத். 11:28-30).*

*மக்களில் பலர் வாழ்வில் கனத்த பாரங்களுடன் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவேளை, நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் யோவான் இருந்ததைப் போன்று சந்தேகச் சுமையினால் கூடப் பாரப்பட்டு இருக்கலாம். அப்படியிருந்தால், இயேசு பராமரிக்கின்றார் என்பதற்காகக் களிகூறுங்கள்.*

*என் வழி இருளாக பெயரற்ற பயங்கரம் மற்றும்*
*பயத்துடன் இருக்கையில் இயேசு பராமரிக்கின்றாரா?*
*பகல்பொழுதின் வெளிச்சம் மங்கி ஆழ்ந்த இரவின்*
*நிழல்களாகுகையில்*
*அருகாமையில் இருக்கும் அளவுக்கு அவர் பராமரிக்கின்றாரா?*

*ஓ ஆமாம், அவர் பராமரிக்கின்றார்;*
*அவர் பராமரிப்பதை நான் அறிகின்றேன்,*
*எனது ஆழ்ந்த கவலையினால் அவர் இருதயம் தொடப்படுகிறது;*
*நாட்கள் களைப்பாயிருக்கையில், நீண்ட இரவுகள்*
*கவலைக்குரியதாகுகையில்,*
*என் இரட்சகர் பராமரிக்கின்றார் என்பதை நான் அறிகின்றேன்.*

# *நமது வாழ்வைப் பாவம் மூழ்கடிக்கும்போது இயேசு பராமரிக்கின்றார் (லூக். 7:36-50)*

*லூக்கா 7:36ஆம் வசனம் ஏறக்குறைய ஒரு ஆச்சரியப் பிரகாரமாகவே வருகிறது. இயேசு பரிசேயர்களைக் கண்டித்தபின்பு (7:30-35), உடனடியாக நாம், "பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்" என்று வாசிக்கின்றோம் (வ. 36அ).[26] சீமோன் என்பது இந்தப் பரிசேயரின் பெயராயிருந்தது (வ. 40). இவரது அழைப்பைக் கிறிஸ்து ஏற்றுக்கொண்டபோது நடைபெற்ற நிகழ்ச்சியானது "இயேசுவின் ஊழியம் முழுவதிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலேயே நெஞ்சை மிகவும் தொடும் நிகழ்ச்சி" என்று அழைக்கப்பட்டுள்ளது.*

*இந்த விவரத்தைப் பற்றி நாம் சுருக்கமாகப் பார்ப்பதற்கு முன்பாக,[27] இது கிறிஸ்துவின் இந்தப் பூமிக்குரிய வாழ்வு முடிவடைவதற்கு அண்மையில் நடைபெற்ற அபிஷேக நிகழ்ச்சியல்ல என்பதை நான் வலியுறுத்தியாக வேண்டும் (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 12:3-8). சில விவரங்கள் ஒன்றுபோல் உள்ளன,[28] ஆனால் இடம், காலம், சந்தர்ப்பம், பங்குபெற்றோர் மற்றும் விளைவு ஆகியவை மாறுபட்டுள்ளன. (மேலும் நான், லூக். 7ன் வரலாற்றில் உள்ள பாவம் நிறைந்த பெண் மகதலேனா மரியாளே என்ற வெகுஜனக் கருத்துக்கு வேதவசன ரீதியான ஆதாரம் எதுவும் இல்லை என்பதையும் நான் சுட்டிக்காண்பிக்க வேண்டும்.[29])*

*நாம் இந்த வரலாற்றிற்குத் திரும்புவோம். சீமோன், தமது வீட்டிற்கு இயேசு வரவேண்டும் என்று விரும்பியது ஏன் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.[30] அவரது காரணம் எதுவாயிருந்தாலும், அவர் ஒளிவுமறைவின்றி உபசரிப்பற்றவராக இருந்தார் (வ. 44-46). விருந்தளிப்பவரின் அந்த மரியாதைக்குறைவான நடத்தைக்கு நேர்மாறான வகையில், இவ்வரலாறு, அழைக்கப்படாமலேயே அவ்விருந்து நடைபெறும் இடத்திற்குள் வலிந்து நுழைந்த பாவம் நிறைந்த பெண் ஒருத்தியின் பிரியத்தைப் பற்றிக் கூறுகிறது. அவருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த அவள், "அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளத் தைலத்தைப் பூசினாள்." (வ. 38).*

*சீமோன் அதிர்ச்சியடைந்தார். அவர் தமக்குள்ளாகவே, "இவர் தீர்க்கதரிசி[31]யாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும்*

*இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று" தமக்குள் சொல்லிக் கொண்டார் (வ. 39). அந்தப் பரிசேயர் இயேசு யார் என்பதைக் குறித்துத் தாம் ஒரு முடிவை மேற்கொண்டிருந்ததாக நினைத்தார்; உண்மையில் அவர் தமது ஆவிக்குரிய நிலை பற்றிய முடிவு ஒன்றையே மேற்கொண்டார்.*

*சீமோனின் சிந்தனைகளை அறிந்த கிறிஸ்து, இரண்டு கடன்காரர் களைப் பற்றிய சுருக்கமான ஆனால் அழகுமிகுந்த உவமையைக்[32] கூறினார். நாம் அந்த உவமையைப் பற்றி, "அன்பு, கண்ணீர் மற்றும் மன்னிப்பு" என்ற பிரசங்கத்தில் விவரமாகப் படிப்போம். பரிசேயனான சீமோன் தமது ஆவிக்குரிய தேவை பற்றி உணர்வற்று இருந்தபடியால், "கொஞ்சமாக அன்புகூர்ந்ததாக" போதித்தார். அதற்கு நேர்மாறாக, அதிகமான பாவங் களைச் செய்திருந்த அந்த பெண், தனது பாவக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமையை உணர்ந்திருந்தாள். இவ்விதமாக, அவள் மன்னிக்கப்பட்ட போது, அவள் "அதிகமாய் அன்புகூர்ந்தாள்" (வ. 47).*

*பாவம் என்பது எப்போதாவது உங்கள்மீது அதிகாரம் செலுத்துவதாகப் பயமுறுத்தியது உண்டா? நீங்கள் கூறிய அல்லது செய்த ஏதாவது ஒரு விஷயம் பற்றி நீங்கள் உறக்கமற்ற இரவு ஒன்றைச் செலவிட்டது உண்டா? குற்றம் சாட்டும் மனச்சான்றின் வேதனையை நீங்கள் எப்போதாவது அறிந்தது உண்டா? நிச்சயமாகவே நீங்கள் இவற்றை அறிந்திருப்பீர்கள். நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம் (ரோமர் 3:23), நமது பாவங்களின் கடனை கட்ட இயலாதவர்களாக இருக்கின்றோம் (ரோமர் 6:23). நமது வாழ்வைப் பாவம் மூழ்கடிக்கும்போது இயேசு நம்மைப் பராமரிக்கின்றார் என்று அறிவது ஆச்சரியம் நிறைந்ததாக உள்ளது. நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு அவரிடமாய்த் திரும்பினால்,[33] அவர் நம்மை மன்னித்து விடுதலையாக்குவார் என்று அறிவது அற்புதமானதாக உள்ளது (கலா. 5:1)!*

*பலத்த சோதனை சிலவற்றை எதிர்த்து நிற்பதற்கு*
*நான் முயன்று தவறிய வேளையில், எனது ஆழ்ந்த துன்பத்திற்கு*
*நான் விடுவித்தல் எதையும் காணாத வேளையில்,*
*இரவு முழுவதும் என் கண்ணீர் பெருக்கெடுக்கும் வேளையில்*
*இயேசு பராமரிக்கின்றாரா?*

*ஓ ஆமாம், அவர் பராமரிக்கின்றார்;*
*அவர் பராமரிப்பதை நான் அறிகின்றேன்,*
*எனது ஆழ்ந்த கவலையினால் அவர் இருதயம் தொடப்படுகிறது;*
*நாட்கள் களைப்பாயிருக்கையில், நீண்ட இரவுகள் கவலைக் குரியதாகுகையில்,*
*என் இரட்சகர் பராமரிக்கின்றார் என்பதை நான் அறிகின்றேன்.*

## *முடிவுரை*

*நமது பாடத்தில், நாம் இயேசு பராமரிக்கின்றார் என்பதற்கு நான்கு உண்மைகளை கண்டோம்: நமது இல்லங்களை வியாதி தாக்குகிறபோது இயேசு பராமரிக்கின்றார்; நமது இருதயங்களை மரணம் உடைக்கிறபோது*

*இயேசு பராமரிக்கின்றார்; நமது சிந்தைகளை சந்தேகம் மேகமாய்ச் சூழ்ந்து கொள்ளும்போது இயேசு பராமரிக்கின்றார்; நமது வாழ்வைப் பாவம் மூழ்கடிக்கும்போது இயேசு பராமரிக்கின்றார். பேதுரு, "ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்று எழுதினார் (1 பேது. 5:6, 7).*

*இந்தப் பாடத்தின் கடைசியில் கூறப்பட்ட வரலாற்றிற்கு ஒரு பொதுவான நடைமுறைப் பயன்பாடு ஒன்றை ஏற்படுத்த என்னை அனுமதியுங்கள்: இயேசு எவ்வளவாகப் பராமரிக்கின்றார் என்பதையும் அவர் தங்களுக்கு எவ்வளவு செய்துள்ளார் என்பதையும் உணர்ந்து அறிந்தவர்கள், அவர்மீது அதிகமாக அன்புகூருவார்கள் - மற்றும் அவர்மீது மதிப்பைக் காண்பிப்பார்கள். ஆண்டவர் தமது ஆசீர்வாதங்களை நம்மீது பொழிந்திருக்கிறார். நாம் அவர்மீது அன்புகூருகின்றோமா? நாம் அந்த அன்பை வெளிப்படுத்துகின்றோமா?*

---

*குறிப்புகள்*

*[1]நான் இந்த காட்சியை, ஒரு மனிதர் "நகரில் ஒரு ஊர்வலம் வருகிறது!" என்று கூற இன்னொருவர், "இல்லை, இயேசு இன்னொரு முறை இங்கு வந்துள்ளார்" என்று பதில் அளிப்பதுடன் கற்பனை செய்ய முடிகிறது. [2]இயேசுவின் வாழ்வில் இப்பகுதிக்கான இந்த அணுகுமுறையானது ரிச்சார்டு ரோஜார்ஸ் மற்றும் பிறர் எழுதிய எழுத்துக்கள் உட்படப் பல்வேறு ஆதாரமூலங்களில் காணப்படுகிறது. இதைத் தொடங்கியது யார் என்று எனக்குத் தெரியாது. [3]மத்தேயுவின் சுவிசேஷ விவரமானது, நூற்றுக்கு அதிபதி இயேசுவிடம் நேரடியாகப் பேசினார் என்று சுட்டிக்காட்டுகையில், லூக்காவின் சுவிசேஷ விவரமானது, அந்த அலுவலர் இயேசுவிடம் பேசுவதற்கு ஆட்களை அனுப்பினார் என்று கூறுகிறது. ஒருவேளை இவ்விரண்டுமே உண்மையானதாக இருக்கலாம் அல்லது ஒருவேளை தம்மைத் தகுதியற்ற நபராக உணர்ந்த நூற்றுக்கு அதிபதி, தாம் அனுப்பியவர்கள் மூலமாக மட்டும் இயேசுவிடம் பேசியிருக்கலாம். [4]இவ்விரு நிகழ்ச்சிகளும் சில ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன, விசேஷமாக இவ்விரண்டுமே, தொலைவில் இருந்து குணமாக்குதல் என்ற அம்சத்தைக் கொண்டுள்ளன. [5]கப்பர்நகூமில் முதல் நூற்றாண்டில் இருந்த ஜெப ஆலயம் ஒன்றின் எஞ்சிய சிதிலங்களை இன்றைக்கும் நாம் காண முடியும். [6]உண்மையான தேவன்மீது விசுவாசம் கொண்ட, தேவபயம் உள்ள மனிதர், ஆனாலும் யூதமார்க்கத்து அமைந்தவராக இன்னமும் விருத்தசேதனம் செய்விக்கப் படாதவர். யூதமார்க்கத்து அமைந்த மற்றும் தேவபயமுள்ள மனிதர்கள் பற்றி அதிகமான தகவல்களை இன்றைக்கான சத்தியம் வெளியிட்ட "அப். நடபடிகள், 1" என்ற புத்தகத்தில் 347-48ல் காணவும். [7]நூற்றுக்கு அதிபதியின் விசுவாசமானது, ("கிழக்கிலும் மேற்கிலும் இருந்து") புறஜாதியாரில் பலர் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பங்கேற்கும் வேளையில் ("ராஜ்யத் தின் புத்திரரான") யூதர்கள் அதில் பங்கேற்க மாட்டார்கள் என்ற முன்னுரைத்தல் ஒன்றையும் தூண்டிற்று (மத். 8:11, 12).* [8]Frank E. Graeff, "Does Jesus Care?" *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

[9]சில கையெழுத்துப் பிரதிகளில் "அடுத்த நாளில்" என்றுள்ளது. KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில், "அடுத்த நாளிலே" என்றுள்ளது. [10]"இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தில் காணவும்.

[11]"Coffin" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, உடலை வைத்துச் சுமந்து செல்லப் பயன்படும் ஒரு மரச் சட்டத் தாங்கியையும் (தமிழில் இது பாடை என்று சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது) குறிப்பிடக்கூடும் (a "bier"; KJVயில் காணவும், மற்றும் தமிழில் இது பாடை என்றே உள்ளது). யூதர்கள் எப்போதாவதுதான் சவப்பெட்டிகளை (coffin) உபயோகித்தார்கள் என்று சிலர் நம்புகிறார்கள். [12]இது இயேசு ஒரு நபரை மரித்தோரில் இருந்து உயிரோடு எழுப்பிய முதல் நிகழ்ச்சி என்பதை, கூட்டத்தார்மீது இது ஏற்படுத்திய செயல்தாக்கம் கருத்தாகத் தெரிவிக்கிறது. எலியா மற்றும் எலிசா ஆகியோரின் ஊழிய நாட்களில், மரித்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டிருந்தார்கள் (1 இரா. 17:17-24; 2 இரா. 4:32-37) ஆனால், அவைகள் இயேசுவின் நாட்களுக்கு மிக மிக நீண்ட காலம் முன்னதாக நடை பெற்றிருந்தன. [13]நோயாளிகளைக் குணமாக்க முடிந்த பேதுருவால் (அப். 9:32-35) மரித்தோரை உயிரோடு எழுப்பவும் முடிந்தது (அப். 9:36-43). [14]லூக்கா 7:17ல் உள்ள "யூதேயா" என்ற வார்த்தை "யூதர்களின் நாட்டை" (அதாவது, பலஸ்தீனத்தை) அல்லது யூதேயா மாநிலத்தை அர்த்தப்படுத்த முடியும். எவ்வகையிலும், யூதேயா மாநிலம் இச்சொற்றொடரில் உள்ளடக்கப்பட்டது. [15]"இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தில் காணவும். [16]யோவான் தமது சீஷர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற உண்மை யானது, அவர் பவுல் செசரியாவில் சிறையில் இருந்தபோது (அப். 24:23) பெற்றிருந் தது போன்ற தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தார் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. [17]கோடாரி கொண்டு வெட்டுதல் மற்றும் களத்தைத் தூற்றுதல் என்பவை பற்றிய யோவானின் தீர்க்கதரிசனங்கள் அநேகமாக, எருசலேம் அழிக்கப்பட்ட போது ஒரு பகுதி நிறைவேறியிருக்க வேண்டும். அவற்றின் நிறைவான நிறைவேற்றம் என்பது நியாயத்தீர்ப்பின் நாளில் நடைபெறும். [18]மத்தேயு 11:12ல் உள்ள இயேசுவின் புலனாகாத வார்த்தைகள், தேவனை அவரது சொந்த கால அட்டவணையின்படி அவரது தீர்மானத்தைச் செய்ய அனுமதிப்பதற்குப் பதிலாக, யோவானும் பிறரும் ராஜ்யத்தைத் துரிதப்படுத்துவதற்கு விரும்பியதற்கான ஒரு குறிப்பாக இருக்கலாம். [19]உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் "As long as we do not write God off, He does not write us off" என்று கூறுவதுண்டு. [20]நாம் அறிந்துள்ளபடி, இதுவே இயேசுவுக்கும் யோவானுக்கும் இடையிலான கடைசிச் செய்தித் தொடர்பாக இருந்தது. இயேசுவின் செய்திக்கு யோவானின் பதில் என்ன என்று நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் இது நடைபெற்று பல ஆண்டுகளுக்குப் பின்பு மத்தேயுவும் லூக்காவும், யோவானைப் பற்றிய இயேசுவின் ஒளிவீசும் பாராட்டுரையைப் பதிவு செய்தார்கள் என்பது, கர்த்தருடைய உதவியால் யோவான் [ஸ்நானன்] தமது சந்தேகத்தை ஓயச் செய்ய முடிந்தது என்று நான் நம்புவதற்குப் போதுமானதாக உள்ளது.

[21]Quoted from *The Living Gospels* (Wheaton, Ill.: Tyndale House, 1966) in *The Man Jesus* (Glendale, Calif.: Regal Books, G/L Publications, 1967), 68. [22]J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 282. [23]McGarvey and Pendleton, 283. [24]பட்டியலிடப்பட்ட நகரங்கள் ஒவ்வொன்றும் கப்பர்நகூமில் இருந்து குறுகிய தொலைவிலேயே இருந்தன. "இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தில் காணவும். [25]நுகம் என்பது Uவடிவ மரத்துண்டுகளுடன் இணைந்த ஒரு குறுக்குச் சட்டமாகும், இது இரு விலங்குகளை ஒரு குழுவாக வேலை செய்ய வைக்கப் பிணைப்பதற்குப் பயன்படுகிறது. உலகின் சில பகுதிகளில் இன்னமும்

*நுகம் பயன் படுத்தப்பட்டு வருகிறது; மற்றவர்கள் சேணம் போன்ற அமைப்பைப் பயன் படுத்துகின்றார்கள். "நுகம்" என்ற சொற்றொடர் பொதுவாக, விருப்பமற்ற சுமையைக் குறிப்பதற்கு வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசா. 9:4; எரே. 27:12; அப். 15:10; கலா. 5:1; 1 தீமோ. 6:1). ஆயினும் இயேசுவின் விவரிப்பானது, விசுவாசியானவர் இயேசுவுடன் "நுகத்தில்" பிணைக்கப்பட்டுள்ளார் என்பதையும், நாம் அனுமதித்தால் கிறிஸ்துவே பாரத்தின் பெரும்பகுதியைச் சுமப்பார் என்பதை யும் சுட்டிக்காண்பிக்கிறது. இவ்விதமாக அவர், தமது "நுகம்" எளியது என்றும் தமது சுமை "இலகுவானது" என்றும் கூறினார். [26]இந்த நிகழ்ச்சி எங்கு நடைபெற்றது என்று நாம் அறிவதில்லை. லூக்கா 7:37ல் "அந்த ஊரில்" என்று குறிப்பிட்டுள்ளது, ஆனால் அது எந்த ஊர் என்று, நாம் அறிவதில்லை. [27]என்ன நடந்தது என்ற முழு விவரமான படிப்பிற்கு, "அன்பு, கண்ணீர் மற்றும் மன்னித்தல்" என்ற பிரசங்கத்தில் காணவும். [28]இரண்டு விருந்துகளுமே சீமோன் என்ற பெயர்கொண்ட ஒரு மனிதரின் வீட்டில் நடைபெற்றன, ஆனால் ஒரு சீமோன் பரிசேயராக இருந்தார், இன்னொரு சீமோன் (சுத்தமாக்கப்பட்ட) தொழுநோயாளியாக இருந்தார். சீமோன் என்பது ஒரு பொதுவான பெயராக இருந்தது. புதிய ஏற்பாட்டில் ஒன்பது சீமோன்கள் குறிப்பிடப்படுகின்றார்கள், பலஸ்தீனத்தில் சீமோன் என்ற பெயர் கொண்டவர்கள், அநேகமாக ஆயிரக்கணக்கில் இருந்திருப்பார்கள். மீண்டுமாக, இவ்விரு நிகழ்ச்சி களிலும், இயேசு ஒரு வாசனைத் திரவியத்தைக் கொண்டு, மாறுபட்ட பெண்களி னால் அபிஷேகம் செய்விக்கப்பட்டார், இவையிரண்டும் மாறுபட்ட விளைவு களைக் கொண்டு வந்தன. [29]இந்த நிகழ்ச்சிக்குச் சற்றுப் பின்பு மகதலேனா மரியாள் குறிப்பிடப்படுவது உண்மையே (லூக். 8:2), ஆனால் அவள் இதற்கு முன் குறிப்பிடப்பட்டிராத ஒரு குழுவின் அங்கமாக அறிமுகப்படுத்தப்பட்டாள். மகதலேனா மரியாள் அசுத்த ஆவியைக் கொண்டிருந்தவள் என்பதும் உண்மையை (லூக். 8:2) ஆனால் மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு கணித்துள்ளார்: "பாவம் மற்றும் அசுத்த ஆவி பிடித்தல் என்ற இரண்டிற்கும் இடையே தொடர்பு எதுவும் இருப்பதில்லை. முந்திய விஷயமானது, மத ரீதியான நடக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளை மதியாமல் இருத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது, பிந்திய விஷயமானது பாவம் இல்லாத தன்மையை மறைமுகமாய் உணர்த்துகிறது. இந்த உபத்திரவம் ஒருக்காலும் இழிநிலையாகப் பேசப்பட்டதில்லை, ஆனால் இது ஒரு துரதிர்ஷ்டவசமாகவே கூறப்பட்டது"* (McGarvey and Pendleton, 291). *[30]சாத்தியமான காரணங்கள் பற்றிய கலந்துரையாடலுக்கு, இப்பாடத்தைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தை காணவும்.*

*[31]சில கையெழுத்துப் பிரதிகளில்* "the prophet" *என்ற சொல் காணப்படுகிறது.* "The Prophet" *என்பது மேசியாவைக் குறிப்பிடுவதாகும் (உபா. 18:15). [32]இந்தச் சிறு கதையானது, வேதபாடப்பகுதியில் ஒரு உவமை என்று அழைக்கப்படுவதில்லை, ஆனால் பொதுவாக இது, ஒரு உவமை என்றே குறிப்பிடப் படுகிறது. [33]உங்கள் மாணவர்கள் யார் என்பதைப் பொறுத்து, அவர்கள் கர்த்தரிடமாய்த் திரும்புவது எப்படி என்று வரைக்குறிப்பிட நீங்கள் விரும்பலாம். அவர்கள் இன்னமும் கிறிஸ்தவர்கள் ஆகாதிருந்தால், அவர்களுக்கு அப். 2:36-38ஐப் பற்றிக் கூறுங்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால், அவர்கள் மனந்திரும்பி, தங்கள் பாவங்களை அறிக்கையிடும்படி அவர்களை ஊக்கப்படுத்துங்கள் (1 யோவா. 1:9; யாக். 5:16; அப். 8:22).*

*29*

# அன்பு, கண்ணீர் மற்றும் மன்னித்தல்

## லூக்கா 7:36-50, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*இயேசு பிறருடன் உண்பதை விரும்பினார். அவர் தமது சீஷர்களுடன் உண்டார் (மாற். 14:14; லூக். 22:15). அவர் தமது நண்பர்களுடன் உண்டார் (லூக். 10:38-42; யோவா. 12:1, 2). அவர் ஆயக்காரர்களுடனும் பாவிகளுடனும் உண்டார் (லூக். 5:29, 30). அவர் பரிசேயர்களுடனும் கூட உண்டார் (லூக். 11:37-54; 14:1-6). நாம் அறிந்த வரையிலும், உணவு உண்பதற்கான எந்த ஒரு அழைப்பையும் கிறிஸ்து ஒருக்காலும் புறக்கணித்ததில்லை.[1]*

*லூக்கா 7:36-50 வசனப் பகுதியானது, இயேசு முதன்முறையாக ஒரு பரிசேயருடன் உண்பதற்கு அழைக்கப்பட்டிருந்தது பற்றிக் கூறுகிறது. நிகழ்ச்சிகளின் திகைப்பூட்டும் திருப்பமானது, அன்பு மற்றும் மன்னித்தல் பற்றி இயேசுவினால் தரப்பட்ட செய்திகளில் மிகவும் நெஞ்சைத் தொடும் ஒரு செய்தி எழும்புவதற்கு வாய்ப்பளித்தது.*

### ஒரு குறிப்பிடத்தக்க வேண்டுகோள் (வ. 36அ)

*இவ்வரலாறானது, "பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்" என்று தொடங்குகிறது (வ. 36அ). சீமோன் என்பது அந்தப் பரிசேயனின் பெயராயிருந்தது (வ. 40, 43, 44). "வேண்டிக்கொண்டான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது மூலமொழியில் அவசரத் தன்மையை ஆலோசனை தெரிவிக்கிறது. அந்த அழைப்பை இயேசு ஏற்றுக்கொள்ளும் வரைக்கும் சீமோன் மீண்டும் மீண்டும் அவரை அழைத்துக்கொண்டே இருந்தார் (வ. 39).*

*தன்னுடன் கிறிஸ்து உணவு உண்ண வேண்டும் என்று சீமோன் பேரார்வம் கொண்டது ஏன்? பல்வேறு கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.*

*ஒருவேளை இந்தப் பரிசேயன் இயேசுவை விரும்பியிருக்கலாம். எல்லா பரிசேயனும் இயேசுவை வெறுக்கவில்லை (யோவா. 7:45-52; லூக். 13:31). விதிப்படி, நாம் மக்களின் நட்புறவை மகிழ்வுடன் அனுபவிப்பதால் அப்படிப்பட்ட மக்களை நமது இல்லங்களுக்கு அழைக்கின்றோம். ஆயினும், தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளைக் காணும்போது, இது சீமோனின்*

*நோக்கமாயிருந்திருக்க மிக அரிதாகவே வாய்ப்புள்ளதாகக் காணப்படுகிறது.*

*இவருடைய நோக்கமானது பிற பரிசேயர்களின் நோக்கத்தைப் போன்றே இருந்திருக்கலாம்: ஒருவேளை இவர் இயேசுவுக்கு ஒரு வலை விரிக்கவோ அல்லது அவரைக் குற்றம் சாட்டக்கூடுவதற்கு சில தவறுகளை அவரிடத்தில் கண்டறியவோ முயற்சி செய்திருக்கலாம். இது சாத்தியமான தாக உள்ளது, ஆனால் சுவிசேஷ எடுத்துரைப்பில், சீமோன் கிறிஸ்துவை அகப்படுத்துவதற்காக வேண்டுமென்றே முயற்சி செய்ததாகச் சுட்டிக் காண்பித்தல்கள் எதுவும் இல்லை.*

*சீமோனின் நோக்கம், மேலே தரப்பட்டவற்றில் முதல் இரு ஆலோசனைகளுக்கும் இடையில் ஏதோ ஒரு இடத்தில் இருந்ததாகக் காணப்படுகிறது. இவர், கர்த்தரைப் பற்றித் தமது சக பரிசேயர்கள் கூறியவற்றை நிச்சயமாகவே கேள்விப்பட்டிருந்தார். அதே வேளையில், இவர் அநேகமாக, கிறிஸ்துவைப் பற்றிய வெகுஜனக் கருத்தையும் அறிந்திருக்கலாம். இந்நிகழ்ச்சி நடப்பதற்குச் சற்று முன்னதாக, இயேசு நாயீன் நகரத்தில் இருந்தார், அங்கு மக்கள் "மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார்" என்று ஆச்சரியப்பட்டிருந்தார்கள் (லூக். 7:16).[2] "உண்மையில் இந்த மனிதர் யார்?" என்பதே சீமோன் தம் சிந்தையில் கொண்டிருந்த கேள்வியாகக் காணப்படுகிறது.*

*இந்த அழைப்பிற்கான பிற காரணங்கள் முன்மொழியப்படுகின்றன,[3] ஆனால் சீமோனின் நோக்கம் எதுவாயிருப்பினும், இயேசு அதைப் பற்றி அறிந்திருப்பார் (யோவா. 2:25). இது இன்னொரு கேள்வியை தூண்டுகிறது: ஐயத்திற்கிடமான இப்படிப்பட்ட அழைப்பை கிறிஸ்து ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? மீண்டும் பல சாத்தியக்கூறுகள் சிந்தைக்கு வருகின்றன.*

*இயேசு தாம் யார் மற்றும் என்னவாக இருந்தார் என்பது பற்றி சீமோன் நிச்சயமற்ற கருத்துக் கொண்டிருந்ததை அவர் [இயேசு] உறுதியாகவே அறிந்திருந்தார். இவ்விதமாக, அவர் சீமோனுக்கு உதவுவதற்காகச் சென்றிருக்கலாம். உணவு வேளையின்போது, மற்றவர்களும் இருப்பார்கள் (லூக். 7:49ஐக் காணவும்); கிறிஸ்து, அவர்களுக்குப் போதிக்கச் சென்றிருக்க லாம். மற்றும், உணவு வேளையின்போது என்ன நடக்கும் என்பதை இயேசு அறிந்திருக்க வாய்ப்புள்ளது,[4] அவர், "விருந்தின் இடையில் புகுந்த" பெண்ணை உற்சாகப்படுத்தும்படிக்கு அங்கு சென்றிருக்கலாம். கடைசி யாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, இயேசு மக்களுடன் - எல்லா விதமான மக்களுடன், அவரை எதிர்த்தவர்களுடனும் கூட உண்பதை, பேசுவதை, ஐக்கியம் கொண்டிருப்பதை மகிழ்வுடன் அனுபவித்தார். அவர் தம் சீஷர் கள் தங்கள் விரோதிகள்மீது அன்புகூர வேண்டும் என்று அவர் போதித் திருந்தார் (மத். 5:44); ஒருவேளை அவர் அப்படிப்பட்ட அன்புக்கு நடைமுறைச் செயல்விளக்கம் கொடுத்திருக்கலாம்.*

*"மேலே கூறப்பட்ட எல்லாவற்றிற்காகவும்" என்பதே இயேசு ஏன் சீமோன் வீட்டிற்குச் சென்றார் என்பதற்குச் சரியான பதிலாக இருக்கலாம். இயேசு அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு ஒரு பரிசேயருடன் உண்ணச் சென்றார் என்பதே முக்கியமான உண்மையாக உள்ளது.*

## *உபசரிப்புத் தன்மையில்லாத ஒரு தனிநபர் (வ. 36ஆ, 44-46)*

*வசனம் 36ன் முடிவுப் பகுதி, "அவர் அந்தப் பரிசேயன் வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்" என்று கூறுகிறது. நாம் இவ்வரலாற்றின் பிற்பகுதியில், இயேசு அவ்வீட்டிற்குள் பிரவேசித்ததற்கும் உணவு மேஜையில் அமர்ந்ததற்கும் இடையில் அதிக சம்பவங்கள் நடந்ததை (அல்லது, நடவாமல் இருந்ததை) அறிகின்றோம்.*

*அந்த நாட்களில், விருந்தினர் ஒருவர் வீட்டிற்குள் வருகையில் குறிப்பிட்ட சில தயவான செயல்கள் அவருக்குச் செய்யப்பட வேண்டும் என்று சமூகப் பழக்கவழக்கங்களும் சூழ்நிலைகளும் கட்டளையிட்டு இருந்தன. முதலாவது, விருந்தளிப்பவர், விருந்தினருக்கு வரவேற்பின் முத்தம் ஒன்று தருவார் (ஆதி. 29:13; 45:15; 2 சாமு. 15:5; 19:39; மத். 26:49; அப். 20:37; ரோமர் 16:16). இது சாதாரணமாகக் கன்னத்தில் தரப்படும் முத்தமாக இருந்தது.*

*பின்பு யாரேனும் ஒருவர், விருந்தினர் தமது பாதங்களைக் கழுவுவதற்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் துடைக்கும் துண்டும் தருவார் (ஆதி. 18:4; நியா. 19:21; யோவா. 13:4, 5; 1 தீமோ. 5:10). அற்பமான இந்தப் பணி பெரும்பாலும் வேலைக்காரர்களால் நிகழ்த்தப்பட்டது. இந்த செயல்பாடு நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தது, ஏனென்றால் மனிதர்கள் அசுத்தமான தெருக்களின் வழியே நடந்து செல்லுகையில் மிதியடிகளை அணிந்தார்கள். இந்தச் சடங்கானது விருந்தினருக்கு வசதியைக் கொடுத்ததோடு, விருந்தளிப்பவரின் இல்லத்தில் இருக்கும் விரிப்புகளையும் மெத்தைகளையும் பாதுகாக்கவும் செய்தது.*

*பொதுவானதாக இல்லாவிடினும் மூன்றாவதான ஒரு தயவுள்ள செயலானது, மதிக்கத்தக்க விருந்தினர்களுக்கு அடிக்கடி அளிக்கப்பட்டது: தலை மற்றும்/அல்லது முகத்திற்கு எண்ணெய் அல்லது தைலம் அளித்தல் (சங். 45:7; 92:10; 104:15; 141:5; பிர. 9:8; ஆமோ. 6:6 ஆகியவற்றைக் காணவும்). விருந்தினர், சுட்டெரிக்கும் சூரியனின் கீழ் பல மணி நேரங்களைச் செலவிட்டு இருந்தால், இரக்கத்தின் இந்த வெளிப்பாடானது வரவேற்பதாகவும் புத்துணர்வூட்டுவதாகவும் இருக்கும்.*

*இயேசு சீமோனின் வீட்டை அடைந்தபோது, இந்த வசதிகளில் எது ஒன்றும் அவருக்கு அளிக்கப்படவில்லை. பிற்பாடு அவர் தமக்கு விருந்தளித்தவரை நோக்கி, "நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை ... நீ என்னை முத்தஞ் செய்யவில்லை ... நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை ... ." என்று கூறினார் (வ. 44-46). மற்ற விருந்தினர்களும் [இதேபோல்] புறக்கணிக்கப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இருப்பதில்லை (வ. 49). வசனம் 44முதல் 46வரை உள்ள பகுதியில் இருக்கிற "என்னை" மற்றும் "என்" என்ற வார்த்தைகள், கிறிஸ்து மாத்திரமே இந்த மும்மடங்கு அவமானத்தைப் பெற்றார் என்பதை மறைமுகமாக எடுத்துரைக்கின்றன.*

*ஒரு கணநேரத்திற்கு, நீங்கள் உங்களை இயேசுவின் இடத்தில் வைத்துப்*

*பாருங்கள். நீங்கள் சீமோன் வீட்டில் உணவு உண்ணும்படி அழைக்கப் பட்டு இருக்கின்றீர்கள். உண்மையில் இவ்வழைப்பானது, இதை உங்கள் வேலை அட்டவணையில் நீங்கள் பொருந்தச் செய்யும்வரைக்கும் மீண்டும் மீண்டும் விடுக்கப்பட்டிருந்தது. ஆயினும், நீங்கள் அவரது வீட்டிற்குச் சென்றபோது, உங்களை விருந்திற்கு அழைத்தவர் உங்களை மரியாதைக் குறைவாக நடத்துகின்றார். அவர் மற்ற விருந்தினர்களை ஆர்வத்தோடு வாழ்த்துகின்றார், தமது கைகளை அவர்களின் தோள்களைச் சுற்றிப் போட்டு அணைத்து அவர்களுக்கு முத்தம் தருகின்றார், அவர்கள் தங்கள் பாதங்களைக் கழுவும் இடம் எங்குள்ளது என்று காண்பிக்கின்றார் மற்றும் அவர்களின் தலையை [எண்ணெயால்] அபிஷேகம் செய்கின்றார். அந்த நேரம் முழுவதிலும் நீங்கள் ஒரு ஓரமாய் நின்று கொண்டிருக்கின்றீர்கள், நீங்கள் உணவு உண்பதற்கான வேளை வரும் வரைக்கும் கவனிக்கப் படாமல் ஒதுக்கப்பட்டு இருக்கின்றீர்கள். எங்கு அமரலாம் என்று ஒருவேளை உங்களுக்குக் கூறப்பட்டிருக்கலாம் - அல்லது அதுவும் உங்களுக்குக் கூறப்படாதிருக்கலாம். ஒருவேளை ஒவ்வொருவரும் இடத்தில் அமரும் வரையில் நீங்கள் காத்திருந்து, மீதியாக விடப்பட்ட இடத்தில் அமர வேண்டியிருந்திருக்கலாம்.*

*நீங்கள் எப்போதாவது, பகையுணர்வு கொண்ட தனிநபர்களால் அல்லது குறைந்தபட்சம் நட்புணர்வற்ற மற்றும் பரிவிரக்கமற்ற மக்களால் சூழப்பட்டு இருந்துள்ளீர்களா? நீங்கள் எப்போதாவது இருந்த இடத்தை விட்டு வேறு எங்காவது இருந்தால் நல்லது என்று உணர்ந்திருக்கின்றீர்களா? நான் நினைவுகூருவதற்கு அக்கறை கொள்வதைக்காட்டிலும் அதிகமான முறைகள் இப்படிப்பட்ட வசதியற்ற அனுபவத்தைப் பெற்றிருந்துள்ளேன்.*[5] *இயேசு சீமோன் வீட்டில் இதேபோன்றே அனுபவத்தைக் கொண்டிருந் தாரா? அவ்வாறு கொண்டிருந்தார் என்றால், அது அவர் அங்கிருந்த நோக்கத்திலிருந்து அவரைச் சிதைத்து விட அவர் அனுமதிக்காதிருந்தார்.*

## *அழுதுகொண்டிருந்த ஒரு பெண் (வ. 36-39, 44-46)*

*இவ்வரலாற்றை நாம் தொடர்ந்து படிக்கும் முன்பு, சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன. இயேசு "பந்தியிருந்தார்" (வ. 36) என்ற கூற்றினால் அர்த்தப்படுவது என்ன? அழைக்கப்படாத ஒரு விருந்தாளி (பாவியாயிருந்த பெண்) அந்த விருந்தினூடே சிறிதளவே சிரமத்துடன் இடைநுழைய முடிந்தது (வ. 37) எவ்வாறு? அவள் அங்கு வந்து சேர்ந்தபோது, இயேசுவின் தலைக்குப் பதில் அவரது பாதத்தை அவள் அபிஷேகித்தது (வ. 38) ஏன்? நாம் காட்சியை அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது.*

*முதலாவது, பந்தி மேஜையைச் சுற்றிலும் இருந்த விருந்தினர்களை உங்கள் சிந்தையில் காணுங்கள். ஒருவர் தமது இடப்புறம் சாய்ந்து, இடது முழங்கையின் ஆதாரத்தில் சாய்மானமாக இருப்பது என்பதுதான் வழக்க மான அமரும் நிலையாக இருந்தது. இது, வலது கையை உணவை எடுத்து உண்பதற்கு அனுமதித்தது. தலையானது உணவை நோக்கியவாறு*

*இருக்கும், பாதங்கள் புறம்பே நீட்டிக் கொண்டு இருக்கும். மற்ற இரு விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்: காலணிகள் கதவருகே விடப் பட்டிருந்தபடியால் பாதங்களில் எதுவும் அணிவிக்கப்படாது இருந்தன, மற்றும் ஆண்கள் தவிர வேறு யாரும் அங்கிருக்கவில்லை. பரிமாறவும், பொழுதுபோகச் செய்யவும் மாத்திரம் விருந்துகளில் பெண்கள் அனுமதிக் கப்பட்டிருந்தார்கள்.[6]*

*அடுத்து, கிழக்கு நாடுகளில் தரப்படும் ஒரு விருந்தின் பொதுவான கிளர்ச்சியைக் கண்ணோக்குங்கள். பேச்சும் சிரிப்பும் அங்கிருந்தது. வேலைக் காரர்கள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள் - அவர்கள் பாத்திரங்களை நிரப்புவதும், ஒரு உணவு வகையை எடுத்துவிட்டுப் பின் அடுத்ததைக் கொண்டு வருவதுமாக இருந்தார்கள். விருந்து நடத்தப்பட்ட அறை அல்லது முற்றத்தின் சுவர் ஓரமாகச் சுற்றிலும், ஆர்வத்துடன் உற்றுநோக்கிய வர்களும் இருந்திருக்கலாம். மேற்கத்திய உலகத்தில்[7] நாம் அறிகின்ற வகையிலான தனிப்பட்டிருத்தல் என்பது அந்தக் காலத்தில் கிழக்கத்திய உலகில் சார்பு நிலையில் அறியப்படாததாக இருந்தது. ஒரு விருந்தின்போது, அதிலும் விசேஷமாக, அங்கு புகழ்பெற்ற நபர் ஒருவர் விருந்திற்கு வந்திருந்தாரென்று அறிய நேர்ந்தால், பார்வையாளர்கள் நடுவில் நுழைந்து வருதல் என்பது அசாதாரணமானதாக இருந்ததில்லை. ஆகையால், சீமோனின் விருந்துக்கூட்டத்தின் மத்தியில், அழைக்கப்படாத பாவியொருத்தி திடீரென்று வந்து சேர்ந்தது என்பது சார்பு நிலையில் சுலபமானதாகவே இருந்திருக்கும்.*

*இந்த உண்மைகளை நமது சிந்தையில் கொண்டு, நாம் வேதபாடப் பகுதியைத் தொடருவோம்: "அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ, அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து" (வ. 37).*

*இந்தப் பெண், "பாவி" என்று அழைக்கப்பட்டாள். எனது* NASB *வேதாகமப் பிரதியில் பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: "அதாவது, ஒழுக்கவீனமான ஒரு பெண்." பிற்பாடு இயேசு அவளிடத்தில், "அநேக" பாவங்கள் இருந்ததாகக் கூறினார் (வ. 47). அவளது பாவங்கள் எவைகளாயிருப்பினும், அவைகள் நன்கு அறியப்பட்டிருந்தன; அவள் ஒரு கெட்ட பெயர் எடுத்திருந்தாள் (வ. 39). வசனம் 37ல் உள்ள "பாவி" என்ற வார்த்தையானது, "வேசி" என்பதற்கு ஒரு அலங்காரச் சொல்லாக இருந்தது என்று பல விளக்கவுரையாளர்கள் முடிவு செய்கின்றார்கள்.[8]*

*கெட்ட பெயர் எடுத்திருந்த பாவியான இந்தப் பெண், இயேசு யார் என்றும் தனது வாழ்வானது அவரால் திருப்பப்பட்டிருந்தது என்றும் அறிந்தாள் என்பது தெளிவு.[9] இவ்விருவரும் இதற்குமுன்பு முகமுகமாகச் சந்திக்காமல் இருந்திருக்கலாம்,[10] ஆனால் இவள், அவர் பேசுவதைக் கேட்பதற்குப் பல வாய்ப்புகளைப் பெற்றிருந்திருக்கக் கூடும்.[11] இவள், பாவிகள் மீதும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் மீதும் அவரது அன்பைக் கண்டிருந்தாள் (மத். 11:5, 19). இவள் அவரது மென்மையான அழைப்பைக் கேட்டிருக்கலாம்:*

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறு தல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத். 11:28-30).*

*இயேசுவைக் காணவேண்டும் என்ற இவளது பலத்த விருப்பமும், எல்லாரும் ஆண்களாகக் கூடியிருந்த அக்கூட்டத்தைப் பிளந்து செல்வதற் கான தைரியமும், அவள் சிந்திய கண்ணீரும் (வ. 37, 38) - இவை யாவும் இந்தப் பெண்ணின் இருதயத்தில் நிறைந்திருந்த வல்லமை நிறைந்த உணர்வுகளுக்கு ஆதாரமாக இருக்கின்றன. இவள் கிறிஸ்துவைப் பற்றி அறியும்முன்பு இவளுக்கிருந்த நம்பிக்கையற்ற தன்மையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்: ஒவ்வொரு புதிய நாளின் பயங்கரம், பிறரிடம் அவளுக்கிருந்த வெறுப்புணர்வு, தன்னைத்தானே அருவருத்தல். பின்பு அவள் இயேசுவின் உரையைக் கேட்டிருந்தாள், மற்றும் சத்தியத்தின் வெளிச்சம் இவளது சிந்தையில் இருந்த இருளைத் துரத்தியிருந்தது. தேவன்மீது நம்பிக்கையின்மை என்பதற்குப் பதில் விசுவாசம் (வ. 50) வந்திருந்தது; லௌகிக துக்கத்திற்கு(2 கொரி. 7:10)ப் பதிலாக தேவனுக் கேற்ற துக்கம் (வ. 38) வந்திருந்தது. இவளது வாழ்வு மாறியிருந்தது! இது முன்பு போன்றதாக இனி ஒருக்காலும் இராது!*

*இவளிடத்தில் ஒரு விஷயம் குறைவுபட்டிருந்தது என்பது உறுதி: இவள் தனது பாராட்டுதலை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு. இயேசு அந்தப் பகுதியில் இருந்தார் என்பதை இவள் அறிந்தபோது, இவள் பரிமளத்தைலம் நிறைந்த பரணி ஒன்றை எடுத்துக்கொண்டு சீமோனின் வீட்டிற்குத் துரிதமாய்ச் சென்றாள் - ஒருவேளை இத்தைலம் ஒரு காலத்தில் இவளது தொழிலில் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டிருக்கும், ஆனால் இப்போதோ இவள் தனது அன்பையும் நன்றியுடைமையையும் வெளிப் படுத்த ஒரு ஊடகமாயிருந்தது.*

*இவள் அந்தப் பரிசேயரின் வீட்டை அடைந்தவுடன், விருந்தின் பரபரப்பிற்கு இடையில், இயேசுவைக் கண்டுபிடிக்கும் வரையில் கூட்டத் தினூடே செல்லுதல் என்பது இவளுக்குக் கடினமாக இருக்கவில்லை. இவள், அவர் இருந்த மேஜையைச் சுற்றி நடந்து சென்றாள். இவள் தனது இரட்சகருக்கு அண்மையில் வந்து நின்றபோது, இவளது உணர்வுகள் பெருக்கெடுத்தோடின மற்றும் இவளது கண்ணீர் மழையெனப் பொழிந்தது.*

*இவளது கண்ணீர்த்துளிகள், பயணத்தால் கறைப்பட்டிருந்த இயேசு வின் பாதங்களில் விழுகையில், அவைகள் அதில் இருந்த தூசியுடன் கலந்திருக்கும். இவள் தனது தலைமுடியை அவிழ்த்து, சேறாயிருந்த பகுதிகளை தனது முடிக்கற்றையினால் துடைக்கத் தொடங்கினாள். முழு வளர்ச்சியடைந்த ஒரு யூதப்பெண், பொது இடத்தில் தனது தலைமுடியை அவிழ்த்துப் போடுதல் என்பது கனவீனமானதாகக் கருதப்பட்டது,[12] ஆனால்*

எந்த விதமான ஏக்கப் பெருமூச்சுகள் தெளிவாய் அங்கிருப்பினும், இவள் இயேசுவின் பாதங்களைத் தொடர்ந்து துடைத்தாள்.

பின்பு இவள் அவரது பாதங்களை முத்தமிடத் தொடங்கினாள். இவள் கர்த்தருடைய பாதங்களை முத்தமிட்டாள் என்று நீங்கள் வாசிக்கும்போது, பகட்டான ஒரு இளவரசரின் மென்மையான, ஒப்பனை செய்யப்பட்ட பாதங்களைப் பற்றி நினைக்காதீர்கள். எல்லா இடங்களுக்கும் கால்களினால் நடந்தே பயணித்து வந்த, ஓய்வற்ற இந்தப் போதகரின் முரடான, காய்ப்பேறிய, விரிவுகண்ட பாதங்களை நினைத்துப் பாருங்கள் - அதிலும் இந்த வேளையில், அவைகள் கலிலேயப் பாதைகளின் தூசி மற்றும் குப்பைகளினால் இன்னும் அடையாய் அழுக்கேறியிருந்தன. வசனம் 45ன்படி, இவள் அந்த அழுக்கான பாதங்களை மீண்டும் மீண்டும் முத்த மிட்டாள். கடைசியாக, இவள் தனது பரணியை எடுத்து, அதைத் திறந்து,[13] அதிலிருந்த பரிமளத் தைலத்தை அவரது பாதங்களில் ஊற்றத் தொடங்கினாள்.

இந்தச் செயலானது சீமோனின் விருந்தின்மீது கொண்டிருந்த செயல்விளைவைக் கற்பனை செய்தல் என்பது கடினமானதாக இருப்ப தில்லை. பரிசேயர்கள் பொது இடங்களில் பெண்களிடம் ஏதொன்றும் பேசுவதும் இல்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த சமுதாயத்தில் இந்தப் பெண்ணுக்கிருந்த பாவம் நிறைந்த அவகீர்த்தியை நினைவில் வையுங்கள். இத்துடன் இந்த பெண், அழுது, துடைத்து, ஊற்றியதில் - மற்றும் இவள் தனது கூந்தலை தளரவிட்ட தன்மானமற்ற செயலைக் குறிப்பிடவும் தேவையில்லை - இவளது சட்டத்திற்குப் புறம்பான நடக்கையைக் கூட்டிக்கொள்ளுங்கள். உரையாடல்கள் உலர்ந்து போயின, ஒவ்வொரு கண்ணும் இந்தப் பெண்மீதும் இயேசுவின் மீதும் பதிந்தன என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தச் சூழ்நிலையின் விவரங்கள் கிறிஸ்துவை எவ்வகையில் பாதித்தன? அவர் இந்தப் பெண் தமது பாதங்களில் கண்ணீரைச் சிந்து வதற்கு முன்பு இவளைக் கண்டிருந்தாரா? நன்றியுடைமைக்கு இவள் காட்டிய மட்டுமீறிய மற்றும் பழமைவாதமற்ற வெளிப்படுத்துதல்களுக்கு இவரது பதில்செயல் என்னவாக இருந்தது?

கிறிஸ்துவின் தொடக்கப் பதில்செயல் குறித்து நாம் உறுதியாய் எதுவும் கூறமுடியாது, ஆனால் சீமோன்மீது விளைவிக்கப்பட்ட பாதிப்பைப் பற்றி நமக்குக் கூறப்படுகிறது. அந்தப் பரிசேயன் அநேகமாக, தன் வீட்டில், ஏற்புடையதல்ல என்று தான் கருதிய காட்சியொன்றினால் சங்கடம் அடைந்து இருக்கலாம் - ஆனால் அவர் குறிப்பான ஒரு திருப்தியினாலும் நிரப்பப்பட்டார். இயேசு எவ்வகைப்பட்ட நபராயிருந்தார் என்பது பற்றி அவர் [பரிசேயன்] கேள்விகள் எதுவும் கொண்டிருந்தால், அந்தக் கேள்விகள் பதில் அளிக்கப்பட்டு விட்டன. "அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, 'இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்" (வ. 39).

சீமோனைப் பொறுத்தவரையில், உண்மைகள் சாத்தியமான இரண்டு

*முடிவுகளை மட்டுமே அனுமதித்தன: ஒன்று, அந்தப் பெண் எப்படிப் பட்டவள் என்பதை இயேசு அறியாதிருந்தார், எனவே அவர் ஒரு தீர்க்கதரிசியல்ல,[14] அல்லது இவள் யார் என்பதை அறிந்திருந்தும் அவர் [இயேசு] அக்கறையற்று இருந்தார். பிந்திய விஷயம் உண்மையாக இருக்கும் என்றால், அவர் [இயேசு] ஒரு நல்ல மனிதராக இருக்கமாட்டார்.[15] இவள் யார் என்பதையும் இவள் என்னவாக இருந்தாள் என்பதையும் இயேசு அறிந்திருந்தார் என்பதை சீமோன் உணர்ந்தறியவில்லை. அவர் [இயேசு], சீமோன் யார் மற்றும் என்னவாக இருந்தார் என்பதையும் அறிந்திருந்தார் - அவரை அங்கிருந்த அனைவருக்கும் வெளிப்படுத்தவிருந்தார்.*

## *ஒரு எளிய கதை (வ. 40-50)*

*தமக்கு விருந்தளிப்பவரின் சிந்தனைகளை அறிந்த "இயேசு அவனை நோக்கி: 'சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்' என்றார்" (வ. 40அ). அந்தப் பரிசேயனைப் பொறுத்தமட்டில், நாடகம் முடிந்து விட்டது, புதிர் விடையளிக்கப்பட்டு விட்டது. அவர், "போதகரே,[16] சொல்லும்" என்றபோது (வ. 40ஆ), அவரது குரலில் இருந்த வஞ்சப் புகழ்ச்சியை நீங்கள் ஏறக்குறைய கேட்க முடியும்.*

*பின்பு இயேசு ஒரு எளிய கதையைக் கூறினார், இது இரண்டே இரண்டு வாக்கியங்கள் கொண்ட ஒரு நிகழ்வுக் கதையாக இருந்தது. இது மூன்று பாத்திரங்களுடன், குறைந்தபட்சக் கதைக்கருவைக் கொண்டுள்ளது: "ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும்,* (denarii[17]) *மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான்" (வ. 41, 42அ). ஒரு வெள்ளிக்காசு* (denarius) *என்பது சாதாரண உழைப்பாளியின் ஒரு நாள் கூலியாக இருந்தது (மத். 20:2ஐக் காணவும்). இவ்விதமாக, கடன்பட்டிருந் தவர்களில் ஒருவர் ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கான கூலிக்குச் சமமான பணத்தைக் கடனாக அடைக்க வேண்டியிருந்தது, இன்னொரு வரோ தாம் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் சம்பாதிக்கக் கூடிய கூலிக்குச் சமமான பணம் கடன்பட்டிருந்தார்![18]*

*நீங்கள் "ஒருவனிடத்தில்" [ஆங்கிலத்தில் இங்கு* "Money lender" *என்றுள்ளது] என்று வாசிக்கும்போது உங்கள் அண்மையில் உள்ள வங்கியாளரை (இவர் ஏறக்குறைய நட்புறவாகவே இருப்பார் என்று நான் நம்புகின்றேன்) நினைக்காதீர்கள். மாறாக, பணத்தை வாரி எடுக்கிற, இருதய கடினமுள்ள, கல்லான முகங்கொண்ட குணங்கள் உடைய ஒரு நபரைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: இவர் ஏழைகளை இரையாகப் பிடிக்கிற நபராக, ஏராளமான வட்டியை வசூலிக்கிறவராக, மற்றும் காலாகாலத்தில் பணத்தைத் திருப்பித்தராதவர்கள்மீது இரக்கமற்றவராக இருக்கின்றவர்.*

*கதையைத் தொடர்ந்து கிறிஸ்து, "இப்படியிருக்க, அவர்களில் [கடன்பட்ட இருவரில்] எவன் அவனிடத்தில் [கடன் கொடுத்தவனிடத்தில்] அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்" என்று கேட்டார் (வ. 42ஆ).[19]*

*அன்றும் இன்றும் கடன் கொடுப்பவர்கள் பெரும்பாலும் சீற்றமான ஒலியுடன், ''எனக்கு அன்பு ஒன்றும் தேவையில்லை. எனக்குத் தேவையானது பணம்'' என்றே கூறுவார்கள்.*

*ஒரு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை என்பது எப்போதுமே கவலைக்குரிய ஒரு விஷயமாகவே இருந்துள்ளது.*[20] *மத்தேயு 18:23-35 வசனப்பகுதியானது, தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத மனிதர்கள் சிறையில் அடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது. ஆகையால் இயேசுவின் எளிய கதையானது, அந்தக் கடன் கொடுத்தவர் அவ்விருவரின் கடன்களையும் மன்னித்துவிட்டார் என்று கூறியபோது எதிர்பாராத திருப்பத்தை அடைந்தது. கடன்காரர்கள், கடன் வாங்கியவர்களின் கால்களை முறித்தல் அல்லது விலா எலும்புகளை உடைத்தல் ஆகியவற்றினால் அறியப்பட்டுள்ளார்கள், ஆனால் அவர்கள் ''என்னிடம் நீ வாங்கிய கடனைப் பற்றிக் கவலைப்படாதே. அதை மறந்துவிடு!'' என்று கூறுவது மிகவும் அரிது. ஆயினும், கிறிஸ்துவின் உவமையில் வந்த கடன்கொடுப்பவர் அதையே செய்தார்.*[21]

*பின்பு இயேசு சீமோனிடம் திரும்பி, "இப்படியிருக்க, அவர்களில் [மன்னிக்கப்பட்ட இரண்டு கடனாளிகளில்] எவன் அவனிடத்தில் [மன்னித்துவிட்ட கடன் கொடுத்தவனிடத்தில்] அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்" என்று கேட்டார் (வ. 42ஆ). அந்தப் பரிசேயனுக்கு அநேக மாக சலிப்பு ஏற்பட்டு இருக்கும். அவரது சிந்தையில், இந்தக் கதையானது சந்தேகத்திற்கு இடமின்றி மதியற்றதாகவும், இந்தக் கேள்வியானது நகைக்கத்தக்க வகையில் எளியதாகவும் இருந்தது. அவர் [பரிசேயன்], "எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப் பான் என்று நினைக்கின்றேன்" (வ. 43அ) என்று பதில் அளிக்கையில், அவரது குரலில் இருந்திருக்கும் அருள்புரியும் தன்மையை நீங்கள் ஏறக்குறைய கேட்க முடியும்.*

*அவரிடத்தில் இயேசு, "சரியாய் நிதானித்தாய்" என்று கூறினார் (வ. 43ஆ). "நிதானித்தாய்" என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். சீமோன் வெறும் பதிலைமட்டும் தந்திருக்கவில்லை; அவர் ஒரு தீர்ப்பை அறிவித் திருந்தார் - அது தம்மீதான ஒரு தீர்ப்பாகவே இருந்தது. அவரது சொந்த வார்த்தைகளே அவரைக் குற்றம் உணர்த்தும்.*

*இந்தப் பெண்ணிடத்தில் திரும்பிய கிறிஸ்து அப்பரிசேயனிடத்தில், "இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே" என்று கூறினார் (வ. 44அ). சீமோன், "என்ன ஒரு மதியீனமான கேள்வி! என்னால் இவளைப் பார்க்காமல் இருக்க முடிவது எப்படி? இவள் எனது உணவு விருந்தளிப்பை அழித்திருக்கின்றாள்! இயேசுவின் பதில்செயல் என்ன என்பதை அறிய நான் விரும்பாதிருந்தால், இவளை உடனே வெளியே துரத்தியிருப்பேனே. நிச்சயமாகவே நான் இவளைப் பார்க்கின்றேன்!" என்று நினைப்பதை நான் கற்பனை செய்ய முடிகிறது. இருப்பினும், அந்தப் பரிசேயன் இவளை உண்மையில் பார்த்திருந்தது இல்லை, அவ்வாறு பார்த்திருந்தாரா? இவள் (கடந்த காலத்தில்) எவ்வாறு இருந்திருந்தாள் என்பதில் அவரது கண்கள் நிறைந்திருந்தபடியால், [இப்பொழுது] இவள் எவ்வாறு இருந்தாள்*

*என்பதை அவரால் காண முடியவில்லை. டென்னீஸன் என்ற கவிஞர் பின்வரும் கவலைமிகுந்த வார்த்தைகளை எழுதினார்: "ஒரு மனிதன் மனந்திரும்புவதை உலகம் நம்புவதில்லை."[22]*

*இந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே, சீமோனிடத்தில் பேசிய இயேசு பின்வருமாறு தொடர்ந்து கூறினார்:*

> *நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள் (வ. 44ஆ-46).*

*இயேசு சொன்ன கதையைப் பின்பு அவர் நடைமுறைப்படுத்தினார்: "ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்; இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்" (வ. 47).*

*வசனங்கள் 41, 42ல் உள்ள உவமைக்கு நாம் பின்திரும்புவோம். பர்ட்டன் காஃப்மேன்[23] என்பவர் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை கருத்தாகத் தெரிவித்தார்:*

> *கடன் கொடுத்தவர் = நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து*
> *500 வெள்ளிக் காசு கடன்பட்டவர் = பாவம் நிறைந்த பெண்*
> *50 வெள்ளிக் காசு கடன்பட்டவர் = பரிசேயன்*
> *இருவரும் திருப்பிச் செலுத்த முடியாமை = அழிவுள்ள எந்த ஒரு மனிதரும் தமது பாவங்களில் மிகவும் அற்பமானவைகளுக்குக் கூடப் பரிகாரம் செலுத்த முடியாமை.*
> *இருவரையும் அவர் இலவசமாய் மன்னித்து விட்டது = எல்லாருக்கும் மன்னிப்பிற்கான வழிவகையை அளிப்பதில், தகுதியற்றவர்களுக்குத் தேவன் தரும் தயவு.*

*ஒரு உவமையின் ஒவ்வொரு விவரத்திற்குமான தனிச்சிறப்பான கருத்தைக் கண்டறிவதில் ஒருவர் மிகுந்த முன்னெச்சரிக்கையைப் பயன்படுத்த வேண்டும். (உதாரணமாக, இந்த நிகழ்ச்சியில், கர்த்தர் ஒரு வெறுப்பூட்டும் காசுக்கடைக்காரரின் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை.[24]) இருந்தபோதிலும், இங்கு கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட இணைவுகள் ஆர்வத்திற்குரியவைகளாக உள்ளன.*

*காஃப்மேனின் நடைமுறைப் பயன்பாடு மிகச் சரியானதென்றால், கடன்களில் இருந்த வித்தியாசம் என்று குறிப்பிடப்படுகின்ற 450 வெள்ளிப் பணம் என்பது சீமோனின் மதிப்பீட்டில் இருந்திருக்க வேண்டும். அந்தப் பரிசேயன் நிச்சயமாகத் தம்மை, அந்தப் பாவம் நிறைந்த பெண்ணைக் காட்டிலும் பத்து மடங்கு மேன்மையானவராக - அவ்வாறில்லையென்றால்*

*நூறுமடங்கு அல்லது ஆயிரம் மடங்கு மேன்மையானவராகக் கருதியிருப் பார். உண்மையிலேயே அவர் மேன்மையானவராக இருந்தாரா? இந்தப் பெண் மாம்சத்தின் பாவங்களினால் குற்றப்பட்டிருந்தாள், அவரோ ஆவியின் பாவங்களினால் குற்றப்பட்டிருந்தார். இவள் [செய்யக் கூடாதவற்றைச்] செய்த பாவத்தினால் குற்றப்பட்டிருந்தாள், அவரோ [செய்ய வேண்டியவற்றைச்] செய்யாமல் இருந்த பாவத்தினால் குற்றப் பட்டிருந்தார். இவள் அநேகமாக ஒரே ஒரு பாவத்திற்காகக் குறிப்பிடப் பட்டவளாயிருந்தாள், பரிசேயனோ தமது பாவங்களைப் பெருக்கியிருந் தார்: அவர் மேட்டிமையினால், சுயத்தை மையங் கொண்டிருத்தலினால், சுயநீதியினால், தப்பெண்ணத்தினால், ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையி னால் மற்றும் மாய்மாலத்தினால் குற்றப்பட்டிருந்தார்.*

*இந்த உவமையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டவட்டமான தொகைகள் முக்கியமற்றவைகளாக உள்ளன. கடன்பட்டவர்கள் இருவருமே "திருப்பிச் செலுத்த இயலாதவர்களாக" இருந்தார்கள் என்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது (வ. 42). நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம் (ரோமர் 3:23), நம்மில் எவரும் தமது பாவக் கடனை அடைக்கப்போதுமான அளவு நற்செயல்கள் செய்ய முடியாது (ரோமர் 6:23அ). நாம் ஒவ்வொரு வரும் நமக்கு இவ்வளவு அதிகமாகக் கொடுத்துள்ள ஒருவர் முன்னிலையில் வெறுங்கையர்களாக நிற்கின்றோம்.*

*நாம் கொண்டுள்ள நம்பிக்கை என்ன? கர்த்தருடைய கிருபைத் தன்மையிலேயே நமது நம்பிக்கை உள்ளது. விதிப்படியாக, கடன் கொடுக்கின்றவர்கள் இரக்கம் நிறைந்தவர்களாக இருப்பதில்லை - ஆனால் தேவன் இரக்கம் நிறைந்தவராக இருக்கின்றார். பவுல் கூறியபடி, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும்" உண்டாவதாக (1 தீமோ. 1:2; 2 தீமோ. 1:2).*

*"இந்த உவமையானது ஒரு நபரின் வாழ்வில் உள்ள பாவத்தின் அளவைக் குறித்துச் செயல்படுவதாக இராமல், பாவம் உண்டென்று அவர் தம் இருதயத்தில் அறிதல் குறித்துச் செயல்படுவதாக உள்ளது."*[25] *இந்தப் பெண், தனது பாவத்தின் ஏராளமான தன்மை பற்றி ஆழமாய் அறிந்திருந் தாள். இது அவளது கண்ணீரினால் மெய்ப்பிக்கப்பட்டது. கிறிஸ்துவின் மீதான இவளது அன்பு பெருக்கெடுத்தோடிற்று. இதற்கு நேர்மாறாக, சீமோன் தனது சொந்தப் பாவங்கள் பற்றி அறியாதவராக, குற்ற உணர்வடையாதவராக, அன்பை வெளிப்படுத்த வேண்டிய கடமை உணர்வற்றவராக இருந்தார். "பாவமில்லை என்ற உணர்வுடன் இருத்தலே மாபெரும் பாவமாக உள்ளது" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.*[26]

*இயேசுவின் குற்றச்சாட்டிற்கு, அவரை விருந்துக்கு அழைத்தவர் எவ்விதம் பதில் அளித்தார்? ஒருவேளை, அந்தப் பரிசேயர் பேச்சற்றுப் போயிருப்பார். குறைந்தபட்சம் பதில்செயல் எதைப் பற்றியும் பதிவு ஒன்றும் இல்லை.*

*பின்பு கிறிஸ்து முதன்முறையாக இந்தப் பெண்ணிடத்தில் நேரடியாகப் பேசினார்: "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" (வ. 48). அவர், "உன்*

பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன" என்று கூறவில்லை, ஆனால் "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்றே கூறினார். ஏற்கனவே கருத்துத் தெரிவிக்கப்பட்டபடி, இவளது பாவங்கள் கடந்தகாலத்தில் மன்னிக்கப் பட்டிருந்தன, ஆனால் அந்த மன்னிப்பை இயேசு மீண்டும் இவளுக்கு உறுதிப்படுத்தினார். எருசலேம் வேதாகமம் என்ற புத்தகமானது, இயேசு "... இவளது பாவங்கள், இவளது பல பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப் பட்டுள்ளன, இல்லையென்றால் இவள் இவ்வளவு மாபெரும் அன்பைக் காண்பித்திருக்க மாட்டாள்" என்று கூறியதாக மேற்கோள் காண்பிக்கிறது (வ. 47).

அன்பு என்பது நாம் மன்னிப்பை அடைவதில் முக்கியமான பாகமாக உள்ளது (யோவா. 14:15; 1 யோவா. 5:3), ஆனால் மன்னிக்கப்படுதலை மதித்தல் என்பது அன்பை உண்டாக்கும் என்பதே இவ்வரலாற்றின் வலியுறுத்தமாக உள்ளது: அதிகமாய் மன்னிக்கப்பட்டுள்ளதை அறிகின்றவர் அதிகமாய் அன்புகூருகின்றார், "எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப் படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்" (லூக். 7:47ஆ).

இந்தப் பெண்ணின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று இவளுக்கு இயேசு கூறியபோது, மற்ற விருந்தினர்கள் கலவரம் அடைந்தார்கள், அவர்கள், "பாவங்களை மன்னிக்கிற இவன் யார்?" என்று தங்களுக்குள் முறுமுறுத்தார்கள்[27] (வ. 49ஆ). பாவங்களை மன்னித்தல் என்பது தேவனுடைய சிறப்புரிமை என்ற எண்ணம் அவர்களின் சிந்தையில் இருந்தது.[28]

மற்றவர்களைக் கண்டும் காணாதவராக, இயேசு இந்தப் பெண்ணிடத்தில், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறினார் (வ. 50அ). இயேசுவைக் கண்டது மற்றும் அவரது உரையைக் கேட்டது ஆகியவற்றினால் இவளுக்கு விசுவாசம் வந்திருக்கலாம் (ரோமர் 10:17). இப்போது அந்த விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவள், கலாத்தியர் 5:6ன் கொள்கையைச் செயல்விளக்கப்படுத்தி இருந்தாள்: "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்."

பின்பு இவளிடத்தில் இயேசு, "சமாதானத்துடனே போ" என்றார் (லூக். 7:50ஆ). நேரடிப் பொருளில் அவர், "சமாதானத்தில் போ" என்று கூறினார்.[29] இவளது கடந்த கால வாழ்வில் இருதயத்திலும் சிந்தையிலும் சமாதானம் இல்லாதிருந்தது, ஆனால் இப்போது இவள் புதியதான தொடக்கம் பெற்றவளாய் இருந்தாள் (2 கொரி. 5:17; ரோமர் 5:1).

இந்தப் பெண்ணின் பாவங்களின்மீது கிறிஸ்து விரிவுரையாற்றிக் கொண்டு இருக்கவில்லை என்பதை தெளிவாக்க என்னை அனுமதியுங்கள். அவர் அவற்றை "அநேகம்" என்று அழைத்தார் (லூக். 7:47). இவளது பாவங்களை அற்பமாகத் தள்ளுவதற்குப் பதிலாக, இவளுக்கு அவர் பாவத்தை விட்டு வெளியேறத் தூண்டுதலை அளித்தார். பிற்பாடு ஒரு வேளையில் இயேசு, பாவம் நிறைந்த இன்னொரு பெண்ணை எதிர் கொண்டபோது, அவளுக்குப் பிரியாவிடை கூறுகையில், "இனிப் பாவஞ் செய்யாதே" என்று உரைத்தார் (யோவா. 8:11ஆ). இவ்வேளையில், அதே புத்திமதி மறைவாக உணர்த்தப்பட்டது.

## *அன்பின் மீதான பாடங்கள்*

*இயேசுவின் கடிந்துகொள்ளுதல் சீமோன்மீது செயல்விளைவு எதையாகிலும் ஏற்படுத்தியதா? இந்தப் பெண் அந்தக் கணத்திலிருந்து தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழ்ந்தாளா? நாம் அவ்வாறே நம்புகின்றோம், ஆனால் வேதபாடப் பகுதி இதைப் பற்றி எதுவும் கூறுவதில்லை. வேதாகமம் நமது ஆர்வத்தைத் திருப்திப்படுத்துவதற்காக எழுதப்படவில்லை; இதன் தொடக்க காலப் பங்கேற்பாளர்களை கண்டனம் பண்ணுவதற்கோ அல்லது பாராட்டுவதற்கோ இவ்வரலாறு எழுதப்படவும் இல்லை. மாறாக இது நாம் ஒவ்வொருவரும் நமது இருதயங்களையும் வாழ்வையும் சோதித்தறிவதற்காவே எழுதப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் பின்வரும் கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்.*

*(1) எனது பாவத்தின் ஏராளமான தன்மை பற்றி நான் அறிந்திருக்கின்றேனா? சீமோன் மரியாதையுடைமையுடன் கடன் சுமை ஏறப்பெற்றிருந்தார். என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்: மரியாதையுடைமை என்பது விரும்பப்பட வேண்டியதாகவே உள்ளது, ஆனால் அது நீதிக்குப் பதில் வைக்கப்படுவதற்கு அற்பமானதாக உள்ளது. தனது பாவத்தை ஒப்புக்கொள்ள மனவிருப்பமுள்ள தேவபக்தியற்ற தனிநபருடைய இருதயத்தை அடைவதை விட மதிப்பிற்குரிய பாவியொருவரின் இருதயத்தை அடைதல் என்பது எல்லையில்லா வகையில் கடினமானதாக உள்ளது. நாம் ஒவ்வொருவரும் "என் கடன் மகாப் பெரிதாக உள்ளது, ஓ ஆண்டவரே!" என்று கூறக்கடவோம்.*

*(2) எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருத்தல் என்ற அற்புதமான நிலை பற்றி நான் அறிந்து இருக்கின்றேனா? இந்த வார வேதபாட வாசிப்பில், இயேசு அற்புத செய்கைகள் பலவற்றைச் செய்தார். அவர் ராஜாவின் மனிதனுடைய வேலைக்காரனைக் குணமாக்கியிருந்தார்; அவர் மரித்தவரை உயிரோடே எழுப்பியிருந்தார்; அவர் பல அற்புதங்களை நிகழ்த்தியிருந்தார் - ஆனால் அவர் ஒரு ஏழைப் பெண்ணுக்கு மன்னிக்கப் படுதலின் சமாதானத்தைக் கண்டறிய உதவினார் என்பதே மிகவும் அற்புதம் நிறைந்த விஷயமாக இருந்தது.*

*கடன்பட்டவர்கள் இருவரின் உவமையானது உண்மை நிலையுடன் பூரணமாகப் பொருந்துவது இல்லை என்று நான் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தேன். இங்கு இன்னொரு உதாரணம் உள்ளது: கடன் கொடுப்பவர் ஒருவர், "இந்தக் கடன் மன்னிக்கப்பட்டது" என்று மட்டும் கூறி, இழப்பை மேற்கொள்ள முடியும். தேவனால் அதைச் செய்ய இயலாது. மாறாக நமது பாவக்கடன் தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தது - அது அவரது குமாரனின் சிலுவை மரணத்தினால் தீர்க்கப்பட வேண்டியதாயிருந்தது (யோவா. 3:16; 2 கொரி. 5:21; கொலோ. 2:14)! நாம் ஒவ்வொருவரும், ''தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!" என்று கூறக்கடவோம் (2 கொரி. 9:15).*

*(3) அதிகமாய் மன்னிக்கப்பட்டுள்ள நிலையில் நான் அதிகமாய் அன்புகூருகின்றேனா? சிலுவையின் வரலாறு சாதாரணமான இடம் பெற்றது என்றால், நமது இருதயங்கள் ஒருக்காலும் பற்றி எரியும் வைராக்கியத்தால்*

நிறையாது. இயேசு நம்மை அன்புகூர்ந்தார் என்பதையும் (ரோமர் 8:37), அவர் தொடர்ந்து நம்மீது அன்புகூருகின்றார் என்பதையும் நாம் புரிந்துகொள்வோமாக (வெளி. 1:5). அவர் மீதான நமது பிரியமானது நாளுக்கு நாள் புதிதாகட்டும். நாம் ஒவ்வொருவரும், "எனது குளிர்ந்த, மிகக் குளிர்ந்த இருதயத்தை அனல்மூட்டும் ஆண்டவரே!" என்று கூறக் கடவோம்.

(4) *எனது அன்பு விளக்கச் செயலைக் கண்டுள்ளதா?* மதித்தல் பற்றிய இந்தப் பெண்ணின் நயப்பாங்கற்ற சைகைகள், சீமோனின் இல்லத்தில் கூடியிருந்த பலருக்குப் புதிராகவும் சங்கடமூட்டுவதாகவும் இருந்திருக்கும். அவளுக்குத் தெளிவான சித்தம் இருந்ததா என்று பலர் வியந்திருக்கலாம். ஆயினும் உண்மையான அன்பு என்பது விலையைப் பற்றி எண்ணுவதில்லை. அது மட்டுமீறிய செய்கையில் விளக்கச் செயலைக் கண்டறிகிறது. நாம் ஒவ்வொருவரும், "எனது அன்பை நான் காண்பிக்க உதவும் ஆண்டவரே!" என்று கூறக்கடவோம்.

## முடிவுரை

இந்தப் பிரசங்கத்தின் தொடக்கத்தில், நாம் அறிந்துள்ள வரையில் இயேசு, விருந்திற்கான எந்த ஒரு அழைப்பையும் புறக்கணித்திருந்தது இல்லை என்று நான் குறிப்பிட்டிருந்தேன். இது எனக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் உள்ள கிறிஸ்துவின் அற்புதமான அழைப்பை நினைவூட்டுகிறது: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்." இயேசு உங்களுடன் உணவருந்த விரும்புகின்றார், ஆனால் முதலில் நீங்கள் அவரை உங்கள் வாழ்விற்குள் அழைக்க வேண்டும்.[30]

நீங்கள் இயேசுவுக்கு அந்த அழைப்பை ஒருக்காலும் விடுக்காதிருந்தால், உங்கள் விசுவாசம் அன்பினால் கிரியை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது (கலா. 5:6ஐக் காணவும்). அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிவதின் மூலம் உங்கள் விசுவாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்துங்கள் (யோவா. 14:15; மத். 7:21). உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புங்கள் (லூக். 13:3); தேவன் "நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தையே" விரும்புகின்றார் (சங். 51:17). கர்த்தர்மீது நீங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு உங்கள் பாவமன்னிப்புக்காக (தண்ணீர் முழுக்கினால்) ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (அப். 2:38; 8:37).

உண்மையற்ற கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு மூடியிருந்தால், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலமாக நீங்கள் அவரை உங்கள் வாழ்வினுள் திரும்ப அழைக்க முடியும் (1 யோவா. 1:9; அப். 8:22; யாக். 5:16). "ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு" (வெளி. 3:19ஆ).

இயேசு உங்களுக்காகச் செய்துள்ளவை குறித்து நீங்கள் உங்கள் பாராட்டை ஒருக்காலும் வெளிப்படுத்தாதிருந்தால், அதைச் செய்வதற்கு இதுவே ஏற்ற வேளையாக உள்ளது! (2 கொரி. 6:2ஐக் காணவும்.)

*குறிப்புகள்*

*[1]நான் இதைப் பிரசங்கித்தபோது, பின்வரும் நகைச்சுவைத் துணுக்கொன்றைச் சேர்த்துக் கொண்டேன்: "இந்த விஷயத்தில் என் மனைவி இயேசுவைப் போன்று இருக்கின்றார்கள்!" [2]சீமோன், "தீர்க்கதரிசி" என்ற வார்த்தையைப் பயன்படுத்திய விஷயமானது (லூக். 7:39) அவர் நாயீன் நகரத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டதைக் கேள்விப்பட்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம். [3]சீமோன், "முக்கியத்துவம் வாய்ந்தவர்களைச் சேகரிப்பவராக" இருந்தார் என்று பார்க்ளே என்பவர் கருத்துத் தெரிவித்தார்* (William Barclay, *The Gospel of Luke*, rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 94). *[4]இயேசு மாம்சத்தில் வந்தபோது, தமது தெய்வீக பண்புகள் சிலவற்றை விட்டிருந்தார் (பிலி. 2:6, 7; மாற். 13:32ஐக் காணவும்). ஆயினும் அவரால் இன்னமும் மனங்களைப் படிக்க முடிந்தது (யோவா. 2:25), மற்றும் அவர் பிறரைப் பற்றி இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவு சிலவற்றைக் கொண்டிருந்தார் (யோவா. 1:48; 4:17, 18). ஒரு அளவிற்கு, அவர் எதிர்காலத்தை முன்னதாகவே கண்ணோக்க முடிந்தது (யோவா. 6:71; மாற். 8:31). விருந்தின்போது அந்தப் பெண் இருப்பாள் என்பதை முன்னதாகவே அவர் கண்டிருக்கலாம். [5]நீங்கள் இதேபோன்ற அனுபவம் கொண்டிருந்தால், அவை எவரொருவருக் கும் சங்கடம் ஏற்படுத்தாத வகையில் இருக்குமென்றால், ஒரு சில விவரங்களைத் தருவதற்கு நீங்கள் விரும்பலாம். [6]பொழுதுபோக்குவித்தல் பற்றி மத்தேயு 14:6ஐக் காணவும். [7]அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கூட, எங்களில் பலர், கிடைக்கின்ற காற்றைப் பற்றிக்கொள்ள முயற்சிப்பதற்காக, கோடைக்காலங்களில் வீட்டின் (திரைகளற்ற) கதவுகளும், ஜன்னல்களும் விரியத் திறந்து வைக்கப்பட்டிருந்ததை நினைவுபடுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்குப் போதிய வயது வந்தவர்களாக இருக்கின்றோம். அப்பொழுது வீடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் (அந்நியர்களும் கூட) அலைந்து திரிதல் என்பது மிகவும் சாதாரணமானதாக இருந்தது. [8]நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம், ஆனால் இந்தப் பெண்ணின் பாவமானது நம்மில் பெரும்பான்மையானோரைச் சீரழிக்கின்ற சாதாரண வகையானதாக இருந்ததாகக் காணப்படுவதில்லை. இவளது பாவங்கள் இவளை அவப் பெயர் கொண்டிருக்கச் செய்திருந்தன. [9]கடன்பட்ட இருவர் பற்றிய இயேசுவின் உவமையானது, அதிகமாய் மன்னிக்கப்பட்டவர் அதிகமாய் அன்புகூருகின்றார் என்று போதிக்கிறது (லூக். 7:47). இந்தப் பெண் அந்த அறைவீட்டில் நுழைந்ததில் இருந்து இயேசுவின்மீது தனது அன்பை அதிகமாய் வெளிப்படுத்தியபடியால், இவள் அந்த அறைக்குள் வருவதற்கு முன்பே மன்னிக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும். [10]இது லூக்கா 7:48, 50ஐ வாசிக்கும்போது நான் பெற்ற மனப்பதிவாக உள்ளது.*

*[11]இவளது மதிப்புமிக்க வாய்ப்பு என்பது, லூக்கா 7:37ல் தரப்படாத ஒரு விவரமான "அந்த ஊர்" இருந்த இடத்தைச் சார்ந்ததாக இருந்திருக்கும். இவள் இயேசுவைக் கண்டோ அல்லது அவர் பேசுவதைக் கேட்டோ இருக்கலாம் என்பது பற்றி இவ்விடத்தில் தரப்படுகிற விவரிப்புகள் இந்த வாரத்திற்கான வேதபாட வாசிப்புப் பயிற்சியில் இருந்து வருகிறவைகளாக உள்ளன. [12]யூதப் பெண்ணானவள் தனது திருமணத்தின்போது தனது கூந்தலை அள்ளிக் கட்டி முடிவாள், பின்பு ஒருக்காலும் அவள் வெளியரங்கமாகத் தனது கூந்தலை அவிழ்த்துத் தாழ்த்திய நிலையில் காணப்பட மாட்டாள். [13]இவ்வகைப்பட்ட பரணியொன்றை அதன் கழுத்துப் பகுதியில் உடைத்தல் என்பது அதைத் திறப்பதற்கான சாதாரணமான வழிமுறையாக இருந்தது. [14]பகுத்துணரும் ஆவியைக் கொண்டிருத்தல் என்பது தீர்க்கதரிசிக்கு உரிய வரங்களில் ஒன்றாக உள்ளது (1 இரா. 14:1-6ஐக் காணவும்). விசேஷமாக, இது மேசியாவான தீர்க்கதரிசியின் விஷயத்தில் உண்மையாக இருக்க*

*வேண்டியது (ஏசா. 11:2-4).* [15]*(ஏவப்பட்டிராத) ரபீத்துவப் பாரம்பரியங்களின்படி, பாவம் நிறைந்த பெண்ணொருத்தியால் தொடப்படுதல் என்பது சடங்காச்சார ரீதியில் ஒருவரை அசுத்தமானவராக்கும்.* [16]*''போதகரே'' என்பது கிரேக்க வார்த்தையின் நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது. இது சீமோன், இயேசுவுக்குப் பயன்படுத்திய மதிப்பிற்குரிய பட்டமாக - அநேகமாக வஞ்சகப் புகழ்ச்சியாகப் பேசப்பட்டதாக இருக்கும், ஏனெனில் கிறிஸ்து தேவனுக்காகப் பேசுபவர் (அதாவது தீர்க்கதரிசி) அல்ல என்று அந்தப் பரிசேயன் ஏற்கனவே முடிவு செய்திருந்தார்.* [17]KJV*யில்* "pence" *என்றுள்ளது, சில மொழிபெயர்ப்புக்களில்* "shilling" *அல்லது வேறு ஏதாவது பணப்புழக்க அலகைக் கொண்டுள்ளன. மூலமொழியில்* "denarii" *என்றுள்ளது.* [18]*ஒரு தினேரியம் என்பது 17சென்ட்டுகளுக்கு[சுமார் 7 ரூபாய்க்கு]ச் சமமானது என்று கூறுதல் விளக்கவுரையாளர்களுக்கு பொதுவானதாக உள்ளது, ஆனால் இந்த மதிப்பீடானது பல ஆண்டுகளுக்கு முற்பட்ட கூலிகளின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்! நீங்கள் வாழ்கின்ற பகுதிக்குப் பொருத்தமாயிருப்பதற்கு, ஐம்பது தினேரியங்களையும் ஐந்நூறு தினேரியங்களையும் உங்கள் பகுதியின் பணப்புழக்கத்தில் மாற்றிக் கணக்கிட்டுக் கூறுங்கள். [ஐம்பது தினேரியங்கள் என்பது சுமார் 350 ரூபாயையும், ஐந்நூறு தினேரியங்கள் என்பது சுமார் 3,500 ரூபாயையும் குறிப்பிடுவதாக இருக்கும்.]* [19]*போதகர்களுக்கெல்லாம் போதகர் என்ற வகையில் இயேசு, தமது சீஷர்களிடத்தில் தமது கதையின் நீதிபோதனையை நேரடியாகக் கூறுவதற்குப் பதிலாக, அதைக் கூறும்படி அவர்களிடத்திலேயே அடிக்கடி கேட்டார். இது கற்றல் செயல்பாட்டிற்கு இன்றியமையாததான சிந்தித்தலைத் தூண்டிற்று.* [20]*கடன்கொடுப்பவர்கள் பற்றிய எனது விளக்கவுரையானது, வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் இருந்த கடன் கொடுப்பவர்கள் மற்றும் அமெரிக்க நாட்டின் சில பகுதிகளில் ஏழ்மையான பகுதிகளில் உள்ள மனச்சாட்சியற்ற கடன் கொடுப்பவர்கள் ஆகியோரின் அடிப்படையில் உள்ளது. நீங்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஏற்றாற்போன்று வார்த்தைகளை அமைப்பது நன்றாயிருக்கும் [உதாரணமாக, நாம் ''கெந்துவட்டிக்காரர்'' அல்லது ''ஈட்டிக்காரர்'' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தலாம்.] (நீங்கள் தேவைப்படும் நிதி உதவியை கடன் கொடுக்கும் தனிநபர் ஒருவரிடம் இருந்து கடனாகப் பெறுவதைப் பொதுவான நடைமுறை வழக்கமாகக் கொண்டுள்ள இடத்தில் வசிப்பவராக இருக்கலாம்.) ஏற்புடையதென்றால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நீங்கள் நான் விவரித்துள்ள வகையிலான கடன் தருபவர்களிடம் வரவு செலவு வைத்துக் கொள்ளுதலுக்கு எதிராக எச்சரிக்கை செய்ய விரும்பலாம்.*

[21]*இயேசுவின் உவமைகளில் அவர் பெரும்பாலும் பொதுவாக உண்மையாயிருந்தவற்றைப் பற்றியே வழக்கமாகப் பேசினார். ஆயினும் அவ்வப்போது, அவரது விவரிப்புகள் விதியாக இருப்பதற்குப் பதில் விதிவிலக்குகளாக[வும்] இருந்தன (மத். 20:12ஐக் காணவும்).* [22]Alfred, Lord Tennyson, *Geraint and Enid;* quoted in W. Emery Barnes, *The Forgiveness of Jesus Christ* (New York: MacMillan Co., 1936), 53. [23]Adapted from James Burton Coffman, *Commentary on Luke* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1975), 147. [24]*இந்த உவமையானது சீமோன் (ஐம்பது தினேரியம் கடன்பட்டவர்?) மன்னிக்கப்பட்டார் என்று போதிப்பதாக ஒருவர் எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது இன்னொரு இணைவற்ற தன்மையாக உள்ளது. ஒரு உவமையின் விவரங்கள் வலியுறுத்தப்படலாகாது. "கிறிஸ்துவின் வாழ்வு, 3" என்ற புத்தகத்தில் உவமைகள் பற்றிய கலந்துரையாடலில் காணவும்.* [25]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 198. [26]William Barclay, *The Gospel of Luke,* rev. ed., The Daily Study Bible Series (Phila-

delphia: Westminster Press, 1975), 95. [27]*அவர்கள் இவ்வார்த்தைகளை வெறுமனே நினைத்தார்களா அல்லது ஒருவருக் கொருவர் கிசுகிசுத்துக் கொண்டார்களா என்பது பற்றி வேதபாடப் பகுதி தெளிவாய்க் கூறுவதில்லை.* [28]*மீண்டும் ஒருமுறை, இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதாக உரிமை கோரினார் (மாற். 2:5-12ஐக் காணவும்).* [29]*வசனம் 50ல் "துடனே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க முன்னிடைச் சொல்லான eis என்பது உண்மையில் "க்குள்" என்ற நேரடியான அர்த்தம் தருவதாக உள்ளது.* [30]*உலகில் நான் வாழும் பகுதியில், "முதலில் நீங்கள் வரவேற்புப் பாயை இடவேண்டும்" என்ற சொல் வழக்கு பயன்படுத்தப்படுகிறது.*

## 30

# ஒரு மும்முரமான நாள்

### *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #11*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை (தொடர்ச்சி).*

K. *கலிலேயாவில் இரண்டாவது பயணம் (லூக். 8:1-3).*

L. *தேவதூஷணக் குற்றம் சாட்டப் படுதல்கள் (மத். 12:22-37; மாற். 3:20-30; லூக். 11:14-23).*

M. *அடையாளம் தேடுபவர்கள் (மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36).*

N. *இயேசுவின் குடும்பம் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28).*

## அறிமுகம்

*நீங்கள் உண்பதற்குக்கூட நேரம் கண்டறிய இயலாத அளவுக்கு வேலை மும்முரமான ஒரு நாளை எப்போதாவது கொண்டிருந்தது உண்டா? இந்தப் பாடமானது இயேசுவின் வாழ்வில் அப்படிப்பட்ட ஒரு நாளைப் பற்றியதாக உள்ளது. கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒரு சில நாட்களே விவரமாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, அவரது மரணத்திற்கு முந்திய செவ்வாய்க்கிழமையாக உள்ளது, இது "கேள்விகளின் நாள்" என்று அறியப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தில் இன்னொரு நாள் சித்தரிக்கப் படுகிறது. இது ஏற்புடைய வகையில், "ஒரு மும்முரமான நாள்" என்று அழைக்கப்படுகிறது.[1]*

*இந்த நாளானது, கலிலேயாவில் இயேசுவின் இரண்டாவது பயணத்தின் முடிவில் (அல்லது முடிவின் அண்மையில்) வந்தது. முந்திய பாடத்தில், கிறிஸ்து கப்பர்நகூமில் இருந்து நாயீன் நகருக்குப் பயணம் சென்றதையும் (லூக். 7:1, 11) பின்பு பெயர் குறிப்பிடப்படாத பற்பல இடங்களுக்குச் சென்றதையும் நாம் கண்டோம் (லூக். 7:20, 21, 36, 37). லூக்கா, "பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார்; பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள்" என்று பதிவு செய்தார் (லூக். 8:1).[2]*

*கலிலேயாவில் முதல் பயணத்தின் வேளையில், இயேசுவுடன் நான்கு*

*சீஷர்கள் மாத்திரம் பயணம் செய்திருந்தார்கள்.[3] இந்தப் பயணத்திலோ, பன்னிருவரும் தங்கள் ஊழியப் பயிற்சியின் பகுதி என்ற வகையில் அவருடன் இருந்தார்கள். அத்துடன் எப்போதும் இருக்கும் கூட்டமும் இயேசுவுடன் துணை வந்தது.[4]*

*லூக்கா, இயேசுவால் உதவி பெற்றிருந்த குறிப்பிட்ட சில பெண்களும், இயேசுவிடனும் அப்போஸ்தலர்களுடனும் பயணம் செய்தார்கள் என்று அறிக்கை தந்தார். இவர்கள், "தங்கள் ஆஸ்திகளால்" கர்த்தருக்கு "ஊழியஞ் செய்துகொண்டு வந்த"வர்களாயிருந்தார்கள் (லூக். 8:3ஆ).[5] யூதப் பெண்கள் தங்கள் போதகர்களை ஆதரித்தல் என்பது சாதாரணமானதாகவே இருந்தது. அவர்களில் சில பெண்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன: "ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும்,[6] ஏரோதின் காரியக் காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும்" (லூக். 8:2ஆ, 3அ).*

*மரியாள் கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் இருந்த மகதலா[7] என்ற சிறிய கிராமத்தில் இருந்து வந்தபடியால் "மகதலேனாள்" என்று அழைக்கப் பட்டாள். இவளை நாம் மீண்டும் சந்திப்போம் (மாற். 15:47; 16:1, 9; யோவா. 19:25; 20:1-18).*

*யோவன்னாள் என்பவள் தனது கணவராகிய கூசா என்பவரைக் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டாள், இவர் "ஏரோதின் காரியக்கார ராக இருந்தார்." கிரேக்க வேதவசனப் பகுதியில் காரியக்காரர் [உக்கிராணக்காரர்] என்பதற்கு வழக்கமாய்ப் பயன்படும் சொல் பயன் படுத்தப்படவில்லை. மாறாக, ''நிர்வாகி, மேற்பார்வையாளர் அல்லது ஆளுநர்''[8] என்று அர்த்தப்படுகிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.* The Living Bible *என்ற வேதாகமப் பொழிப்புரையில், "கூசா என்பவர் ஏரோதின் காரியங்களுக்கு மேலாளராகவும் அவரது அரண்மனைக்கும் வீட்டுக் காரியங்களுக்கும் பொறுப்பாளராகவும் இருந்தார்" என்றுள்ளது. இயேசுவின் செய்தியானது ஏரோதின் வீட்டார் வரையிலும்கூடச் சென்றடைந்திருந்தது! யோவன்னாளை நாம் பிற்பாடு சந்திப்போம் (லூக். 24:10).*

*சூசன்னாளைப் பற்றி நாம் வேறு எவ்விடத்திலும் வாசிப்பதில்லை.* J. W. *மெக்கார்வீ அவர்கள், "சூசன்னாளைப் பற்றி வேறு எந்தப் பதிவேடும் இல்லை, இது அவளை அழிவற்றவளாயிருக்கச் செய்வதற்கு போதுமான தாக உள்ளது" என்று எழுதினார்.[9]*

*இயேசுவின் பயணத்திற்குப் பின்னோக்கிச் செல்லுகையில், அவர் [மற்றும் அவரது சீஷர்கள்] ஒரு நாள் "வீட்டுக்குப் போனார்கள்; ... அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்'' என்று வாசிக்கின்றோம் (மாற். 3:20அ). இது, இயேசு பயணத்தின்போது விருந்தளித்த ஒருவரின் வீட்டில் பிரவேசித்தார் என்று மாத்திரம் அர்த்தப்படக்கூடும்.[10] இதைத் தொடர்ந்து நடந்த செயல்பாடுகள் இயேசு "கடலோரத்தில்" பிரசங்கித்த செயலினால் தொடரப்பட்டன (மாற். 4:1) என்பதால், அவர் பயணத்தின் முடிவில் கப்பர்நகூமுக்குத் திரும்பியிருந்திருக்க அதிகம் வாய்ப்புள்ளது - மற்றும் அந்த "வீடு" என்பது அந்த நகரத்தில் அவர் வழக்கமாகத் தங்கியிருந்த வீடாக இருந்தது.*

*அந்த நகரம் எதுவாயிருப்பினும், ஒரு "மும்முரமான நாளில்" நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் ஆய்வுசெய்வோம். அதே நாளில், இயேசு அநேகமாக மத்தேயு 13 மாற்கு 4 மற்றும் லூக்கா 8ல் பதிவு செய்யப் பட்டுள்ள உவமைகளை உரைத்திருக்கலாம் (மத். 12:50-13:3ஐக் காணவும்). அந்த நாளானது அநேகமாக, கலிலேயாக் கடலில் புயலை அமர்த்தியது மற்றும் கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவிகள் பிடித்திருந்த ஒருவரைக் குணமாக்கியது (மாற். 4:33-5:19) ஆகியவற்றுடன் முடிவு பெற்றிருக்கலாம். நாம் இந்த நிகழ்ச்சிகளைப் பிந்திய பாடங்களில் படிப்போம். இப்பொழுது, நாம் இந்த நாள் எவ்வாறு தொடங்கிற்று என்று காண்போம்.*

## *மக்களுக்கு உதவுவதில் மும்முரமாயிருத்தல் (மத். 12:22, 23; மாற். 3:20, 21; லூக். 11:14)*

*அதிகாலையில் தனிமையான ஓரிடத்திற்கு ஜெபிக்கச் செல்லுதல் இயேசுவின் பழக்கமாக இருந்தது (மாற். 1:35). நாம் படிக்கும் இவ்வரலாறு தொடங்குகையில், கிறிஸ்து தாம் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார், ஒருவேளை அவர் தமது காலை உணவை உண்பதற்காக இவ்வாறு வந்திருக்கலாம். அவர் வந்து சேர்ந்தபோது, அந்த வீடானது அவரது போதனையைக் கவனிக்கவும் அவரால் குணப்படுத்தப்படவும் விரும்பிய திரளான மக்களால் நிறைந்திருந்தது (மாற். 2:1, 2ஐக் காணவும்). மாற்கு 3:20, ''பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் [இயேசுவும், அவருடைய சீஷர்களும்] சாப்பிடுவதற்கும் சமயமில்லாத படிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்''[11] என்று கூறுகிறது. [இவர்களால்] கலவரம் அடையாத கிறிஸ்து இவர்களுக்கு உதவத் தொடங்கினார்.*

*குறிப்பிட்ட ஒரு அற்புதம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது, இது மனத்தெளிவு, பார்வை மற்றும் பேச்சு ஆகியவற்றை மீளக்கட்டியெழுப்பிய ஒரு மும்மடங்கு அற்புதமாக இருந்தது: பார்வையற்று, பேசவும் கூடாதிருந்த[12] ஒரு மனிதனில் இருந்த அசுத்த ஆவியை இயேசு துரத்தினார் (மத். 12:22). மக்கள் ஆச்சரியப்பட்டு, "தாவீதின் குமாரன் இவர்தானோ?"[13] என்றார்கள் (மத். 12:23ஆ).*

*கிறிஸ்துவின் தீவிரமான பணி அட்டவணை பற்றிய செய்தியானது எப்படியோ அவரது நண்பர்கள் சிலர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆகியோரின் செவிகளில் எட்டியது:[14] "அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, 'அவர் மதிமயங்கியிருக்கிறார்' என்று சொல்லி, அவரைப் பிடித்துக்கொள்ளும்படி[15] வந்தார்கள்" (மாற். 3:21). பூமிக்குரிய இலக்கு ஒன்றை அடைவதற்குத் தியாகம் அவசியமாகும்போது, பெரும்பான்மை யானோர் பரிதாபப்படுகின்றார்கள்; உலகப் பிரகாரமான வேலை யொன்றுக்கு நீண்ட மணி நேரங்கள் தேவைப்படுவதை அவர்கள் புரிந்து கொள்ளுகின்றார்கள். ஆயினும், பெரும்பாலான மக்கள், தேவனுடைய ராஜ்யத்திற்கென்று சக்தி தீர ஊழியம் செய்ய எவரேனும் மனவிருப்ப மாயிருப்பது ஏன் என்பதைப் புரிந்து உணருவதில்லை. கர்த்தர் "மதிமயங்கி*

*யிருக்கிறார்" என்று குடும்ப உறுப்பினர்கள் நினைத்தார்கள். நீங்கள் தேவனுக்கு முதலிடத்தைத் தருவது (மத். 6:33) என்று தீவிரமாக உறுதி எடுத்துக்கொண்டிருந்தால், நீங்கள் உங்கள் சிந்தையை இழந்துவிட்டதாக யாரேனும் ஒருவர் குற்றம் சாட்டினால் ஆச்சரியப்படாதீர்கள்![16]*

## குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிப்பதில் மும்முரமாயிருத்தல்

## *(மத். 12:24-37; மாற். 3:22-30; லூக். 11:15-23[17])*

*இயேசு போதித்து, குணமாக்கிக் கொண்டிருந்தபோது, பரிசேயர்களும் வேதபாரகர்களும் (மத். 12:24; மாற். 3:22) வழக்கம் போல் அங்கிருந்தார்கள். அவர்களில் சிலர் அவரைத் தொல்லைப்படுத்துவதற்காக "எருசலேமிலிருந்து" கூட வந்திருந்தார்கள் (மாற். 3:22அ). அவர் "தாவீதின் குமாரனாக" இருக்கலாம் என்று கூட்டத்தார் ஒப்புக்கொண்ட விஷயமானது (மத். 12:23) அவர்களில் வெறுப்பை வலிவாக்கி இருக்கலாம். அவர்கள் விரைவிலேயே புதிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்தார்கள். கிறிஸ்து அற்புதங்களை நிகழ்த்தினார் என்பதை மறுக்க இயலாத நிலையிலிருந்த அவர்கள், அவர் சாத்தானுடன் கூட்டணி சேர்ந்திருந்தார் என்று குற்றம்சாட்டினார்கள். அவர்கள், "இவன் பெயெல்செபூலைக்[18] கொண்டிருக்கின்றான், பிசாசுகளின்[19] தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான்" என்று கூறினார்கள் (மாற். 3:22ஆ).*

*இயேசு மூன்று விவாதங்களைக் கொண்டு அவர்களின் குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்தார்.[20] முதலாவதாக அவர், அவர்களின் குற்றச்சாட்டு தர்க்கப் பொருத்தமற்றதாயிருந்தது என்று கூறினார்: "தனக்குதானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்காது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?" (மத். 12:25, 26).*

*இரண்டாவது அவர், அவர்களின் குற்றச்சாட்டு சீரற்றதாயிருந்தது என்று கூறினார்: அவர்கள் தங்களுடைய சொந்த "பிள்ளைகள்" (அதாவது, [பரிசேயர்களின்] சீஷர்கள்) பிசாசுகளைத் துரத்தக் கூடியவர்களாய் இருந்ததாக நம்பினார்கள் (மத். 12:27), ஆனால் அவர்கள் தங்களின் பின்பற்றாளர்கள் சாத்தானுடைய வல்லமையினால் பிசாசுகளைத் துரத்தினார்கள் என்று நம்பாதிருந்தார்கள்.[21] கிறிஸ்துவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட எந்த ஒரு குற்றச்சாட்டும் அவர்களின் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டாகவே இருக்க முடிந்தது மற்றும் இருக்க வேண்டும்.[22]*

*மூன்றாவதாக அவர், அவர்களின் குற்றச்சாட்டு சாத்தியமற்றதாயிருந்தது என்று கூறினார்: பலசாலியான மனிதன் ஒருவனுடைய வீட்டிற்குள் புகுவதற்கு முன்பு, முதலில் அந்தப் பலசாலியை(அதாவது சாத்தானை)க் கட்டிப்போடுவது அவசியமாயிருக்கும் (மத். 12:29), அசுத்த*

*ஆவிகளைத் துரத்தியதன் மூலம் இயேசு சாத்தானைத் தோல்வியடையச் செய்தாரே தவிர, அவனது குற்றச் செயல்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை.*

*பின்பு இயேசு தமது தற்காப்பு வாதத்திலிருந்து குற்றச்சாட்டு வாதத்திற்குத் திரும்பினார்: "ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப் பாவமும் எந்தத் துஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; [பரிசுத்த] ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை'' (மத். 12:31). "தூஷணம்'' என்ற வார்த்தை "எதிராகப் பேசுதல்'' என்று அர்த்தப்படுகிறது. வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஆவியானவரின் செயலை (மத். 12:28) சாத்தானுக்கு உரித்தாக்கியபடியால் அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய்ப் பேசிய குற்றம் உடையவர்களாய் இருந்தார்கள். கிறிஸ்து, "எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை'' என்று கூறினார் (மத். 12:32).*

*இயேசு தமது விரோதிகளை, அவர்களின் நாவின் கவனகுறைவான தவறான உச்சரிப்புக்காகக் கண்டனம் பண்ணவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். மாறாக, அவர் அவர்களின் இருதயத்தில் இருந்த பிடிவாதம் மிக்க கடினத்தன்மைக்காக அவர்கள்மீது வெளிப்படையாகக் குற்றம் சுமத்தினார். அவர், "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்'' என்று வலியுறுத்தினார் (மத். 12:34ஆ). அவர்கள் "தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும்" (ஏசா. 5:20) அழைக்கக் கூடிய அப்படிப்பட்டதொரு மனநிலையை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். பரிசேயர்களும் வேதபாரகர்களும் அப்படிப்பட்ட வருத்தத்திற்கு உரிய நிலையை அடைந்திருந்தது எவ்வாறு? இயேசுவே மேசியாவாக இருக்கின்றார் என்பதை நிரூபிக்க ஆவியானவரால் காரணப்படுத்தப்பட்ட ஆதாரத்தை ஆழ்ந்து சிந்திப்பதற்கு நிலையாகவும் சீராகவும் மறுத்திருந்ததினால், அவர்களின் இருதயங்கள் பாறைபோல் கடினமாகி இருந்தன (யோவா. 12:40).*

*சில வேளைகளில் மக்கள், தாங்கள் ''பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம் செய்திருக்கின்றோமோ'' என்று ஆச்சரியப்படுகின்றார்கள். வயது முதிர்ந்த, ஞானமுள்ள ஒரு பிரசங்கியார், "அதை நீங்கள் செய்திருப்பதாகக் கவலைப்பட்டால், அதை நீங்கள் செய்திருக்கவில்லை'' என்று கூறினார். அப்படிப்பட்ட கவலையானது ஒருவரின் இருதயம் திருப்பியமைக்கப்படக்கூடாத அளவுக்குக் கடினமாகவில்லை என்பதை மெய்ப்பிக்கிறது என்று அவர் அர்த்தப்படுத்தினார். உண்மையில், இயேசு இன்னமும் இந்தப் பூமியில் [நம்மைப்போன்ற மனிதராக] நடந்து, ஆவியானவரின் வல்லமையினால் அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிராதபடியினால், நீங்களும் நானும் அந்தப் பரிசேயர்கள் செய்திருந்த அதே பாவத்தைச் செய்வதினால் குற்ற உணர்வு அடைய முடியாது. இருப்பினும், நாம் அதே போன்ற ஒரு பாவத்தினால் குற்ற உணர்வு அடைய முடியும்: "மனந்திரும்புதற்கேதுவாய் ... மறுபடியும் புதுப்பிக்க ..." (எபி. 6:6; வ. 4-6ஐக்*

*காணவும்) முடியாத அளவுக்கு நமது இருதயத்தை மிகவும் கடினமாகும்படி நாம் அனுமதித்து விடக்கூடும். நமது இருதயங் களை மென்மையாகக் காத்துக் கொள்வதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக (2 இரா. 22:19)!*

## தவறான கருத்துக்களுக்கு எதிராகப் போராடுவதில் மும்முரமாயிருத்தல்

## *(மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36)*

*இயேசுவின் தர்க்கம் மற்றும் அவரது கடிந்துகொள்ளுதலில் இருந்து வந்த கொட்டுதல் ஆகியவற்றில் தவறு காண முடியாதிருந்த அவரது விரோதிகள் இன்னொரு வியூகத்தை முயற்சி செய்தார்கள்: "அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: 'போதகரே,[23] உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம்' என்றார்கள்" (மத். 12:38). இதன் துடுக்குத்தனத்தைப் புரிந்து உணர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் பின்தொடர்ந்து வந்தபோது, அற்புதத்திற்குப் பின் அற்புதமாகப் பல அற்புதங்களைப் பார்த்திருந்தார்கள். அந்த நாளில் கூட ஒரு <u>மும்மடங்கு</u> அற்புதம் இயேசுவால் செய்யப் பட்டதை அவர்கள் கண்டிருந்தார்கள். அதற்குமேல் அவர்கள் எதை விரும்பினார்கள்? "வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டுமென்று" அவர்கள் கேட்டதாக லூக்கா கூறினார் (லூக். 11:16). ஒருவேளை அவர்கள் இயேசுவிடத்தில், வானத்திலிருந்து எலியா அக்கினியை வரவழைத்தது போல் (1 இரா. 18:36-38; 2 இரா. 1:10) ஒரு அறிகுறியை உண்டாக்கும்படிக்கு அறைகூவல் விடுத்திருக்கலாம்.*

*வற்புறுத்துதல்களின் பேரில் கிறிஸ்து அற்புதங்கள் செய்ததில்லை (மத். 4:3, 4; லூக். 23:8, 9). அவர் அற்புதத்தை இழிந்த விருப்பம்கொண்ட காட்சிப் படுத்தலாக ("காட்சிக்காக") ஒருக்காலும் செய்ததே இல்லை. மற்றும், அவர் - வானத்திலிருந்தோ, பூமியிலிருந்தோ அல்லது பூமியின் கீழிருந்தோ வரும் - எந்த அற்புதமும் கடின இருதயங்கொண்ட இந்த விமர்சகர்களை இணங்க வைக்காது என்று அறிந்திருந்தார். அவர் பின்வருமாறு பதில் அளித்தார்:*

> *இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத்[24] தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாள மேயன்றி[25] வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படு வதில்லை.[26] யோனா இரவும் பகலும் மூன்றுநாள்[27] ஒரு பெரிய மீனின்[28] வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் (மத். 12:39, 40).*

*இது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கான மறைவான குறிப்பாக இருந்தது: அவர் மரணமடைந்து அடக்கம் செய்யப்பட்ட பின்பு மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்தெழுவார் (மத். 16:21; 17:23; 20:19). கிறிஸ்துவின் விரோதிகள் அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவில்லை; அவரது சீஷர்களும் அதைப் புரிந்துகொள்ளவில்லை. (இது, வரக் காத்திருந்த தமது*

மரணத்தைப் பற்றி இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு அறிவிப்பதற்கு முன்னால் பேசப்பட்டது.) இருந்தபோதிலும், உயிர்த்தெழுதல் என்பதே கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதற்கு நிறைவான "அடையாளமாக" இருந்தது மற்றும் இருக்கிறது (ரோமர் 1:5).

பின்பு இயேசு வேதபாரகர் மற்றும் பரிசேயர் (மற்றும் அவர்களால் ஈர்க்கப்பட்டிருந்தவர்கள்) மீது தமது கடிந்துகொள்ளுதலை மீண்டும் தொடர்ந்தார். தேவபக்தியற்ற நினிவேயானது அவர்களைப் போல் பிடிவாதமிக்கதாயிருந்ததில்லை என்றும், புறஜாதியான சேபாவின் அரசி ("தென்தேசத்து ராஜ ஸ்திரீ") மிகவும் திறந்த மனதுள்ளவளாய் இருந்தாள் என்றும் அவர் கூறினார் (மத். 12:41, 42; லூக். 11:31, 32). அவர் தம்மை விமர்சித்தவர்கள் திறந்த இருதயத்துடன் இருந்தால், அவர்களின் வாழ்வானது "ஒளியினால்" நிரப்பப்படும் என்று அவர்களுக்குப் போதிப் பதற்கு, அவர் தமக்கு மிகப்பிரியமான இரண்டு உருவக உரைகளை ஒன்றாக்கினார் (லூக். 11:33-36).

கிறிஸ்துவினால் கூறப்பட்ட, மனதில் அதிகம் பதியும் விவரிப்புகளில் ஒன்று, ஒரு மனிதனை விட்டுப் புறப்பட்டுச் சென்ற அசுத்த ஆவியானது தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளுடன் திரும்பி வந்தது பற்றி எடுத்துரைத்தது (மத். 12:43-45; லூக். 11:24-26). இந்தச் சிறு உவமையானது பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்க முடியும்: ஆனால் இதன் சந்தர்ப்பப் பொருளில், இது யூதத்துவத்தின் ஆவிக்குரிய நடத்துனர்களைக் குறித்தது. பாபிலோனிய சிறையிருப்பிற்கு பின்பு அவர்கள் விக்கிரகாராதனையின் "அசுத்த ஆவியை" விரட்டியிருந்தார்கள் - ஆனால் அவர்கள் அந்த "அசுத்த ஆவி" இருந்த இடத்தை தேவன்மீதான நேர்மறையான விசுவாசம் மற்றும் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றைக் கொண்டு நிரப்பாதிருந்தார்கள். இதன் விளைவாக, அவர்கள் இப்போது, முந்தியதைக் காட்டிலும் மோசமான "ஏழு அசுத்த ஆவிகளின்" குடியிருப்பாக மாறியிருந்தார்கள்: இவைகள், அறியாமை, தப்பெண்ணம், சுயநீதி, மாய்மாலம், அவிசுவாசம், கலகம் மற்றும் தவறாக வைக்கப்பட்ட மதிப்பீடு போன்ற "அசுத்த ஆவிகளாக" இருந்தன.[29]

## புதிய உறவுமுறைகளை நிலைநாட்டுவதில் மும்முரமாயிருத்தல் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28[30])

இயேசு இவ்வளவு வலிமை நிறைந்த வகையில் பேசுகையில், கூட்டத்தில் இருந்த பெண்ணொருத்தி, "உம்மைச் சுமந்த கர்ப்பமும், நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள்" என்று சத்தமிட்டுச் சொன்னாள் (லூக். 11:27ஆ). மரியாளின் முன்னுரைத்தல் நிறைவேறியதாக இது மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளது (லூக். 1:48). அதற்குக் கிறிஸ்து, "அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்" என்று பதிலுரைத்தார் (லூக். 11:28).[31]

*[இவ்விடத்தில்] இயேசு தாம் மிகவும் அன்புகூர்ந்த தமது தாயின் மதிப்பைக் குறைக்கவில்லை.[32] மாறாக, கிறிஸ்துவின் தாயாக இருப்பதைக் காட்டிலும் தேவனுடைய கீழ்ப்படிகின்ற குமாரனாய் இருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் வலியுறுத்தினார். இது நம் எல்லாருக்கும் எவ்வளவு உணர்வெழுச்சியூட்டுவதாக இருக்க வேண்டும்! ஒரே ஒருவர் மாத்திரமே கர்த்தரின் சரீரப் பிரகாரமான தாயாக இருக்க முடியும், ஆனால் நாம் யாவரும் அவரது சீஷர்களாக இருக்க முடியும்.*

*முக்கியமான இந்த சத்தியமானது சற்றுப் பிறகு மீண்டும் வலியுறுத்தப் பட்டது. கிறிஸ்து தொடர்ந்து மக்கள் கூட்டத்திற்குப் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் (மத். 12:46), "அவரது தாயும் சகோதரர்களும்[33] அங்கு வந்தார்கள்'' (மாற். 3:31அ). கூட்டம் மிகுதியாய் இருந்தபடியால்[34] அவரிடத்தில் நெருங்க இயலாத நிலையில், அவர்கள் அவரைக் காண விரும்புவதாக அவருக்குச் சொல்லி அனுப்பினார்கள் (மாற். 3:31ஆ). அவர்கள் ஏன் இயேசுவைக் காண விரும்பினார்கள் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியாது. மாற்கு 3:21ம் 3:31ம் ஒன்றாய்ப் பிணைக்கப்பட வேண்டியவையாகக் காணப்படுகின்றன; ஒருவேளை வற்புறுத்தப்படும் ஒரு ஓய்வுக்காக அவரை அழைத்துச் செல்ல அவரது குடும்பத்தார் வந்திருக்கலாம்.[35] அவர்களுடைய காரணம் எதுவாயிருப்பினும், "இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் ... உம்மைத் தேடுகிறார்கள்" (மாற். 3:32) என்ற வார்த்தைகள் இயேசுவின் எடுத்துரைப்புக்கு இடையூறு ஒன்றை ஏற்படுத்தின.*

*எப்போதுமே போதகர்களுக்கெல்லாம் போதகராக உள்ள கிறிஸ்து, "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" (மத். 12:48) என்று கேட்டதன் மூலம் இந்த இடையூறை, போதிக்கும் ஒரு வாய்ப்பாகத் திருப்பினார். அருகில் அமர்ந்திருந்த தமது சீஷர்களைச் சுட்டிக்காண்பித்தபடி, அவர் "இதோ என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" என்றார் (மத். 12:49ஆ, 50). இந்த வார்த்தைகளில் இயேசுவின் அறிவிப்பை லூக்கா வெளிப்படுத்தினார்: "தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள்" (லூக். 8:21).*

*கிறிஸ்து தமது குடும்பப் பிணைப்புக்களைச் சிறுமைப்படுத்தவில்லை. குடும்பப் பொறுப்புகள் அவரைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருந்தன (மத். 15:4-6; யோவா. 19:26, 27; 1 தீமோ. 5:8ஐக் காணவும்). ஆயினும், சரீரப்பிரகாரமான குடும்பத்தைக் காட்டிலும் உயர்ந்த, மாபெரும் உறவுமுறையொன்று உள்ளது என்பதை அவர் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தினார். நமது ஆவிக்குரிய பிணைப்புகள் அவரோடும் அவரது பிதாவோடும் உள்ளது. நாம் "தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதின்படி செய்தால்" (லூக். 8:21; மத். 7:21-27ஐக் காணவும்), இயேசு தமது தாயுடனும் தமது சரீரப்பிரகாரமான சகோதரர்களுடனும் மகிழ்வுடன் அனுபவித்த உறவுமுறையைக் காட்டிலும் நெருக்கமான ஒரு உறவு முறையை நாம் இயேசுவுடன் கொண்டிருக்க முடியும் என்பதை*

உணர்ந்தறிதல் என்பது அற்புதமானதாக உள்ளது![36]

இவை (நமக்குப்போன்றே, அன்று இருந்த) கிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஊக்கமூட்டும் வார்த்தைகளாக இருந்தன, ஆனால் அவற்றை கர்த்தர் மிகவும் கசப்புக்குரிய வகையில் தாக்கப்பட்டிருந்த இந்த நாளின் சந்தர்ப்பப் பொருளிலும் கண்ணோக்கிப் பாருங்கள். அவர் தாம் இவ்வுலகைவிட்டுச் சென்ற பின்பு, சபைக்கு விதையாகப் பயன்படும் ஒப்புக்கொடுத்தல் உள்ள சீஷர்களின் குழுவை ஒன்றுகூட்டுவதென்பது அவசியமாயிருந்தது. இந்தப் புதிய உறவுமுறைகள், என்றென்றைக்குமான உறவுமுறைகள் நிலை நாட்டப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமானதாக இருந்தது.

## முடிவுரை

நாளானது முடிய நேரம் இன்னும் இருந்தது. போதிக்கப்பட வேண்டிய போதனை இன்னும் அதிகமாக எஞ்சியிருந்தது, அத்துடன் குறிப்பிடத்தக்க அற்புதங்களும் செய்யப்படவிருந்தன.[37] நான் இயேசுவாக இருந்திருந்தால், நான் ஏற்கனவே களைப்படைந்திருப்பேன். (கலகம், எதிர்ப்பு, மற்றும் விவாதம் ஆகியவற்றைப் போல் வேறெதுவும் என் சக்தியை தீர்ந்து போகச் செய்வதில்லை.) ஆயினும், இந்த நாளின் எஞ்சிய பகுதியில் நடைபெற்றது பற்றிய நமது படிப்பிற்கு நாம் அடுத்து வரும் பாடங்கள் வரை காத்திருக்க வேண்டும். இந்த வேலை மும்முரமான, மும்முரமான இருபத்து நான்கு மணிநேர காலகட்டத்தின்மீது திரையை இழுத்துவிட வேண்டிய வேளையாயிற்று.

நமது வேதபாடப் பகுதி முழுவதிலும் நடைமுறைப் பாடங்கள் ஆழப் பதியவைக்கப்பட்டுள்ளன.[38] ஆயினும் நாம் படித்துள்ளவற்றின் இருதயம் போன்ற மையப் பகுதியாக உள்ளது மத்தேயு 12:30ல் காணப்படுகிறது, அங்கு இயேசு, "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்று கூறினார். ஒன்று நாம் இயேசுவின் பக்கமாய் இருக்கின்றோம் அல்லது அவ்வாறு இல்லாது இருக்கின்றோம். நடுநிலைப்பட்ட களம் என்று ஒன்றும் இருப்பதில்லை. நான் யார் பக்கம் இருக்கின்றேன்? நீங்கள் யார் பக்கம் இருக்கின்றீர்கள்?

---

குறிப்புகள்

[1]A.T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 61. [2]கப்பர்நகூமுக்குப் புறம்பே பயணங்கள் பற்றி நாம் படிக்கையில் மத்தேயு, மாற்கு சுவிசேஷங்களில் இதைப் பற்றிய குறிப்புகளை நாம் கொண்டிருப்பினும், லூக்கா மாத்திரமே இந்தப் பயணத்தைப் பதிவு செய்துள்ளார். [3]இந்தப் புத்தகத்தில் உள்ள "அதிகாரம் உள்ளவராய்" என்ற பாடத்தில் காணவும். [4]"அன்பு, கண்ணீர் மற்றும் மன்னித்தல்" என்ற பாடத்தின் அறிமுகப் பகுதியில் காணவும். [5]ஒரு நகரத்தில் உள்ள குடிமக்களால் இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் உணவு தரப்படாதிருந்தால், அநேகமாகப் பெண்கள்

உணவுபொருட்களை வாங்கி வந்து சமைத்திருப்பார்கள். இதை நாம், இயேசு எப்போதுமே மனிதர்களில் ஏழ்மையானவர்கள் மத்தியில் இருந்ததாகச் சித்தரிக்கப்படுவதற்கு இந்த ஆதாரம் மிகையாக உள்ளதாக யூகித்துக் கொள்ளக்கூடாது (லூக். 9:48; 2 கொரி. 8:9; மத். 17:24-26ஐக் காணவும்). [6]"அன்பு, கண்ணீர் மற்றும் மன்னித்தல்'' என்ற பாடத்தில் நாம், சீமோனின் வீட்டில் இயேசுவின் பாதங்களை அபிஷேகம் செய்த, பாவம் நிறைந்த பெண் மகதலேனாள் மரியாளாக இருந்திருக்க காரணம் எதுவும் இருப்பதில்லை என்று வலியுறுத்தினோம். மரியாள் அசுத்த ஆவி துரத்தப்பட்டவளாக இருந்தாளே தவிர அவள் விபசாரியாயிருந்து மனமாற்றப்பட்டவள் அல்ல. [7]"இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற உள்ள வரை படத்தைக் காணவும். [8]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 297. [9]Ibid. [10]எனது NASB வேதாகமப் பிரதியில் "வீடு" பற்றிய பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: "[நேர்ப்பொருளில்], ஒரு வீட்டிற்குள்."

[11]இவ்வசனப் பகுதியை மாற்கு 6:31உடன் ஒப்பிடவும். [12]வாய் பேசமுடியாமை என்பது வழக்கமாக, காதுகேளாமை என்பதையும் சுட்டிக்காண்பிக்கிறது, எனவே இது உண்மையில் ஒரு நான்கு மடங்கு அற்புதமாக இருந்திருக்க வேண்டும். [13]மூலவசனத்தில் இவ்வடிவான வாக்கியமானது, இயேசு "தாவீதின் குமாரனாக" (அதாவது, மேசியாவாக) இருக்கலாமே என்று ஒப்புக்கொள்வதற்கான கவனம் நிறைந்த கூற்றாக இருப்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. [14]"அவருடைய இனத்தார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வசனப் பகுதி நேர்ப்பொருளில், "அவருடன் இருந்தவர்கள்" என்று அர்த்தப்படுத்துகிறது. இவர்கள் இயேசுவுக்கு ஒரு வகையில் உறவினர்களாய் இருந்தார்கள். KJVயில் ''அவருடைய நண்பர்கள்'' என்றும், NIVயில் "அவருடைய குடும்பத்தார்" என்றும் உள்ளது. [15]இவ்விடத்தில் கிரேக்க வார்த்தையானது ''அவரைப் பிடித்துக் கொள்ளும்படி'' என்றே அர்த்தப்படுகிறது. இது புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் யாரேனும் ஒருவரைக் கைது செய்வதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத். 14:3; அப். 24:6). அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவரை அவர்கள் வலுக்கட்டாயமாகத் தங்களுடன் கூட்டி செல்லத் திட்டமிட்டு இருந்தார்கள் என்பதை இவ்வார்த்தை சுட்டிக்காண்பிக்கிறது. [16]மனநிலை சரியில்லாதிருப்பதைக் குறிப்பிட நாம் பலவகையான வழக்குச் சொற்களைக் கொண்டுள்ளோம். அவற்றில், நீங்கள் வாழும் பகுதியில் உள்ளவர் களுக்குப் புரியக்கூடிய ஒன்றை இவ்விடத்தில் நீங்கள் பயன்படுத்த விரும்பலாம். [17]பரிசேயர்களின் தேவதூஷணமான குற்றச்சாட்டுதல்கள் பற்றிய லூக்கா சுவிசேஷ விவரமானது வேறுபட்ட காலத்திலும் இடத்திலும் நடந்திருக்கலாம் - ஆனால் அது மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷ விவரங்களுடன் சேர்த்துப் படித்தால் பயனுடையதாயிருக்கும் அளவுக்கு அவ்வளவு ஒரே மாதிரியாக உள்ளது. [18]"பெயல்செபூல்" (அல்லது பெயல்செபூப் அல்லது பாகால் செபூப்) என்பது ஒரு புறஜாதித் தெய்வத்தின் பெயராக இருந்தது (2 இரா. 1:2). இவ்வார்த்தையானது, ''ஈக்களின் கர்த்தா'' என்ற நேரடிப் பொருள் உடையதாகும். இந்த சந்தர்ப்பப் பொருளில், இப்பெயரானது சாத்தானைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மாற். 3:22, 23). [19]KJVயில், "பிசாசுகள்" என்றுள்ளது, ஆனால் ஒரே ஒரு பிசாசு மட்டுமே இருக்கின்றான். மூலமொழி வசனத்தில் "அசுத்த ஆவிகள்" என்றுள்ளது. [20]இந்த விவாதங்களை மாற்கு, "உவமைகள்" என்று அழைக்கின்றார் (மாற். 3:23).

[21]இது மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. [22]இந்த யூதர்கள் பிசாசுகளைத் துரத்தினார்கள் என்று இயேசு நம்பினார் என்பதை இயேசுவின் விவாதம் நிரூபிக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. யூதமார்க்கத்தில் பிசாசுகளைத் துரத்துபவர்களின் மூடநம்பிக்கையான சடங்கு களுக்கும் "வார்த்தையினாலேயே"

பிசாசுகளைத் துரத்திய இயேசுவின் செயலுக்கும் இடையில் மாபெரும் பிளப்பு ஒன்று இருந்தது. [23]அவர்கள் இயேசுவுக்கு இந்த கனத்திற்குரிய பட்டப் பெயர் அளித்ததில் மாய்மாலம் அடங்கியிருந்தது. (இவ்வசனப்பகுதியை லூக். 7:40உடன் ஒப்பிடவும். அந்த வசனம் பற்றிய கலந்துரையாடலை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.) [24]1 கொரிந்தியர் 1:22ஐக் காணவும். [25]மத்தேயு 16:4ஐக் காணவும். [26]இயேசு தொடர்ந்து அடையாளங்கள் (அற்புதங்கள்) செய்து கொண்டிருந்தார் என்பதால், இது (செய்யப்பட்டுக் கொண்டிருந்தவைகள் தவிர) கூடுதலாக வேறு அடையாளம் எதுவும் தரப்படாது என்று அர்த்தப்படுத்தியிருக்கும், இதற்கு விதிவிலக்காக யோனாவின் அடையாளம் (அதாவது, உயிர்த்தெழுதல்) இருந்தது. [27]"மூன்று நாள் இரவும் பகலும்" என்ற சொற்றொடரானது சிலரைக் கவலைப்படச் செய்கிறது. நாம் அறிந்த வரையில் இயேசு, ஒரு முழு நாளும், இரண்டு நாட்களின் பகுதிகளும், மற்றும் இரு இரவுகளும் கல்லறையில் இருந்தார். இதற்கு, யூதர்கள் ஒரு நாளின் ஒரு பகுதியையும் ஒரு நாளாகவே கணக்கிட்டார்கள் என்பதே அடிப்படைப் பதிலாக உள்ளது. இப்புத்தகத்தின் முடிவுப்பகுதியில் உள்ள "மூன்று பகல்கள் & மூன்று இரவுகள்" என்ற துணைப் பாடத்தில் காணவும். [28]KJVயில் "whale" என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனத்தில் "கடல் பெரும்பிராணி" என்றுள்ளது. NKJVயில் "பெரிய மீன்" என்றுள்ளது. இதுவே பழைய ஏற்பாட்டு வரலாற்றில் உள்ள வார்த்தையாகவும் இருக்கிறது (யோனா 1:17). யோனாவைப் பற்றிய இவ்வரலாறும் பெரிய மீனும் ''ஒரு தேவதைக் கதை'' போன்றதே என்று சிலர் உரிமைகோரியுள்ளார்கள், ஆனால் அது உண்மையிலேயே நடந்தது என்று இயேசு கூறினார்! [29]என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். பிசாசுகள் ஆவிக்குரிய ஜீவிகளாக இருந்ததில்லை (அல்லது இருப்பதில்லை) என்று நான் கூறுவதில்லை. மாறாக, நான் இந்த உவமையின் இணைவை - பிசாசுகளினால் நிரப்பப்பட்டிருந்த ஒரு மனிதனுக்கும் பாவத்தினால் நிரப்பப்பட்டிருந்த யூதத் தலைவர்களுக்கும் இடையில் இருந்த இணைவை - ஒரு சில வார்த்தைகளில் காண்பிக்க முயற்சி செய்கின்றேன். இந்தத் தலைவர்கள் பிசாசு பிடித்தவர்களாயிருக்க வேண்டும் என்று அவசியமில்லை, ஆனால் அவர்கள் நிச்சயமாகவே பிசாசு மற்றும் அவனது அசுத்த ஆவிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு இருந்தார்கள். [30]இயேசுவின் குடும்பம் பற்றிய வரலாறு லூக்கா 8ல் உள்ளடக்கப் பட்டிருக்கிறது, இது கேள்விப்பட்டு கீழ்ப்படிவதற்கான அவசியத்தை விவரிக்கிறது. மத்தேயுவும் மாற்குவும் இவ்வரலாற்றை கொண்டிருக்கிற வேளையில்/இடத்தில், கிறிஸ்துவின் தாயை "பாக்கியவதி" என்று கூறும் பெண் பற்றிய வரலாற்றை லூக்கா உள்ளடக்கினார் (லூக். 11:27, 28), எல்லா வரலாறுகளுமே ஒரே அடிப்படை பாடத்தைப் போதிப்பதால், இவற்றை நான் ஒன்றாக வகைப்படுத்தியுள்ளேன்.

[31]இவ்விடத்திலும் மத்தேயு 12:48-50லும், இயேசுவின் வார்த்தைகள் மரியாளை வழிபடும் தவறுக்கு எதிரான பலத்த குற்றச்சாட்டாக உள்ளன. [32]இயேசு தமது மரணத்திற்கு முன்பு கொண்டிருந்த கடைசியான அக்கறைகளில் அவரது தாயாரைப் பற்றிய அக்கறையும் இருந்தது என்ற உண்மையினால் இது மெய்ப்பிக்கப்பட்டது (யோவா. 19:26, 27). [33]பிற்காலத்திய கையெழுத்துப் பிரதிகள் ''அவருடைய சகோதரிகளும்'' என்பதைக் கூட்டியுள்ளன, ஆனால் மிகப் பழங்காலக் கையெழுத்துப் பிரதிகளில் இந்தக் கூடுதல் இல்லை. மத்தேயு 13:55, 56ன்படி, இயேசுவுக்கு நான்கு சகோதரர்களும் குறைந்தபட்சம் இரண்டு சகோதரிகளும் இருந்தார்கள். [34]இவ்வசனப் பகுதியை மாற்கு 2:2, 4உடன் ஒப்பிடவும். [35]இதைப்பற்றிய கூடுதலான கலந்துரையாடலை பின்தொடரும் பிரசங்கத்தில் காணவும். [36]இந்தக் கலந்துரையாடல் ''நமது இரண்டு குடும்பங்கள்'' என்ற பிரசங்கத்தில் விரிவாக்கப்படும். [37]"ஒரு மும்முரமான நாள்" என்ற இந்தப் பாடத்தின்

*அறிமுகப் பகுதியை மறுகண்ணோட்டமிடவும். [38]இவற்றில் சிலவற்றை (நம் எல்லாரையும் குற்றம் சாட்டுகிற மத். 12:33-37 போன்றவற்றை) நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.*

*31*

# நமது இரண்டு குடும்பங்கள்

## மத். 12:46-50; மாற். 3:20, 21, 31-35; லூக். 8:19-21,

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*கலிலேயாவில் இயேசுவின் இரண்டாவது பயணத்தின் முடிவில் அவர் மிகவும் வேலை மும்முரமான நாளைக் கொண்டிருந்தார்.[1] அந்த நாளானது, பிசாசு பிடித்தும் பார்வையற்றும் வாய்பேச முடியாமலும் இருந்த ஒரு மனிதரைக் குணமாக்குதலுடன் தொடங்கிற்று (மத். 12:22, 23). இது கிறிஸ்துவானவர், சாத்தானின் வல்லமையைக் கொண்டே அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்ற குற்றச்சாட்டை விசையுடன் தொடங்கி வைத்தது (மத். 12:23-30). ஆதாரமற்ற அந்தக் கூற்றிற்கு இயேசு பதில் அளித்தபின்பு, அவரது விரோதிகள் "வானத்திலிருந்த ஒரு அடையாளத்தை" காண்பிக்க வேண்டும் என்று அவரை வற்புறுத்தினார்கள் (லூக். 11:16). முரண்பாடு நிறையப் பெற்ற அந்த நாளில், வித்தியாசமான ஒரு சிறு நிகழ்ச்சி நடைபெற்றது. அதைப் பற்றிய மாற்கு சுவிசேஷத்தின் விவரம் பின்வருமாறு:*

> *அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: "இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள்" என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று சொல்லி; தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து: "இதோ, என் தாயும், என் சகோதரரும் இவர்களே! தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான்" என்றார் (3:31-35).*

நாம் இந்தப் பகுதியை வாசிக்கையில், பல கேள்விகள் சிந்தைக்கு வருகின்றன: "சுவிசேஷ எழுத்தாளர்கள் இதை நமக்குக் கூறுவதில் என்ன நோக்கம் கொண்டிருந்தார்கள்?"; "இயேசு தமது குடும்பத்தை - விசேஷமாக தமது தாயாரை - ஏன் ஒப்புக்கொள்ளாதிருந்தார்?"; "இந்த நிகழ்ச்சியில் இருந்து நாம் எந்த பாடத்தை அல்லது பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டுள்ளார்?" "நமது இரண்டு

குடும்பங்களை"ப் பற்றி நாம் படிக்கின்ற இவ்வேளையில் மேற்கண்ட மற்றும் பிற கேள்விகளுக்கு நாம் பதில் அளிப்போம் என்று நம்புகின்றோம்.

## இயேசுவின் இரண்டு குடும்பங்கள்

நாம் இயேசுவின் இரண்டு குடும்பங்களுடன் தொடங்குவோம்.

**இயேசுவின் சரீரப் பிரகாரமான குடும்பம்**

இயேசு ஒரு சரீரப் பிரகாரமான குடும்பத்தில் பிறந்தார் என்பதை பெரும்பான்மையானவர்கள் அறிந்திருக்கின்றோம். யோசேப்பு என்பவர் அவரது சட்டப்பூர்வமான தந்தையாக இருந்தார் (மத். 1:16; லூக். 3:23; யோவா. 1:45; 6:42), மற்றும் மரியாள் என்பவள் அவரது தாயாக இருந்தாள் (மத். 1:18; 2:11; 13:55; லூக். 2:34). கிறிஸ்து பிறந்தபோது மரியாள் ஒரு கன்னிப் பெண்ணாக இருந்தாள்; ஆனால் அவரது பிறப்பிற்குப் பின்பு, யோசேப்பும் மரியாளும் ஒரு மனிதரும் அவரது மனைவியும் என்ற வகையில் கூடி வாழ்ந்தார்கள். அவர்கள் இயேசுவின் அரைசகோதரர்களா யிருந்த நான்கு மகன்களைப் பெற்றெடுத்தார்கள்: "யாக்கோபு, யோசே, சீமோன் மற்றும் யூதா" (மத். 13:55; மாற். 6:3ஐக் காணவும்). அவர்கள் குறைந்தபட்சம் இரண்டு மகள்களையும் பெற்றார்கள் (மத். 13:56; மாற். 6:3ஐக் காணவும்). இவ்விதமாக கிறிஸ்து குறைந்தபட்சம் ஒன்பது மக்களைக் கொண்ட ஒரு குடும்பத்தில் வளர்ந்தார். ஒவ்வொரு குறிப்பின்படியாகவும் அது ஒரு மகிழ்வான இல்லமாக இருந்தது.

இருப்பினும், இயேசு தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்குவதற்காக இல்லத்தை விட்டுப் புறப்பட்டபோது, அவரது குடும்ப உறவுகள் மாற்றம் பெற்றன. அவரது இளைய சகோதரர்களின் பகுதியில் பொறாமையும் வெறுப்புணர்வும் இருந்திருக்கலாம். அவர்கள் அவரை மேசியா என்று ஏற்றுக்கொள்வதற்கு மனவிருப்பமற்றவர்களாக இருந்தார்கள் மற்றும் அவ்வப்போது அவரை நயப்பழிப்புரையால் தாக்கினார்கள் என்று யோவான் அறிக்கை தந்தார் (யோவா. 7:3-5).[2] கிறிஸ்து யாராய் இருந்தார் என்பது பற்றி அவரது தாயாகிய மரியாள் தெளிவான கருத்துக் கொண்டிருந்தார் (லூக். 2:19, 51ஐக் காணவும்), ஆனால் அவளும் [மரியாளும்] கூட அவரது [இயேசுவின்] ஊழியத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை (யோவா. 2:3, 4ஐக் காணவும்).

இது நம்மை மாற்கு 3ம் அத்தியாயத்தில் நடந்த நிகழ்வுக்குக் கொண்டு வருகிறது. பின்னணிகள் சிலவற்றை அறிவதற்காக, நாம் வசனம் 20ல் இருந்து நமது கலந்துரையாடலைத் தொடங்குவோம்:

> பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள். அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, "அவர் மதிமயங்கியிருக்கிறார்"[3] என்று சொல்லி, அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள் (மாற். 3:20, 21).

*"அவருடைய சொந்த இனத்தார்" என்பதற்குப் பதில், NIVயில் "அவருடைய குடும்பத்தார்" என்றுள்ளது. "அவரைப் பிடித்துக்கொள்ளும்படி" என்ற சொற்றொடரானது, இயேசு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவரை அவர்கள் தங்களுடன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல நோக்கங் கொண்டிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*இயேசு "மதிமயங்கியிருக்கிறார்" என்று அவரது நண்பர்களும் குடும்பத் தாரும் நினைத்ததற்கு, இயேசு உண்பதற்குக்கூட நேரம் எடுத்தக்கொள்ளா திருந்தார் என்ற உண்மை மட்டும் காரணமாயிருந்திராது.[4] அவர்கள் அந்த முடிவை அடைவதற்குக் காரணமாயிருந்திருக்கக் கூடிய பல காரணிகளை வில்லியம் பார்க்ளே என்பவர் பட்டியலிட்டார்:[5]*

*(1) இயேசு வருமானப் பாதுகாப்பைத் தூக்கியெறிந்திருந்தார். தலை சாய்க்கவும் இடமில்லாத ஒரு நாடோடியாக அலைந்து திரிவதற்காக, உணர்வுள்ள எந்த ஒரு மனிதராவது ஒவ்வொரு வாரமும் பணம் தரக்கூடிய ஒரு தொழிலை விட்டுவிடுவாரா?*

*(2) இயேசு பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாயிருந்தது. தோல்வியடைந்து அழிவோம் என்ற நிலையிலும், பகுத்தறிவுள்ள எந்த ஒரு மனிதராவது யூதர்களின் முழு அமைப்புடன் யுத்தம் ஒன்றை மேற்கொள்வாரா?*

*(3) சமுதாயத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து இயேசு அதிகம் அதிகமாகத் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டிருந்தார். காய்ப்பேறிய கைகளைக் கொண்ட பெரும்பான்மையான மனிதர்களுடனும், ஐயத்திற் கிடமான பெயர்பெற்ற சிலருடனும் உள்ள கல்வியறிவற்ற மனிதர்களின் வித்தியாசமான கலவையான குழு ஒன்றைக் கொண்டு வெற்றியடையலாம் என்று நியாயமான அறிவுள்ள எந்த ஒரு மனிதராவது நம்பிக்கை கொள்வாரா[6]?*

*பர்ட்டன் காஃப்மேன் என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *மாம்சப் பிரகாரமான மற்றும் மறுஜென்மம் எடுத்திராத மனிதர் களுக்கு, தேவனுடைய ஊழியத்தில் வைராக்கியம் என்பது மதிநுட்பம் வாய்ந்ததாக ஒருபோதும் இருப்பதில்லை. வியாபாரம், யுத்தம், அறிவியல், சந்தோஷம், அரசியல் அல்லது ஏறக்குறைய பூமியின் தேடுதல் எதிலும் வைராக்கியம் கொண்டிருத்தல் என்பது பாராட்டப் படுகிறது, வெகுமதியளிக்கப்படுகிறது மற்றும் முன்னேற்றமடைய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது; ஆனால் ஒரு மனிதன் பரிசுத்தமான தேவபக்தியின் ஊழியத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித் தால், அவனது அயலகத்தார் தலையைக் குலுக்கிக் கொண்டு, "அவன் அதிலேயே மூழ்கிப் போய்விட்டான்!" என்று கூறத் தொடங்கு கின்றார்கள்.[7]*

*வசனம் 21ல் உள்ள இயேசுவின் "சொந்த இனத்தார்" என்பவர்கள், வசனம் 31ல் உள்ள "அவரது தாயும் சகோதரர்களும்" தான் என்பது பற்றி நாம் நிச்சயமாய் எதுவும் கூற இயலாது, ஆனால் ஒரு இயல்பான வளர்நிலை அங்குள்ளது: வசனம் 21ல் கிறிஸ்துவின் "இனத்தார்" அவரைப்*

*பிடித்துக்கொண்டு போக வேண்டியது அவசியம் என்று முடிவு செய்தார்கள், எனவே அவர்கள் - அவர் இருந்த இடத்திற்கு புறப்பட்டு - "வந்தார்கள்." சற்று காலம் தாண்டிய பின்பு (வ. 22-29), "அவருடைய சகோதரரும் தாயாரும்" அவர் இருந்த இடத்திற்கு வந்தார்கள் (வ. 31). வசனம் 21லும் வசனம் 31லும் உள்ள மக்கள் ஒரே நபர்களே என்று உறுதியாகத் தோன்றுகிறது.*

*வசனம் 21க்கும் வசனம் 31க்கும் இடையில் ஏதேனும் தொடர்பு இருக்குமென்றால், மற்றும் மரியாளும் இயேசுவின் சகோதரர்களும் "அவர் எப்படியிருப்பினும்'' அவருக்கு உதவுவதற்காக வந்தார்களென்றால், பின்வரும் கேள்வி எழும்புகிறது: "கிறிஸ்துவின் தாயார் இவ்விதமான திட்டத்திற்கு சம்மதித்துச் செல்லவேண்டியது ஏன்?" இயேசு யாராயிருந்தார் என்பது பற்றி அவருடன் பிறந்திருந்தவர்களைக் காட்டிலும் அவரது தாயார் அதிகமாய் அறிந்திருந்தாரே. அது உண்மையே, ஆனாலும் பின்வரும் இரண்டு உண்மைகளைச் சிந்தையில் வையுங்கள்: (1) இயேசு யார் என்பது பற்றி மரியாள் சற்று அறிந்திருப்பினும், அவளது [மரியாளின்] புரிந்து கொள்ளுதல் இன்னமும் முழுமை அடையாததாகவே இருந்தது; (2) அவள் இன்னும் தாயின் கவலைகளைக் கொண்ட ஒரு தாயாகவே இருந்தாள். தனது மகன் சரியாக உணவு உண்ணாதபோது எந்தத் தாய்தான் கவலைப் படாது இருக்கின்றாள்? அவள் [மரியாள்] தமது மகனின் சித்தம் தெளிவாக உள்ளதா இல்லையா என்பதுபற்றி அநேகமாக கவலைப்பட்டிருக்க மாட்டாள், ஆனால் அவருடைய பாதுகாப்பு குறித்து அவள் [மரியாள்] சுலபமாகக் கவலை கொண்டிருந்திருப்பாள்.[8]*

*மரியாள் மற்றும் இயேசுவின் சகோதரர்கள் ஆகியோரின் நோக்கங்கள் மீது நாம் சாத்தியமான மிகச் சிறந்த கட்டமைவை இடவேண்டும் என்று தர்ம சிந்தனை கட்டளையிடுகிறது. அவர்களின் நோக்கங்கள் தவறாக வழிநடத்தப்பட்டிருப்பினும், அவர்கள் தங்கள் இடையீடானது "அவரது சொந்த நன்மைக்கானதாகவே" இருக்கும் என்று நினைத்திருக்கலாம்.*

*அது நம்மை மாற்கு 3:31ம் வசனத்திடம் கொண்டு வருகிறது: இயேசு இருந்த இடத்திற்கு "அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து" சேர்ந்தார்கள் (வ. 31அ). "அவரைச் சுற்றிலும் ஜனங்கள் உட்கார்ந் திருந்தார்கள்'' (வ. 32அ) மற்றும் கிறிஸ்து "ஜனங்களோடே பேசி''க் கொண்டிருந்தார் (மத். 12:46). மரியாளும் இயேசுவின் சகோதரர்களும் "ஜனக்கூட்டத்தினாலே அவரண்டையில் … சேரக்கூடாது'' இருக்கு மளவுக்கு மக்கள் இயேசுவைச் சுற்றிலும் நெருக்கமாய் உட்கார்ந்திருந் தார்கள் (லூக். 8:19[9]).*

*மத்தேயுவின் சுவிசேஷ விவரத்தின்படி, "அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்றார்கள்" (12:46). அவர்கள் அநேகமாக இயேசுவின் கவனத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கலாம், ஆனால் ஒன்று அவர்களின் குரலை அவர் கேட்கா திருந்திருப்பார் அல்லது அவர்களை அவர் கண்டும் காணாதவர் போல் இருந்திருப்பார். பின்பு அவர்கள், அவருடன் பேச விரும்புவதாக வார்த்தை சொல்லி அனுப்பினார்கள். அவர்கள் கூட்டத்தின் மூலையில் இருந்த ஒரு*

நபரிடத்தில் கிசுகிசுப்பதையும் பின்பு அந்த நபர் தனக்கு முன்னால் இருந்த நபரிடத்தில் கிசுகிசுப்பதையும் இப்படியே விஷயம் முன்சென்றதையும் நான் [கற்பனையில்] காண முடிகிறது: "முன்னால் இருப்பவரிடத்தில் இதைச் சொல்லு. இயேசுவின் தாயும் சகோதரர்களும் இங்கிருக்கின்றார்கள்! அவர்கள் அவரைப் பார்க்க விரும்புகின்றார்கள்!" கடைசியில் இந்தச் செய்தியானது முன்வரிசையில் அமர்ந்திருந்தவர்களிடத்திற்குச் சென்றது, மற்றும் பலர்[10] கிறிஸ்து போதிப்பதை இடைமறித்தார்கள்: "இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள்" (மாற். 3:32).

அவர்களின் நோக்கங்கள் நல்லதோ, மோசமானதோ அல்லது இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதோ, எப்படியிருந்தாலும், இயேசு தமது போதனையை முடிக்கும் வரையிலும் காத்திருக்க, அவரது குடும்பத்தினர் மனவிருப்பம் இல்லாதிருந்ததில் ஒரு துடுக்குத்தனம் இருந்தது. உண்மையில் அவர்கள், "நாங்கள் குடும்பத்தாராக இருக்கின்றோம். நீர் [போதிப்பதை] நிறுத்திவிட்டு இப்போதே எங்களைப் பார்க்க வேண்டும். நீர் இப்போது செய்துகொண்டிருப்பதைக்காட்டிலும் நாங்கள் விரும்புவது மிகவும் முக்கியமானதாக உள்ளது!" என்றே கூறினார்கள்.

**இயேசுவின் ஆவிக்குரிய குடும்பம்**

துடுக்குத்தனமான இந்த வேண்டுகோளானது கிறிஸ்துவை, "மிகுந்த வேதனை நிறைந்த சூழ்நிலை ஒன்றில், பூமிக்குரிய அவரது ஊழியத்தில் மிகவும் நுட்பமான இக்கட்டுகள் ஒன்றில்" இட்டது.[11] அவர் தமது குடும்பத்தவர்களின் முயற்சிகளுக்குத் தடைவிதிக்கத் தயக்கமாய் இருந்திருப்பார், ஆனால் அவர்களுக்கும் - மற்றும் அங்கிருந்த மற்றவர்களுக்கும் - தமது ஊழியத்தின் இயல்பையும் முக்கியத்துவத்தையும் பற்றி அவர் தெரிவிக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

நான் இந்த இக்கட்டான நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்றால், நான் அநேகமாக திகைப்பில் ஆழ்ந்திருப்பேன். ஒரே ஒருமுறை ஒரு பேச்சுரையின் இடர்ப்பாட்டின்போது அரைகுறை அறிவுணர்வுடனும் கூட ஏதேனும் கூறுவதற்கு நான் தெளிவான மனநிலை கொண்டிருக்க வேண்டியிருந்ததை என்னால் நினைவுகூர முடிகிறது. நான் ஒக்லாஹாமாவின் தெலேகுவா என்ற இடத்தில் இருந்த கிறிஸ்துவின் சபையில் இருந்த ஒரு கலையரங்கில் காட்சி உதவிகளைச் செயல்விளக்கப் படுத்திக் கொண்டிருந்தேன். நான் நடைமேடையின் மீது முன்னும் பின்னுமாக வேகமாய் நடந்து கொண்டிருந்தேன், அதில் போதனை உதவிப் பொருட்கள் நிறைந்திருந்தன. ஒரு சமயத்தில் நான் - நடைமேடையின் ஒரு புறமாக இருந்த ஆழமான படிக்கிணற்றுக்குள் - பின்னோக்கி அடியெடுத்து வைத்துவிட்டேன். படிகளில் கால்களைப் பரப்பியவாறே நான், "இது 'இப்படியிருக்கத் தன்னை நிற்கிறவன் என்று நினைக்கிறவன் விழாதிருக்கும்படி எச்சரிக்கையாயிருக்கக் கடவன்' என்ற வசனப்பகுதியை விவரிக்கிறது" என்று உளறிக் கொட்டுவதற்கு என்னைச் சமாளித்து நின்றேன். இருப்பினும், சாதாரணமாக, நான் ஒரு புதிய இடர்ப்பாட்டை

எதிர்கொள்ளும்போது பேச்சற்றவனாகவே இருக்கின்றேன்.

போதகர்களுக்கெல்லாம் போதகர், இந்த சூழ்நிலையை எதிர் கொண்டபோது என்ன செய்தார்? அவர் காலத்திற்கு ஏற்காத இடையூறை காலத்திற்கு ஏற்ற அறிவுறுத்தலாகத் திருப்பினார். அவர், "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?'' என்று கேட்டார் (மத். 12:48). பின்பு அவர், "... பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்'' என்று பதில் அளித்தார் (மத். 12:50).

கிறிஸ்து அந்த வார்த்தைகளைப் பேசியபோது, அவர் குடும்பத்தை மதிப்புக்குறைக்கவில்லை.[12] சில மார்க்கப் பிரிவுகள், தங்களின் சீஷர்கள் அவர்களின் இயல்பான குடும்பங்களுடன் உள்ள அவர்களின் பிணைப்புக் களை முறிக்கும்படி வற்புறுத்துகின்றன, ஆனால் அப்படிப்பட்ட கொள்கை எதையும் இயேசு போதிக்கவோ அல்லது உற்சாகப்படுத்தவோ இல்லை. அவரைப் பொறுத்தமட்டில் குடும்பம் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர், வேதபாரகர்களும் பரிசேயர்களும் தங்கள் பெற்றோர் களை மதிக்கவும் பராமரிக்கவும் தவறியதற்காக அவர்களைக் குற்றப்படுத்தி னார் (மத். 15:1-8). அவர் மரிப்பதற்கு முன்பு, தமது தாயார் பராமரிப்பில் ஒப்புவிக்கப்படுதலை நிச்சயப்படுத்திக் கொண்டதென்பது அவர் மேற்கொண்ட கடைசி நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது (யோவா. 19:26, 27). வில்லியம் அர்நாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> அவர் ஒரு மகன் மற்றும் சகோதரர் என்ற வகையில் தமது தாயையும் சகோதர சகோதரிகளையும் உண்மையான பிரியத்துடன் அன்பு கூர்ந்தார். அவர் தாம் ஒரு பச்சிளம் குழந்தையாக இருந்தபோது படுத்துறங்கியிருந்த மடியை, தாம் ஒரு இளைஞரானபோது ஒருக்காலும் பிய்த்துப் போடவில்லை. அவரது பிறப்பிலிருந்து அவரைப் பேணிக்காத்த பெண், அவரது மரணம் வரைக்கும் அவரது இருதயத்திற்கு அன்பார்ந்தவராக இருந்தார்.[13]

இருந்தபோதிலும் கர்த்தர், பூமிக்குரிய எந்தப் பிணைப்பைக் காட்டிலும் ஆழமான, அதிகம் மதிப்பு வாய்ந்த மற்றும் அதிகம் பிணைகின்ற ஒரு உறவு உள்ளது என்பதைத் தெளிவாக்க விரும்பினார்.

இந்தக் கருத்தைக் கொண்டுவருவதற்கு, கிறிஸ்து "தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து, இதோ, என் தாயும், என் சகோதரரும் இவர்களே" என்று கூறினார் (மாற். 3:34). மத்தேயு சுவிசேஷ விவரத்தின்படி, அவர் "தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி, இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்தி லிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்'' என்று கூறினார்[14] (மத்.12:49-50).

இயேசுவின் எந்த சீஷர்கள் அவரது "சகோதரர்களாக" இருக்கத் தகுதி பெற்றார்கள், எந்த சீஷர்கள் அவரது "சகோதரியாக'' இருக்கத் தகுதி பெற்றார்கள், அல்லது எந்த சீஷர்கள் அவரது "தாயாக" இருக்கத் தகுதி

பெற்றார்கள் என்று உங்களுக்குள் சிந்தித்துக் கவலைக் கொண்டிருக்காதீர் கள்.[15] அவர் கிறிஸ்தவர்களை மூன்று வித்தியாசமான பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக இது, "எனது பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவர்களே எனது குடும்பமாக, எனது ஆவிக்குரிய குடும்பமாக இருக்கின்றார்" என்று கூறுவதற்கான அவரது வலிவார்ந்த வழிமுறையாக இருந்தது. லூக்காவின் சொல்வழக்கைப் பயன்படுத்துவது என்றால், அவர் "தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்கள்" தமது குடும்பத்தினராக உள்ளனர் என்று வலியுறுத்தினார் (லூக். 8:21).

மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில், பிதாவின் "சித்தத்தை" நிறைவேற்றுதல் என்பதைப் பற்றி கிறிஸ்து பேசியிருக்கையில் அவர் லூக்கா சுவிசேஷத்தில் "தேவனுடைய வசனம்" என்ற சொற்றொடரைப் பயன் படுத்தினார். இதில் முரண்பாடு எதுவும் இருப்பதில்லை. தேவனுடைய வசனமே நாம் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளக் கூடிய ஒரே வழியாக உள்ளது.

நாம் கர்த்தருடைய குடும்பத்தின் அங்கமாயிருக்க வேண்டுமென்றால், நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்கவேண்டும் - பின்பு அதின்படி செய்ய வேண்டும் (மத். 7:21-27ஐக் காணவும்).[16] "செய்தல்" என்பதில் அடங்கி யுள்ளது என்ன? வசனத்தின்படி செய்தல் என்பது, அது போதிக்கிற எல்லாவற்றையும் விசுவாசித்தல், அது கட்டளையிடுகிற எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிதல், அது வாக்களிக்கிற எல்லாவற்றிற்காகவும் நம்பியிருத்தல் என்பதாகிறது.[17]

கிறிஸ்துவின் நாட்களில் இருந்த யூதர்களுக்கு இந்தப் பாடம் அவசியமா யிருந்தது. அவர்கள், ஆபிரகாமின் சரீரப் பிரகாரமான குடும்பத்தில் சந்ததியாராயிருத்தலின் உரிமையினால் தாங்கள் எப்போதும் தேவனுடைய குடும்பத்தில் அங்கமாயிருப்போம் என்று நினைத்தார்கள் (லூக். 3:7-9; யோவா. 8:39 ஆகிய வசனங்களைக் காணவும்). மாம்சப் பிரகாரமான வம்ச வழியானது தேவனுடைய வீட்டில் ஒரு இடத்தை உத்தரவாதப்படுத்துவது இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாயிருந்தது (ரோமர் 9:6, 7ஐக் காணவும்). ஆபிரகாமின் சந்ததியாராக இருத்தல் என்பது இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்தல் என்பது போன்று அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. முன் வம்சவழி அல்ல ஆனால் செயல்பாடு என்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர்கள் பிதாவுடன் ஒரு தொடர் உறவை விரும்பினார்களென்றால், அவர்கள் கேள்விப்பட்டு செய்ய வேண்டியிருந்தது.

உங்களுக்கும் எனக்கும்கூட இந்தப் பாடம் அவசியமாக உள்ளது. வசனத்தைக் கேள்விப்படுதல் என்பது முக்கியத்துவமானதாக உள்ளது (ரோமர் 10:17). வேதாகமத்தை அன்றாடம் வாசித்தலும் (அப். 17:11) இயன்ற வரையிலும் ஒவ்வொரு வேதபாட வகுப்பிலும் எல்லா ஆராதனை ஊழியங்களிலும் கலந்துகொள்ளுதலும் (எபி. 10:25) பாராட்டத்தக்கதாக உள்ளது. ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்கையில் அவரது உரையைக் கேட்பவர்கள் தங்கள் வேதாகமங்களைத் திறந்து வைத்து, குறிப்புகள் எடுத்துக் கொண்டிருப்பதைக் காணும் பிரசங்கியார் மெய்சிலிர்த்துப்

*போகின்றார் (சங். 119:16ஐக் காணவும்). இருந்தபோதிலும், இந்த நடவடிக்கைகள் பாராட்டத்தக்கதாக இருப்பது போலவே, ஒருவர் வசனத்தைக் கேட்டும் தாம் கேட்கின்றவற்றின்படி செய்யாமலிருந்தால் இவைகள் "ஒன்றுக்கும் பயனற்றவைகளாக"[18] உள்ளன. இயேசுவின் அரைசகோதரரான யாக்கோபு, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்று எழுதினார் (யாக். 1:22).*

*எனவே, இயேசு இரண்டு குடும்பங்களைக் கொண்டிருந்தார் என்று நாம் கண்டுள்ளோம் - முதலாவது, சரீரப்பிரகாரமான குடும்பமாகவும், இரண்டாவது ஆவிக்குரிய குடும்பமாகவும் இருந்தன. இதில் இரண்டாவது குடும்பத்தில், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அங்கமாகின்றார் என்று அவர் போதித்தார். சரீரப்பிரகாரமான குடும்பம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதோ அவ்வளவிற்கு ஆவிக்குரிய குடும்பம் எல்லையற்ற வகையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்று அவர் வலியுறுத்தினார்.*

## கிறிஸ்தவரின் இரண்டு குடும்பங்கள்

*இப்போது நாம், நீங்களும் நானும் அங்கம் வகிக்கக் கூடிய இரண்டு குடும்பங்களின் பக்கமாகத் திரும்புவோம்.*

***சரீரப் பிரகாரமான குடும்பங்கள்***

*நான் டேவ் H. மற்றும் லில்லியன் ரோப்பர் என்ற கிறிஸ்தவப் பெற்றோர் இருவரையும், காய் ரோப்பர் என்ற ஒரு சகோதரரையும் உடையவனாயிருந்து ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். எனக்கு ஒரு கிறிஸ்தவ மனைவியான ஜோவையும், சின்டி, டெபி மற்றும் ஆஞ்சி என்ற மூன்று மகள்களையும், ரிச்சர்டு ஹொனேக்கர் மற்றும் டேன் லவ்ஜாய் என்ற மருமகன்களையும், சேத் டேவிட் மற்றும் இராகேல் என்ற பேரக்குழந்தை களையும் கர்த்தர் கொடுத்து என் வாழ்வை மென்மேலும் ஆசீர்வதித் துள்ளார். இவர்களும் எனது குடும்பத்தில் உள்ள மற்றவர்களும் எனக்கு என் உயிரை விட மேலானவர்களாக உள்ளனர்.*

*நீங்களும் கூட ஒரு சரீரப்பிரகாரமான குடும்பத்தில் பிறந்திருக்கின்றீர் கள். அது ஒரு கிறிஸ்தவக் குடும்பமாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன்; ஆனால் அது கிறிஸ்தவக் குடும்பமாய் இல்லாதிருப்பினும். நீங்கள் உங்கள் மீது அக்கறை செலுத்தக்கூடிய மற்றும் உங்கள் தேவைகளை நிறைவேற்றக் கூடிய மக்களைப் பெற்றிருப்பீர்கள். ஒருவேளை என்னைப் போன்று, நீங்களும் திருமணமாகி, பிள்ளைகளைப் பெற்றிருக்கலாம் அல்லது அவ்வாறு பெறாதிருக்கலாம். உங்கள் சூழ்நிலை எதுவாயிருப்பினும், நீங்கள் குடும்பத்தின் அடிப்படை மதிப்பை பாராட்டுவீர்கள் என்று நான் நம்புகின்றேன். இது தேவனுடைய முதல் நிறுவனமாக இருந்தது (ஆதி. 2:18, 21-24; 4:1) மற்றும் இது இன்னமும் சமுதாயத்தின் மூலைக்கல்லாக உள்ளது.*

*துரதிர்ஷ்டவசமாக, இன்றைய நாட்களில் சிலர் குடும்பம் எவ்வளவு*

*தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது என்பதை புரிந்து உணர்வதில்லை. சிலர் தங்கள் குடும்பங்களைக் கைவிட்டிருக்கையில், மற்றவர்கள் அவற்றைப் புறக்கணிக்கின்றார்கள். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதில்லை, சில பிள்ளைகள் வயதான தங்கள் பெற்றோர்களைப் பராமரிப்பதில்லை. பவுல், "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" என்று எழுதினார் (1 தீமோ. 5:8). மீண்டும் அவர், பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் "முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து" (1 தீமோ. 5:4) நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.*

**ஆவிக்குரிய குடும்பம்**

*சரீரப் பிரகாரமான குடும்பம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொண்டால், பின்வரும் கூற்றானது ஒரு தனிப்பட்ட அர்த்தத்தை மேற்கொள்ளுகிறது: மிகவும் முக்கியமான குடும்பம் ஒன்றுள்ளது - இது ஆவிக்குரிய குடும்பமாகும், இது தேவனுடைய குடும்பமாகும். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து" என்று எழுதினார் (எபே. 2:19). "வீட்டார்" என்ற வார்த்தையானது "குடும்பத்தார்" என்பதைக் கூறுகிற இன்னொரு வழிமுறையாக உள்ளது.* The New Century Version *என்ற வேதாகம மொழி பெயர்ப்பு, இவ்வசனத்தின் கடைசிப் பகுதியை "நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கு உரியவர்களாயிருக்கின்றீர்கள்" என்று தரவழைக்கிறது. கலாத்தியர் 6:10ல் இந்தக் குடும்பம் "விசுவாச குடும்பத்தார்" என்று அழைக்கப்படுகிறது. 1 பேதுரு 4:17ல் இது "தேவனுடைய வீடு" என்று அழைக்கப்படுகிறது.[19]*

*இந்த ஆவிக்குரிய குடும்பம் என்பது என்ன? இது சபையே என்று பவுல் கூறினார். அவர் தீமோத்தேயுவுக்கு, "தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" என்று கூறினார் (1 தீமோ. 3:15).*

*இந்தக் குடும்பத்தில் தேவன் நமது பிதாவாக இருக்கின்றார் (மத். 6:9; ரோமர் 1:7), மற்றும் நாம் அவரது பிள்ளைகளாக இருக்கின்றோம் (யோவா. 1:12, 13; ரோமர் 8:14, 15; எபே. 5:1; பிலி. 2:15; 1 யோவா. 3:1, 2). பவுல், "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே ..." என்று எழுதினார் (ரோமர் 8:16, 17). அப்போஸ்தலரான பவுல் தேவனிடத்திலிருந்து பின்வரும் வார்த்தைகளை மேற்கோள் காண்பித்தார்: "... உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள*

*கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொரி. 6:18). ஆவிக்குரிய இந்த வீட்டில், சபையின் பிற உறுப்பினர்கள் நமது சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் இருக்கின்றார்கள் (அப். 6:3; ரோமர் 16:1; 1 கொரி. 7:15; பிலே. 1, 2; யாக். 2:15).[20]*

*நாம் இந்தக் குடும்பத்தில் எவ்வாறு அங்கமாகின்றோம்? நாம் வசனத்தைக் கேள்விப்பட்டு அதின்படி செய்கின்றபோது நாம் இயேசுவின் குடும்பத்தில் அங்கமாவதாக அவர் கூறினார். நாம் "ஒரு புதிய பிறப்பின்" மூலம் தேவனுடைய பிள்ளைகளாகின்றோம் என்று யோவான் எழுதினார் (யோவா. 1:11-13; 3:3, 5ஐக் காணவும்). மக்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, தங்கள் பாவங்களில் இருந்த மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்புக்கென்று (தண்ணீரில் முழுக்காட்டப்படும்) ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் அங்கமாகின்றார்கள் என்று லூக்கா பதிவுசெய்துள்ளார் (அப். 2:36-38, 41, 47;[21] 1 கொரி. 12:13ஐக் காணவும்). இது, தேவனுடைய குடும்பத்தில் அங்கமாவதற்கு மூன்று வழிகள் உள்ளன என்று அர்த்தப்படுவதில்லை; மாறாக, இயேசுவும் யோவானும் லூக்காவும் ஒரு செயல்முறை பற்றியே குறிப்பிட்டார்கள். அந்தச் செயல்முறை என்ன?*

*நாம் வசனத்தைக் கேள்விப்படுகின்றோம், அது [நமக்குள்] விசுவாசத்தை உண்டாக்குகிறது (ரோமர் 10:17). பின்பு நாம் - நமது பாவங்களிலிருந்து மனந்திரும்புவதன் மூலம் (லூக். 13:3), இயேசுவின்மீது நமக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதன் மூலம் (மத். 10:32), மற்றும் ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்காட்டப்படுதல்) பெறுவதன் மூலம் (மாற். 16:16; அப். 22:16) - அந்த வசனத்தின்படி "செய்ய" வேண்டும். நாம் அதைச் செய்யும்போது, நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் "தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்கின்றோம்" (யோவா. 3:5). பேதுரு, "... நீங்கள் ... ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் ... அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று எழுதினார் (1 பேது. 1:22, 23). இவ்வாறு நாம் தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாகின்றோம்.*

*சரீரப்பிரகாரமான குடும்பத்திற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். சபை என்கிற தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்காக நான் அவருக்கு அதிக நன்றியைச் செலுத்துகின்றேன். இங்கு இவ்விரு குடும்பங்களையும் பற்றிய ஒரு சுருக்கமான ஒப்பீடு உள்ளது: சரீரப் பிரகாரமான குடும்பம் மற்றும் ஆவிக்குரிய குடும்பம் ஆகிய இரண்டுமே தேவனால் ஏற்படுத்தப்பட்ட நிறுவன அமைப்புகளாக உள்ளன. இவற்றில் முதலாவது இயல்பானதாக உள்ளது; இரண்டாவது இயற்கைக்கு மேலானதாக உள்ளது. முதலாவது ஒரு சரீரப்பிரகாரமான பிறப்பினால் பிரவேசிக்கப்படக் கூடியதாக உள்ளது, இரண்டாவது ஒரு ஆவிக்குரிய பிறப்பினால் பிரவேசிக்கப்படக் கூடியதாக உள்ளது. முதலாவது, பிறப்பு உற்பத்தியை நோக்கமாகக் கொண்டுள்ளது, இரண்டாவது மறுபிறப்பை நோக்கமாகக்*

கொண்டுள்ளது (தீத்து 3:5). முதலாவது காலத்திற்கு உரியதாக உள்ளது (மத். 22:30), இரண்டாவது காலத்திற்கும் நித்தியத்திற்கும் உரியதாக உள்ளது (எபி. 12:23). முதலாவது முக்கியமானதாக உள்ளது; இரண்டாவது அத்தியாவசியமானதாக/இன்றியமையாததாக உள்ளது.[22] முதலாவது நல்லதாக உள்ளது; இரண்டாவது மேன்மையானதாக உள்ளது. இவ்விரண்டிலும் பிரவேசித்தல் என்பது துன்புறுதலினாலேயே நடைபெறுகிறது என்பதையும் நான் சேர்க்க வேண்டும்: முதலாவதில் நமது தாய்மார்களின் துன்புறுதலினாலே பிரவேசிக்கின்றோம்; இரண்டாவதில் நமது பாவங்களுக்காக சிலுவையில் இயேசுவின் துன்புறுதலினால் பிரவேசிக்கின்றோம்! (அப். 20:28; எபே. 5:23, 25ஐக் காணவும்).

உண்மையான வாரிசுமுறைமை என்பது பொதுவான அனுபவம் கொண்டிருத்தல், பொதுவான ஆர்வம் கொண்டிருத்தல், பொதுவான கீழ்ப்படிதல் கொண்டிருத்தல் மற்றும் பொதுவான இலக்கைக் கொண்டிருத்தல் ஆகியவற்றிலேயே அமைந்துள்ளது என்று வில்லியம் பார்க்ளே என்பவர் எழுதினார்.[23] இவை யாவற்றையும் நாம் தேவனுடைய குடும்பமாகிய சபையில் காண்கின்றோம். சபையின் உறுப்பினர் ஒருவர், தாம் தமது மாம்சப் பிரகாரமான சகோதர சகோதரிகளிடத்தில் இருப்பதைக் காட்டிலும், கிறிஸ்துவுக்குள்ளான தமது சகோதர சகோதரிகளிடத்தில் அதிக நெருக்கமாக உணருவதாக நான் கேள்விப்பட்டுள்ள முறைகளை எண்ணிக் கணக்கிட இயலாது.

தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினராயிருத்தல் என்பது எவ்வளவு அற்புதமானதாக இருக்கும் என்று விளக்குவதற்கு, நான் வார்த்தைகளில் குறைவுபடுகின்றேன். அரசரைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அரச குடும்பத்தில் ஒரு உறுப்பினராக இருத்தல் என்பது கனத்திற்குரியதாக இருக்கும். திரளான செல்வம் கொண்ட ஒருவரைத் தந்தையாகப் பெற்றிருப்பதில் எண்ணற்ற அனுகூலங்கள் இருக்கும். ஆயினும் இவை எதுவும், கர்த்தருடைய குடும்பத்தில், தேவனை உங்கள் பிதாவாகக் கொண்டிருக்கும் நிலையுடன் ஒப்பிடப்படக் கூடியதாக இருப்பதில்லை! காலம் சென்ற C.R. நிக்கொல்ஸ் அவர்கள், "உலகத்தையே சொந்தமாய்க் கொண்டிருந்தது" போல் தாம் நடந்துகொள்வதாகக் குறிப்பிட்டார். அதற்கு, மதிப்பிற்குரிய அந்த முதிர்வயதான பிரசங்கியார், "எனது தந்தை அப்படியே செய்கிறார்! [இவ்வுலகமே அவருக்குச் சொந்தம்]" என்று பதில் அளித்தார்.

ஆவிக்குரிய குடும்பம் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், இந்தக் குடும்பத்தின் மீதான நமது பற்றுறுதியானது மற்ற எல்லாப் பற்றுறுதிகளையும் கடந்து நிற்க வேண்டும் என்று இயேசு போதித்தார்.[24] லூக்கா 14:26ல் அவர் பின்வரும் திகைப்பூட்டும் வார்த்தைகளைக் கூறினார்: "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்." கோர்டன் பாவெல் அவர்கள் ஒருமுறை தனது வானொலி உரையைக் கேட்பவர்களை, "இயேசுவின் கடினமான கூற்றுக்கள்" என்ற

*பிரசங்கத் தொடருக்காகத் தலைப்புக்களைப் பட்டியலிடும்படிக்கு அழைப்பு விடுத்தார். அவர் வேறு எந்த வசனப்பகுதியைக் காட்டிலும், லூக்கா 14:26ன் மீது பிரசங்கிக்கும்படியாக அதிகமான வேண்டுகோள் களைப் பெற்றார்.[25]*

*லூக்கா 14:26ல் உள்ள "வெறுத்தல்" என்ற வார்த்தையானது நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் "வெறுத்தல்" என்ற வார்த்தையின் அர்த்தத்தை குறிப்பதில்லை என்று நீங்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கலாம். இது உண்மையல்லவென்றால், இயேசு தமக்குத் தாமே முரண்படுகின்றவராக இருந்திருப்பார். மலைப் பிரசங்கத்தில் அவர், மக்கள் தங்கள் விரோதிகளைச் சிநேகிக்க வேண்டும் என்று போதித்திருந்தார் (மத். 5:44). நாம் நமது விரோதிகளைச் சிநேகிக்கவும் அதே வேளையில் நமது சொந்த வீட்டாரை வெறுக்கவும் வேண்டுமென்று அவர் கூறியிருக்க மாட்டார் என்பது நிச்சயமாகும்.*

*வேதாகமத்தில், "வெறுத்தல்" என்பது சிலவேளைகளில் "குறைவாக அன்புகூருதல்" என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது என்று நாம் கண்டறியும்போது முரண்பாடாகத் தோன்றும் இவ்விஷயமானது மறைகிறது (உபா. 21:15ஐக் காணவும்). லூக்கா 14:26ன் கூற்றை இதற்கு ஒப்புமையான இன்னொரு கூற்றான மத்தேயு 10:37உடன் ஒப்பிட்டுக் காணும்போது, "வெறுத்தல்" என்பது அர்த்தம் இதுவே என்பது நமக்கு உறுதியாகிறது: "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." இவ்விதமாகக் கிறிஸ்து, லூக்கா 14:26ல், நாம் அவரையும் தேவனையும் நேசிக்கும் அளவிற்குக் குறைவாகவே நமது சரீரப் பிரகாரமான குடும்பங் களை நேசிக்க வேண்டும் என்று கூறினார்.*

*ஆயினும், நாம் லூக்கா 14ன் தீவிரமான வார்த்தைகளை அவைகள் தங்களின் செயல்வலிவை இழக்கும் அளவுக்கு நீர்த்துப் போகச் செய்யக் கூடாது. தேவன் மீதும் அவரது குடும்பத்தின் மீதும் நாம் கொள்ளும் அன்பானது ஒப்பீட்டளவில் நமது சரீரப்பிரகாரமான குடும்பங்களின் மீது நாம் கொண்டுள்ள அன்பானது வெறுப்பு என்று அழைக்கப்படுமளவுக்கு மாபெரியதாக இருக்க வேண்டும்.[26]*

*இது, நாம் நமது இயல்பான குடும்பங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை என்று நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். சபையை/ராஜ்யத்தை முதலிடத்தில் வைக்கின்றவர்களில் (மத். 6:33) பெரும்பான்மையானவர்கள் தங்கள் சரீரப்பிரகாரமான குடும்பங்களின் உறவுமுறைகள் மேம்படுத்தப்படுவதைக் கண்டறிகின்றார்கள் (எபே. 5:25, 28, 33; 6:1-4).[27] வில்லியம் ஹென்றிக்சென் அவர்கள், "நமது ஆவிக்குரிய குடும்பத்தின்மீது பற்றுறுதியாய் இருத்தல் என்ற இந்த சட்டத்தைக் கடைப்பிடித்தலானது ... நாம் நமது பூமிக்குரிய குடும்பத்திற்கு மிகச் சிறந்த சேவையைச் செய்ய இயல்வதைத் தரவழைக்கிறது" என்று கூறினார்.[28]*

# உங்கள் இரண்டு குடும்பங்கள்

*நாம் இயேசுவின் இரண்டு குடும்பங்களைப் பற்றியும் கிறிஸ்தவரின் இரண்டு குடும்பங்களைப் பற்றியும் எடுத்துரைத்துள்ளோம். இப்போது நாம் உங்கள் இரண்டு குடும்பங்களை இன்னும் நெருக்கமாகக் கண்ணோக்குவோம்.*

**இரண்டும் இசைவில்**

உங்கள் இரண்டு குடும்பங்களும் ஒன்று கலந்திருக்கும்போது நீங்கள் "இரு உலகங்களிலும் மிகச் சிறந்ததை"க் கொண்டிருக்கின்றீர்கள்.

சற்று நேரத்திற்கு நாம் இப்பிரசங்கத்தைத் தொடங்கிய இடத்தில் நாம் கண்ட வரலாற்றிற்குத் திரும்புவோம். இந்த நிகழ்ச்சியைப் பதிவு செய்ததில் இதன் எழுத்தாளர்கள் வழக்கம்போலவே, நமக்கு நிகழ்ச்சிகளை வரிசை முறைமையாகக் கூறுவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. இயேசுவின் கடிந்து கொள்ளுதலுக்குப் பின்பு, அவரது தாயும் சகோதரர்களும் அருகிலேயே இருந்தார்களா? மக்கட்கூட்டத்திற்கு இயேசு தமது போதனையை முடித்தபின்பு, அவர் தமது குடும்பத்தாரைச் சந்தித்தாரா? இவைகளைப் பற்றி நமக்குக் கூறப்படவில்லை. ஒன்றை மட்டும் நாம் நிச்சயமாகக் கூற முடியும்: இயேசு தமது ஊழியத்திலிருந்து தம்மை நீக்கிப்போடுவதற்கு, அவர்களையோ [தமது குடும்பத்தாரையோ] அல்லது வேறு எவரையுமோ அனுமதித்ததில்லை. கட்டாயப்படுத்தப்பட்ட **ஓ** மற்றும் **பொ** வுக்காக[29] எவரொருவரும் அவரை வீட்டிற்கு இழுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். இயேசு தமது ஊழியத்தில் ஒரு இடைவேளையைக் கொண்டிருந்தபோது, தமது குடும்பத்தாரைப் புறக்கணிக்காமல் இருந்தார் என்பதிலும் நாம் நியாயமான வகையில் உறுதியாய் இருக்க முடியும். அவரது தாயாரும் அவரது சகோதரர்களும் அவரது வாழ்வின் விவரங்களில் மீண்டும் தோன்றுவார்கள், அவர்களுடனான பிணைப்பை இயேசு முறித்துக் கொண்டார் என்பதற்கான குறிப்பு எதுவும் இருப்பதில்லை (யோவா. 7:2-10; 19:25-27).

ஆயினும் இயேசுவின் குடும்பத்துடன் அவருக்கிருந்த உறவுமுறைக்குத் திரும்புவதில், இந்த வரலாறு நிறைவில் ஒரு மகிழ்வான முடிவைக் கொண்டிருந்ததை வலியுறுத்துதல் என்பதே எனது நோக்கமாக உள்ளது. முடிவில், அவருடைய சகோதரர்கள் அவரை விசுவாசித்தார்கள். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர் தந்த தரிசனங்களில் ஒன்று அவரது அரை சகோதரரான யாக்கோபுவுக்கு அருளப்பட்டது (1 கொரி. 15:7). பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருக்கையில் அவர்களுடன் இயேசுவின் தாயாரும் சகோதரர்களும் இருந்தார்கள் (அப். 1:14). யாக்கோபு, எருசலேமில் இருந்த சபையின் முன்னோடிகளில் ஒருவரானார் (அப். 12:17; 15:13; 21:18; கலா. 1:19) மற்றும் இவர் யாக்கோபு நிருபத்தையும் எழுதினார் (யாக். 1:1). இயேசுவின் அரைசகோதரர்களில் இன்னொருவரான யூதா, ஒரு நிருபத்தை எழுதினார் (யூதா 1). சபை வரலாற்றாளரான யூசுபியஸ் என்பவர், இயேசுவின் மற்ற சகோதரர்களும் பல்வேறு இடங்களில் இருந்த சபைகளில் முன்னின்று

*நடத்துபவர்களாகச் செயல்பட்டார்கள் என்று கூறினார் (1 கொரி. 9:5ஐக் காணவும்).*

*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இயேசுவின் சரீரப்பிரகார மான குடும்பம், கடைசியில் அவரது ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கமா யிற்று! எனது தந்தையும் தாயும் கிறிஸ்தவர்களாக இருப்பதற்காக, எனது மனைவி ஒரு கிறிஸ்தவளாக இருப்பதற்காக, எனது மூன்று மகள்களும் எனது இரண்டு மருமகன்களும் கிறிஸ்தவர்களாக இருப்பதற்காக, எனது இரண்டு பேரக்குழந்தைகளில் மூத்தவரனான சேத் டேவிட் சில நாட்களுக்கு முன்பு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதற்காக நான் நன்றி நிறைந்தவனாக இருக்கின்றேன்! தேவனுடைய அரியணைச் சுற்றிலும் எனக்கு அன்பார்ந்தவர்களுடன் கரம் இணைத்து அவரது துதியைப் பாடுதலைக் காட்டிலும் மாபெரும் விருப்பம் வேறெதுவும் எனக்கு இல்லை!*[30]

*நீங்கள் இவ்விதமான மகிழ்ச்சியைக் கண்டடைய வேண்டும் என்பதே உங்களுக்காக எனது ஜெபமாயுள்ளது.*

### *இரண்டும் முரண்பாட்டில்*

*துரதிர்ஷ்டவசமாக, இரண்டு குடும்பங்களும் எப்போதுமே ஒன்று கலந்து இருப்பதில்லை. சில வேளைகளில் தீவிரமான முரண்பாடு ஏற்படுகிறது. இதை இயேசு முன் எதிர்பார்த்தார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே (மத். 10:34-36).*

*அவர் தமது சீஷர்களிடத்தில், "பெற்றோராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலை செய்வார்கள்" என்று கூறினார் (லூக். 21:16). இவ்விரு வசனங்களும், குடும்பங்களில் கிறிஸ்து பிரிவினையை விரும்பினார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, சுவிசேஷத்தின் இயல்பும் அது கேட்கின்ற ஒப்புக்கொடுத்தலும் உலக சிந்தை உடையவர்களால் புரிந்து கொள்ளப்படாது என்பதையும் ஆகையால் அவ்வப்போது சச்சரவு என்பது தவிர்க்க இயலாததாக இருக்கும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.*

*நான் எதைப் பற்றிப் பேசுகின்றேன் என்று உங்களில் சிலர் மிகச் சரியாக அறிந்திருப்பீர்கள். இயேசு தமது சுயதேவைகளுக்கும் மேலாக தேவனு டைய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தபோது, அவர் மதிமயங்கி யிருந்தார் என்று அவரது நண்பர்களும் குடும்பத்தாரும் நினைத்தார்கள். நீங்கள் சரியானதை செய்வதற்குத் தீர்மானித்தபடியினால் "பைத்தியக் காரர்" என்று அழைக்கப்பட்டிருக்கலாம். விஷயம் அதுவாக இருந்தால், அது கடினமானதாக உள்ளது, அல்லவா?*

*நீங்கள் உங்கள் வீட்டில் அல்லது உங்கள் நண்பர்களின் வட்டாரத்தில் கலகத்தைத் தூண்டுவதற்கு உங்கள் வழியை விட்டு விலக வேண்டும் என்று நான் ஆலோசனை கூறுவதில்லை. பவுல், "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று எழுதினார் (ரோமர் 12:18).[31] பிறருடன் நட்புறவாயிருக்க நீங்கள் மிகச் சிறந்த வகையில் முயற்சி செய்திருந்தும்கூட, உங்கள் குடும்பம் இன்னமும் உங்களைக் கைவிட்டிருந்தால், கர்த்தர் உங்களைக் கைவிடமாட்டார் என்று அறிவதில் ஆறுதல் அடையுங்கள் என்று நான் கூறுகின்றேன் (எபி. 13:5). அவரது வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள்:*

> *அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மாற். 10:29, 30).*

## *முடிவுரை*

*உங்கள் இரண்டு குடும்பங்கள் ஒன்றின் மீதொன்று கவிந்து இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். விஷயம் இதுவாக இல்லையென்றால், நீங்கள் நேசிக்கின்றவர்களை தேவனுடைய குடும்பமான சபைக்குள் கொண்டுவர உங்கள் சக்திக்கு உட்பட்ட ஒவ்வொன்றையும் செய்யுங்கள் என்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த முடிவை நிறைவேற்ற முயற்சி செய்வதைக் காட்டிலும் வேறு மாபெரும் முயற்சி எதுவும் இருப்பதில்லை. நீங்கள் இதில் வெற்றி பெறாவிட்டாலும், உங்களால் முடிந்ததை நீங்கள் செய்தீர்கள் என்று அறிவதில் நீங்கள் ஆறுதல் அடைவீர்கள்.*

*இதை நிறைவேற்றுவதில் நம்பிக்கை எதையாவது கொண்டிருப்பதற்கு, முதலில் நீங்கள் தேவனுடைய குடும்பத்தில் விசுவாசம் நிறைந்த உறுப்பினராக இருக்க வேண்டும். நீங்கள் "பின்பற்றுபவர்" என்பதில் இருந்து "குடும்பத்தவர்" என்ற நிலைக்கு நகர்ந்துள்ளீர்களா? நீங்கள் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக "மறுபடியும்" பிறந்துள்ளீர்களா? நீங்கள் உங்கள் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்துள்ளீர்களா? இயேசுவுடனான நமது உறவுமுறையை நாம் தீவிரமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புவதை, நாம் படித்துள்ள வரலாறு தெளிவாக்குகிறது. இதில் நாங்கள் உங்களுக்குக் உதவக்கூடும் என்றால், எங்களுக்கு அறிவியுங்கள் ... .*

## குறிப்புகள்

[1]*"ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தின் அறிமுகப் பகுதியில் காணவும்.* [2]*யோவான் 7ன் வசனங்கள் 3ம் 4ம் வசனம் 5ன் வெளிச்சத்தில் கண்ணோக்கப்பட வேண்டும்.* [3]*இதே போன்றதொரு குற்றச்சாட்டைக் கிறிஸ்துவின் விரோதிகள் ஒரு வேளையில் ஏற்படுத்தினார்கள் (யோவா. 10:20). கிறிஸ்து இவ்விதமாக நடத்தப் படும் தேவனுடைய முதல் அல்லது கடைசி ஊழியக்காரர் அல்ல (2 இரா. 9:11; அப். 26:24, 25 ஆகிய வசனங்களைக் காணவும்).* [4]*உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் "அது ஒரு கடைசி வைக்கோலாக மட்டுமே இருந்தது" என்று கூறுவது உண்டு.* [5]William Barclay, *The Gospel of Mark,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 76-77. *இதைத் தொடர்ந்து வரும் பத்திகள், பார்க்ளேயின் கருத்துக்கள்மீதான எனது தொகுப்புரையாக உள்ளன.* [6]*அமெரிக்காவில் நான், ''சிவந்த கழுத்துக்களும், தாழ்ந்த வாழ்வும் மற்றும் மனக்குறைவும் [உடையவர்]" என்று கூறுவதுண்டு.* [7]James Burton Coffman, *Commentary on Mark* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1975), 63. [8]*மரியாளுக்கு இனத்தாளின் மகன் (எலிசபெத்தின் மகனான யோவான் ஸ்நானன்) ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தார், அவரது மரணம் நிச்சயமாக வரக்கூடியதாகத் தோன்றிற்று. எந்தத் தாய்தான் இதைக் குறித்துக் கவலைப்படாது இருப்பாள்?* [9]*இவ்வசனத்தை மாற்கு 2:1, 2உடன் ஒப்பிடவும்.* [10]*மாற்கு சுவிசேஷ விவரத்தில், "அவர்கள் அவரிடத்தில் ... கூறினார்கள்" என்றுள்ளது.*

[11]Charles R. Erdman, *The Gospel of Mark* (Philadelphia: Westminster Press, 1967), 74. [12]*இந்தப் பிரசங்கமானது, இதற்கு முந்திய பாடத்திற்குப் பின்பு பிரசங்கிக்கப் பட்டதென்றால், நீங்கள், "நான் மறுபடியும் இதை வலியுறுத்த விரும்புகின்றேன்" என்று கூற விழையலாம்.* [13]William Arnot, *Lesser Parables of Our Lord* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1884), 115. [14]*அந்தப் பட்டியலில் இயேசு "தந்தை"யை உள்ளடக்கவில்லை. ஏனெனில் அந்தப் பணிப்பொறுப்பானது தேவன் ஒருவருக்கு மட்டுமே உரித்தானதாக இருந்தது (மத். 23:9).* [15]*ஏதாவதொரு காலகட்டத்தில் சபையின் உறுப்பினர்களாயிருந்துள்ளவர்கள், மற்ற கிறிஸ்தவர்கள் சகோதரர்களாக, சகோதரிகளாக மற்றும் தங்களுக்குத் தாய்மார்களைப் போலவும் கூட இருந்ததை அறியும் சிலாக்கியத்தைப் பெற்றிருப் பார்கள் (1 தீமோ. 5:1, 2).* [16]*இயேசு மாத்திரமே நாம் தேவனை அறியக்கூடிய வழியாக உள்ளார் என்பதை நீங்கள் வலியுறுத்த விரும்பலாம் (மத். 11:27). ஆகையால், தேவனுடைய சித்தத்தைக் கேள்விப்பட்டு அதின்படி செய்வதற்கு நாம் கிறிஸ்து போதித்தவற்றைக் கேட்டு அதின்படி செய்ய வேண்டும்.* [17]This sentence was adapted from R. C. H. Lenski, *The Interpretation of St. Luke's Gospel* (Minneapolis: Augsburg Publishing House, 1946), 461. [18]This phrasing is borrowed from Galatians 5:2; KJV. For similar usage in the KJV, see Mark 8:36; Hebrews 4:2; James 2:14, 16. [19]*எபேசியர் 3:15, தேவனுடைய குடும்பத்தைக் குறிக்கும் இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. எபேசியர் 3:14, 15ஐ* NIV *வேதாகமமானது,* "For this reason I kneel before the Father, from whom his whole family in heaven and on earth derives it name" *என்று தரவழைத்துள்ளது.* [20]*இயேசு நம்மையும் "சகோதரர்கள்" என்று அழைக்கின்றார் (எபி. 2:11).*

[21]KJV*யில் அப். 2:47ல் "சபை" என்ற வார்த்தை உள்ளது, ஆனால்* NASB*யில் இவ்வார்த்தையில்லை. ராஜ்யம்/சபை (மத். 16:18, 19) அப். 2ல் நிலைநாட்டப் பட்டதால் (அப். 1:6-9; 2:1-4ஐக் காணவும்), வசனம் 47ல் "அவர்களுடன்" என்று குறிப்பிடப்படும் மக்கள் அந்த ராஜ்யத்தின் குடிமக்களாக, சபையின் உறுப்பினர் களாக இருந்தார்கள் என்று நாம் அறிகின்றோம்.* [22]*அதாவது, இரண்டாவதானது பரலோகம் செல்வதற்கு இன்றியமையாத தாகவும் உங்கள் வாழ்விற்கான தேவனு*

*டைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாததாகவும் உள்ளது.* [23]William Barclay, *The Gospel of Mark,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 82-83. [24]*லூக்கா 9:59-62 வசனப்பகுதியானது, ஒருவரின் குடும்பத்தின்மீதான பற்றுறுதி குறித்த சரியற்ற முன்னுரிமைகளின் விவரிப்பாகப் பயன்படுத்தப்படலாம்.* [25]Gordon Powell, *Difficult Sayings of Jesus* (N.p.: Fleming H. Revell Co., 1962), 21. [26]*இந்தக் கூற்றுக்கு விவரிப்பு/பெருக்கப்படுத்துதல் தேவைப்பட்டது என்றால், நீங்கள் சில விவரிப்புகளை முயற்சி செய்து பார்க்கலாம்: "நான் ஒரு பையனாக இருந்தபோது, நான் ஓடமுடியும் என்று நினைத்தேன் - ஆனால் கடைசியில் நான் உலகத்தரம் வாய்ந்த ஓட்ட நிபுணரைக் கண்டபோது, என்னால் ஓடவே முடியாது என்பது போன்றே தோன்றிற்று." "கல்லூரியில் எனது முதல் சில ஆண்டுகளில், நான் எனது பெரும்பான்மையான துணிகளை ஒரு தொட்டியில் துவைத்தேன். நான் எனது வெள்ளை உடைகளை - நிஜமாகவே ஒரு வெள்ளைப் பின்னணியில் காணும் வரையிலும் - வெள்ளையாக இருந்தன என்றே நினைத்தேன். பின்புதான் அவைகள் வெள்ளையே அல்ல என்பதை உணர்ந்தேன்."* [27]*ஆயினும் சிலவேளைகளில், குடும்பத்தின் பிற உறுப்பினர்களின் பகைமை உணர்வின் நிமித்தமாக உறவுகள் சிதைவுபடத் தொடங்குகின்றன. இது இப்பிரசங்கத்தின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.* [28]William Hendriksen, *New Testament Commentary: The Gospel of Luke* (Grand Rapids, Mich.: Baker Book House, 1978), 437. [29]*ஓ மற்றும் பொ என்பது ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு என்பதாக உள்ளது. ஒரு கும்பலானது இயேசுவை மலையிலிருந்து தள்ளிவிடுவதை அவர் இயேசு தடுத்திருக்க முடியுமென்றால் (லூக். 4:28-30), அவர் தாம் விரும்பாத இடத்திற்குத் தம்மை இழுத்துச் செல்லுவதிலிருந்து தமது நான்கு சகோதரர்களைத் தடுக்கவும் முடியுமே.* [30]This scene is described in David Roper, "The Night I Went to Heaven" (tract) (Broken Arrow, Okla.: Christian Communications, n.d.), 11-12.

[31]*ஒரு பெண் கிறிஸ்தவராயிருந்து, அவளது கணவர் கிறிஸ்தவராயிராதபோது, அடிக்கடி முரண்பாடு எழுகிறது. இந்தச் சூழ்நிலையைக் கிறிஸ்தவ மனைவியர்கள் கையாள வேண்டிய விதம் குறித்துப் பேதுரு, 1 பேதுரு 3:1-6ல் கூறினார்.*

# படிப்பு உதவிகள்

# ஏரோதுகளில் சிலர்

*பின்வரும் அட்டவணையானது மகா ஏரோதுவின் மகன்களில் மூன்றுபேர்களையும் (இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மனைவியர்களுக்குப் பிறந்தவர்கள்) அவர்களில் ஒருவருடைய சந்ததியாரில் இருவரையும் காண்பிக்கிறது.*[1] *இந்த அட்டவணையானது ஏரோது அந்திப்பாவுக்கு ஏரோதியாளுடன் இருந்த உறவைப் புரிந்து கொள்ள உதவக்கூடும்.*




*"ஏரோது பிலிப்பு 1" என்பவன் லூக்கா 3:1ல் குறிப்பிடப்பட்ட காற்பங்கு தேசாதிபதியல்ல. ஏரோது பிலிப்பு 1 என்பவன் ரோமாபுரிக்கு நாடு கடத்தப்பட்டான். சலோமி என்பவள் ஏரோதியாளுக்கும் ஏரோது பிலிப்பு 1 என்பவனுக்கும் மகளாய் இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது.*

---

*குறிப்பு*

[1]*ஏரோது குடும்பம் பற்றிய அதிகம் முழுமையான அட்டவணைக்கு, "அப். நடபடிகள் 3" என்ற புத்தகத்தில் 68ம் பக்கத்தில் காணவும்.*

# கலிலேயாக் கடல்

*கலிலேயாக் கடல் யோர்தான் நதிப்பள்ளத்தாக்கின் வடக்கு முனையில் உள்ளது. இது மதில் சூழ்ந்த நகரம் மற்றும் மாவட்டம் ஒன்றின் நினைவாக (யோசு. 19:35; 1 இரா. 15:20) கின்னரேத் (அல்லது கின்னரோத்) கடல் என்று பழைய ஏற்பாட்டில் அழைக்கப்பட்டது (எண். 34:11; யோசு. 12:3; 13:27). இது புதிய ஏற்பாட்டில் கலிலேயா மாகாணத்தின் பெயரினால், வழக்கமாக கலிலேயாக் கடல் என்று அழைக்கப்படுகிறது. இதை லூக்கா கெனசெரேத் கடல் என்று குறிப்பிட்டார் (லூக். 5:1); கெனசெரேத் என்பது இந்தக் கடலின் மேற்குப் பகுதியில் இருந்த ஒரு பகுதியாகும் (மத். 14:34). இந்தக் கடல் பிற்பாடு இதன் மேற்குக் கரையில் இருந்த ஒரு நகரத்தின் பெயரால் திபேரியாக் கடல் (யோவா. 6:1; 21:1) என்று அழைக்கப்பட்டது. குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக நாம் தண்ணீர் நிறைந்த இப்பகுதியைக் கலிலேயாக் கடல் என்று மட்டுமே குறிப்பிடுவோம்.*

*இந்தக் கடலானது பேரிக்காய் வடிவத்தில், சுமார் பதிமூன்றுக்கு ஏழு மைல்கள் அளவுடையதாக, சராசரி கடல் மட்டத்தில் இருந்து சுமார் எழுநூறு அடிகள் தாழ்ந்ததாக அமைவுபெற்றுள்ளது. இந்தக் கடலின் உயர்ந்தபட்சம் ஆழம் சுமார் 150 அடிகளாக உள்ளது. இது குன்றுகளாலும் மலைகளாலும் சூழப்பட்டுள்ளது, அவைகள் அறுநூறு முதல் ஆயிரம் அடிகள் வரை உயரம் கொண்டுள்ளன. அவ்வப்போது குளிர்ந்த காற்றானது உயர் மட்டங்களிலிருந்து கடலுக்குள் அவசரமாக நுழைவதுண்டு, இது கடலின் மேல்மட்டத்தில் மாபெரும் அலைகளை உருவாக்கி வீசியடிக்கச் செய்யும்.*

*இந்தக் கடலானது தண்ணீரைப் பெற்றுக் கொண்டும் வெளியேற்றிக் கொண்டும் இருப்பதால், இதன் தண்ணீரானது தூயதும் தெளிவானதுமாக இருப்பதுடன், இதில் ஏராளமான மீன்களும் உள்ளன (இது சவக்கடலின் நிலைமைக்கு நேர்மாறானதாக உள்ளது). கிறிஸ்துவின் காலத்தில், இதைச் சுற்றிலும் நகரங்கள் இருந்தன, அந்த நகரங்களில், இந்தக் கடலின் ஆழங்களில் பிடிக்கப்பட்ட மீன்களை விற்க ஆயத்தச் சந்தைகள் இருந்தன. "மீன் பிடிக்க, போக்குவரத்திற்கு உதவ, மற்றும் உல்லாசப் பயணம் செல்ல என்று ஆயிரக்கணக்கில் படகுகள் இந்தக் கடலின் மேற்பரப்பில் போய் வந்து கொண்டிருந்தன, அதனால் அந்தப்பகுதி முழுவதும் சக்தி மற்றும் வளமை ஆகியவற்றின் கவன ஈர்ப்பு மையமாக விளங்கிற்று."[1]*

---

*குறிப்பு*

[1]James Stalker, *The Life of Jesus Christ* (Chicago: Fleming H. Revell Co., 1981), 59.


பெனிக்கியா
தாண்
கலிலேயா
ஹாட்டின்
குன்று
கப்பர்நகூம்
கெனசரேத்
சமவெளி
கலிலேயாக்
கடல்
கானா?
நாசரேத்
திபேரியா
எஸ்தரலோன் பள்ளத்தாக்கு
சமாரியா

# இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்:

*மாபெரும் கலிலேய ஊழியத்தின் தொடக்கம்* — *கலிலேயா*
*(மத். 4:12; மாற். 1:14, 15; லூக். 4:14, 15)*

*கப்பர்நகூமில் வந்த வாசம்பண்ணுதல்* — *கப்பர்நகூம்*
*(மத். 4:13-17; லூக். 4:31)*

*முழுநேர சீஷத்துவத்திற்கு மனிதர்களை அழைத்தல்* — *கப்பர்நகூம்*
*(மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11)*

*ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவி பிடித்திருந்தவனைக் குணமாக்குதல்* — *கப்பர்நகூம்*
*(மாற். 1:21-28; லூக். 4:31-37)*

*குணமாக்குதலின் பல அற்புதங்கள்* — *கப்பர்நகூம் & கலிலேயா*
*(மத். 4:23-25; 8:14-17; மாற். 1:29-39; லூக். 4:38-44)*

*தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்குதல்* — *கலிலேயா*
*(மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-15)*

*திமிர்வாதக்காரர் ஒருவரைக் குணமாக்குதல்* — *கப்பர்நகூம்*
*(மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26)*

*மத்தேயுவை அழைத்தல்; மத்தேயு விருந்தளித்தல்* — *கப்பர்நகூம்*
*(மத். 9:9-17; மாற். 2:13-22; லூக். 5:27-39)*

*பெதஸ்தா குளத்தின் அருகில் குணமாக்குதல்* — *எருசலேம்*
*(யோவா. 5:2-47)*

*ஓய்வுநாள் பாரம்பரியங்களுக்கு எதிரான தற்காப்புவாதம்* — *கப்பர்நகூம்*
*(மத். 12:1-14; மாற். 2:23-3:6; லூக். 6:1-11)*

*பன்னிரு அப்போஸ்தலர்களை நியமித்தல்* — *ஹாட்டின் ஹார்ன்ஸ் (?)*
*(மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-19)*

*மலைப் பிரசங்கம்* — *ஹாட்டின் ஹார்ன்ஸ் (?)*
*(மத். 5-7; லூக். 6:20-49)*

*நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்குதல்* — *கப்பர்நகூம்*
*(மத். 8:1, 5-13; லூக். 7:1-10)*

*விதவையின் மகனை உயிரோடெழுப்புதல்* — *கலிலேயா*
*(லூக். 7:11-17)*

*இரண்டாம் கலிலேயப் பயணம்* — *கலிலேயா*
*(லூக். 8:1-3)*


பலஸ்தீனம்
சீரியா
திராகொனித்தி
சீதோன்
பெனிக்கியா
தீரு
தாண்
பாசான்
மாவட்டம்
கலிலேயா
கொரேசின்
கப்பர்நகூம்
பெத்சாயிதா
ஹாட்டின்
ஹார்ன்ஸ்
கலிலேயாக்
கடல்
கானா?
நாசரேத்
நாயீன்
தெக்கப்போலி
எஸ்தரலோன்
சமவெளி
அயினோன்?
சாலிம்?
சமாரியா
மகா கடல்
யோர்தான் நதி
சீகார்
கெரிசீம்
மலை
பெரேயா
“யோர்தானுக்கு
அப்பால்”
எருசலேம்
பெத்லகேம்
யூதேயா
சவக்
கடல்
மெக்காரூஸ்
இதுமேயா

# அப்போஸ்தலர்கள்

• **பேதுரு** - *இவர் சீமோன் என்றும் அறியப்பட்டார். இவரது பெயர், "பாறை" என்று அர்த்தப்படும் கேபா என்று மாற்றப்பட்டது. இவர் யூதர்களின் மத்தியில் சுவிசேஷ ஊழியத்தை நடத்தினார் மற்றும் 1, 2 பேதுரு நிருபங்களை எழுதினார். இவர் மாற்கு சுவிசேஷத்தை எழுதுவதிலும் உதவியிருக்கக் கூடும்.*

• **அந்திரேயா** - *இவர் பேதுருவின் சகோதரர், இவர் பேதுருவை இயேசுவிடம் அறிமுகப்படுத்தினார் (யோவா. 1:40-42). இந்த சகோதரர்கள் பெத்சாயிதா ஊரில் மீனவர்களாயிருந்தார்கள்.*

• **யாக்கோபு** - *இவர் யோவானின் சகோதரர். இவ்விருவரும் செபதேயு மற்றும் சலோமி ஆகியோரின் மகன்களாவார்கள், இவர்கள் பெத்சாயிதா வில் தங்கள் தந்தையுடன் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சில வேளை களில் "பெரிய" யாக்கோபு என்று அழைக்கப்பட்ட இவர் எருசலேமிலும் யூதேயாவிலும் பிரசங்கித்தார். இவர் கி.பி. 44ல் ஏரோதுவினால் தலை வெட்டப்பட்டு, அப்போஸ்தலர்களில் முதல் ரத்தசாட்சியாக மரித்தார்.*

• **யோவான்** - *இவர் யாக்கோபின் சகோதரர். இவ்விருவரும் தங்கள் தந்தையுடன் மீனவர்களாய் இருந்தார்கள் (மாற். 1:19, 20). இவ்விரு சகோதரர்களையும் இயேசு "இடிமுழக்கத்தின் மக்கள்" என்று அழைத்தார் (மாற். 3:17). யோவான், சிறிய ஆசியாவில் இருந்த சபைகளில் விசேஷமாக எபேசுவில் ஊழியம் செய்தார். கி.பி. 95ல் இவர் பத்முதீவுக்கு நாடு கடத்தப்பட்டார், அங்கே இவர் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார். இவர் தம் எழுத்துக்களில் யோவான் சுவிசேஷமும், 1, 2, 3 யோவான் நிருபங்களும் உள்ளடங்குகின்றன.*

• **பிலிப்பு** - *இவர் பெத்சாயிதா ஊரிலிருந்து வந்தவர். இவர் இயேசுவைப் பற்றி நாத்தான்வேலுக்குக் கூறினார் (யோவா. 1:44-46).*

• **பற்தொலோமேயு** - *இவர் அநேகமாக யோவான் சுவிசேஷ விவரத்தின்படி(யோவா. 1:44-46)யான நாத்தான்வேலாக இருக்கலாம். இவர் கலிலேயாவின் கானா என்ற ஊரைச் சேர்ந்தவர்.*

• **தோமா** - *இவர் திதிமு ("இரட்டையர்") என்றும் அழைக்கப்பட்டார் (யோவா. 11:16; 20:24; 21:2). இவர் கலிலேயாவைச் சேர்ந்தவர். சீரியா நாட்டில் இவர் கிறிஸ்தவத்தை நிலைநாட்டினார் என்று அந்த நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களால் உரிமைகோரப்பட்டுள்ளார்; இவர் பெர்ஸியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலும் சபைகளை நிலைநாட்டியிருக்கக் கூடும்.*

• **மத்தேயு** - *இவர் லேவி என்றும் அறியப்பட்டார், இவர் அல்பேயு வின் மகனாயிருந்தார் (மத். 9:9; மாற். 2:14). இவர் கப்பர்நகூம் ஊரைச் சேர்ந்தவர், ரோம அரசாங்கத்திற்கு வரிவசூலிப்பவராகப் பணியாற்றினார்.*

• **யாக்கோபு** - *சில வேளைகளில் இவர் "சின்ன" யாக்கோபு என்று அழைக்கப்பட்ட இவர், அல்பேயு மற்றும் மேரி ஆகியோரின் மகனாயிருந் தார் (மத். 10:3; 27:56). (யாக்கோபுவும் மத்தேயுவும் சகோதரர்களாய்*

*இருந்திருக்கக் கூடுமா? இது நமக்குத் தெரியாது.) இவர் கலிலேயாவில் இருந்து வந்தவர் மற்றும் இவர் யாக்கோபு நிருபத்தை எழுதியிருக்கிறார்.*

• **ததேயு** - *யாக்கோபின் மகன், இம்மனிதர் யூதாஸ் அல்லது யூதா என்றும் அழைக்கப்பட்டார் (மத். 10:3; லூக். 6:16). இவர் ஒரு கலிலேயர்.*

• **செலோத்தே என்ற சீமோன்** - *இவர் கானானியன் என்றும் அழைக் கப்பட்டார், இது "செலோத்தே" என்பதற்கு இன்னொரு வார்த்தையாகும், இது அரமாயிக் சொற்றொடரில் இருந்து ஒலிபெயர்க்கப்பட்டது. சீமோன் கலிலேயாவிலிருந்து வந்தவர்.*

• **யூதாஸ்காரியோத்** - *"ஸ்காரியோத்" என்பது அநேகமாக, இவர் யூதேயாவில் இருந்த கீரியோத் என்ற ஊரில் இருந்து வந்தவர் என்பதைச் சுட்டிக் காண்பிப்பதாக இருக்கலாம். இவர் இயேசுவைக் காட்டிக் கொடுத்து விட்டு தற்கொலை செய்துகொண்டார்.*

• **மத்தியா** - *யூதாஸ்காரியோத்தின் மரணத்திற்குப் பின்பு அவரது இடத்தை நிரப்புவதற்காக இவர் தேர்ந்து எடுக்கப்பட்டார் (அப். 1:26). அப். 1:22ல் இருந்து, மத்தியா "யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு இயேசு பரத்திற்கேறிய வரைக்கும்" இயேசுவோடும் அவரது சீஷர்களோடும் இருந்தார் என்று நாம் அறிகின்றோம்.*

• **பவுல்** - *முதலில் சவுல் என்றும் பின்பு பவுல் என்றும் அறியப்பட்ட இவர் சபையை உபத்திரவப்படுத்தியவர், பின்பு புறஜாதிகளுக்கு விசேஷித்த அப்போஸ்தலராக இருக்கும்படி அழைக்கப்பட்டார் (ரோமர் 11:13; 1 கொரி. 1:1; 9:1; 15:9; 2 கொரி. 12:12; கலா. 1:1; 1 தீமோ. 2:7). இவருக்கு இயேசு தமஸ்கு செல்லும் சாலையில் தரிசனமானார். இவர் புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை எழுதினார்.*

*அப்போஸ்தலர்கள் என்பவர்கள் கர்த்தருடைய விசேஷித்த செய்தி யாளர்களாக, அவரால் நியமிக்கப்பட்டவர்களாக, அவரது வாழ்வு மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிச் சொந்தமான சாட்சியம் தரக்கூடியவர்களாக இருந்தார்கள். யூதாஸ்காரியோத்திற்குப் பதிலாக ஒருவர் நியமிக்கப்பட்ட போது, அந்தப் புதிய அப்போஸ்தலர் இயேசுவின் பூமிக்குரிய ஊழியம் முழுவதிலும் அவருடனும் அவரைப் பின்பற்றியவர்களுடனும் இருந்திருக்க வேண்டியதாயிற்று (அப். 1:21). பிற்பாடு, பவுலைப் புறஜாதியாருக்கு அப்போஸ்தலராகும்படித் தகுதிப்படுத்துவதற்காக அவருக்குக் கிறிஸ்து தரிசனமானார் (1 கொரி. 15:8ஐக் காணவும்) இங்கு பட்டியலிடப்பட்டுள்ள தகவல்களில் சில,* Frank L. Cox, "The Glorious Company of the Apostles," *The Minister's Monthly* (February 1960): 254. *என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.*

# வேத வசனங்களில்* பட்டியலிடப்பட்டுள்ள அப்போஸ்தலர்கள்

| *மத்தேயு 10:2-4* | *மாற்கு 3:16-19* | *லூக்கா 6:13-16* | *அப். நட. 1:13* |
|---|---|---|---|
| *சீமோன் பேதுரு* | *சீமோன் பேதுரு* | *சீமோன் பேதுரு* | *பேதுரு* |
| *அந்திரேயா* | *யாக்கோபு* | *அந்திரேயா* | *யோவான்* |
| *யாக்கோபு* | *யோவான்* | *யாக்கோபு* | *யாக்கோபு* |
| *யோவான்* | *அந்திரேயா* | *யோவான்* | *அந்திரேயா* |
| *பிலிப்பு* | *பிலிப்பு* | *பிலிப்பு* | *பிலிப்பு* |
| *பர்த்தொலொமேயு* | *பர்த்தொலொமேயு* | *பர்த்தொலொமேயு* | *தோமா* |
| *தோமா* | *மத்தேயு* | *மத்தேயு* | *பர்த்தொலொமேயு* |
| *மத்தேயு* | *தோமா* | *தோமா* | *மத்தேயு* |
| *அல்பேயுவின் மகன் யாக்கோபு* | *அல்பேயுவின் மகன் யாக்கோபு* | *அல்பேயுவின் மகன் யாக்கோபு* | *அல்பேயுவின் மகன் யாக்கோபு* |
| *ததேயு* | *ததேயு* | | |
| *செலோத்தே என்னப்பட்ட சீமோன்*** | *செலோத்தே என்னப்பட்ட சீமோன்* | *செலோத்தே என்னப்பட்ட சீமோன்* | *செலாத்தே என்னப்பட்ட சீமோன்* |
| | | *யாக்கோபுவின் மகனான யூதா* | *யாக்கோபுவின் மகனான யூதா* |
| *யூதா ஸ்காரியோத்து* | *யூதா ஸ்காரியோத்து* | *யூதா ஸ்காரியோத்து* | |

**புள்ளியால் குறியிட்ட வரிகள், ''கூட்டத்தின் புயல்'' என்ற பாடத்தில் விவாதிக்கப்பட்ட தொகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றன.*

***கிரேக்க மொழியில் மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில் "செலோத்தே" என்பதற்குப் பதிலாக மாறுபட்ட வார்த்தை பயன்படுத்தப்படுகிறது (KJVயில் காணவும்), ஆனால் அது இதே அர்த்தத்தைக் கொண்டுள்ளது.*

# யோனாவின் அடையாளம்

*உயிர்த்தெழுதல் பற்றிப் பிரசங்கிப்பதில் எப்போதுமே மதிப்பு உள்ளது. இப்படிப்பட்டதொரு பிரசங்கம் பின்வரும் பிரிவுகளுடன் "யோனாவின் அடையாளம்" (மத். 12:38-41; லூக். 11:16, 29, 30, 32) என்ற தலைப்பில் எடுத்துரைக்கப்படக் கூடும்:*

I. *ஆர்வமிக்க ஒரு வரலாறு.* (வேதவசனப் பகுதிகளை விளக்கப் படுத்தவும், "ஒரு மும்முரமான நாள்" என்ற பாடத்தையும் "மூன்று பகல்கள் & மூன்று இரவுகள்" என்ற துணைப் பாடத்தையும் காணவும்.)

II. *மறுக்க முடியாத ஒரு உண்மை.* யோனாவின் வரலாற்றினுடைய அங்கீகரிப்புத் தன்மை பற்றிச் சிலர் ஐயப் படுகின்றார்கள், ஆனால் இது உண்மையிலேயே நடந்தது என்று இயேசு உறுதிப்படுத்தி னார். உயிர்த்தெழுதலைச் சிலர் மறுக்கின்றார்கள், ஆனால் ஆதாரங்களை முன் வைக்க முடியும்.

III. *மனதில் பதியும் ஒரு அடையாளம்.* யோனாவின் விடுதலை யானது, அவர் தேவனிடமிருந்து வந்த ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு ஒரு அடையாளமாயிருந்தது. இயேசுவின் உயிர்த் தெழுதல், அவர் தேவனுடைய குமாரனாக உள்ளார் என்பதற்கு ஒரு அடையாளமாயிருக்கிறது. அவர் "தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததினால் பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனு மாயிருக்கிறார்" (ரோமர் 1:5).

IV. *தப்பிக்க இயலாத ஒரு முடிவு.* மத்தேயு 12:41, "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததி யாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்" என்று கூறுகிறது (லூக். 11:32ஐக் காணவும்). நாம் "யோனாவின் அடையாளத்தை" ("உயிர்த்தெழுதலை") புறக்கணித்தால், நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம்.

# மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்

*அடையாளத்தைத் தேடியவர்களிடத்தில் இயேசு, "யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்" என்று கூறினார் (மத். 12:40). இருப்பினும், இயேசு தமது உயிர்த்தெழுதல் பற்றித் தமது சீஷர்களிடத்தில் கூறியபோது, அவர் "மூன்றாம் நாளிலே" (மத். 16:21; 17:23; 20:19) உயிர்ப்பிக்கப்படப் போவதாகக் கூறினார். அவரது கூற்றின் நிறைவேற்றத்தை நாம் லூக்கா 24:5-8, 13-27 வசனங்களில் காண்கின்றோம்.*

*நாம் கூற முடிந்த வரையிலும், "இயேசு கல்லறையினுள் ஒரு முழு நாளும், இரு முழு இரவுகளும், மற்ற இரண்டு நாட்களின் பகுதிகளும் இருந்தார்."[1] பின்பு ஏன் அவர், "இரவும் பகலும் மூன்று நாட்கள்" தாம் கல்லறையில் இருக்கப்போவதாகக் கூறினார்?* J. W. *மெக்கார்வீ அவர்கள் பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்:*

> *... ஒரு நாளின் பகுதியில் ஒரு நிகழ்ச்சித்தொடரின் தொடக்கமோ அல்லது முடிவோ நடைபெற்றது என்றால், யூதர்கள் அந்த நாளின் பகுதியை ஒரு முழு நாளாகக் கணக்கிட்டார்கள். இயேசு தாம் மூன்று நாட்கள் கல்லறையில் இருப்பதாக மிகச் சரியாகவே பேசினார். யூதர்கள் பின்வரும் மூன்று சொற்றொடர்களைக் கொண்டிருந்தார்கள் ... "மூன்றாம் நாளில்," "மூன்று நாட்களுக்குப் பின்பு," மற்றும் "மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்." இவை யாவையும் ஒரே விஷயத்தையே அர்த்தப்படுத்தின: அதாவது, மூன்று பகல்கள், இவற்றில் இருபகல்கள் நாளின் பகுதிகளாய் இருந்திருக்க வேண்டும். நாள் கணக்கானது, மிகச் சரியாக நாள் தொடங்கும் நேரமான சூரியன் மறையும் வேளையிலிருந்து* [*அப். 10:1-30*] *தொடங்காது இருந்தால், மூன்று முழு நாட்களும் இரவுகளும் நான்கு நாட்களாகக் கணக்கிடப்படும். நாட்களை யூதர்கள் கணக்கிடும் முறைமைக்கான எடுத்துக்காட்டுகளுக்கு 1 இரா. 12:5, 12; எஸ்தர் 4:1, 16; மத். 27:63, 64 ஆகியவற்றைக் காணவும்.*[2]

*நேட் கூப்பர் அவர்கள், இயேசுவின் மரணத்திற்கு முன்பு அவரது வாழ்வின் கடைசி நாளை எடுத்து உரைத்து முடிக்கின்ற மற்றும் இயேசு கல்லறையில் இருந்த "மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள்" என்பதை விவரிக்கின்ற வரைபடம் ஒன்றைத் திட்டமாய் வரைந்தார்.*[3] *அவரது வரைபடத்தின் தழுவலானது கீழே தரப்படுகிறது.*

---

*குறிப்புகள்*

[1]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 306. *நாம் இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் படிக்கும்போது இதைப் பற்றி நாம் இன்னும் விரிவாக விவாதிப்போம்.* [2]Ibid. [3]Nat Cooper, *A Study of the Life of Christ* (Lubbock, Tex.: Sunset International Bible Institute, n.d.), 54.


வெள்ளிக்கிழமை
காலை 6 மணி
சனிக்கிழமை
காலை 6 மணி
ஞாயிற்றுக்கிழமை
காலை 6 மணி
காய்பா
அன்னா
பிலாத்து
சிலுவையில் அறையப் பட்டார் காலை 9 மணி மாற். 15:25
தோட்டம்
மரித்தார் மாலை 3 மணி மத். 27:46-50; மாற். 15:33-37; லூக். 23:44-46
கல்லறை மாற். 15:42-46; லூக். 23:50-54 மத். 27:57-60
மேல் வீடு
— ஓய்வுநாள் — மத். 27:62; லூக். 23:56
"அவர் உயிர்த் தெழுந்தார்" மத். 28:1-6; மாற். 16:1-6 லூக். 24:1-6 யோவா. 20:1-8
இவ்வரைபடம் யூதர்களின் நாள் கணக்கீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. அந்தக் கணக்கீட்டின்படி ஒரு புதிய நாளானது சூரியன் மறையும் வேளையில் சுமார் 6 மணி அளவில் தொடங்கிற்று. ("மூன்றாம் மணி வேளை" மற்றும் "ஒன்பதாம் மணி வேளை" என்று) வேத வாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்கள் நவீனச் சொற்றொடர்களாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளன ("காலை 9 மணி," "மாலை 3 மணி").
மாலை 6 மணி
மாலை 6 மணி
மாலை 6 மணி

இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஒன்றைக் குறிப்பிடவும்: ❑ ஆண் ❑ பெண்

பெயர்: ______________________________

முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)

______________________________

______________________________

______________________________

______________________________

புதிய முகவரி பழைய முகவரி (முகவரியில் மாற்றம் இருக்குமானால்) தெரியப்படுத்தவும்:

______________________________

______________________________

______________________________

______________________________

Email விலாசம்: ______________________________

எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்? ______________________________

அது எங்கிருக்கிறது? ______________________________

பிரசங்கிப்பவரின் பெயர்: ______________________________

நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்.)

❑ பிரசங்கிப்பவர் ❑ அங்கத்தினர்

❑ வேதபாட வகுப்பு ஆசிரியர் ❑ அங்கத்தினரல்லாதவர்

இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடுகளை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):

❑ இல்லை.

❑ ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.

❑ ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர் ____________________.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

*எந்த மொழியில் வெளியீடுகளைப் பெற நீங்கள் விரும்புகிறீர்கள்? (ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்.)*

❒ *ஆங்கிலம்* ❒ *தமிழ்* ❒ *ஹிந்தி* ❒ *தெலுங்கு*
❒ *கன்னட* ❒ *மலயாளம்*

*நீங்கள் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகளை எவ்விதம் உபயோகிக்கிறீர்கள்/உபயோகிப்பீர்கள்?*

________________________________________________

________________________________________________

*இப்பாடங்களை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாராவது உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து அவர்களுக்காக இன்னுமொரு படிவத்தைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.*

Truth for Today
P.O. Box: 5311
Shivajinagar, Bangalore - 560 001